சுவாமி விவேகானந்தரின்

ஞான தீபம்

சுவாமிகள் பேசியும் எழுதியும்

அருளியவற்றின்

தமிழாக்கம்

சுவாமி விவேகானந்தரின்
ஞான தீபம்

சுவாமிகளின் நூறாண்டு விழாப் பதிப்பு

சுடர் - 7

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்
மயிலாப்பூர் :: சென்னை - 4

சென்னையில் மயிலாப்பூர் ஸ்ரீ ராமகிருஷ்ண
மடத்துத் தலைவரால் வெளியிடப்பட்டது.

1847-ஆம் ஆண்டுச் சட்டப் பிரிவு XX-ன்படி
உரிமை பதிவு செய்யப்பட்டுள்ளது.

894.8114
V W,7
25-6-63

உரிமை பதிப்பாளர்க்கே

1—XXXXIII—6-63

சாதாரண பைண்டு ரூ. 5 00

ஆர்ஜீ பிரிண்டர்ஸ், 126, ராயப்பேட்டை ஹைரோட்,
சென்னை-4.

முன்னுரை

மெஞ்ஞானம் மெலிந்து அஞ்ஞானம் மேலோங்கி நிற்கும் போது ஆண்டவன் அவதரிப்பார். அஞ்ஞானம் மறையும்; மெஞ்ஞானம் மேலோங்கும். இதுவே கீதை நமக்கு போதிக்கும் உண்மை. இந்த உண்மையை உலகுக்கு உணர்த்தும் வாய்ப்பு சென்ற நூற்றுண்டுக்குக் கிட்டியது.

பாரத மக்கள் தங்கள் கடமையை மறந்தார்கள்; தங்கள் பெருமையை மறந்தார்கள்; முன்னோர் கண்ட உண்மைகளை மறந்தார்கள்.

இத்தகைய சூழ்நிலையிலே நர, நாராயணர் தோன்றினர். ஸ்ரீராமகிருஷ்ணரும், ஸ்ரீவிவேகானந்தரும் தோன்றினர். ஸ்ரீராமனுகவும், ஸ்ரீகிருஷ்ணனுகவும் அவதரித்த எம்பெருமானே ஸ்ரீராமகிஷ்ணராகத் திரு அவதாரம் செய்தார். அனுமனுகவும், பார்த்தனுகவும் தோன்றியவரே மீண்டும் நரேந்திரராகத் தோன்றினர்; சுவாமி விவேகானந்தரானுர்.

ஸ்ரீராமகிருஷ்ண அருட்சோதியில் மூழ்கிக் கனல் வீசிய ஸ்ரீவிவேகானந்த சுவாமி அவர்கள் சூல் கொண்ட கார்மேகம் என எழுந்தார்; உலகாயதத்தின் பீடமாகிய அமெரிக்க நாடு சென்ருர். இடி இடித்தது. மின்னல் மின்னியது. மழை! மழை! ஆன்மிக மழை! அமெரிக்க நாட்டிலே பெருக்கெடுத்தோடியது. அந்த வெள்ளத்திலே மிதந்தார்கள் அமெரிக்க மக்கள்; மகிழ்ந்தார்கள். ஆன்மிகம் வென்றது. உலகாயதம் பணிந்தது. பாரத தர்மம் தழைத் தோங்கியது.

மனிதகுலம் உய்யும் பொருட்டுச் சுவாமிகள் அருளிய சொல்மாரியும் பிறவும் எழுத்துருவில் சேமிக்கப் பட்டன.

அவை தமிழ் மக்களுக்குப் பயன்படுவான் வேண்டிப் பத்துத் தொகுதிகளாக வெளியிடப்பட்டு வருகின்றன. அவற்றுள் ஏழாவது தொகுதி இது.

இவற்றுள் 'மன ஒருமைப்பாடு' எனும் பகுதியையும், பக்கம் 102 முதல் 220 முடிய உள்ள பகுதிகளையும், 'கேத்ரி மன்னர் பாராட்டுக்குப் பதில்' எனும் பகுதியையும் தமிழில் மொழி பெயர்த்தவர் 'தமிழ் நாடு' பத்திரிகையின் ஆசிரியர் குழாத்தைச் சேர்ந்த ஸ்ரீ. எஸ். ராமசுவாமி யாவார். பக்கம் 221 முதல் 254 முடிய உள்ள பகுதிகளை மொழி பெயர்த்தவர் ஸ்ரீ சக்திதாசன் சுப்பிரமணியம் ஆவார். பக்கம் 255 முதல் 374 முடிய உள்ள பகுதிகளைத் தமிழாக்கியவர் ஸ்ரீ. எஸ். ராஜு செட்டியார் பி.ஏ. பி.எல். ஆவார். 'வினாவும் விடையும்' என்ற பகுதி காப்டன் ஸ்ரீ. என். சேஷாத்ரிநாதன் எம். பி. பி. எஸ். இ. டி. எம். அவர்கள் மொழி பெயர்த்தது. 'தியானம்' 'மாலைச் சொற்பொழிவு' ஆகிய இரு பகுதிகளையும் மொழி பெயர்த்தவர் ஓர் அன்பர். 'கருமயோகம்' எனும் பகுதி, ஓய்வு பெற்ற டி. பி. ஐ. ஸ்ரீ. வேங்கடராம ஐயர் அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது. 'என் வீர மைந்தர்க்கு', 'கல்கத்தா மக்களின் பாராட்டுக்குப் பதில்' ஆகிய இரு பகுதிகளையும் தமிழாக்கியவர் ஸ்ரீ. ஆர். நடராஜன் எம். ஏ. எம். லிட் ஆவார். 'அன்னை காளி' எனும் தலைப்புள்ள கவியும் இவரால் தமிழாக்கப்பட்டது. 'கண்ணனுக்கு' 'சிவபெருமான் திரு நடனம்' ஆகிய இரு கீர்த்தனைகளும் ஸ்ரீ. பெரியசாமி தூரன் அவர்கள் மொழி பெயர்த்து உதவியவை. ஏனைய கவிதைகள் யாவும் கவிராஜ பண்டிதர் ஸ்ரீ. ந. கனகராஜ ஐயர் எம். ஏ. அவர்கள் மொழி பெயர்த்தவை.

கையெழுத்துப் பிரதிகளையெல்லாம் ஆங்கில மூலத்துடன் ஒப்பு நோக்கித் திருத்திச் செப்பனிட்டவர் ஸ்ரீ. சக்தி தாசன் சுப்பிரமணியம். இவர்க்குத் துணை நின்றவர் ஸ்ரீ. ஆர். நடராஜன் எம். ஏ. எம். லிட். இவர் யாவர்க்கும் எமது நன்றி.

பதிப்பாளர்

பொருளடக்கம்

சொற்பொழிவுகள் — **பக்கம்**

1. தியானம் ... 1
2. மன ஒருமைப்பாடு ... 14
3. கருமயோகம் ... 27
4. தெய்விக அன்பு ... 102

வகுப்புப் பாடங்கள் சொற்பொழிவுகள் பற்றிய குறிப்பு

1. சமயமும் விஞ்ஞானமும் ... 116
2. சென்னையில் எடுக்கப்பட்ட குறிப்பு ... 148
3. இராஜயோக பாடங்கள் ... 182
4. பக்தியோகம் பற்றிய பாடங்கள் ... 193
5. அன்னை வழிபாடு ... 204
6. நாரதர் பக்தி சூத்திரங்கள் ... 216
7. கலை ... 221

சொற்பொழிவுக் குறிப்புகள்

1. மதத்தில் கூலிப்பட்டாளம் ... 228
2. மனிதனின் விதி ... 232
3. மீண்டும் பிறத்தல் ... 237
4. சமரச சன்மார்க்கம் ... 241
5. புத்தமதம் : ஆசிய ஜோதியின் சமயம் ... 245
6. யோக விஞ்ஞானம் ... 247
7. கிறிஸ்து பெருமான் மீண்டும் எப்பொழுது வருவார் ? ... 255
8. விதியை வகுப்பவன் மனிதனே ... 260
9. கடவுள் : சகுணமும் நிர்குணமும் ... 267
10. அவதாரம் ... 270
11. பிராணயாமம் ... 273
12. அன்புமதம் ... 281

		பக்கம்
13.	ஞானமும் கர்மமும்	... 289
14.	நான் உண்மையில் எதுவோ அதுவாகவே இருக்கிறேன்	... 298
15.	ஒன்றே பொருள்	... 307
16.	தேவி வழிபாடு	... 310
17.	சமய சாரம்	... 313

பத்திரிக்கைகளில் வெளிவந்தவை

1.	கீழ்நாட்டுப் பெண்டிர்	... 322
2.	சமய ஒற்றுமை மாநாடு	... 325
3.	கடவுள் அன்பு — 1	... 326
4.	கடவுள் அன்பு — 2	... 328
5.	இந்தியா	... 332
6.	இந்துக்களும் கிறிஸ்தவர்களும்	... 339
7.	இந்தியாவில் கிறிஸ்தவ மதம்	... 347
8.	இக்கால உலகமும் வேதாந்தத்தின் உரிமையும்	... 356
9.	ஜனன மரண நியதி	... 362
10.	உண்மையும் நிழலும்	... 365
11.	முக்தி வழி	... 368
12.	இந்திய மக்கள்	... 371
13.	மாலைச் சொற்பொழிவு	... 375

வினாவும் விடையும் ... 379

கேத்ரி மன்னர் பாராட்டுக்குப் பதில்	
இந்தியா—சமயபூமி	... 425
என் வீர மைந்தர்க்கு	... 440
கல்கத்தா மக்களின் பாராட்டுக்குப் பதில்	... 445
கவிதைகள்	... 447



தியானம்

[1900-ஆம் ஆண்டு, ஏப்பிரல் மாதம், 3-ஆம் நாள் ஸான்பிரான்ஸிஸ்கோ, வாஷிங்டன் மண்டபத்தில் ஆற்றிய சொற்பொழிவு.]

எல்லாச் சமயங்களும் தியானத்தை வற்புறுத்துகின்றன. மனம் நிலைபெறும் உயர்ந்த நிலையே தியானம் என்று யோகிகள் உறுதியாகக் கூறியுள்ளார்கள். மனம் புறப்பொருள்களை ஆராயுங்கால், அந்தப் பொருள்களின் மயமே ஆகிவிடுகின்றது. இதற்கு ஒரு பண்டைய இந்திய தத்துவஞானியார் ஓர் உவமை உரைத்துள்ளார். மனிதனது ஆன்மா ஒரு பளிங்குத் துண்டுபோல் உள்ளது. பளிங்கு தன் அண்மையில் உள்ள எந்த நிறத்தையும் மேற்கொள்கின்றது. அதுபோலவே, ஆன்மா எதனோடு கூடினும் அதன் தனிமையை அடைகிறது. அதுதான் சிரமமான காரியம். அதுவே பந்தம். நிறத்தின் வன்மையினால் பளிங்கு தன் இயல்பு அறவேமாறிச் சார்ந்த தன் நிறத்துடன் ஒன்றுபடுகின்றது. பளிங்கின் அருகில் சிகப்புப்பூ ஒன்று உள்ளதென வைத்துக் கொள்வோம். பளிங்கு சிகப்பு நிறம் பெறுகின்றது ; தன் இயல்பு மாறித் தன்னிறம் செம்மை என்றே எண்ணுகின்றது. நாம் சரீரத்தின் இயல்பையே தழுவி நாம் இன்னாரென்பதை மறந்துவிட்டோம். எல்லாச் சங்கடங்களும் சாகக்கூடிய அந்த உடலிலிருந்தே கிளைக்கின்றன. நம் அச்சம், தொந்தரவு, கவலை, துன்பம், தவறுதல், பலவீனம், தீமை என்ற அனைத்தும் உடலே நாம் என்று கருதும் ஒரு பெருந்தவறுதலினின்றே உண்டாகின்றன: இதுதான் சாதாரண மனிதனது இயல்பு. அருகிலுள்ள மலரின் நிறத்தைத் தன் நிறமாகக் கொள்ளும் பளிங்குபோன்றவன் மனிதன். எப்படிப் பளிங்கு செம்பூ அன்றோ, அப்படியே நாமும் சரீரங்கள் அல்லோம்.

தியானப் பழக்கம் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகிறது. பளிங்கு தன் தனிமையிஃதெனவுணர்ந்து தன் சுய நிறத்தைப் பெறுகின்றது. ஆங்கிலத்தில் " நீங்கள் உடல் நலம் உடையவர்களாயிருக்கின்றீர்களா ? " என்று வினவுவது மரபு. இந்தியாவில், " நீங்கள் சுகமாயிருக்கின்றீர்களா ?" என்று கேட்பார்கள். பிறிதொன்றின் மீது நீங்கள்

சார்ந்தால், உங்களுக்குத் துன்பமே நிகழும். இதுவே தியானம் என்பது. அதாவது ஆன்மா தன்மீதே தான் நிலை பெறவிரும்புவது. அந்த நிலைதான் ஆன்மாவின் மிகவும் சுக மான நிலை. அதாவது, தன்னையே தான் நினைந்து, தன் பெருமையிலேயே தங்கியிருத்தல். இல்லை, மற்றும் உணர்ச் சிகளையெழுப்பியோ, ஜபங்களைச் செய்யும்படிச் சொல்லியோ, மேற்கொள்கின்ற முறைகள் எல்லாம் அந்த ஒரே நோக்கத் தைத்தான் கொண்டுள்ளன. மிகவும் ஆழ்ந்த உணர்ச்சிக் கிளர்ச்சியில், ஆன்மா தன்னிடமேதான் நிற்க முயல்கின்றது. இந்தக் கிளர்ச்சி புறப் பொருள் மூலமாக எழுந்தாலும் பாதக மில்லை. மனம் ஒருவழிப் படுகின்றது.

தியானத்தில் மூன்று நிலைகள், அல்லது படிகள் உண்டு. அவற்றுள் '**தாரணை**' என்பது முதலாவது. அது மனத்தை ஒரு பொருள்மேல் இடைவிடாது செலுத்துதல். இதோ இந்தக் கண்ணாடியில் என் மனத்தைச் செலுத்துகின்றேன். இதைத் தவிர எல்லாப் பொருள்களையும் நான் சிந்திப்ப தில்லை. இந்த எண்ணம் வலுப்பெற்று மனம் சலியாதிருந் தால், அதுவே தியானம் எனப்படும். ஆயினும், இதைவிட மேலான நிலை ஒன்றுள்ளது. அந்நிலையில் எனக்கும் கண் ணாடிக்கும் உள்ள வேற்றுமை மறைகின்றது. இதுவே சமாதி எனப்படும். மனமும் கண்ணாடியும் ஒன்றுபடுகின்றன. ஒரு விதமான வேற்றுமையும் புலப்படுவதில்லை. எல்லா இந்திரி யங்களும் செயலறுகின்றன. பிற வழிகளில் தொழிலாற்றிய இந்திரியங்களின் எல்லாச் சக்திகளும் மனதில் ஒன்றுபடுத் தப்படுகின்றன. இதை நன்குணர்தல் வேண்டும். யோகி கள் விளையாடும் மாபெரும் விளையாட்டு அது. புறப் பொருள் ஒன்று உள்ளதாக வைத்துக்கொள்வோம். அப்பொழுது நமக்குப்புறம்பாயுள்ள பொருள் நாம் காணும் பொருளன்று. நான் கண்ணுறுகின்ற கண்ணாடி புறப் பொருள் அன்று. இது நிச்சயம். கண்ணாடியென்ற அந்தப் புறப்பொருள் நான் அறியாத ஒன்று; அறிய இயலாததும் ஆகும்.

ஏதோ ஒரு பொருள் என் மனத்தில் ஒரு கருத்தைத் தோற்றுவிக்கின்றது. உடனே என்னுடைய மனம் பிரதிச் செயலை மேற்கொள்கின்றது. இந்த இரண்டின் கூட்டத்தின் விளைவே அந்தக் கண்ணாடி. புறத்தில் நிகழும் செயல் X;

அகத்திருந்து நிகழ்வது Y. கண்ணுடி Y. Xஐ நோக்கும் போது அதைப் புறவுலகமாகக் கொள்ளுங்கள். Yஐ நோக்கும்போது அதனை உள்ளுலகமாகக் கொள்ளுங்கள். 'எது உங்கள் மனம்? எது புறவுலகம்?' என்று வேறுபாடு காண நீங்கள் முயன்ருலும், எவ்விதமான வேறுபாடுமில்லை. நீங்களும் பிறிதொன்றும் கூடிய கூட்டமே இந்த உலகம்.

மற்ருேர் உதாரணம் எடுத்துக்கொள்வோம்: ஓர் ஏரி நீர்மட்டத்தில் சில கற்களைப் போடுகின்றீர்கள். போடுகின்ற ஒவ்வொரு கல்லும் ஒவ்வோர் பிரதிச் செயலை உண்டுபண்ணுகின்றது. கல்லானது ஏரியிலுள்ள சிறு அலைகளால் மூடப்படுகிறது. அதுபோன்றே, புறப் பொருள்கள் மனமாகிய ஏரியில் போடப்படும் கற்கள். புறப் பொருள்களை நாம் உண்மையிற் காண்பதில்லை; அலைகளை மட்டும்தான் பார்க்கின்ருேம்.

மனத்தில் எழும் இந்த அலைகள் புறவுலகில் பலவற்றை உண்டுபண்ணியுள்ளன. முடிவான குறிக்கோள்களையும், உண்மையான நிகழ்ச்சிகளையும்பற்றி நாம் தர்க்கிப்பதில்லை. பொருள்கள் புறத்தேயுள்ளன என்பதைச் சித்தமாகக் கொண்டுள்ளோம். ஆனுல், புறப் பொருள்களை நம்முடன் கூட்டிக் காண்பதுபோல, புறத்தேயுள்ள பொருள்களினின்றும் நாம் காண்பன் வேருகவுள்ளன.

கண்ணுடியிலிருந்து எனது எண்ணத்தை நான் மாற்றிக் கொள்வதாகக் கருதுங்கள். என்னை மிஞ்சியுள்ளது ஒன்றுமேயில்லை. கண்ணுடி மறைகிறது. மேசையில் என் மனம் ஈடுபடாத நிலையில், மேசையில் என்ன உள்ளது? இது மேசையன்று. ஏனென்ருல், புறப் பொருளும் எனது ஈடுபாடும் விரவிய கூட்டமே அது. ஏரியானது கற்கள் போடப்படும்போதெல்லாம் தன் அலைகளை வீசவேண்டி வருகின்றது. மனமும் எந்த உணர்ச்சியெழுந்தாலும் சில நினைவலைகளை உண்டுபண்ணவேண்டி வருகின்றது. நாம் நமது மனத்தை அடக்க இயலும் என்று கொள்வோம். அந்த நிலையிலே நாமே எஜமான். இந்த மாறுதல்களில் நாம் ஈடுபட மறுக்கிருேம். நான் என்னுடைய பங்கை அதில் செலுத்தாமற் போனுல், அது மறையவேண்டுவதுதான்.

இந்தப் பந்தத்தை நீங்களே உண்டாக்கிக்கொள்கிறீர்கள். எப்படி? உங்களுடைய பகுதியை நீங்கள் இயற்றுவதால் உங்களை நீங்களே அமைத்துக் கொள்ளுகிறீர்கள். இந்தப் புறப் பொருளை தானாகவே கருதுகின்ற தன்மை ஒழிந்த அளவில், நானல்லாத உடலை நானென்றும், எனக்கு உரியவல்லாத பல அற்பப் பொருள்களையும் என்னுடையவை என்றும் நான் கருதுவது ஒழிந்த அளவில், நான் ஏற்கும் பங்கு எடுபடும். எடுபடவே, இந்தப் பொருள் இல்லாமல் மறையும். அப்பொழுது நான் 'இதோ கண்ணுடியிருக்கிறது!' என்று சொல்ல என் மனத்தை அதனிடமிருந்து விலக்க, அது மறைகிறது. நீங்கள் உங்களுடைய ஈடுபாட்டை ஒழித்தால், நீர்மேல் நடக்கலாம். அது உங்களை அமிழச் செய்யாது. நஞ்சைப் பற்றிப் பார்ப்போம்: எந்தவிதமான சங்கடங்களும் இல்லை. இயற்கையில் உள்ள எந்த மாறுதலிலும் உங்கள் பகுதி பாதி; இயற்கை கொள்ளும் பங்கு மறு பாதி. நீங்கள் உங்களுடைய பங்கை நீக்கிவிட்டால் புறப் பொருள் நிலைபெருதொழியும். ஒவ்வொரு கிரியைக்கும் அதற்குச் சமமான எதிர்க்கிரியை உண்டு. ஒரு மனிதன் என்னை அடித்துக் காயப்படுத்தினுல், அது அவனுடைய செயலும் என்னுடைய உடலின் பிரதிச் செயலுமாகும். அந்த எதேச்சையான செயலைச் சமாளிக்கவல்ல சக்தி என் சரீரத்தில் இருக்குமா? அத்தகைய ஆற்றலை நான் அடைதல் கூடுமா? சாத்திரங்கள் கூடும் என்று முறையிடுகின்றன. எதேச்சையாக அந்த ஆற்றல் உங்களுக்கு ஏற்பட்டால், அதனை ஓர் அற்புதம் என்றே கூறவேண்டும். ஆனுல், விஞ்ஞானமுறையில் நீங்கள் அதை உணர்ந்தால் அதுவே யோகம்.

மனத்தின் ஆற்றலால் மக்களுடைய பல நோய்கள் தீரக் காண்கின்றேம். அற்புதம் நிகழ்த்துபவன் இருக்கிருன். அவன் ஜபம் செய்கின்ருன். நோயாளிக்கு நோய் குணமாகின்றது. மற்ரெருவன் இல்லவே இல்லை. அது மனத்தின் ஆற்றலன்றி வேறன்று. அவனே விஞ்ஞானி. அவன் தான் வகுத்துக்கொண்ட செயலின் இயல்பை நன்கறிவான்.

தியானம் நமக்கு எந்த வன்மையையும் தரும். இயற்கையை வெல்ல வேண்டுமா? அது தியானம் அல்லது நிச்சல

சமாதியால் கூடும். இந்தத் தியான முறையினுலேதான், இந்நாளில் எல்லா விஞ்ஞான விநோதங்களும் கண்டுபிடிக்கப் படுகின்றன. விஞ்ஞானிகள் அந்த விஷயத்தை நன்கு ஆராய்ந்து, அதனைத்தவிரப் பிறவற்றை மறந்து நிற்கின்றார்கள். தங்களையும், மற்றும் எந்தப் பொருள்களையும் மறக்கின்றார்கள். அந்த நிலையில் பெரிய விஞ்ஞானக் கருத்து ஒரு மின்னல் போலத் தோற்றுகிறது. சிலர் அதனைத் திருவருள் என்பர். ஆனால், உள்ளிருந்தோ புறத்திருந்தோ ஒன்றும் திடீரென்று ஏற்படவில்லை. சூனியத்திலிருந்து ஒன்றும் ஏற்பட்டுவிடவில்லை.

மிகவும் உயர்ந்ததான அருட்செயல் ஏசுநாதர் ஆற்றிய செயல் என்பர். அவர் முன் பிறப்புகளில் பலமுறை கடினமாக முயன்றார். அவருடைய கடினமான பணியின் பயனே அது. அருளைப்பற்றிப் பேசுவதெல்லாம் பொருத்தமற்றது. அருள் என்பதுண்டானால், அது மழைபோலப் பொழிந்திருக்கும். எந்த வகையிலும் அருள்பெற்ற மக்கள் சாதாரணக் கல்வியும் பண்பாடும் உடைய மக்களிடையிலேதான் தோன்றுகின்றார்கள். அருள் அல்லது ஆவேசம் என்று ஒன்றில்லை. அருள் என்று கூறப்படுவது ஏற்கெனவே, மனத்தின்கண் உள்ள காரணங்களின் காரியமேயாகும். ஒரு நாள் திடீரென்று ஒரு செயல் நிகழ்கின்றது. அதற்கு முன்பிறப்புகளில் ஆற்றிய முயற்சியே காரணம்.

இங்கேகூடத் தியானத்தின் ஆற்றலை, நினைவின் தீவிரத்தை நீங்கள் காண்பீர்கள். இவர்கள் தங்களுடைய ஆன்மாக்களையே கடைந்து பார்க்கின்றார்கள். பெரிய பெரிய உண்மைகள் கரைக்கு வருகின்றன. எல்லோரும் அவற்றைக் காண்கின்றனர். ஆகவே, தியானப் பயிற்சி என்பது அறிவில் அமைந்த பெரிய விஞ்ஞானமுறையே. தியான ஆற்றலில்லாத எந்த அறிவோ, விவேகமோ இல்லை. அறியாமை, மூடநம்பிக்கைகள் என்னும் இவைகளிலிருந்து தாற்காலிகமாகத்தான் தியானத்தினுல் நாம் விடுதலையடைதல் கூடும். ஒருவன் என்னிடம் வந்து, 'நீ அத்தகைய நஞ்சையுண்டால் இறப்பாய்', என்று கூற மற்றொருவன் அதே இரவில் வந்து, 'நீ அந்த நஞ்சைப் பருகு', என்று சொல்கிறுன் என்று வைத்துக்கொள்வோம். நானோ, சாவதில்லை. இஃது எங்

ஙனம் நிகழ்கின்றது ? நஞ்சையும் என்னையும் ஒன்றுபடுத்தி நின்ற நிலை என் மனத்தால் மாற்றப்படுகிறது. ஆனால், அது தாற்காலிகமாகத்தான். நான் நஞ்சைப் பருகி நிற்கும் மற்றொரு சமயத்தில் மரித்தேவிடுகிறேன்.

உண்மைக் காரணம் உணர்ந்து, விஞ்ஞான முறையில் அத்தகைய தியான நிலையை யான் அடைந்துவிட்டால், நான் யாரையும் காப்பாற்ற இயலும். இதைத்தான் நூல்கள் கூறுகின்றன. இது எவ்வளவு உண்மை என்பதை நீங்கள் மதிப்பிட்டறியவேண்டும்.

'இந்தியர்களாகிய நீங்கள் இந்த விஷயங்களில் வெற்றி பெறுததேன் ?' என்று நீங்கள் கேட்கின்றீர்கள். இவ்வாறு வினவும்போதெல்லாம், பிறநாட்டு மக்களைவிட நீங்கள் உயர்ந்தவர்களென்று உரிமை கொண்டாடுகின்றீர்கள். நீங்கள் யோகம் பயலுங்கள். பிறரைவிட விரைவாகவே நீங்கள் அச்செயலையாற்றலாம். நீங்கள் தகுதி பெற்றுள்ளீர்கள். செய்து முடியுங்கள். நீங்கள் உயர்ந்த மக்கள் என்று கூறிக்கொண்டால், உயர்ந்த முறைகளும் உங்களிடம் இருத்தல் வேண்டும். கடவுளரிடமிருந்து நீங்கள் உத்தரவு பெறவேண்டும். அவைகளைப்பற்றி நினைப்பதை விடவேண்டும். தத்துவஞானிகளைப்பற்றி நீங்கள் சிந்திக்கும் காலத்தில் அக்கடவுளரைத் துயில்கொள்ள விட்டுவிடுங்கள். நீங்கள் சிறு குழந்தைகள். பிறநாட்டு மக்களைப்போல நீங்கள் மூட நம்பிக்கையுள்ளவர்களாகக் காண்கின்றீர்கள். உங்களுடைய முயற்சிகள் தோல்வியுறுகின்றன. நீங்கள் உரிமை கொண்டாடினால், தைரியமாக எழுந்து நில்லுங்கள். எந்தவிதமான பரலோகமும் உங்களுடையதே. நறுமணத்தைத் தன்னிடம் அடக்கியுள்ள கஸ்தூரிமான் உள்ளது. அந்த மணம் எங்கிருந்து வருகின்றது என்பது அந்த மானுக்குத் தெரியாது. ஆனால், நாளடைவில் அது தானே அறிந்துகொள்கிறது. இந்தக் கடவுளரும் பூதங்களுமாகிய எல்லாம் அவரவர்க்குள்ளேயே உள்ளன. பகுத்தறிவு, கல்வி, பண்பாடு என்னும் இவற்றின் சக்தியால், நீங்கள் அவை அனைத்தும் உங்களிடமேயுள்ளன என்பதைக் கண்டுகொள்ளுங்கள். அப்புறம் கடவுளரும் இல்லை ; பூதங்களும் இல்லை. நீங்கள் பகுத்தறிவு முதிர்ந்த யோகிகளாகவே விரும்புகிறீர்கள்.

என் விடை யாது? உங்களைப் பொறுத்தமட்டிற் கூட எல்லாம் உலகாயதமே. அரியாசனத்தில் அமர்ந்துள்ள கடவுளைக்காட்டிலும் உலகாயதமான கொள்கை வேறு யாது? உருவச்சிலையை வழிபடும் சாதாரண மனிதனை நீங்கள் இழிவாகக் கருதுகின்றீர்கள். நீங்கள் எந்த விதத்தில் உயர்ந்தவர்கள்? பொன்னைப் போற்றி வணங்கும் நீங்கள் யார்? உருவ வழிபாடு செய்பவன் தான் ஒருவாறு காணக்கூடிய தன் கடவுளை வணங்குகின்ருன். நீங்கள் அதுவும் செய்வதில்லை. நீங்கள் அறிந்துகொள்ளக்கூடிய ஒன்றையும் நீங்கள் வணங்குவதில்லை. ஆனுல், வழிபடுவோர் என்னும் பெயர் மட்டும் உங்களுக்கு உண்டு. 'கடவுளே பரிசுத்த ஆவி'. அவர் ஆவியாகவும், உண்மையான நம்பிக்கையுடனும் வணங்கப்பெறவேண்டும். ஆவி எங்குள்ளது? ஒரு மனதில், ஒரு மேகத்தில், உங்களுடைய கடவுள் என்று நீங்கள் உரிமை கொண்டாடுவதில் உங்கள் கருத்து யாது? நீங்களே அந்த ஆவி. இந்த முக்கியமான நம்பிக்கையை நீங்கள் என்றும் கைவிடக்கூடாது. நானே ஆன்மா. அது எங்கே உள்ளது? யோகத்தின் ஆற்றலும், தியான முறைகளும், மற்றும் எல்லாம் அந்தக் கடவுளைக் காண்பதற்காகவே ஏற்பட்டவை.

இப்பொழுது ஏன் இவற்றையெல்லாம் இயம்புகின்றேன்? நீங்கள் ஒரு குறியை உறுதிப்படுத்தினுல் ஒழிய, பேச இயலாது. சரியான இடத்தைவிட்டுப் பரலோகத்திலும், உலகத்திற் பல பாகங்களிலும் அதனை அமைக்கின்றீர்கள். நான் ஆவி எனவே, ஆவியெவற்றிற்கும் ஆவியும் என் ஆன்மாவிற்குள்ளேதான் இருத்தல் வேண்டும். அது வேறெங்கோ உள்ளது என்று நினைப்பவர்கள் அஞ்ஞானிகள். ஆதலால், இந்த உலகத்திலேயே அதைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும். இதுகாறும் உள்ள எல்லாவுலகங்களும் என்னுள்ளேயே உள்ளன. இதனை அறிந்த சில முனிவர்கள் அகக்கண்ணலேயே, தங்களுடைய ஆவியில் உள்ள பரமான்மாவைக் காண்கின்ருர்கள். கடவுளைப்பற்றியும் உங்களுடைய ஆன்மாவைப்பற்றியும் உள்ள உண்மைகளைக் கண்டுபிடியுங்கள்; கண்டுபிடித்து முக்தி பெறுங்கள்.

நீங்கள் வாழ்க்கையைப் பின்பற்றி ஓடுகிறீர்கள். அஃது அறிவீனம். வாழ்க்கையைவிட மேலானது ஒன்று உண்டு.

இந்த வாழ்க்கை – உலக வாழ்க்கை – மட்டமானது. நான் ஏன் வாழ்தல் வேண்டும்? வாழ்க்கையைவிட நான் உயர்ந்த வன். வாழ்க்கை எப்பொழுதும் அடிமைத்தனமே. நாம் எல்லாவற்றிலும் உழல்கிறோம். எல்லாம் அடிமைத்தனத் தின் தொடர்ச்சியே.

நீங்கள் ஏதோ ஒன்றை அடைகின்றீர்கள். ஒருவன் மற் றொருவனுக்குப் போதிக்க இயலாது. அனுபவத்தினாலே தான் நாம் அறிகிறோம். வாழ்க்கையில் சிரமம் உள்ளது என்று கூறி ஒரு வாலிபனை நம்பச்செய்ய உங்களால் இய லாது. வாழ்க்கை முழுவதும் துன்பமில்லாத பாதை என்று ஒரு கிழவனை நம்பச்செய்ய உங்களால் இயலாது. அவன் அனுபவங்கள் பல. இதுதான் இருவர்க்கும் உள்ள வேறு பாடு.

தியானசக்தியால், படிப்படியாக இவ்விஷயங்கள் எல்லாவற்றையும் நாம் அடக்கியாளவேண்டும். தத்துவ ரீதியாக ஆன்மா, மனம், பிரகிருதி என்ற இவைகள் உண்மை யில் இல்பொருள்கள் என்பதைப் பார்த்தோம். இருக்கும் பொருள் ஒன்றே. பல இருத்தல் இயலாது. இதுதான் விஞ் ஞானம் அல்லது அறிவு என்று சொல்லப்படுவது. அறியா மையினால் நமக்குப் பல புலனாகின்றன. அறிவுக்குப் புலப் படுவது ஒரே பொருள்தான். பலவற்றையும் ஒன்றாக்குவது விஞ்ஞானம். உலகம் முழுவதும் ஒன்று என்பது மெய்ப்பிக்கப் பட்டுள்ளது. அந்த விஞ்ஞானந்தான் வேதாந்தம் என்பது. அதுவே பலவாகக் காணப்படும் இதன்மூலம் ஊடுருவிப் பாய்கின்றது.

எல்லா வேறுபாடுகளையும் நாம் காண்கின்றோம். ஐம் பெரும்பூதங்கள், திடப்பொருள், திரவப்பொருள், ஆவி, ஒளி, விசும்பு இவற்றிற்கு அப்பால் உள்ள இருப்புகள் ஆகிய எல்லாம் மானசீகமாக உணரப்படுவன. அதற்குமப்பால் உள்ளது அப்பிராகிருதம். ஆன்மா ஒன்று, மனம் அதனி னும் வேறுபட்டது, ஆகாயம் வேறு என்பதன்று. ஒன்றே பலவாகப் பரிணமித்திருப்பது. அடங்குமுறையில் நாம் திரவமாக மாறுதல் வேண்டும். பூதங்கள் தோன்றியபடியே அடங்கவேண்டும். கனப்பொருள்கள் திரவமாக மாறிப் பின் ஆகாயமாகிவிடும். இதுதான் உலகத்தைப் பற்றிய கோட்

பாடு. புறவுலகமும், எங்கும் நிறைந்த ஆன்மாவும், மனமும், ஆகாயமும், வாயுவும், ஒளியும், திரவமும், கனப்பொருளும் உண்டு.

இதைப் போலவே மனதிலும் காணலாம். இந்தக் குறுகிய உலகத்திலும், பரந்த உலகத்திற் போலவே, நான் வேறுபாடின்றி உள்ளேன். நானே ஆன்மா, நானே மனம். நானே விண், நிலம், நீர், காற்று. என்னுடைய ஆன்ம நிலையை நான் அடையவேண்டும் என்பதே என் விருப்பம். குறுகிய வாழ்நாளுள்ள உலகவாழ்க்கையில் வாழவேண்டிய பொறுப்பு ஒருவனுக்கு உண்டு. இவ்வண்ணம் மனிதன் இந்த உலகவாழ்க்கையில் கட்டுப்படாமலிருக்கலாம். அவனுடைய குறுகியகால வாழ்க்கையிலேயே அவன் வாழ்க்கை முழுதுமே வாழ்தல் கூடும்.

நாமெல்லாம் போராடுகிறோம். நாம் பரம முக்திநிலையை அடையாவிட்டாலும் ஏதோ ஒரு நிலையை அல்லது கதியை அடைவோம். எந்தக் கதியாயினும் அது இப்பொழுது நாம் இருக்கும் நிலையைவிட உயர்ந்ததாகவேதானிருக்கும்.

எல்லாவற்றையும் முடிவான ஆன்மாவில் ஒன்றுபடுத்துவதுதான் தியானம். கனபதார்த்தம் திரவமாகிறது. அது வாயுவாகிறது. அது ஆகாயமாகி மனம் ஆகிறது. மனம் உருகி மறையும். எல்லாம் ஆன்மாவே.

யோகியருள் சிலர் இந்த உடல் திரவமாக மாறும் என்று நம்புகின்றனர். ‘நீங்கள் இதனை என்னவேண்டுமானாலும் செய்யலாம். இதனைச்சிறிதாக்கலாம்; காற்றுக்கலாம்; இந்தச்சுவரூடு செலுத்தலாம்’, என்று அவர்கள் கூறுகின்றார்கள். நான் அந்த முறையை அறியேன். அவ்வாறு யாரும் செய்து நான் பார்த்ததில்லை. ஆனால், நூல்கள் அதனைக் கூறுகின்றன. சாத்திரங்களை நாம் நம்பாமலிருத்தற்கில்லை.

ஒருவேளை இந்த வாழ்விலேயே சிலர் அதனை ஆற்றக் கூடும். நாம் முன்பிறப்பில் செய்த வினையின் பயனாக அது ஒரு மின்னல்போல வருகிறது. இங்கே முழுவேலையும் செய்துமுடிக்கும் ஆற்றலுள்ள பழைய யோகிகள் இருக்கிறார்கள் என்பது சிலருக்குத்தான் தெரியும். பயிற்சி செய்யுங்கள்.

தியானம் என்பது மனத்தின் பயிற்சியால் நிகழ்வது. எல்லாவற்றையும் மெய்ப்பொருளில் கரைந்து கலக்கச் செய்கிறீர்கள். ஒன்றில் ஒன்றை அடக்கப் பார்க்கின்றீர்கள். நிலத்தை அதற்குக் காரணமான நீரிலும், நீரினைத்தீயிலும், தீயைக் காற்றிலும், காற்றை விசும்பிலும், விசும்பை மனத்திலும், மனத்தை ஆன்மாவிலும் அடக்குவதால் நீங்கள் ஆன்மாவே ஆகின்றீர்கள். ஆன்மா என்றும் சுதந்திரமுள்ளது; எல்லாச்சக்தியும் வாய்ந்தது; நிறைந்த அறிவுடையது. அது நிச்சயமாகக் கடவுளுக்குட்பட்டதே. பல கடவுளர் இருக்க இயலாது. இந்த விடுதலை அடைந்த ஆன்மாக்கள் மிகவும் ஆச்சரியமான சக்தி வாய்ந்தவை; சர்வ சக்தியுடையவை. ஆனாலும், கடவுளைப் போன்று சக்திவாய்ந்தவர் யாருமில்லை. முக்திபெற்ற – பந்த நிலையினின்று விடுபட்ட – ஓர் ஆன்மா, 'இந்தக் கிரகம் இந்த வழியிலே செல்லும்படிச் செய்வேன்' என்று சொல்லி, மற்றொன்று, 'வேறு வழியில் செல்லச் செய்வேன்' என்று சொன்னால் குழப்பம் ஏற்படும்.

நீங்கள் இந்தப் பிழையைச் செய்யாதீர்கள். நான் ஆங்கிலத்தில் 'நான் கடவுள்' என்று சொல்வது ஏன்? அதைத் தவிர வேறு சிறந்த சொல் இல்லாமையினாலேதான். வடமொழியில் கடவுள் என்பதற்கு, முடிவான நிலை, வரம்பிலறிவு, வரம்பிலா ஞானம், வரம்பிலா ஒளி என்பன பொருள். அஃது ஓர் உருவமன்று; அருவம்.

நான் எப்பொழுதும் இலன் அல்லன். (உருவம்கொண்ட ஈசுவரனோடு ஒன்றியவன் அல்லேன்) நான் பிரம்மத்தோடு – அருவமாய் எங்கும் பரந்துள்ள பிரம்மத்தோடு–ஒன்றியவன். இதோ இங்கே களிமண்குவியல் உள்ளது. இதிலிருந்து நான் ஒரு சுண்டெலி செய்தேன்; நீங்கள் ஒரு யானையைச் செய்தீர்கள். இரண்டும் களிமண்ணாலாக்கப்பட்டவைகளே. இரண்டையும் நெகிழச் செய்யுங்கள். அவை இரண்டும் சுண்டெலியுமல்ல, யானையுமல்ல. 'நானும் என் தந்தையும் இருவரல்லோம்; ஒருவரே'. களிமண் சுண்டெலி களிமண் யானையுடன் என்றும் ஒன்றாகாது.

நான் ஏதோ ஓரிடத்தில் நிற்கின்றேன். நான் சிற்றறிவுடையவன். உங்களுக்கு அறிவு சிறிது அதிகமாயுள்ளது. நீங்கள் ஓரிடத்தில் நிற்கின்றீர்கள். எல்லாவற்றிற்கும்

மேலான பரமான்மா ஒன்றுள்ளது. அப்பரமான்மாவே ஈசுவரன்; யோகக் கடவுள். (அங்க உபாங்கங்களோடு கூறப்படும் படைப்புக் கடவுள்). அவனே தனிப் புருடன். அவனே சர்வஞ்ஞன். அவன் எல்லாருடைய இதயத்தும் உள்ளான். அவனுக்குச் சரீரம் இல்லை. சரீரம் வேண்டுவதுமில்லை. தியானத்தினால் நீங்கள் அடையக்கூடிய அனைத்தையும், யோகிகளின் யோகியாகவுள்ள ஈசுவரனைத் தியானிப்பதால் நீங்கள் அடைதல் கூடும்.

ஒரு பெரிய ஆன்மாவைப்பற்றித் தியானிப்பதாலும் அந்த நிலையை நீங்கள் அடையலாம். அல்லது வாழ்க்கையின் அமைதியைப்பற்றித் தியானிப்பதாலும் அது கிட்டும். இவை யனைத்தும் புறப்பொருள் தியானம் எனப்படும். அதாவது, நீங்கள் சில புறப்பொருள்களில் தியானத்தைச் செலுத்துகின்றீர்கள். நீங்கள் நீண்ட வாக்கியத்தை உச்சரித்துக் கொண்டிருப்பது தியானமாகாது. அது மனத்தை உருவேற்றும் உச்சாரண முறையில் ஒன்றுபடுத்த முயல்வதாகும். மனமானது அசமுகமாகப் பயல்வதே தியானம். மனம் நினைவலைகளை ஓயச்செய்கின்றது. உடனே உலகம் செயலற்றதாகின்றது. உங்களுடைய நினைவு விசாலிக்கிறது. தியானம் செய்யும்போதெல்லாம் நீங்கள் வளர்ச்சியுறுகின்றீர்கள். இன்னும் சிறிது கடினமாக உழையுங்கள்; மேலும் மேலும் உழையுங்கள்; தியானம் கைகூடும். சரீரமோ, மற்ற எதுவோ உங்களுக்குப் புலனாவதில்லை. குறிப்பிட்ட நேரம் கடந்து நீங்கள் வெளியேறும்போது, உங்கள் வாழ்க்கையிலேயே நீங்கள் பெற்றிராத ஓர் அற்புதமான மன அமைதியைப் பெறுகின்றீர்கள். உங்கள் சரீரத்திற்கு நீங்கள் அமைதி அல்லது ஓய்வு கொடுக்கும் முறை இதுவே. மிகவும் ஆழ்ந்த உறக்கமும் இத்தகைய அமைதியை உங்களுக்கு அளிக்காது. மிகவும் ஆழ்ந்த உறக்கத்திலும் மனம் தாவித்தாவிச் செல்கின்றது. அந்தத் தியானம் பயிலும் சிறிது நேரம் உங்கள் மூளை செயலாற்றுவதில்லை. ஏதோ சிறிது பலந்தான் காணப்படுகிறது. நீங்கள் உடலை மறக்கின்றீர்கள். உங்களைத் துண்டுதுண்டாக வெட்டினாலும் நீங்கள் உணர்வதில்லை. அதில் அவ்வளவு மகிழ்ச்சி அடைகின்றீர்கள். நீங்கள் சிறிது தனிமையை அடைகின்றீர்கள். பூரண ஓய்வினை நாம் தியானத்தால் அடைதல்கூடும்.

இனிப் பல்வேறு பொருள்களைப்பற்றி தியானித்தலாவது, முதுகெலும்பின் பல கோணல்களில் தியானத்தைச் செலுத்துதல். யோகிகள் கூறும்வகையில், முதுகெலும்பில் இடைகலை, பிங்கலையென்ற இரு நரம்புகள் உள்ளன. உச்சுவாச நிச்சுவாசங்கள் அவற்றின் ஊடேதான் செல்கின்றன. முதுகெலும்பின் நடுவில் சுழுமுனை என்ற நாடி ஓடுகிறது. இந்த நாடி அடைபட்டுள்ளதென்றும், இதனை யோகமுறையால் திறக்கவேண்டும் என்றும் யோகிகள் கூறுகின்றனர். சக்தியை முதுகெலும்பின் அடியிற் செலுத்தவே குண்டலினி எழுகின்றது ; உலகமே மாறும்.

பற்பல தெய்வீக உருக்கள் உங்களைச் சூழ்ந்துள்ளன. நாம் உறையும் உலகம் ஐம்புலன்களால் ஆராயப்படுதலின், அது நமக்குப் புலனாவதில்லை. நாம் புறத்திலேதான் அதைக்காணலாம். நாம் அதை X என்று கூறுவோம். இந்த X ஐயும் நாம் நம்முடைய மனநிலைக்கேற்பக் காண்கிறோம். புறத்தே நிற்கும் இந்த மரத்தை எடுத்துக்கொள்வோம். ஒரு கள்வன் வந்தான். அவன் அடிமரத்தில் என்ன கண்டான்? ஒரு டாணாக்காரனைக் கண்டான்; குழந்தை ஒரு பெரிய பிசாசைப் பார்த்தது ; ஒரு வாலிபன் தன் காதலியை எதிர்பார்த்தான் ; அவன் பார்த்தது என்ன ? அவனுடைய காதலியை ஆயினும் மரக்கட்டை மரக்கட்டையே. அது எவ்வித மாற்றமும் அடையவில்லை. அது பழைய உருவத்துடனேதான் இருந்தது. இதுபோன்றே கடவுளும் காணப்படுகிறார். நமது அறியாமையினாலே அவரை ஓர் மனிதனாகவும், மண்ணாகவும், ஊமையாகவும், துக்கியாகவும் காண்கின்றோம்.

இதே மாதிரியான மனம் அமையப்பெற்றவர்கள் தனிக் கூட்டமாகக் கூடி ஒரே உலகத்தில் உறைவார்கள். வேறு வகையாகச் சொன்னால், நீங்கள் ஒரே இடத்தில்தான் இருக்கின்றீர்கள். சொர்க்கமும் நரகமும் இங்கேயே உள்ளன. உதாரணமாக சூட்சுமபூமி ஒவ்வொன்றையும் ஒரு பெரு வட்டமாகக் கற்பனை செய்து கொள்ளுங்கள். அந்த வட்டங்கள் குறிப்பிட்ட ஓரிடத்தில் ஒன்றை ஒன்று தொடுகின்றன என்றும் கற்பனை செய்து கொள்ளுங்கள். ஒரு வட்டத்தில் இருக்கும்போது பிறிதொரு வட்டத்தில் உள்ள ஓரிடத்தைக் காணலாம். மனமானது வட்டத்தின் மையநிலையினை

அடைந்தால் சூட்சும உலகில் பிரவேசிக்கிறீர்கள்; சடலம் நீங்கள் பெற்ற ஆவிகளைக் காண்கிறீர்கள். தியான சக்தி யால்தான் நீங்கள் இவ்வுலகில் பிரவேசித்தல் கூடும். இந்த சக்தியே நம் புலன்களை மாற்றுகிறது; நுண்மை பெறச் செய் கிறது. ஐந்து நாட்கள் தியானம் செய்யப் பயிலுவீர்களானுல் இந்த வட்டங்களில் இருந்துவரும் வேதனையை உணர்வீர் கள். உங்கள் செவிப்புலன் நுண்மை பெறும். இதனுலேயே கடவுளுக்கு மூன்று கண்கள் இருக்கின்றன. இந்த மூன்ருவது விழியே மானதவிழியாகும்; ஆன்மிகப் பொருள்களை காண வல்ல விழி.

இந்தக் குண்டலினிசக்தியானது முதுகுத்தண்டின் ஓரி டத்திலிருந்து மற்ருேரிடம் செல்லுங்கால் புலன்களை எல்லாம் மாற்றுகிறது; இந்த உலகத்தில் வேருேர் உலகத்தைக் காண் கிறீர்கள். அதுவே சுவர்க்கம். அப்போது நீங்கள் உரை யாடுதல் இயலாது. பிறகு கீழ்பகுதிகளுக்குக் குண்ட லினி செல்கிறது. அது மூளைக்குச் செல்லும்வரை நீங்கள் மனிதரே. எல்லா நிலைகளையும் கடந்து அங்கே குண்டலினி செல்லும்போது உங்கள் நோக்கிலே மாறுதலுண்டாகிறது. எல்லாம் ஒன்ருகக் காண்பீர்கள். நீங்களே கடவுள். சுவர்க் கங்களை எல்லாம் அவனிடத்தே காண்பீர்கள்; உலகங்களை யெல்லாம் அவனிடத்தே காண்பீர்கள். அவன் ஒருவனே எங்குமிருப்பவன்; என்றுமிருப்பவன். வேறு எவருமில்லை; எதுவுமில்லை.

மன ஒருமைப்பாடு

(சான்பிரான்சிஸ்கோ நகரில் உள்ள வாஷிங்டன் மன்றத்தில், 1900-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 16-ஆம் தேதியன்று சுவாமிஜி நிகழ்த்திய சொற்பொழிவு.)

[இதுவும் இதை அடுத்து வெளியிடப்படும் சொற்பொழிவுகளும் தென் கலிபோர்னியாவில் உள்ள வேதாந்த சங்கத்தின் அனுமதியுடன், "வேதாந்தமும் மேற்கு நாடுகளும்" என்ற சஞ்சிகையிலிருந்து வெளியிடப்படுகின்றன. அமெரிக்காவில் பிரசுர உரிமை பெற்றவர்கள் இச் சங்கத்தினரே.

இச் சொற்பொழிவுகளை எழுதிய ஈடா ஆன் செல் என்பவர் தாம் இவற்றை எழுத நேர்ந்ததன் காரணங்களைக் கீழ்க்கண்டவாறு விவரிக்கின்றார்.

சுவாமி விவேகானந்தர் இரண்டாம் முறையாக 1899-1900-ல் மேற்கு நாடுகளுக்கு விஜயம் செய்தார். 1900-ஆம் ஆண்டு முற்பாதியில், கலிபோர்னியா மாநிலத்தில் உள்ள சான்பிரான்சிஸ்கோ நகரிலும், அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும், அவர் அருட்பணியாற்றினார். நான் சான்பிரான்சிஸ்கோ நகரத்தில் வசித்துவந்தேன். எனக்கு அப்போது வயது இருபத்திரண்டு. 1900-ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலிருந்து, மே மாதம் வரை அவர் நிகழ்த்திய சுமார் இருபது சொற்பொழிவுகளைக் கேட்டு, அவைகளில் பதினேழு சொற்பொழிவுகளை எழுதி வைத்திருக்கின்றேன்.

சான்பிரான்சிஸ்கோ, ஓக்லாந்து, அலமேடா ஆகிய மூன்று இடங்களிலும் உள்ள தேவாலயங்களிலும், அலமேடா, சான்பிரான்சிஸ்கோ சத்திய இல்லங்களிலும், வாடகைக்குப் பிடிக்கப்பட்ட மண்டபங்களிலும் இந்தச் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன. நாள்தோறும் சுவாமி பேட்டிகள் அளிப்பார்; தனிப்பட்ட வகுப்புகள் நடத்துவார்; இவை தவிர மார்ச். ஏப்ரல், மே ஆகிய மாதங்களில் முப்பது அல்லது நாற்பது பெரும் சொற்பொழிவுகள் நிகழ்த்தினர்.

என்னுடைய குறிப்புக்கள் குறையுடையனவாகக் காணப்பட்டமையின், இச் சொற்பொழிவுகளைத் திருப்பி எழுதி வெளியிட, நான் நீண்ட காலம் தயங்கினேன; இச் சொற்பொழிவுகளை எடுத்தபோது, புதிதாகச் சுருக்கெழுத்து கற்றுக்கொண்டிருந்தேன்... வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியதுபோன்ற சுவாமிஜியின் சொற்பொழிவை அப்படியே எழுதுவதற்கு, நிமிடத்திற்குக் குறைந்தது முன்னூறு சொற்கள் எழுதும் வேகம் வேண்டும். இதில் பாதிக்கும் குறைந்த வேகமே எனக்கு அப்போது இருந்தது. மேலும், அந்தச் சமயத்தில், இச் சொற்பொழிவுகள் என்னைத் தவிர மற்றவர்களுக்குப் பயன்படும் என்ற எண்ணமும் எனக்கு இல்லை.

சுவாமி அவர்கள் வேகமாகப் பேசும் திறமையுடன் உயர்ந்த நடிகராக வும் இருந்தார். அவர் கூறும் கதைகளையும், அவைகளில்வரும் கதா பாத்திரங்களைப்போல் அவர் நடிப்பதையும் காணும் ஒருவர், எழுதுவதை விட்டுவிட்டு அவர் பேச்சையும், நடிப்பையும் கண்டு அனுபவிப்பதில் ஈடுபடுவர். நான் எடுத்த குறிப்புகள், தொடர்பற்று ஓரளவு துண்டு துண்டுகளாக இருந்தாலும், அவைகளில் உள்ள கருத்துக்கள் போற்றிப் பாதுகாக்கத் தக்கவை. எனவே அவற்றை வெளியிடவேண்டும் என்ற கருத்துக்கு இணங்கினேன்.

சுவாமி அவர்களின் சொற்பொழிவு நடை பேச்சுவழக்கிலேயே இருந்தது; புதுமையும் வேகமும் இருந்தன. அவற்றில் நான் எவ்வித மாறுதலும் செய்யவில்லை; புத்தகமாக வெளியிடவேண்டி அவருடைய இயற்கையான சொற்பொழிவின் எழிலைப் பாதிக்கும் மாறுதல் எதுவும் செய்யவில்லை. பொருள் விளங்காத இடங்களில் நீக்கப்பட்டுள்ள சில பகுதிகள், மூன்று புள்ளிகள் வைத்து அடையாளம் காட்டப்பட்டுள்ளன. தெளிவு வேண்டிச் சேர்க்கப்பட்டுள்ளவை சதுர அடைப்புக் குறியிடப் பட்டுள்ளன. இவை தவிர மற்ற எல்லாம் சுவாமி அவர்களின் சொற்களே.

சுவாமி அவர்கள் கூறிய ஒவ்வொரு விஷயமுமே அபார சக்தி வாய்ந்ததாக இருந்தது. என்னுடைய சுருக்கெழுத்துக் குறிப்புப் புத்த கங்களில் இச் சொற்பொழிவுகள் ஐம்பது ஆண்டுகளுக்குமேல் தூங்கி இருக்கின்றன. இவ்வளவு காலம் கழித்து வெளிவரும்போதுகூட அவை களின் சக்தி குறையாதிருப்பதை எவரும் உணர்வர்.]

நாம் பெறும் அறிவெல்லாம் – அது வெளி உலகத்தைப் பற்றியதாக இருப்பினும் சரி, உள்ளுணர்வைப் பற்றியதாக இருப்பினும் சரி – மன ஒருமைப்பாடு என்ற ஒரே வழியின் மூலமாகவே கிடைக்கிறது. நமது மனதை எந்த விஷயத் திலும் ஒருமுகமாகச் செலுத்தாவிட்டால், அதுபற்றிய அறிவு எதையும் பெற முடியாது. வான சாஸ்திரி பூதக்கண்ணாடி மூலம் பார்க்கும்போது தமது கவனம் முழுவதையும் ஒருமுகப் படுத்துகிறார்... இப்படித்தான் எல்லாம். நீங்கள் உங்களு டைய மனதைப் பற்றி அறிந்துகொள்ளவேண்டும் என்றால் அதற்கும் இதே வழியைத்தான் கடைப்பிடிக்க வேண்டும். இந்த உலகில் ஒரு மனத்திற்கும் இன்னொரு மனத்திற்கும் உள்ள வேறுபாடு இவ்வாறு ஒருமைப்பாட்டுடன் கவனம் செலுத்துவதில்தான் இருக்கின்றது. ஒரு மனம் இன்னொரு மனதைக்காட்டிலும் எவ்வளவுக்கெவ்வளவு ஏகாக்கிரசக்தி அதிகம் பெற்று இருக்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு அதிக அறிவு பெறுகிறது.

கடந்த காலத்திலும், நிகழ்காலத்திலும் தோன்றிய, மகான்கள் எல்லாருடைய வாழ்க்கையிலும் இந்த மாபெரும் மன ஒருமைச் சக்தியைக் காண்கிறோம். அவர்கள் பிறவியி லேயே மேதாவிகள் என்று நீங்கள் சொல்லலாம். "நாம் எல்லாரும் மேதாவிலாசம் பெற்றவர்களே. கஷ்டப்பட்டு முயன்றால் அதை அடைதல்கூடும்" என்று யோக சாஸ் திரம் கூறுகிறது. சிலர் பிறக்கும்போதே அதிக சக்தி உள் ளவர்களாகப் பிறக்கலாம்; விரைவில் ஒன்றைச் சாதிக்க லாம். நாமும் அதே காரியத்தைச் சாதிக்க முடியும். இதே சக்தி ஒவ்வோருவருள்ளும் இருக்கிறது.

மனதை ஆராய்வதற்கு அதை எவ்வாறு ஒருமுகப்படுத் துவது என்பதே இன்றைய சொற்பொழிவுக்கான பொருள். இதற்கான விதிகள் சிலவற்றை யோகிகள் வகுத்திருக்கிறார் கள். இன்றிரவு, இவ் விதிகளில் சிலவற்றை நான் உங்க ளுக்கு எடுத்துக்கூறப் போகிறேன்.

மன ஒருமைப்பாடு பல்வேறு வழிகளில் ஏற்படுகிறதென் பது உண்மையே. புலன்களின்மூலம் நீங்கள் மன ஒருமைப் பாடு பெறலாம். இனிய இசையைக் கேட்கும்போது சில ருக்கு மன ஒருமைப்பாடு ஏற்படுகிறது; மற்றும் சிலருக்கோ அழகான காட்சிகளைக் காணும்போது ஏற்படுகிறது... இன் னும் சிலர் கூரிய எஃகு ஈட்டி முனைகளின்மீது படுத்திருக்கும் போது ஏகாக்ரசித்தம் பெறுகின்றனர். வேறுசிலர் கூரிய கூழாங்கற்களின்மீது அமர்ந்து இதை அடைகின்றனர். இவை எல்லாம் அசாதாரணமான உதாரணங்கள்; கொஞ்சங்கூட விஞ்ஞானப் பொருத்தமற்ற முறைகள். விஞ்ஞானமுறை என்பது படிப்படியாக மனதைப் பயிற்றுவிப்பதே ஆகும்.

தமது கைகளை உயரத் தூக்கிவைத்துக்கொண்டிருப் பதன்மூலம் ஒருவருக்கு மன ஒருமைப்பாடு கிடைக்கிறது. சித்திரவதை, அவருக்கு வேண்டிய ஏகாக்ர சித்தத்தை அளிக்கிறது. ஆயினும் இவை எல்லாம் அசாதாரண மானவையே.

வெவ்வேறு தத்துவஞானிகளின் கருத்துக்கு ஏற்பப் பல பொது வழிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. துரிய நிலையை மனம் அடையவேண்டும் என்று சிலர் கூறுகின்றனர். இந்த உடல் நமக்கு ஏற்படுத்தியுள்ள கட்டுப்பாடுகளைத் தாண்டிச்

செல்லும் நிலை இது. உள்ளத் தூய்மையே அறநெறியால் யோகி பெறும் பயனாகும்.

மனம் எவ்வளவு தூய்மையாக இருக்கிறதோ, அவ்வளவு அதைக் கட்டுப்படுத்துவதும் எளிது. மனமானது, அதில் எழும் ஒவ்வொரு சிந்தனையையும் பற்றிக்கொள்கிறது; அச்சிந்தனையை வளர்த்துக்கொண்டே போகிறது. எவ்வளவுக்கெவ்வளவு கீழான நிலையில் மனம் இருக்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு அதைக் கட்டுப்படுத்துவதும் கடினமாகும். ஒழுக்கமற்ற மனிதன் மனோதத்துவ சாஸ்திரத்தைக் கற்பதற்குத் தனது மனதை ஒருகாலும் ஒருமித்து ஈடுபடுத்த முடியாது. ஆரம்பத்தில் அவன் ஒரு சிறிதளவு மனதைக் கட்டுப்படுத்தக் கூடும். கேட்கும் சக்தியும் சிறிதளவு அவனுக்கு இருக்கலாம். . . . ஆனால் சிறிது காலத்தில் இந்த சக்திகளும் அவனைவிட்டு விலகும். இதில் உள்ள கஷ்டம் என்னவென்றால், சிலருக்குக் கிடைக்கும் அசாதாரண சக்தியானது ஒழுங்கான விஞ்ஞான பூர்வமான பயிற்சியினால் கிடைத்தது அன்று. நீங்கள் நெருங்கி ஆராய்ந்தால் இதைக் காணலாம். மந்திர சக்தியினால் பாம்புகளை அடக்கும் மனிதர்கள் பாம்புகளினாலேயே கொல்லப்படுகிறார்கள். . . . அசாதாரண சக்திகளை அடையும் மனிதன் நாளாவட்டத்தில் அந்த அசாதாரண சக்தியினாலேயே அழிகிறான். எத்தனையோ வகையான வழிகளின்மூலம் இவ்வித அசாதாரண சக்தியை அடையும் மனிதர்கள் இலட்சக் கணக்கானவர் இந்தியாவில் இருக்கிறார்கள். இவர்களில் மிகப் பெரும்பாலோர், கிறுக்கர்களாக உளறிக்கொண்டு சாகின்றனர். மனம் சமநிலை இழப்பதனால் பலர் தற்கொலை செய்துகொள்கின்றனர்.

ஆகவே பாதுகாப்பான வழிகளில், விஞ்ஞானபூர்வமான, நாளடைவில் பயன்தரக்கூடிய, அமைதியான வழிகளின் மூலம் நாம் இதைக் கற்றல் வேண்டும். இதன் முதல்தேவை ஒழுக்க வாழ்க்கை. ஒழுக்கமுள்ள வாழ்க்கை நடத்தும் மனிதன், தெய்வங்கள் கீழே இறங்கிவரவேண்டும் என்று விரும்பினாலும், அவை கீழே இறங்கிவந்து அவனுக்குக் காட்சி தரும். நம்முடைய மனநூல்களும் தத்துவநூல்களும் கூறுவதன் சாரம் இதுவே. அதாவது பூரணமான, பரிசுத்த வாழ்க்கை வாழ்தல். இதன் பொருள் என்ன என்பதைச்

2

சிறிது சிந்தித்துப் பாருங்கள்! யாருக்கும் தீங்கு செய்யா திருத்தல், பரிபூரண பரிசுத்தம், பரிபூரண தவ வாழ்க்கை! இவையெல்லாம் அத்தியாவசியம். இவற்றையெல்லாம் பரி பூரணமாக ஒருவன் அடைய முடியுமா என்பதையும் சிந்தித்துப் பாருங்கள்! அவ்வாறு வாழ முடிந்தால் அதற்கு மேல் உங்களுக்கு என்னதான் வேண்டும்? எந்த உயிர்ப் பிராணியிடமும் ஒருவனுக்கு விரோத உணர்ச்சி இல்லை யென்றால்... அவன் முன்வரும் எந்த உயிர்ப்பிராணியும் அவனிடம் பகைமை கொள்ளாது. யோகிகள் இதற்கான கடுமையான விதிகளை வகுத்துள்ளார்கள்... தரும சிந்தனை இல்லாத ஒருவன் தான் தருமசிந்தனை உடையவனாகப் பகட்டிக்கொள்ள முடியாது...

நீங்கள் என்னை நம்புங்கள். பாம்புகளுடனும், பூச்சிக ளுடனும் குகையில் வாழ்ந்த மனிதரை* நான் பார்த்திருக்கி றேன். சில சமயம் மாதக்கணக்காக அவர் உணவருந்தாது இருப்பார்; அதன் பின்பு வெளியே வருவார்; எப்போதும் மௌனமாகவே இருப்பார். ஒரு நாள் ஒரு திருடன் வந்தான்...

"இதயத் தாமரை மலரும்போது தேனீக்கள் தாங்களா கவே அதனை நாடி வரும்" என்று என்னுடைய குருநாதர் சொல்வது வழக்கம். இப்படிப்பட்ட மனிதர்கள் இன்றும் இருக்கிறார்கள். அவர்கள் பேச வேண்டியதில்லை... இதய பூர்வமாக ஒரு மனிதன் பரிசுத்தவானாக இருக்கும்போது, சிந்தனையில்கூட அவனிடம் பகைமை உணர்ச்சி இல்லாத போது, எல்லா மிருகங்களுமே அவன்முன் தங்களுடைய பகைமை உணர்ச்சியை விட்டுவிடும். அதேபோன்றுதான் பரிசுத்தமும். சக மனிதர்களிடம் நாம் கொண்டுள்ள உற விலும் இது அவசியம். நாம் எல்லாரையும் நேசிக்க வேண் டும்... பிறருடைய குறைகளைக் கண்டுபிடிக்க நமக்கு உரி மையில்லை; அதனால் பயனும் இல்லை. நாம் அவைபற்றிச் சிந்திக்கவும் கூடாது. நமது அலுவல் எல்லாம் நல்லவற்றுட னேயே. பிறர் தவறுகளை எவ்வாறு திருத்துவது என்பதற் காக நாம் இங்கில்லை. நல்லவர்களாக இருக்கவேண்டியதே நமது கடமை.

---

* இந்த இடத்தில் பவஹாரிபாபாவையே சுவாமி குறிப்பிடுகிறார்.

இங்கே குமாரி ... வருகிறார். "நான் யோகியாகப் போகிறேன்" என்று அந்த அம்மையார் கூறுகிறார். அவர் இச் செய்தியை இருபது முறை கூறுகிறார். ஐம்பது நாட்கள் தியானமும் செய்கிறார். அதன் பின், "இந்த மதத்தில் என்ன இருக்கிறது? அதை நான் முயன்று பார்த்து விட்டேன். அதில் ஒன்றுமே இல்லை" என்று கூறி வருகிறார்.

ஆன்மிக வாழ்வின் அடிப்படை இங்கில்லை. பரிபூரண ஒழுக்கம்தான் அதன் அஸ்திவாரம். அதுவே மிகவும் கடினமானது.

எங்களுடைய நாட்டில் சைவ வகுப்பினர் இருக்கின்றனர். அவர்கள் ஒவ்வொரு நாள் காலையிலும், எறும்பிற்காக ராத்தல் கணக்கில் சர்க்கரையை வைப்பார்கள். இதைப் பற்றி ஒரு கதையும் உண்டு. ஒரு நாள் ஒரு மனிதன் எறும்புக்காகத் தரையில் சர்க்கரை வைத்துக்கொண்டிருந்தான். அந்த வழியாக வந்த மற்றொருவன் அதை மிதித்துவிட்டான். உடனே சர்க்கரை வைத்தவன், "பாழாய்ப் போகிறவனே, உயிர்களைக் கொன்றுவிட்டாயே?" என்று கூறி, அவனது உயிர் போகும்வண்ணம் நையப்புடைத்துவிட்டான்.

புறத்தூய்மை எளிது. உலகம் முழுவதுமே அதை நோக்கி விரைகிறது. ஒரு குறிப்பிட்ட ஆடை அணிவதுதான் நாம் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கம்என்றால், எந்த முட்டாளும் அதைச் செய்வான். ஆனால் மனதுடன் போரிட்டு வெல்வதுதான் கடினமாக உள்ளது.

வெளிப்பார்வைக்காகக் காரியங்கள் செய்பவர்கள் தங்கள் தூய்மையைப் பற்றி எவ்வளவு பெருமை அடித்துக் கொள்கிறார்கள்! நான் சிறுவனாக இருந்தபோது கிறிஸ்து நாதர் பண்பிலே எனக்குப் பெருமதிப்பு இருந்தது. [இதன் பின்னர் பைபிளில் வரும் திருமண விருந்தைப்பற்றி நான் படித்தேன்.] உடனே புத்தகத்தை மூடி வைத்துவிட்டு நான் சொன்னேன்: "அவர் மாமிசம் சாப்பிட்டிருக்கிறார்; மது அருந்தியிருக்கிறார்; அவர் மகானாக இருந்திருக்க முடியாது."

மெய்ப்பொருள் காண நாம் எப்போதுமே தவறி விடுகிறோம். அற்ப விஷயமான உணவு, உடை! இவை பற்றி

எந்த முட்டாளும் கவனிக்க முடியுமே? இவற்றிற்கு அப்பால் இருக்கும் ஒன்றைக் கவனிப்பவர் எவரே! இந்த ஒன்றே இதயத்தின் பண்பு. இதுவே நமக்கு வேண்டும்... இந்தியாவில் ஒரு மக்கள் கூட்டத்தினர் தங்களைப் பரிசுத்தமாக்கிக் கொள்ளப் பல முறை குளிக்கின்றனர்; சில சமயம் ஒரு நாளைக்கு இருபது முறைகூடக் குளிக்கின்றனர். அவர்கள் யாரையும் தொடுவதில்லை... இவை மேற்போக்கான விஷயங்களே! ஆழ்ந்த உண்மைகளல்ல. [குளிப்பதன்மூலம் ஒருவன் பரிசுத்தம் அடையமுடியும் என்றால்] மீன்கள்தான் மிகவும் பரிசுத்தமான உயிர்கள்!

குளித்தல், ஆடைபுனைதல், உணவு வகைகளை ஒழுங்குபடுத்திக்கொள்ளுதல் இன்னோரன்ன எல்லாம் ஆன்மிகத் துறைக்குத் துணை நிற்கும்போதுதான் உரிய முக்கியத்துவம் பெறுகின்றன. முதன்மையானது ஆன்மீகம். மற்றவை அதற்குத் துணை. ஆன்மீகம் இல்லாமல், எவ்வளவுதான் புறத்தூய்மை இருந்தாலும்... அதனால் பயனே இல்லை. அதே சமயம் சரியான முறையில் புரிந்துகொண்டால் அவை துணையாக இருக்கும். தவறான முறையில் கையாண்டாலோ அவை நம்மைத் தாழ்த்திவிடும்...

நான் இவை பற்றி விளக்கிக் கொண்டிருப்பதற்குக் காரணம் உண்டு. முதலாவதாக, எல்லா மதங்களிலுமே, அறியாமக்கள் கடைப்பிடிக்கும்போது ஒவ்வொன்றும் நம்மைக் கீழ்நிலைக்குக் கொண்டுசெல்கிறது. புட்டியிலிருந்து கற்பூரம் ஆவியாகப் போய்விட, புட்டிபற்றி அவர்கள் சண்டையிட்டுக் கொள்கின்றனர்.

மற்றொன்று... "இதுதான் சரி, அது தவறு" என்று அவர்கள் கூறும்போது, ஆன்மீகம் மறைந்து விடுகிறது. உருவங்கள், அனுஷ்டானங்கள் ஆகியவை பற்றித்தான் சண்டையெல்லாம்; ஒருபோதும் ஆன்மீகத்தின் ஜீவனைப் பற்றியன்று. புத்தமத வாதிகள் பல வருஷங்களாக மகத்தான பிரசாரம் செய்துவருகிறார்கள். படிப்படியாக அந்த ஆன்மீகம் மறைந்துவிடுகிறது... [இதே போன்றுதான் கிறிஸ்தவ மதத்திலும்]. இவ்வளவிற்கும் பின்னர், ஒன்றில் மூன்று கடவுளரா, அல்லது மூன்றில் ஒன்றா என்ற சண்டை எழுந்தது. ஆனால் யாரும் ஆண்டவனிடம் சென்று அவன்

எப்படி இருப்பான் என்று காண விரும்பியதில்லை. ஒன்றில் மூன்று, மூன்றில் ஒன்று என்று காண்பதற்கு நாம் இறைவனிடம் சென்றாக வேண்டுமே!

இவ் விளக்கத்துடன் இப்போது ஆசனம் பற்றிய விஷயத்துக்கு வருவோம். மனதைக் கட்டுப்படுத்தும் முயற்சிக்கு ஒரு குறிப்பிட்டவகை ஆசனம் முக்கியம். எந்த ஆசனம் ஒருவனுக்குச் சௌகரியமாக முடியுமோ, அதுவே அவனுக்கான ஆசனமாகும். பொதுவாக, முதுகுத்தண்டு எலும்பின்மீது பாரம் ஏருமலிருக்க வேண்டும். இதை நீங்கள் அனுபவத்தில் காணலாம். உடம்பின் பாரத்தைத் தாங்குவதற்காக அது படைக்கப்படவில்லை... உட்காரும் ஆசனத்தில் நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டிய ஒரே நிபந்தனை, "முதுகுத் தண்டானது உடல் பளுவிலிருந்து பூரணமாக விடுபட்டிருக்கும் எந்த ஆசன முறையையும் ஏற்றுக்கொள்" என்பதுதான்.

இதற்கு அடுத்தது பிராணுயாமம்... சுவாசப் பயிற்சிக்கு மிகுந்த முக்கியத்வம் உண்டு. நான் இப்போது கூறுபவை எல்லாம் இந்தியாவில் உள்ள சிலர் கடைப்பிடிக்கும் விஷயங்கள் மட்டுமல்ல; பொதுவானவையே. இந்த நாட்டில் உங்களுடைய குழந்தைகளுக்குச் சில பிரார்த்தனைகளைக் கற்றுக் கொடுக்கிறீர்கள். அதேபோன்று இந்தியாவிலும் குழந்தைகளுக்குச் சில உண்மைகளைப் புகட்டுகிருர்கள்.

இந்தியாவில் குழந்தைகளுக்கு, ஓரிரு பிரார்த்தனைகளைத் தவிர எந்த விதமான சமயப்பாடமும் கற்றுக்கொடுக்கப்படுவது இல்லை. பின்னர் அவர்கள் தாங்கள் ஒன்ருக இணைந்து லயித்திருக்கக் கூடிய ஓர் ஆசானைத் தேடிச் செல்கிருர்கள். முதலில் அவர்கள் பலரிடம் செல்கிருர்கள். இறுதியில், "இவர்தான் நமக்கான மனிதர்" என்று ஒருவரைத் தேர்ந்தெடுத்து, அவரிடம் மந்திரோபதேசம் பெறுகிருர்கள். நான் திருமணமானவனுக இருந்தால், என்னுடைய மனைவி ஒரு வேளை என்னுடைய குருவை விரும்பாது வேருெரு குருவை நாடலாம். எனது மகன், அவரையும் விரும்பாது இன்னெரு குருவை அடையலாம். எனக்கும் எனது குருவுக்கும் உள்ள சமய உறவு இரகசியமானது. மனைவியின் சமயக் கோட்பாடுகளைக் கணவன் அறியவேண்டும் என்பதில்லை. அவ

ளுடைய சமயக் கோட்பாடு என்னவென்று அவன் தைரிய மாகக் கேட்கவும் மாட்டான். அவளும் அதை ஒருபோதும் சொல்லமாட்டாள் என்பது பகிரங்க உண்மை. அது, குறிப் பிட்ட ஆண் அல்லது பெண்ணுக்கும் அவர்களது குருவுக்கு மட்டுமே தெரிந்தது... ஒருவருக்குக் கேலிக் கூத்தாகப்படு வ்து மற்றொருவருக்குச் சிறந்த போதனையாக இருப்பதை நீங்கள் சில சமயம் காணலாம். ஒவ்வொருவனும் அவனவன் 'பாரத்தைச் சுமந்து'கொண்டிருக்கிறான். அவனுடைய மனோநிலைக்கு ஏற்ப அவனுக்கு உதவவேண்டியிருக்கிறது. அவனுடைய பணி என்பது, அவனும் அவனது குருவும், ஆண்டவனும் சம்பந்தப்பட்ட விஷயம். அதே சமயம் இந்த குருமார் எல்லாரும் புகட்டும் சில பொதுவான முறைகள் இருக்கின்றன. சுவாசப் பயிற்சியும் தியானம் செய்தலும் எல்லாருக்கும் பொதுவானவை. அதுதான் இந்தியாவி லுள்ள வழிபாட்டுமுறை.

கங்கைக் கரையில், சுவாசப் பயிற்சிசெய்யும் ஆண், பெண், குழந்தைகள் ஆகியோரை நாம் காணலாம். இவர் கள் சுவாசப் பயிற்சி செய்துவிட்டுப் பின்னர் தியானம் செய்வார்கள். இவர்களுக்கு மற்றும் பல வேலைகள் இருப்ப தால், இவற்றிற்கு அதிக நேரம் செலவழிக்க முடியாது. ஆனால் இதை வாழ்க்கையின் முக்கிய அம்சமாக எடுத்துக் கொண்டவர்கள் பல்வேறு முறைகளையும் அனுஷ்டித்துப் பார்ப்பார்கள். மொத்தத்தில் எண்பத்திநான்கு ஆசனங்கள் இருக்கின்றன. ஒருவருடைய மேற்பார்வையில் இப்பயிற்சி செய்பவர்கள், மூச்சையும், உடலின் பல்வேறு பகுதிகளில் ஏற்படும் சலனங்களையும் உணர்வார்கள்.

இதற்கு அடுத்தது "தாரணை"... சில குறிப்பிட்ட மையங்களில் மனதை நிலைநிறுத்துவதுதான் "தாரணை" என்பது.

இந்துப் பையன்களும் பெண்களும் மந்திரோபதேசம் பெறுகிறார்கள். தன்னுடைய குருவிடமிருந்து ஓர் இந்துப் பையன் ஒரு "சொல்லைப்" பெறுகிறான். இதுதான் மூலச் சொல் அல்லது மந்திரம் என்று கூறப்படுகின்றது. இந்த மந்திரத்தை மேற்கண்ட குருவுக்கு அவருடைய குரு அளித் திருப்பார். இப்போது இவர் அதைத் தமது சீடனுக்கு

உபதேசிக்கிருர். இப்படிப்பட்ட மந்திரங்களில் ஒன்று "ஓம்" என்பது. இந்த மந்திரங்களுக்கு நிறையப் பொருள் உண்டு. அவைகளை இரகசியமாக வைத்திருக்கிருர்கள்; ஒருபோதும் எழுதுவதில்லை. இந்த மந்திரத்தைக் குருவிடமிருந்து – காதின் வழியாகப் பெறவேண்டும் – எழுத்துமூலம் அன்று. அதன் பின்னர் அதைக் கடவுளே போன்று போற்ற வேண்டும். அந்த மந்திரத்தின்மீது தியானம் செய்ய வேண்டும்...

ஒரு சமயம் மழைக்கால முழுவதும் நான்கு மாதங்கள் நான் இவ்வாறு தியானம் செய்தேன். காலையில் எழுந்து ஆற்றில் ஸ்நானம் செய்வேன்; அதன் பின்பு ஈர உடைகளுடனேயே மந்திரத்தைச் சொல்ல ஆரம்பிப்பேன்; சூரியன் மேற்கில் மறையும்வரை மந்திரத்தைக் கூறிக்கொண்டே இருப்பேன்; இதன் பின்னர் ஏதாவது சாப்பிடுவேன் – கொஞ்சம் அரிசிச் சாதம் அல்லது ஏதாவது சாப்பிடுவேன். மழைக் காலத்தில் நான்கு மாதங்கள் இவ்வாறு செய்திருக்கிறேன்!

இந்த உலகத்தில் நாம் அடைய முடியாதது எதுவுமே இல்லையென்று இந்தியர்கள் நம்புகிருர்கள். இந்த நாட்டில் ஒருவனுக்குப் பணம் வேண்டுமென்ருல், வேலைக்குப் போய்ப் பணம் திரட்டுகிருன். ஆனுல் இந்தியாவிலோ ஒருவன் ஒரு மந்திரத்தைப் பெறுகிருன். ஒரு மரத்தின்கீழ் அமர்ந்து, பணம் தன்னைத் தேடி வரவேண்டுமென உறுதியாக எண்ணுகிருன். அவனுடைய சிந்தனையின் சக்தியாலேயே எல்லாம் அவனுக்குக் கிடைக்கும் என்பது அவனது நம்பிக்கை. இங்கு நீங்களும் பணத்தைத் திரட்டுகிறீர்கள்; உங்களுடைய சக்தி முழுவதையும் பணம் திரட்டுவதில் செலவிடுகிறீர்கள்; அதே காரியந்தான்.

ஹடயோகிகள் என்று அழைக்கப்படும் சிலர் இருக்கிருர்கள்... இறவாமல் உடலைக் காப்பாற்றுவதுதான் மிகச் சிறந்தது என்று அவர்கள் கூறுகிருர்கள்... அவர்களுடைய உழைப்பெல்லாம் உடலை விடாமல் பற்றிக்கொண்டிருப்பதற்காகவே! இதற்காக அவர்கள் பன்னிரண்டு வருஷப்பயிற்சி பெறுகிருர்கள். குழந்தைப் பருவத்திலிருந்தே அவர்கள் இப்பயிற்சியை ஆரம்பிக்கிருர்கள். இல்லையேல் இது

சாத்தியமற்றதாகிவிடும்... ஹடயோகியைப் பற்றிய ஒரு விஷயம் விந்தையாகத் தோன்றும். ஒரு ஹடயோகி, தான் ஒரு குருவுக்கு முதன்முதலாகச் சிஷ்யனாகும்போது காட்டுக்குச் சென்று சரியாக நாற்பது நாட்கள் தன்னந்தனியாக வசிக்க வேண்டும். அவனுக்குத் தெரிந்த எல்லாம், அந்த நாற்பது நாட்களில் கற்றுக்கொண்ட பாடந்தான்...

கல்கத்தாவைச் சேர்ந்த ஒருவர், தாம் ஐந்நூறு ஆண்டுகள் வாழ்ந்திருப்பதாகக் கூறுகிறார். தங்களுடைய பாட்டன்மார் அவரைப் பார்த்திருப்பதாக மக்கள் என்னிடம் கூறுகிறார்கள்... அவர் தேகப் பயிற்சிக்காக நாள்தோறும் இருபது மைல் தூரம் நடக்கிறார்; இல்லை, அவர் ஒருபோதும் நடப்பதில்லை; ஓடுகிறார்! அவர் தண்ணீருக்குள் மூழ்கி, உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால்வரை களிமண்ணைப் பூசிக்கொள்கிறார்... இவைகளில் எல்லாம் நன்மை இருப்பதாக நான் கருதவில்லை. [பாம்புகள் இருநூறு ஆண்டுகள் வாழ்வதாகக் கூறுகிறார்கள்.] அவர் மிகவும் வயதானவராகத்தான் இருக்க வேண்டும். ஏனெனில், இந்தியா முழுவதிலும் பதினான்கு ஆண்டுகள் நான் சுற்றுப்பிரயாணம் செய்த காலத்தில், நான் சென்ற இடங்களிலெல்லாம், மக்கள் அவரை அறிந்திருப்பதைக் கண்டேன். அவரும் தமது வாழ்நாள் முழுவதும் சுற்றியிருக்கிறார். ஹடயோகி என்பவர் எண்பது அங்குல நீளமுள்ள ஒரு ரப்பர்த் துண்டை விழுங்கி அதை அப்படியே எடுத்துவிடுவார். ஒவ்வொரு நாளும் தமது உடல் உறுப்புக்களை—உள்ளேயிருக்கும் உறுப்புக்களையும் சரி, வெளியே இருக்கும் உறுப்புக்களையும் சரி—ஒரு ஹடயோகி கழுவ வேண்டும்.

அவர்கள் தங்களுடைய "உடல்களை" ஆயிரக்கணக்கான ஆண்டுகள் பாதுகாப்பாக வைத்திருக்க முடியும்... அதனால் என்ன பயன்? அவ்வளவு காலம் வாழ நான் விரும்பமாட்டேன். "உள்ளதே போதும்; நாளை பற்றிய கவலை ஏன்?" குறைபாடுகளும் மாயத் தோற்றங்களும் உள்ள இந்த ஒரு சிறிய உடலே போதும்.

மற்றும் சில பிரிவினர் இருக்கின்றனர். ஜீவ அமுதத்திலிருந்து ஒரு துளி அவர்கள் உங்களுக்கு அளிக்கிறார்கள். நீங்கள் என்றும் இளமையுடன் இருக்கிறீர்கள்... இவ்வாறு

பல்வேறு பிரிவினர்களையும் நான் விளக்கிக் கூறுவதாக இருந்தால், பல மாதங்களாகும். அவர்களுடைய நடவடிக்கைகள் எல்லாம் லோகாயத உலகம் சம்பந்தப்பட்டனவே. ஒவ்வொரு நாளும் ஒரு புது உட்பிரிவு தோன்றிக்கொண்டிருக்கிறது...

இந்தப் பிரிவினருடைய சக்தி எல்லாம் மனதிலிருந்தே வருகின்றன. மனதைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்வதே அவர்களுடைய நோக்கம்.

முதலில் மனதை ஒருமைப்படுத்தி ஒரு குறிப்பிட்ட இடத்தில் நிறுத்துங்கள். முதுகுத் தண்டில் ஏதாவது ஒரு இடத்தில் அல்லது நரம்புமையங்களில் மனதை நிறுத்தலாம் என்று அவர்கள் பொதுவாகக் கூறுகிறுர்கள். நரம்புமையங்களில் மனதை நிலை நிறுத்துவதன்மூலம் யோகி உடலை வெற்றி கொள்கிறுன். யோகியின் அமைதிக்குப் பெருந் தொல்லை அளிப்பதும், அவனுடைய உயர்ந்த லக்ஷியத்திற்கு எதிராக இருப்பதும் உடலே. ஆகையால் உடலைத் தனது பணியாள்போலத் தனது கட்டுப்பாட்டின்கீழ் வைத்திருக்க அவன் விரும்புகிறுன்.

இதற்கு அடுத்தது தியானம். இதுதான் மிக உயர்ந்த நிலை. மனம் ஐயப்பாட்டுக்கு உள்ளாகும் நிலை, உயர்ந்த நிலையன்று. அதனுடைய உயர்ந்த நிலை தியானநிலையே. மற்ற எதனுடனும் ஐக்கியப்படாமல் பொருள்களைக் கவனிக்கிறது; பார்க்கிறது. உடம்பில் இருக்கும் வலியை நான் உணரும்வரை, நான் உடலில் என்னை ஐக்கியப்படுத்தி விட்டேன். இன்பத்தையோ, துன்பத்தையோ நான் உணரும்போது, உடலுடன் இணைந்து நிற்கிறேன். ஆனுல் உயர்ந்த நிலை என்று நான் கூறும் தியான நிலையில், இன்பமும் துன்பமும் ஒரே மாதிரி ஆனந்தமயமாகத்தான் தெரியும்... ஒவ்வொரு தியானமும் நேரடியான துரிய நிலையே. பரிபூரணமான மன ஒருமைப்பாடு ஏற்படும்போது, ஆன்மாவானது, கரடுமுரடான உடலின் பந்தங்களிலிருந்து விடுபட்டு, தன்னைத்தானே அறிகிறது. ஒருவன் விரும்புவன எல்லாம் அவனுக்குக் கிடைக்கின்றன. சக்தியும் அறிவும் முன்பே அங்கிருக்கின்றன. சக்தி இல்லாத சடப்பொருளில் ஆன்மா ஐக்கியப்படும்போதுதான், அது துன்பத்தைக் கண்டு அழுகி

றது. இறக்கும் தன்மையுள்ள தோற்றங்களுடன் அது தன்னை ஒன்றுபடுத்திக்கொள்கிறது ... ஆனால் உண்மையிலேயே சுதந்திரமான அந்த ஆன்மா தனது சக்தியைப் பிரயோகிக்க வேண்டுமென எண்ணினால் நிச்சயம் அது சாத்தியமாகும். அது விரும்பவில்லை என்றால்தான் சாத்தியமாகாது. ஆண்டவனை அறிந்தவன் ஆண்டவனே ஆகிவிட்டான். அப்படிப்பட்ட சுதந்திர ஆன்மாவுக்கு, சாத்தியமற்றது என்பது எதுவும் இல்லை. அவனுக்கு இனிமேலும் பிறப்பு இறப்பு என்பதில்லை. அவன் நித்திய முக்தனாகிறான்.

கருமயோகம்

மனம் பிரபஞ்சம் என்னும் இவை சம்பந்தப்பட்ட பொருள்களிலிருந்து ஆன்மாவைப் பிரித்து நிறுத்துவதே இலட்சியம். இதில் சித்தி பெற்றுவிட்டால், தான் என்றும் தனியாகவே இருந்ததை ஆன்மா அறிந்துகொள்ளும்; தன்னை மகிழ்விக்க வேறு யாரும் தேவையில்லை என்பதையும் அது உணர்ந்துகொள்ளும். நமக்கு மகிழ்ச்சியளித்தற் பொருட்டு வேறுயாரையாவது எதிர்பார்க்கும்வரை நாம் அடிமைகளே ஆவோம். தான் சுதந்திரம் உடையது என்பதையும், தனது நிறைவுக்கு வேறு எதுவும் தேவையில்லை என்பதையும், பந்தப்பட்டது போன்ற இந்த நிலை தனக்கு அவசியமில்லை என்பதையும் ஆன்மா என்று அறிகிறதோ, அன்றே விடுதலை அல்லது 'கைவல்யம்' சித்தியாகிறது.

மனிதர்கள் பணத்தைத்தேடி அதன் பின் ஓடுகிறார்கள். அதன் பொருட்டுத் தம் சகோதரரை வஞ்சிப்பதற்கும் தயங்குவதில்லை. இவர்கள் தங்களைக் கட்டுப்படுத்திக் கொள்வார்களானால், சில ஆண்டுகளில் இவர்களது ஒழுக்கம் பெரிதும் முன்னேறிவிடும். இதனால், இவர்கள்—விரும்பினால் போதும்—பல்லாயிரம் ரூபாய்களை (டாலர்கள்) ஈட்டிவிட இயலும். அந்த நிலையில் இவர்கள், தங்கள் சங்கற்பத்தால் உலகையே அடக்கி ஆள இயலும். ஆனால், நாம் பெரிதும் அறிவிலிகளாகவே இன்னும் இருக்கிறோம்.

ஒருவன் தன் பிழைகளை உலகறியப் பேசுவதால் என்ன பயன்? அதனால் அந்தப் பிழைகளைப் போக்கிவிட இயலாது. ஒருவன் செய்த வினைப்பயனை அவன் அநுபவித்தே தீரவேண்டும்; இதனால், ஒவ்வொருவரும் முயன்று நல்வினைகளைச் செய்யவேண்டும். அறிவும் ஆற்றலும் மிக்கவரிடந்தான் உலகம் இரக்கம் காட்டுகிறது. மக்கள் சமூகத்துக்குக் காணிக்கையாகச் செய்யப்பட்ட சேவையும், இயற்கைக்குச் செய்யப்பட்ட சேவையுமே எந்த வகையிலும் செய்பவனைக் கட்டுப்படுத்தாதவைகளாகும்.

எந்த வகைக் கடமையையும் அலட்சியமாக நினைத்தல் கூடாது. தாழ்ந்த வேலை செய்வதாலேயே ஒருவன் தாழ்ந்தவனாகான்; உயர்ந்த வேலை செய்பவன் அதனாலேயே

உயர்ந்துவிடான். வேலையின் சிறுமை பெருமைகளால் ஒருவனது சிறுமை பெருமைகளைத் தீர்மானிக்கக்கூடாது ; அந்த வேலைகளை அவன் எவ்வண்ணம் ஆற்றுகிறான் என்பது கொண்டே தீர்மானிக்கவேண்டும். கடமை செய்யும் முறையும் திறமையுமே ஒருவனது சிறுமை பெருமைகளைக் கணக்கிட உதவுவன. தொழிலைப் பொறுத்த வரை, ஒவ்வொரு நாளும் பயனற்றவை பேசும் பேராசிரியரைவிட, மிகக் குறைந்த நேரத்தில் உறுதியும் அழகும் வாய்ந்த செருப்புத் தைக்கும் தொழிலாளியே சிறந்தவனாவான்.

கடமை ஒவ்வொன்றும் புனிதமானதே. அதனைப் பய பக்தியுடன் செய்வதே உயரிய தெய்வவழிபாடு ஆகும். மாயையில் சிக்குண்டு, அஞ்ஞானத்தில் மூழ்கிக்கிடக்கும் பந்த ஆன்மாக்கள்—கட்டுப்பட்ட ஆன்மாக்கள்—ஞான ஒளியும் விடுதலையும் பெறுதற்கு இத்தகைய செயல்கள் பேருதவி புரியும்.

நம் கைக்கு எட்டிய, நம்மால் இயன்ற, நாம் மேற்கொண்டுள்ள கடமைகளை நன்கு செய்வதால் அதிக வலிமை பெறுகிறோம். இவ்வலிமையை இவ்வண்ணமே வளர்த்தால் படிப்படியே பெருமை மிக்கதொரு நிலை பெறுதல் கூடும்; வாழ்க்கையிலும், சமூகத்திலும் பெறுதற்கரிய நிலை; எல்லாரும் இச்சை கொள்ளத்தக்க நிலை; மாண்பு மிக்க கடமை புரியும் நிலை.

இயற்கையின் நீதி எப்போதும் கடினமாகவும் சற்றும் இரக்கத்துக்கு இடம்இல்லாததாகவுமே இருக்கிறது.

காரியசித்தியில் நாட்டமுள்ள எவனும் வாழ்க்கை நல்லது என்று நவிலமாட்டான் ; கெட்டது என்றும் கூற மாட்டான்.

வாழ்க்கையில் வெற்றிபெற்ற மனிதர் ஒவ்வொருவருக்கும் பின்னணியில் அளவற்ற நேர்மையும் அளவற்ற உண்மையும் இருந்தே தீரவேண்டும். அவர்தம் சிறந்த வெற்றிக்கு இவைகளே காரணம். அவன் முற்றும் தன்னலம் துறந்தவனாக இருந்திருக்கமாட்டான்; தன்னலத்துறவு நோக்கி முன்னேறிக் கொண்டிருப்பான். அவன் முற்றும் சுயநலம் அற்றவனாய் இருந்திருந்தால், அவன் வெற்றி புத்த பகவானது

வெற்றியையும் இயேசுநாதரது வெற்றியையும் போல் மிகச் சிறந்ததாக விளங்கியிருக்கும். சுயநலத்துறவின் அளவைக் குறிப்பதே வெற்றியின் அளவு. மனித குலத்தின் மாபெருந் தலைவர், உயர் நிலையில் செயல் புரிவோர்; மேடைச் சொற் பொழிவாளர்களல்லர்.

எவ்வளவுதான் முயன்றாலும் முற்றும் தூய்மையான செயலோ, அன்றி முற்றும் தூய்மையற்ற செயலோ இருக்க இயலாது. தூய்மை, தூய்மையின்மை என்பவற்றுக்குத் தீமை செய்யாமை, தீமை செயல் என்றே பொருள்கொள்ள வேண்டும். பிறருக்குத் தீமை விளைவியாமல் நாம் வாழவோ மூச்சுவிடவோ இயலாது. நாம் உண்ணும் ஒவ்வொரு பிடிச் சோறும் வேறொருவர் வாயிலிருந்து கவரப்பெற்றதே. நமது வாழ்க்கையே வேறு சிலரது வாழ்க்கைக்கு அழிவு தேடிக் கொண்டுதான் இருக்கிறது; அப்படி அழிபவை மனித உயிராகவோ, விலங்கின் உயிராகவோ, தாவர இனமாகவோ இருக்கலாம். எப்படியோ, எங்கோ உள்ள ஒன்றின் அழிவுக்கு நம் வாழ்வு காரணமாகிறது. எனவே செயல் மூலம் நிறைவு பெறுவதென்பது என்றும் இயலாததொன்று. காலத்தின் முடிவுவரையில் நாம் உழைத்தாலும், குழப்பம் மிகுந்த சிக்கலான புதிரனைய நெறியிலிருந்து வெளிவர இயலாது. நாம் வேலை செய்தவண்ணமாகவே இருக்கலாம்; ஆனால் முடிவு காணமட்டும் இயலாது.

சுதந்திரமாக அன்போடு உழைக்கும் ஒருவன் விளைவு பற்றி எண்ணவே மாட்டான். ஆனால், அடிமையோ, சவுக்கடி வேண்டுகிறான்; சேவகன் கூலி வேண்டுகிறான். வாழ்க்கை முழுவதிலும் இப்படியேதான் நிகழ்கிறது. பொது வாழ்வை எடுத்துக்கொள்ளுங்கள். பொது மக்களுக்குப் பேருரை வழங்கும் ஒருவன் கரகோஷம் வேண்டுகிறான்; கூச்சல் விரும்புகிறான். இஃதன்றி அவனை ஒரு மூலையில் இருத்தி விட்டால், அது அவனைக் கொல்வதற்கு ஒப்பாகும். அவனுக்கு இவை தேவை. அடிமையாக வேலைசெய்வது இது. இந்த மாதிரி நிலையில் வேலைக்கு ஏதோ ஒரு பலனை விரும்புவது இத்தகையவர் இயல்பு. அடுத்த படி; தொழில் செய்து உயிர்வாழ்தல். இவனுக்குச் சம்பளம் அல்லது கூலி வேண்டும், 'நான் உனக்கு உழைப்பைத் தருகிறேன்; நீ

எனக்கு அதை—சம்பளத்தைக் கொடு' என்னும் பேரம் இது. 'வேலைக்காகவே நான் வேலை செய்கிறேன்' என்று வாயால் சொல்வது எளிது. ஆனால் இதில் சித்தி பெறுவதைப் போலக் கடினமானது வேறொன்றும் இல்லை. வேலைக்காகவே வேலை செய்யும் மனிதன் ஒருவன் உண்மையாகவே இருந்தால், அவன் திருமுகம் காண இருபது மைல் தூரமானாலும் தலையால் ஊர்ந்து செல்ல ஆயத்தமாய் இருப்பேன். அப்படிச் சொல்பவன் மனத்தை ஆராயின் பலன் இச்சை ஒன்று ஒளிந்திருப்பது தெரியும். அது பண ஆசை அன்று என்றால், பதவி ஆசையாய் இருக்கும்; அல்லது வேறு வகை இலாபமாய் இருக்கும். எப்படியோ எங்கேயோ இந்த வேலைக்குத் தூண்டுகோலான இச்சை ஒன்று இருந்தே தீரும். 'நீ எனக்கு நண்பன். நான் உனக்காக உன்னோடு உழைக்க விரும்புகிறேன்.' இப்படிச் சொல்வதெல்லாம் மிகவும் சரிதான். ஒவ்வொரு நொடியும், 'நான் சொல்வது உண்மை' என்று வற்புறுத்தலாம். ஆனால், ஒன்றிலே மட்டும் எச்சரிக்கையாய் இருங்கள். 'நீ எல்லா அம்சங்களிலும் என்னோடு ஒத்துப்போகவேண்டும். இல்லையோ, நான் உன் நலத்தைப் பற்றி அக்கறை கொள்ளமாட்டேன்; உனக்காக உழைக்கவும் மாட்டேன்.' பலனுக்காக உழைக்கும் உழைப்பினால் துன்பந்தான் ஏற்படும். நமது மனத்தை வென்ற நிலையில் செய்யும் வேலை ஒன்றினாலேதான் பற்றற்ற நிலை ஏற்பட இயலும்.

பிரபஞ்சம் முழுவதையும் மதிப்பிடுவதற்கான அடிப்படை அளவு நான் அல்லேன் என்று தெரிந்துகொள்வது தான் நமக்குச் சிறந்த முதற்பாடமாகும். ஒவ்வொருவனையும் அவனவன் எண்ணங்களுக்கு ஏற்றபடியே மதிப்பிட வேண்டும். ஒவ்வொரு மனித இனத்தையும் அதனதன் அளவுகளுக்கும் லட்சியங்களுக்கும் ஏற்றபடிதான் மதிப்பிட வேண்டும். ஒருநாட்டின் ஆசாரத்தை அதன் சூழ்நிலையையும் பகுத்தறிவையும் அடிப்படையாகக் கொண்டே மதிப்பிட வேண்டும். அமெரிக்க மக்கள் வாழும் சூழ்நிலைக்கு ஏற்றபடி அவர்கள் ஆசாரம் அமைந்திருக்கிறது. இப்படிப்பட்டனவே ஜப்பான், சீனா, இங்கிலாந்து முதலிய நாடுகளின் ஒழுக்கங்களும்.

நாம் ஒவ்வொருவரும் எந்த நிலைக்குத் தகுதி உள்ளவர்களோ அந்த நிலையில் இருப்பது தெரிகிறது. ஒவ்வொரு பந்தும் தனக்குத் தகுதியான குழியிலேயே போய்த் தங்குகிறது. ஒருவனுக்கு இன்னொருவனைவிட மிகுந்த தகுதி இருக்குமானால் அதையும் உலகம் கண்டுபிடித்துவிடும். பிரபஞ்சத்தில் நடந்து வரும் பொருத்தம் காரணமாக இந்த அதிகத்' தகுதி வெளிப்பட்டே தீரும். எனவே, முணுமுணுப்பதால் பலன் ஒன்றும் இல்லை. கயவனான பணக்காரன் ஒருவன் இருக்கலாம். ஆனால், அவனைப் பணக்காரன் ஆக்கிய சில தகுதிகள் அவனிடம் இருக்கவே வேண்டும். வேறு எவனிடம் பின்கானும் இந்தத் தகுதிகள் இருக்கின்றனவோ, அவனும் பணக்காரனாவான். நாம் பணக்காரன் ஆகவில்லையே என்பதற்காகப் பணக்காரனோடு சண்டை போடுவதனாலோ, அவனைக் குறை கூறுவதனாலோ ஏதாவது பயன் உண்டா? இப்படிச் செய்வதனால் நம் நிலைமை சீர்பட்டுவிடாது. விதி காரணமாகத் தனக்குக் கிடைத்துள்ள மதிப்புக் குறைந்த சிறு வேலைக்காகக் குறைகூறுபவன், எதற்குமே குறை கூறும் மனப்பான்மை உள்ளவனாகவே இருப்பான். எப்பொழுதும் எதற்கும் குறை கூறிக்கொண்டே அவன் துன்பம் மண்டிய வாழ்க்கை நடத்துபவனாவான்; அவன் தொடும் ஒவ்வொன்றும் தோல்வியிலேயே முடியும். ஆனால், எவனொருவன் தன் பங்குக்கு வந்த கடமையைத் துன்பமாகப் பாராட்டாமல் செய்துகொண்டு போகிறானோ, அவனுக்குத் திண்ணமாக ஞானஒளி தோன்றும்; போகப் போகச் சிறந்த கடமைகள் தாமாகவே அவனைத்தேடி வரும்.

2

கருத்துவெறி

வெறியர் பல வகையினர். சிலர் குடி வெறியராய் விளங்குகின்றனர். வேறு சிலர் சுருட்டு வெறியராய்க் காட்சியளிக்கின்றனர். அவற்றை நிறுத்திவிட்டால் பொற்காலமே வந்துவிடும் என்று நினைப்பவரும் உளர். இந்த வெறியர் பொதுவாகப் பெண்டிரே. ஒரு நாள் இந்த வகுப்புக்கு ஓர் இளமங்கை வந்திருந்தாள். சிக்காகோவில் ஒரு வீடு கட்டி, அங்கே தொழிலாளர்களுக்கு இசையும்,

உடற் பயிற்சியும் கற்பிக்கும் மங்கையர் பலருள் அவளும் ஒருத்தி. ஒரு நாள் அந்த மங்கை உலகத்தில் நடைபெறும் தீங்குகள்பற்றிப் பேசிக்கொண்டே வந்து, அவ்வற்றுக்கு மாற்றும் தனக்குத் தெரியும் என்று சொன்னாள். "இந்தத் தீங்குகளுக்குப் பரிகாரம் உனக்கு எப்படித் தெரியும்?" என்று நான் கேட்டேன். "ஹல் ஹவுஸ் என்னும் இடத்தை நீங்கள் அறிவீர்களோ?" என்று அவள் என்னைக் கேட்டாள். இந்த 'ஹல் ஹவுஸ்' ஒன்றே உலகத்தில், உடல் காரணமாக ஏற்படும் எல்லாத் தீங்குகளையும் அகற்றுமிடம் என்பது அவள் கருத்து. இந்த எண்ணம் அவள் மனத்தில் வேர் ஊன்றி வளர்ந்துவிடுகிறது. அவள் பொருட்டு நான் வருந்துகிறேன். இந்தியாவில் வெறியர் சிலர் உள்ளனர். கணவனை இழந்த பெண்கள் – மறுமணம் செய்துகொண்டால் போதும் – நாட்டில் நிலவும் எல்லாத் தீங்குகளுமே நீங்கிவிடும்' என்பது இவர் தம் கருத்து. இது வெறி.

நான் சிறுவனாய் இருந்தபோது, செயல் புரிவதற்கு இந்த வெறி ஒரு முக்கியமான அம்சம் என்று எண்ணினேன். ஆனால், இப்போது – எனக்கு வயது முதிர்ந்ததால் – அந்த எண்ணம் சரியன்று என்பதை உணர்ந்தேன்.

திருடும் இயல்புள்ள மங்கை ஒருத்திக்கு ஒருவருடைய பெட்டியையோ பையையோ களவாடிக்கொண்டு போவது நெறியற்றதாகப் புலப்படாது. ஆனால், அவள் சிகரெட் பிடிக்காதவளாய் இருக்கலாம். சிகரெட் பிடிப்பதை வெறுக்கும் வெறி அவளைப் பிடித்துக்கொள்கிறது. சிகரெட்டுப் பிடிக்கும் ஒருவனைக் கண்டவுடன் அவள் அவனைக் கடுமையாக வெறுக்கிறாள். பிறரை ஏமாற்றுவதே தொழிலாகக் கொண்ட ஒருவன் இருக்கிறான். அவனை நம்பவே இயலாது; அதுவும் பெண்கள் விஷயத்தில் அவன் ஒரு கயவனாயிருக்கலாம். அவன் சாராயம் குடிப்பதில்லை. எனவே, சாராயம் குடிப்பவர் யாரையும் அவன் நல்லவன் என்று ஒப்புவதில்லை. தான் செய்யும் ஏமாற்றுதல் முதலிய தீங்குகளெல்லாம் தீங்குகளாக அவனுக்குத் தோன்றுவதில்லை. இந்த மனப்பான்மை மனிதனுக்கு இயல்பான சுயநலத்தின் பாற்பட்டது; ஒரு தலைபட்டது; சார்புடையது.

இந்தப் பிரபஞ்சத்தை ஆள்வதற்கு இறைவர் உள்ளார் என்பதையும், அவர் அந்த ஆட்சி உரிமையை நமக்குத்

தானம் செய்துவிடவில்லை என்பதையும் நீங்கள் நினைவில் நிறுத்தவேண்டும். இறைவரே இந்தப் பிரபஞ்சத்தை ஆண்டு காத்து வருபவர்; இந்தச் சாராய வெறியர், சிகரெட்டு வெறியர், பலவகை மணவெறியர் ஆகிய எல்லா வெறியரையும் மீறி இந்தப் பிரபஞ்சம் நடந்துகொண்டே இருக்கும். இந்த வெறியர் எல்லாருமே இறந்தாலும் இந்தப் பிரபஞ்சம் இயங்கிக்கொண்டே இருக்கும்.

உங்கள் சரித்திரம் உங்களுக்கு நினைவில்லையா? உங்கள் முன்னோர் 'மே பிளவர்' என்ற கப்பலில் இங்கே வந்ததும், தங்களைப் பரிசுத்தப் புதுக்கொள்கையினர் என்று அவர்கள் சொல்லிக்கொண்டதும் உங்களுக்கு நினைவில்லையா? அவர்கள் தங்கள் சமூகத்தைப் பொறுத்தவரை குற்றமற்றவர்கள்; நல்லவர்கள். ஆனால், வேறு சமயத்தவர்களை அவர்கள் துன்புறுத்தத் தொடங்கியபோது அவர்களது நற்குணம் மாறி விட்டது. மனித வரலாறு முழுவதிலுமே இதே நிகழ்ச்சிதான். இவ்வாறு துன்புறுத்தலுக்கு அஞ்சி ஓடுபவர்களும், தங்களுக்கு ஏற்ற வாய்ப்புக் கிடைத்தவுடனே தாங்களும் அவ்வாறே துன்புறுத்தத் தொடங்குகிறார்கள்.

நூற்றுக்குத் தொண்ணூறு வெறியர்களுக்குக் கல்லீரல் நோயோ, ஜீரணக் கோளாறோ வேறுவகை நோயோ இருந்திருக்க வேண்டும். காலப் போக்கில் இந்த வெறியும் ஒரு நோயே என்று மருத்துவர்கள் கண்டுபிடித்துவிடுவார்கள். இந்த வெறியைப் பெரும் அளவில் கண்டுவிட்டேன். இதனிடமிருந்து ஆண்டவன் என்னைக் காப்பானாக!

வெறி அடிப்படையில் தோன்றும் சீர்திருத்தங்களை விலக்குவதே அறிவுடைமை. இது யான் அனுபவத்தில் கண்ட உண்மை. உலகம் மெதுவாக முன்னேறி வருகிறது. இப்படியே நடைபெறட்டும். அவசரம் ஏன்? நன்கு உறங்குக; நரம்புகளை நல் நிலையில் வைத்துக்கொள்க; நல்லுணவு கொள்க; உலகிடம் கருணை காட்டுக.

வெறியர்கள் வெறுப்பையே வளர்க்கிறார்கள். மிதக்குடி வெறியர் மிகைக்குடியரான ஏழைகளிடம் அன்புடையோர் என்று கருதுகிறீர்களா? வெறியன் அவ்வாறு வெறிபிடித்தலைதற்குக் காரணம் ஏதோ ஒரு பயனை எதிர்பார்ப்பதே. இதில் வெற்றிபெற்றதும் கிடைத்த லாபத்தைச் சுருட்டப்

பார்க்கிறான். வெறியர் கூட்டத்திலிருந்து விலகிய பின்னரே உண்மையன்பு செலுத்தல் அறிவீர்; பரிவுகாட்டக் கற்பீர். எவ்வளவுக்கெவ்வளவு உங்களிடம் அன்பும் அருளும் வளர்கின்றனவோ, அவ்வளவுக்கு அவ்வளவு பரிதாபப்படத்தக்க இந்தக் குடியரை வெறுக்கும் எண்ணம் குறையும். இவர்களிடம் பரிவு காட்டவே தோன்றும். குடிகாரனிடம் பரிவு காட்டவும் அவனும் உங்களைப் போன்ற ஒரு மனிதனே என்று எண்ணவும் அப்பொழுதுதான் உங்களால் இயலும். அவனை இவ்வாறு கீழ்நோக்கி இழுக்கும் சூழ்நிலைகளை அறிய முயல்வீர்கள்; 'நாம் அவன் நிலையில் இருந்திருந்தால், ஒரு வேளை தற்கொலையே செய்துகொண்டிருப்போம்' என்ற உணர்ச்சியும் உங்களுக்கு ஏற்படும். பெரிய குடிகாரன் ஒருவனுடைய மனைவி என் நினைவுக்கு வருகிறாள். தன் கணவனைப் பற்றி அவள் என்னிடம் குறை கூறினாள். "அம்மணி, உன்னைப் போல் இரண்டுகோடிப்பேர் மனைவிமார் இருந்தால் போதும், அவர் தம் கணவன்மார் எல்லாருமே குடியர் ஆவர்" என்றேன். குடியருள் பெரும்பாலோர் தம் மனைவியரால் அந்நிலைக்கு விரட்டப் பெற்றவரே. இஃது என் முடிவு. உள்ளதை உள்ளவாறு கூறுவதே என் வேலை; முகமன் கூறுவதன்று. எவர் தம் உள்ளத்தினின்றும் பொறுமை மறைந்துவிட்டதோ, எவர் தம் உள்ளத்திலே சுதந்திரம் பற்றிய போலி எண்ணங்கள் முகிழ்த்திருக்கின்றனவோ, அதன் காரணமாக ஆடவர், தம் காலடியில் கிடக்க வேண்டுமென்று எவர் கருதுகின்றனரோ, எவர் தமக்குப் பிடியாத ஒன்றை ஆடவர் கூறிவிட்டால் அவர்மீது எரிந்து விழுகின்றனரோ, அவரே இவ்வுலகினை நாசம் செய்வோர்; அவரே இவ்வுலகின் கொடிய நஞ்சு. உலகத்திலுள்ள ஆடவருள் பாதிப்பேர் இவர்கள் செயலால் மனமுடைந்து தற்கொலை செய்துகொள்ளாதது விந்தையே. இந்த முறையில் உலகம் நடப்பது கூடாது. இந்தப் பெண்டிர் நினைப்பதுபோல வாழ்க்கை அவ்வளவு எளியதும் பொருளற்றதும் அன்று; அது பொருள் நிறைந்த ஒரு பெரிய விஷயம்.

மனிதனுக்கு நம்பிக்கை மட்டும் போதாது; அது அறிவில் வேரூன்றியிருக்கவும் வேண்டும். தான் காணும் எல்லாவற்றையும் ஒருவன் ஏற்று நம்பவேண்டும் என்று சொல்வது அவனைப் பைத்தியமாக்கும். ஒருமுறை எனக்கு ஒருத்தி

ஒரு புத்தகம் அனுப்பினுள்; அதில் கண்ட எல்லாவற்றை யும் நம்பவேண்டும் என்று கூறிற்று அந்தப் புத்தகம்! "ஆன்மா என்னும் ஒன்று இல்லை. ஆனுல், சுவர்க்கத்தில் தேவர்களும் தேவதைகளும் இருக்கிருர்கள். மக்கள் ஒவ் வொருவர் தலையிலிருந்தும் நூல் போன்ற ஓர் ஒளிக்கிரணம் சுவர்க்கத்திற்குச் செல்கிறது" என்று அந்தப் புத்தகம் இயம்பிற்று! அதன் ஆசிரியை இந்தச் செய்திகளையெல்லாம் எப்படி அறிந்தாள்? தெய்வீகத் தூண்டுதலால் அவள் மனத் துக்கு இந்தச் செய்திகள் விளங்கினவாம். எனவே, நானும் அதை நம்பவேண்டும் என்பது அவள் வாதம். நான் அதை நம்ப மறுத்தேன். உடனே அவள் என்னை நோக்கி, "நீ மிகக் கெட்டவனுகத்தான் இருக்கவேண்டும். உனக்கு நல்ல கதியே இல்லை" என்று சொன்னுள். இதுவே வெறி.

3

கருமமே தெய்வ வழிபாடு

ஆன்மிக வளர்ச்சியின் உயர்ந்த படியில் நிற்பவன் கரு மம் செய்தல் இயலாது. கருமத்தோடு அவனைக் கட்டுப்படுத் தும் பந்தமில்லை; பற்றில்லை; அஞ்ஞானமில்லை. கப்பல் ஒன்று காந்த மலையின்மேலே மோத நேர்ந்ததாகவும், அத ஞல் கப்பலின் இரும்பாணிகள், தகடுகள் எல்லாம் கழன்று விட்டதாகவும், கப்பலே சிதைந்து முழுகிவிட்டதாகவும் கூறுவார்கள். அஞ்ஞானம் உள்ளவரை போராட்டமும் இருக் கும். நாம் எல்லாருமே உண்மையில் நாத்திகர்களே. கடவுள் உண்டு என்று உறுதியாக நம்புகிறவர் கருமம் செய் தல் இயலாது. நாமெல்லாரும் ஏறக்குறைய நாத்திகரே. நாம் கடவுளைக் காண்பதும் இல்லை; அவரை நம்புவதும் இல்லை. நம்மைப் பொறுத்தமட்டும் அவர் இ-றை-வ-ர் என்ற எழுத்தளவிலேயே நின்றுவிடுகிருர்; அவ்வளவுதான். இறைவர் நம் அருகிலிருப்பதாகச் சில சமயம் நாம் எண்ணு வோம்; ஆனுல் அடுத்த கணமே இந்த உணர்ச்சி மாறி நாம் கீழே விழுந்துவிடுவோம்.

உங்களுக்கு அவரது தரிசனம் கிடைக்கும்போது 'யார் யாருக்காகப் போராடுகிருர்?' இறைவருக்கு உதவி செய்ய வேண்டியா நாம் உழைக்கிறேம்? எங்கள் மொழியில் ஒரு

பழமொழி உண்டு: "உலகச் சிற்பிக்கு நாம் படைப்பு கற்பிக்க வேண்டுமா?" எனவே, ஒரு செயலுமற்றவர்களே மக்களுக்குள் உயர்ந்த ஆன்மீக எல்லையில் இருப்பவர்கள். அடுத்த முறை உலகத்தைப் பற்றியும், கடவுளுக்காக (உலகை முன்னேற்ற) நாம் இதைச் செய்யவேண்டும் அதைச் செய்யவேண்டும் என்பதைப் பற்றியும் அறிவிலாப் பேச்சு உங்கள் காதில் பட்டால், இப்போது நான் இயம்பியதை நினைத்துக் கொள்ளுங்கள். 'இது கடவுளுக்காக நாம் செய்ய வேண்டிய கருமம்' என்ற எண்ணமே முற்றும் சுயநல எண்ணமாகும். நீங்கள் செய்யும் எல்லாக் கருமங்களும் உங்களிடமிருந்து எழுவனவே; உங்களுக்கு நன்மை தருவதற்காகச் செய்யப்படுவனவே. கடவுள் எந்தக் குழியிலும் விழுந்துவிடவில்லை; நீங்களும் நானும் அவரைக் கைதூக்கிவிடும் அவசியமோ, அவருக்குச் சிகிச்சை செய்ய மருத்துவச் சாலை கட்டும் தேவையோ இல்லை.

நம் நன்மைக்காகவே வேலைசெய்ய இறைவர் நம்மை அனுமதிக்கிறார். பெரிய பயிற்சிக்கூடமான இந்தப் பிரபஞ்சத்தில் உங்கள் தசைநார்களைப் (சக்திகளை) பயன்படுத்திப் பயிற்சிபெற இறைவர் உங்களை அனுமதிக்கிறார். இந்தப் பயிற்சி அல்லது உழைப்பு அவருக்கு உதவி செய்வதற்காக அன்று; உங்களுக்கு நன்மை விளைதற்காகவே. உங்கள் உதவி கிடையாமையினால் ஓர் எறும்புகூட இறந்துவிடும் என்று நீங்கள் எண்ணுகிறீர்களா? இதைவிடக் கொடிய தெய்வநிந்தை வேறொன்றும் இல்லை. உலகத்துக்கு உங்கள் உதவி தேவையே இல்லை. உலகம் தான் இயங்கிய வண்ணமே இருக்கிறது. பிரபஞ்சமாகிற இந்தப் பெருங்கடலில் நீங்கள் ஒரே ஒரு சிறுதுளிதான். ஓர் இலைகூட அவர் உதவியின்றி அசைவதில்லை; காற்றும் அவர் உதவியாலேயே வீசுகிறது. அவருக்கு உதவுவதற்காக அன்றி அவர்பொருட்டே உழைக்கும் பேறுபெற்ற நாமே பாக்கியசாலிகள்.

உதவி என்ற சொல்லை உங்கள் மனத்திலிருந்தே விலக்கிவிடுங்கள். நீங்கள் உதவி செய்தற்கு இயலாதவர். உதவுவதாகச் சொல்வது கடவுள் நிந்தனை. ஆண்டவனின் இச்சையினால் தான் நீவிர் இங்குள்ளீர். நீங்களா அவருக்கு உதவி செய்கிறீர்கள்? அவரை வழிபடுகிறீர்கள். நாய்க்கு ஒரு

பிடிச் சோறு கொடுக்கும்போது, அந்த நாயை இறைவராக எண்ணி வழிபடுக. இறைவர் அந்த நாயினுள் இருக்கிறார். அவரே அந்த நாய்; எல்லாவற்றினுள்ளும் இருக்கிறார். அவரை வழிபட நாம் அனுமதிபெற்றுள்ளோம். பிரபஞ்சப் பொருள்கள் எல்லாவற்றினிடமும் இந்த பயபக்தியுடன் பழகுங்கள். இதன் விளைவாக உங்களுக்கு முற்றும் பற்றற்ற நிலை தானே ஏற்பட்டுவிடும், இப்படி மனத்தைப் பழக்குவதே உங்கள் கடமையாகவேண்டும். நீங்கள் செய்யும் கருமத்தைப் பற்றிய சரியான மனப்பான்மை இதுவே. அதாவது கருமமே வழிபாடு என்பதுதான். கருமயோகம் அறிவுறுத்தும் இரகசியமும் இதுவே.

4

பயன் கருதாப் பணி

[கல்கத்தா பாக் பஜாரில், இராம காந்த போஸ் தெரு 57–ம் நெ. வீட்டில் நடைபெற்ற ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் நாற்பத்திரண்டாவது கூட்டத்தில் 'பயன் கருதாப் பணி' எனும் பொருள் பற்றி சுவாமிகள் பின் வருமாறு கூறினர்:]

கீதோபதேச காலத்திலே இந்து மதத்தின் இரு பிரிவினருள் பெரியதொரு சொற் போர் நடந்துகொண்டிருந்தது. வேத விதிப்படி யாகம் செய்தல், உயிர் பலியிடல், இன்னும் இவை போன்ற கருமங்களைக் குறைவறச் செய்தல் இவையே சமயம் என்பது ஒரு பிரிவினரின் வாதம். எண்ணற்ற குதிரைகளையும், கால்நடைகளையும், கொல்வதே ஒரு சமயம் எனலாகாது என்பது இன்னொரு பிரிவினரின் வாதம். பிந்திய பிரிவைச் சேர்ந்தவருள் பெரும் பாலோர் துறவிகளும், ஞானமார்க்கத்தைப் பின்பற்றுபவர்களுமே யாவர். கருமங்களையெல்லாம் விட்டு, தன்னைத் தான் அறியும் ஞானம் பெறுதலே மோட்சவழி என்பது இவர்தம் கொள்கை.

பயன் கருதாப் பணி என்ற சீரிய தத்துவத்தை வழங்கிய கீதாசாரியர் இவ்விரு வாதங்களுக்கும் முடிவு கட்டிவிட்டார்.

'பகவத் கீதை மகா பாரத யுத்தத்தின்போது தோன்றியதன்று; பின்னரே இணைக்கப்பட்டது' என்று பலர் கருது

கின்றனர். இது சரியன்று. மகா பாரதத்தின் ஒவ்வொரு பகுதியிலும் கீதோபதேசத்தின் நடைமுறையைக் காண லாம். கீதை, மகாபாரதத்தின் ஒரு பகுதியன்று என்று விலக்கவேண்டுமானால், கீதோபதேசத்தையே அடிப்படை யாகக் கொண்ட மகா பாரதத்தின் பல பகுதிகளை நீக்க நேரிடும்.

பயன் கருதாப் பணி என்பதன் பொருள் என்ன? இன் பமோ துன்பமோ தங்கள் நெஞ்சைத் தொடாதவாறு உழைப் பது என்று புலர் இப்போது நினைக்கின்றனர். இதுவே இதன் உண்மைப் பொருளானால், பிராணிகள் பயன் கருதாப் பணி செய்வதாக உரைக்கலாம். சில பிராணிகள் தங்கள் குட்டிகளையே விழுங்கிவிடுகின்றன; இப்படிச் செய்யும் போது அவை மனம் பாதிக்கப்படுவதே இல்லை. கொள்ளைக் காரர்கள் பிறர் பொருளைக் கொள்ளையடிக்கிறார்கள். கொள்ளை யிடும்போது நேரும் இன்ப துன்பங்களை அவர்கள் இலட்சி யம் செய்வதில்லையாயின், அவர்களும் பயன் கருதாப் பணி புரிகிறார்கள் என்று கூறிவிடலாமா? இதன் பொருள் இது வானால், சற்றும் இரக்கமே இல்லாத கல்நெஞ்சம் படைத்த கயவர்களும், கைம்மாறு கருதாது கருமம் செய்பவர்களே என்று சாற்றிவிடலாம். இன்ப துன்பம் சுவருக்கில்லை; கல் லுக்கில்லை. இவை பயன் கருதாப் பணி செய்பவை எனலாமா? முடியாது. இந்தப் பொருளில் இந்த தத்து வம் தீயோர் கையில் சிக்கிய ஒரு சிறந்த ஆயுதமாகிவிடும். இவர்கள் தீச்செயல் செய்துகொண்டே இருப்பார்கள்; பயன் நோக்காக் கருமம் செய்வதாகச் சொல்வார்கள். இதுவே இந்த தத்துவத்தின் பொருளானால், பயங்கரமான ஒரு தத்து வம் கீதை மூலம் போதிக்கப்பட்டதாகவே கொள்ளல் வேண் டும். அதன் பொருள் இது வன்று என்பது நிச்சயம். மேலும் கீதோபதேசத்துடன் நெருங்கிய தொடர்புள்ளவர் வாழ்க் கையை நாம் ஆராய்ந்துபார்த்தால், அவர்கள் வேறு வகை யில் வாழ்ந்திருக்கக் காண்போம். பீஷ்மரையும் துரோணரை யும் அருச்சுனன் போரில் கொன்றான். எனினும் அவன் தன் சுயநலம், ஆசை, தவறான ஆவல் இவற்றைக் கோடி முறை தியாகம் செய்திருக்கிறான்.

கீதை கரும யோகத்தை உபதேசிக்கிறது. யோகம் அல்லது ஒருமையுள்ளத்துடன் நாம் வேலை செய்யவேண்டும்.

இத்தகைய மனங்குவிந்த பணியில் கீழ்த்தரமான அகங்காரம் தோன்றுது. மன ஒருமையுடன் வேலை செய்யும்போது, 'நான் இதைச் செய்கிறேன்; அதைச் செய்கிறேன்' என்ற உணர்வே இராது. மேல்நாட்டாருக்கு இது விளங்குவதில்லை. அகங்கார உணர்ச்சியே இல்லையென்றுல், அகங்காரமே போய்விடும் என்றுல், ஒருவன் எப்படி வேலை செய்ய இயலும்? என்று கேட்கிறுர்கள் அவர்கள். தன்னை மறந்து மனஒருமையுடன் ஒருவன் ஒரு வேலை செய்யும்போது, அந்த வேலை அழியாச் சிறப்புடன் விளங்கும். ஒவ்வொருவரும் தத்தம் வாழ்க்கையில் இந்த அனுபவம் பெற்றிருக்க இயலும். உண்ட உணவை செரித்துக் கொள்வது போன்ற சில வேலைகளை நாம் அடி மனத்தால்—அறிவால் அறியாமலே-செய்கிறேம். இன்னும் பல வேலைகளை அறிவோடு செய்கிறேம். வேறு சில வேலைகளை அகங்காரமே அற்ற சமாதி போன்ற ஒருமுகமனநிலையில் செய்கிறேம். ஓவியன் ஒருவன் தன்னையே மறந்த நிலையில்-ஓவியன் ஒன்றே குறியாக—ஓவியத்தைத் தீட்டினுல், அது நிச்சயம் மிகச் சிறந்ததாகவே இருக்கும். நல்ல சமையற்காரனும் சமையல் செய்யும்போதே தன்னையே மறந்த நிலையில் வேலையிலேயே குறியாக, சமையலுக்குரிய சாமான்களை அன்றி மற்றவற்றையெல்லாம் அந்த நேரத்தில் மறந்தே விடுகிருன். தங்களுக்குப் பழக்கமான ஒரே வேலையை மட்டும் இவர்கள் தங்களை மறந்து செய்ய வல்லவராகிருர்கள். எல்லா வேலைகளையுமே இப்படித் தன்னை மறந்து செய்ய வேண்டும் என்பதே கீதையின் உபதேசம். யோகத்தினுல் இறைவரோடு ஒன்றுபட்ட ஒருவன், தான் செய்யும் எல்லா வேலைகளையும் ஒருமையுள்ளத்துடன் தன்னை மறந்த நிலையிலேயே செய்கிருன்; சுயலாபம் எதையும் அவன் எதிர்பார்ப்பதே இல்லை. இத்தகைய வேலையால் உலகத்துக்கு நன்மையே விளையும்; தீமை ஏதும் விளையாது. இப்படி வேலை செய்பவர்கள் தங்களுக்கென்று எதையுமே செய்துகொள்வதில்லை.

ஒவ்வொரு வேலையின் பலனிலும் நன்மை தீமை கலந்தே இருக்கின்றன. தீமை சம்பந்தமே சிறிதும் இல்லாத நல்லவை இல்லை. தீயைச் சுற்றிப் புகையிருப்பது போல, நல்ல வேலையைச் சுற்றித் தீங்கும் இருந்தே தீரும். எனவே

எந்த வேலையினால் அதிக நன்மையும் குறைந்த தீமையும் நேருமோ, அத்தகைய வேலைகளிலே நாம் ஈடுபடவேண்டும். அருச்சுனன் பீஷ்மரையும் துரோணரையும் கொன்றான். இதைச் செய்யாவிட்டால் துரியோதனனை வெற்றிகாணல் இயலாது; நல்லவை தாழ்ந்து தீய சக்திகள் ஓங்கியிருக்கும். இதனால், நாடு முழுவதற்குமே பெரிய ஆபத்து ஏற்பட்டிருக்கும்; கொடுங்கோலர்வசம் நாட்டாட்சி சிக்கியிருக்கும்; மக்கள் பேரின்னலுக்கு உள்ளாக நேர்ந்திருக்கும். இது போலவே, கொடுங்கோலர்களாகிய கம்சன், ஜராசந்தன் முதலியவர்களைக் கண்ணன் கொன்றார். ஆனால் அவர் தம் செயலில் ஏதொன்றும் தமக்காகச் செய்தது அன்று; ஒவ்வொரு செயலும் பிறர் நன்மைக்காகவே செய்தது ஆகும். விளக்கு வெளிச்சத்தில் கீதை படிக்கிறோம். பல விட்டிற் பூச்சிகள் விளக்கில் விழுந்து மடிகின்றன. எந்த நல்ல வேலையோடும் சிறிது தீங்கு சம்பந்தப்பட்டே இருக்கும் என்பது இதனால் தெரிகிறது. தாழ்ந்த அகங்காரம் முழுவதையுமே மறந்து ஒருமுகமாக வேலை செய்வோரைப் பாவம் பற்றுவதில்லை; ஏனெனில் அவர்கள் உலக நன்மைக்காக உழைக்கிறார்கள். பயன் கருதாத பற்றற்ற பணியால் பேரானந்தமும் விடுதலையும் கிடைக்கின்றன. கருமயோகத்தின் இந்த இரகசியத்தையே கண்ணபிரான் கீதை மூலம் போதிக்கிறார்.

5

சாதனை அல்லது உயர்வாழ்வுக்குப் பண்படுத்தல்

மிருக குணம் மேலோங்குமேல் இழிநிலையடைவீர்; பரிணமம் மேலோங்குமேல் முன்னேறுவீர். எனவே மிருக குணம் தலைதூக்க விடலாகாது. இது பற்றிய ஆராய்ச்சி இங்கே நம் உடலிலேயே நடைபெறவேண்டும். நம்மைச் சுற்றியுள்ளவர்களைச் சீர்திருத்துவதிலே சுறுசுறுப்புக் கொள்கிறோம். இதுவே நமது சிக்கல். சீர்திருத்தம் முதலில் நமது உடலிலேயே தொடங்கப் பெறல் வேண்டும். இதயம் கல்லீரல் போன்ற எல்லா உறுப்புகளுமே மிருக குணம் படைத்தவை. இவற்றை உங்கள் மன உணர்வில் கொணர்க; அடக்குக; உங்கள் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடக்கச் செய்க; உங்கள் விருப்பத்தை நிறைவேற்றச் செய்க. கல்லீரலை

அடக்கியாளும் சக்தி நமக்கு ஒரு காலத்தில் இருந்தது. அப்போது நமது உடம்புத்தோலின் எந்தப் பகுதியை வேண்டுமானுலும் நாம் அசைத்துக்காட்ட இயலும். நீண்ட பயிற்சியின் மூலம் மீண்டும் இச்சக்தி பெற்றுேர் பலரை நான் கண்டிருக்கிறேன். ஒருமுறை இச்சக்தி ஏற்பட்டுவிட்டால் பிறகு மாருது. இப்போது மங்கி மறைந்து உறங்கும் கடலனைய செயல்களைத் திரும்பவும் கொண்டுவாருங்கள். நமது முயற்சியின்—ஆராய்ச்சியின்—முதல் பகுதி இது. நம் சமூகம் நன்கு வாழ இது முற்றும் தேவை. இதே சமயத்தில் எந்நேரமும் மன உணர்வு ஆராய்ச்சியில் மூழ்கியிருத்தலாகாது.

இந்த ஆராய்ச்சியின் மறுபாகம் விடுதலையளிக்க வல்லது; சமூக நலத்துக்கு அவ்வளவு அவசியமானதன்று. இந்த முயற்சியின் நேர்விளைவு ஆன்ம விடுதலையே; அஞ்ஞான இருள்நிறைந்த இடத்துக்குள் அறிவாகிய ஒளியை எடுத்துச்செல்வது; அழுக்கைக் கழுவுவது; இருளை விலக்குவது; இருளைக் கிழித்து உள்ளே புகுந்து ஒளி நோக்கி முன்னேறச் செய்வது. இதுவே நம் குறிக்கோள். அதாவது உயர் நனவு பெறல். இந்த நிலை அடைந்தவுடன் இதே மனிதனிடம் தெய்வீகம் தோன்றுகிறது. அவன் விடுதலை பெறுகிருன். இவ்வாறு எல்லாவற்றையும் கடந்து செல்லப் பழகிய மனமே இப்பிரபஞ்ச இரகசியங்களை அறியும். பிரபஞ்சமாகிய புத்தகம் ஓவ்வோர் அத்தியாயமாகப் படிக்கப் பெறும். கடைசியில், இலட்சியம் கைகூடும். பிறப்பு இறப்பு என்ற பள்ளங்களினின்று மேலேறுவோம். பிறப்பு இறப்பில்லாத ஒன்றினை அடைவோம். சத்தியப் பொருளை அறிவோம்; சத்தியப் பொருளாகி விடுவோம்.

முதலில் வேண்டுவது அமைதி நிறைந்த வாழ்க்கை. வயிற்றுப் பிழைப்பு ஒன்றற்காகவே நாள் முழுவதும் ஓடித் திரிந்துகொண்டிருந்தால் இம்மையில் உயரிய ஏதும் பெறல் அரிது. ஒருவேளை அடுத்த பிறவியில் இந்த இலட்சியத்தை அடைதற்கு வேண்டிய சூழ்நிலையில் பிறக்கலாம். ஆனுல், இந்த முயற்சியில் மனம் தீவிரமாக ஈடுபடுமானுல், இ தப் பிறவியிலேயே வாழ்க்கைச் சூழ்நிலை இதற்கேற்றபடி மாறிவிடும். நீங்கள் உண்மையிலேயே தீவிரமாக விரும்பிய எதைத்தான் அடையவில்லை? அடையாமல் இருக்க இயலாது. அடையக் கூடாதது எதுவும் ல்லை. நம் ஆசை

களே இந்த உடல் ஏற்படுதற்குக் காரணம். ஒளிதான் உங்களுடைய தலையில் கண்கள் என்ற பெயரைக்கொண்டு இரண்டு துவாரங்களைச் செய்திருக்கிறது. ஒளி இல்லை என்றால், கண்களும் ஏற்படா. ஒலிதான் காதுகளை உண்டாக்கி இருக்கிறது. பொறி புலன்கள் ஏற்படுவதற்கு முன்னால் புலனறிவு இருந்தது. இன்னும் சில ஆயிரம் ஆண்டுகளிலோ, இன்னும் விரைவிலோ, மின்சாரம் முதலியவற்றை அறியும் பொறிகளை நாம் பெறலாம். அமைதி நிறைந்த மனத்துக்கு ஆசை இல்லை. ஆசை நிறைவேறுதற்கான பொருள் வெளியே இருந்தாலன்றி ஆசை எழாது. வெளியே உள்ள அந்தப் பொருள் உடம்பில் ஒரு துவாரம்செய்து, அதன் வழியாக மனத்துள் புக முயல்கிறது போலும்! எனவே, அமைதி நிறைந்த வாழ்க்கை வேண்டுமென்ற அளவிலா ஆசை மனத்தில் தோன்றினால், அதற்குரிய சூழ்நிலை அமைந்தே தீரும்; இது என் அனுபவம் என்று நீங்கள் கொள்ளலாம். பல்லாயிரம் பிறவிகளுக்குப் பிறகு இந்தச் சூழ்நிலை ஏற்படலாம்; எப்போதாயினும் வந்தே தீரவேண்டும்.

அமைதி வேட்டலை மட்டும் விட்டுவிடவேண்டாம்; பற்றி நிற்க. உங்கள் ஆசைக்குரிய பொருள், வெளியில் உங்களுக்காகக் காத்திருக்கவில்லை என்றால், இந்த ஆசையே உங்களுக்கு ஏற்பட்டிருக்க இயலாது. ஆசைகளுக்குள்ளே வேற்றுமையுண்டு என்றுணர்க. குரு ஒருவர் தம் சீடனைப் பார்த்து, "அப்பா நீ இறைவரைக் காணவிரும்பினால், அவர் உன்னை நாடி வருவார்" என்று சொன்னார். சீடன், குருவின் உபதேசத்தை முற்றும் புரிந்துகொள்ளவில்லை. ஒரு நாள் குருவும் சீடனும் ஆற்றில் நீராடப் போனார்கள். குரு தம் சீடனைப் பார்த்து, "தண்ணீரில் மூழ்க" என்றார். அவன் முழுகினான். குரு அவன் மேல் பாய்ந்து அவனைத் தண்ணீருக்குள் அழுத்தினார்; நெடுநேரம் வரை விடவே இல்லை. சீடன் போராடிக் களைத்த பிறகு அவர் அவனை விட்டார். "தண்ணீருக்குள் தடுமாறியபோது உன் உணர்ச்சி எப்படி இருந்தது அப்பா" என்று குரு கேட்டார். "அம்மம்ம! மூச்சுவிடுதற்கு நான் கொண்ட ஆர்வத்தை என்ன என்பேன்" என்றான் சீடன். "இறைவரை அடைவதில் உனக்கு அத்தகைய ஆர்வம் இருக்கிறதா?" என்று வினவினார் குரு. "இல்லை சுவாமி" என்றான் சீடன்.

"இறைவரை அடைவதில் அத்தகைய ஆசை கொள். அவர் உன்முன் நிற்பார்" என்றார் குரு.

எது இல்லாமல் நாம் வாழமுடியாதோ, அது நமக்குக் கிடைத்தே தீரவேண்டும். அது கிடைக்கவில்லை என்றால் வாழ்க்கை நடவாது.

நீங்கள் யோகியாக வேண்டுமானால், பந்தமறுத்தல் வேண்டும். கவலையற்ற சூழ்நிலையில் தனிமையாக இருக்கும்படி உங்கள் வாழ்க்கையை அமைத்துக்கொள்ளவேண்டும். சுகமாக வாழ்ந்துகொண்டே ஆன்ம உணர்வு பெற விரும்புவோன், கட்டை என்று எண்ணி முதலையைப் பற்றி ஆறு கடக்க முயன்ற அறிவிலி போன்றவனே. "முதலில் இறைவன் அருளை நாடுக; உலக போகங்களில் அவசியமான எல்லாம் உங்களைத் தேடிவரும்" என்பது இயேசுநாதரின் அறிவுரை. எவனொருவன் எதற்கும் கவலைப்படுவதில்லையோ, அவனைத் தேடி எல்லாமே வரும். செல்வம் மாயப்பசப்புக்காரி போன்றது. வேண்டுபவனைக் கண் நோக்காள்; கண் நோக்கான் காலடியில் கிடப்பாள். பொருளை மதியாதவன் எவனோ அவன் மீது அது மழையெனப் பொழியும்; புகழும் அத்தகையதே; தன்னைப் பொருட்படுத்தாதவனிடமே அது வந்து குவியும். பெருஞ் சுமையாகித் தொல்லை தரும் அளவுக்கு அது அவனிடம் நிறையும். அடிமை கொண்டவனுக்கே இவை சித்திக்கும்; அடிமையானவனுக்கு எதுவும் சித்திப்பதில்லை. எவன் ஒருவன் வாழ்வு இந்த அற்பப் பொருள்களை எதிர்பார்த்து அமைவதில்லையோ, எவன் ஒருவன் இந்தப் பிரபஞ்ச போகப் பொருள்களை எதிர்த்து வாழ்கிறானோ, அவனே அடிமை கொண்டவன். ஓர் இலட்சியத்துக்காக வாழுங்கள். அது ஒன்றே உங்கள் இலட்சியமாகட்டும். அந்த லட்சியம் எல்லாவற்றிலும் உயர்ந்ததாகுக; உறுதியுள்ளதாகுக; வேறு எதற்கும் இடமில்லாதவாறு மனத்துள் நிறைக; வேறு எதற்கும் மனத்தில் இடம் வேண்டாம்; வேறு எதிலும் பொழுதைப் போக்கவேண்டாம்.

பொருள் ஈட்டுதற்காகச் சிலர் தம் உடல் சக்தி காலம், மூளை முதலிய முழுமையும் செலவிடுதல் என்னே உண்பதற்கும் நேரம் காணார். விடியும் முன்னே வேலை தொடங்கி

விடுகின்றனர். நூற்றுக்குத் தொண்ணூறு பேர் இம் முயற்சி யில் இறந்து விடுகின்றனர். மற்றையோர் பொருளைத் தேடு வதில் வெற்றி பெற்றாலும் அதை நுகரமுடிவதில்லை! என்னே விந்தை! பணக்காரனாக முயல்வது தவறு என்று நான் சொல்லவில்லை; அது மிகவும் வியக்கத்தக்க ஒரு முயற்சி! ஏன்? இது எதைக்குறிக்கிறது? பொருளுக்காகச் செலவிடும் சக்தி, செய்யும் போராட்டம் ஆகிய வற்றை விடுதலைக்காகவும் பயன் படுத்தலாம் என் பதையே. மரணம் நேரும் போது பொருளையும் பிற வற்றையும் விட்டுப் போகவேண்டும் என்பது நமக்குத் தெரியும். என்றாலும், இவற்றின் பொருட்டு நாம் மேற் கொள்ளும் முயற்சி எவ்வளவு பாருங்கள்! இதற்காக—அழியும் ஒன்றுக்காக—இவ்வளவு முயற்சி மேற்கொள்ளும் மனிதர்களாகிய நாம், என்றும் அழியாத—நிலையான—செல் வத்தைத் தேடிக்கொள்ள ஆயிரம் மடங்கு அதிக முயற்சியும் உறுதியும் மேற்கொள்ள வேண்டாமா? இதுவே நம் உற்ற நண்பன். நாம் செய்யும் புண்ணியங்களே—நமது ஆன்மிக உயர்வே — மரணத்தின் பின்னரும் நம்மைத் தொடர்ந்துவரும். மற்றவை எல்லாம் இந்த உலகத்திலேயே இந்த உடலோடு நின்றுவிடும்.

இதுவே முதற்படி; மாபெரும் படி. அதாவது லட்சிய வேட்கை. இது ஏற்பட்டு விட்டால், மற்றவை யாவும் சுலப மாகக் கிடைத்துவிடும். இந்த உண்மையை இந்திய உள்ளம் கண்டு பிடித்தது; உண்மையை அறிவதற்காக இந்தியா விலே மக்கள் எந்த அளவும் செல்லத் தயங்குவதில்லை. ஆனால், மேற்கு நாடாகிய இங்கேயுள்ள சிரமம் யாதெனில் எல்லாம் மிக எளிதாயுள்ளன. இந்த நாட்டவரின் பெரிய இலட்சியம் உண்மையை அறிவதன்று; பொருள் போக அபி விருத்தியே. போராட்டந்தான் ஒருவன் பெறும் பெரிய போதனை. இந்த வாழ்க்கையில் நாம் பெறும் பெரிய இலாபம் இந்தப் போராட்டப் பயிற்சியே. இந்தப் போராட்டமே மோட்சவழி. சுவர்க்கத்துக்கு ஒரு பாதை யுண்டானால் அது நரகத்தின் வழியே செல்வதுதான். நரகவழியே சுவர்க்கத் திற்குச் செல்வதுதான் என்றும் உள்ள வழி. ஆன்மா சூழ் நிலையோடு போரிட்டு மடிந்து—இப்படியே பல்லாயிரம் முறை போரிட்டுப் போரிட்டு மடிந்து போவது என்றாலும்,

தைரியத்தை இழக்காமல் போரிட்டு முன்னேறியபடியே இருந்தால்—பிறகு இந்த ஆன்மா பேராற்றல் உள்ளதாய் மாறிவிடுகிறது; இப்போது இது, தான் அடையவேண்டிய இலட்சியத்தைக் கண்டே நகையாடுகிறது. காரணம், இலட்சியத்தைவிடத் தான் உயர்ந்துவிட்டதை அது காண்கிறது. ஆன்மாவாகிய நானேதான் பெறவேண்டிய முடிவான இலட்சியம்! வேறு ஒன்றுமே இல்லை. என் ஆன்மாவோடு ஒப்பிடக்கூடியது வேறு எது இருக்கிறது? ஒரு பை நிரம்பிய தங்கம் என் ஆன்மாவுக்கு இலட்சியமாக இயலுமா? இயலவே இயலாது. நான் பெறக்கூடிய இலட்சியங்களுள் எல்லாம் மிகவும் உயர்ந்தது என் ஆன்மாவைப் பெறுவது தான். நான் யார் என்ற உண்மையை அறிவதுதான் என் வாழ்க்கையின் ஒரே இலட்சியம்.

முற்றும் தீங்கே நிறைந்த எதுவும் இல்லை. இறைவரோடு மாயைக்கும் இங்கே இடம் இருக்கிறது. மாயை இல்லை என்றால், இறைவரும் இருக்கமாட்டார். நான் முன்னமே சொன்னவாறு நரகம் வழியாகவே சுவர்க்கம் புகுதல் வேண்டும். நாம் செய்யும் தவறுகளுக்கும் இங்கே இடமுண்டு. முன்னேறிக்கொண்டே இருங்கள். நீங்கள் செய்யத் தகாத ஒன்றைச் செய்து விட்டதாக நினைத்தாலும், திரும்பிப் பார்க்க வேண்டாம். முன்னால் நீங்கள் தவறு செய்திரா விட்டால், இன்று இருக்கும் மனநிலை உங்களுக்குக் கிடைத்திருக்குமா? உங்கள் தவறுகளையும் பெரும் பேறுகவே நினையுங்கள். அவை, நம்மை அறியாமலே நமக்கு வழி காட்டும் தெய்வங்கள். சித்திரவதை பெரும் பேறு; இன்பமும் பெரும்பேறுதான். உங்கள் நிலை என்னவானாலும், இலட்சியம் செய்யாதீர்கள். இலட்சியத்தை இறுகப் பற்றிக்கொள்ளுங்கள். முன்னேறிக் கொண்டே இருங்கள். சிறு தவறுகளையும் சிறு செயல்களையும் எண்ணிப் பார்த்துப் பின்னே திரும்பாதீர்கள். நமது போர்க்களமாகிய பிரபஞ்சத்தில் தவறுகள் என்ற புழுதி கிளம்பியே தீரும். இந்தப் புழுதியைப் பொறுத்துக்கொள்ளும் துணிவில்லாத மென் தோலினர் முயற்சியிலிருந்து விலகிக்கொள்ளட்டும்.

உலகப் பொருள்களை அடையும் முயற்சியில் நீங்கள் கொள்ளும் உறுதி போல நூறு மடங்கு அதிக உறுதி

கொள்வதுதான் இந்தப் போராட்டத்தின் முதல் பேர் ஆயத்தமாகும்.

இந்த உறுதியோடு தியானமும் வேண்டும். தியானம் மிகவும் தேவையான ஒன்று. தியானம் செய்க! தியானமே பெரிது. மனம் தியானத்தில் ஈடுபடுவதுதான் ஆன்மிக வாழ்வை நெருங்கியதாகும். தியானம் கை கூடும் அந்த ஒரு நொடிதான் நாம் உலக அலுவல்களினின்றும் முற்றும் விலகி நிற்கும் நேரம்; ஆன்மா தன்னைப்பற்றித்தானே நினைக்கும் நேரம்; பிரகிருதியிலிருந்து முற்றும் விலகி நிற்கும் நேரம். இந்த நேரந்தான் ஆச்சரியமான ஆன்மானுபவச் சுவையில் ஒரு துளியை அனுபவிக்கும் நேரம் ஆகும்.

இந்த உடல் நமது பகைவன்; என்ருலும், இதுவே நமக்குத் துணையுமாகும். துன்பம் காண உங்களுள் யாரா லாவது இயலுமா? ஆனுல் இதே துன்பம் ஓவியமாகத் தீட்டப் பெறும்போது காணுதார் எவர்? ஓவியம் உண்மை அன்று. எனவே நாம் அதனுடன் ஒன்றுவதில்லை. அது ஓவியம் என்பது நமக்குத் தெரியும். ஆனுல் நமக்கு நன்மை செய்யவும் இயலாது; தீமை செய்யவும் இயலாது. துணியில் எழுதப்பட்ட அச்சம் விளைக்கும் அவலச் சித்திரத்தைக் கண்டு நாம் இன்புறவும் இயலும். ஓவியனது திறமையை யும், அறிவையும், அவன் கையாண்டுள்ள முறையையும் நாம் பாராட்டுகிருேம். அவன் எழுதியுள்ள ஓவியம் பெருந் துன்பத்தைக் காட்டும் ஒன்று என்பது அப்போது நம் மனத்தில் படுவதில்லை. இந்தப் பற்றற்ற நிலைதான் இலட்சிய சாதன இரகசியம். நீங்கள் வெறும் சாட்சியாய் இருங்கள்.

'நான் வெறுஞ் சாட்சிதான்' என்ற எண்ணம் வரும் வரையில் பிராணுயாமமோ, யோகப்பயிற்சியோ, இவை போன்ற பிறவோ, எந்தப் பயனும் தாரா. கொடுங் கோலனது கைகள் உங்கள் கழுத்தை நெரிக்கும்போது, 'நான் வெறும் சாட்சிதான்; யாரும் என்னை ஒன்றும் செய்ய வில்லை' என்று சொல்வதற்கேற்ற மனநிலை பழகுக. "நான் ஆன்மா; புறப் பொருள் எதுவும் என்னைத் தொட இயலாது" என்று சொல்க. தீய எண்ணங்கள் எழும்

போதெல்லாம் இப்படிச் சொல்லி, அந்தத் தீய எண்ணத்தின் தலையில் சம்மட்டி அடி கொடுங்கள். "நான் ஆன்மா; வெறும் சாட்சியாய் இருப்பவன்; நான் நித்தியானந்தன்; நான் எதையும் செய்யவேண்டுவதில்லை; எந்தத் துன்ப அனுபவமும் எனக்கு இல்லை; என்னைப் பொறுத்த மட்டும் பிரபஞ்ச அலுவல் முடிந்துவிட்டது; நான் வெறும் சாட்சி தான்; நான் என் ஓவியச் சாலையில் இருக்கிறேன்; இந்தப் பிரபஞ்சமே என் ஓவியச்சாலை; ஒன்றன்பின் ஒன்றுகக் காட்சிதரும் இந்த ஓவியங்களை நான் பார்த்தவண்ணம் இருக்கிறேன். அவற்றுள் சித்திரிக்கப்பட்டவை நல்லவையோ, கெட்டவையோ, எல்லா ஓவியங்களும் அழகாகவே இருக்கின்றன. இவற்றுள் காணப்படும் அபாரத் திறமை எனக்குத் தெரிகிறது; எல்லா ஓவியங்களிலும் இந்தத்திறமை—பெரிய ஓவியராகிய இறைவரது திறமையாகிய நெருப்பு—சுடர்விடுகிறது. உண்மையைச் சொல்ல விரும்பினுல் ஒன்றுமே இல்லை; சங்கற்பமும் இல்லை; ஆசையும் இல்லை. அவரே—இறைவரே—எல்லாம். அவர் இறைவர்; அவள் இறைவி. உலக அன்னையின் திருவிளையாடல் இந்தப் பிரபஞ்சம். நாமெல்லாம் அந்தத் தாயின் கைப் பொம்மைகள்; அவள் நடிக்கும் இந்தப் பிரபஞ்ச நாடக பாத்திரங்கள். இந்த நாடகத்தில் அவள் ஒருவனுக்குப் பிச்சைக்கார வேடம் புனைவிக்கிருள்; அடுத்த நொடியில் அவனே அரச உடையில் காட்சியளிக்கிருன்; அவனே அடுத்தடுத்து ஞானியாகவும் பேயாகவும் காட்சியளிக்கிருன். இப்படியெல்லாம் ஆட்டுவிக்கிருள் அன்னை. உலகஅன்னை நடத்தும் திருவிளையாடல் நடப்பதற்காக நாம் இப்படியெல்லாம் பல பாத்திரங்களாக நடிக்கிறோம்.

குழந்தை விளையாடிக் கொண்டிருக்கும்போது தன் தாய் கூப்பிட்டாலும் அது வருவதில்லை. ஆனுல், அதன் விளையாட்டு முடிந்தவுடன் அதுவே தானுகத் தாயை நோக்கி விரைந்துவரும்; அப்போது விளையாட்டு நினைப்பு இல்லை. நமது வாழ்க்கையிலும் இத்தகைய சந்தர்ப்பங்கள் வருகின்றன. நமது பிரபஞ்ச விளையாட்டு முடிந்து விட்டது என்ற எண்ணம் நமக்குத் தோன்றுவது காரணமாக, நாம் தாயை நோக்கி விரைகிறோம். அந்தச் சமயத்தில் பிரபஞ்சத்தில் நாம்செய்த முயற்சிகள் எல்லாம் மதிப்பற்றவை

களாய்த்தோன்றும்; ஆண், பெண், குழந்தை, சொத்து, பேர், புகழ், உலக இன்பங்கள், பேறுகள், நாம் அடைந்த தோல்விகள், வெற்றிகள் ஆகிய எல்லாமே இல்லாமற்போய் விடும். நமது வாழ்க்கை முழுவதுமே ஒரு நாடகம் போலத் தோன்றும். ஒரு முடிவும் இல்லாததாய்—எங்கே போகிறது என்றும் விளங்காமல்—முன்னேறிக் கொண்டே இருப்பது மட்டும் நமக்குத் தெரியும். நாம் இதைமட்டும்தான் சொல்ல இயலும். நமது பிரபஞ்ச நாடகம் முடிந்துவிட்டது.

6

பிரபஞ்சமும் ஆன்மாவும்

பிரகிருதியில் தோன்றும் பொருள் ஒவ்வொன்றும் மிக நுட்பமான கருவில் தோன்றி, பருப்பொருளாய் வளர்ந்து சில காலம் வாழ்ந்து, பிறகு, தான் தோன்றுதற்குக் காரண மான அந்த நுண்கருவில் அடைந்து விடுகிறது. உதாரண மாக நாம் வாழும் பூமியானது உருவமும் பருமனுமற்ற நெபுலேயினின்றும் தோன்றியது. நாளடைவில் தண்மை யடைந்து இறுகி நாம் வாழும் இந்தப் பூமியாய் மாறியது. எதிர் காலத்தில் இது சிறு சிறு துகளாய்ச் சிதறி, தன் தோற் றத்திற்குக் காரணமான உருவற்ற நுட்பமான நெபுலே யாக மாறிவிடும். இப்படியே பிரபஞ்சப் படைப்பு நம் நினை வுக்கும் எட்டாத காலந் தொடங்கி நடந்துவருகிறது. இதுவே மனித வரலாறு; பிரகிருதி அல்லது இயற்கை வரலாறு; உயிர் வரலாறு.

ஒவ்வொரு பரிணாமத்துக்கு முன்னும் ஒடுக்கம் ஒன்று ஏற்பட்டே தீரவேண்டும். வானுற வோங்கி வளரும் மரம் தன் தோற்றத்துக்குக் காரணமான—விதைக்குள் ஒடுங்கி அடங்கி இருக்கிறது. மனித உருவம் புரொடொ பிளாசம் எனும் ஒரு ஜீவ தாதுவில் ஒடுங்கிநிற்கிறது. விரிந்து பரந்து தோன்றும் இந்தப் பிரபஞ்சம் முழுவதும் நுட்பமான அண் டக் கருவுள் ஒடுங்கிநிற்கிறது. இப்படியே விரிந்த காரிய மான ஒவ்வொன்றும் அதனதன் காரணமான நுட்பத்துக் குள் ஒடுங்கிநிற்கிறது. பரிணாமம் அல்லது நுட்பத்திலிருந்து பொருள்கள் படிப்படியாகப் பருமன் அடைந்து முன்னேறும்

வளர்ச்சி உண்மைதான்; ஆனால் இத்தகைய பரிணமம் ஒவ்வொன்றுக்கும் காரண அடிப்படையாக நுண்ணிய ஒடுக்கம் ஒன்று இருந்தே தீரும். இந்தப் பெரிய பிரபஞ்சம், இவ்வளவு விரிந்து பரிணமிப்பதற்கு முன் நுட்பமாகத் தன் கருவுக்குள் ஒடுங்கியே இருந்திருக்கவேண்டும். இந்தக் கருவிலிருந்து இப்படிப் பல்வேறு விதமாய் விரிந்துள்ள பிரபஞ்சம் முடிவில் ஆதிக்கருவில் ஒடுங்கிச் சுருங்கித்தான் ஆக வேண்டும். ஒரு சிறு செடியின் வாழ்க்கையைக் கவனிப்போம். இந்தச் செடியை ஒரு பொருளாக நாம் காண்பதற்குக் காரணம் இதில் தோன்றும் இரண்டு அம்சங்கள் : ஒன்று இதன் வளர்ச்சி; மற்றொன்று, இதன் அழிவு. தோற்றம், அழிவு ஆகிய இரண்டும் சேர்ந்தே செடி என்ற ஒரு பொருள் ஆகின்றது. உயிர்க்குலம் முழுவதுமே ஒரு சங்கிலித்தொடர் போன்றது; அதிலே ஒரு கண்ணி தாவர இனம். உயிர்த்தொடரானது புரொடொ பிளாசம் என்ற ஒரு சிறு கரு அணுவில் தோன்றிப் படிப்படியாகத் தாவரம், விலங்கு, பறவை என்று பரிணமித்து, முடிவில் குறைவற்ற மனிதனாக முடிகிறது. இந்தத் தொடரில் மனிதன் ஒரு கண்ணி; விலங்குகள், பறவைகள், ஊர்வன, புழு முதலிய உயிர்களும், தாவரங்களும் பல்வேறு கண்ணிகள். இப்போது இந்த எல்லாவகை உயிர்களுக்கும் தொடக்கமான ஆதிக் கருவை ஆராய்ந்துபாருங்கள் ; இதிலிருந்து பரிணமித்த பலவகை உயிரினங்களையும் ஒரே உயிரின் பல்வேறு தோற்றமாகப் பாருங்கள். உலகில் தோன்றும் ஒவ்வொரு பொருளின் பரிணமமும் முன்பே கருவில் காணப்பட்ட ஒடுக்கத்தின் விரிவே என்பது நன்கு விளங்கும்.

எங்கு தோன்றுகிறதோ அங்கே ஒடுங்குகிறது. இந்தப் பிரபஞ்ச முடிவு எது? அறிவு அல்லவா? பரிணமவாதிகளின் கொள்கைப்படி உயிர் வரிசைகளின் பவனியில் கடைசி பரிணமம் அறிவு ; பரிணமத்தின் உச்சிப் படி. இதுவே தோற்றத்தின் முடிவானால்—இதுவே தொடக்கமுமாதல் வேண்டும். தொடக்கத்தில் இந்த அறிவு கருவில் அடங்கி ஒடுங்கி நிற்கிறது ; முடிவில் விரிந்து பரிணமிக்கிறது. எனவே, இன்று பிரபஞ்சத்தில் விரிந்து நிற்கும் அறிவு முழுவதும் முதற் கருவில் ஒடுங்கி நின்ற ஒன்றே. இப்படி இந்தப் பிரபஞ்சம் முழுவதிலும் விரிந்து நிற்கும் அறிவுத் தொகுதியையே—மூல

அறிவையே—நாம் இறைவன் என்கிறோம். இந்த இறை யிடமிருந்தே நாம் தோன்றினோம்; முடிவில் இறையிடமே சேர்வோம். வேதங்கள் இதைத்தான் முழங்குகின்றன. இந்த முதற்காரணம் அல்லது முதலறிவுக்கு நீங்கள் எந்தப் பெயர் சூட்டினாலும் சரி; தொடக்கத்தில் உள்ளது எல்லை யில்லாத இந்த அறிவே. இதை மறுத்தல் இயலாது.

இரசாயனக் கலவை என்பது என்ன? காரணப் பொருள்கள் பல ஒன்று சேர்ந்து ஒரு காரியப் பொருளாக மாறுவது தானே! எனவே, இந்தக் கலவைப் பொருள் களெல்லாம் காரணகாரிய விதிக்குக் கட்டுப்பட்டவை களாகவே இருக்க வேண்டும். இந்தக் காரணகாரிய விதி களின் எல்லை வரையிலேதான் கலவைப் பொருள்களும் இணைப்புகளும் இருக்க இயலும். இந்த எல்லைக்குப்பின் கல வைபற்றிய பேச்சுக்கே இடம் இல்லை—காரணகாரிய நியதி இங்கே செல்லாது. கண்டும், கேட்டும், உணர்ந்தும், கற்பனை செய்தும், கனவு கண்டும் இயங்கும் இந்தப் பிரபஞ்சத்திலே தான் இயற்கை நியதிகளும் செல்லும். இதற்கு அப்பால் நியதி என்ற எண்ணத்துக்கே இடமில்லை. ஐம்புலன்களால் அறிந்தும், மனத்தால் கற்பனை செய்தும் நாம் காண்பது தான் நம் பிரபஞ்சம். நமது புலனுக்கு நேரே காட்சியளிப்ப வற்றையே நாம் அறிகிறோம்; நமது மனத்துள் தோன்றுவன வற்றையே நாம் கற்பனை செய்கிறோம். உடலுக்கு அப்பாற் பட்டவைகளெல்லாம் புலன்களுக்கும் அப்பாற்பட்டவை; மனத்துக்கு அப்பாற் பட்டவைகளெல்லாம் கற்பனைக்கும் அப்பாற்பட்டவை; காரணகாரிய விதிக்கும் அப்பாற் பட்டவை. மனித ஆன்மா, காரணகாரிய விதிக்கு அப்பாற் பட்டதாதலால், கலவைப் பொருள் அன்று; எந்தக்காரணத் தின் காரியமும் அன்று. எனவே, இது என்றும் சுதந்திர மாய் நின்று விதிகளுக்குக் கட்டுப்பட்ட எல்லாவற்றின் மேலும் ஆட்சி செலுத்திவருகிறது. இது கலவைப் பொரு ளல்லாத படியால், இதற்கு அழிவு இல்லை. சாவு என்பது தன் முதற்காரணமான தனிப்பொருளாவது தானே! அழிவு என்பது, தான் தோன்றக் காரணமாக இருந்த ஒன்றில் திரும்ப ஒடுங்குவதுதானே! சாதல் இன்றேல் வாழ்தலும் இல்லை. சாவு, வாழ்வு இரண்டும் ஒரே பொருளின் வெவ் வேறு தோற்றம். எனவே, ஆன்மா, சாவு வாழ்வுக்கு அப்

பாற்பட்டது. நீங்கள் பிறக்க வில்லை. எனவே நீங்கள் இறக்கவும் மாட்டீர்கள். பிறப்பும் இறப்பும் உடலுக்கே.

அத்துவிதக் கொள்கைப்படி, பருமனுகவோ நுட்பமாகவோ காட்சியளிப்பன எல்லாம் இந்தப் பிரபஞ்சமே. காரண காரியம் எல்லாம் இங்கேயே இருக்கின்றன; விளக்கமும் இங்கேயே இருக்கிறது. தனிப்பட்ட ஒரு பொருளாகத் தோன்றுவது பிரபஞ்ச முதற்பொருளின் மிகச்சிறிய தோற்றமே யாகும். ஆன்ம அறிவின் மூலம் நாம் பிரபஞ்ச அறிவு பெறுகிறோம். உள்நோக்கான ஆன்ம ஆராய்ச்சியிற் கண்ட முடிவுகள் வெளிப் பிரபஞ்சத்துக்கும் பொருந்தும். சுவர்க்கம், நரகம் போன்றவை பற்றிய கருத்துகள்—இவை உண்மையாகவே இருந்தாலும்—இந்தப் பிரபஞ்சத்துக்குள் உள்ளவற்றையே சுட்டுகின்றன. இவை எல்லாம் சேர்ந்ததுதான் இந்த முழுமை. எனவே, முதல் கருத்து ‘முழுமை ஒன்று’ என்பதுதான். இது பல வகையான சிறு சிறு அணுத்தொகுதியால் ஆனது. இப்பிரபஞ்சத்தில்தோன்றும் ஒவ்வொன்றும் இந்த முழுமை அல்லது ஒன்றின் ஓர் அம்சமே ஆகும். பொருள்கள் பலவாகவும் பல வகையாகவும் தோன்றினுலும், உண்மையில் எல்லாம் ஒன்றே. இந்த முழுமையிலிருந்து பிரிந்தவர் நாம் என்ற எண்ணம் எவ்வளவுக்கு வளருகிறதோ, அவ்வளவு நமக்குத் துன்பம் பெருகும். எனவே ஒழுக்க நெறியின் அடிப்படை அத்துவிதமேயாகும்.

7

உண்மையான குருநாதர் எவர்?

ஆன்ம சக்தியின் களஞ்சியமாக அவ்வக் காலங்களில் உலகில் பிறந்து, குருசீட பரம்பரை மூலம் ஆன்ம ஞானத்தைப் பரப்பும் மகா புருஷரே உண்மைக் குருநாதர் ஆவார். இந்த ஆன்ம சக்தியின் ஓட்டம் அவ்வப்போது திசை மாறுகிறது; வேக மிக்கதோர் ஆறு தன் பழைய பாதையை விட்டு விலகிப் புதிய பாதை ஒன்றில் செல்வதுபோல. பழைய சமயங்கள் காலப் போக்கில் உயிரிழந்து களையிழந்து மங்குவதும் புதுப்புதுச் சமயங்கள் நிறைந்த உயிர்க்களையோடு

கிளம்புவதும் காண்கிறோம். உயிர் ததும்பும் சமயத்தையே விவேகிகள் மேற்கொள்கிறார்கள்.

உயிரற்ற பழைய சமயம் மிருகக் காட்சிச் சாலையில் வைக்கப்பட்டுள்ள பெரு விலங்குகளின் எலும்புக் கூடு போன்றதே. அவற்றுக்கு உரிய மதிப்பை நாம் அளித்தல் வேண்டும். ஆன்மாவின் உயர்ந்த இலட்சியத்தை அளிக்க இவை இயலாதவை. சுவையுள்ள மாம்பழம் வேண்டும் ஒருவனின் விருப்பத்தைப் பட்டுப்போன மாமரம் நிறைவேற்றுதல் இயலாதது போல.

மிக அவசியமானது நம் அகங்கார அழிவு. 'ஆன்ம ஞானம் பெற்று விட்டோம்' என்ற நினைப்பே அழியவேண்டும். நம்மை முற்றும் குருநாதரிடம் ஒப்படைத்து விட்டு அவர்காட்டும் வழியையே பின்பற்ற வேண்டும். நம் இலட்சியத்தை—நிறைவை—அடையும் உபாயம் எது என்பது நம் குருவுக்கு மட்டுமே தெரியும். அந்த விஷயத்தில் நாம் முழுக் குருடரே ; நமக்கு ஒன்றுமே தெரியாது. இத்தகைய பணிவும் அடக்கமுமே நம் மனக் கதவு திறந்து ஆன்மிக உண்மை காட்டுவன. நம்மிடம் அகந்தையின் மிக மங்கிய அறிகுறி இருந்தாலுங்கூட, உண்மை நமக்குப் புலனாகாது. இந்தப் பேயை—அகந்தையை — மனத்திலிருந்து விரட்ட எல்லாரும் முயல வேண்டும். பரிபூரண சரணாகதியே ஞானஒளி பெறுதற்குரிய ஒரே வழி.

8

கலையைப் பற்றி

கிரேக்கரின் கலைரகசியம் எதுவெனில் இயற்கைப் பிரதி பலிப்பே; மிக நுட்பமான அம்சங்களையும் பிரதி செய்யும் திறமையே. ஆனால், இந்தியக் கலையின் இரகசியமோ இலட்சிய விளக்கம். ஒரு துண்டு மாமிசத்தை வரைந்து வண்ணம் தீட்டுவதிலேயே கிரேக்க ஓவியன் ஒருவன் தன் திறமை முழுவதையும் ஈடுபடுத்துவான் ; அஃது ஓர் உண்மை மாமிசத் துண்டு என்று நம்பி, நாய் ஒன்று அதை நோக்கிச் செல்லும் அளவுக்கு அவன் வெற்றி பெற்றுவிடுவான். இயற்கையைப் பார்த்து அதை அப்படியே பிரதி செய்ய முயல்வதால்

கிடைக்கும் பெருமை என்ன? ஓர் உண்மை மாமிசத் துண்டையே நாயின் முன் வைத்துவிட்டால் என்ன?

இலட்சியத்தைக் காட்டவேண்டும் என்ற இந்திய ஓவிய நோக்கம்—புலன்களுக்கு எட்டாததைப் புலப்படுத்தவேண்டும் என்ற உயர் நோக்கம்—நாளடைவில் சிறிதுசிறிதாகப் பெருமை இழந்து, பலவகை வக்கிர உருவங்கள் படைப்பதில் முடிந்துவிட்டது. உண்மையான ஓவியத்தை ஓர் அல்லி மலருக்கு ஒப்பிடலாம். அது நிலத்திலிருந்து கிளம்புகிறது; தன் உணவையும் நிலத்திலிருந்தே பெறுகிறது; நிலத்தை ஆதாரமாகக்கொண்டே நிற்கிறது; என்றாலும், நிலத்தை விட உயர்ந்த நிலையிலேயே இருக்கிறது. இப்படி இருப்பது தான் உண்மைக் கலையின் இலட்சணம். எனவே, கலை இயற்கையோடு தொடர்புகொண்டதாக இருக்கவேண்டும். இது இல்லையென்றால், கலை தன் பெருமை இழந்துவிடும்; என்றாலும், இயற்கையைவிட உயர்ந்தும் இருக்கவேண்டும்.

அழகின் பிரதிநிதி கலை. எல்லாவற்றிலும் கலை இருக்க வேண்டும்.

கலைக் கட்டடம், வெறுங்கட்டடம் ஆகிய இரண்டுக்கும் வேற்றுமை இதுதான். முதலிற் சொன்னது ஒரு கருத்து அல்லது கற்பனையின் விளக்கமாகும். பின்னது பொருளாதார முறையில் எழுந்த ஒரு கட்டடமாகும். கருத்துகளை விளக்கும் திறத்தைப் பொறுத்தே பொருளுக்கு மதிப்பு ஏற்படுகிறது.

எம் குருவும் தெய்வமுமான ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரிடம் கலைப்பண்பு உயர்ந்த நிலையில் இருந்தது. இந்தக் கலைப்பண்பு இல்லாதவர் யாருமே அனுபூதிச்செல்வராய் இருக்க இயலாது என்று அவர் அடிக்கடி உரைப்பார்.

9

மொழி நடை பற்றி

எளிமையே இரகசியம். எனது இலட்சியம் என் குருநாதரின் மொழிநடைதான். பெரிதும் பேச்சு வழக்கிலுள்ளது. எனினும் கருத்தைத் தெளிவாக விளக்க வல்லது. தெரிவிக்க விரும்பும் கருத்தை அது தெளிவாக விளக்கவேண்டும்.

வங்காள மொழியை—மிகக் குறைந்த காலத்தில்—குறைவற்றதாகச் செய்யும் முயற்சியால், அந்த மொழி தன் எளிய தன்மையை இழந்து சாரமற்றதாகிவிடும். உண்மையைச் சொன்னால், அந்த மொழியில் வினைச்சொற்களே இல்லை. மைக்கேல் மதுசூதன தத்தர் என்னும் கவிஞர் தம் கவிதைகளில் இந்தக் குறை போக்க முயன்றார். வங்காளக் கவிஞருள் மிகச் சிறந்தவர் 'கவிகங்கணர்' ஆவர். வடமொழியிற் சிறந்த வசன நூல் பதஞ்சலியின் மகாபாஷ்யம் ஆகும். இந்த நூலின் மொழிநடை உயிருள்ளதாய் இருக்கிறது. இதோபதேசத்தின் நடையைத் தாழ்வானது என்று சொல்லமுடியாது; ஆனால், காதம்பரியின் நடை இழிவான நடைக்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டாகும்.

வடமொழியைப் பின்பற்றி வங்க மொழியைச் சீர்திருத்த முயலக்கூடாது. வங்க மொழிக்கும் பாலி மொழிக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதால், அதைப் பின்பற்றியே சீர்திருத்த வேண்டும். வங்க மொழியில் கலைச்சொற்களை மொழிபெயர்க்கவோ, புதுக் கலைச்சொற்களை ஆக்கவோ முயலும்போது வழக்கிலுள்ள வடமொழிச்சொற்களை எல்லாம் வழங்குவதோடு புதுச்சொற்களைப் படைக்கவும் முயலவேண்டும். வடமொழி அகராதி ஒன்றிலிருந்து இந்தக் கலைச்சொற்களை எல்லாம் தொகுத்து வைத்துக்கொண்டால், வங்காளி மொழிபெயர்ப்புக்கு இது (இந்தத் தொகுப்பு) மிகவும் உதவியாகஇருக்கும்.

10

சந்நியாசி

[போஸ்டனில் தாம் செய்த சொற்பொழிவு ஒன்றில் சந்நியாசி என்ற சொல்லின் விளக்கமாக சுவாமிகள் இவ்வாறு உரைத்தார்கள்:]

எப்போது ஒருவன் தான் பிறந்துள்ள சூழ்நிலைக்கு அவசியமான கடமைகளை எல்லாம் செய்துமுடிக்கிறானோ, எப்போது அவனுக்குச் செல்வம், புகழ், அதிகாரம் இவற்றில் துறவுள்ளமும் ஆன்மீக வாழ்வில் ஆசையும் ஏற்படுகிறதோ, எப்போது அவனுக்கு உலக நிலையாமை, போராட்டம், துயர், அதில் கிடைக்கும் இன்பத்தின் சிறுமை, இவை பற்றிய

அறிவும் இவற்றைவிட்டு விலகவேண்டும் என்ற உறுதியும் ஏற்படுகிறதோ அப்போது அவன் சத்தியநிலைபேருன அன்பை நாடுகிருன்; சரணடைகிருன். அந்தஸ்து, சொத்து, பெயர், புகழ் முதலிய யாவும் துறந்து உலகெங்கும் சுற்றித் திரிகிருன்; இடைவிடாமல் ஆன்ம ஞானம் தேடுபவனுகி ருன்; அருளும் அன்பும் நிறைய வளர்ப்பவனுகிருன்; அழியாத ஞானம் பெற முயல்கிருன். வருஷக் கணக்கில் கடைப்பிடித்து வந்த, சீலம், ஆத்ம விசாரம், தியானம் இவற்ருல் ஞானமெனும் நல் முத்தைப் பெறுகிருன்; ஆசாரிய னுகிருன். பின் தன்னை அடைந்து ஞானம் பெறவிரும்பும் சீடர்களுக்கும் பிறருக்கும் தான் பெற்ற ஞானத்தையும் பணி முயற்சியையும் உபதேசிக்கிருன்.

துறவியர் எம்மதத்தினரும் அல்லர்; அவர்தம் வாழ்க்கை எதிலும் கட்டுப்படாத சுதந்திரமான தியானத்தை யும் ஆராய்ச்சியையும் அடிப்படையாகக்கொண்டது. அவர் எல்லா மதங்களிலிருந்தும் சிற்சில கருத்துகளை ஏற்றுக்கொள் வார்; அவருடையவாழ்க்கை அனுபூதி வாழ்க்கை; தத்துவ அளவினது மட்டும் அன்று; நம்பிக்கை மட்டுமன்று; முரட்டுப் பிடிவாதமன்று; மூட வெறியுமன்று.

11

துறவியும் இல்வாழ்வோனும்

துறவியின் செயல்களில் இல்வாழ்வான் தலையிடலாகாது. பணக்காரர்களிடம் துறவிக்கு எவ்வித அலுவலும் இல்லை; ஏழைகளிடமே உள்ளது. ஏழைகளை அன்புடனும், கருணை யுடனும் பராமரித்துத் தம் ஆற்றல் முழுவதையும் செலுத்தி மகிழ்வுடன் அவர்களுக்குப் பணிபுரியவேண்டும். பணக் காரர்களுக்கு மரியாதை காட்டி, அவர் தம் உதவி நாடிநிற் பதே நம் நாட்டுத் துறவியர் சமூகத்தின் நஞ்சாகிவிட்டது. உண்மைத் துறவியர் எவரும் இதனின்று சர்வ ஜாக்கிரதை யுடன் விலகி நிற்கவேண்டும். இத்தகைய வாழ்க்கை பொது மகளிர் வாழ்க்கைக்கு ஒப்பானதேயன்றி, உலகத்தையே துறந்துவிட்டதாகச் சொல்லும் துறவியருக்குச் சற்றும் ஏற்ற தன்று. பெண்ணுசை பொன்னுசைகளில் முழுகியிருக்கும் ஒருவன், இவற்றை முற்றும் துறப்பதே லட்சியமாகக்

கொண்ட ஒருவருக்கு அன்பனுவது எப்படி? பெண்ணுசை பொன்னுசை சிறிதுமில்லாத ஒருவரையே தம்மிடம் உரையாட அனுப்புமாறு ஸ்ரீ ராமகிருஷ்ணர் அழுதழுது உலக அன்னையை வேண்டுவார். "உலகப் பற்று மிக்கவருடன் பேசினுல் என் உதடு எரிகின்றது" என்று மொழிவார். உலகப் பற்று மிக்கவர்களும் மனத் தூய்மை இல்லாதவரும் தம்மைத் தீண்டினுல்கூட தாங்க இயல்வதில்லை என்று அடிக்கடி நவில்வார். துறவோருக்கரசான ஸ்ரீ ராமகிருஷ்ணரைப் பற்றி நன்கு விவரிக்க இயலாதோர் உலகப் பற்றுடையோர். அவர்தம் சிந்தையும் செயலும் முற்றும் உண்மையாயிரா. அவர்களுக்கு ஏதாவது ஒரு சுயநலம் இருந்தேதீரும். ஈசுவரரே இல்வாழ்வோனுக அவதாரம் செய்தாலும், அவர் சிந்தையும் செயலும் முற்றும் உண்மையாக இருக்கும் என்று நம்புதற்கு இயலாது. இல்வாழ்வோன் ஒருவன் மதாசாரியனுக மாறினுல், மதக்கொள்கை என்ற போர்வையில் தன் சுயநல பூர்த்தியே நோக்கமாகக்கொள்வான். இதன் பலனுக அந்தச் சமயம் அடிமுதல் நுனிவரை அழுகி இருக்கும். இல்வாழ்வோர் ஆசாரியர்களாய் இருந்த சமயம் எல்லாவற்றின் கதியும் இதுவே. துறவு இன்றேல் சமயம் ஒருபோதும் நிலையாது.

"பொன்னுசை துறத்தல் என்பதனுல் துறவிகளாகிய நாங்கள் அறியவேண்டுவது என்ன?" என்று சிலர் இந்நிலையில் சுவாமிகளை வினவினர். அவர் பின் வரும் விடை அளித்தார்:

லட்சிய சித்தியின் பொருட்டுச் சில சாதனங்களை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. காலம், இடம், வினைசெய்வோன் இவர்களைப் பொறுத்துச் சாதனங்கள் வேருகின்றன; ஆனுல், லட்சியம் வேருவதில்லை. துறவியைப் பொறுத்த மட்டிலும் அவருடைய இலட்சியம் ஆன்ம விடுதலை; உலகுக்கு நன்மை செய்தல் — ஆத்மனே மோக்ஷார்த்தம் ஜகத்ஹிதாயச —

आत्मनो मोक्षार्थं जगत् हिताय च

இந்த லட்சியத்தை அடையும் சாதன்ங்களுள் மிக முக்கியமானது பெண்ணுசை, பொன்னுசை துறத்தல்.

துறவு என்பது சுயநலம் ஒழிப்பதே ஆகும். அவற்றேடு உடல் தொடர்பு நீங்கி நிற்பதே துறவு. பிறரிடம் உள்ள பணத்தைத் தாம் தொட மறுத்து, அதனுல் கிடைக்கும் இன்பங்களை எல்லாம் அனுபவிப்பது துறவாகுமா? துறவாகாது. மேற்சொன்ன இரண்டு துறவுகளையும் சாதித்துக் கொள்வதற்குப் பிச்சைபுகும் முயற்சி ஒரு நல்ல சாதனமாகும். ஆனுல், மனுவைப் போன்ற தரும சாத்திரக்காரர் தம் அறிவுரைகளைப் பின்பற்றி உணவில் ஒரு பகுதியைத் துறவிகளுக்கென்று இல்வாழ்வோர் ஒதுக்கிவைத்த காலத்திலேதான் இந்த முயற்சி பலன்தரும். இப்பொழுதோ, ஆசாரங்களிலும் பழக்க வழக்கங்களிலும் எவ்வளவோ மாறுதல்கள் ஏற்பட்டுவிட்டன. உதாரணமாக, வங்காளத்தில் இப்பொழுது 'மதுகரி' * என்னும் முறை மறைந்துவிட்டது. இப்போது 'மதுகரி' முறைப்படி துறவிகள் வங்காளத்தில் வாழ நினைப்பது வீண் முயற்சியே. அதனுல், ஒரு பலனும் ஏற்படாது. துறவி பிச்சை எடுத்தே உண்ணவேண்டும் என்ற நியமம் மேற்சொன்ன இரண்டு துறவும் சித்திப்பதற்காக அந்தக் காலத்தில் ஏற்பட்ட ஒன்று; ஆனுல், இப்போது அது பயன்படாது. எனவே, இப்போது துறவி ஒருவன் தன் வாழ்க்கைக்கு இன்றியமையாத தேவைகளை ஏற்பாடு செய்துகொண்டு தன் சக்தி, திறமை எல்லாவற்றையும், தான் எதற்காகத் துறவு பூண்டானே அந்த இலட்சிய சித்திக்குப் பயன்படுத்துவது துறவு தருமத்துக்கு விரோதம் ஆகாது. அறியாமை காரணமாகச் சாதனத்துக்கு அதிக மதிப்புக் கொடுப்பதால் குழப்பமே தோன்றும். லட்சியம் எப்போதும் நம் மனக்கண் நிற்கவேண்டும்; அகலவிடலாகாது.

12

அதிகாரி வாதத்தால் ஏற்படும் கேடுகள்

[வினு விடை வகுப்பு ஒன்றிலே 'அதிகாரி வாதம்' அல்லது தனி உரிமை வாதம் பற்றிய பேச்சு

---

* மதுகரி — தேனீயைப் போல் ஒவ்வொரு வீட்டிலும் கொஞ்சம் கொஞ்சமாகச் சந்நியாசி பிச்சை ஏற்கும் நியமம். இதனுல், இல்வாழுவோன் ஒருவன் தலையில் மிக்க பாரம் விழாது. தேனீ ஒவ்வொரு மலரிலிருந்தும் சொட்டுச் சொட்டாகத் தேனைச் சேகரிப்பது போன்றது இது.

எழுந்தது. சிலருக்குச் சிலவற்றில் தனி உரிமை உண்டு; வேறு சிலருக்கு இந்த உரிமையில்லை; என்பதே இந்த வாதமாகும். இந்த வாதம் காரணமாக ஏற்பட்டுள்ள கேடுகளை எடுத்துக்காட்டி சுவாமிகள் கனலெனப் பேசினுர்கள். அது வருமாறு:]

பழங்கால முனிவர்களிடம் அளவற்ற மதிப்புடையேன்; மரியாதையுடையேன். எனினும், மக்களுக்கு உபதேசம் செய்யும்போது அவர்கள் கையாண்ட முறைகளைக் கண்டியாதிருக்க வல்லேனல்லன். சில பணிகளைச் செய்யும்படி சீடருக்குக் கட்டளையிடுவார்கள்; ஆனுல், ஏன் அவற்றைச் செய்ய வேண்டும் என்பதை மட்டும் அவர்களுக்கு விளக்கவே மாட்டார்கள். இந்த முறை முற்றும் கேடு விளைவிக்கும் தன்மையதாகும்; மனிதர், தம் இலட்சிய சித்தி பெற உதவாமல் அவர் மீது பொருளற்ற ஒரு பெருஞ்சுமையாய் நின்று விட்டது. இந்த அறிவுரைகளின் லட்சியத்தைச் சீடர்களிடமிருந்து மறைத்ததற்கு அவர்கள் கூறும் காரணம், அதன் உண்மைப் பொருளைப் புரிந்து கொள்ள இயலாதவர்; அறிந்து கொள்ளும் தகுதியற்றவர்; இந்த உபதேசத்தைப் பெறத்தக்க அதிகாரிகள் அல்லர் என்பதே. இந்த அதிகார வாதம் அல்லது தகுதிவாதம் முற்றும் சுயநலம் காரணமாக எழுந்ததே. தங்கள் சிறந்த உபதேசங்களின் பொருளை எல்லாருக்கும் நன்கு விளக்கிவிட்டால் ‘குரு’ என்ற தங்கள் உயர் நிலையை இழந்துவிட நேரும் என்ற அச்சமே இதற்குக் காரணம். இதனுலேயே இந்த அதிகாரி வாதத்தை அவர்கள் வற்புறுத்தி வந்தார்கள்.

அறிவுரை பெறுவதற்கு வேண்டிய தகுதி ஒருவனுக்கு இல்லை என்பது தெரிந்தால், அந்த உபதேசத்தை அவன் புரிந்து கொள்ளுமாறு செய்ய முயல்வதே ஆசாரியன் கடமையாகும். இந்த நிலையில் அவனுக்குக் கற்றுக்கொடுக்கும் முயற்சி அதிகம் ஆகவேண்டுமே ஒழியக் குறையக் கூடாது; அவனுக்கு நல்ல பயிற்சி அளித்து நுட்பமான செய்திகளையும் உணரும்படி செய்ய வேண்டும். மனிதனுடைய ஆன்மாவுக்கு உள்ள அபாரமான சக்தியை அதிகாரி வாதக்காரர் புறக்கணித்து விட்டனர். ஒருவனுடைய தாய் மொழியில் கற்றுக்கொடுத்தால் எவனும் எந்தவிதமான அறிவையும் சுலபமாகப் பெற்றுவிடுவான். தன் உபதேசத்தை

ஒருவனுக்கு விளங்கும்படி அவன் தாய்மொழி மூலம் கற்றுக் கொடுக்கும் திறமை இல்லாத ஓர் ஆசாரியன், தன் திறமைக் குறைவுக்காக வருந்தி அழவேண்டுமே தவிர, உயர்ந்த அறிவு பெறும் தகுதி அவர்களுக்கு இல்லை என்ற காரணம் காட்டி அவர்கள் அஞ்ஞானத்திலும் மூட நம்பிக்கையிலும் முழுகியிருக்கும்படிச் சபிப்பது கூடாது. உண்மையைத் துணிவுடன் எடுத்துக் கூறுக. தகுதி குறைந்தோர் குழம்புதல் பற்றிய அச்சம் வேண்டாம். மனிதர்கள் சுய நலக்காரர்கள்; மற்றவர்களும் தங்கள் அளவு அறிவு பெறுவதை விரும்பாதவர்கள்; தங்கள் பெருமையும் மரியாதையும் போய்விடுமே என்று அவர்கள் அஞ்சுகிறார்கள். உயர்ந்த ஆன்மீக உண்மைகள் தகுதி குறைந்தவர்களுக்குக் குழப்பமே உண்டாக்கும் என்பது அவர்கள் வாதம். பின்வரும் சுலோகம் இதைத்தான் சொல்கிறது.

न बुद्धि भेदं जनयेद ज्ञांना कर्मसङ्गिनाम् ।

यौ ज ये त्सर्वकर्माणि विद्वान् युक्तः समाचरन् ॥

[கருமத்தில் ஈடுபட்டிருக்கும் அஞ்ஞானி ஒருவனுக்கு ஞானோபதேசம் செய்து அவன் மனத்தைக் குழப்பி விடக்கூடாது. ஞானி, தானே ஒழுங்காகக் கருமங்களைச் செய்து அஞ்ஞானிகளும் அந்தக் கருமங்களில் பங்கெடுத்துக் கொள்ளுமாறு பழக்கவேண்டும். கீதை III 26.]

ஒளியினால் இருள் பெருகும் என்ற முரண்பாடான வாதத்தை என்னால் நம்ப இயலவில்லை. அழிவுத் தன்மையே இல்லாத நித்தியத்துவ பூரணமான சச்சிதானந்தக் கடலில் மூழ்கி ஒருவன் தன் உயிர் இழந்தான் என்று இயம்புவது போன்றதே இது. எவ்வளவு முரணான வாதம் இது! அறியாமையால் ஏற்படும் தவறுகளிலிருந்து விடுதலை தருவதே ஞானம். அத்தகைய ஞானம் தவறான வழிகாட்டுமாம். அறிவு விளக்கம் குழப்பம் தருமாம்! இது சாத்தியமா? உண்மை கூறப் போதிய துணிவு இல்லை. பொதுமக்களிடம் மதிப்பு இழக்க நேருமே என்ற அச்சம். உண்மையான அழிவில்லாத தத்துவங்களுக்கும் மக்களின் அறிவற்ற நம்பிக்கைகளுக்கும் இடையே சமரசம் செய்ய முயல்கிறார்கள். தேசாசாரத்தையும் லோகாசாரத்தையும் பின்பற்றியே

தீரவேண்டும் என்ற கொள்கையை நிலைநாட்ட முயல்கிறார்கள். சமரசம் வேண்டாம்! பூசி மெழுக வேண்டாம்! பிணத்தை மலர்களால் மூடவேண்டாம்! பின் காண்பன போன்ற உபதேசங்களைத் தூக்கி எறியுங்கள்

तथापि लोकाचार:

(இருந்தாலும் லோகாசாரத்தைப் பின்பற்றத்தானே வேண்டும்) இப்படிப்பட்ட உபதேசங்களுக்குப் பொருளே இல்லை. இவை போன்ற சமரசமுயற்சியின் பலன் என்னவென்றால், சிறந்த உண்மைகள் எல்லாம் குப்பைக் குவியலுக்குள் புதைந்துவிடுவதுதான்; அந்தக் குப்பைக் குவியல்களே பின்பு உண்மையென மதிக்கப்படுகின்றன. கண்ணபிரான் துணிந்து செய்த சிறந்த உண்மைகளான கீதோபதேசங்களும் நாளடைவில் சீடர் கையிற் சிக்கி இந்தச் சமரச வலையில் அகப்பட்டுக் கொண்டன. இதன் பலன் என்ன? உலகத்திலேயே சிறந்த ஆன்மிக உபதேசக் கிரந்தமாகிய கீதையிலிருந்து தவறி நடக்கச் செய்யும் கருத்துக்கள் உபதேசங்கள் இப்போது வலிந்து பெறப்படுகின்றன.

இந்தச் சமரச முயற்சி வெட்கங் கெட்ட கீழ்த்தரமான கோழைமையில் முளைப்பது. துணிவு கொள்க! எல்லாவற்றுக்கும் மேலாக, என் மக்கள் துணிவுடன் இருக்க வேண்டும். எந்தக் காரணத்தினாலும் இதுபோன்ற சமரசத்துக்கு இடம் கொடுக்கவேண்டாம். உயர்ந்த ஆன்மீக உண்மைகளை எல்லா மக்களுக்கும் உபதேசியுங்கள். இப்படிச் செய்வதனால் உங்கள் கௌரவம் போய்விடும் என்றோ, கேட்பவர்கள் குழப்பமடைவார்கள் என்றோ அஞ்ச வேண்டாம். உண்மையைக் கைவிடுவதற்குக் காரணமான தூண்டுதல் இருந்தாலும், அவற்றை வென்று உண்மையையேபின்பற்றும் உறுதிமட்டும் உங்களிடம் இருக்குமானால், உங்களிடம் தானாகவே தெய்விக பலம் ஒன்று தோன்றிவிடும்; இந்த பலம் காரணமாக உங்கள் முன்னிலையில் நீங்கள் உண்மை என்று நம்பாதவைகளைப் பேச யாரும் நடுங்குவர். சிறிதும் பிறழாமல் பதினான்கு ஆண்டு காலம் உண்மை கடைப்பிடிக்க உங்களால் இயலுமானால், பிறகு நீங்கள் சொல்வதை மக்கள் ஏற்றுக் கொள்வார்கள். இப்படிச் செய்வதால் நீங்கள் மக்களுக்கு நலன் செய்தவராவீர்;

அவர்கள் தங்களை உடைத்தவராவீர்; மக்கள் சமூகம் முழுவதையும் உயர்த்தியவராவீர்.

13

பக்தியோகம்

கோல் ஏந்திய கையராய் நம்மைத் தண்டிக்கத் தயாராய் இருக்கும் கடவுள் ஒருவர் இருந்தால் அன்றி, நாம் நல்ல நெறியினராக வாழ முடியாது என்பது துவைதிகளின் கருத்து. இது எப்படி? குதிரை ஒன்று—வண்டி இழுக்கும் குதிரை—சாட்டை அடி ஒன்றினாலேயே நகரும் குதிரை—நன்னெறி பற்றி நமக்குச் சொற்பொழிவு ஆற்றுவதாக வைத்துக் கொள்வோம். அது மக்களைப் பற்றிப் பேசத் தொடங்கி, அவர்கள் தீநெறி பின்பற்றுபவர்கள் என்றே கூறும். ஏன்? "அவர்களுக்கு அடிக்கடி சாட்டை அடி கிடைக்காததே இந்த நெறி தவறுதலுக்குக் காரணம்" என்று அது மொழியும். சாட்டையடி கிடைக்கும் என்ற அச்சம் ஒருவன் நெறி தவறும் வாய்ப்பை அதிகமாக்கும்.

இறைவர் ஒருவர் உண்டு என்றும், அவர் எங்கும் நிறைந்தவர் என்றும் நீங்கள் எல்லாருமே சொல்கிறீர்கள். கண்களை மூடித் தியானம் செய்யுங்கள். நீங்கள் காண்பது என்ன? எங்கும் நிறைந்தவர் என்ற சிந்தனை எழும்போது நீங்கள் கண்டுபழகிய கடலோ, நீலவானமோ, பசுமையான புல்வெளியோ உங்கள் மனத்தில் தோன்றுகிறது. தியான காலத்தில் இதுதான் நேர்கிறது என்றால், 'எங்கும் நிறைந்தவர் இறைவர்' என்பதற்கு உங்களைப் பொறுத்தமட்டும் பொருள் ஒன்றும் இல்லை. இது போன்றதேதான் இறைவரின் ஒவ்வொரு குணத்தைப்பற்றிய அறிவும். எல்லாம் வல்ல சக்தி எங்கும் நிறைகின்ற இயல்பு என்ற கருத்துகளைப் பற்றி நாம் அறிவது என்ன? ஒன்றும் இல்லை. சமயம் என்பது அறிவால் அறிந்த உண்மைகளை அனுபவத்தால் அறிவதே ஆகும். எனவே, இறைவரின் பண்புகளை உள்ளபடி நீங்கள் அனுபவித்து அறிய முடிந்தால்தான், இறைவனை வழிபடுகிறவர்கள் என்று உங்களை நான் சொல்ல இயலும். இந்த நிலைக்குமுன் உங்கள் வழிபாடு வெற்று எழுத்துக் கூட்டலேயன்றி, வேறு ஒன்றும் இல்லை.

அனுபூதி அறிவே சமயம். கொள்கைகளேயும், தத்துவங்களே யும், நெறி நூல்களேயும் நீங்கள் உங்கள் மூளேயில் ஏராளமாக நிரப்பிக் கொண்டிருக்கலாம்; அவை பெரியனவாகக் கொள்ளப்படா. நீங்கள் எந்நிலேயிலிருக்கின்றீர்களோ, எந்த அளவு அனுபூதி பெறுகின்றீர்களோ அது ஒன்றே பெரிதும் கொள்ளப்படும்.

சகுணக் கடவுள் என்பது மாயை எனும் பனித்திரை யில் நாம் காணும் பரமாத்மாவே. ஐம்புலன்களால் அவரை அறிய முற்படும்போது சகுணக் கடவுளாகவே காணல் இய லும். கருத்து என்னவெனில் ஆன்மாவைப் புறத்தே காணல் இயலாது என்பதே. காண்பான் தன்னேயே காணல் எங்ஙனம்? நிழலே வேண்டுமானுல் பார்க்கலாம். அது புறத்தது எனின். இவ்வாறு புறத்தே காணும் முயற்சியின் உயர் விளேவே சகுணக் கடவுள்.

ஆன்மா என்றுமுளது; நிலேபேருனது. அதைப் புறத்தே காணவேண்டி நாம் எந்நேரமும் போராடுகிறேம். இப்போராட்டத்தின் விளேவே இப்பிரபஞ்சம்; ஜடம் இன் னும் பிற. இவையெல்லாம் வலிமை குன்றிய முயற்சிகள். ஆன்மாவை சகுணக் கடவுளாகக் காண்பதே இம் முயற்சி யின் சிகரம்.

சாங்கிய தத்துவப்படி பிரகிருதியே ஆன்மாவுக்கு இந்த (தன்னேப் பற்றிய போலி) அனுபவங்களே எல்லாம் உண் டாக்குகிறது; எப்போது உண்மையான அனுபவம் உண்டா கிறதோ—அன்றே ஆன்மாவுக்குச் சாக்ஷாத்காரம்—தன் அனுபவம்—கிடைக்கிறது. அத்துவைத வேதாந்தப்படி ஆன்மா தன்னே வெளிப்படுத்திக்கொள்ளப் போராடுகிறது. நீண்டகாலப் போராட்டத்திற்குப் பின் தானே எல்லாம், தன்னிலும் அயலாக ஒன்றும் இருக்க இயலாது என்ற உண்மை ஆன்மாவுக்கு விளங்குகிறது. இதற்குப் பிறகு பற் றற்றுவிடுகிறது; விடுதலே அல்லது மோட்சம் கிட்டுகிறது.

இத்தகைய பரிபூரண நிலே அடைந்த மனிதன் சகுணக்கடவுள் இயல் பெறுகிருன். "நானும் என் தந்தை யும் ஒருவரே" என்ற இயேசுவின் சொல் இதையே அறி விக்கிறது. தானும் நிறைபெற்ற பரப்பிரம்மமும் ஒன்று

என்பதை அவன் உணர்கின்றான். சகுணக்கடவுளாக அரும்புகிறான்; முகிழ்க்கிறான்; இவ்வுலகில் திருவிளையாடல் புரிகிறான்—பராக்கிரமம் மிகுந்த சக்கரவர்த்திகளும் சில சமயம் பொம்மை வைத்து விளையாடுவது போல.

சில கற்பனைகள், வேறு சில கற்பனைகளால் ஏற்படும் பந்தங்களை அறுக்கப் பயன்படுகின்றன. பிரபஞ்சத் தோற்றமே ஒரு கற்பனைதான். ஒரு கற்பனைத் தொகுதி இன்னொரு கற்பனைத் தொகுதியின் குறைகளை நிரப்ப உதவும். இந்தப் பிரபஞ்சம் பாவமும், சோகமும், சாவும் நிறைந்த இடம் என்று சொல்பவர்கள் அஞ்சத்தக்கவர்கள். 'நீ புண்ணிய ஆன்மா; இறைவர் உண்டு ;துக்கமே இல்லை;' என்று சொல்பவர் நல்லவர். இவர்கள் கற்பனை, முதற் கூட்டத்தாரின் சொற்களால் ஏற்படும் கற்பனை பந்தங்களை அறுத்தெறிய உதவுகிறது. கற்பனைச் சங்கிலியின் எல்லாக் கரணைகளையும் தெறிக்கச் செய்யும் சக்தி வாய்ந்த உயர் கற்பனை சகுணக் கடவுளே.

" ஆண்டவரே, இதைக் கவனித்துக் கொள்ளுங்கள்; அதை எனக்குக் கொடுங்கள் ; என்னுடைய சிறு பிரார்த்தனைக்கு மாறாக எனக்குத் தினசரி தேவையான அந்தப் பொருளைக் கொடுங்கள் ; அண்ணலே ! என் தலைவலியைப் போக்குக " என்று இப்படியெல்லாம் கடவுளை வேண்டுவது பக்தி அன்று. இது சமயச் செயல் முறையில் மிகத் தாழ்ந்த நிலை ; கருமானுட்டானத்திலும் தாழ்ந்த நிலையே. தன் உடலையும் அதற்கு வேண்டிய தேவைகளையும் திருப்தி செய்வதற்காகவே ஒருவன் தன் மன ஆற்றல் முழுவதையும் உபயோகிப்பானானால், அவனுக்கும் மிருகத்துக்கும் உள்ள வேறுபாடு என்ன ? பக்தி, இதனினும் உயர்ந்தது ; சுவர்க்க இச்சையினும் உயர்ந்தது. சுவர்க்கம் என்றால் போகம் நிறைந்த இடம் என்பதுதான். இது எப்படி இறைவராக இயலும் ?

அறிவிலிகளே புலன் இன்பம் நாடி ஓடுகிறார்கள். புலன் இன்ப நாட்டத்தோடு வாழ்வது எளிது; உண்பது உறங்குவது என்ற பழைய பாதையிலேயே செல்வது எளிது. நவீன சமயவாதிகள் என்ன சொல்லுகிறார்கள் ? " புலன்களின் திருப்திக்குக் காரணமான இந்தக் கருத்துகளை

ஏற்கச் சொல்லுகிறார்கள். இதற்குச் சமயம் என்ற முத்திரை இட்டு விடுகிறார்கள். இத்தகைய அறிவுரை அபாயகர மானது. புலன் வழிச்செல்லும் வாழ்விலேதான் சாவு இருக் கிறது. ஆன்மிக நிலையில் வாழ்வதே வாழ்க்கை. மற்ற வாழ்க்கை யெல்லாம் வாழ்க்கை அன்று; சாவுதான். வாழ்க்கை முழுவதுமே ஓர் உடற் பயிற்சிக் கூடம் எனலாம். இதைக் கடந்து அப்பாற் செல்ல வேண்டும். உண்மை வாழ்வு அநுபவித்தற் பொருட்டு.

தீண்டாமையே உங்கள் சமயமாகவும், சோற்றுப் பானையே உங்கள்தெய்வமாகவும் இருக்கும்வரை, உங்களுக்கு ஆன்மீக வளர்ச்சி கிட்டாது. ஒரு சமயத்துக்கும் மற்றொரு சமயத்துக்கும் இடையே காணப்படும் சிறுசிறு வேற்றுமை கள் எல்லாம் வெறும் சொற்போர்களே ஆகும். அவை அர்த்தமற்ற வேற்றுமைகளே. ஒவ்வொருவரும் "இது எனக்கே சொந்தமான கருத்து" என்று நினைக்கின்றனர்; தம் விருப்பப்படி வாழ விரும்புகின்றனர். சமயப் போராட் டங்கள் எழுகின்றன.

ஒருவர்மேல் குற்றம் சொல்லும்போது நாம் முட்டாள் தனமாக நம் வாழ்க்கையின் ஒரு சிறந்த அம்சத்தை எடுத் துக்கொண்டு இதை மற்றொருவர் வாழ்க்கையின் மிக இழி வான அம்சத்தோடு ஒப்பிடுகிறோம். இந்த முட்டாள்தனம் காரணமாகவே ஒருவரை மதிப்பிடுவதில் தவறு செய்து விடுகிறோம்.

மதவெறியையும் பிறமதத் தூற்றுதலையும் சாதனங் களாகக்கொண்டு விளம்பரம் செய்து ஒரு மதத்தை மிக விரைவில் பரப்பிவிடலாம் என்பதில் ஐயம் இல்லை. ஆனால், எந்த மதம் ஒருவனது கருத்துகளுக்குச் சுதந்திரம் கொடுத்து, அவன் கருத்துகள் மூலமாகவே அவனை உயர்ந்த நெறிக்குச் செலுத்துகிறதோ, அந்த மதந்தான் உறுதியான நிலையான அடிப்படையில் எழுந்ததாகும்; இது மெதுவாகப் பரவுவதனால் தவறு ஒன்றும் இல்லை.

முதலில் இந்தியா முழுவதிலும் ஆன்மிகக் கருத்து வெள்ளமெனப் பெருகச் செய்வீர். மற்றக் கருத்துகள்தாமே இவற்றைப் பின்தொடரும். ஆன்மீக அறிவு என்ற

கொடை மிகப்பெரிய கொடையாகும். இது ஓர் ஆன்மாவைப் பலப்பல பிறவிகளினின்றும் தப்புவிப்பதனுல். அடுத்த கொடை உலக அறிவு தருவதாகும். இது ஆன்மிக அறிவு பெறும் சாதனமாவதனுல். அடுத்தபடியான புண்ணியம், ஒருவர் உயிரைக் காக்கும் வாய்ப்பு; அடுத்த பெரும் புண்ணியம் அன்னதானம் ஆகும்.

ஆன்மானுபவம் பெறுவதற்கான சாதனைகளால் உடலே போய்விடும் என்ருலும், போகட்டும். அதனுல் பாதகம் ஒன்றும் இல்லை. இடைவிடாத சத்சங்கம் மூலம் உரிய காலத்தில் அநுபூதி பெறலாம். புகை குடிக்கும் சாதாரண மண்குழாய் தயாரித்துக் கொடுக்கும் பணி, பல்லாயிரம் தியானங்களைவிடப் பெரிது என்ற அனுபவம் (விழிப்பு) ஒரு மனிதனுக்கு ஒரு காலத்தில் ஏற்படும். மண்குழாயைச் சரியானபடி செய்யவல்லவன் சரியானபடி தியானமும் செய்ய வல்லவனுவான்.

உயர்ந்த ஆன்மீக வளர்ச்சிபெற்ற (இறந்த) முன்ஞோர்களே தேவர்கள் ஆவார்கள். நாம் இவர்களிடமிருந்து நமது ஆன்மிக வளர்ச்சிக்கு உதவிபெற இயலும்.

எல்லாரும் சமயாசாரியர் ஆகிவிட இயலாது. ஆனுல், பலர் முக்தர்களாக (விடுதலை பெற்றவர்களாக) முடியும். முக்தனுக்குப் பிரபஞ்சம் முழுவதுமே ஒரு கனவாகத் தோன்றுகிறது. சமயாசாரியனே, பிரபஞ்சம் உண்மையாகத் தோன்றும் நிலை, பிரபஞ்சம் கனவாகத் தோன்றும் நிலை ஆகிய இரண்டுக்கும் நடு நிற்க வேண்டியவன் ஆகிருன். பிரபஞ்சம் உண்மை (வியவகாரிக சத்தியம்) என்ற அறிவு அவனுக்கு இருக்க வேண்டும். இது இல்லையானுல், அவன் உபதேசம் எதற்கு? யாருக்கு? பிரபஞ்சம் ஒரு கனவு என்ற அனுபவம் அவனுக்கு இல்லையானுல், அவனுக்கும் சாதாரண மனிதன் ஒருவனுக்கும் பேதம் ஒன்றும் இல்லை. எனவே, அவன் எதை உபதேசம் செய்ய இயலும்? ஆசாரியன் தன் சீடர்களின் பாவ மூட்டையை ஏற்றுகொள்ள வேண்டும்; சக்தி மிகுந்த ஆசாரியர்களின் உடலும் பல பிணிகளுக்கு உட்பட்டு வருந்துவதற்கு இதுவேகாரணம். ஆனுல், ஆசாரியன் குறை உள்ளவனுனல், இந்தப் பாவங்கள் அவன் உடலை மட்டுமன்றி,

மனத்தையும் தாக்கிவிடும். எனவே, அவன் தன் நிலையிழந்து அழிந்து விடுவான். எனவே, ஆசாரியனாய் இருப்பது மிகக் கடினமான பொறுப்பு.

ஆன்மாசாரியனாவதைவிட, ஜீவன்முத்தனாவது (உடல் இருக்கும்போதே விடுதலை அல்லது முத்தி பெறுவது) எளிது. ஜீவன்முத்தன் பிரபஞ்சம் ஒருகனவு என்ற அனுபவத்தில் இருப்பதால், பிரபஞ்சத்தைப் பற்றிய கவலையே அவனுக்கு இல்லை. ஆசாரியனோ, பிரபஞ்சம் கனவு என்று அறிந்திருந்தாலும், அதை உண்மையாகப் பாவித்து அதிலிருந்தே உழைக்க வேண்டுபவனாகிறான். எல்லாரும் ஆசாரியர் ஆவது என்பது இயலாத காரியம். எவன் மூலமாகத் தெய்வசக்தி இயங்குகிறதோ, அவனே ஆசாரியன் ஆக இயலும். ஆசாரியனாகும் ஒருவனுடைய உடலுக்கும் மற்ற மனிதர்களுடைய உடலுக்கும் பெரிதும் பேதம் உண்டு. இந்த உடலைக் குறைவற்ற நிலையில் வைத்திருக்க வழிகாட்டும் சாத்திரம் ஒன்று உண்டு. இவருடைய உடல் மிகவும் நுட்பமான ஓர் இயந்திரம்; சிறு செயலும் இதை மிகப் பாதித்துவிடும். துன்பமும் சரி, இன்பமும் சரி, இந்த உடலை அளவுக்கு மீறிப்பாதிக்கும். இவர் அசாதாரண நிலையில் இருப்பவர்.

வாழ்க்கையின் எந்த நிலையிலும் உள் மனிதனே (மனிதனது உட்பண்பே) வெற்றி பெறுகிறான். இந்த உள் மனிதன் அல்லது உள்ளப் பண்புதான் வெற்றியின் ரகசியமாகும்.

நாதியா நாட்டு ஆசாரியரான பகவான் ஸ்ரீ கிருஷ்ண சைதன்யரிடம் காணப்பட்டது போன்ற பக்திப் பெருக்கு வேறு எங்கும் யாரிடமும் தோன்றியதே இல்லை.

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் ஒரு பெருஞ் சக்தி. அவருடைய உபதேசம் அல்லது கொள்கை இது என்றோ அது என்றோ நினைக்கக்கூடாது. ஆனால், இன்றும் உலகில் இருந்து அவருடைய சீடர்கள் மூலம் பணிபுரியும் ஒரு சக்தியே அவர். அவருடைய கருத்துகள் வளர்வதை நான் கண்டேன். இன்னும் அவை வளர்ந்து கொண்டே இருக்கின்றன. ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஜீவன் முக்தராகவும் இருந்தார்; ஆசாரியராகவும் இருந்தார்.

14
ஈசுவரனும் பரப்பிருமமமும்

சுவாமி விவேகானந்தர் ஐரோப்பாவில் இருந்தபோது வேதாந்தக் கொள்கைப்படி ஈசுவரனின் நிலை யாது ? எனும் கேள்வி எழுந்தது. அதற்குப் பதில் கூறியபோது சுவாமிகள் பின் வரும் விளக்கம் தந்தார்:

மனித உடல் ஸெல் எனும் கருவட்டங்களால் ஆக்கப் பெற்றது. இந்த ஸெல் எனும் கருவட்டம் ஒவ்வொன்றும் ஒரு தனிப் பொருளே. இந்தத் தனிப் பொருள்களின் கூட்டே உடல் எனும் ஒரு பொருளாகக் காட்சி தருகிறது. அதுபோல, கோடிக் கணக்கான ஜீவன்களின் சேர்க்கையே ஈசுவரன். சமஷ்டி அல்லது சேர்க்கை; இணைப்பு அல்லது கூட்டு; இதுவே ஈசுவரன். வியஷ்டி அல்லது பிரித்தல்; தனி நிற்றல். இதுவே ஜீவன். உடலின் தன்மை ஸெல் எனும் கருவட்டங்களைப் பொறுத்தது. அதேபோல ஈசுவரனின் தன்மை ஜீவனைப் பொறுத்தது. எனவே ஜீவனும் ஈசுவரனும் ஒன்றற்கொன்று ஆதாரமானவை. ஒன்று இருக்குமாயின் மற்றொன்றும் இருந்தே தீரல்வேண்டும். மேலும் இந்த பூமியைத் தவிர இதர உயர்நிலைகளில் எல்லாம் நன்மையே மிகுந்துள்ளது. எனவே ஈசுவரன் நன்மையின் உரு என்று கூறலாம். எங்கும் நிறைந்தவன், எல்லாம் வல்லவன் என்பனவற்றுக்கு விளக்கம் தேவையில்லை. ஜீவன்களின் கூட்டு என்ற ஒன்றே இதை விளக்கும். பரப்பிரம்மம் என்பது இவையிரண்டுக்கும் அப்பாற்பட்டது. இது பல் பொருள் சேர்க்கையன்று; இதுவே தனிப்பொருள்; கரு முதல் கடவுள்வரை ஊடுருவி நிற்பது. இஃதின்றேல் ஏதுமில்லை. எது உண்மையோ, அதுவே பிரம்மம். நானே பிரம்மம் என்று நினைக்கும்போது நான் மட்டுமே இருக்கிறேன். மற்றையோருக்கும் இப்படியே. எனவே ஒவ்வொருவரும் அப்பிரம்மமாகிய முதலின் நிறைவே.

15
ஞானயோகம்

ஆன்மாக்கள் எல்லாம் விளையாடுகின்றன. அறிந்து விளையாடுவன சில; அறியாமல் விளையாடுவன மற்றும் சில. அறிந்து விளையாடக் கற்பிப்பது மதம்.

அன்றாட உலக வாழ்விலே நாம் எந்த விதிகளைக் கடைப்பிடிக்கிறோமோ அதே விதிகள் சமய வாழ்விலும் பொருந்தும்; பிரகிருதி வாழ்விலும் பொருந்தும் அஃது ஒன்றே எல்லா வற்றிற்கும் பொருந்துவது. சமய விவகார விதியொன்று, உலக விவகார விதி மற்றொன்று என்பதில்லை. ஊனும், பேயும் கடவுளினின்றும் வேறுபடுவது அளவினாலேதான். மேற்கு நாட்டுத் தத்துவ போதகரும், சமயவாதிகளும், விஞ்ஞானிகளும் மரணத்தின் பின்னரும் நாம் வாழ்கிறோம் என்பதை நிரூபிப்பதற்கு எல்லாவற்றையும் துருவி ஆராய்கிறார்கள். எவ்வளவு அற்பமான விஷயம் பாருங்கள்! சிந்திப்பதற்குரிய உயரிய விஷயங்கள் எவ்வளவோ உள்ளனவே. இறப்பதாக நினைப்பதே மூடநம்பிக்கையல்லவா! நமக்குச் சாவில்லை என்று சொல்வதற்குப் புரோகிதர் எதற்கு? ஆவி எதற்கு? பேய் எதற்கு? தேவையில்லை. இது சுத்த சுயம் பிரகாசமான உண்மையல்லவா? தன் அழிவு பற்றி எந்த மனிதனும் சிந்தியான். அழிவின்மை யுணர்வு அவன் இயல்பிலேயே கரந்துறைகிறது.

எங்கே வாழ்வு உண்டோ அங்கே சாவும் உண்டு. சாதலின் நிழலே வாழ்தல்; வாழ்தலின் நிழல் சாதல். இவ்விரண்டின் எல்லை இன்னதென்று வரையறுக்க இயலாதது; கருத்துக்கு எட்டாதது; சிந்தையில் பிடிபடாத ஒன்று.

நாம் என்றும் ஒரே நேர் கோட்டில் முன்னேறிக் கொண்டேயிருக்கிறோம்; இந்த முன்னேற்றம் முடிவில்லாமல் நடந்துகொண்டேயிருக்கிறது என்பதை நான் நம்புவதில்லை. இந்தக் கருத்தை ஏற்றுக்கொள்ள என் அறிவு மறுக்கிறது. என்றும் நேர்கோடாகவே செல்லும் அசைவே இல்லை. நேர்கோடு ஒன்றை நீட்டிக்கொண்டே போனால், அது வட்டமாகவே முடியும். முன்னேற்றமாகிய சக்தி வட்டத்தை முடித்து, தான் தொடங்கிய இடத்துக்கே வந்து சேரும்.

நேர்கோடாகவே செல்லும் முன்னேற்றம் என்ற ஒன்று இல்லவே இல்லை. ஒவ்வோர் ஆன்மாவுக்கும் வட்டமான இயக்கந்தான் உண்டு. ஆன்மா அந்த வட்டத்தை முடித்தே ஆகவேண்டும். எந்த ஆன்மாவும் ஒரேயடியாக கீழ்

நோக்கியே போய்கொண்டிருக்க இயலாது; அது மேல் நோக்கியே தீரவேண்டும். தொடக்கத்தில் அது நேராகக் கீழ்நோக்கியே செல்லலாம்; என்றாலும், வட்டத்தை முடிப் பதற்காக அது மேல் நோக்கி வளைந்துதான் ஆகவேண்டும். நாம் எல்லோருமே, இறை என்ற ஒரே மையத்திலிருந்து தான் வெளியேறினோம்; ஒவ்வொவரும் தத்தம் பாதையான வட்டத்தை முடித்துக்கொண்டு, புறப்பட்ட இடமான மையத்தை அடைந்தே தீரவேண்டும்.

ஒவ்வொர் ஆன்மாவின் பாதையும் வட்டமானதுதான். உடல் இருக்கும் இடந்தான் அதன் மையம்; அதன் செய லெல்லாம் அந்த உடலைப்பற்றியே பரிணமிக்கின்றன. ஒரே ஓர் அம்சத்தில் நம் மனம் குவிந்திருப்பதாக நாம் நினைத்தா லும் நாம் எங்கும் நிறைகின்ற இயல்பு உள்ளவர்களே. இந்த அம்சம் பிரகிருதியின் அணுக்கள் பலவற்றைச் சேர்த்துத் தன்னை வெளிப்படுத்திக்கொள்ள ஒரு யந்திரத்தை உண் டாக்கிக்கொண்டுவிட்டது. இப்படித் தன்னை வெளிப்படுத்திக் கொள்ள ஆன்மா ஏற்படுத்திக்கொண்டிருக்கும் யந்திரந்தான் உடல். நாம் ஒவ்வொருவரும் எங்கும் நிறைந்தவரே. ஓர் உடல் அல்லது யந்திரம் அழிந்து அல்லது ஓய்ந்துவிட்டால், அதன் மையச் சக்தியாய் இருந்த ஆன்மா நகர்ந்து இன்னும் நுட்பமான அல்லது பருமனான அம்சங்களைச் சேர்த்து வேறு ஓர் யந்திரம் அல்லது உடலை ஆக்கிக்கொண்டு, அதன் மூல மாக இயங்கத்தொடங்குகிறது. இதுதான் மனிதன் அல்லது சீவன். கடவுள் என்பது என்ன? எங்குமே மையப்புள்ளி யாகவும், சுற்றுக்கோடே(பரிதியே) இல்லாததாகவும் உள்ள வட்டமே கடவுள் ஆகும். அந்த வட்டத்தில் உள்ள ஒவ் வொரு புள்ளியுமே சீவன் உள்ளது; அறிவுள்ளது; துடிப்பு உள்ளது; எல்லாமே ஒரே அளவில் செயலாற்றும் தன் மையன. எல்லைக்கு உட்பட்ட ஆத்மாக்களிலோ (சீவான் மாக்கள்) ஒரே ஒரு புள்ளி மட்டுமே அறிவுள்ளதாய் இருக்கி றது. இதுதான் முன்னும் பின்னும் இயங்குகிறது.

சீவாத்துமா என்பது ஏதோ ஓர் உடலில் மையம் கொண்ட சுற்றுக் கோடே (பரிதியே) இல்லாத (எல்லைக்கு உட்படாத) ஒரு வட்டம் ஆகும். சாவு என்பது இந்த மையத்தின் மாற்றமே ஆகும். இறையோ எங்கும் மையப்

புள்ளிகளைக்கொண்ட சுற்றுக் கோடே (பரிதியே) இல்லாத வட்டமாகும். எல்லைக்கு உட்பட்ட மையமாகிய உடலிலிருந்து சீவான்மா விலகிவிடுமானால், இதுவும் எங்கும் மையப்புள்ளி உள்ள இறையின் தன்மையை அடைந்துவிடும். அதாவது, இறையனுபவம் அல்லது ஆன்மாவை நேரில் காண்பது அந்த சீவான்மாவுக்கு ஏற்பட்டுவிடும். சிறுசிறு துண்டுக் காகிதங்களையும் வைக்கோல் துண்டுகளையும் சுமந்த வண்ணம் சக்தி மிகுந்த ஆறு ஒன்று கடலை நோக்கி ஓடிக்கொண்டிருக்கிறது. இந்தத் துண்டுகள் ஓட்டத்தை எதிர்த்துச் செல்ல போராடலாம். ஆயினும், இவை முடிவில் கடலை அடைந்துதான் தீரவேண்டும். இது போலவே நான், நீங்கள் பிரகிருதிப்பொருள் எல்லாமே இவ்வாறு ஒரு சக்தி மிகுந்த நீரோட்டத்தால் அதன் விருப்பப்படி வாழ்வுக்கடலை நோக்கி இழுத்துச்செல்லப்படும் சிறு வைக்கோல் துண்டுகளே ஆவோம். இந்தக் கடலே நிறைவு அல்லது இறைவன்; வாழ்வுக்கடல். நாம் திரும்பிப்போகவோ இந்த ஓட்டத்தை எதிர்த்துப் போராடவோ முயலலாம். அங்கும் இங்குமாக இந்த வெள்ளத்தில் நீந்தலாம். ஆயினும், முடிவில் நாம் கங்கு கரையில்லாத ஆனந்த வாழ்க்கைக் கடலை அடைந்தே தீரவேண்டும்.

ஞானம் என்பது சமயக்கொள்கைகளுக்கு அப்பாற்பட்டது; சமயங்களை வெறுப்பதாகாது. சமயத்தைவிட உயர்ந்த, சமயத்திற்கு அப்பாற்பட்ட நிலை அதற்குக் கிடைத்துவிட்டது என்பதே இதன் பொருள். ஞானி (வேதாந்தி) எதையும் அழிக்க முயல்வதில்லை; எல்லாருக்கும் உதவவே முயல்கிறான். எல்லா ஆறுகளும் தங்கள் நிறைகடலோடு கலந்து ஒன்றுகிவிடுகின்றன. இது போலவே எல்லாச் சமயங்களும் ஞானத்தில் முடிந்து ஒன்றுகிவிடவேண்டும். உலகப் பற்றைவிட்டு ஒழிக்கவேண்டும் என்று ஞானம் கூறுகிறதே ஒழிய உலகையேவிட்டு ஒழிக்கவேண்டும் என்று உரைப்பதில்லை.

உலகத்தில் வாழ்ந்துகொண்டே அதில் பற்றற்று நிற்பதுதான் உண்மைத் துறவின் இலக்கணமாகும்.

ஆரம்பத்திலிருந்தே எல்லா அறிவும் நம்மிடம் நிறைந்திருக்கிறது. வேறுவிதமாக நம்ப என்னுல் இயலவில்லை.

நீங்களும் நானும் ஒரு பெருங்கடலின் சிறு அலைகள் என்றால், பின்னணியாக இருப்பது பெருங்கடல் அல்லவா?

பிரகிருதி, மனம், உயிர் மூன்றுக்கும் இடையே உண்மையில் பேதம் ஒன்றுமே இல்லை. ஒரே பொருளின் அனுபவ நிலைகளே அவை. இந்த உலகம் ஐம்புலன்களுக்கும் பிரகிருதியாகக் காட்சி தருகிறது. கெட்டவர்களுக்கு நரகமாகக் காட்சியளிக்கிறது; நல்லவர்களுக்குச் சுவர்க்கமாக காட்சியளிக்கிறது; ஞான நிறைவுற்றவர்களுக்கு இறைவனாகக் காட்சியளிக்கிறது.

பிரம்மம் ஒன்றுதான் உண்மை என்பதைக் கண்கூடாகப் புலன்கள் உணரும்படி காட்ட இயலாது. ஆனால், முடிவு இதுவாகத்தான் இருக்கும் என்பதை அறிவுக்குக் காட்ட இயலும். உதாரணமாக, எல்லாப் பொருள்களிலும் சாதாரணப் பொருள்களிலுங்கூட பொருள் என்ற இந்த ஒருமை அல்லது பொதுமை இருப்பதையும் காண்கிறோம். பேதங்களுக்கெல்லாம் காரணம் நாம ரூபம் என்கிறோம். ஆனால், இதை மனதில் கொண்டு பிரிக்க முயன்றால், நாம ரூபம் எங்கும் இருப்பதில்லை. பெயரையோ, உருவத்தையோ, காரணங்களையோ, பொருள்கள் அல்லது காரியங்களிலிருந்து, பிரித்துத் தனியே காணல் இயலவே இயலாது. இந்த தோற்றத்தையே, நாமருபத்தைச் சார்பாகக் கொண்டிருப்பது போலத் தோன்றி இவைகளின் சார்பற்றபோது இல்லாததாகும் தோற்றம் மாயை என்கிறோம். கடல் அலை ஒன்றை எடுத்துக்கொள்ளுங்கள். அந்த அளவு நீர் அலை உருவாக இருக்கும் வரையில் அந்த அலை தனிப் பொருளாகக் காட்சியளிக்கிறது. ஆனால், எந்த நொடியில் அது மடிந்து கடல் நீரோடு ஒன்றி விடுகிறதோ அந்த நொடியே அலை என்ற அந்தப் பொருள் இல்லை. ஆனால், அந்தப் பெரு நீர் நிலையாகிய கடலின் இருப்போ உருவைப் பொறுத்ததாய் இல்லை. அலை முற்றும் இல்லாமற்போன போதிலும், கடல் மட்டும் இருக்கிறது.

உண்மைப்பொருள் ஒன்றே. அது பலவாகத் தோன்றச் செய்வது மனமே. நாம் பலவற்றைக் காணும்போது ஒருமை மறைந்துவிடுகிறது; எப்பொழுது நாம் ஒருமை

காண்கிருேமோ, அப்பொழுது பன்மை மறைந்து விடுகிறது. அன்ருட வாழ்க்கையிலும் ஒருமை தோன்றும்போது பன்மை தோன்றுவதில்லே. தொடக்கத்தில் தோன்றுவது ஒருமையே யாகும். அமெரிக்கர் இருவர் தம் தோற்றத்தில் வேறுபடு வதைச் சீனன் காண்பதில்லே. சீனர் இருவர் இடையே உள்ள பேதம் நமக்குத் தெரிவதில்லே.

பொருள்களே நாம் அறியச் செய்வது மனந்தான் என் பதை விளக்கிக்காட்ட இயலும். சில தனித்தன்மைகளேக் கொண்ட பொருள்களே மனத்தால் அறிந்த அல்லது அறி யக்கூடிய பொருள்களாக முடியும். குணம் அல்லது தன் மையே இல்லாத பொருளே மனத்தால் அறியவே இயலாது. எடுத்துக்காட்டாக மனதால் அறியப்படாததும் அறிய இய லாததுமான X என்ற வெளியுலகம் இருக்கிறது. அதை நான் மனத்தால் அறிந்தேன் என்ருல், அந்த உலகம், மனமும் உலகமும் சேர்ந்த கலப்பே ஆகும். உலகத்தை நான் அறிய விரும்பினுல், அந்த அறிவின் முக்காற் பகுதிக்குக் காரண மாவது மனமே ஆகும். உள் உலகம் Y யும் மனமும் கலந்த ஒன்ருகும்; வெளி உலகம் X உம் மனமும் கலந்த கலப் பாகும். வெளி உலகிலும் சரி, உள் உலகிலும் சரி, நாம் காணும் பேதங்களெல்லாம் நம் மனத்தின் படைப்பேயாகும். உண்மையில் இருப்பதோ யாரும் அறியாததும், அறிய இய லாததுமான ஒன்றே ஆகும். அது அறிவுக்கு அப்பாற் பட்டது; அறிவுக்கு அப்பாற்பட்ட எதனிடமும் பேதம் இராது. எனவே, வெளி உலகமான X உம், உள் உலக மான Y உம் ஒன்றே ஆகும். அதாவது உண்மையில் உள்ளது ஒன்றே. காரணகாரியவாதம் இறை வனுக்கு அவசியமில்லே. எல்லாமே தெரிந்த பொருளா ஞல், காரணகாரிய வாதம் எதற்கு? சில உண்மைகளே அறிவதற்காக நாம் புழுக்கள் போல் ஊர்ந்து செல்ல வேண்டியிருப்பது பலவீனத்தின் அறிகுறியே; இப்படி அறிந்த சில உண்மைகளும் பயனற்றுப் போய்விடுகின்றன. மனத்திலும் எல்லாப் பொருள்களிலும் ஆன்மா பிரதிபலிக் கிறது. ஆன்மாவின் ஒளிதான் மனத்துக்கு அறியும் திற னக் கொடுக்கிறது. எல்லாமே இந்த ஆன்மாவின் விளக்கந் தான். மனங்கள் எல்லாம் இந்த ஆன்ம ஒளியை எடுத்துக்காட்டும் முகம் பார்க்கும் கண்ணுடிகளாகும். அன்பு,

அச்சம், வெறுப்பு, புண்ணியம், பாவம் எல்லாமே ஆன்மாவின் பிரதிபலிப்புகளே. பிரதிபலிக்கும் கண்ணுடி இழிவானுல், பிரதிபலிப்பும் இழிவாகவே இருக்கும்.

உண்மைப் பொருளுக்கு எவ்வகைத் தோற்றமும் இல்லை. எனவே, இதை நாம் கருதவே இயலாது. கருதுவதற்கு மனம் தேவை. மனமே உண்மைப் பொருளின் ஒரு தோற்றம். கருத்துக்கு எட்டாதது என்பது இந்தப் பொருளின் பெருமை. ஒளியின் மிகத் தாழ்ந்த அலைகளையும், மிக உயர்ந்த அலைகளையும் நாம் பார்க்க இயலுவதில்லை என்பதை நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். இவை இருப்பின் இருமுனைகள் ஆகும். இப்பொழுது நமக்குத் தெரியாத சில கருத்துகள் இருக்கின்றன; ஆனுல், அவற்றை அறிந்துகொள்ள நம்மால் இயலும். அவை தெரியாமல் இருப்பதற்கு நமது அறிவுக் குறைவே காரணம். சிலவற்றைப்பற்றி நாம் என்றும் தெரிந்து கொள்ளவே இயலாது; அவை அறிவின் உயர்ந்த எல்லைக்கு அப்பாற்பட்டவை. எப்போதுமே நாம் முடிவற்றவர்கள்; ஆனுல், நமக்கு இது தெரிவதில்லை. முடிவற்ற இந்த நிலையில் அறிவது என்பது இயலாதகாரியம். எல்லைக்குட்படுவது தான் கருத்தின் இருப்புக்கு அடிப்படை. சான்ருக, எனக்குள் இருக்கும் உண்மையான பொருள் ஆன்மாதான் என்ருலும், நான் அதைப்பற்றி எண்ணவேண்டுமானுல், எல்லைக்குட்பட்ட உடல், மனம் என்ருே, மகிழ்ச்சியுறுவது துயருறுவது என்ருே, ஆண் பெண் என்ருேதான் என்னுல் நினைக்க இயல்கிறது. அதே சயத்தில் அதை அதன் உண்மை வடிவத்தில் நினைக்க நான் முயல்கிறேன்; ஆனுல், அதன் நிலையைத் தாழ்த்தியே (அதை ஓரெல்லைக்குட்படுத்தியே) என்னுல் அதை நினைக்க இயலுகிறது. என்ருலும், உண்மை பற்றிய நிச்சய அறிவு எனக்கு உண்டு. "என் அன்பே, யாருமே தன் கணவனிடம் அவன் தன் கணவன் என்பதற்காக அன்பு செலுத்துவதில்லை; ஆனுல், தம் ஆன்மா அங்கு இருப்பதனுலேயே அன்பு செலுத்துகின்றனர். ஆன்மாவின் மூலமாகவே அவள், தன் கணவனிடம் அன்பு செலுத்துகிருள். அதுபோலவே, கணவன்மார்களும் தங்கள் மனைவிமார்களிடம் அவர்கள் தங்கள் மனைவிமார்கள் என்பதற்காக அன்பு செலுத்துவதில்லை; தங்கள்

ஆன்மாவின் மூலமாகவே அன்பு செலுத்துகிருர்கள்" அழியாத இந்த உண்மைப் பொருளே (ஆன்மாவே) நாம் அறிந்த ஒரே பொருள். இதற்குள்ளும் இதன் மூலமாகவுமே நாம் மற்ற எல்லா வற்றையும் அறிகிருேம்; ஆயினும், இந்த உண்மைப் பொருளை நாம் கருத இயலாது. அறிபவனையே அறிவது எப்படி? நாம் அதை அறிய இயலுமானல், அது அறியும் பொருளாய் இருக்க இயலுமே ஒழிய, அறிபவனய் இருக்க இயலாது. அது அயற்பொருள் அல்லது அறிவிற்கு விஷயமான பொருள் ஆகிவிடும்.

ஒப்புயர்வற்ற ஆன்மானுபவம் பெற்றவன் "நான் அரசர்களுக்கு எல்லாம் அரசன்; எனக்குமேலே அரசர் யாருமிலர்; நர்னே தேவன்; எனக்கு மேலே எந்தத் தேவனும் இல்லை; நான் மட்டிலும் இருக்கிறேன்; எனக்கு அயலாக இரண்டாவது எதுவும் இல்லை" என்று விளம்புகின்ருன். வேதாந்திகளின் இந்த அத்துவைதக்கொள்கை பலருக்குப் பயங்கரமாகத் தோன்றும். காரணம் அவர் தம் மூடக் கொள்கைகளே.

சலன மில்லாமல் என்றும் அமைதியாக நிற்கும் நாமே ஆன்மா. நாம் அழக்கூடாது; ஆன்மாவுக்கு அழுகை என்பது இல்லை. நாம் நம் கற்பனையின் மூலம், இறைவன் தன் அரியாசனத்தில் இருந்தபடியே மக்களிடம் உள்ள பொங்கும் பரிவால் அழுது கொண்டிருக்கிருன் என்று நினைக்கிருேம். இத்தகைய இறைவன் நாம் சென்று அடையத்தக்கவன் அல்லன். இறைவன் எதற்காக அழவேண்டும்? அழுகை பலவீனத்தின் அறிகுறி; அடிமைத்தனத்தின் அறிகுறி.

உயர்ந்த ஒன்றையே நாடுக! எப்போதும் உயரிய ஒன்று. உயரிய பொருளிடத்திலேதான் அழிவில்லாத பேரின்பம் இருக்கிறது. நான் வேட்டையாடினல், சிங்கத்தையே வேட்டையாடுவேன்; கொள்ளையிட வேண்டுமானல், அரசனது கருவூலத்தையே கொள்ளையிடுவேன். அதிலும் உயர்ந்ததையே நாடுக.

அம்மம்மா! எந்த எல்லைக்கும் எந்த வருணனைக்கும் எட்டாதவன் அவன்! உள்ளத்துக்கு உள்ளே தோன்றும் சோதி அவன்! ஒப்புயர்வற்றவன்; எல்லையற்றவன்; வானம்போல எவ்வகை மாறுதலும் இல்லாமல் ஒரே

நிலையில் இருப்பவன். இப்படி எல்லாமான பொருளை, தூய ஆன்மாவை, அறிந்து கொள்க. வேறு எதையும் தேடற்க!

எங்கே பிரகிருதி சம்பந்தம் இல்லையோ, எது எல்லா கருத்துக்கும் அப்பாற்பட்டதாய் இருக்கிறதோ, எது மாற்றம் இல்லாததோ, அசைவு இல்லாததோ, யாரை எல்லா நூல்களும் போற்றுகின்றனவே, எல்லா முனிவர்களும் வழிபடுகின்றார்களோ, அதையே—அவரையே—தூய ஆன்மாவாகிய நீங்களும் நாடுங்கள்; வேறு எதையும் நாட வேண்டாம்.

ஒப்பிலாதது; முடிவற்ற ஒன்று; ஒப்புமை சொல்ல முடியாதது. மேலே, கீழே, வலப்புறம், இடப்புறம், எங்கும் தண்ணீர்; தண்ணீர்ப்பரப்பில் அலையோ வேறு எந்த வகையான அசைவோ இல்லை; முற்றும் அமைதி; எல்லாம் அழிவற்ற ஆனந்தம். இந்தப் பொருள்கள் உள்ளத் தோற்றத்துக்கு வரும்; நீங்கள் வேறு எதையும் நாட வேண்டாம்.

சகோதரர்களே! நீங்கள் ஏன் அழுகிறீர்கள்? உங்களுக்குச் சாவு இல்லை; பிணி இல்லை. தம்பிகாள்! நீங்கள் ஏன் அழவேண்டும்? துன்பமில்லை; துரதிர்ஷ்டமில்லை. ஏன் அழுகிறீர்கள் தம்பிகளே! மாறுதலோ, அழிவோ உங்களுக்கு விதிக்கப்படவில்லை. நீங்கள் அழிவில்லாதவர்கள்; நிறைந்தவர்கள்.

இறைவன் என்றால் என்ன என்பது எனக்குத் தெரியும். ஆனால், அவனைப்பற்றி உங்களுக்கு உரைக்க என்னால் இயலாது. இறைவன் என்றால் என்ன என்பது எனக்குத் தெரியாது; எப்படி அவனைப்பற்றி உங்களுக்கு நான் சொல்ல இயலும்? ஆனால் சோதரரே, நீங்களே அவன்; நீங்களே அவன் என்பது உங்களுக்குத் தெரியவில்லையா? இறைவனைத் தேடி இங்கும் அங்கும் அலைவானேன்? எதையும் தேடாதீர்கள்; அதுதான் இறைவன்; நீங்கள் உங்கள் ஆன்மாவாக இருந்தபடியே இருங்கள்.

நீயே எங்கள் தாய்; தந்தை; உற்ற நண்பன். நீயே உலகச் சுமை முழுவதையும் தாங்குகிறாய். எங்கள் வாழ்க்கைச் சுமை தாங்க எங்களுக்கு உதவி செய். நீயே எங்கள் நண்பன்; காதலன்; கணவன்; நீயே நாங்களெல்லாம்!

16

மாயையின் காரணம் யாது?

இக்கேள்வி—அதாவது மாயையின் காரணம் யாது? எனும் கேள்வி—சென்ற மூவாயிரம் ஆண்டுகளாகவே எழுப்பப்பட்டு வருகிறது. இதற்குரிய விடை ஒன்றே. அஃதாவது உலகம் என்றைய தினம் தருக்கரீதியான வினு எழுப்புகிறதோ அன்றே விடைகிடைக்கும் என்பதுதான். கேள்வியிலே முரண் உள்ளது. ஏகமாய் நிற்கும் பரம்பொருள் சார்புடைத்தாய்க் காணப்படுவது புறத்தோற்றமே. வரையறைக்குட்படாத — வரையறுத்தற்கியலாத — பரம்பொருள் வரையறுக்கப்பட்டதாய் காணப்படுவது மாயையின் தோற்றமே. இதுதான் நம் கொள்கை. பரம்பொருள் எல்லையற்றது என்பதை ஏற்றுக்கொள்வதால் வேறு எதனுலும் பாதிக்கப்படாதது என்பதையும் ஏற்றுக்கொள்கிருேம். பரம்பொருள் காரணமற்ற ஒன்று. அதாவது வேறு எதுவும் அதை பாதியாது. எல்லையற்ற ஒன்ருதலின் ஏதும் அதை பாதியாது. எல்லையற்ற ஒன்றற்கு இடம், காலம் காரண காரியம் என்பவை இருத்தற்கியலா. மேற்கண்டவற்றை ஒப்புக்கொண்டால், கேள்வி இவ்வாருகும். "இம்மாதிரி எதனுலும் மாற்றம் செய்தற்கியலாத ஒன்று உண்டாவதற்குக் காரணம் எது?" இந்தக் கேள்வி எல்லைக்கு உட்பட்ட பொருள் பற்றியே எழல் இயலும். ஆனுல், நீங்களோ எல்லைக்கு உட்பட்ட பொருளை விலக்கி, எல்லைக்கு உட்படாத தனிப்பொருளோடு சம்பந்தப்படுத்திக் கேட்க விரும்புகிறீர்கள். எல்லையற்ற பொருள் எல்லைக்கு உட்பட்டதாகி, காலம், இடம் காரண காரியம் முதலியன ஏற்படும்போதுதான் இந்தக் கேள்வி கேட்க இயலும். 'அஞ்ஞானமே மாயைக்குக் காரணம்' என்ற ஒரே விடைதான் நாம் அளிக்க இயலும். இந்தக் கேள்வியே பொருத்தமற்றது. பரம் பொருளைப் பாதிக்க எதனுலும் இயலாது, அங்கே காரணம் என்பது ஒன்றும் இல்லை. நமக்கு விடை தெரியாது என்பதோ, நாம் அஞ்ஞானிகள் என்பதோ இதன் முடிவன்று; விஷயம் அறிவுக்கு அப்பாற்பட்டது; அதை அறிவெல்லைக்கு உட்படுத்த முடியாது. 'எனக்குத் தெரியாது' என்பதை இரண்டு பொருளில் நாம் பயன்படுத்தலாம். ஒன்று, அந்த விஷய

அறிவுக்கு நம் அறிவு தாழ்ந்தது; மற்றென்று, அது அறிவுக்கே அப்பாற்பட்ட விஷயம். எக்ஸ்ரே என்பது இப்பொழுது தெரிந்த பொருளாகிவிட்டது. இவற்றின் காரணங்களே இன்னும் விவாதநிலையில் இருக்கின்றன. ஆனுலும், இவற்றை நாம் கண்டுபிடித்துவிட இயலும் என்ற திண்மை இருக்கிறது. எனவே, "இன்னும் X கதிர்களைப் பற்றி நமக்குத் தெரியவில்லை," என்று சொல்லலாம். ஆனுல், தனிப்பொருளாகிய இறைவனைப் பற்றியோ நாம் அறியவே இயலாது. X கதிர்கள் அறிவு எல்லைக்கு உட்பட்டவைகளே; ஆனுல், இன்னும் நமக்கு அவை பற்றித் தெரியாது; அவ்வளவுதான். ஆனுல், இறை விஷயத்திலோ, அது அறிவுக்கு மிகு நெடுந்தொலைவில் இருப்பதால் அது அறிவதற்கு உரிய பொருள் என்ற எல்லைக்குள்ளேயே வருவதில்லை. அறிபவனை எந்தச் சாதனத்தினுல் அறிய இயலும்? நாம் எப்பொழுதும் நாமாகவே இருக்கிறேம். நம்மை நாம் அறியும்படி நம்மை அயலார் ஆக்கிக்கொள்வது அல்லது நம்மையே நம் அறிவுக்கு விஷயமாக்கிக்கொள்வது எப்படி? அழிவின்மையை மெய்ப்பிப்பதற்காக நம் முன்னேர்கள் வழங்கிய வாதங்களுள் இதுவும் ஒன்று. 'நான் இறந்து கிடக்கிறேன்,' என்று நினைக்க முயன்றுல், நினைப்பது எது? நான் என்னையே பார்த்துக்கொள்கிறேன்—ஏதோவொரு பிணத்தைப் பார்க்கிறேன் என்பதுதானே நினைப்பாக இயலும்? கருத்துக்குப் பொருளான பிணம் நான் ஆக இயலாதல்லவா?

17

*பரிணுமம்

ஆகாசமும் பிராணனும் ஸ்தூலமாகத் தோற்றம் பெற்று மீண்டும் சூக்குமமாகிப் பழைய நிலை அடையும் விஷயத்தில் இந்தியர்கள் கருத்தும் இக்கால விஞ்ஞானக் கருத்தும் ஒன்றுயுள்ளன. விஞ்ஞானிகள் பரிணுமத்தை உண்மை

* இதற்கு முன்னும் பின்னும் உள்ள சில 1896-ஆம் ஆண்டு, மார்ச்சு 22, 24-ஆம் தேதிகளில் அவர் ஹார்வர்ட்டு சர்வகலாசாலை மாணவர்களுக்கு அளித்த விடைகளிலிருந்து தொகுத்தவை. பிரசுரமாகாத சொற்பொழிவுகள், சம்பாஷணைகள் இவைகளிலிருந்தும் சில விஷயங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

என்கிறார்கள்; யோகிகளும் பரிணாமத்தை நம்புகிறார்கள். பரிணாமத்தைப் பற்றி யோகிகள் சொல்லும் விளக்கமே சிறந்தது என்று எனக்குத் தோன்றுகிறது. "ஓர் உயிரினம் இன்னோர் உயிரினமாக மாறுவது இயற்கையின் உள் நிறைவு அல்லது உள்மாற்றம்." உயிரினம் தாழ்ந்த நிலையிலிருந்து படிப்படியாக உயர்ந்த நிலைக்கு மாறிக்கொண்டே வருகிறது; இந்த ஏணியின் மிக உயர்ந்த படிதான் மனிதன். இதுவே அடிப்படையான கருத்து. இந்த இயற்கை உள் நிறைவு மாற்றத்தைப் பதஞ்சலிமுனிவர் குடியானவர் வயலுக்கு நீர் பாய்ச்சுதற்கு ஒப்பிடுகிறார். நமது கல்வியும் முன்னேற்றமும் பரிணாமத் தடைகளை விலக்கவே பயன்படுகின்றன. தடை விலகியவுடன் உள்ளே உள்ள தெய்வத்தன்மை, தானே மலர்கிறது. இது காரணமாக வாழ்க்கைப் போராட்டத்துக்கே இடமில்லாமல் போய்விடுகிறது. வாழ்க்கையின் துன்ப அனுபவங்களெல்லாம் பரிணாம வழி மறைக்கின்றன. இவற்றை முற்றும் களைதல் இயலும். பரிணாமத்துக்கு இவை தேவையில்லை. இவை இல்லாவிட்டாலும், நாம் முன்னேற முடியும். தங்களை வெளிப்படுத்திக்கொள்வது பொருள்களின் இயற்கையேயாகும். பரிணாமம் அகத்தில் தோன்றுவது; புறத்தில் நிகழ்வது அன்று. ஒவ்வோர் ஆன்மாவும் பற்பல பிறவிகளில் கிடைத்த வாசனைகளின் (அனுபவங்களின்) கரு ஹூலமே ஆகும். இந்த அனுபவங்களுள் எவை ஏற்ற சூழ்நிலை காண்கின்றனவோ, அவை தாமே வெளிப்படும்.

வெளிப்பொருள்கள் இத்தகைய சூழ்நிலையைத்தான் தர இயலும். நாம் அனுபவிக்கும் போட்டிகளும், போராட்டங்களும், தீமைகளும் சுருக்கத்தின் பலனே, பரிணாமத்தின் காரணங்களோ அல்ல; பரிணாம வழி மறைத்து நிற்பனவே. இந்தப் போட்டியும், போராட்டமும், தீமையும் இல்லாமலே இருந்திருந்தாலும், மனிதன் முன்னேறிச் சென்று, முடிவில் இறைவனாய்விடுவான். உள்ளே இருக்கும் இறை மலர்தல் இயற்கை. என் கருத்துக்கு இந்த விளக்கமே நம்பிக்கை மிக்கதாகத் தோன்றுகிறது; போட்டி, போராட்டம் என்ற பயங்கரங்களைப் பரிணாம காரணமாக்குவதன்று. சரித்திரத்தை ஊன்றிப் படிக்கப் படிக்க இந்தப் போட்டிக் கொள்கை தவறு என்பது நன்றாக விளங்குகிறது. 'மனிதர்களுக்குள் போராட்டம் இருந்தாலன்றி, முன்னேற்றமே

இராது' என்பது சிலர் கொள்கை. நானும் அப்படியே ஒரு காலத்தில் நினைத்துவந்தேன். ஒவ்வொரு போரும் மனித சமூதாயத்தை முன்னேற்றுவதற்குப் பதிலாக ஐம்பது ஆண்டு பின்னுக்கி இழுத்துச் சென்றுவிட்டது என்பது காண்கிறேன். இப்போதைய கோணத்தை மாற்றி வேறு கோணத்திலிருந்து மக்கள் வரலாற்று நூலைப் படிக்கும் காலம் ஒன்று வரும். 'போட்டி என்பது பரிணுமத்துக்குக் காரணமும் அன்று; பரிணுமத்தின் காரியமும் (பலனும்) அன்று; பரிணுமத்தின் இடையே தோன்றும் ஒரு நிகழ்ச்சி; பரிணுமத்துக்கும் இதற்கும் ஒருவிதத் தொடர்பும் இல்லை,' என்பதை மக்கள் அப்போது தெரிந்துகொள்வார்கள்.

பதஞ்சலியாரின் பரிணுமக்கொள்கை ஒன்றே தருக்க அறிவுடைய மனிதன் ஒப்புக்கொள்ளக்கூடிய கொள்கை என்று நான் நினைக்கிறேன். இப்பொழுது நடைமுறையிலுள்ள 'போட்டி'க் கொள்கையினுல் எவ்வளவு தீங்கு நேருகிறது! அயோக்கியன் ஒவ்வொருவனும் அயோக்கியனுக இருப்பதை இது அதிகார பூர்வமாக அனுமதிக்கிறது. "குற்றவாளிகளை எல்லாம் அழித்து விடுவதுதான் குற்றத்தை ஒழிக்கும் வழி" என்று பௌதிக விஞ்ஞானிகள் சொல்வதை நான் இந்த நாட்டில் கேட்கிறேன். இந்தச் சூழ்நிலைகள் பரிணுமத்துக்குத் தடையாக இருக்கலாம்; ஆனுல், முன்னேற்றத்துக்கு இவை அவசியம் அல்ல. போட்டியைப் பற்றிய மோசமான உண்மை என்னவென்றுல், ஒருவன் போட்டியில் தன் சூழ்நிலைகளை வெல்கிருன் எனினும் இந்த முயற்சியில் பல்லாயிரம் பேரின் முன்னேற்றம் பாதிக்கப்படுகிறது என்பதே. எனவே, இதனுல் (போட்டியினுல்) விளைவது தீங்குதான். ஒருவருக்கு மட்டுமே முன்னேற்றம் அளித்துப் பலர் முன்னேற்றத்தைத் தடை செய்யும் எதுவும் நல்ல சாதனமாக இருக்க இயலாது. 'இந்தப் போராட்டங்கள் இருப்பதற்குக் காரணம் நம் அறியாமையே (அஞ்ஞானமே) ஆகும். இவை மனித முன்னேற்றம் அல்லது பரிணுமத்துக்குத் தேவை அன்று; இன்றியமையாதவையுமன்று' என்று பதஞ்சலி கூறுகிருர். பொறுமையின்மையே போட்டி தோன்றுதற்குக் காரணம். உழைத்து முன்னேறப் போதிய பொறுமை நமக்கு இருப்பதில்லை. எடுத்துக்காட்டாக: ஒரு நாடகக் கொட்டகையில் தீப்பற்றிக்கொண்டால் சிலரே

தப்பிப் பிழைக்கின்றனர். மற்றவரோ, போட்டி போட்டுக் கொண்டு வெளியே ஓட விரைவதால் ஒருவர்மேல் ஒருவர் விழுந்து மடிகின்றனர். இப்படி மேல் விழுந்து மடிவது நாடகக் கொட்டகையைக் காப்பாற்றவோ, உயிர்தப்பிய இரண்டொருவரைக் காப்பாற்றவோ, அவசியம் இல்லை. எல்லாருமே மெதுவாக, அவசரமில்லாமல் வெளியேறியிருந்தால், ஒருவருக்குக்கூடக் கேடு நேர்ந்திராது. வாழ்க்கையும் இத்தகையதே. முன்னேற்றக் கதவுகள் திறந்தேதான் இருக்கின்றன. போட்டியோ, போராட்டமோ இல்லாமலே நாம் இவற்றின் வழியே முன்னேற இயலும். என்றாலும், நாம் போராடுகிறோம்; போட்டியிடுகிறோம். இந்தப் போட்டியையும் போராட்டத்தையும் நாமே நம் அறியாமையினாலும் ஆத்திரத்தாலும், எல்லை மீறிய அவசரத்தாலும் ஏற்படுத்திக் கொள்கிறோம். ஆற்றலின் உயர்ந்த நிலை அமைதியாக நம் நிலை தவறாமல் இருப்பதுதான்.

18

பௌத்தமும் வேதாந்தமும்

வேதாந்த தத்துவமே பௌத்த மதத்தின் அடிப்படை. இந்திய நாட்டில் தோன்றிய ஒவ்வொன்றின் அடிப்படையும் இதுவே. ஆனால் இன்றைய தினம் 'அத்வைத தத்துவம்' என்று நாம் கூறும் ஒன்றில் பௌத்த சமயக் கொள்கைகள் பல உள்ளன. இந்துக்கள் இதை ஒப்புக் கொள்ள மாட்டார்கள். வைதிக இந்துக்கள் ஒப்புக் கொள்ளவே மாட்டார்கள். இவர்கள் கருத்துப்படி பௌத்தர்கள் சமயப் புரட்டர்கள்; நிரீசுவர வாதிகள்; நாத்திகர்கள். ஆயினும் நாத்திகமும் வேதாந்தத்தினுள் அடங்கும் வகையில் அதனை விரிக்கும் முயற்சி ஒன்றும் நடக்கிறது.

வேதாந்த தத்துவம் பௌத்த சமயத்துடன் பூசலிடுவது அன்று. எல்லாச் சமயங்களையும் ஒருங்கிணைப்பதே வேதாந்தத்தின் கருத்து. வடதிசைப் பௌத்தரோடு நமக்குப் பூசல் ஏதுமில்லை. ஆனால், பர்மியரும், சையாமியரும், தென் திசைப் பௌத்தரும் 'நிலையா உலகு' என்கின்றனர். இதன் பின்னே நிலைபேறான உலகமிருப்பதாகச் சொல்லும்

உரிமை நமக்கில்லை என்கின்றனர். இது பொய் என்பதே வேதாந்தம் அளிக்கும் பதில். நிலையா உலகு எனவும், நிலைபேறுன உலகு எனவும் ஈருலகு இருப்பதாக ஒரு போதும் வேதாந்தம் கூறவில்லை. உலகு ஒன்றே. புலன் வழி நோக்குங்கால் இவ்வுலகு நிலையற்றத்தாகத் தோன்று கிறது. ஆனுல் உண்மையில் இது நிலைபேறுனதே; என் றும் நிலையானது. பழுதையைக் காண்பவன் பாம்பைக் காண்பதில்லை. அது பழுதையாயிருக்க வேண்டும்; அல்லது பாம்பாயிருக்க வேண்டும்; இரண்டுமாக இருத்தல் இய லாது. எனவே நாம் ஈருலகு இருப்பதாக எண்ணுகிரேம் எனும் பௌத்தர் கூற்று பொய்யானது.

அவர்கள் வேண்டுமானுல் நிலையிலா உலகு என்று சொல்லிக் கொள்ளட்டும். அவ்வாறு கூறிக்கொள்ளும் உரிமை அவர்க்குண்டு. ஆனுல், நிலைபேறுனது உலகு என்று மற்றையோர் கூறலாகாது என்று சொல்லும் உரிமை அவர்க்கில்லை.

நிலையாமை யன்றி வேறு எதையும் பௌத்தர்கள் ஏற் பதில்லை. நிலையாமையில்தான் ஆசையிருக்கிறது; ஆசை தான் இவற்றை உற்பத்தி செய்கிறது.

இக்காலத்து வேதாந்திகள் இதை ஒப்புக் கொள்வ தில்லை. ஏதோ ஒன்று நம் சங்கற்பம் ஆய்விட்டது என்கி ரேம். எனவே, சங்கற்பம் என்பது எதனுலோ, உருவான ஓர் இரசாயனக் கலவை; 'தனிப்பொருள்' அன்று. வெளிப் பொருள் ஒன்று இல்லாமல், இது இல்லை. எனவே, சங்கற் பந்தான் இந்தப் பிரபஞ்சத்தைப் படைத்தது என்று இயம்பு வது பொருளற்ற பேச்சு. அது எப்படி இயலும்? வெளிப் பொ ருளின் தூண்டுதல் இல்லாத போது சங்கற்பம் ஏது? மனத்தில் சக்தி எழ வெளிப் பொருளின் தூண்டுதல் வேண்டும்; அல்லது இக்கால வேதாந்த பரிபாஷைப்படி 'நரம்புத் தூண்டுதல்' வேண்டும். சங்கற்பம் என்பது வெளித் தூண்டுதல் ஒன்றுக்கு மூளையில் ஏற்படும் பிரதிக்கிரியையே ஆகும்; இதந்த மூளை என்பதைதத்தான் சாங்கியர்கள் புத்தி என்கிருர்கள். பிரதிக்கிரியை ஏற்படுகிறது என்ருல், அதற்கு முன் கிரியை ஒன்று ஏற்பட்டிருக்க வேண்டும். கிரியை ஏற்பட வேண்டுமானுல், வெளிப் பிரபஞ்சம்

அவசியமாகிறது. எனவே, வெளிப் பிரபஞ்சம் இல்லை என்றால் சங்கற்பம் இல்லையாகும். ஆனால், உங்கள் கொள்கைப் படியோ சங்கற்பமே உலகப் படைப்புக்குக் காரணம். அப் படியானால், இந்த சங்கற்பத்தைப் படைத்தவர் யார்? வெளி உலகத்தை ஆதாரமாகக் கொண்டதே இது; ஒன்று இல்லை என்றால், மற்றொன்றும் இல்லை. எந்த சக்தியினால் வெளி உலகப் படைப்பு ஏற்பட்டதோ, அந்த சக்தி யினாலேதான் சங்கற்பமும் ஏற்பட்டது. ஆனால், வேதாந்தம் இங்கேயே நின்றுவிடக்கூடாது. சங்கற்பம் என்பது முற்றும் ஒருவரைப் பொருத்தது; எனவே, ஷோபனேரின் கொள் கையை நாம் பின்பற்ற இயலாது. சங்கற்பம் என்பது வெளி, உள் ஆகிய இரண்டும் சேர்ந்த ஓர் இரசாயனம் அல்லது கலவை. ஒரு மனிதன் புலன்களோ பொறிகளோ இல்லாமல் பிறப்பதாக வைத்துக் கொண்டால் அவனைப் பொருத்த மட்டும் சங்கற்பம் என்பதற்கே இடம் இல்லை. அது ஏற்படுவதற்கு வெளிப் பொருள் ஒன்று தேவைப்படு கிறது. இந்தத் தூண்டுதலினால் மூளையில் சங்கற்பத்தின் உணர்ச்சிகள் உண்டாக, மூளை உள்ளேயிருந்து (மனத்தி லிருந்து) சக்தியைப் பெறுகிறது. எனவே, சங்கற்பம் என் பது உள், வெளியாகிய இரண்டின் கலவை. ஒரு சுவரைப் போல. இதைப்பற்றிய ஜெர்மன் வேதாந்திகளின் கொள் கை நமக்கு உடன்பாடே அன்று. சங்கற்பம் என்பது ஒரு தூண்டுதலின் பிரதிக் கிரியையே; சார்புப் பொருளே; தனிப்பொருள் அன்று. ஆன்மாவின் பலவகை வெளித் தோற்றங்களில் சங்கற்பமும் ஒன்று. சங்கற்பம் அல்லாத ஏதோ ஒன்று இதுபோலத் தோற்றம் அளிக்கிறது. இது எனக்கு விளங்குகிறது. ஆனால், இந்த சங்கற்பமே பிரபஞ் சப் பொருளாகத் தோன்றுகிறது என்பது எனக்கு விளங்க வில்லை. பிரபஞ்சத்தின் தொடர்பை விலக்கிச் சங்கற்பம் என்பதைப் பற்றி நாம் எப்படிச் சிந்திக்க இயலும்? சுதந்திர மாய் தனிப்பொருளாய் இருக்கும் ஒன்று சங்கற்பமாக மாறும் போது இந்த மாறுதலுக்குக் காரணம் கால தேச வர்த்தமானமே ஆகும். கான்ந்த் என்னும் வேதாந்தி கூறுவதைக் கேளுங்கள். சங்கற்பம் என்பது கால, தேச, வர்த்தமானங்களுக்கு உட்பட்டது என்கிறார் அவர். அப்படி

யானல் அது எப்படிப் பரம்பொருள் ஆக இயலும்? சங்கற்பம் ஏற்படவேண்டுமானல், அது காலத்துக்குக் கட்டுப்பட்டுத்தானே ஆகவேண்டும்? அதாவது, சங்கற்பம் தோன்றும் காலம் ஒன்று உண்டல்லவா?

நம் மனத்தில் எண்ணங்களே தோன்ருதவாறு செய்ய நம்மால் இயலும் என்ருல், அந்த நிலையில் நாம் எண்ணங்களுக்கு அப்பாற்பட்டவர்கள் ஆகிருேம். இந்த முடிவு நமக்குக் கிடைப்பது, தோற்றங்களின் விலக்கால். தோற்றங்கள் எல்லாவற்றையுமே ஒவ்வொன்ருக, 'இஃது அன்று; இஃது அன்று' என்று விலக்கிக்கொண்டே வந்தோமானல், முடிவில் மிஞ்சுவது எதுவோ, அதுதான் இது. இது சொல் செயல் எல்லாவற்றுக்கும் அப்பாற்பட்டது; இவற்றுக்குக் கட்டுப்பட்டால் இது மறுபடியும் சங்கற்பம் ஆகிவிடும்.

19

வேதாந்த தத்துவம்

மனிதன் பிறப்பதுமில்லை; இறப்பதுமில்லை; சுவர்க்கம் செல்வதும் இல்லை. ஆன்மாவைப் பொருத்தமட்டிலும் மீண்டும் பிறத்தல் பொய். இது வேதாந்தியின் கொள்கை. ஒருவன் புத்தகத்தின் ஏட்டைத் திருப்புகிருன். முன்னேறிச் செல்வன புத்தகங்களின் பக்கங்களே; ஏட்டைத் திருப்பும் மனிதன் அல்லன். ஆன்மா எங்கும் நிறைந்தது; எனவே, அதற்குப் போக்கு எங்கே? வரவு எங்கே? பிறப்பு, இறப்பு என்பனவெல்லாம் பிரகிருதியில் ஏற்படும் மாறுதல்கள். இவை நமக்குள் ஏற்படுவன என்று நாம் தவருக நினைக்கிருேம்.

மறுபிறப்பென்பது இயற்கையின் பரிணமம்; உள்ளே இருக்கும் இறைவனது வெளித்தோற்றம்.

'ஒவ்வொரு பிறவியும் அதன் முற்பிறவி வினைகளை அடிப்படையாகக்கொண்டது; எனவே, முன் பிறவிகளை எல்லாம் காண இயலுமானல், நமக்கு விடுதலை கிடைத்துவிடும்' என்று வேதாந்தம் விளம்புகிறது. விடுதலை பெறவேண்டும் என்னும் விருப்பம் குழவிப் பருவத்திலிருந்தே சமயநோக்கமாக உருப்பெறுகிறது. சில ஆண்டுகளில் எல்லா உண்மை

களுமே ஒருவனுக்கு விளங்கிவிடும். இந்தப் பிறவி நீங்கிய ஒருவன் மறுபிறவிக்காகக் காத்திருக்கும் போது நிலையிலாத் தோற்ற உலகத்திலேதான் இருக்கிறுன்.

ஆன்மாவைப் பற்றிப் பின்வருமாறு கூறலாம்: இது கத்திகொண்டு வெட்ட இயலாதது; ஈட்டிகொண்டு குத்த இயலாதது; நெருப்பால் எரிக்க இயலாதது; நீரால் நனைக்க இயலாதது; அழிக்க முடியாதது; எங்கும் நிறைந்தது. எனவே, இது அழிந்துவிட்டது என்று தவருக எண்ணி யாரும் அழவேண்டாம். துன்பம் மிக்கபோது, நல்ல காலம் வரும் என்று நாம் நம்புகிறேம். அழிவற்ற விடுதலை எல்லாருக்கும் உண்டு என்பதே அடிப்படைத் தத்துவம் ஆகும். எல்லாருக்கும் அது கிடைத்தே தீரவேண்டும். விடுதலை பெறவேண்டும் என்ற விருப்பத்தால் தூண்டப்பட்டு நாம் போராடியே தீரவேண்டும்; விடுதலை பெறவேண்டும் என்ற விருப்பம் ஒழிந்த மற்ற எல்லாம் கானல் நீரே. புண்ணியச் செயல் ஒவ்வொன்றும் இந்த விடுதலையின் தோற்றமே என்று வேதாந்தி சொல்கிறுன்.

உலகத்தில் பாவமே இல்லாமல் மறையும் காலம் ஒன்று வரும் என்பதை நான் நம்பவில்லை. அது எப்படி இயலும்? பிறப்பு, இறப்பு, பாவம், புண்ணியம் என்ற இந்த ஆறு ஓடிய வண்ணமாய் இருக்கிறது. ஒரு முனை வழியே நீர் பெருகி வெளிச்செல்கிறது; மற்ருெரு முனைவழியே பெருகி உள்ளே புகுந்தவண்ணம் இருக்கிறது. 'புண்ணியம், பாவம் இரண்டுக்கும் அப்பாற்பட்ட நிலை ஒன்று இருக்கிறது; அது தான் உனது தன்மை; தூய்மையும் நிறைவுமே உன்னுடைய இயல்புகள்' என்று வேதாந்தம் விளம்புகிறது. இந்த நிலை புண்ணியத்தைவிட உயர்ந்தது. புண்ணியம் என்பது பாவம் போன்றதுதான்; பிரித்துவைக்கும் தன்மையில் பாவத்தினும் சக்தி குறைந்தது; அவ்வளவுதான்.

பாவம் உண்டு என்பதே நம் கொள்கையன்று. பாவத்தை நாம் அஞ்ஞானம் என்கிறேம். விவகாரம், நல்லொழுக்கம் ஆகிய எல்லாம் தோற்ற அளவில் காணப்படும் பிரபஞ்சத்துக்கே பொருந்தும். உண்மையைக் குறைவறச் சொல்லும்போது அஞ்ஞானம் போன்ற குறைபாடுகளை இறைவனுக்கு நாம் என்றும் ஏற்றமாட்டோம். இறைவனைப்

பற்றிச் சொல்லும்போது சத்து, சித்து, ஆனந்தம் என்றே சொல்கிறோம். இறைவனைப் பற்றி நினைக்க முயன்றாலும், பேசமுயன்றாலும், அவன் புலனறி பொருளாகிவிடுவான்; அவன் தன்மையே மாறிவிடும்.

ஒரு கருத்தை நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும்: 'நானே இறைவன்' என்று உறுதி கூறும்போது புலன் உலகத்தைப் பற்றியதாக அது இருத்தல்கூடாது. புலன் உலகத்தில் இருக்கும்போது, 'நான் கடவுள்' என்றால், நீங்கள் பாவம் செய்வதற்குத் தடையாக எது நிற்கும்? எனவே, 'நான் கடவுள்' என்பது நிலைபேறான உலகத்தைப் பற்றியதே ஆகும். நான் இறைவனானால் புலன்களுக்குப் புறம்பாவேன்; எனவே பாவம் செய்யமாட்டேன். மனிதனின் முடிவான லட்சியம் நல்லொழுக்கம் அன்று; விடுதலை பெறுவதற்கு உரிய சாதனம் நல்லொழுக்கம். இறையுணர்வு பெறுதற்கு யோகம் ஒரு வழி என்று வேதாந்தம் விளம்புகிறது.

அகத்தாற் பெறும் விடுதலை உணர்வாலேயே இது சாத்தியமாகும். இந்த அனுபவத்துக்கு முன் எல்லாத் தடைகளும் விலகிவிடும் என்று வேதாந்தம் விளம்புகிறது.

அத்வைத தத்துவ கண்டனங்களை எல்லாம் தொகுத்துச் சொன்னால், அது இதுதான்: அத்வைத தத்துவத்தில் புலன் இன்பங்களுக்கு இடமில்லை என்பதே. இதை நாங்கள் மகிழ்ச்சியுடன் ஒப்புக்கொள்கிறோம்.

வேதாந்த முறை பெரும் சம்சய வாதத்தில் தொடங்குகிறது; ஆனால், சர்வானுகூல வாதத்தில் முடிகிறது. புலன் வழிபட்ட இன்ப நம்பிக்கைகளை நாம் மறுக்கிறோம்; ஆனால், புலன்களுக்கு அப்பாற்பட்ட அழிவற்ற பேரின்ப அனுபவத்தை ஒப்புக்கொள்கிறோம். உண்மை இன்பம் புலன்வழி வருவது அன்று; புலன்களுக்கு அப்பாற்பட்டது. அந்தப் பேரின்பம் ஒவ்வொருவனுள்ளும் இருக்கிறது. உலகத்தில் நாம் காணும் புலன்வழி இன்ப நிறைவுகள் நம்மை ஆசையில் சிக்கவைத்து அழிவு வழிக்கே அழைத்துச் செல்லும்.

துறவு நம் தத்துவத்தில் முக்கிய இடம் பெற்றுள்ளது. உலகத்துறவு ஆன்மாவின் உண்மையை நிலைநிறுத்துகிறது.

புலன் உலகினைப் பொருத்தமட்டில் வேதாந்தம் சந்தேகத்துடன் கூடியது; நம்பிக்கையற்றது. ஆனல், உண்மை உலகமாகிய பேரின்பத்தில் உறுதியான நம்பிக்கையுடையது.

மனிதனது அறிவுத்திறமை அல்லது வாதத்திறமைக்கு வேதாந்தம் பெருமதிப்பு அளிக்கிறது; ஆனலும், அறிவுக்கும் அப்பாற்பட்ட சிறந்த ஒன்று இருக்கிறது என்கிறது அது. ஆன்மசாக்ஷாத்காரம் அறிவின் வழியதே என்பதையும் அது ஒப்புக்கொள்கிறது.

பழைய மூடக்கொள்கைகளை எல்லாம் விரட்டியடிக்க நமக்கு வாதத்திறமை தேவைதான். இவைகளை விரட்டிய பிறகு நிற்பது வேதாந்தமே. அழகான வடமொழிக் கவிதை ஒன்றன் மூலம் ஒரு முனிவர் பின் வருமாறு கூறுகிருர்: "நண்பனே! நீ ஏன் அழுகிருய்? உனக்கு அச்சம் ஏதும் இல்லை; சாவும் இல்லை; பின்பு நீ ஏன் அழுகிருய்? உனக்கு எந்த விதமான துக்கமும் இல்லை. மாசற்று அகன்ற நீல வான் போன்றவன் நீ; எந்த வகையான மாறுதலும் உனக்கு இல்லை. பல வண்ண முகில்களும் எதிரே வந்து ஒருகண நேரம் விளையாடிவிட்டுப் போகின்றன. வானம் மாறுவதே இல்லை; மேகங்களைத் துரத்துவது மட்டுமே உன் வேலை.

வாயிற் கதவு திறந்து வழி சீராக்கவேண்டும். அவ்வளவுதான். தண்ணீர் தானுக உள்ளே வந்து நிரம்பிவிடும்; ஏற்கனவே அது அங்கே உள்ளது.

மனிதன் விழிப்பு நிலை பெரிதும் உடையவன். விழிப்பற்ற நிலை குறைவு; இந்த விழிப்புக்கும் அப்பாற்பட்ட ஒரு நிலை அடைதலும் அவனல் இயலும். நிறை மனிதனுகும் போது தான் அறிவையும் கடந்த நிலைக்குப் போக இயலும். உயர்வு, தாழ்வு என்னும் சொற்களுக்கு இந்த நிலையற்ற பிரபஞ்சத்திலேதான் பொருள் உண்டு. நிலையான உண்மை உலகில் அவற்றுக்குப் பொருளே இல்லை; அங்கே எந்த வகை வேறுபாட்டுக்குமே இடமில்லை. நிலையாத இவ்வுலகில் மனிதத்தோற்றமே உயர்ந்த படைப்பாகும். தான் தேவர்களிலும் உயர்ந்தவன் என்றே வேதாந்தி சாற்றுகிருன். தேவர்களும் மரித்தற்குரியரே; பின்னர் மனிதராய் பிறத்தற்குரியர்: மனிதவுடலில்தான் நிறைவுபெறுவர்.

நாம் ஏதோ ஒரு கொள்கையை—சமயமுறையை—ஆக்குகிறோம் என்பது உண்மைதான். ஆனால், அந்த முறை நிறைவன்று என்பதை நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்; உண்மை அல்லது நிறைவு எந்த முறைக்கும் கட்டுப்பட்டது அன்று. இந்த முறையை — வேதாந்த முறையை—மற்றச் சமயமுறைகளோடு ஒப்பிட்டு இது ஒன்றே பகுத்தறிவுக்கு ஏற்ற முறை என்று காட்ட நம்மால் இயலும் என்றாலும், இது குறைவற்ற முறையன்று. மனிதன் மனத்தால் சிந்திக்கக் கூடிய முறைகள் எல்லாவற்றுள்ளும் சிறந்தது இது என்பது மட்டும் உண்மை.

ஒரு சமயமுறை ஆற்றல் மிக்கது ஆகவேண்டுமானால், அது பலரிடையே பரவவேண்டும் என்பது ஓரளவுஉண்மை. வேதாந்த முறைபோல் பெரிதும் பரவிய சமய முறை எதுவுமே இல்லை. இன்றுங்கூட, குரு சீடர் முறையே இதனை உபதேசிக்கும் சாதனமாய் இருக்கிறது. ஏராளமாகப் படிப்பதனால் மட்டும் ஒருவன் மனிதன் ஆகான். உண்மையான மனிதத் தன்மை பெற்றவர் அப்படி ஆனதற்குக் காரணம் குருசீடர் உறவே. இத்தகைய உண்மை மாந்தர் மிகச் சிலரே உள்ளனர் என்பது உண்மை; ஆனால், இவர் தம் தொகை பெருகியே தீரும். நாம் எல்லாரும் ஒரு நாள் வேதாந்திகள் ஆகிவிடுவோம் என்பதை நம்ப இயலவில்லை. இன்பமே நிறைந்து துன்பமே இல்லாத காலம் ஒன்று வரும் என்பதையும் நம்ப இயலவில்லை.

எப்போதாவது ஒரு கணம் பேரானந்த அனுபவம் நமக்குக் கிடைக்கிறது; அப்பொழுது நாம் எதையும் கேட்பதும் இல்லை; கொடுப்பதும் இல்லை; ஆனந்தானுபவம் தவிர வேறு எதற்கும் அப்போது இடம் இல்லை. இந்தக் கணத்துக்குப் பிறகு இந்த அனுபவம் மறைந்து, மீண்டும் பிரபஞ்சம் நம்முன் இயங்கத் தொடங்குகிறது. இந்த இயக்கம், எல்லாவற்றுக்கும் நிலைக்களமான இறையின் மேற்பரப்பில் தோன்றும் சித்திரம் என்பது நமக்குத் தெரியும்.

நிர்வாணம் அல்லது மோட்சம் என்ற அனுபவத்தை இங்கேயே, இப்பொழுதே, ஒவ்வொருவரும் பெறமுடியும். இந்த அனுபவம் மரணத்தின் பின்புதான் கிடைக்கும் என்று நினைப்பது தவறு. ஆன்மானுபூதி பெறுவதே நிர்வாணம்

அல்லது மோட்சம். ஒரு முறை—ஒரு நொடி நேரமானுலும் சரி—இந்த அனுபவம் பெற்றவர் மீண்டும் மாயையால் ஏமாறவே மாட்டார். புலனுகிய கண் அறிவு இருக்கும்வரையில் தோற்றப் பிரபஞ்சத்தைப் பார்த்தே தீரவேண்டும்; ஆனுல், இது வெறுந் தோற்றந்தான் என்ற இதன் உண்மைத் தன்மை நமக்குத் தெரியும். எந்தவகை மாறுதலும் இல்லாத ஆன்மாவை மறைத்து நிற்பது மாயை என்னும் திரைதான். திரை விலகியவுடன் அதற்குப் பின்னுள்ள ஆன்மாவின் தரிசனம் நமக்குக் கிடைக்கிறது. மாறுதல்களுக்கெல்லாம் காரணம் திரைதான். ஞானியின் மாயைத் திரை மிக மெல்லிதாய் இருக்கிறது; உண்மை ஒளி இதன் மூலம் தெரிகிறது. பாவியின் மாயைத் திரையோ, தடிப்பானது; அதற்குப் பின்புறம் ஆன்மா என்னும் உண்மை (ஞானியின் திரைக்குப் பின் இருப்பதுபோலவே) ஒளியிருக்கிறது என்ற நினைப்பே இல்லாமற் செய்துவிடும் அளவுக்கு இதன் தடிப்பு இருக்கிறது. இந்தத் திரை முற்றும் விலகிய பிறகுதான் உண்மையுணர்கிரேும். நாம் என்றும் ஆன்மாவாகவேதான் இருந்தோம்; எவ்வகை மாறுதலும் நமக்கில்லே, என்ற அனுபவம் ஏற்படுகிறது. திரையை மறந்து விடுகிரேும்.

'வாழ்வில் ஆன்மானுவம் ஏற்படுவதன் பலன் இரண்டு; முதலாவது உண்மை ஆன்மானுபவம் பெற்றவன் எதனுலும் சலனம் அடைய மாட்டான். இரண்டாவது, இத்தகைய ஜீவன் முத்தனே உண்மையில் இவ்வையத்திற்கு நன்மை செய்ய வல்லவன். மற்றவர்களுக்கு நன்மை செய்வதன் உண்மைக் காரணத்தை இவனே அறிய வல்லவன்; பிறிது ஒன்று இல்லே இருப்பது ஒன்றே என்பதை இவன் அறிவான். இதை அகங்காரம் என்று சொல்லலாகாது. ஆன்மா அல்லாத மற்ருென்று இருப்பதாக நினைப்பது பேதம் கற்பிப்பதாக முடியும். உலகம் முழுவதையும் வேற்றுமையற்ற ஒன்ருகக் காண்பதுதான் உண்மைத் தன்னல மறுப்பு ஆகும். அன்புப் பணி ஒவ்வொன்றும் இரக்கச் செயல் ஒவ்வொன்றும் இவ்வொருமையை வற்புறுத்துவன. "நான் அல்லேன்; ஆனுல், நீயே" "அவன் உன்னிலும் நீ அவனிலும் இருப்பதால், மற்றவனுக்கு உதவுவது உனக்கே உதவுவது ஆகும்"

என்பதுவே உதவியின் வேதாந்த விளக்கம். வேதாந்தியே சற்றும் துயரின்றித் தன் உயிரைப் பிறருக்குக் கொடுப்பான் ; காரணம் தனக்குச் சாவு இல்லை என்ற உண்மையை இவன் அனுபவத்தில் அறிந்தவனாய் இருப்பதுதான். இந்த உலகத்தில் ஒரு சிறு பூச்சி உயிரோடிருக்கும்வரை, இவனும் உயிரோடிருக்கிறான் ; ஒருவனுக்குச் சோறு கிடைத்தால், இவனுக்கும் சோறு கிடைக்கிறது. எனவே, இவன் வாழ்க்கை பிறருக்குச் சேவை செய்வதிலேயே கழிகிறது.

தன் உடலைக் கவனித்துக்கொள்ள வேண்டும் என்ற இன்றைய உலக எண்ணம் அவனுக்குத் தோன்றுவதில்லை. இத்தகைய தன் மறுப்பு ஒருவனுக்கு வந்துவிடுமானால், அவன் நன்னெறிக்கும் தூய்மையான ஒழுக்கங்களுக்கும் அப்பாற்பட்டவனாகிறான். எல்லாவற்றுக்குமே அப்பாற்பட்டவனாகிறான். பண்டிதன், பசு, நாய், துன்பம் நிறைந்த இடங்கள் இங்கெல்லாம் அவன் மேற்சொன்னவற்றைக் காண்பதில்லை ; எல்லாவற்றுள்ளும், இறைவனைக் காண்கிறான். இத்தகைய காட்சி பெற்றவனே ஆனந்தானுபவம் பெற்றவன். இந்தப் பொது நோக்குப் பெற்றவன் இந்தப் பிறவியிலேயே பிறப்பற்றவன் ஆகிவிடுகிறான். இறைவன் கலப்பற்ற தூயவன் ; எனவே, இத்தகைய தூய காட்சியுடையவன் இறைவனுக்குள் உறைகிறான், அல்லது இறைவனோடு இரண்டறக் கலந்து விட்டான் என்று சொல்கிறோம். “ஆபிரகாமுக்கு முன்னமே நான் இருக்கிறேன்” என்கிறார் இயேசுநாதர். “இயேசுநாதரும் அவரைப் போன்ற ஞானிகளும் விடுதலை பெற்ற ஆன்மாக்கள். நாசரேத்தில் பிறந்த இயேசுநாதர் மனித உருவெடுத்தது தம் கரும பலனின் கட்டாயத்தினால் அன்று ; மக்களுக்கு நன்மை செய்யவேண்டும் என்பதற்காகவே” என்பதுவே இதன் பொருள். ஒருவன் விடுதலை அல்லது மோட்சம் பெற்றுவிட்டான் என்றால், அவன் எல்லா இயக்கத்தையும் இழந்து வெறுங் கல்லாகி விட்டான் என்பது பொருள் அன்று ; மற்ற எந்த உயிரையும் விட இயக்கம் மிக்கவனாய் இருப்பான் என்பதேயாகும். மற்ற உயிர்களெல்லாம் கருமம் என்ற கட்டுப்பட்டுக்கு உட்பட்டே இயங்குகின்றன ; ஆனால், விடுதலை பெற்றவனோ, சுதந்திரனாய் இயங்குகிறான்.

இறைவனோடு நாம் இரண்டறக் கலந்திருக்கிறோம் என்றால், நமக்கு ஒரு தனித்தன்மையே இல்லையா? கட்டாயம் உண்டு; அதுதான் கடவுள் நிலை. அது தான் இறைமை. இப்பொழுது உங்களுக்கிருக்கும் தனித்தன்மை அன்று அது; நீங்கள் அத்தன்மை நோக்கியே போய்க்கொண்டிருக்கிறீர்கள். தனித்தன்மை என்பதன் பொருள், பிரிக்க முடியாத தன்மை என்பது தான். இப்போதைய உங்கள் தன்மையை—மனித உடலோடு கூடிய தன்மையைப்பிரிக்க முடியாத—வேற்றுமை காணமுடியாத—தன்மை என்று எப்படிக் கூற இயலும்? இப்போது ஒன்றை நினைக்கிறீர்கள்; அடுத்த நேரம் வேறொன்று சிந்திக்கிறீர்கள்; அதற்கடுத்த நேரம் இன்னொன்று சிந்திக்கிறீர்கள். இப்படி நீங்கள் மாறிக்கொண்டே—விகாரப்பட்டுக் கொண்டே—இருக்கிறீர்கள். மாறுதல் எதுவுமே—விகாரம் எதுவுமே—இல்லாததுதான் தனித்தன்மை.

தனித்தன்மை என்பது எல்லாவற்றுக்கும் அப்பாற்பட்டது;மாறுதலே இல்லாதது. உடலோடும் மனத்தோடும் கூடிய தனித்தன்மை, நிலையாய் இருந்து விடுவது மிகவும் அபாயகரமானது! திருடன், அப்போது என்றும் திருடனாகவே இருப்பான்! அயோக்கியன், அயோக்கியனாகவே இருப்பான்! குழந்தை ஒன்று இறந்தால், அதன் ஆன்மா குழந்தையாகவே இருக்கும். உண்மையான தனித்தன்மை என்பது எந்த விதமான மாறுதலுக்கும் உட்படாது என்றும் ஒரே நிலையில் இருப்பதே ஆகும். இதுவே நம்முள் உள்ள இறை.

வேதாந்தம் என்பது மிகப் பெரிய கடல்; இதன் மேல்பரப்பில் ஒரு சிறு கட்டுமரத்துக்குப் பக்கத்தில் போர்க் கப்பல் ஒன்றும் இருக்க இயலும். வேதாந்தக் கடலிலும் உண்மையான யோகி ஒருவன் உருவ வழிபாடு செய்யும் ஒருவன் பக்கத்திலோ, அல்லது நாத்திகன் ஒருவன் பக்கத்திலோ இருக்க இயலும். வேதாந்தக் கடலில் இந்து, முஸ்லிம், கிறிஸ்தவன், பார்ஸி ஆகிய எல்லாரும் ஒருவரே; எல்லாரும் எல்லாம் வல்ல இறைவனின் மக்களே.

20

சட்டமும் சுதந்திரமும்

விடுதலை பெற்ற மனிதனுக்குப் போராட்டம் என்பது பொருளற்ற ஒன்று. ஆனால், நம்மைப் பொருத்தவரை அது பொருள் பொதிந்த ஒன்று. ஏன் எனில் நாமமும் ரூபமுமே பிரபஞ்சத் தோற்றத்தின் காரணம்!

வேதாந்தத்தில் போராட்டத்துக்கு இடம் உண்டு; அச்சத்திற்கு இடம் இல்லை. உங்களது இயல்பான தன்மையை வலியுறுத்தும்போது அச்சமெல்லாம் மறைந்து விடும். நீங்கள் கட்டுண்டிருப்பதாக எண்ணினால், கட்டுண்டவர்களாகவே இருப்பீர்கள். நீங்கள் விடுதலை பெற்றவர்கள் என்று எண்ணினால் விடுதலை பெற்றவர்களாகவே விளங்குவீர்கள். இந்தத் தோற்றப் பிரபஞ்சத்தில் இருக்கும் போது நாம் அனுபவிக்கும் ஓரளவு சுதந்திரம் உண்மைச் சுதந்திரத்தின் ஒரு கோடியே; உண்மைச் சுதந்தரம் அன்று.

இயற்கை விதிகளுக்குக் கட்டுப்படுவதே சுதந்திரம் என்ற கருத்தை நான் ஏற்கமாட்டேன். அது எதைக் குறிப்பிடுகிறது என்பதே எனக்கு விளங்கவில்லை. இயற்கை விதிகளை மீறுவதன் மூலமே மனிதகுலம் வளர்ச்சி பெற்றுள்ளது என்பது மனிதகுல வரலாறு அறிவிக்கும் ஒன்று. உயர் விதிகளைக் கடைப்பிடிப்பதன் மூலம் இழிந்த விதிகளை வெற்றிகாணல் முடிந்தது எனலாம். அப்போதும் என்ன? வெற்றிகாண விரும்பும் மனம் விடுதலை பெறவே முயன்றது. இயற்கை விதிகளை மீறும் போராட்டமூலமே விடுதலை கிட்டும் என்பதறிந்த உடனே அவ்வியற்கை விதிகளை வெற்றி காண விரும்பியது. எனவே விடுதலையே லட்சியம். மரங்கள் இயற்கைவிதி மீறுவதில்லை; பசு திருடுவதில்லை; சிப்பி பொய் சொல்வதில்லை. இவ்விதமிருந்தும் அவை மனிதனை விட உயர்ந்தன அல்ல. பன்மடங்கு உறுதியுடன் விடுதலையை வலியுறுத்துவதே இவ்வாழ்க்கை.

இயற்கை விதிகளுக்கு அடங்கி நடத்தலைப் பெரிதும் வலியுறுத்தினால் சமூகத்திலும் சரி, அரசியலிலும் சரி, மதத்திலும் சரி, நாம் வெறும் பொருளாவோம். அளவுக்கு மீறிய சட்டம் அழிவின் அறிகுறி. எந்த சமூகத்திலே சட்டம்

ஏராளமாக உள்ளதோ அந்த சமூகம் அழிவது உறுதி. இந்தியாவின் தன்மையை ஆராய்ந்தால் இந்துக்களைக் கட்டுப்படுத்துவன போன்ற அவ்வளவு சட்டங்கள் வேறு எந்த நாட்டிலுமில்லை என்பது காண்பீர். இதன் விளைவு என்ன? சமுதாய அழிவு. இந்துக்களிடம் இருந்த விசேஷம் என்னவென்றால் மதத்தில் வெறியில்லை; குரங்குப் பிடிவாதமில்லை. எனவே பெரிதும் வளர்ந்தது. சாசுவத நியதி சுதந்திரமாகாது; சாசுவதமானது நியதிக்குட்பட்டது என்பதே அதை வரையறுப்பதாகும்.

இறைவரைப் பொருத்த மட்டும் அவருக்கு எந்தவிதமான சங்கற்பமும் இல்லை. அவருக்கும் சங்கற்பம்—தொழில் முயற்சி—இருக்குமானால், மனிதனைவிட அவர் எந்த விதத்திலும் உயர்ந்தவர் ஆகமாட்டார். அவருக்குச் சங்கற்பம் எதற்கு? சங்கற்பம் இருக்குமானால், அது அவரைப் பந்தப்படுத்திவிடும். அந்த நிலையில் அவரைவிடப் பெரிய ஒன்று இருப்பதாகிவிடும். ஜமக்காளம் தயாரிப்பவன் ஒரு ஜமக்காளம் நெய்கிறான். ஜமக்காள நெசவு என்ற அந்த சங்கற்பம் அவனுக்கு வெளியே இருந்தது; இது அவனைவிடப் பெரியது. இதுபோல எந்தக் கருத்துக்குக் கடவுள் தம்மைக் கட்டுப்படுத்திக்கொள்ள வேண்டும்? மிகப் பெரிய சக்கரவர்த்திகளும் சில சமயம் பொம்மையை வைத்து விளையாடுவதுபோல், இறைவரும் இந்தப் பிரகிருதியோடு விளையாடுகிறார்; இந்த விளையாட்டையே நாம் இயற்கைவிதி என்கிறோம். ஒன்றோடொன்று இணைந்து சமரசமாய் இயங்கும் சிறு அமிசங்களையே நாம் காண்பதால், நாம் இதை விதி என்கிறோம். பிரகிருதிச் சட்டம் என்ற நம் கருத்து முழுவதும் இந்தச் சிறு அம்சத்துள் அடங்கிவிடுகிறது. 'இந்தச் சட்டம் முடிவில்லாதது; எந்தக் காலத்திலும் மேலே எறிந்த கல் கீழே விழத்தான் விழும்' என்று சொல்வது மடத்தனம். வாதத்தின் முடிவுகளுக்கெல்லாம் அனுபவந்தான் ஆதாரம் என்றால், ஐம்பது லட்சம் ஆண்டுகளுக்கு முன் மேலே எறிந்த கல், கீழேதான் விழுந்தது என்பதைக் கண்டவர் யார் இப்போது உயிரோடு இருக்கிறார்? சாட்சி சொல்ல? சட்டத்துக்குக் கட்டுப்படுவது மனித இயற்கை அன்று. உண்மையில் சிறிது சிறிதாக நாம் சட்டம் அல்லது கட்டுப்பாட்டிலிருந்து விடுபட்டுக் கொண்டே வருகிறோம்; முற்றும்

விடுபடும்வரையில் இந்த முயற்சி நடைபெறுகிறது; இப்படி விடுபட்ட நிலையும் ஒரு முழு வாழ்க்கையின் அனுபவமும் நம்மோடு இணைந்துவிடுகின்றன. இறைவர், விடுதலை என்ற இடமே நாம் தோன்றிய இடம்; எனவே நம் ஒடுக்கம் அல்லது மறைவும் இறைவர், விடுதலை என்ற இடமே ஆகும். தோற்றத்துக்கும் ஒடுக்கத்துக்கும் இடையேயுள்ள இயக்கம் அல்லது போக்கிலேதான் இந்தச் சட்டங்கள் எல்லாம் அமையும் என்றும், சுதந்திரம் என்பதில் கட்டுப் பாடே இல்லை என்றும் வேதாந்தம் திண்ணமாகக் கூறுகிறது. சட்டம் அல்லது கட்டுப்பாடு என்ற கருத்தே வேதாந்திக்கு அச்சம் உண்டாக்கிவிடும். என்றுமுள்ள — அழியாத — சட்டம் என்ற பேச்சை அவனால் சகிக்கவே இயலாது; இது உண்மையானால், இதனின்றும் விலகி விடுதலை பெறவே இயலாதே! எப்போதும் ஒரு சட்டம் அவனைக் கட்டுப் படுத்திக்கொண்டே இருக்கும் என்றால், அவனுக்கும் புல்லுக் கும் உள்ள வேற்றுமை என்ன? இயற்கை விதி என்ற கருத்தை வேதாந்தி நம்புவதில்லை.

நாம் தேடவேண்டுவது விடுதலை என்றே நாம் கூறுகி றோம்; இந்த விடுதலையே இறை. இறை இன்பமும் மற்ற இன்பம் போன்றதுதான்; எல்லையுள்ள ஒரு பொருளிட மிருந்து இந்த இன்பத்தைப் பெற விரும்பினாலோ, அது உண்மை இன்பத்தின் ஒரு பொறியாகவே இருக்கிறது. ஒரு திருடன், தன் தொழில் செய்யும்போது எவ்வித இன்பம் பெறு கின்றானோ அதே இன்பத்தை இறைவரை அடையும் ஒரு வனும் பெறுகிறான். ஆனால், திருடனோ, உண்மையின்பத் தின் ஒரு பொறியும் மிகுந்த துன்பமும் பெறுகிறான். உண்மையான ஆனந்தம் இறைவரே. அன்பே கடவுள்; சுதந்திரமே கடவுள்; பந்தத்துக்கு உட்பட்ட எதுவும் கடவுள் அன்று.

மனிதன் என்றும் சுதந்திரமாகவே இருக்கிறான்; இதை அவன் அறியவேண்டும்; மறந்துவிடுகிறான். அறிந்தோ, அறி யாமலோ, ஒவ்வொருவனும் தான் சுதந்திரன் என்ற உண் மையைக் கண்டுபிடிக்கும் முயற்சியே வாழ்க்கை. ஞானிக் கும், அஞ்ஞானிக்கும் உள்ள வேற்றுமை இதுதான்: முன்ன வர் தாம் அறிந்தே இந்த முயற்சியில் ஈடுபடுகிறார்; பின்னவர்

அறியாமலே செய்கிறுர். அணுமுதல் நட்சத்திரம்வரைஉள்ள எல்லாப் பொருள்களும் விடுதலைக்காகவே போராடுகின்றன. ஓர் எல்லைக்குள்ளடங்கிய சுதந்திரம் பெற்ருலும் திருப்தி அடைகிருன் அஞ்ஞானி; பசி, தாகம் இவற்றிலிருந்து விடுதலை கிடைத்துவிட்டால் போதுமென்கிருன். ஆனுல், முனிவரோ வலிய பந்தத்திலிருந்தே விடுபடவேண்டும் என்பதை உணர்கிருர்; சிவப்பு இந்தியர் அனுபவிக்கும் சுதந்திரத்தை ஒரு சுதந்திரமாகவே அவர் நினைப்பதில்லை.

நமது சமயாசாரியர்களின் கொள்கைப்படி விடுதலை பெறுவதே வாழ்க்கை லட்சியம்; அறிவு அன்று; அறிவு ஒரு கலவை. சுதந்திரமும் திறனும் சேர்ந்த கலவை அது. விரும்பத்தக்கது சுதந்திரம் ஒன்றே. இதன் பொருட்டே மக்கள் போராடுகிருர்கள். திறன் மட்டும் ஞானம் ஆகாது. மின்சார அதிர்ச்சியைச் சில மைல் தூரம் செலுத்துகிருன் விஞ்ஞானி. ஆனுல், இயற்கை இதைச் செலுத்தும் தூரத்துக்கோ, எல்லையே இல்லை. இயற்கைக்கு ஏன் நினைவுச் சிலை எழுப்புவதில்லை? நாம் விரும்புவது சட்டம் அல்லது கட்டுப்பாடு அன்று. சட்டம் அல்லது கட்டுப்பாட்டை உடைக்கும் சக்தியே. நீங்கள் சட்டங்களுக்குக் கட்டுப்பட்டிருந்தால், உங்களுக்கும் களிமண் கட்டிக்கும் பேதம் ஒன்றுமில்லை. நீங்கள் சட்டத்துக்கு அப்பாற்பட்டவர்களா அல்லவா என்பது பிரச்னை அன்று. நாம் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டவர்கள் என்ற எண்ணமே முக்கியம்; மனித வரலாற்றின் அடிப்படையே இந்த எண்ணந்தான். உதாரணமாக, ஒரு மனிதன் காட்டில் வாழ்கிருன். அவனுக்கு எந்தவிதமான படிப்பும் இல்லை; விஷய ஞானமும் இல்லை. கல் ஒன்று கீழே விழுவதை அவன் பார்க்கிருன். இது ஒரு சாதாரண இயற்கை நிகழ்ச்சி. அவன் இதுவே சுதந்திரம் என்று எண்ணுகிருன். ஆனுல், அது விழுந்துதான் ஆக வேண்டும் என்பதை அவன் எந்த நொடியில் அறிகிருனே, அந்த நொடியே அவன் அதை இயற்கைவிதி—உயிரற்ற இயந்திர இயக்கம்—என்கிருன். நான் தெருவுக்குப் போகலாம்; போகாமலும் இருக்கலாம். மனிதனுடைய பெருமை இதிலேதான்—இந்தச் சுதந்திரத்திலேதான்—இருக்கிறது. நான் அங்கே போகத்தான்வேண்டும் என்ற நிலை வந்தால்,

நான் அந்தத் தூண்டுதலுக்கு அடங்கியே, ஓர் இயந்திரம் ஆகிவிடுகிறேன். எல்லையற்ற சக்தி பெற்றிருப்பினும் ஓர் இயந்திரமே; சுதந்திரம் ஒன்றே உயிருள்ள வாழ்க்கை அளிப்பது.

காட்டில் வாழும் மனிதனுடைய கருத்தே சரியானது, என்று வேதாந்தம் சொல்கிறது. அவன் உணர்வது சரி; ஆனால், அவன் கூறும் விளக்கம் சரியன்று. அவன் தன்னைச் சூழ்ந்துள்ள இயற்கையைச் சுதந்திரம் என்று உணர்கிறானே ஒழிய, சட்டத்துக்குக் கட்டுப்பட்டதென்று உணர்வதில்லை. பல பிறவிகளில் பெறும் அனுபவத்துக்குப் பிறகுதான் நாமும் இப்படி நினைக்கத் தொடங்குவோம்; ஆனால், இந்தக் கருத்து வேதாந்தத் தொடர்புடையதாய் இருக்கும். உதாரணமாக, நான் தெருவுக்குப்போக விரும்புகிறேன். சித்தம் தூண்டுகிறது; பிறகு நான் நிற்கிறேன். சித்தத் தூண்டுதலுக்கும் தெருவுக்குப் போதலாய செயலுக்கும் இடையே நான் ஒரே மாதிரியாக ஒழுங்கோடு நடந்துகொள்கிறேன். இந்தச் செயலின் ஒழுங்கையே சட்டம் என்கிறோம். செயலின் இந்த ஒழுங்கு சின்னஞ்சிறு காலத் துண்டுகளாகப் பிரிவதால் என் செயல் ஒரு சட்டத்துக்குக் கட்டுப்பட்டது என்று சொல்வதில்லை. சுதந்திரம் வழியாகவே செயல் நடைபெறுகிறது. நான் ஐந்து நிமிட நேரம் நடக்கிறேன். இந்த ஐந்து நிமிட நேர ஒழுங்கான நடையாகிய செயலுக்கு முன்னால் சித்தச் செயல் இருந்தது. இந்தச் செயலே நடையாகிய செயலைத் தூண்டியது. இதனாலேதான் மனிதன் தான் சுதந்திரன்—சித்தத் தூண்டுதல்படியே தொழில் புரிபவன்—என்று சொல்லிக்கொள்கிறான்; இவனுடைய செயல்களையெல்லாம் சிறுசிறு கால அளவினவாகப் பிரித்துவிட இயலும். இந்தக் கால இடைவெளிக்குள் ஒரே ஒழுங்குமுறை தென்பட்டாலும், இவற்றுக்கு அப்பால் இந்த ஒழுங்கு இல்லை. இந்த ஒழுங்கின்மைக் காட்சியிலேதான் சுதந்திரம் இருக்கிறது. இயற்கையில் நாம் நீண்ட கால ஒழுங்கு முறைகளையே பார்க்கிறோம். ஆனால், இந்த ஒழுங்கு முறைகளின் தொடக்கமும் முடிவும் சுதந்திரத் தூண்டுதலாகவே இருக்கவேண்டும். சுதந்திரமான செயல் தூண்டுதல் தொடக்கத்தில் ஏற்பட்டது. இதுவே தொடர்ந்து செயலாகிறது. ஆனால், நம் செயலின், கால இடைவெளியோடு ஒப்பிடும்போது,

இயற்கைச்செயலின் காலஇடைவெளி நீண்டதாகத் தோன்று கிறது. வேதாந்த அடிப்படையில் நம் செயல்களை ஆராயும் போது நமக்குச் சுதந்திரம் இல்லை என்பது தெரிகிறது. என் ருலும், "நான் சுதந்திரன்" என்ற உணர்ச்சி மட்டும் அறி வில் ஒளிர்கிறது. இந்த உணர்ச்சி இருக்கக் காரணம் என்ன? ஒவ்வொரு செயலும் வேறு ஒரு தூண்டுதலால் ஏற்படுகிறது என்று நம் பகுத்தறிவு பகர்கிறது; தூண்டுதல் ஒவ்வொன்று டனும் சுதந்திரத்தையே வலியுறுத்துகிறோம். சுதந் திரமுள்ளவன் என்ற உணர்வும், சுதந்திரமில்லாதவன் என்ற உணர்வும் நம் முன் இருப்பது காண்கிறோம். இந்த முரணான பிரச்சினைக்கு வேதாந்தம் காட்டும் விடை இது தான். மனமும் உடலும் சுதந்திரமற்றவை. ஆன்மா சுதந்திர மாக உள்ளது. ஆன்மாவின் சங்கற்பத்தை மனமும், உடலும் நிறைவேற்றும்போது, சுதந்திரம் இன்மை போன்ற தோற் றம் உண்டாகிறது.

தூண்டுதலால் ஏற்படும் செயல் நம்மை அடிமை கொள் கிறது. ஒருவன் என்னைக் குறை கூறுகிறான்; உடனே நான் கோபம்கொள்கிறேன். அவனது தூண்டுதலால் என் னிடம் உண்டாகிய சிறு அசைவு என்னை அடிமை ஆக்கி விட்டது. எனவே, நாம் நம் சுதந்திரத்தைக் காட்டவேண் டியவராகிறோம். மிக உயர்ந்த அறிஞர்களிடமும், மிகத் தாழ்ந்த பிராணிகளிடமும், மிகக் கொடிய மக்களிடமும், முனிவரையோ, மனிதனையோ, பிராணியையோ பாராமல் எல்லாவற்றுள்ளும் இறைவனையே எவன் பார்க்கிறானோ, அவனே உண்மை முனிவன்—உண்மை ஞானி. இத்தகை யர் இந்தப் பிறவியிலேயே பேத உணர்வை வென்று, நிலை யான பொது நோக்கைப்பெற்ற மகான்களாவர். இறைவன் தூய்மையானவன்; எல்லாருக்கும் ஒரே விதமாகத் தோன்று பவன். எனவே, பொதுநோக்கைப் பெற்ற, இத்தகைய ஞானி மனித உருவில் நடமாடும் தெய்வமேயாவான். இந்த நிலை நோக்கியே நாம் முன்னேறுகிறோம்; எல்லா வகை இறைவழிபாடும் செயல்களும், முடிவான இந்த நிலை அடை வதற்குரிய சாதனங்களே ஆகும். பணம்தேடும் ஒருவனும், வறுமைத் துன்பங்களிலிருந்து விடுதலை பெறவே முயல்கி றான். மனிதனுடைய ஒவ்வொரு செயலும் தெய்வவழிபாடே. காரணம் இதன் நோக்கம் விடுதலை பெறுதல்; எல்லாச்

செயல்களும் நேர்முகமாகவோ, மறைமுகமாகவோ விடுதலைக்கே காரணமாகின்றன. இந்த விடுதலைக்குத் தடையான செயல்களையே நாம் தவிர்க்கவேண்டும். பிரபஞ்சம் முழுவதுமே தெரிந்தோ தெரியாமலோ, இறைவழிபாடு செய்தவண்ணம் இருக்கிறது; ஆனால், இது அதற்குத் தெரியாது. இறைவனை நிந்திப்பதும் ஒருவகை வழிபாடே ஆகும். இப்படி நிந்திப்பவர்களும் விடுதலைபெறவே விரும்புகிறார்கள் அல்லவா? ஒரு தூண்டுதலுக்கு எதிராகச் செயல் புரிவதால் அதற்கு நாம் அடிமையாகிறோம் என்பது தெரிவதில்லை. குத்தும் முள்ளை உதைப்பது கடினம்.

நாம் கட்டுப்பட்டவர்கள் என்ற எண்ணத்தை விலக்கிவிட இயலுமானால், எந்தச் செயல் வேண்டுமானாலும், இப்பொழுதே செய்ய நம்மால் இயலும். உரிய நேரம் வரவேண்டும். எனவே சக்தியைப் பெருக்குக; காலத்தைக் குறைக்க. படிகக்கல் உண்டாகும் இரகசியத்தை அறிந்த விஞ்ஞானப் பேராசிரியரின் சாதனையை நினைத்துப் பாருங்கள். இயற்கை பல நூற்றுண்டுகளில் சாதித்த ஒன்றை அவர் பன்னிரண்டே ஆண்டுகளில் சாதித்து விட்டார்.

21

இலட்சியமும் அதை அடையும் முறைகளும்

உலகம் முழுவதும் ஒரே சமயத்தை மேற்கொண்டு, ஒரே வகையான வழிபாட்டையும் ஒரே வகையான நெறியையும் என்று பின்பற்றுகிறதோ, அன்றே ஒரு பெரும் பீடை பிடித்து விட்டது எனலாம். சமய முன்னேற்றமும் ஆன்மிக முன்னேற்றமும் இதனால் ஒழியும். ஒரே சமயம் என்ற இந்த ஆபத்தை விரைவில் வரவழைக்கும் முயற்சியை விடுக. ஒவ்வொரு சமயத்தாரும் தத்தம் நெறியில் முன்னேறி உயர்ந்த இலட்சியத்தை அடைவதற்கு உள்ள தடைகளை விலக்கும் முயற்சி மேற்கொள்க. இதன் மூலம் உலகத்துக்கே பொதுவான ஒரு சமயம் ஏற்படுத்தும் முயற்சியை முறியடிக்க.

இறைவனைத் திரும்ப அடைவது—ஒவ்வொருவனுக்கும் இயல்பாய் உள்ள தெய்வத்தன்மையை மீண்டும் பெறுவது—

என்பதுதான் மனித சமூகத்தின் இலட்சியம்; எல்லா மதங்களின் இலட்சியம். முறைகள் மனப்பக்குவத்துக்கு ஏற்றபடி வேறுபடலாம்.

இலட்சியத்தையும் அதை அடைவதற்குரிய சாதனங்களையும் 'யோகம்' என்னும், சொல்லால் குறிக்கிருர்கள். 'யோக்' என்ற ஆங்கிலச் சொல்லின் மூலமும் யோகம் என்ற பதத்தின் மூலமும் ஒன்றே. சேர்ப்பது அல்லது இணைப்பது; இறைவன் அல்லது நமது உண்மைத் தத்துவத்தோடு நம்மை இணைப்பது என்பதே இதன் பொருள். இத்தகைய யோகங்கள் அல்லது இணைப்புச் சாதனங்கள் பல இருந்தாலும், கரும யோகம், பக்தியோகம், ராஜயோகம், ஞான யோகம் என்பவையே முக்கியமானவை ஆகும்.

ஒவ்வொரு மனிதனும் தன் இயல்புப் படியே முன்னேற வேண்டும். ஒவ்வொரு விஞ்ஞான முறையும் முன்னேற ஒவ்வொரு வழி இருப்பது போல் ஒவ்வொரு சமயமும் முன்னேற ஒவ்வொரு வழி இருக்கிறது. சமயத்தின் இலட்சியம் அல்லது முடிவை அடைதற்குரிய வழிகளை நாம் யோகம் என்று சொல்கிருேம்; மக்களின் மனப்பக்குவங்களுக்கும் தகுதிக்கும் ஏற்றபடி பலவாறு அவை அமைகின்றன. பின் காணும் நான்கு தலைப்புகளில் அவற்றை வகுக்கிருேம்:—

1. **கரும யோகம்:** தன் கருமங்களையும் கடமைகளையும் சரிவரச் செய்வதன் மூலமாகவே இறையுணர்வு பெறும் முறை.

2. **பக்தி யோகம்:** இஷ்ட தெய்வம் ஒன்றினிடம் பக்தியையும் அன்பையும் செலுத்தி இறையுணர்வு பெறும் முறை.

3. **ராஜ யோகம்:** மனத்தை அடக்குவதனுல் இறையுணர்வு பெறும் முறை.

4. **ஞான யோகம்:** அறிவால் இறையுணர்வு பெறும் முறை.

இவை எல்லாம் ஒரே இலட்சியமான இறைவனை நோக்கிச் செல்லும் வேறு வேறு பாதைகளே. பல

சமய நெறிகள் இருப்பது உண்மையில் சாதகமே ஆகும். எல்லாச் சமயங்களும் சமய வாழ்வுக்கு அல்லது ஆன்மிக வாழ்வுக்கு மனிதனைத் தூண்டும் அளவுக்கு நல்ல பலன் தருபவைகளே. எவ்வளவுக் கெவ்வளவு சமயங்கள் மிகுந்து உள்ளனவோ, அவ்வளவுக் கவ்வளவு மனிதர்களுக்குள் மறைந்திருக்கும் தெய்வீகத்தைத் தூண்டப் பல சந்தர்ப்பங்கள் கிடைக்கும்.

['ஒக்கு பீச்சுக் கிறிஸ்தவ ஒருமைப்பாட்டு' சங்கத்தில் 'உலக ஒருமைப்பாடு' என்ற பொருள் பற்றிப் பேசிய போது சுவாமிகள் இவ்வாறு குறிப்பிட்டார்:]

எல்லாச் சமயங்களும் அடிப்படையில் ஒரே மாதிரி தான் இருக்கின்றன. இயேசுநாதர் சொன்ன கதையில் வரும் பாரசேயனைப் போல இன்று கிறிஸ்தவர்கள், தங்கள் மதம் ஒன்றே சரியானது மற்றவை கிறிஸ்தவ மத ஞானம் இல்லாத குறையால் தவறானவை என்று உரைத்தாலும், நான் தொடக்கத்தில் கூறினது உண்மைதான். கிறிஸ்தவ சமயத்தோடு உலக சமயங்கள் ஒத்துப் போக வேண்டுமானல், பிற சமயக் கொள்கைகளையும் தழுவிப் போகும் மனோபாவத்தைக் கிறிஸ்தவ சமயம் வளர்த்துக் கொள்ள வேண்டும். எந்த இதயத்திலும் இறைவனது அமிசம் ஒன்று இருக்கிறது. எல்லாரும் முக்கியமாக இயேசுநாதரைப் பின் பற்றுபவர்கள், இதை ஒப்புக்கொள்ளும் மனப்பான்மை உடையவராகவே இருக்க வேண்டும். நல்ல மனிதர் ஆன்மிக வாழ்வில் ஈடுபட்ட மனிதர் எல்லாரையுமே இறைவன் குடும்பத்தில் சேர்த்துக் கொள்ள இயேசுநாதர் தயாராகவே இருந்தார். ஏதோ ஒரு கொள்கையை நம்புவதால் மட்டும் ஒருவன் பின்பற்றும் முறை சரியாகாது; இறைவனது கட்டளைப்படி நடப்பவனே சரியான முறையைப் பின்பற்றுபவன் ஆவான். இந்த அடிப்படையில் சரியானபடி இருப்பதாலும் சரியானதைச் செய்வதாலுமே உலகம் ஒன்றுபட இயலும்.

22

ராஜ யோகத்தின் இலட்சியம்

யோகம் பெரிதும் மதத்தின் தியான அம்சம் பற்றியது. அறநெறியும் சற்று இதனுடன் சேரவேண்டும். தேவவாக்கியம் என்பதைவிட இன்னும் சிறிது அதிகமான ஒன்றை

விரும்பும் மனப்பான்மையே மக்களிடம் வளர்ந்து வருகிறது. மனிதர்கள், தாங்கள் அறிவால் உணர்ந்த அனுபவங்களையே நாடுகிறார்கள். சமய உண்மையை மக்கள் உணரவேண்டுமானால், அது சுய அனுபவம் பெறுவதாலேதான் இயலும். ஞானம் அல்லது மனத்தின் உயர்ந்த அறிவுநிலையிலிருந்துதான் ஆன்மிக சம்பந்தமான உண்மைகளை நாம் உணர இயலும். சில ஆன்மிக அனுபவம் பெற்றதாகச் சொல்பவர் தம் அறிவு, மனம் இவற்றை எந்த நிலையில், அப்போது வைத்துக் கொண்டிருந்தார்களோ, அந்த நிலையில் நாமும் நம் அறிவு, மனம் இவற்றை வைத்துக்கொள்ள முயல வேண்டும். அந்த நிலையில் அவர்கள் பெற்றதாகச் சொல்லும் அனுபவமே நமக்கும் கிடைத்தால் அவை நமக்கு உண்மை ஆகிவிடுகின்றன. மற்றொருவர் பெற்ற அனுபவம் நாமும் பெற இயலும். ஒரு முறை நடந்த நிகழ்ச்சி மறுமுறையும் நிகழும். ஏன்? அதே சூழ்நிலையில் மறுபடியும் நடந்தே தீரவேண்டும். மனத்தின் உயர்ந்த நிலை அல்லது தியான நிலையை அடைவது எப்படி என்பதை ராஜயோகம் நமக்குப் போதிக்கிறது. பெரிய சமயங்கள் எல்லாமே மனத்தின் அல்லது அறிவின் இந்த நிலையை ஒவ்வொரு வகையில் ஒப்புக்கொள்கின்றன. ஆனால், இந்தியாவில் இந்த நிலையை அடைவதற்கு வேண்டிய முயற்சிகளில் தனிக் கவனம் செலுத்துகிறார்கள். தொடக்கத்தில் யந்திர சாதனம் போன்ற ஒருவகைச் சாதனம் – ஆசனம் பிராணாயாமம் போன்றவை – இந்த நிலையை அடைய நமக்கு உதவி செய்யலாம். ஆனால், இத்தகைய யந்திரம் போன்ற சாதனங்களால் அதிக வெற்றி கிடைக்காது. சிலவகை உடல்நிலை அல்லது ஆசனங்கள், சிலவகை மூச்சுக்கட்டுப்பாடு அல்லது பிராணாயாமம் ஆகிய இவை மன நிலையைச் சரிசெய்து ஒருமுகப்படுத்த உதவலாம். ஆனால், இவற்றோடு சித்தசுத்தியும் இறைவனை அடைய வேண்டும் என்ற தீவிர ஆசையும் இணைந்தால்தான் அந்த மனநிலை அல்லது தியானநிலை பெறல் இயலும்.

ஒரு நிலையில் அமர்ந்து ஒரே எண்ணத்தில் மனம் நிலை பெற்றிருக்கும் தியான நிலையில் வெற்றி பெற முயன்றவர்களுக்கு, இதைச் சாதிக்கப் பிறர் உதவியும் வேண்டும் என்பது தெரியவரும். மனத்தைப் படிப்படியாகவும், முறையாகவும் அடக்கப் பழகவேண்டும். நிதானமாகவும், இடைவிடாமலும்,

விடாப்பிடியாகவும் உறுதிபெறப் பழக்கவேண்டும். இது குழந்தை விளையாட்டு அன்று; ஒரு நாள் முயன்று மறுநாள் மறந்துவிடும் ஆசைப் பழக்கமும் அன்று. இதுதான் ஒருவன் தன் வாழ்கையில் சாதித்துக்கொள்ள வேண்டிய காரியம். இலட்சியத்தின் பெருமையை நினைத்துப் பார்த்தால், இதற்காகப் படும் பாடு அல்லது செய்யும் முயற்சி எவ்வளவு தீவிரமாய் இருந்தாலும் அது ஒரு பொருட்டாகவே தோன்றுது; நாமும் இறைவனும் ஒன்றே என்ற பரமானுபவம் அல்லது பேரின்பம் அன்றோ இந்த முயற்சியின் முடிவு அல்லது இலட்சியம். இந்தஇலட்சியத்தை நம் முன் கொண்டு, வெற்றி நிச்சயம் என்ற அறிவோடு நாம் எவ்வளவு தீவிர முயற்சி செய்தாலும் அது செய்யத்தக்கதே.

தெய்விக அன்பு

[1900-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12-ஆம் தேதி சான் பிரான்ஸிஸ்கோ பகுதியில் ஆற்றிய சொற்பொழிவு.]

அன்பை ஒரு முக்கோணமாக உருவகப்படுத்தலாம். முதல்கோணம் இது. அன்பு கேள்வி கேட்காது; அது கைம்மாறு கருதாமல் செலுத்தப்படுவது என்பதாகும். அன்பு செலுத்துபவன் பிச்சைக்காரன் அல்லன்... பிச்சைக்காரனின் அன்பு அன்புமன்று. அன்பு எதையும் கேட்பதில்லையென்ருலும், அதே சமயம் எல்லாவற்றையும் கொடுக்கிறது. இது தான் அன்பின் முதல் அடையாளம். கடவுள் இரக்கம் உள்ளவரா என்ற கேள்வியே இங்கு எழுவதில்லை. அவர் கடவுள்; அவர் எனது அன்பர். கடவுள் சர்வசக்தி வாய்ந்தவரா, ஒரு எல்லைக்கு உட்பட்டவரா, எல்லைக்கு உட்படாதவரா என்ற கேள்விகளுக்கும் இடமில்லை. அவர் நல்லது செய்தாலும், சரி; தீமை செய்தால்தான் என்ன? எல்லையற்ற அன்பு நீங்கிய எல்லாக் குணங்களும் மறைந்துவிடுகின்றன.

பண்டைக்கால இந்தியச் சக்கரவர்த்தி ஒருவர் காட்டில் வேட்டையாடச் சென்றபோது, ஒரு முனிவரைச் சந்தித்தார். அம்முனிவர்மீது பேரன்புகொண்ட மன்னர் தம் தலை நகருக்கு வந்து சில பரிசுகள் வாங்கிச் செல்லுமாறு முனிவரை வற்புறுத்தினர். முதலில் முனிவர் இந்த அழைப்பை மறுத்தார். ஆனால், மன்னர் வற்புறுத்தவே, இறுதியில் ஏற்றுக்கொண்டார்; அவர் மாளிகைக்கு வந்தார். அவருடைய வருகை மன்னருக்குத் தெரிவிக்கப்பட்டது. மன்னர், "ஒரு நிமிஷம் பொறுத்திருங்கள். நான் எனது பிரார்த்தனையை முடித்துக்கொண்டு வந்துவிடுகிறேன்" என்று கூறிப் பிரார்த்தனையில் அமர்ந்தார். மன்னர், "ஆண்டவனே! எனக்கு அதிக சொத்தும், அதிக நிலமும், உடல் நலமும், குழந்தைகளும் அருளும்" என்று பிரார்த்தனை செய்தார். உடனே முனிவர் எழுந்து அறையைவிட்டு வெளியே நடக்கத் தொடங்கினர். "நீங்கள் இன்னும் எனது பரிசுகளைப் பெறவில்லையே?" என்று சக்கரவர்த்தி கேட்டார். அதற்கு முனிவர் சொன்னர்: "பிச்சைக்காரர்களிடம் நான்

யாசகம் கேட்பதில்லை. ‘நிலம் வேண்டும், பணம் வேண்டும், இது வேண்டும், அது வேண்டும்’ என்றுதான் நீங்கள் இவ்வளவு நேரம் பிரார்த்தனை செய்துகொண்டிருந்தீர்கள். உங்களால் எனக்கு என்ன கொடுக்க இயலும்? முதலில் உங்களுடைய தேவைகளை நீங்கள் பூர்த்தி செய்துகொள்ளுங்கள்.”

அன்பு ஒருபோதும் கேட்பதில்லை; ஆனால் அது எப்போதும் கொடுக்கிறது... ஓர் இளைஞன் தனது காதலியைப் பார்க்கப் போகிற சமயத்திலே, ஏற்படும் உறவு வியாபார முறையினதன்று. அவர்களது உறவு அன்புமயமானது. அன்பு செலுத்துபவன் யாசகனல்லன். இதுபோலவே, உண்மையான ஆன்மிக வழிபாடு தொடங்கிவிட்டால், அங்கு பிச்சைக்கு இடமில்லை என்பதை நாம் அறிந்துகொள்ளலாம். “பிதாவே, எனக்கு இதைக் கொடு, அதைக் கொடு” என்று பிச்சை கேட்பது இல்லை என்ற நிலை ஏற்படும்போதுதான் மதம் ஆரம்பமாகிறது.

அன்பின் இரண்டாவது கோணம் அன்பு அச்சமற்றது என்பதே. நீங்கள் என்னைத் துண்டுதுண்டாக வெட்டிப் போடலாம். அப்பொழுதும் நான் உங்களை நேசிப்பேன். இங்குள்ள தாய்மார்களில், பலவீனமான ஒருவர், தெருவில் செல்லும்போது தமது குழந்தையை ஒரு புலி பறித்துச் செல்வது காண்கிறார். அப்போது அந்தத் தாய் எங்கே இருப்பார்? புலியைத் தைரியமாக எதிர்த்துச் சண்டையிடுவார். மற்றொரு சமயம், இதே மாது தெருவில் குரைத்துக்கொண்டு வரும் நாயைக் கண்டு பறந்தோடி விடுவார். புலியின் முன்னே தாவிச் சென்று தமது குழந்தையைக் காப்பாற்றியவர் இவரே. அன்பு பயம் அறியாதது. தீமையை எல்லாம் எதிர்த்து அது வெற்றி காண்கிறது. கடவுள் பயமே மதத்தின் துவக்கம்; ஆனால் கடவுள் அன்பே அதன் முடிவு. பயமெல்லாம் அங்கு பறந்தோடிவிடுகின்றன.

அன்பின் மூன்றாவது கோணம் அன்பினால் பெறும் பயன் அன்பே என்பதாகும். அன்பு ஒரு சாதனம் அன்று. “இன்ன காரியத்திற்காக உன்னை நேசிக்கிறேன்” என்று கூறுபவன், உண்மையில் நேசிப்பதில்லை. அன்பு ஒரு

காலும் சாதனமாக இருக்க முடியாது; அதுவே முற்றுப் பெற்ற குறிக்கோள். பக்தியின் குறிக்கோள்தான் என்ன? ஆண்டவனை நேசிப்பது; அவ்வளவுதான். ஏன் ஒருவர் ஆண்டவனை நேசிக்கவேண்டும்? "ஏன்" என்ற கேள் விக்கே இடமில்லை. ஏனெனில் அது ஒரு சாதனமன்று. ஒருவர் அன்பு செலுத்த முடியுமானால் அதுவே அவருக்கு விமோசனம்; முக்தி; மோட்சம் எல்லாம். அதற்குமேல் என்ன வேண்டும்? இது தவிர வேறு என்னதான் இலட்சிய மாக இருக்க முடியும்? அன்பைக் காட்டிலும் உயர்ந்ததாக வேறு எதைத்தான் நீங்கள் கொள்ள முடியும்?

அன்பு எனும்போது சாதாரணமாக நாம் எப்பொருளில் கொள்கிறோமோ அதுபற்றி நான் இங்கு பேசவில்லை. அந் தக் குறுகிய, பொருளற்ற அன்பும் நேர்த்தியானதே. ஆண் பெண்ணை நேசிக்கிறான்; ஆணுக்காகப் பெண் சாக வும் துணிகிறாள். ஆனால் இதில் மற்றொரு வாய்ப்பும் இருக் கிறது. ஐந்தே நிமிஷங்களில் ஜேனை ஜான் உதறிவிடலாம்; அல்லது ஜானைவிட்டு ஜேன் விலகலாம். இது உலகாயதம்; அன்பு அன்று. உண்மையில் ஜேனை ஜான் காதலிக்க முடியுமானால், அவன் அந்த விநாடியிலிருந்தே பரிசுத்தனாகி விடுவான். அவனுடைய உண்மை இயல்பே அன்புதான்; ஆகையால் அவன் பரிசுத்தம் அடைந்து விடுகிறான். மதத் தையோ, மனத் தத்துவத்தையோ, பிரும்ம ஞானத்தையோ பற்றி ஓர் எழுத்துக்கூட அவன் அறியாமல் இருக்கலாம். ஆனால், ஜேனை நேசிப்பது என்ற ஒரே செயலின் மூலமே, யோகத்தினால் கிடைக்கும் சக்திகளை எல்லாம் ஜான் அடை வான். ஓர் ஆணும் பெண்ணும் உண்மையிலேயே நேசிக்க முடியுமானால், யோகிகள் தங்களுக்குக் கிடைத்திருப்பதாகக் கூறும் எல்லாச் சக்திகளையும் அவர்கள் அடைவார்கள் என்று நான் நம்புகிறேன். ஏனெனில் அன்பே கடவுள். கடவுளோ எங்கும் நிறைந்தவர். ஆகையால் உங்களுக்குத் தெரிந்தோ தெரியாமலோ அந்த அன்பு உங்களிடம் இருக்கிறது.

அன்றொரு நாள் ஓர் இளைஞன் ஒரு யுவதிக்காகக் காத் திருப்பதைக் கண்டேன்......இந்தப் பையனுடைய மனோ நிலையை ஆராய்வது நன்று என்று எண்ணினேன்.

அவனுடைய ஆழ்ந்த காதல் வேகத்தினுல், வெகு தூரத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகளைப் பார்க்கவும், அங்குப் பேசப்படு வதைக் கேட்கவும் சக்தி பெற்றிருந்தான். அந்தப் பெண் சுமார் இருநூறு மைல் தூரத்துக்கு அப்பால் இருந்தாள்; ஆனுலும், இந்த இளைஞன் அறுபது அல்லது எழுபது தடவை அவளைப்பற்றிக் கூறிய தகவல்களில் தவறு ஒன்றும் இருக்கவில்லை. "அவள் இவ்வாறு உடை உடுத்தி யிருக்கிருள்; இன்ன இடத்திற்குப் போகிருள்" என்று சரியாகச் சொல்லி விட்டான். இதை என் கண் முன் கண்டேன்.

ஆகவே, இதுதான் கேள்வி: உங்களுடைய கணவர் கடவுளல்லவா? உங்களுடைய குழந்தை கடவுளல்லவா? உங்களுடைய மனைவியை நீங்கள் நேசிக்க முடியுமானுல், உலகத்துச் சமயங்கள் எல்லாம் பெற்றவராவீர். சமய ரகசியமும் யோக ரகசியமும் முற்றிலும் அறிந்தவர்களாவீர்கள். ஆனுல் நீங்கள் நேசிக்க முடியுமா? அதுதான் கேள்வி. "நான் நேசிக்கிறேன்... ஏ மேரி! உனக்காக நான் உயிரை விடுகிறேன்" என்று நீங்கள் சொல்லுகிறீர்கள். ஆனுல் மேரி மற்ருெரு மனிதரை முத்தமிடல் கண்டால் அவளுடைய தலையைச் சீவ வேண்டுமென்று எண்ணுகிறீர்கள். ஜான் மற்ருெரு பெண்ணிடம் பேசிக் கொண்டிருப்பதை மேரி பார்த்துவிட்டாளென்ருல் அவளால் அன்றிரவு முழுவதும் தூங்கமுடிவதில்லை. ஜானுடைய வாழ்க்கையையே ஒரு நரகமாக்கி விடுகிருள் அவள். இது அன்பன்று; வியாபாரம்; ஆண் பெண் விற்பனை. இதை அன்பு என்று கூறுவது பழிச்சொல். ஒரு நாளில் உள்ள இருபத்து நான்கு மணி நேரமும் உலகம் கடவுளைப் பற்றிப் பேசுகிறது. அதைப் போன்று அன்பு பற்றியும் பேசுகிறது. ஆனுல் எதைப் பற்றி பேசினுலும் அது பாசாங்குதான். அதையே நீங்களும் செய்துகொண் டிருக்கிறீர்கள். ஒவ்வொருவரும் அன்பைப் பற்றிப் பேசுகிறீர் கள். ஆனுல் பத்திரிகைகளில் நாள்தோறும் விவாகரத்துக் களைப் பற்றியே படிக்கிருேம். நீங்கள் ஜானை நேசிக்கிறீர் கள் என்ருல், ஜானுக்காக அவரை நேசிக்கிறீர்களா? அல் லது உங்களுக்காகவா? நீங்கள் உங்கள் நன்மைக்காக ஜானை நேசித்தால், ஜானிடமிருந்து ஏதாவது ஒன்றை நீங்கள் எதிர்

பார்க்கிறீர்கள். அவருக்காகவே அவரை நீங்கள் நேசிப்பதால் அவரிடமிருந்து எதையும் எதிர்பார்க்கமாட்டீர்கள். அவர் தாம் விரும்பியவாறு நடந்துகொண்டாலும் முன்னைப் போலவே அவரை நீங்கள் நேசிப்பீர்கள்.

அன்பு என்னும் முக்கோணத்தில் மேற்கண்ட மூன்று கோணங்கள், அதாவது மூன்று அம்சங்கள் இருக்கின்றன. அன்பு இருந்தாலன்றி தத்துவ சாத்திரமென்பது வறட்டுத் தன்மை வாய்ந்ததாகிறது. உழைப்பு, கேவலம் கூலிக்காகச் செய்யப்படும் வேலையாகிவிடுகிறது. அன்பு இருந்தாலோ தத்துவசாத்திரம் கவிதையாக மலர்கிறது; மனத்தத்துவம் கடவுளைக் காணக்கூடிய அற்புத சாத்திரமாகிறது; உழைப்போ படைப்பிலேயே இன்பமான செயலாக இருக்கிறது. வெறும் புத்தகங்களைப் படிப்பதனால் ஒருவன் வறட்சியடைகிறான். எவன் படித்தவனாகிறான்? இம்மியளவு அன்பாகிலும் எவன் செலுத்துகிறானோ அவனே. கடவுள் அன்புமயம்; அன்பே கடவுள். கடவுள் எங்கும் நிறைந்திருக்கிறார். 'கடவுள் அன்பு மயமானவர்; எங்கும் நிறைந்தவர்' என்பதை உணர்ந்த பின், ஒருவனுக்குத் தலை கால் தெரிவதில்லை. மதுவுண்ட நிலையை அவன் அடைகிறான்...ஆண்டவனுக்காகப் பத்து நிமிஷங்கள் நம்மால் அழமுடியுமானால், அடுத்த இரண்டு மாதங்களில் நம்மையே நாம் மறந்துவிடுவோம்...சாப்பாட்டு நேரத்தைக் கூட நாம் மறந்துவிடுவோம். நாம் என்ன சாப்பிடுகிறோம் என்பதையும் அறியமாட்டோம். நீங்கள் ஆண்டவனையும் நேசித்துக்கொண்டு, இவ்வளவு சரியாகவும், கறாராகவும் எவ்வாறு நடக்கமுடியும்?...எல்லாவற்றையும் வெற்றிகொள்ளும், சர்வசக்தி வாய்ந்த அன்பு உங்களுக்கு எவ்வாறு ஏற்படும்?

மற்றவர்களைப் பற்றித் தீர்ப்புக் கூறுதல் வேண்டாம். எல்லாருமே ஒவ்வொருவகையில் பித்துடையவரே. குழந்தைகள் தங்களுடைய விளையாட்டில் பித்துக்கொள்கின்றனர்; இளம் வயதினர் இளையவர்மீது பித்துக்கொள்கின்றனர்; வயதானவர்கள் தாங்கள் இளம் வயதில் செய்ததை நினைத்துச் சுவைத்து இன்பமடைகிறார்கள்; வேறு சிலருக்குத் தங்கத்தின் மீது பித்து. ஏன் கடவுள் மீதும் சிலர்

பித்துக்கொள்ளலாகாது? ஜான்கள் மீதும் ஜேன்கள் மீதும் பித்துக்கொள்வது போலவே, கடவுள் மீதும் பித்துடைய ராவீர். "கடவுள் பைத்தியம் ஏற்பட்டால், நாங்கள் இதை விட்டுவிட வேண்டுமா? அதை விட்டுவிட வேண்டுமா?" என்று சிலர் கேட்கின்றனர். "நான் திருமணம் செய்யாமலிருக்க வேண்டுமா?" என்று ஒருவர் கேட்டார். நீங்கள் எதையும் விட்டுவிட வேண்டாம்! எல்லாம் உங்களை விட்டுவிடும். நீங்கள் மட்டும் பொறுத்திருங்கள். அவைகளை நீங்கள் மறந்துவிடுவீர்கள்.

நம்முடைய அன்பு முழுவதையும் ஆண்டவன் மீது செலுத்துவதே உண்மை வழிபாடு. ரோமன் கத்தோலிக்க ஆலயத்தில் இதை நீங்கள் அவ்வப்போது ஓரளவு காணலாம். அங்குள்ள பாதிரிகளும், கன்னித் துறவிகளும் அதி ஆச்சரியமான அன்புடன் ஆண்டவன் மீது "பைத்தியம் கொள்வதை" நீங்கள் காணலாம். உங்களுக்கு இப்படிப்பட்ட அன்பு இருக்கவேண்டும். ஆண்டவன் மீது நாம் கொள்ளும் அன்பு இத்தகையதாக இருக்கவேண்டும். அவரிடம் நாம் எதையும் கேட்கக்கூடாது; எதையும் நாம் நாடிச்செல்லக்கூடாது.

"எவ்வாறு வழிபடுவது" என்று கேட்கப்பட்டது. உங்களுடைய உடைமைகளில் எல்லாம் அரியதோர் உடைமையாக, உங்களுடைய உறவினர் எல்லாரினும் சிறந்த உறவினராக, உங்களுடைய குழந்தைகள் எல்லாரையும்விட அருமையானவராக அவரை வழிபடுக; அன்பின் உருவமாக எண்ணி வழிபடுக. எல்லையற்ற அன்பெனும் பெயரினர் அவர். இது ஒன்றே அவரைப்பற்றிய விளக்கமாகும். இந்தப் பிரபஞ்சமே அழிந்துவிட்டாலும் கவலைப்படாதீர்கள். அவர் எல்லையற்ற அன்புள்ளவராக இருக்கும்வரை நாம் ஏன் கவலைப்படவேண்டும்? வழிபாடு என்பது என்னவென்று உங்களுக்குத் தெரியுமா? இறை அல்லாத இதர சிந்தனைகளெல்லாம் போய்விடவேண்டும். தகப்பன் அல்லது தாய் அன்பு, கணவன்மனைவி அன்பு, நண்பர் மீது ஒருவர் வைத்திருக்கும் அன்பு, இவை எல்லாவற்றையும் ஒருங்கு திரட்டி ஆண்டவன் மீது செலுத்த வேண்டும். ஒருவனை ஒருத்தி நேசிப்பாளாயின்,

மற்றொருவனை அவள் நேசித்தல் இயலாது. ஒருத்தியை ஒருவன் நேசிப்பானாயின் மற்றொருத்தியை அவன் நேசித்தல் இயலாது. இதுவே அன்பின் இயல்பு.

என்னுடைய முதிய குரு சொல்வார்; இந்த அறையில் ஒரு பை நிறையப் பொற்காசுகள் இருக்கின்றன என்று வைத்துக் கொள்ளுங்கள். இந்த அறையில் பொற்காசுப் பை இருப்பது அவனுக்குத் தெரியுமானால் அந்தத் திருடன் தூங்க முடியுமா? நிச்சயமாக முடியாது. இந்தப் பொற்காசுகள் எடுப்பதற்குரிய வழியென்ன என்பது பற்றித்தான் அவன் நாள் முழுவதும் சிந்தித்துக் கொண்டிருப்பான்”......... அதைப்போலவே ஒருவன் ஆண்டவனை நேசிப்பானாயின் வேறு ஒன்றை அவன் எவ்வாறு நேசித்தல் இயலும்?

கடவுள் அன்பு எனும் மாபெரும் சக்தி முன் வேறு எது தான் நிற்க இயலும்? மற்றவை யெல்லாம் மறைந்துவிடும். அந்த அன்பைக் கண்டு உணர்ந்து அதில் வாழும் பித்துப் பிடியாமல் மனம் எப்படியிருக்கும்?

கடவுள் மீது நாம் அன்பு செலுத்தவேண்டிய முறை இதுவே: செல்வம் வேண்டேன்; சிநேகிதரை வேண்டேன்; உடமை வேண்டேன்; முக்தியும் வேண்டேன். சித்தம் அதுவாயின், ஆயிரம் முறை இறக்கவும் சித்தமாயுள்ளேன். ஆனால் ஒன்று மட்டும் அருள்க. நான் உன்னை நேசிக்க அருள்புரிக. அதுவும் அன்புக்காக அன்பு செலுத்த அருள்புரிக. உலகாயத உள்ளம் படைத்தவர்கள் உலகப்பொருள்களின் மீது எவ்வளவு ஆழ்ந்த பற்று வைத்திருக்கிறார்களோ, அவ்வளவு ஆழ்ந்த அன்பு எனக்கு ஏற்படட்டும். உலகாயதப் பொருள்களுக்காக அன்று; அழகின் உருவமாகவுள்ள உன்னை நேசிப்பதற்காக. கடவுளைப் புகழ்! அன்பரான ஆண்டவனைப் புகழ்! கடவுள் அன்பு தவிர, வேறு எதுவுமே இல்லை. அநேக யோகிகள் செய்யக்கூடிய அற்புதமான செயல்களை அவர் பொருட்படுத்துவதில்லை. செப்படி வித்தைக்காரர்கள் சிறு வித்தைகள் செய்கிறார்கள். கடவுளோ பெரிய மந்திரவாதி; அவரால் பெரிய ஜால வித்தைகள் செய்ய முடியும். இந்தப்

பிரபஞ்சத்தில் எத்தனை உலகங்கள் இருந்தாலும் யாருக்கு என்ன கவலை?

மற்றொரு வழி இருக்கிறது. அதுதான் நாம் ஒவ்வொன்றையும் வெற்றி கொள்வதாகும். ஒவ்வொன்றையும் நம்முடைய கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவருவதாகும். உடலையும் மனதையும் வெற்றி கொள்வதே இவ்வழி. ஆனால் பக்தன் இதை ஏற்பதில்லை. "ஒவ்வொன்றையும் அடக்குவதால் என்ன பயன்? என்னுடைய வேலையெல்லாம் கடவுளிடம் அல்லவா இருக்கின்றன?" என்று பக்தன் கூறுகிறான்.

ஒரு யோகி இருந்தார். அவர் ஒரு பெரிய பக்தர். அவருக்குத் தொண்டையில் புற்று நோய் ஏற்பட்டு, மரணப்படுக்கையில் கிடந்தார். மற்றொரு யோகிவந்து அவரைப் பார்த்தார். வந்தவர் ஒரு தத்துவ சாஸ்திர வல்லுநர். "நண்பரே! உங்களுடைய மனதை நோயின் மீது செலுத்தி அதை நீங்கள் ஏன் குணப்படுத்தக் கூடாது?" என்று கேட்டார். இதை மூன்று முறை அவர் திருப்பித் திருப்பிக் கேட்டார். மூன்றாவது முறையாகக் கேட்டபோது அந்தப் பெரிய யோகி "நான் ஏற்கனவே ஆண்டவனிடம் பூரணமாக அர்ப்பணித்து விட்ட மனதை, கேவலம் இந்த உடற் கூட்டின் மீது செலுத்த முடியும் என்று நீங்கள் எண்ணுகிறீர்களா" என்று சொன்னார். தேவதைகளின் பெருங்கூட்டத்தைத் தமது உதவிக்கு அழைத்துக் கொள்ளக் கிறிஸ்துபெருமான் மறுத்துவிட்டார். "இன்னும் இரண்டு அல்லது மூன்று நாட்கள் அதிகம் வாழ்வதற்காக, இருபதாயிரம் தேவதைகளை அழைத்துவரும் அளவுக்கு இந்தச் சிற்றுடல் பெரிதா என்ன?" என்று அவர் கேட்டார்.

உலகக் கண்கொண்டு பார்க்கும் போது இந்த உடலே எனக்கு எல்லாம்; என்னுடைய உலகமே இந்த உடம்பு தான். நானே இவ்வுடல். நீங்கள் என்னைக் கிள்ளினால், அது எனக்கு வலிக்கிறது. எனக்குத் தலைவலி வந்தவுடனேயே கடவுளை நான் மறந்துவிடுகிறேன். நானே இந்த உடல்தானே! கடவுளும், பிறவும் உடம்பென்னும் இந்த உயரிய லட்சியத்தின் பொருட்டுக் கீழே இறங்கி வர வேண்டும். இந்தக் கண்ணோட்டத்துடன் பார்த்தால்,

கிறிஸ்துநாதர் சிலுவையில் மாண்டபோது, தம்முடைய உதவிக்குத் தேவர்களை அழையாதது அறிவீனம். அவர் தேவதைகளை அழைத்துச் சிலுவையிலிருந்து விடுபட்டிருக்க வேண்டும் என்று தோன்றும். ஆனால் பக்தனுடைய கண் கொண்டு நோக்கினால் அவனுக்கு இந்த உடல் ஒன்றுமேயில்லை. இந்த அபத்தத்துக்காக யார் கவலைப்படுவார்? வந்து போய்க்கொண்டிருக்கும் இந்த உடலைப் பற்றி ஏன் ஓயாது சிந்தித்துத் தொல்லைப்படவேண்டும்? மிடுக்காகத் தோன்றுவதற்காக உரோமானியப் படை வீரர்கள் போட்டுக் கழற்றும் துணிகளைவிட அதிகமான மதிப்பு ஏதும் இதற்கு இல்லை.

உலகாயதன் பார்வைக்கும் பக்தன் பார்வைக்கும் அடிப்படையிலேயே வேறுபாடு இருக்கிறது. அன்பு செலுத்திக் கொண்டே இருங்கள். ஒருவன் கோபமாயிருந்தால் நீங்களும் கோபப்பட வேண்டும் என்பதற்கு எக்காரணமும் இல்லை. அவன் தன்னைத் தாழ்த்திக் கொண்டான் என்றால், நீங்களும் உங்களைத் தாழ்த்திக் கொள்ள வேண்டும் என்பதில்லை...... "மற்றொருவன் அறிவீனமாக நடக்கிறான் என்பதற்காக, நாம் ஏன் கோபப்பட வேண்டும்? தீமையைத் தீமையால் எதிர்க்காதே!" என்று தான் பக்தர்கள் சொல்கிறார்கள். உலகம் என்ன செய்தாலும், அது எப்போக்கில் சென்றாலும் அவை பக்தர்களைப் பாதிப்பதில்லை.

ஒரு யோகி அசாதாரண சக்திகளை அடைந்தார். "என்னுடைய சக்தியைப் பாருங்கள்! என்னால் மேகங்களைத் திரட்டி வானத்தை மறைக்கமுடியும்" என்று கூறினார் அவர். அவர் சொன்னவுடன் மழை பெய்யத் தொடங்கிற்று. கூட்டத்திலேயிருந்த ஒருவர் சென்னார், "சுவாமி, நீங்கள் ஆச்சரியமானவர்தான். ஆனால் எனக்கு இது வேண்டாம். எதை அறிந்தால் நான் வேறொன்றைக் கேட்கமாட்டேனோ அதை எனக்கு கற்றுக் கொடுங்கள்" என்று... நம்மிடமுள்ள சக்தியைக்கூட அகற்றிவிட வேண்டும்; ஒரு சக்தியும் இல்லாமல் இருக்கவேண்டும்; சக்தியை விரும்பாமலும் இருக்கவேண்டும்! இதன் பொருளென்ன என்பதைச் சாதாரண அறிவால் புரிந்துகொள்ள முடியாது...

ஆயிரக் கணக்கான நூல்களைப் படித்தாலும் இதை அறிதல் இயலாது... நாம் இதை அறிய ஆரம்பிக்கும் போது, இந்த உலகம் முழுவதுமே நம் வசமாகத் தொடங்கும்... சிறு பெண் பொம்மைகளை வைத்து விளையாடுகிறாள். ஒவ்வொரு முறையும் ஒரு புது பொம்மையைத் தனது கணவன் என்று கூறி விளையாடுகிறாள். ஆனால் அவளுடைய உண்மையான கணவன் வரும்போது இந்தப் பொம்மைகளை எல்லாம் நிரந்தரமாகத் தூக்கி எறிந்து விடுவாள்... உலகில் உள்ள பந்த பாசங்களும் அப்படிப்பட்டவையே. ஆண்டவன் மீது பிரேமை என்னும் உண்மைச் சூரியன் உதயமாகும் போது, நாம் பெற்ற சக்தி, நமது பந்த பாசங்கள் என்னும் பொம்மைச் சூரியன்களெல்லாம் மறைந்து விடுகின்றன. இந்தச் சக்தியைக் கொண்டு நாம் என்ன செய்யப் போகிறோம்? உங்களிடமுள்ள அற்புத சக்தியை ஆண்டவன் அகற்றிவிடுவானாயின் அதுவே நல்லது. அன்பு செலுத்தத் தொடங்குங்கள். இந்த அற்புத சக்திகளெல்லாம் போகட்டும். எனக்கும் ஆண்டவனுக்கும் இடையே அன்பு தவிர வேறு எதுவும் இருக்கக்கூடாது. கடவுளே அன்புதான். மற்றெதுவுமே இல்லை; முதலிலும் அன்பு, இடையிலும் அன்பு, கடைசியிலும் அன்பு.

ஆண்டவன் மீது அன்பு செலுத்துவது பற்றி அரசி ஒருத்தி தெருக்களில் பாடி வந்த கதை ஒன்று உண்டு. ஆத்திரமடைந்த அவளது கணவர் அவளுக்குப் பெரும் தொல்லை தந்தார். அவளை நாடு முழுவதும் விரட்டியடித்தார்கள். ஆண்டவன் மீது அவள் பக்திப் பாடல்கள் பாடிக் கொண்டே திரிந்தாள். எல்லா இடங்களிலும் அவளுடைய பாடல்கள் ஒலித்தன. "என் கண்களில் ஊறிய நீரால், வாடாத அந்தப் பக்திக் கொடியை வளர்த்தேன்"...... இதுதான் கடைசி லட்சியம்; உன்னத குறிக்கோள். இது தவிர வேறு என்ன இருக்கிறது? மக்கள் எதெதையோ விரும்புகிறார்கள். சொத்து வேண்டும் என்று எல்லாருமே நினைக்கின்றனர். சிலரே பக்தியைப் புரிந்துகொள்கின்றனர். பக்தியில் ஈடுபடுகின்றனர். அவர்களை விழிப்படையச் செய்யுங்கள்; அவர்களுக்குப் பக்தியின் பெருமையை எடுத்துக் கூறுங்கள்; அவர்களுக்கு அதற்குமேல் வேண்டிய சமிக்ஞைகள் பின்னர் கிடைக்கும்.

அன்பு நிரந்தரமானது; எல்லையற்ற தியாகமயமானது. அன்பில் ஈடுபட்டால், மற்ற எல்லாவற்றையும் நீங்கள் விட்டு விடவேண்டிவரும். அன்பை நீங்கள் அறிந்தீர்களானால், வேறொன்றும் தேவைப்படாது. “ஆண்டவனே! நீ எனது அன்பனாக இரு” என்ற எண்ணமே பக்திக்குப் போதுமானது. “எனது அன்பே! உனது அதரங்களால் ஒரு முத்தம் போதும்! உன்னால் முத்தமிடப்பட்டவர்களுக்கு எல்லாத் துக்கங்களும் பறந்து போய்விடுகின்றன. ஒருமுறை உனது முத்தம் கிடைத்தால், மனிதன் இன்பக் கடலில் ஆழ்ந்துவிடுகிறான். மற்ற எதன் மீதும் அவன் ஆசைப்படுவதில்லை. அவன் உன்னை மட்டுமே துதிக்கிறான். உன்னை மட்டுமே காண்கிறான்.” மனித அன்பில்கூடத் தெய்விக அம்சங்கள் இருக்கின்றன. ஆழ்ந்த அன்பு ஏற்படும்போது, உங்களுடைய இதயத்தில் எழும் ஒலியே உலகிலும் எதிரொலிப்பது போல் தோன்றுகிறது. இந்தப் பிரபஞ்சத்திலுள்ள ஒவ்வொரு பறவையும் உங்களுடைய அன்பைப் பற்றியே பாடுகின்றன. பூக்கள் மலர்வது உங்களுக்காகவே. எல்லையற்ற, நிரந்தரமான அன்பிலிருந்துதான் மனித அன்பு வருகிறது.

ஆண்டவனுடைய அன்பன் ஏன் பயப்பட வேண்டும்? திருடர், துன்பம், இந்த வாழ்க்கை இவற்றின் பொருட்டு ஏன் அஞ்சவேண்டும்?... பக்தன் கொடிய நரகத்தில் வாழநேரலாம். ஆனால், அது நரகமாக இருக்குமா? சுவர்க்கம், நரகம் என்ற எண்ணத்தையெல்லாம் நாம் விட்டுவிட்டு, இதைக்காட்டிலும் உயர்ந்த அன்பைக் கடைப்பிடிக்கவேண்டும். இந்த அன்புப் பைத்தியம் பிடித்து அலையும் நூற்றுக்கணக்கானவர் இருக்கின்றனர். அந்தப் பைத்தியத்தின் முன்பு ஆண்டவன் தவிர, மற்ற எல்லாம் மறைந்துவிடும்.

இறுதியில் அன்பு, அன்பு செய்பவன், அன்பு செய்யப்படுபவன், எல்லாம் ஒன்றிவிட வேண்டும். அதுதான் லட்சியமும் கூட...ஆன்மாவுக்கும் மனிதனுக்கும், ஆண்டவனுக்கும், ஆன்மாவுக்கும் இடையே ஏன் வேறுபாடு இருக்கிறது?... பக்தியில் இன்பத்தை அடைவதற்காகத்தான் அவன் தன்னையே நேசிக்க விரும்பினான். அதற்காகத்தானே பல

பகுதிகளாகப் பிரிந்துகொண்டான்...“இதுதான் படைப்பின் முழு இரகசியம்” என்று பக்தன் கூறுகிறன். “நாமெல்லோரும் ஒன்றே, நானும் எனது தந்தையும் ஒன்றே.” ஆனல், நான் இப்போது வேறுபட்டவனுக இருக்கின்றேன். எதற்காக? ஆண்டவன் மீது அன்பு செலுத்துவதற்காகவே... எது நல்லது? — சர்க்கரையாக மாறிவிடுவதா? அல்லது சர்க்கரையைச் சுவைப்பதா? சர்க்கரையாக மாறுவதா? அது என்ன வேடிக்கை? சர்க்கரையைச் சாப்பிடவேண்டும். அதுதான் அன்பின் எல்லையற்ற இன்பம்.

கடவுளை நமது தந்தையாக, தாயாக, நண்பனுக, குழந்தையாக நேசிக்கலாம். நம்மிடமுள்ள பக்தி உணர்ச்சியை வளர்ப்பதாக இத்தனை வகைகளும் வகுக்கப்பட்டுள்ளன. ஆண்டவன் மீது நெருங்கிய உணர்வுகொள்ளச் செய்யவே இத்தனை மார்க்கங்களும். ஆண், பெண்ணுக்கிடையே உள்ள காதல் உணர்வுதான் அதிக சக்தி வாய்ந்தது. ஆண்டவன் மீது காதல் கொள்ளவேண்டும். ஒரு பெண் தனது தந்தையை நேசிக்கிறள்; தனது தாயை, குழந்தையை நேசிக்கிறள்; ஆனல் அவள் தனது இரகசியங்களையெல்லாம் தனது தகப்பன், தாய், குழந்தை, அல்லது சிநேகிதியிடம் சொல்ல முடியாது. ஒரே ஒருவனிடம்தான் அவள் எதையும் மறைப்பதில்லை. அதே போன்றுதான் ஆணும்... கணவன் மனைவி உறவுதான் எல்லா இரகசியங்களையும் பரிமாறிக் கொள்ளக்கூடிய முழு உறவாகும். ஆண் பெண் காதலானது, மற்ற எல்லா அன்பும் இணைந்த ஒன்ருகும். தனது தந்தை, சிநேகிதி, குழந்தை ஆகியோருக்குள்ள இடங்களையெல்லாம் ஒரு பெண் தனது கணவனுக்கு அளிக்க முடியும். அதே போன்று ஒரு கணவன், தனது தாய், மகள், மற்றவர் ஆகியோருக்கு அளிக்கும் இடங்களை எல்லாம் தனது மனைவிக்கு அளிக்கமுடியும். ஆண் பெண்களுக்கு இடையே உள்ள இந்தப் பிரமாண்டமான முழுக்காதல் இருக்கிறதே, அதைப் போன்ற அன்பை ஆண்டவன் மீது செலுத்தவேண்டும். இரத்த உறவு இல்லாத ஒரு ஆண் மகனிடம் இதயத்தைத் திறந்து, எல்லாவற்றையும், அஞ்சாமலும், வெட்கப்படாமலும் ஒரு பெண் கூறுகிறளே! இதில் ஒளிவு மறைவு என்பதில்லையே! தன்னுடைய சொந்த அகச்சான்றிடம் எல்லாவற்றையும் அவள் எப்படி மறைக்க

மாட்டாளோ, அதைப்போன்று காதலனிடமும் மறைக்கமாட்டாள். அவ்வித அன்பை ஆண்டவன் மீதும் செலுத்த வேண்டும். இவைகளைப் புரிந்துகொள்வது கடினம். நாளாவட்டத்தில் புரிந்துகொள்வீர்கள். ஆண்–பெண் என்ற உணர்ச்சி மறைந்துவிடும். "ஆற்றங்கரை மணலில் கோடை காலத்தில் விழும் ஒரு சொட்டு நீர் எவ்வளவு விரைவில் மறையுமோ, அத்தன்மையனவே இந்த வாழ்க்கையும், இதில் உள்ள உறவுகளும்."

"ஆண்டவன்தான் படைத்தவர்" என்பது போன்ற சித்தாந்தங்களெல்லாம் குழந்தைகள் கற்பதற்குத்தான் தகுதியானவை. "ஆண்டவன்தான் எனது காதலன், எனது வாழ்க்கையே அவன்தான்" என்று இதயம் ஏங்கவேண்டும்.

"எனக்கு ஒரு நம்பிக்கை இருக்கிறது. உன்னை உலகத்தின் பிரபு என்று அழைக்கிறார்கள். நான் நல்லவனோ, கெட்டவனோ, பெரியவனோ, சிறியவனோ நானும் இந்த உலகத்தில் ஒருவனே. ஆகையால் நீ எனது அன்பனே. என்னுடைய உடல், மனம், ஆன்மா எல்லாவற்றையும் உனது பலிபீடத்தில் வைத்துவிட்டேன். அன்பே, இந்தப் பரிசுகளை ஏற்க மறுத்துவிடாதே!"

சான்பிரான்ஸிஸ்கோவில் சுவாமி விவேகானந்தர்—1900

வகுப்புப் பாடங்கள்
சொற்பொழிவுகள்
பற்றிய குறிப்பு

சமயமும் விஞ்ஞானமும்

அனுபவம் ஒன்றே அறிவின் ஊற்றுக்கண். உலகில் உத்தரவாதமில்லாத ஒரே விஞ்ஞான சாஸ்திரம் மதமே. ஏனெனில், அது அனுபவ அடிப்படையில் கற்றுக்கொடுக்கப் படுவது இல்லை. இவ்விதம் இருத்தல் கூடாது. எனினும், அனுபவ அடிப்படையில் சமயத்தைப் புகட்டும் சிலர் உலகில் எப்போதுமே இருக்கின்றனர். அவர்களே அனுபூதிமான்கள் என்று அழைக்கப்படுபவர்கள். ஒவ்வொரு மதத்திலுமுள்ள இவர்கள் எல்லாரும் போதிக்கும் கருத்து ஒன்றே; உண்மையும் ஒன்றே. இவர்கள் போதிப்பதுதான் உண்மையான சமயசாஸ்திரம். உலகின் பல்வேறு பகுதிகளிலும் கணிதம் எவ்வாறு வேறுபடுவதில்லையோ அதே போன்று இந்த அனுபூதிமான்களும் வேறுபடுவதில்லை. அவர் தம் சூழ்நிலை ஒன்றே; அனுபவமும் ஒன்றே. அதுவே சட்டமாகிறது.

கிறிஸ்துவ மதபீடத்தில் சமயவாதிகள் முதலில் சமயத்தைக் கற்றுக்கொள்கிறார்கள். அதன் பின் அதை அனுஷ்டிக்கிறார்கள். அனுபவமே தங்களுடைய நம்பிக்கைக்கு அடிப்படை என்று அவர்கள் கொள்வதில்லை. ஆனால், அனுபூதிமானே தொடக்கத்தில் சத்தியத்தை நாடிச்செல்கிறான்; முதலில் அதை அனுபவிக்கிறான்; பின்னர் தனது கோட்பாடுகளை வகுத்துக்கொள்கிறான். கிறிஸ்தவ மதபீடமோ, பிறருடைய அநுபவங்களை எல்லாம் ஏற்றுக்கொள்கிறது. ஆனால் அநுபூதிமானே சுயாநுபவம் உடையவன். கிறிஸ்தவ மதபீடம் புறமிருந்து அகம் செல்கிறது. அனுபூதிமான் அகத்திலேயிருந்து புறம் செல்கிறான்.

இரசாயன சாஸ்திரங்களும், இயற்கை விஞ்ஞானங்களும், எவ்வாறு இந்தப் பூத உலகு பற்றிய உண்மைகளில் ஈடுபட்டுள்ளனவோ, அவ்வாறு சமயமானது பௌதிக உலகுக்கு அப்பாற்பட்ட உண்மைகளை எடுத்துக் கூறுகிறது. இரசாயனத்தைக் கற்க ஒருவன் படிக்கவேண்டிய நூல் இயற்கை என்னும் புத்தகமே. சமயத்தைக் கற்க வேண்டிய புத்தகம் ஒருவனது இதயமும், மனமுமே. ஞானிக்குப் பெரும்பாலும் பௌதிக விஞ்ஞானம் தெரிவதில்லை.

ஏனெனில் அவன் தவருன புத்தகத்தைப் படிக்கிருன். விஞ் ஞானிக்குப் பெரும்பாலும் சமயம் தெரிவதில்லை. ஏனெனில் அவனும் தவருன புத்தகத்தையே—அதாவது வெளியே இருக்கும் புத்தகத்தையே — படிக்கிருன்.

ஒவ்வொரு விஞ்ஞானமும் தனக்கே உரிய முறையுடையது; அதே போல் சமய விஞ்ஞானமும் தனக்குரிய முறையுடையது. முறைகள் அதிகம் எனலாம். ஏனெனில், அதில் கவனித்தற்கான அம்சங்கள் அதிகம். மனமானது புற உலகம் போன்ற ஒருமை இயல்புடையதன்று. மனத்தின் பல்வேறு சுபாவங்களுக்கு ஏற்பப் பல்வேறு முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டியுள்ளது. ஒவ்வொருவரிடமும் ஏதாவதொரு புலனுணர்வு தலை சிறந்து விளங்குகிறது. ஒருவர் நன்கு காண்பார்; மற்ருெருவர் நன்கு கேட்பார். எனவே தலைதூக்கி நிற்கும் மன உணர்வு ஒன்றுளது. இந்தத் தலைவாயில் மூலமே ஒருவர் தமது உண்மை மனதை அடையவேண்டும். எனினும், மனம் யாவற்றுள்ளும் ஓர் ஒருமையுணர்வுளது; எல்லாவற்றிற்கும் பொதுவான சாஸ்திரீய முறையொன்று உள்ளது. இம் முறை மனித ஆன்மாவை ஆராய்ந்து அதன் அடிப்படையில் வகுக்கப்படுகிறது. வரையறுக்கப்பட்ட கோட்பாடுகள் இதற்கு இல்லை.

எல்லாருக்கும் ஒரே மதம் ஏற்புடைத்தன்று. ஒவ்வொன்றும் மாலையில் காணப்படும் முத்துப் போன்றதே. ஒவ்வொன்றிலும் தனித்தன்மை காண்பதில் நாம் கருத்தாயிருக்க வேண்டும். எவரும் ஒரு குறிப்பிட்ட மதத்தினராகப் பிறப்பதில்லை. அவர்தம் மதம் ஆன்மாவிலேயே உள்ளது. தனித் தன்மையை அழிக்க முற்படும் எந்த மதமும் காலப் போக்கில் அழிவே தரும். ஒவ்வொருவன் வாழ்க்கையிலும் ஒரு சக்தி ஊடுருவி நிற்கிறது. இந்தச் சக்தியே இறுதியில் அவனை ஆண்டவனிடம் அழைத்துச் செல்லும். எல்லா மதங்களின் முடிவும் லட்சியமும் ஆண்டவனைக் காண்பதுவே. பயிற்சிகள் எல்லாவற்றுள்ளும் சிறந்தது ஆண்டவன் ஒருவனையே வழிபடுவதுதான். ஒவ்வொருவரும் தமக்கென ஓர் இலட்சியத்தைத் தேர்ந்தெடுத்து அதில் உறுதியாக நிற்பாராயின், மதம் பற்றிய சச்சரவுகள் எல்லாம் மறைந்துவிடும்.

மதம் என்பது மெய்யுணர்வு

மனிதனால் ஆண்டவனுக்கு அளிக்கப்பட்ட சீரிய நாமம் சத்தியம் ; அது மெய்யுணர்வினால் பெறப்படுவது. எனவே, அதை அகத்தில் தேடுக. எல்லாப் புத்தகங்களையும் உருவங்களையும் விட்டு விலகி உங்களுடைய ஆன்மா தன்னையே காணவேண்டும். "புத்தகங்களில் முழுகி நாம் பித்துப் பிடித்திருக்கிறோம்" என்று ஸ்ரீ கிருஷ்ணர் கூறினார். இயற்கையின் தொந்தத்துக்கு அப்பால் செல்லுங்கள். மதக்கோட்பாடுகளும் உருவங்களும் சடங்குகளும்தான் எல்லாம் என்று நீங்கள் கருதும்போது, பந்தத்தில் சிக்கிக்கொள்கிறீர்கள். மற்றவர்களுக்கு உதவுவதற்காக நீங்கள் அதில் பங்கு கொள்ளுங்கள். ஆனால், அவை ஒரு பந்தமாகாமல் எச்சரிக்கையுடன் இருங்கள். மதம் ஒன்றே; முறைகள்தான் வெவ்வேறாயிருக்க வேண்டும். ஆகையால் ஒவ்வொருவரும் தமது செய்தியை அளிக்கட்டும்; ஆனால் மற்ற மதங்களில் குறைகாணல் வேண்டாம். உண்மையொளி காணல் வேண்டுமாயின், நீங்கள் உருவங்களை எல்லாம் விட்டு விலகி நிற்க வேண்டும். பிரம்மஞானம் என்னும் அமுதக் கடலில் ஆழ்ந்து அதைப் பருகுக. "யானே அவன்" என்பதுணர்ந்தவன், கந்தல் உடுத்திக் கொண்டு இருந்தாலும் மகிழ்வுடன் இருக்கிறான். நித்தியத்தின் உள்ளே செல்க. நித்திய சக்தி பெற்று வெளியே வருக. சத்தியத்தை நாடிச்செல்லும் அடிமை பந்தமற்றவனாகத் திரும்பி வருகிறான்.

மதம் என்பது தன்மறுப்பு

பிரபஞ்சத்தின் உரிமைகளைப் பகுத்தல் இயலாது. "உரிமை" பற்றிப் பேசுவது, வரம்பை ஒப்புக்கொள்வதாகும். ஆகவே நாம் பேசவேண்டியது உரிமையைப் பற்றியன்று; பொறுப்பு பற்றி. உலகின் எப்பகுதியில் தீமையிருப்பினும் அதற்குப் பொறுப்பினர் ஒவ்வொருவருமே. எவனும் தன்னைத் தன் சகோதரனிடமிருந்து வேறுபடுத்திக் கொள்வது இயலாத காரியம். பிரபஞ்சத்தில் ஒன்றச் செய்வன எல்லாம் நற்செயல்களே; பிரிப்பன பாவம். எல்லையற்ற ஒன்றில் நீ ஓர் அங்கம்; இதுவே உனது இயற்கை.

இதனுல்தான் நீ உனது சகோதரனுடைய நலனில் நாட்ட முள்ளவனுக இருக்கிருய்.

வாழ்க்கையின் முதல் நோக்கம் அறிவைத் தேடுதல்; இரண்டாவது நோக்கம் மகிழ்ச்சி. அறிவும், மகிழ்வும் விடுதலை நோக்கி அழைத்துச் செல்கின்றன. ஆனுல் உலகில் உள்ள ஒவ்வோர் உயிரும் (எறும்பாயினும் சரி, நாயாயினும் சரி)விடுதலை பெற்ருலன்றி, ஒரு மனிதன் விடுதலை பெற முடியாது. எல்லாரும் மகிழ்ச்சி அடைந்தாலன்றி, தனியொருவன் மட்டும் மகிழ்வுடன் இருத்தல் இயலாது. இன்ஞெருவனுக்குத் தீங்கு விளைவிக்கும்போது நீ உனக்கே தீங்கு விளைவித்துக் கொள்கிருய்; ஏனெனில் நீயும் உனது சகோதரனும் வேறல்லர். எவனெருவன் தன்னில் பிரபஞ்சத்தையும் பிரபஞ்சத்தில் தன்னையும் காண்கிருனே, அவனே உண்மை யோகியாவான். இப்பிரபஞ்சத்தின் சீரிய நியதி தன்னல மறுப்பே; தன் முனைப்பு அன்று. "தீமையைத் தீமையால் எதிர்க்காதே" என்ற இயேசு நாதரின் போதனையை இந்த உலகம் கடைப்பிடிக்கவில்லை. அதனுல்தான் இவ்வுலகம் இவ்வளவு தீமையுள்ளதாக இருக்கிறது. தன்னல மறுப்பே பிரச்னையைத் தீர்க்கும். திண்ணிய தன்னல மறுப்பின் மூலமே மதத்தைக் கடைப்பிடிக்க முடியும். உனக்கென எதையும் விரும்பாதே. எல்லாவற்றையும் பிறருக்காகவே செய். வாழும் வகையும், பழகும் வகையும், ஆண்டவனிடம் ஒன்றும் வகையும் இதுவே.

தன்னலமற்ற பணியே உண்மைத்துறவு

இவ்வுலகம் கோழைகளுக்கு ஏற்பட்டதன்று. எந்த நெருக்கடியிலிருந்தும் தப்பியோட முயலாதே. வெற்றியையோ தோல்வியையோ எதிர்நோக்காதே. சர்வ பரித்தியாக உள்ளத்துடன் சேவையில் முன்னேறுக. வெற்றியடையப் பிறந்துள்ள மனமானது வைராக்கியமுள்ள உள்ளத்துடன் இணைந்து முயற்சி செய்யும் என்பதை அறி. வேலை செய்ய உனக்கு உரிமை இருக்கிறது. ஆனுல் பலனை எதிர்பார்க்கும் அளவுக்குக் கீழ்மையடையாதே. ஓயாமல் உழைத்துக்கொண்டு இரு. ஆனுல் அந்த உழைப்பில் ஏதாவது ஒரு இன்பத்தைக் காண். நல்ல செயல்கள் கூட

ஒரு மனிதனைப் பந்தத்தில் பிணைத்துவிடும். ஆகையால் நற்செயல்களிலோ அல்லது பெரும்புகழும் தேடும் விருப்பத்திலோ உன்னைப் பந்தப்படுத்திக் கொள்ளாதே. இந்த இரகசியத்தை அறிந்தவர் பிறப்பு இறப்புச் சுழலைத் தாண்டி அமரர்களாகி விடுகின்றனர்.

சாதாரண சந்நியாசி உலகத்தைத் துறந்து வெளியே சென்று கடவுளைப் பற்றி எண்ணுகிறான். உண்மைச் சந்நியாசியோ உலகத்திலேயே வாழ்கிறான்; உலகம் அவனைக் கட்டுப்படுத்துவதில்லை. தன்னல மறுத்துக் காடு சென்றும், முடிவடையாத ஆசாபாசங்களை எண்ணி எண்ணி இன்பமடைபவர் உண்மைத் துறவியரல்லர். வாழ்க்கை யென்னும் போரின் மத்தியில் வாழ். குகையில் வாழும் போதும் தூங்கும்போதும் யாரும் அமைதியாக இருக்கமுடியும். செயல் வெறி என்னும் சுழலில் நின்று, கேந்திரமான இடத்தை அடை. அந்த இடத்தை அடைந்து விட்டால், உலகில் எதுவும் உன்னை அசைக்க முடியாது.

ஆன்மாவின் சுதந்திரம்

காண்பதன் மூலமே நமக்குக் கண்ணிருக்கிறது என்பதை நாம் அறியமுடியும். அதுபோல நம்முள்ளிருக்கும் ஆன்மாவை, அதனால் விளையும் பலன்களைக் கொண்டுதான் அறியமுடியும். ஆன்மா இருப்பதைக் கேவலம் புலன்களால் உணரமுடியாது. இந்தப் பிரபஞ்சத்தில் உள்ள எல்லாவற்றுக்கும் காரணமாக இருப்பது அதுவே; ஆனால் அதற்குக் காரணமானது எதுவுமில்லை. இந்த ஆன்மாவே நாம் என்பதை எப்போது அறிகிறோமோ, அப்போதே நாம் சுதந்திரம் பெற்று விடுவோம். ஆன்மா ஒருபோதும் மாறுதலடையாது. அதற்கு மூலகாரணமானது எதுவும் இல்லை. ஆகையால் அப்படிப்பட்ட பொருள் எதையும் கொண்டு அதை மாற்றலாம் என்று எண்ணுதற்கில்லை. ஆன்மாவே மூலப்பொருள். அது தன்னிச்சையாகவே இயங்குகிறது. வேறு மூலகாரணம் எதுவுமின்றி, தன் விருப்பமாகச் செயல்படும் ஏதோ ஒன்று நம்முள் இருப்பதை அறிந்தால், அன்றே நாம் நமது ஆன்மாவை அறிந்தவர் ஆவோம்.

விடுதலை என்பது அழிவின்மையுடன் இணைந்த ஒன்று. ஒருவன் சுதந்திரமாக இருக்கவேண்டுமானால், இயற்கையின் நியதிகளுக்கு அப்பாற்பட்டவனாக இருக்கவேண்டும். நாம் அறியாமையில் சிக்கியிருக்கும் வரைதான் இந்த நியதிகள் நம்மைக் கட்டுப்படுத்தும். ஞானம் ஏற்படும்போது இந்த நியதிகள் எல்லாம் நமக்கு நாமளிக்கும் விடுதலையே என்று காண்போம். சங்கற்பம் ஒருபோதும் சுதந்திரமாக இருக்க முடியாது. ஏனெனில் அது காரணகாரியத்தின் அடிமையாகும். ஆனால் இந்தச் சங்கற்பத்தின் பின்னணியில் இருக்கும் "நான்" என்பது சுதந்திரமானது; இதுவே ஆன்மா. "நான் சுதந்திரமானவன்" என்பதே நாம் நமது வாழ்வை அமைத்துக்கொண்டு வாழவேண்டிய அடிப்படையாகும். சுதந்திரம் என்பது சிரஞ்சீவியாயிருப்பது.

வேதாந்தம் பற்றிய குறிப்பு

தியானம் வேதாந்த விசாரணை இவற்றால் உருவாக்கப்பட்ட தத்துவசாஸ்திரங்களிலும் வேத உபதேசங்களிலுமே இந்து மதத்தின் ஜீவாதாரமான அம்சங்கள் அடங்கியுள்ளன. இந்தப் பிரபஞ்சம் முடிவில்லாதது, என்றுமுளது என்று இவை வலியுறுத்துகின்றன. அதற்குத் தோற்றம் இல்லை; முடிவும் இல்லை. தூலப்பொருள்களில் சைதன்யம் கலந்திருப்பதையும் வரையறைக்குட்பட்ட பொருள்களில் எல்லையற்ற பொருள் ஊடுருவி நிற்பதையும் காணக்கூடிய தோற்றங்கள் உலகில் கணக்கின்றி இருக்கின்றன. எனினும், எல்லையற்ற பொருளானது தானே இயங்க வல்லது; என்றுமிருப்பது; மாறுதலற்றது. என்றுமுள இப்பொருளில் காலத்தின் சுவடுகள் பதியா. புலன்களுக்கு அப்பாற்பட்டதும் அறிவுக்கு எட்டாததும் ஆகிய அந்த மண்டலத்தில் சென்ற காலமும் இல்லை; வருங்காலமும் இல்லை.

ஆன்மாவுக்கு அழிவில்லை என்று வேதங்கள் கூறுகின்றன. பிறப்பு, இறப்பு நியதிக்குக் கட்டுப்பட்டது இவ்வுடல் ஒன்றே. வளர்வது எதுவோ அது அழிந்தே ஆகவேண்டும். ஆனால் உடலுக்குள் இருக்கும் ஜீவனோ, எல்லையற்ற பரம்பொருளுடன் தொடர்புகொண்டது; அமர வாழ்வு பெற்றது. அதற்குத் தோற்றம் இல்லை; ஆகவே அழிவும் இல்லை.

இந்த உலகில் பிறக்கும்போதே ஒவ்வோர் ஆன்மாவுக்கும் தொடக்கம் ஏற்படுகிறது என்று கிறிஸ்தவ மதம் கூறுகிறது. ஆனால் வேதங்களோ "மனிதனின் ஜீவனனது, பரப்பிரம்மத்திலிருந்து தோன்றியது ஆதலின் கடவுளைப் போன்றே அதுவும் ஆதியற்றது" என்று கூறுகின்றன. கிறிஸ்தவ மதத்துக்கும் வேதங்களை அடிப்படையாகக்கொண்ட இந்து மதத்திற்கும் உள்ள முக்கியமான வேறுபாடுகளில் இது ஒன்று. தனது யாத்திரையிலே ஒருவரிடமிருந்து இன்னொருவருக்குள் பிரவேசிப்பதன் மூலம் இந்த ஆன்மாவானது எண்ணற்ற காட்சி அளித்திருக்கிறது; இனியும் அளிக்கும். ஆன்மிகப் பரிணாமம் என்ற மாபெரும் நியதிப்படி, பூரணமடைந்து, மேலும் மாறுதல் இல்லாத நிலை அடையும்வரை, இது நிகழ்ந்துகொண்டே இருக்கும்.

ஹிந்துவும் கிரேக்கனும்

முன்னேற்றத்தின் சின்னங்களாக மூன்று மலைகள் விளங்குகின்றன. இந்தோ ஆரிய நாகரிகத்தின் சின்னம் இமயமலை; ஹீப்ரு நாகரிகத்தின் சின்னம் சினாய் மலை; கிரேக்க நாகரித்தின் சின்னம் ஒலிம்பஸ் மலை. ஆரியர் இந்தியாவுக்கு வந்தபோது, வருந்தி உழைக்க முடியாத அளவு வெப்பம் அதிகமாக உள்ளதைக் கண்டார்கள். அதனால் அவர்கள் சிந்திக்க ஆரம்பித்தார்கள். இதனால் அகநோக்கு வளர்ந்தது. மதத்தை உருவாக்கினார்கள். மனதின் சக்திக்கு எல்லை இல்லை என்பதைக் கண்டார்கள்; எனவே, இதில் வல்லமை பெற முயன்றார்கள். மனிதன் என்று அழைக்கப்படும் இந்த உடற்கூட்டின் உள்ளே எல்லையற்ற ஏதோ ஒன்று அடங்கியுள்ளது, சக்திப் பொறி வீசக் காத்திருக்கிறது என்பதைக் கண்டார்கள். இந்த அடிப்படையில் ஒரு தத்துவத்தை உருவாக்குவதே அவர்களுடைய முக்கிய நோக்கமாக இருந்தது.

ஆரியர் கூட்டத்தின் மற்றொரு பிரிவினர் இயற்கை அழகு தவழும் சிறு நாடாகிய கிரீஸுக்குச் சென்றனர். இயற்கையும் தட்ப வெப்ப நிலையும் அரண் செய்யவே, புறப்பொருள்களில் அவர்தம் நாட்டம் சென்றது. புறக்கலையையும் புறவிடுதலையையும் வளர்த்தனர். கிரேக்கர்கள் அரசியல்

விடுதலை நாடினர்; இந்துக்களோ எப்போதும் ஆன்மிக விடுதலையையே நாடினர். இரண்டும் ஒரு தலையானவையே. தேசப் பாதுகாவல் பற்றியோ தேசபக்தி குறித்தோ இந்தியன் போதுமான அளவு கருத்துக் கொண்டது இல்லை. அவன் தன்னுடைய மதம் ஒன்றையே காத்து நிற்பான். ஆனால் அதே சமயம் கிரேக்க நாட்டிலும், கிரேக்க நாகரிகம் தொடர்ந்துள்ள ஐரோப்பிய நாடுகளிலும் உள்ள மக்கள் தேசமே பிரதானம் என்று கருதுவார்கள். ஆன்மிக விடுதலையில் மட்டும் கவனம் செலுத்தி சமூக விடுதலையில் கவனம் செலுத்தாது இருப்பது ஒரு குறையே; சமூக விடுதலையில் மட்டும் கவனம் செலுத்தி, ஆன்மிகத்தில் கவனம் செலுத்தாது இருப்பது அதைவிடப் பெரிய குறையாகும். ஆன்மா, உடல் ஆகிய இரண்டின் சுதந்திரத்திற்காகவும் நாம் முயல வேண்டும்.

வேதங்கள் உபநிஷதங்கள் பற்றிய கருத்து

வேதத்தில் காணப்படும் யாககுண்டமே க்ஷேத்திர கணிதத்தின் பிறப்பிடம்.

தேவர்களைத் தொழுது வேண்டுவதுதான் வழிபாட்டின் அடிப்படை. இவ்வாறு தொழுது வேண்டினால், அது தொழுபவர்களுக்கும் தொழப்படுபவர்களுக்கும் பரஸ்பரம் உதவி செய்கிறது என்பதே கருத்து.

துதிசெய்தல் புகழ்பாடுதலன்று. உள்ளப் பண்புடன் சொல்லப்படுமேல், அவை சக்தி மிக்க மந்திரச் சொற்களாகும்.

ஆறுக்கு மேற்பட்ட அறிவுகளும், புலனறிவும், சக்தியும் மிகப் பெற்று வாழும் நிலையே தெய்வ உலகமாகும். உயர்நிலை பெற்ற உடல்களும் இந்த ஸ்தூல உடல்களைப் போலவே அழியுந் தன்மையின.

இந்த உலகத்திலும் சரி, பிற உலகங்களிலும் சரி, எல்லா உடல்களுக்கும் மரணம் உண்டு. தேவர்களும் மரித்தற்குரியவரே; களியாடல் ஒன்றே தரவல்லவர்.

இந்த உடலில், உணரவும் பார்க்கவும் வல்ல ஓர் உயர்ந்த சக்தி இருப்பதுபோலத் தேவர்களுக்குப் பின்னணியாக ஒருவர் இருக்கிறார். அவரே கடவுள்.

படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய சக்திகளும், எங்கும் நிறைதல், எல்லாம் வல்லவராயிருத்தல், எல்லாம் அளித்தல் ஆகிய குணங்களும் உள்ளவரே தேவர்களுக்கு எல்லாம் தேவராவார்.

"அழியாத பரம்பொருளின் குழந்தைகளே! மேலுலகத்தில் உள்ள தேவர்களே! கேளுங்கள்! இருளுக்கும் ஐயத்திற்கும் அப்பாற்பட்ட ஒளிச்சுடரை நான் கண்டுகொண்டேன். பண்டைப் பழம்பொருளை நான் கண்டுகொண்டேன்." இதற்கான வழி உபநிஷதங்களில் காணப்படுகிறது.

பூமியில் நாம் சாகிறோம்; தேவருலகிலும் சாகிறோம்; அதற்கு மேம்பட்ட உலகிலும் சாகிறோம்; கடவுளை அடையும் போதுதான் அமரவாழ்வு பெறுகிறோம்.

உபநிஷதங்கள் இதைப் பற்றியே பேசுகின்றன. உபநிஷதங்களின் வழி தூய வழியாகும். அப்போதைய பழக்க வழக்கங்கள் பலவற்றையும் அவ்வப்பகுதிகளைப் பற்றிய குறிப்புகளையும் இப்போது நாம் புரிந்துகொள்ள முடியாது. எனினும், அவை மூலம் சத்தியம் தெளிவாகிறது. உண்மை ஒளியை அடைவதற்காக விண்ணும், மண்ணும் புறக்கணிக்கப் படுகின்றன.

உபநிஷதங்கள் கூறுகின்றன :—

"ஆண்டவன் இந்தப் பிரபஞ்சத்தில் ஊடுருவி நிற்கின்றான். இந்தப் பிரபஞ்சம் முழுவதும் அவனுடைமையே"

"அவன் எங்கும் நிறைந்தவன்; இணையில்லாதவன்; உருவற்றவன்; தூயவன்; மகாகவி; கதிரவனையும் தாரகைகளையுமே சந்தமாகக்கொண்டு கவிபுனைவோன்; தக்கார்க்குத் தக்கபடி அளிப்பவன்."

"சடங்குகளின் மூலம் ஒளிபெற முயல்பவர்கள் அறியாமையில் மூழ்கிக்கிடக்கிறார்கள். அதே போல், இயற்கையே எல்லாம் என்று எண்ணுபவர்களும் அறியாமையில் மூழ்கியுள்ளவர்களே. இதை எண்ணி, இயற்கைக்கு அப்பால்

செல்ல விரும்புபவர்களோ இன்னும் அதிக அறியாமையில் மூழ்கியுள்ளவர்களே.''

அப்படியானல் சடங்குகள் தீயவையா? இல்லை. முன்னேறிச் செல்பவர்களுக்கே அவை பயன்தரும்.

உபநிஷதம் ஒன்றில், நசிகேதன் என்ற ஓர் இளைஞன் கீழ்க்கண்டவாறு யமனிடம் கேட்கிருன்:

''இறந்தவன் ஒருவனைப் பற்றிச் சிலர், 'அவன் போய் விட்டான்' என்று கூறுகின்றனர். மற்றும் சிலர், 'அவன் இன்னும் வாழ்கிருன்' என்கின்றனர். யமனே, நீயே மரணத்தின் அதிதேவன். நீயே உண்மையறிந்தவன். தயவு செய்து எனது ஐயத்தைப் போக்கு.''

யமன் பதில் அளித்தான்:

''பெரும்பாலான தேவர்களுக்கே இது தெரியாது. ஆகவே மனிதர்களைப் பற்றிக் கூறுவதற்கில்லை. பையனே, இந்த விஷயத்தை என்னிடம் கேளாதே.''

நசிகேதன் விடவில்லை. மீண்டும் வற்புறுத்துகிருன். யமன் மறுபடியும் சொல்கிருன்:

''தேவர்களுக்குக் கிடைக்கக்கூடிய இன்பங்களை எல்லாம் கூட உனக்கு வழங்குகிறேன். இந்தக் கேள்வியை மட்டும் வற்புறுத்தாதே.''

நசிகேதன் அசையவில்லை. குன்றனைய உறுதியுடன் நிற்கிருன். பின்னர் மரணதேவன் கூறுகிருன்:

''குழந்தாய்! செல்வம், அதிகாரம், நீண்ட ஆயுள், புகழ், குடும்பம் ஆகியவற்றையெல்லாம் மும்முறை நிராகரித்து விட்டாய். மிக உயர்ந்த சத்தியத்தைக் கேட்கும் துணிவு உன்னிடம் உளது. ஆதலின் நான் உனக்கு அதை உபதேசிக்கிறேன். அதற்கு இரண்டு வழிகள் இருக்கின்றன; ஒன்று சத்திய வழி; மற்ருென்று சுகவழி. நீ சத்தியவழியைத் தேர்ந்தெடுத்திருக்கிருய்.''

இந்த இடத்தில் சத்திய உபதேசத்திற்குரிய நிபந்தனைகளை நீங்கள் கவனிக்கவேண்டும். முதலாவது பரிசுத்தம்—ஒரு பையன், பரிசுத்தமான, ஆசையெனும் மேகம் படராத

ஓர் ஆன்மா, இந்தப் பிரபஞ்ச ரகசியத்தைக் கேட்கிருன். இரண்டாவதாக, வேறு பயன் ஏதும் கருதாமல், சத்தியத்திற்காகவே அவன் அதை ஏற்கவேண்டும்.

தாமே உணர்ந்து மெய்யுணர்வு பெற்ற ஒருவனிடமிருந்து, சத்தியத்தை அறிந்தாலன்றி, அது பலன் தராது. புத்தகங்கள் அதைத் தரவல்லன அல்ல. வெறும் தர்க்கத்தால் அதை ஸ்தாபிக்க முடியாது. எவன் அதன் இரகசியத்தை அறிகிருனே, அவனுக்கே அது காட்சி தரும்.

சத்தியத்தை அறிந்த பின் அமைதியில் அமர்க. வீண் வாக்கு வாதங்களில் உழலற்க. உணர்வில் தாஞக ஒன்றுக. அதைச் செய்யவல்லவனும் நீயே. அஃது இன்பமன்று; துன்பமும் அன்று; பாவமன்று; புண்ணியமும் அன்று; ஞானம் அன்று; அஞ்ஞானமும் அன்று. இதை நீ உணர வேண்டும். ஆகவே, அதை நான் உனக்கு எவ்வாறு விவரிக்கமுடியும்?

"ஆண்டவனே, உன்னையல்லால் மேறு எதையும் வேண்டேன்" என்று எவன் உளங்கனிந்து கரைந்து கதறுகிருனே, அவனுக்கே ஆண்டவன் காட்சி தருவான். பரிசுத்தமாக விரு; அமைதியாக இரு. குழம்பிய உள்ளத்தில் ஆண்டவன் உருவத்தைக் காணல் இயலாது.

வேதங்கள் அறிவிக்கும் ஒருவனுக்கு, எவனை அடைதற்பொருட்டு நாம் பிரார்த்தனையையும் காணிக்கையையும் செலுத்துகிருேமோ அவனுக்கு, வர்ணிக்க முடியாத அப்பரம்பொருளுக்கு, "ஓம்" என்பதே புனிதமான பெயர். சொற்கள் எல்லாவற்றுள்ளும் புனிதமான சொல் இதுவே! இந்தச் சொல்லின் இரகசியத்தை அறிந்தவன் தான் விரும்பியதைப் பெறுவான். இந்தச் சொல்லிலே சரண்புகுவீர். எவர் இச்சொல்லை சரணடைகிருரோ, அவருக்கே வழி திறக்கப்படும்.

ராஜயோகம்

யோகத்தின் முதல் கட்டம் இயமம்.

இயமத்தில் தேர்ச்சி பெற ஐந்து விஷயங்கள் அவசியம்:

(1) மனம், வாக்கு, காயம் ஆகிய எதனுலும் எவ்வுயிர்க்கும் தீங்கு விளைவியாதிருக்கவேண்டும்.

(2) எண்ணத்திலும், பேச்சிலும், செயலிலும் உண்மையே கடைப்பிடிக்கவேண்டும்.

(3) எண்ணம், சொல், செயல் ஆகிய மூன்றிலும் பொருளாசையற்றிருத்தல் வேண்டும்.

(4) எண்ணம், சொல், செயல் ஆகிய மூன்றிலும் தூய்மைவேண்டும்.

(5) எண்ணம், சொல், செயல் ஆகிய மூன்றிலும் சிறிதும் பாவம் செய்யாதிருக்கவேண்டும்.

புனிதத் தன்மையே மிக உயர்ந்த சக்தியாகும். மற்றவை எல்லாம் அதன் முன் அடங்கும்.

இதற்கு அடுத்தது ஆசனம். பக்தன் அமரும் முறை. தலை, முதுகெலும்பு, உடல் ஆகிய மூன்றும் நேராக இருக்கும் வகையில் நன்கு அமர்தல்வேண்டும். உறுதியாக நீங்கள் அமர்ந்திருப்பதாகவும், உலகில் எதுவும் உங்களை அசைக்க முடியாது எனவும் எண்ணுக. பின்னர் உடலின் ஒவ்வொரு பகுதியும்—தலையிலிருந்து கால்வரை—தூய்மையுடன் இருப்பதாக எண்ணுங்கள். பளிங்குபோல் தெளிவாக இருக்கிறது என்றும், வாழ்க்கை என்னும் கடலில் மிதந்து செல்லத் தக்க மரக்கலமாக இருக்கிறது என்றும் எண்ணிக் கொள்ளுங்கள்.

உங்களுக்கு உதவி செய்யுமாறு ஆண்டவனை வேண்டுங்கள்; இந்த உலக இரட்சகர்களை வேண்டுங்கள்; தீர்க்க தரிசிகளை வேண்டுங்கள்; இப்பிரபஞ்சத்தில் புனித ஆவியாக இருப்பவர்களை வேண்டுங்கள்.

இதன் பிறகு அரைமணி நேரம் பிராணயாமம் செய்யுங்கள். மூச்சை உள்ளே இழுக்கும்போதும் வெளியே விடும்போதும் மனத்திற்குள் "ஓம்" "ஓம்" என்று ஜபித்துக் கொண்டு இருங்கள். ஆன்ம சக்தி பெற்ற சொற்கள் அற்புத சக்தி வாய்ந்தவை.

யோகத்தின் மற்றைய படிகளாவன: (1) பிரத்தியாகாரம். அதாவது புலனடக்கம். புறவுலகில் திரியாவண்ணம் புலன்களை அடக்கி உள்ளத்தில் ஒன்றச் செய்தல்.

(2) தாரணு அல்லது நிலையான ஏகாக்ரசித்தம். (3) தியானம். (4) சமாதி அல்லது தியானத்தில் ஒன்றியநிலை. யோகத்தின் உயர்ந்தபடி இதுவே; இறுதிப் படியும் இதுவே. சிந்தை முழுவதையும் பரம்பொருளிடத்தில் ஈடுபடுத்தி ஒன்றியிருப்பதே சமாதி நிலையாகும். அந்த நிலையில் "நானும் எனது பிதாவும் ஒருவரே" என ஒருவன் உணர்கிருன்.

ஒன்றே செய்க; ஒரொருகாலில் ஒன்றே செய்க. அதுவும் நன்றே செய்க. உள்ளம் முழுதும் ஒன்றிச் செய்க. மற்றவை யாவும் தள்ளிச் செய்க.

பக்தி யோகம்

பக்தி யோகம் என்பது இறையுடன் இயைதற்கான ஒழுங்குபடுத்தப்பெற்ற பக்தி மார்க்கமே. சமயம் அல்லது மெய்யுணர்வுக்கு அதுவே எளிய நிச்சயமான மார்க்கமாகும்.

ஆண்டவன் அன்பே இம்மார்க்கத்தில் சித்தி பெறுவதற்குத் தேவையான ஒன்று.

ஆண்டவன் அன்பு ஐந்து படிகள்கொண்டது :-

முதற்படி : மனிதன் உதவிவேண்டுகிருன். சிறிது அச்சத்துடன் இருக்கிருன்.

இரண்டாவது படி : கடவுளைப் பிதாவாகக் கருதுதல்.

மூன்ருவது படி : ஆண்டவனைத் தன் அன்னையாகக் கொள்ளுதல். அப்போது மாதர் எல்லாருமே அன்னை பராசக்தியின் பிரதிபிம்பங்கள் என்ற நோக்கு உண்டாகும்.

நான்காவது படி : பக்திக்காகவே பக்தி. இது, குணங்கள் எல்லாவற்றையும் தாண்டிய நிலை.

ஐந்தாவது படி : இறையுடன் ஒன்றி நிற்பதில் ஆர்வம். இறைவன் வேறு நாம் வேறு என்ற இரண்டற்ற ஒன்றிய நிலைக்குச் செலுத்துகிறது. ஆண்டவன் குணமிலன்; குறியிலன். எனினும் இரண்டும் உடையவன். நாமும் அவ்வண்ணமே இருக்கிரேம்.

பக்தி மார்க்கத்தில் வளர்வதற்குப் பிரார்த்தனையும் துதி பாடுதலுமே முதல் வழி. ஆண்டவன் நாமத்தை மீண்டும் மீண்டும் சொல்வது அற்புதசக்தி அளிக்கிறது.

மந்திரம் என்பது சீரிய சொல்; புனிதச் சொற்றொடர்; சீடன் ஒருவன் மீண்டும் மீண்டும் சொல்வதற்காகவும், சிந்திப்பதற்காகவும் குருநாதரால் தேர்ந்தெடுக்கப்படுவது. பிரார்த்தனை செய்யவும், ஸ்தோத்திரம் செய்யவும், ஏதாவது ஒரு மூர்த்தியைத் தேர்ந்தெடுக்கவேண்டும். அதுவே அவனுடைய இஷ்டதெய்வம்.

இந்த மந்திரங்கள் எல்லாம் வெறும் சொல்லோசை அல்ல; அவையே கடவுள். அவை நம்முள்ளேயே உள்ளன. ஆண்டவனைப் பற்றிச் சிந்தியுங்கள். அவனைப் பற்றிப் பேசுங்கள். உலகின் மீது பாசம் வேண்டாம்! "நீ எதை நினைக்கிறாயோ அதே ஆகிறாய்" என்பதுவே புத்தர் மலைமீது செய்த உபதேசம்.

சமாதி நிலையை அடைந்த பக்தன் பக்தியிலும் வழிபாட்டிலும் மீண்டும் இறங்குகிறான்.

தூய்மையான அன்புக்கு உள் நோக்கம் எதுவும் இல்லை; பெறும் பயன் ஏதும் இல்லை.

பிரார்த்தனைக்கும் ஸ்தோத்திரத்துக்கும் பின்னர் சமாதி நிலை வருகிறது. அதன் பின்னர் ஆண்டவனுடைய நாமத்தையும் அவனுடைய இஷ்ட தெய்வத்தையும் பக்தன் தியானிக்கிறான்.

நமது தாயாகவும் தந்தையாகவும் விளங்குபவர், நமது பந்தபாசங்களை அறுக்க வேண்டும் என்று பிரார்த்தனை செய்க.

"தந்தையொருவன் தனது மகனின் கைப்பற்றி அழைத்துச் செல்வதுபோல, ஆண்டவனே நீயும் எங்களின் கைப்பற்றி அழைத்துச் செல்; விட்டு விடாதே" என்று ஆண்டவனிடம் பிரார்த்தனை செய்க.

"செல்வம் வேண்டேன்; அழகு வேண்டேன்; இவ்வுலகு வேண்டேன்; மறுவுலகும் வேண்டேன். இறைவா!

நான் மிகவும் அலுத்துப்போனேன். என் தலைவனே! என்னைக் கைப்பற்றி அழைத்துச் செல். உன்னையே சரண்புகுந்துவிட்டேன். என்னையாட்கொள். நீயே சரண்'' என வேண்டுங்கள்.

''எனது தாயே! தந்தையே! ஆருயிர் நண்பனே! இந்தப் பிரபஞ்சத்தையே தாங்குபவனே! இந்த வாழ்வின் சிறுசுமையைத் தாங்க எங்களுக்கு அருள் செய். எங்களை விட்டு விடாதே. உன்னிடமிருந்து எங்களை ஒருபோதும் பிரித்து விடாதே. என்றும் உன்னடியில் வாழ்வோம்.'' என்று பிரார்த்தனை செய்யுங்கள்.

ஆண்டவனிடம் உள்ள பக்தி வெளிப்படும்போது, அதுவே எல்லாமாக இருக்கும்போது, இந்த உலகம் ஒரு சிறு துளியாகவே தோன்றும்.

நிலையாமையிலிருந்து, நிலையானதற்குச்செல். இருளிருலிருந்து ஒளிக்கு வா.

ஞானயோகம்

முதலில், தியானம் மறுப்பில் தொடங்க வேண்டும். ஒவ்வொன்றையும் சிந்தித்து ஒதுக்கிவிடு. மனதில் வரும் ஒவ்வொரு சிந்தனையையும், சங்கற்பத்தின் மூலம் பகுத்துணர்.

அதன் பின் உண்மையில் நாம் என்னவாக இருக்கின்றோமோ, அதை, அதாவது சத், சித், ஆனந்தமாக இருப்பதை வலியுறுத்து.

தியானிக்கும் மனிதனையும் தியானிக்கப்படும் இறைவனையும் இணைத்துவைக்கும் சாதனமே தியானமாகும். கீழ்க்கண்டவாறு தியானம் செய்:

மேலேயுள்ளனவெல்லாம் நானே; கீழேயுள்ளனவெல்லாம் நானே; இடையில் இருப்பனவெல்லாம் நானே. எல்லாவுயிர்களிலும் நானே இருக்கின்றேன்; எல்லாவுயிர்களும் என்னில் இருக்கின்றன. ஓம் தத்சத். அதுவே நான். இந்த மனதிற்கு அப்பாற்பட்டவன் நான். நானே இந்தப்

பிரபஞ்சம் முழுவதற்கும் ஜீவன். நான் இன்பமும் இல்லை; துன்பமும் இல்லை.

இந்த உடல் தண்ணீர் குடிக்கிறது; சாப்பிடுகிறது; மற்றும் இதுபோன்ற வேலைகளைச் செய்கிறது. இந்த உடல் நான் அல்லன்; மனமும் நான் அல்லன்; நானே அவன்.

நான் சாட்சி. நான் விலகிநின்று பார்க்கிறேன். உடல் நலனுக்கு நான் சாட்சி; நோய்க்கும் நானே சாட்சி.

நான் சத், சித், ஆனந்தம்.

நானே அறிவின் சத்து; அமுது. என்றும் நான் மாறுதல் அடையமாட்டேன். நான் அமைதியானவன்; ஒளியுள்ளவன்; மாறுதல் இல்லாதவன்.

மெய்ப்பொருளும் மாயையும்

ஒரு பொருளை மற்றொன்றிலிருந்து பிரித்துக்காட்டுவன், காலம், இடம், ஏவல் இம் மூன்றுமே.

வேறுபாடுகள் எல்லாம் புறவுருவிலேயே; அகக் கருவில் அன்று.

புறத்தில் தோன்றும் உருவை அழித்துவிடலாம்; அது நிரந்தரமாகவும் அழிந்துவிடும். ஆனால் கரு எப்போதுமே நிலைத்திருக்கும். இந்தக் கருவை நீங்கள் ஒருபோதும் அழிக்கமுடியாது.

பரிணமம் என்பது இயற்கையின் கூறு; ஆன்மாவினது அன்று. ஆன்மாவின் புறத்தோற்றமே இயற்கையின் பரிணமம்.

பொதுவாகக் கூறப்படுவது போல மாயை என்பது பொய்த் தோற்றம் அன்று. மாயை என்பது உண்மையானது; அதே சமயம் அது உண்மையற்றதும் ஆகும். மாயையின் பின்னே மெய்ப் பொருள் உள்ளபடியால் அதற்கு மெய்த் தோற்றத்தை அளிக்கிறது. மாயையில் எது உண்மையாக இருக்கிறதோ, அதுதான் மாயையை ஊடுருவி நிற்கும் மெய்ப் பொருள். இந்த மெய்ப் பொருளை நாம் ஒருபோதும் பார்க்க முடியாது. ஆகையால் எதை நாம் பார்க்கின்றோமோ, அது உண்மையற்றது; அதற்கு

உண்மையான தனி வாழ்வு என்பது இல்லை; தனது வாழ்வுக்கு அது மெய்ப்பொருளையே நம்பியிருக்கிறது.

ஆகவே மாயை என்பது முன்னுக்குப் பின் முரணான ஒரு பொருள்; உண்மையானது; எனினும் உண்மையற்றது. ஒரு பொய்த் தோற்றம்; எனினும் பொய்த் தோற்றம் அல்லாத ஒன்று.

மெய்ப்பொருளை அறிந்தவன் மாயையில் பொய்த் தோற்றத்தைக் காண்பதில்லை ; மெய்ப்பொருளையே காண்கிறான். ஆனால் மெய்ப் பொருளை அறியாதவன் மாயையில் பொய்த் தோற்றத்தையே காண்கிறான். அந்தப் பொய்த் தோற்றத்தை உண்மையென்றும் நம்பிவிடுகிறான்.

ஜீவ மரண நியதி

இயற்கையில் உள்ளன எல்லாம் ஒரு நியதிப்படியே இயங்குகின்றன; அகமும் புறமும் விலக்கு இல்லை; இந் நியதிக்கு அடங்கினவே.

அக இயற்கை, புற இயற்கை, மனம், சடம் ஆகிய எல்லாம் காலம், இடம் எனும் இரண்டிற்கும் உள்ளடங்கியவை; காரணகாரிய நியதிக்குக் கட்டுப்பட்டவை.

மனோசுதந்திரம் என்பது ஒரு கற்பனை. அது ஒரு நியதிக்குக் கட்டுப்பட்டு இயங்கும்போது, எப்படி சுதந்திரமாக இருக்க முடியும்?

கர்மபலன் என்பது காரணகாரிய நியதியேயாகும்.

நாம் சுதந்திரமுள்ளவர்களாக வேண்டும். சுதந்திரம் உள்ளவர்களாகவே இருக்கிறோம்; அதை அறிதலே நாம் ஆற்றவேண்டிய பணி. அடிமைத்தனம் எல்லாவற்றையும், பந்தபாசங்கள் எல்லாவற்றையும் விட்டொழிக்க வேண்டும். இந்த உலகுடனும், உலகத்து மாந்தருடனும், உலகப் பொருள்களுடனும் நமக்கு இருக்கும் பந்தத்தை அறவே ஒழித்துவிடல் வேண்டும். அஃதுடனன்றி சுவர்க்கம், சந்தோஷம் என்பன போன்ற எண்ணங்களையும் அறவே ஒழித்துவிட வேண்டும்.

ஆசையினாலே இந்த உலகத்தில் நாம் கட்டுண்டு உள்ளோம். இதே ஆசையால்தான் கடவுள், சுவர்க்கம்,

தேவர் ஆகியவர்களுக்கும் கட்டுண்டு இருக்கின்ருேம். மனிதர்க்காயினும் சரி, தேவர்க்காயினும் சரி, கடவுளுக் காயினும் சரி எவர்க்கு அடிமையாக இருந்தாலும் அடிமை அடிமையே.

சுவர்க்கத்தைப் பற்றிய எண்ணம் நீங்க வேண்டும். சுவர்க்கம் என்ற ஒன்று இருக்கிறது, மரணத்தின் பின்னர் நல்லவர்கள் அங்கே நிரந்தரமாக மகிழ்ச்சியுடன் வாழ்கிருர் கள் என்பன எல்லாம் பகற்கனவு; துளியும் கருத்தற்றவை; பொருளற்றவை. எங்கே மகிழ்ச்சி இருக்கிறதோ, அங்கே எப்போதாவது ஒரு சமயம் துக்கம் தொடர்வது உறுதி. எங்கே இன்பம் இருக்கிறதோ, அங்கே துன்பமும் இருந்தே தீர வேண்டும். இது உறுதி; முக்காலும் உறுதி. ஒவ்வொரு செயலும் எதாவது ஒரு பிரதிபலன் கொண்டதே.

விடுதலை பெறவேண்டும் என்ற எண்ணமே விமோசனம் அளிக்கும் மெய்க்கருத்தாகும். எல்லாவற்றிலிருந்தும் விடுதலை; புலன்களிலிருந்து விடுதலை; இன்ப துன்பங்களி லிருந்து விடுதலை; நல்லன கெட்டனவற்றிலிருந்து விடுதலை.

இவற்றினும் மேலானது மற்ருென்றுளது. மரணத் திலிருந்து நாம் விடுதலை பெறவேண்டும். மரணத்தினின்றும் விடுதலை பெறவேண்டுமாயின், வாழ்விலிருந்தும் நாம் விடுதலை பெறவேண்டும். வாழ்வு என்பது சாவு பற்றிய ஒரு கனவே. பிறப்பு உண்டேல் இறப்பும் உண்டு. எனவே இறப்பொழித்தல் வேண்டுமாயின் பிறப்பினை ஒழி.

நம்புக; நாம் என்றும் சுதந்திரமாகவே இருக்கிருேம். நம்பிக்கை ஒன்றே வேண்டுவது. நீயே ஆன்மா; பந்த மற்றவன்; என்றும் உள்ளவன்; என்றுமே விடுதலை பெற்றவன்; என்றுமே அருள் பெற்றவன். நம்புக; உறுதியாக நம்புக; மறுகணம் விடுதலை பெறுவாய்.

காலம், இடம், காரணகாரியம் ஆகியவற்றிற்கு உள் ளடங்கிய எதுவும் கட்டுப்பட்டதே. ஆன்மா என்பது காலத்திற்கு அப்பாற்பட்டது; இடத்திற்கு அப்பாற்பட்டது; காரணகாரியங்களுக்கு அப்பாற்பட்டது. காலம், இடம், காரணகாரியம் ஆகியவற்றிற்குக் கட்டுப்பட்டது இயற்கையே; ஆன்மா அன்று.

எனவே உனது சுதந்திரத்தைப் பிரகடனம் செய். உனது தன்மையை உணர்; என்றும் சுதந்திரமாயிரு; என்றும் அருள் பெற்றிரு.

காலம், இடம், காரணகாரியம் ஆகியவற்றை நாம் மாயை என்று அழைக்கிறோம்.

ஆன்மாவும் கடவுளும்

இடம் எனப்படும் வெளியில் எப்பொருளும் ஓர் உருப் பெறுகிறது. வெளியும் உருவம் பெற்றதே. வெளியில் நீ இருக்கிறாய். அல்லது உன்னில் வெளி இருக்கிறது. ஆன்மாவானது வெளியின் புறத்தது. வெளியானது ஆன்மாவின் அகத்தது. ஆன்மா வெளியின் அகத்தது அன்று.

உருவமானது காலம், இடம் ஆகியவற்றிற்கு உள்ளடங்கியது; காரணகாரிய நியதிக்குக் கட்டுப்பட்டது. காலம் என்பது நம்முள் உள்ளது; அதற்குள் நாம் இல்லை. காலம் இடம் ஆகியன ஆன்மாவுக்கு இல்லை; ஆதலின் காலம், இடம் எல்லாம் ஆன்மாவில் இருக்கின்றன. எனவே ஆன்மாவானது எங்கும் நிறைந்தது.

கடவுளைப் பற்றி நாம் கொண்டிருக்கும் கருத்தானது நமது பிரதிபலிப்பே.

பண்டைய பாரசீகமும், சமஸ்கிருதமும் ஒன்றிய கருத்துடையன.

இயற்கையின் பல்வேறு அம்சங்களுடன் ஒன்றுபடுத்துவதே மிகப் புராதன காலத்திய இறை பற்றிய கருத்தாக விளங்கியது. இதற்கு அடுத்த கட்டம் குலதெய்வ வழிபாடு; அதற்கும் அடுத்த கட்டம் மன்னர் வழிபாடு.

தேவலோகத்தில் ஆண்டவன் இருக்கிறான் என்ற கருத்து, இந்தியா தவிர மற்ற நாடுகள் எல்லாவற்றிலும் பிரதானமாக இருக்கிறது. இது சிறிதும் பண்படாத கருத்து.

தொடர்ந்து வாழ்வு இருக்கிறது என்ற கருத்தும் முட்டாள்தனமானது. நாம் வாழ்விலிருந்து விடுபட்டாலொழியச் சாவிலிருந்து விடுபடல் முடியாது.

இலட்சியம்

கடவுளும், இயற்கையும் என்றுமே தனித்திருப்பன என்பது துவைதக் கருத்து. பிரபஞ்சமும் இயற்கையும் என்றென்றும் கடவுளேயே சார்ந்திருக்கும் என்கிறது அது.

தீவிர ஏகான்மவாதிகள் இத்தகைய வேற்றுமைகளை ஏற்பதில்லை. முடிவாக ஆராயுங்கால் எல்லாம் கடவுளே என்று அவர்கள் கூறுகின்றுர்கள். பிரபஞ்சமானது கடவுளில் அடங்கிவிடுகிறது; கடவுளே பிரபஞ்சத்தின் அழியாத ஜீவன்.

அவர்களைப் பொறுத்தவரை, 'எல்லையற்றது' 'எல்லைக் குட்பட்டது' என்பவையெல்லாம் வெறும் சொற்களே. இயற்கை, பிரபஞ்சம் முதலியவையெல்லாம் பெயரளவில் தான் வெவ்வேருக உள்ளன. இயற்கையே பல்வித வேறுபாடுகளைக் கொண்டதுதான்.

"ஏன் கடவுள் இந்தப் பிரபஞ்சத்தைப் படைத்தார்?" "சர்வமும் பரிசுத்தமானவர், பரிசுத்தம் அல்லாத ஒன்றை ஏன் படைக்கவேண்டும்?" என்ற கேள்விகளுக்கெல்லாம் ஒருகாலும் பதில் அளிக்க முடியாது. ஏனெனில் இப்படிப்பட்ட கேள்விகளெல்லாம் தர்க்கசாஸ்திர அடிப்படையில் அபத்தமானவை. பகுத்தறிவே இயற்கையில்தான் இருக்கிறது; இயற்கைக்கு அப்பால் அதற்கு இடமில்லை. கடவுள் சர்வ சக்தி வாய்ந்தவர். ஆகையால் அவர் ஏன் இதைச் செய்தார் அல்லது அதைச் செய்தார் என்று கேட்பது அவரை ஒரு வரையறைக்குள் கட்டுப்படுத்துவதாகும். ஏனெனில் இந்தக் கேள்விகளிலெல்லாம், மறைமுகமாக, "கடவுள் ஏதோ ஒரு நோக்கத்துடன்தான் இந்தப் பிரபஞ்சத்தைப் படைத்தார்" என்பது அடங்கிக்கிடக்கிறது. அவருக்கு ஒரே நோக்கம் இருந்திருந்தது என்ருல் ஏதோ ஒரு குறிக்கோளுக்கு அவர் ஒரு சாதனமாகப் படைப்பை மேற்கொண்டிருக்கிருர் என்ருகிறது. அதாவது, ஒரு சாதனம் இல்லாது அவரால் ஒரு குறிக்கோளை வைத்துக்கொள்ள முடியாது என்ருகிறது. தன்ஞல் தனியாகச் செயல்பட முடியாது மற்ருென்றைச் சார்ந்திருக்கும் ஒரு பொருளைப் பற்றித்தான் "ஏன்?" "எப்படி?" என்ற கேள்விகளெல்லாம் கேட்கமுடியும்.

மதத்தின் உண்மை

மதத்தைக் குறித்த மாபெரும் கேள்வி இது:

மதம் விஞ்ஞான ரீதியில் அமையாதது ஏன்? மதம் ஒரு விஞ்ஞானம் என்ருல், ஏன் மற்ற விஞ்ஞானங் களைப் போல் நிச்சயமானதாக அது இல்லை. கடவுள், சுவர்க்கம் முதலியவை பற்றிக் கூறப்படுவன எல்லாம் வெறும் நம்பிக்கை; கட்டுக்கதை. அவைபற்றி உறுதியானது எதுவுமே இல்லை. மதத்தைப் பற்றிய நம்முடைய கருத்துக் கள் எந்நேரமும் மாறிக்கொண்டே இருக்கின்றன. மனம் ஓயாது குழப்பத்திலேயே இருக்கிறது.

மனிதன் மாறுதலற்ற பொருளாகிய ஆன்மாவா? அல் லது ஓயாது மாறிக்கொண்டிருக்கும் பொருளா? மிக மிக முற்காலத்திய புத்தமதம் தவிர ஏனைய மதங்கள் எல்லாம் அழிவில்லாததும், என்றும் இருப்பதும், தனித்து விளங்குவதுமாகிய ஆன்மாவே மனிதன் என்று கூறு கின்றன.

“மனிதன் ஓயாது மாறுதல் அடைந்துகொண்டிருக்கும் பரிமாணம். அவனுடைய விழிப்புணர்வின்போது எண் ணற்ற மாறுதல்கள் எல்லையின்றி ஏற்பட்டுக் கொண்டிருக் கின்றன. இந்த மாறுதல் ஒவ்வொன்றும் மற்றவையுடன் தொடர்பில்லாதவை” என்பது முற்கால புத்த மதத்தினர் கூற்று. இது, காரணகாரிய நியதி தத்துவத்துக்கு முரண் பட்டது.

மூலம் ஒன்று உண்டாயின் அதற்குக் கருவும் உண்டு; மற்ருென்றுடன் கலவாது; எதையும் சாராது; நாடாது; தன்னிகரின்றித் தானய் விளங்குவது; என்றுமுளது.

ஆனல் புராதன புத்த மதத்தினரோ இந்த உலகில் எப் பொருளும் மற்ருென்றுடன் தொடர்பில்லாதது என்று கூறு கின்றனர். “மூலம் என்ற ஒன்றில்லை. மனிதனெனவன் ஒரு தனிமூலம் என்பது வெறும் நம்பிக்கையே. அதை நிரூபிக்க முடியாது” என்றும் அவர்கள் சொல்கிருர்கள்.

ஆகவே இப்போதுள்ள பெரிய கேள்வி என்ன வென் ருல், “மனிதன் ஒரு தனிப்பொருளாகிய ஆன்மாவா,

அல்லது எப்போதும் மாறிக்கொண்டிருக்கும் ஒரு ஸ்தூலப் பொருளா ? ” என்பதுதான்.

இந்தக் கேள்விக்குப் பதில் அளிக்க, இதை நிரூபிக்க ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. மனதின் சுழற்சிகளை நிறுத்திவிடுங்கள் ; மனிதன் ஒரு தனிப்பொருளாகிய ஆன்மாதான் என்பது நிரூபிக்கப்பட்டுவிடும். மாறுதல்கள் எல்லாம் என்னிடம், எனது சித்தத்தில்தான் இருக்கின்றன. மாறுதல்கள் என்னுடையனவல்ல. எனினும் நான் அவைகளை நிறுத்த முடியாது.

“ இந்த உலகம் மிகவும் நேர்த்தியானது ; அதில் நான் சந்தோஷமாக இருக்கிறேன் ” என்ற கருத்தை ஒவ்வொருவரும் தனக்குள்ளும் பிறருக்கும் ஏற்படுத்தப் பார்க்கின்றனர். ஆனால் வாழ்க்கையில் நம்முடைய நோக்கங்கள் என்ன என்பதை மனிதன் யோசித்தானானால், “ சில பொருள்களுக்காகத் தான் முயல்வதெல்லாம் தான் விரும்பி அல்ல. தன்னால் அவ்வாறு கெடாமல் இருக்க முடியாது என்பதனாலேயே ” என்பதைத் தெரிந்து கொள்வான். அவன் ஏதாவது செயல்பட்டுக் கொண்டே இருக்க வேண்டும். அவனால் ஓய்ந்திருக்க முடியாது. ஆகையால் அவன், “எனக்கு இது வேண்டும், அது வேண்டும் ” என்று தனக்குத்தானே திருப்திப்படுத்திக் கொள்கிறான். தன்னுடைய காலம் நன்றாகப் போவதாய் உண்மையில் தனக்குத் தானே திருப்திகொள்ளக் கூடியவன், அற்புதமான உடல் நலம் உள்ளவனே. இந்த மனிதன் தன்னுடைய விருப்பங்களை எவ்வித மறுப்புமின்றி நிறைவேற்றி வைக்கிறான். அவனுள் இருக்கும் சக்தி தூண்டுகிறாற் போல அவன் செயலாற்றுகிறான். ஏதோ தானே விரும்பிச் செயல்புரிவது போல அவனை இச்சக்தி தூண்டுகிறது. வேறு எவ்வாறும் அவன் சிந்திக்க முடியாமல் செய்து விடுகிறது. ஆனால் அவனை இயற்கை மோதித் தள்ளும்போது, இந்த மோதலினால் பல புண்களையும் காயங்களையும் அவன் அடையும்போது, இவற்றின் பொருள் எல்லாம் என்னவென்று அவன் யோசிக்க ஆரம்பித்து விடுகிறான். மேலும் மேலும் காயமடைந்து மேலும் மேலும் சிந்திக்கும்போது, தனது கட்டுப்பாடுக்கு அப்பாற்பட்ட ஒரு சக்தி தன்னைத் தூண்டுவதையும்,

அந்தச் சக்திக்குப் பணிந்தேயாகவேண்டும் என்ற நிலை யிருப்பதால் தான் அதன்படிச் செயல்புரிவதையும் காண் கிறான். இதன் பின்பு அவன் கிளர்ந்தெழுகிறான்; போராட் டம் ஆரம்பமாகிறது.

ஆகவே, இந்தக் கஷ்டங்களிலிருந்து விடுபட வழி இருக்கிறதா என்றால், இருக்கிறது. அவ்வழி நம்முள் ளேயேதான் இருக்கிறது. மெய்ப்பொருளை அறிய நாம் எப்போதுமே முயன்று கொண்டிருக்கிறோம். இவ்வாறு முயல்வது நம்முடன் பிறந்த குணமாகவும் இருக் கிறது. மனித ஆன்மாவில் உள்ள படைப்புத்தான் ஆண்டவனை மூடி மறைத்துவிடுகிறது. இதனால்தான் கட வுளைப் பற்றிய தத்துவங்களில் இவ்வளவு வேறுபாடு இருக்கி றது. இந்தப்படைப்பு நிற்கும்போதுதான் நாம் ஆண்ட வனைக் காணமுடியும். பரம்பொருள் நமது ஆன்மாவில் இருக்கிறதே யொழியப் படைப்பில் இல்லை. ஆகவே படைப்பை நிறுத்துவதன் மூலம், நாம் பரம்பொருளைக் காணமுடியும். நாம் நம்மைப் பற்றிச் சிந்திக்கும் போது நமது உடலைப் பற்றித்தான் சிந்திக்கின்றோம்; அதேபோல், ஆண்டவனைப் பற்றிச் சிந்திக்கும்போது அவனை ஒரு உட லாகவே எண்ணுகிறோம். ஆகவே நாம் செய்ய வேண்டிய பணி, மனதின் ஓட்டத்தை நிறுத்தி, ஆன்மாவின் வடிவம் தெரியுமாறு செய்வதுதான். உடலிலிருந்துதான் பயிற்சி ஆரம்பமாகிறது. சுவாசப்பயிற்சி உடலைப் பண்படுத்தி, இணக்கமான நிலையில் வைக்கிறது. தியான நிலையையும், ஏகாக்ர சித்த நிலையையும் அடைவதே சுவாசப் பயிற்சிகளை மேற்கொள்வதன் நோக்கம். ஒரு க்ஷண நேரம் கொஞ்சமும் சலனமில்லாமல் மனதை நிறுத்த முடியமானால், நீங்கள் இலட்சியத்தை அடைந்தவர்கள் ஆவீர்கள். இந்த மனம் பின்னாலும் செயல்பட்டுக் கொண்டே இருக்கலாம். ஆனால் அது மீண்டும் பழைய மனமாக இராது. நீங்கள் உண்மை யில் யார் என்பதை—உங்களுடைய உண்மை ஆன்மாவை தெரிந்து கொண்டவர்கள் ஆவீர்கள். ஒரு க்ஷணம் தான், உங்களுடைய மனதில் எவ்விதச் சுழற்சியும் இல்லாமல் நிறுத்துங்கள். உங்களுடைய உண்மை இயற்கை உங்களுக் குப் பளிச்சென்று தோற்றம் அளித்து விடும். உங்கள் கையில் சுதந்திரம் கிடைத்துவிடும். அதற்கு அப்புறம்

பந்தபாசம் இல்லை. "ஒரு க்ஷண நேரத்தை நீங்கள் அறிய முடியுமானால், எல்லாக் காலத்தையும் அறிந்தவர்கள் ஆவீர்கள். ஏனெனில் இந்த ஒரு க்ஷண நேரந்தான் வேகமாகச் சுழன்று கொண்டிருக்கிறது என்ற தத்துவத்திலிருந்தே மேற்கண்ட உண்மை புலனாகிறது. ஒன்றில் நீங்கள் தேர்ச்சிப் பெறுங்கள். ஒரு க்ஷண நேரத்தைப் பூரணமாக அறிந்து கொள்ளுங்கள்—அப்போது விடுதலை அடைந்தவர்களாவீர்கள்.

முற்கால புத்தமதம் தவிர மற்ற எல்லா மதங்களும் கடவுள் நம்பிக்கை உள்ளவை; ஆன்ம நம்பிக்கை உள்ளவை. இக்கால புத்தமதத்தினர் கடவுள்மீதும் ஆன்மா மீதும் நம்பிக்கை உள்ளவர்களாய் இருக்கின்றனர். பர்மியர்கள், சயாம் மக்கள், சீனர்கள் முதலியோர் புராதன புத்த மதத்தினர்.

ஆர்னல்டின் 'ஆசிய ஜோதி' எனும் காவியம், புத்த தத்துவத்தைவிட வேதாந்தக் கருத்தையே அதிகம் எடுத்துக் கூறுகிறது.

திட்டமிட்ட படைப்பு

"இப் பிரபஞ்சத்தைப் படைத்த ஆண்டவன் திட்டமிட்டே செய்திருக்கிறார்; இயற்கையில் காணப்படும் ஒழுங்கு முறைவைப்பு ஒன்றே இதற்குச் சான்று" எனும் தத்துவம் பாலபாடம் போன்றதே. கடவுளின் அழகு, சக்தி பெருமை ஆகியவைகளை எடுத்துக்காட்ட இஃது உதவும். போதனை பெறும் சிறுவர் ஓரளவு கடவுள் தத்துவத்தை அறிய இஃது உதவும்; அவ்வளவே; வேறு பயன் தராது; தர்க்க ரீதியில் பொருத்தமற்றது. ஆண்டவன் சர்வசக்தி வாய்ந்தவர் என்பதை நாம் ஏற்றுக் கொண்டால், தத்துவரீதியில் இது பொருத்தமற்றது; அடிப்படை இல்லாத ஒன்று.

பிரபஞ்சசிருஷ்டியில் கடவுளுக்குள்ள சக்தியை இயற்கை காட்டுகிறது என்றால், அதற்காகத் திட்டமிடுவது அவருடைய பலவீனத்தையே காட்டும். கடவுள் சர்வசக்தி வாய்ந்தவராக இருந்தால், அவருக்குத் திட்டமே அவசியம் இல்லை. விரும்பியன எல்லாம் விரும்பியவாறு நடைபெறும்.

கேள்வியில்லை ; திட்டமில்லை ; இந்தப் பூதப்பிரபஞ்சம் வரையறைக்குட்பட்ட தன்னறிவின் பயனே. மனிதன் தனது தெய்விகத் தன்மையை உணரும்போது, ஜடம், இயற்கை எல்லாம் நாம் அறிந்த முறையில் தோற்றம் தரா.

எங்கும் நிறைந்தவனை அறிவதில் இந்த லோகாயத உலகிற்கு எந்த இடமும் இல்லை. ஆரம்பத்திலோ முடிவிலோ எந்தக் கட்டத்திலும் இது அவசியம் இல்லை. அவ்வாறு இருந்தால், இந்தப் பிரபஞ்சத்தால் கடவுள் ஒரு எல்லைக்குட்பட்டவர் ஆகிவிடுவார். ஆண்டவனுடைய அனுமதியில் இயற்கை இயங்குகிறது என்று கூறுவதால், அது அவனுக்கு ஒரு அவசியம் என்றாகாது. மனிதனைப் பரிசுத்தம் அடையச் செய்வதற்கோ, வேறு எக்காரணத்திற்கோ அது அவசியம் இல்லை.

மனிதனுடைய தேவைக்காகப் படைக்கப்பட்டது அது; கடவுளுடைய தேவைக்காக அன்று; பிரபஞ்சத்தின் அமைப்பில் கடவுளுடைய திட்டம் எதுவும் இல்லை. அவர் சர்வசக்தி வாய்ந்தவராக இருக்கும்போது, திட்டமிடுதலுக்கு என்ன அவசியம் இருந்திருக்க முடியும்? எதையும் செய்வதற்கு ஒரு ஏற்பாடோ திட்டமோ அவருக்கு எதற்கு? காரணம் எதற்கு? ஆண்டவன் திட்டமிட்டுச் செய்ததாகக் கூறுவது, அவரை ஓர் எல்லைக்குட்படுத்துவதாகும்; அவருடைய சர்வசக்தியை மறுப்பதுமாகும்.

உதாரணமாக, நீங்கள் ஒரு பெரிய ஆற்றின் முன்னால் நிற்கிறீர்கள். பாலம் அமைத்தாலன்றித் தாண்டிச் செல்ல முடியாதபடி ஆறு மிகவும் அகலமாக இருக்கிறது. அந்த ஆற்றைக் கடக்க ஒரு பாலம் கட்டவேண்டும் என்ற நிலையில் நீங்கள் இருப்பது ஒன்றே உங்களுடைய வரம்பை எடுத்துக்காட்டுகிறது. உங்களால் பாலத்தைக் கட்ட முடியும் என்பது உங்களுடைய பலத்தை உணர்த்துவதாக இருக்கலாம். ஆனாலும் பாலம் இல்லாமல் நீங்கள் தாண்டிச் செல்ல முடியாது என்பது உங்களுடைய பலவீனத்தையே காண்பிக்கின்றது. உங்களுடைய சக்திக்கு ஒரு வரம்பில்லாமல், நீங்கள் பறந்தோ தாண்டியோ அந்த ஆற்றைக் கடக்க முடியுமானால், பாலம் கட்டவேண்டிய அவசியம் இராது. உங்களுடைய சக்தியைக் காட்டுவதற்காக, நீங்கள் பாலம்

அமைப்பதாயிருந்தால், அதுவும் ஒரு பலவீனமே. ஏனெனில் அவ்வாறு பாலம் கட்டுவது மற்றெதைக் காட்டிலும், உங்களுடைய கர்வத்தையே பெரிதும் எடுத்துக்காட்டுவதாக இருக்கும்.

அத்வைதமும் துவைதமும் அடிப்படையில் ஒன்றே. வேற்றுமை யாவும் சொல்வதில்தான். பிதாவும், மகனும் இருவர் என்று துவைதிகள் கூறுகிறார்கள். அவர்கள் இருவரும் உண்மையில் ஒருவரே என்று அத்வைதிகள் கூறுகிறார்கள். துவைதம் என்பது இயற்கையின் வெளித்தோற்றத்தில் காணப்படுவது. அத்வைதமோ பரிபூரண ஆன்மிக சாரம்.

ஆண்டவனை அடைவதற்குத் துறவும், தியாகமும் அவசியம் என்ற கருத்தை, எல்லா மதங்களுமே கூறுகின்றன.

ஜீவனும் இயற்கையும்

ஜீவனை ஜீவனாக உணர்வதே மதம்; ஜீவனை ஜடமாக உணர்வதன்று.

மதம் என்பது ஒரு வளர்ச்சி. ஒவ்வொருவரும் அதைத் தாமே அனுபவித்துப் பார்க்க வேண்டும். மனிதனைக் காப்பதற்காக ஏசு கிறிஸ்து மரணமடைந்தார் என்று கிறிஸ்தவர்கள் நம்புகிறார்கள். உங்களை (கிறிஸ்தவர்களைப்) பொறுத்தவரை அது ஒரு கோட்பாடு; அந்தக் கோட்பாட்டில் நம்பிக்கை வைப்பது உங்களுக்கு விமோசனம் அளிக்கும். எங்களைப் பொறுத்தவரை மதக் கோட்பாட்டிற்கும், விமோசனத்திற்கும் சம்பந்தம் இல்லை. ஒவ்வொருவரும் தாங்கள் விரும்பும் கோட்பாட்டில் நம்பிக்கை வைக்கலாம். அல்லது, எதிலுமே நம்பிக்கை வைக்காமல் இருக்கலாம். ஏசு வாழ்ந்தது ஒரு குறிப்பிட்ட காலமாக இருந்தால் என்ன? அதில் என்ன வேறுபாடு இருக்கிறது? எரிந்த புதரில் கடவுளைக் கண்டார் மோசஸ் என்பதால் உங்களுக்கு என்ன வந்தது? மோசஸ் கடவுளை அங்கு பார்த்தது, நீங்கள் அவரைப் பார்க்க உதவுமா? அவ்வாறு உதவுவதாக இருந்தால் மோசஸ் சாப்பிட்டார் என்பதே உங்களுக்குப் போதுமே.

நீங்கள் சாப்பிடுவதை நிறுத்திவிடலாமே! இது அர்த்த மற்றது என்ருல், முன்னதும் அர்த்தமற்றதே. கடந்த காலத்தில் வாழ்ந்த ஆன்மிகப் பெரியார்களின் வரலாறுகள் எல்லாம், நாமும் அவ்வாறு செய்ய,—அதாவது மதத்தை நாமே அனுபவித்துப் பார்க்க—நம்மைத் தூண்டுவனவே; வேறு எவ்வகையிலும் நமக்கு உதவுவன அல்ல. கிறிஸ்துவோ, மோசஸோ, மற்றெவரோ செய்தன எல்லாம் நம்மை அவ்வாறு செய்யத் தூண்டுவனவே; வேறு எவ் வகையிலும் நமக்கு உதவுவன அல்ல.

ஒவ்வொருவரும் தமக்கே உரிய சில சிறப்பியல்பு பெற்று விளங்குகின்றனர். அச் சிறப்பியல்புகளைப் பின்பற்றி அவற்றின் மூலம் விடுதலை காண்பர். இயற்கையில் உனக் கான பாதை எது என்பதைக் கூறக்கூடியவராகவும், உன்னை அப் பாதையில் நடத்திச் செல்லத் தக்கவராகவும் உன்னு டைய குரு இருக்க வேண்டும். உன்னுடைய முகத்தைப் பார்த்தவுடனேயே நீ அந்தப் பாதைக்குரியவன் என்பதை அறிந்து அதை உனக்குக் காட்டக் கூடியவராய் இருக்க வேண்டும். மற்றவருடைய வழியை நீ பின்பற்ற முயல்வது கூடாது. ஏனெனில் அது உன்னுடைய வழி அன்று. உன்னுடைய பாதையைக் கண்டவுடனே நீ உன்னுடைய கைகளைக் கட்டிக்கொண்டால் போதும்; வெள்ளம் தானுக உன்னை விடுதலைக்கு இழுத்துச் செல்லும். ஆகையால் அந்தப் பாதையைக் கண்டவுடன் அதிலிருந்து பிறழாதே. உன்னுடைய வழியே உனக்குச் சிறந்தது. ஆனல், மற்றவர் களுக்கும் அதுவே சிறந்தது என்று கொள்ளலாகாது.

உண்மை ஆன்மிகவாதி ஜீவனை ஜீவனுகவே காண் பான்; ஜடமாகக் காணமாட்டான். ஜீவன்தான் இயற் கையை இயங்குமாறு செய்கிறது. அதுவே இயற்கையில் உள்ள மெய்ப்பொருள். ஆகையால் செயல் இயற்கை யினதே; ஜீவனது அன்று. ஜீவன் ஒரே தன்மையது; என்றும் உளது; மாறுதல் இல்லாதது; ஜீவனும் ஜடமும் உண்மையில் ஒன்றே. ஆனல் ஜீவன் ஜடமாவதில்லை. ஜடம் ஜீவனுகாது. ஜீவன் செயலற்றது. அது ஏன் செயல் புரிய வேண்டும்? அது சும்மா இருக்கிறது. அஃது ஒன்றே போதுமானது. அது சுத்த சத்தாக விளங்கு வது. ஆதலின் செயல் அதற்கு வேண்டுவதில்லை.

நீ நியதிக்குக் கட்டுப்பட்டவனல்லன். உனது இயற்கையே அதுதான். மனம் இயற்கையைச் சார்ந்தது. ஆகையால் நியதிக்குக் கட்டுப்பட்டது. இயற்கை யாவும் தனது சொந்தச் செயலினுல் எழுந்த ஒரு நியதிக்குக் கட்டுப்பட்டனவே. இந்த நியதியை ஒருகாலும் மீறமுடியாது. இயற்கையின் நியதியை நீங்கள் மீறினுல், அந்த நிமிஷமே இயற்கை யாவும் அழிந்துவிடும். அப்புறம் இயற்கை என்பதே இராது. சுதந்திரம் அடைபவன் இயற்கை நியதியை மீறுகிருன். அவனைப் பொறுத்தவரை இயற்கை "மறைந்துவிடுகிறது." அவன் மீது இயற்கைக்கு ஆதிக்கம் எதுவுமிராது. ஒவ்வொருவரும் நியதியை மீறலாம். ஒரே ஒரு சமயந்தான். அதுவும் நிரந்தரமாக மீறலாம்; அதற்குப் பின் இயற்கையின் தொல்லை எதுவும் மீறியவனுக்கு இராது.

அரசாங்கங்கள், சங்கங்கள் முதலியவைகள் எல்லாம் ஒப்பிட்டுப் பார்க்கும்போது தீயவையே. எல்லாச் சங்கங்களுமே தவருன பொது அனுமானத்தின் பேரில் அமைக்கப்படுகின்றன. ஒரு ஸ்தாபனத்தில் சேர்ந்தவுடனேயே அதற்கு வெளியில் உள்ளவர்களையெல்லாம் வெறுக்க ஆரம்பித்துவிடுகிருய். நீ ஒரு ஸ்தாபனத்தில் சேரும்போது' உனக்கே எல்லை வகுத்துக்கொள்கிருய்; உன்னுடைய சுதந்திரத்தை நீயே கட்டுப்படுத்திக்கொள்கிருய். உன்னதமான சுதந்திரமே மிகவும் நல்லது. தனிப்பட்டவர்கள் சுதந்திரத்தை நோக்கிச் செல்லுமாறு உதவுவதே நமது இலட்சியமாக இருக்கவேண்டும். நல்லது வளர வளரச் செயற்கையான சட்டங்கள் குறையும். மீதமுள்ள சட்டங்கள் உண்மையில் சட்டங்களாகவே இரா. அவை சட்டங்களாயின் அவற்றை மீற முடியாதே, சட்டம் என்று சொல்லப்படும் இவைகளை மீற முடிவதிலிருந்தே இவை சட்டங்களல்ல என்பது புலனுகும். சட்டம் என்பது மீற முடியாதது ஒன்று.

ஒரு சிந்தனையை வற்புறுத்தி அடக்கும்போது, அது மனக்கண்ணுக்குத் தெரியாமல் தற்காலிகமாக அமுக்கி வைக்கப்படுகிறது, அவ்வளவுதான். ஆனுல் விசையுள்ள ஒரு சுருள்கம்பியை (ஸ்பிரிங்கை) அமுக்கி வைப்பது போலவே அது அடங்கிக் கிடக்கிறது. மற்ருெரு சமயம் ஒரே க்ஷணத்தில் துள்ளி வெளியே வந்துவிடுகிறது. அடக்கி

வைத்ததால் அதிக சக்தி பெற்று, நீண்ட காலத்தில் செய்யக் கூடியதைச் சில நிமிஷங்களில் செய்துமுடிக்கும் ஆற்றலுடன் தோன்றுகிறது.

ஒவ்வொரு அவுன்ஸ் இன்பமும் ஓர் இராத்தல் துன்பத்தைக் கொண்டுவருகிறது. ஒரு சமயத்தில் இன்பமாகத் தோன்றுவதுதான் மற்ெருரு சமயம் துன்பமாகக் காட்சியளிக்கிறது. ஒரு வகை உணர்ச்சிகள் நின்றவுடன், மற்ெருரு வகை உணர்ச்சிகள் தொடர ஆரம்பித்துவிடுகின்றன. ஆனுல் சில சந்தர்ப்பங்களில் நல்ல முதிர்ச்சி அடைந்த மனிதர்களுக்கு ஒரே சமயத்தில் இரண்டு வகைபட்ட சிந்தனைகள்—ஏன், வெவ்வேறு வகைபட்ட நூறு சிந்தனைகள் கூட இருக்கலாம்.

மனம் என்பது அதன் இயற்கைப்படி நடப்பதாகும். மனதின் செயல் என்பது ஒரு படைப்பு. சிந்தனை சொல்லாகிறது; சொல் செயலாகிற ஒரு உருவம் பெறுகிறது. ஆனுல் மனமானது ஆன்மாவைப் பிரதிபலிக்கு முன்பு, மனதினுலும் உடலினுலும் ஆகக்கூடிய இந்தப் படைப்புகள் எல்லாம் நிற்கவேண்டும்.

மத அனுஷ்டானம்

[1900-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 18-ஆம் தேதி கலிபோர்னியாவில் உள்ள அலமேடா என்ற இடத்தில் நிகழ்த்திய சொற்பொழிவு.]

நாம் அநேக புத்தகங்களைப் படிக்கிருேம் என்ருலும் அவை நமக்கு ஞானம் அளிப்பதில்லை, உலகிலுள்ள பைபிள்களையெல்லாம் நாம் படிக்கலாம். ஆனுல், அவை நமக்குச் சமய உணர்வை அளிக்கமாட்டா. ஏட்டுப்படிப்பு எளிது; எவரும் அடையலாம். ஆனுல் நமக்கு வேண்டியது அனுஷ்டானம்.

உலகத்திற்குப் பயன்தரவல்ல காரியங்களைச் செய்ய வேண்டும் என்பதுதான் மத அனுஷ்டானத்தைப் பற்றிய கிறிஸ்தவக் கொள்கை.

இதனுல் என்ன பயன்? உலகத்திற்குப் பயனுள்ள காரியங்கள் செய்யும் அடிப்படையில் பார்த்தால் மதம் ஒரு

தோல்வியே. ஒவ்வொரு ஆஸ்பத்திரியும், அதிகப்படியான மக்கள் அங்கு வரவேண்டும் என்று செய்யப்படும் ஒரு பிரார்த்தனையே. தர்மம் என்ருல் என்ன? அது அடிப் படையாகப் பிரச்னையைத் தீர்க்கக் கூடியதன்று. அது உண்மையில் உலகத்தின் துன்பத்தை அதிகப்படுத்த உதவு கிறதே தவிர, அதை ஒழித்துக்கட்டவில்லை. ஒருவன் பெய ரும் புகழும் அடைய விரும்புகிருன். அவைகளைப் பெற அவன் மேற்கொள்ளும் முயற்சிக்கு, சில தர்மங்கள், நல்ல காரியங்கள் ஆகியவைகளைச் செய்து முலாம்பூசுகிருன். மற்றவர்களுக்காகப் பணியாற்றும் பாவனையில் அவன் தனக் குத் தானே உதவிக் கொள்கிருன். தர்மம் என்று சொல்லப் படுவன எல்லாம், எந்தத் தீமையை எதிர்த்து அது அளிக் கப்படுவதாகக் கூறப்படுகிறதோ, அந்தத் தீமையை ஊக்குவிப்பவைதான்.

ஆண்களும் பெண்களும் நடனகோஷ்டிகளில் சேர்கிருர் கள்; ஏதாவது ஒரு ஆஸ்பத்திரி அல்லது தர்ம ஸ்தாபனத் துக்காக இரவு முழுவதும் நடனமாடிக் கொடுக்கிருர்கள். இதன் பின்பு வீடுகளுக்குச் சென்று மிருகங்களைப் போல நடந்துகொண்டு, சிறைகளையும், பைத்தியக்கார விடுதிகளை யும், ஆஸ்பத்திரிகளையும் நிரப்பக் கூடிய பேய்களைப் பெற் றெடுக்கிருர்கள். இவ்வாறு நடந்துகொண்டே இருக்கிறது. இவ்வாறு ஆஸ்பத்திரி முதலியன கட்டுவதை, நல்ல காரியம் என்று சொல்கிருர்கள். நல்ல வேலையின் நோக் கமே, உலகின் துன்பத்தைப் பூரணமாகப் போக்காவிடினும், குறைப்பது ஆகும். மனதைக் கட்டுப்படுத்த முடியாத தனல்தான் எல்லாத் துன்பங்களும் வருகின்றன என்று யோகி கூறுகிருன். இயற்கையிலிருந்து விடுதலை பெறுவதே யோகி யின் இலட்சியம். இயற்கையை வெற்றிகொள்வதே அவன் பணி. "எல்லாச் சக்தியுமே ஆன்மாவில்தான் இருக்கிறது. மனதையும் உடலையும் கட்டுப்படுத்தி ஆன்மாவின் சக்தி யைக் கொண்டு இயற்கையை ஒருவன் வெல்லலாம்" என்று யோகி கூறுகிருன்.

ஒருவனுடைய உடலுழைப்பிற்குத் தேவையானதற்கு மேல் உள்ள ஒவ்வொரு இராத்தல் சதையும் அதன் விகிதா விகிதத்தில் மூளை குறைந்திருப்பதன் அடையாளமே.

அளவுக்கு மீறி தேகப்பயிற்சி செய்யாதீர்கள்; அது தீங்கு விளைவிக்கும். யார் கடினமாக உழைக்கவில்லையோ அவன்தான் அதிகக் காலம் வாழ்வான். குறைவாகச் சாப்பிடுங்கள்; குறைந்த உடல் உழைப்பில் ஈடுபடுங்கள். மூளைக்கு வேண்டிய சக்தியை அதிகப்படுத்துங்கள்.

மாதர்களுக்கு வீட்டுவேலையே போதுமானது.

விளக்கை வேகமாக எரித்துவிடாதீர்கள்; அது மெதுவாகவே எரியட்டும்.

நல்ல உணவு என்பது, உப்புப், புளி, காரம் முதலியன அதிகம் சேராத எளிய உணவே.

இராமாயணத்தைப் பற்றிய சில குறிப்புகள்

அன்பு எவ்வாறு ஒருவனைக் கீழே இறக்குவதில்லையோ, எவ்வாறு பண்டமாற்றுப் பொருளாக விளங்குவதில்லையோ, எவ்வாறு சுயநலம் என்பதை அறிவதில்லையோ, அவ்வாறே நாம் நன்றே செய்யினும் தீதே செய்யினும் நமக்குத் துணை நிற்பவன் எவனோ, அவனை வழிபாடு செய்க.

முதுமை எய்திய சக்ரவர்த்தியின் உயிராக விளங்கினான் இராமன்; ஆனால் அவர் ஒரு மன்னர்; சொல் தவறுதல் கூடாது.

"இராமன் எங்கு சென்றாலும் அங்கே நானும் செல்வேன்" என்று கூறினான் இராமனின் தம்பியாகிய இலட்சுமணன்.

இந்துக்களாகிய எங்களுக்கு அண்ணனின் மனைவி தாய் போன்றவராவர்.

கடைசியாக அவன் சீதையைக் கண்டான். அவள் மெலிந்து, முகம் வெளுத்து அடிவானத்தில் உள்ள பிறைச் சந்திரன் போன்று இருந்தாள்.

சீதை கற்பே உருவானவள்; தன்னுடைய கணவனின் உடல் தவிர வேறு உடலை அவள் தீண்டமாட்டாள்.

"பரிசுத்தமானவள். கற்பே உருவானவள்" என்று இராமன் அவளைப்பற்றிக் கூறுகிறான்.

நாடகமும் இசையும் மதமே. எத்தகைய கீதமாயினும் சரியே. காதல் கீதமாக இருந்தாலும் கவலைவேண்டாம். ஒருவனுடைய ஆன்மாவும் அதில் லயித்துவிட்டால் அவன் அதிலேயே அருட்பேறு அடைகிறான். வேறு எதுவும் அவன் செய்யவேண்டுவதில்லை. அதுவும் நம்மை ஒரே இலட்சியம் நோக்கித்தான் செலுத்துகிறது என்று சொல்லுகிறார்கள்.

மனைவி சகதர்மிணி. இந்து ஒருவன் செய்யவேண்டிய கர்மானுஷ்டானங்கள் நூற்றுக்கணக்கானவை. எனினும் மனைவி ஒருத்தி இன்றேல் இதில் எதையும் செய்தல் இயலாது. கணவனையும் மனைவியையும் சேர்த்து 'முடிபோட்டு' விடுவதை நீங்கள் காணலாம். இவ்வாறு போடப்பட்ட முடியுடனேயே அவர்கள் ஆலயங்கள் சுற்றுகிறார்கள்; புனிதஸ்தலங்களுக்கு யாத்திரை செல்லுகிறார்கள்.

இராமன் தன்னுடைய உடலைவிட்டு, மறு உலகில் சீதையுடன் சேர்ந்தான்.

சீதை பரிசுத்தமான தூயசீதை! ஆரம்பமுதல் இறுதிவரை கஷ்டத்திலேயே உழன்ற சீதை!

எவை எல்லாம் நல்லனவோ, எவை எல்லாம் பரிசுத்தமானவையோ எவை எல்லாம் புனிதமானவையோ அவை எல்லாம் சீதை என்றே இந்தியாவில் அழைப்பார்கள்!

பெண்மணி என்று பெயரிட்டு அழைக்கிறோமே, அப்பெயருக்குரிய நற்பண்புகள் எவையோ அவையே சீதை.

சீதை பொறுமையுடன், ஆரம்பம் முதல் கடைசிவரை கஷ்டத்தையே அனுபவித்து, என்றும் விசுவாசமாய், பரிசுத்தமாய் விளங்கிய மனைவி! அவ்வளவு கஷ்டங்களை அனுபவித்த காலத்திலும் கூட இராமன் மீது கடிந்து ஒரு சொல்லும் கூறாதவள்.

சீதை தான் பெற்ற துன்பத்திற்கு எதிராக துன்பம் இழையாதவள்.

"சீதையாக விளங்குங்கள்!"

சென்னையில் எடுக்கப்பட்ட குறிப்பு (1892-93)

கடவுள் நம்பிக்கை, வேதங்கள் கடவுளால் படைக்கப் பட்டவை என்பதில் நம்பிக்கை, கர்மம், மறுபிறப்பு என்பன வற்றில் நம்பிக்கை. இம் மூன்றுமே இந்து மதத்தின் முக்கிய அம்சங்கள்.

வேதங்களை ஆழ்ந்து படித்து அவற்றின் உட்கருத்தை ஒருவர் உணருங்கால் அங்கே சமரச இயல்புடையதொரு மதத்தை அவர் காண்பார்.

இந்து மதத்திற்கும் இதர மதங்களுக்கும் உள்ள வேற்று மைகளில் ஒன்று யாதெனில் இந்துமதத்திலே நாம் ஓர் உண்மையிலிருந்து மற்றோர் உண்மைக்கு — சிறியதோர் உண்மையினின்றும் பெரியதோர் உண்மைக்கு — செல்லுகி றோம். ஆனால் ஒருபோதும் பிழையினின்றும் உண்மை நோக்கிச் செல்வதில்லை.

பரிணாமம் என்னும் கண்ணாடிமூலமாக வேதங்களைப் படிக்கவேண்டும். சமய உணர்வின் வளர்ச்சி பற்றிய வர லாறு இந்த வேதங்களில் அடங்கியிருத்தல் காணலாம். மதமானது ஒருமையில் முழுமைபெற்றது.

வேதம் அநாதி; என்றுமுளது. இவ்வாறு கூறுவதனால், வேதங்களில் உள்ள வாசகங்கள் அநாதி காலந்தொட்டு இருப்பதாகச் சிலர் எண்ணுகின்றனர். அது தவறு. வேதங் களில் கூறப்பட்டுள்ள சட்டங்கள், நியதிகளே அநாதிகாலந் தொட்டு இருப்பவை. இந்த நியதிகள் எண்ணற்றவை; நிரந்தரமானவை; பல்வேறு காலங்களில் பல்வேறு ரிஷிகளால் கண்டுபிடிக்கப்பட்டவை. இவைகளில் சில வற்றை நாம் மறந்துவிட்டோம்; மற்றும் சிலவற்றைப் பாது காத்து வைத்திருக்கிறோம்.

வெவ்வேறு கோணங்களிலிருந்தும் தூரங்களிலிருந்தும் கடலைப் பார்த்தால், ஒவ்வொருவரும் அவரவர் இருக்கும் இடத்திற்கு ஏற்றபடி, கடலின் ஒரு பகுதியையே காண்பர். இவ்வாறு பார்க்கும் ஒவ்வொருவரும் தாம் காண் பதே உண்மையான கடல் என்று கூறக்கூடும். அவர்கள்

சொல்வதும் உண்மையே. ஏனெனில், பிரந்த ஒன்றின் பகுதியைத் தானே அவர்கள் பார்க்கிறார்கள்? வேதங்களும் இத்தகையனவே. இவற்றில் பல்வேறு வகையான முரண்பட்ட கருத்துக்கள் காணப்பட்டாலும், இவையெல்லாம் உண்மையே. ஏனெனில், இவையெல்லாம் எல்லையற்ற மெய்ப்பொருள் ஒன்றையே விவரிக்கின்றன.

முதன் முதலாகக் கானல் நீரைப் பார்க்கும் ஒருவன் மெய்யென்று அதை நம்பி தனது தாகத்தைத் தீர்க்கும் முயற்சியில் ஈடுபட்டு, அம்முயற்சி வீணான பின்னரே, அது கானல் நீர் என்பதைத் தெரிந்து கொள்கிறான். அதன் பின்னர் அத்தகையதோர் காட்சியைக் காண நேரும்போது, மேற்பார்வைக்கு உண்மையாகத் தெரிந்தாலும், அவன் அதை நம்பமாட்டான். ஜீவன் முக்தர்களுக்கு இம்மாயாவுலகும் கானல் நீர் போன்றதே.

இயற்கையாகவே, சில குடும்பங்களில்தான் சிற்சில சக்திகள் இருக்கின்றன. அம்மாதிரியே வேத ரகசியங்கள் சிலவற்றைச் சில குடும்பங்களே அறிந்திருந்தன. இந்தக் குடும்பங்கள் மறைந்ததும் அந்த ரகசியங்களும் மறைந்தன.

வேதங்களில் காணப்படும் உடற்கூறு சாஸ்திரம் ஆயுர் வேத சாஸ்திரத்தைவிட சிறப்புக் குறைந்தது அன்று.

அவர்கள் மிருகங்களை வெட்டிப் பலியிட வேண்டியிருந்ததால் உடலின் வெவ்வேறு பாகங்களுக்கு வெவ்வேறு தனிப் பெயர்களிட்டிருந்தார்கள். கடலில் நிறையக் கப்பல்கள் இருந்ததாக வர்ணிக்கப்பட்டுள்ளது. பின்னால் பிரயாணம் தடை செய்யப்பட்டது. இவ்வாறு கடல் கடந்து செல்பவர்கள் புத்த மதத்தினராகி விடுவார்களோ என்று அஞ்சியது இதற்கு ஒரு காரணம்.

புதிதாக வந்த க்ஷத்திரியர்கள் வைதிக குருமார்களை எதிர்த்துச் செய்த கிளர்ச்சியே புத்தமதம்.

இந்து மதம், புத்த மதத்தின் சாரத்தை எடுத்துக் கொண்டு எஞ்சியதை எறிந்து விட்டது. தென்னாட்டு ஆச்சாரியார்கள் இந்த இரண்டுக்குமிடையே ஒரு சமரசம் காண முயற்சி செய்தார்கள். சங்கராச்சாரியாரின் உபதேசங்களில் புத்தமதத்தின் சாயலைக்காணலாம். அவருடைய சீடர்கள்

அவருடைய போதனையைத் திரித்துக் கூறிவிட்டார்கள். சங்கராச்சாரியாரின் சீடர்களெல்லாரும் "மறைமுக புத்த மதத்தினர்" என்று பிற்கால சீர்திருத்த வாதிகள் கூறியது சரி என்று கொள்ளத்தக்க விதத்தில் திரித்துக் கூறி விட்டார்கள்.

"அறியமுடியாதது" என்று ஸ்பென்சர் கூறுகிறாரே அது என்ன? நாம் மாயை என அழைப்பதுதான். அறிய முடியாததைக் கண்டு மேற்கு நாட்டுத் தத்துவ சாஸ்திரிகள் அஞ்சுகிறார்கள். ஆனால் நம்முடைய தத்துவ சாஸ்திரிகள் இதில் குதித்து வெற்றியும் கண்டிருக்கிறார்கள்.

மேற்கு நாட்டுத் தத்துவ சாஸ்திரிகள் கழுகுகளைப் போன்றவர்கள். கழுகுகள் உயரப் பறக்குமென்றாலும், அவைகளின் கண் கீழேகிடக்கும் அழுகிய பிணத்தின் மீது தான் குறியாக விருக்கும். மேற்கு நாட்டு அறிஞர்கள் மாயையைத் தாண்டிச் செல்ல இயலாதவர்கள். எனவே அவர்கள் தங்களுடைய பார்வையைத் திருப்பிச் செலுத்தி சர்வசக்தி வாய்ந்த டாலரை வணங்குகிறார்கள்.

இந்த உலகில் இரண்டு விதமான முன்னேற்றங்கள் இருந்திருக்கின்றன; ஒன்று அரசியல் முன்னேற்றம்; மற்றொன்று, சமயமுன்னேற்றம். இவைகளில் அரசியல் முன்னேற்றத்தில் கிரேக்கர்கள்தான் எல்லாம். நவீன அரசியல் ஸ்தாபனங்களெல்லாம் கிரேக்கர்கள் வளர்த்து வைத்தவை தான்; மதத்துறையிலோ இந்துக்கள்தான் எல்லாம்.

கிறிஸ்தவ மதம் ஒரு கிளையாகவும் புத்த மதம் ஒரு புரட்சிக் குழந்தையாகவும் உள்ளது எதுவோ அதுவே எனது மதம்.

எல்லாப் பொருள்களையும் உற்பத்தி செய்யக் கூடிய மூலப் பொருளைக் கண்டு பிடித்த பின்பு, இரசாயன சாஸ்திரம் வளர்ச்சி அடையமுடியாது. ஒரு மூல சக்தியைக் கண்டுபிடித்து, மற்ற சக்திகளெல்லாம் அதன் பல்வேறு வகைத் தோற்றங்களே என்பதை நிரூபித்து விட்டால், அப் பு... ...ம் வளராது. அதே போன்று எ... ...ற என்ற ஐக்கியம் ஏற்பட்டுவிடின், அ... ...டையாது.

இதுவே இப்போதைய இந்து மதத்தின் நிலை.

வேதங்களில் காணப்படாத, புது மதக் கருத்து எதுவும் உலகில் எங்குமே போதிக்கப்படவில்லை. வளர்ச்சி இருவகைத்து; ஒன்று பகுப்பு. மற்றொன்று தொகுப்பு. பகுப்பாராய்ச்சியில் இந்துக்கள் பிற நாட்டினரினும் மேன்மை பெற்றவரே; ஆனால் பின்னதில் அவர்கள் ஒன்றுமிலர்.

பகுத்துணரும் திறனை இந்துக்கள் நன்கு வளர்த்துள்ளனர். பாணினி இலக்கணம் போன்ற ஒன்றை வேறு எந்த நாடும் இதுகாறும் படைக்கவில்லை.

இராமானுஜரின் சிறந்த தொண்டு யாதெனில் பௌத்தர்களையும் இந்துக்களாக மாற்றியதே. விக்கிரக ஆராதனைக்குப் பேராதரவளித்தவர். அன்பும் நம்பிக்கையும் அருள்பேறு அடைவதற்கு முக்கிய சாதனங்கள் என்பதை அவர் பரப்பினார்.

ஜைனர்களின் இருபத்திநான்கு தீர்த்தங்கரர்களைப் போலவே, பாகவதத்திலும் இருபத்திநான்கு அவதாரங்கள் கூறப்பட்டுள்ளன. ரிஷபதேவரின் பெயர் பொதுவானது.

யோகப் பயிற்சியானது நுண்ணிய கருத்துக்களைச் சிந்திக்கும் சக்தியை வளர்க்கிறது. ஒரு சித்தன் தான் காணும் பொருள்களின்றும் தனித்துநின்று, தனது மனம், உணர்ச்சி, எண்ணம் ஆகியவைகளோடு சம்பந்தப்படாத தனிப் பொருள்களாக அவைகளைப் பார்க்கிறான். இதில்தான் மற்றவர்களைக் காட்டிலும் சித்தனின் தனிப் பெருமை இருக்கிறது.

* * *

ஒன்றுக்கொன்று முரணான இரு அம்சங்கள். அவைகளின் இறுதிக் கட்டத்தில் சந்திக்கின்றன. அந்நிலையில் இரண்டும் ஒன்றுபோல் காட்சியளிக்கின்றன. தன்னை மறந்துவிட்ட பெரிய பக்தனின் மனம் எப்பொழுதும் எல்லையற்ற பிரம்மனின் தியானத்தில் திளைத்து இருக்கிறது. மிகவும் கீழ்த்தரமாக, அளவு மீறிக் குடித்துவிட்டுப் போதையில் இருப்பவனும் அவ்வாறே திளைத்து இருக்கிறான். இவ்விருவரும் ஒரே தோற்றமளிக்கின்றனர். சில சமயம்

இந்த ஒத்த தன்மையானது ஒருவரிலிருந்து மற்றொருவருக்கு உவமை காட்டப்படுவதைக் கண்டு நாம் வியப்படைகிறோம்.

உணர்ச்சி மிகுந்த மனிதர்கள், மதவாதிகளாவதில் வெற்றி பெறுகின்றனர். எதைத் தம் சிந்தையில் ஏற்கின்றனரோ, அதில் தீவிர ஊக்கம் காட்டுகின்றனர்.

"இந்த உலகில் எல்லாரும் பித்தரே; சிலர் பொன் பித்தர்; மற்றும் சிலர் பெண் பித்தர்; மற்றும் சிலர் கடவுள் பித்தர். மூழ்கி இறப்பதே நமது விதியானால் சாணக்குட்டை ஒன்றில் விழுந்து இறப்பதைவிட, பாற்கடல் ஒன்றில் மூழ்கிச் சாவோமே" என்றார் ஒரு பக்தர்; பித்தர் என்று கூறப் பட்டவர்.

எல்லையற்ற அன்பாகவிருக்கும் இறைவனும், புனிதமான எல்லையற்ற அன்பின் லட்சியப் பொருளாகவிருப்பவனும் நீல நிறத்திலேயே சித்தரிக்கப்படுகின்றனர். கிருஷ்ணன் உருவம் நீல நிறத்தில்தான் தீட்டப்படுகிறது. அதேபோன்று சாலமனின் அன்புக் கடவுளின் நிறமும் நீலமே. எது புனிதமானதும் எல்லையற்றதுமாகவிருக்கிறதோ அதை நீல நிறத்துடன் இணைப்பது இயற்கை. ஒரு சமுத்திரத்திலிருந்து கைநிறையத் தண்ணீரை எடுத்துப் பாருங்கள்; நிறம் எதுவுமில்லை. பரந்த சமுத்திரத்தைப் பாருங்கள்; நீல நிறமாகக் காட்சி அளிக்கிறது. உங்கள் அருகில் உள்ள வெளிக்கு நிறமே இல்லை. ஆனால் எல்லையற்ற வானம் நீல நிறமாகக் காட்சியளிக்கிறது.

இலட்சியத்தில் மூழ்கியிருந்த இந்துக்களுக்கு நடைமுறைக் கண்ணோட்டத்தில் அவ்வளவு திறமை போதாது என்பது கீழ்க்கண்ட உதாரணத்திலிருந்து நன்கு தெரிகிறது. ஓவியக்கலையையும் சிற்பக்கலையையும் எடுத்துக்கொள்ளுங்கள். ஹிந்துக்களின் ஓவியங்களில் நீங்கள் என்ன காண்கிறீர்கள்? இயற்கைக்கு விரோதமாகவும் கோரமாகவும் எத்தனை உருவங்கள் உண்டோ அத்தனையையும் காணலாம். ஹிந்துக் கோவில் ஒன்றில் ஒரு சதுர்பங்க (நான்குகோணல்) நாராயணனைப் பார்க்கலாம்; அல்லது அதைப் போன்ற உருவங்களைக் காணலாம். ஆனால் ஒரு இத்தாலியப் படம் அல்லது கிரேக்க சிற்பத்தை எடுத்துக்கொள்ளுங்கள். இயற்கையை எவ்வளவு நுணுகி ஆராய்ந்து அவைகளைத் தீட்டி

யிருக்கிறார்கள்! தனது கையில் மெழுகுவத்தியை எரித்துக் கொண்டிருந்த ஒரு பெண்ணின் படத்தைத் தீட்டுவதற்காக, ஒருவர் தாமும் தமது கையில் மெழுகுவத்தியை ஏந்திக் கொண்டு இருபது வருஷங்கள் உட்கார்ந்திருந்தார்.

அகவியல் விஞ்ஞானங்களில் இந்துக்கள் முன்னேற்ற மடைந்திருக்கிறார்கள். மனித இயற்கையில் பலவகை வித்தியாசங்கள் இருப்பதால், பல்வேறுவகை ஒழுக்கவிதிகள் வேதங்களில் கூறப்பட்டுள்ளன. வயது வந்தவனுக்குக் கற்றுக்கொடுக்கும் ஒன்றைக் குழந்தைக்குக் கற்றுக்கொடுக்க முடியாது.

குரு மனிதனின் வைத்தியராக இருக்கவேண்டும். தனது சிஷ்யனின் இயற்கையை அறிந்து அவனுக்கு ஏற்ற முறையைக் கற்றுக்கொடுக்கவேண்டும்.

யோகப் பயிற்சிக்கு எண்ணற்ற வழிகள் இருக்கின்றன. சில முறைகள் சில மனிதர்களுக்கு வெற்றிகரமான பலன் அளித்துள்ளன. ஆனால் எல்லா முறைகளிலுமே இரண்டு அம்சங்கள் முக்கியமாகும்: (1) நீ அறிந்த அனுபவம் எல்லாம் உண்மையல்ல என ஒதுக்கி மெய்ப்பொருளை அடைவது. (2) எல்லாமே நீதான், இந்தப் பிரபஞ்சமே நீதான் என்று எண்ணுவது. இதில் இரண்டாவது முறை முதல் முறையைக் காட்டிலும் விரைவில் பலன் அளிக்கு மென்றாலும், அவ்வளவு பாதுகாப்பானது அன்று; அபாயங் கள் நிறைந்த ஒன்று; இவ்வழிச் செல்வோன் தவறுதல் கூடும்; குறிக்கோளை அடையாமற் போதலும் கூடும்.

கிறிஸ்தவமதம் போதிக்கும் அன்புக்கும் இந்துமதம் போதிக்கும் அன்புக்கும் வேற்றுமையுண்டு. பிறர் எவ்வாறு நம்மை நேசிக்கவேண்டுமென்று விரும்புகிறோமோ அவ்வாறு நாம் நமது அயலாரை நேசிக்கவேண்டும் எனக் கிறிஸ்துவ மதம் போதிக்கிறது. ஹிந்துமதமோ நம்மைப் போலவே அவர்களையும் நேசிக்கச் சொல்கிறது. உண்மையில் பிறரி டம் நம்மைக் காணச் சொல்லுகிறது.

கண்ணாடிப் பெட்டியில் அடைத்து வைக்கப்படும் கீரிப் பிள்ளை, பெட்டிக்கு வெளியே சுதந்திரமாகப் போய் வர உதவுவதற்காகவே நீண்ட சங்கிலியால் கட்டப்படுகிறது.

இவ்வாறு அக்கீரி வெளியில் சுற்றித்திரியும்போது ஏதாவது ஆபத்து இருப்பதாக உணர்ந்தால், உடனே ஒரே தாவில் கண்ணுடிப்பெட்டிக்குள் போய்விடுகிறது. யோகியும் இவ்வாறே செய்கிருன்.

*   *   *

இந்த பிரபஞ்சம் ஒரு சங்கிலி போன்றது; உயிர்ப்புச் சங்கிலி. பிரபஞ்சத்தின் ஒரு துருவம் ஜடம்; மற்ருெரு துருவம் கடவுள். விசிஷ்டாத்வைத தத்துவத்தை இந்த அடிப் படையில் விளக்கலாம்.

ரூபமுள்ள கடவுள் ஒருவர் இருக்கிருர் என நிரூபிக்கும் பகுதிகள் பல வேதங்களில் காணப்படுகின்றன. நீண்ட காலம் பக்திமார்க்கத்தை அனுஷ்டித்துக் கடவுளைக் கண்ட ரிஷிகள், நாம் அறியாததை எட்டிப் பார்த்து, இந்த உலகிற்குச் சவால் விடுத்துள்ளனர். இந்த ரிஷிகள் கூறிய வழிகளைக் கடைப்பிடிக்காதவர்களும் அவர்களுடைய போதனைகளைப் பின்பற்ருதவர்களும் வினயமற்றவர்களும் செருக்கு மிக்கவர்களுமே அவர்களுடைய கருத்துக்களைக் குறை கூறுகின்றனர்; எதிர்க்கின்றனர். "நான் ரிஷிகள் கூறிய வழிகளைச் சரிவரப் பற்றியிருக்கிறேன். ஆனுல் ஒன்றையும் காணவில்லை. அவர்களெல்லாரும் பொய்யர்" என்று தைரியமாகக் கூற முன்வந்தவர் யாரும் இல்லை. சோதனைக்கு உள்ளாகிக் கடவுளால் கைவிடப்படாத மனிதர் பலர் பல்வேறு சமயங்களிலும் இருக்கிருர்கள். கடவுள் நம்பிக்கை நமக்கு ஆறுதல் அளியாவிட்டால் தற்கொலை செய்வதே நல்லது எனும் பான்மையது இவ்வுலகு.

தெய்வ நம்பிக்கை மிக்க மதப் பிரசாரகன் ஒருவன் வெளியூர் சென்றிருந்தான். அப்போது அவனுடைய குமாரர் மூவரும் காலரா கண்டு இறந்துவிட்டனர். அவனது மனைவி தனது ஆசைக்குழந்தைகள் மூன்றையும் ஒரு துணியால் மூடி மறைத்துவிட்டுத் தனது கணவனின் வருகையை எதிர் நோக்கி நின்ருள். அவன் திரும்பி வந்தபோது, அவனை வாசலிலேயே நிறுத்தி இவ்வாறு கேட்டாள்: "எனது அன்பே, ஒருவர் ஒரு பொருளை உங்களிடம் ஒப்படைக்கிருர். நீங்கள் வெளியே சென்றிருக்கும்போது

திடீரென எடுத்துச் செல்கிறார். அதற்காக நீங்கள் வருந்து வீர்களா ?" "நிச்சயமாக நான் வருந்தமாட்டேன்" என்றான் அவன். பிறகு அவள் அவனை உள்ளே அழைத்துச் சென்றாள்; போர்வையை நீக்கினாள்; பிள்ளைகள் மூவரின் பிணத்தைக் காட்டினாள். அமைதியாக அதைப் பெற்று உடல்களை அடக்கம் செய்தான் அவன். "இப்பிரபஞ்சத்தில் நடைபெறுவன எல்லாம் கருணாகரனாகிய ஆண்டவனின் செயலே" என்று உறுதியாக நம்புபவர்களின் மனோபாவம் இத்தகையதே.

பரிபூர்ணமான ஒரு பொருளை நாம் ஒருகாலும் மனதில் சிந்திக்கமுடியாது. ஒரு எல்லைக்குட்பட்டதாய் இல்லாத ஒன்றைப்பற்றி நாம் எண்ணிப்பார்க்க முடியாது. கடவுளை ஒரு எல்லைக்குட்பட்ட பொருளாகக் கற்பனை செய்துதான் நாம் வணங்கமுடியும்.

மதகுருவான ஜான் எஸ்ஸீன் எனும் புத்தமதப் பிரிவைச் சேர்ந்தவர். கிறிஸ்தவர்களின் சிலுவையானது, சிவலிங்கமே; வேறு எதுவுமன்று; குறுக்காக வைக்கப் பட்ட இரண்டு சிவலிங்கங்கள். புராதன ரோமர்களின் பாழடைந்த சின்னங்களில் புத்த வழிபாட்டுச் சின்னங்கள் சிலவற்றை இன்னும் காணலாம்.

தென்னிந்தியாவில் சில ராகங்களைத் தனி ராகங்கள் என்று கூறுகிறார்கள். ஆனால் அவை ஆறு பிரதான ராகங்களிலிருந்து பிரிந்து வந்தவையே. அவர்களுடைய இசையில் மூர்ச்சனை (அதாவது ஸ்வர அலைகள் ஏற்படுத்தும் வழக்கம்) மிகமிகக் குறைவு. சுத்தமான இசைக்கருவிகளை உபயோகப்படுத்துவதும் அபூர்வம். தென்னிந்தியாவில் தற்போதுள்ள வீணை உண்மையான வீணையன்று. நம்மிடம் இராணுவ இசையும் இல்லை; இராணுவ கீதங்களும் இல்லை. பவபூதியின் பாடல்கள் ஓரளவு இராணுவ கீதங்களே.

* * *

கிறிஸ்து ஒரு சந்நியாசி; அவருடைய மதமும் சந்நியாசிகளுக்கே ஏற்ற ஒன்று. "தியாகம் செய்யுங்கள்" என்ற இரண்டே சொற்களில் அவருடைய போதனைகளைக்

கூறிவிடலாம். இதற்கு மேல் அதில் எதுவும் இல்லை. வசதி படைத்த சிலருக்கு இது பொருத்தமானது.

"மற்றொரு கன்னத்தையும் திருப்பிக் காட்டுங்கள்" என்று ஏசு கூறினாரே அது முடியாதது. நடைமுறைச் சாத்திய மற்றது என்பதை மேற்கு நாட்டவர் அறிவார்கள். தர்மத்திற்காக ஏங்கி நிற்பவர்கள், பரிபூர்ணம் அடைய விரும்புவர்களுக்காகத்தான் இது கூறப்பட்டுள்ளது.

"உன்னுடைய உரிமையின் பொருட்டு உறுதியாக நில்" என்பதுதான் சாதாரண மனிதனுக்கான விதி. ஒரே மாதிரியான ஒழுக்க நியதிகளை எல்லாருக்கும் சாதுக்களுக்கும், கிரகஸ்தர்களுக்கும் போதித்தல் இயலாது.

மனிதர் எல்லாரும் சமமாகவே இருப்பதாகக் குறுகிய வகுப்புப் பற்றுள்ள மதங்களெல்லாம் கருதுகின்றன. இது விஞ்ஞான ஏற்புடைத்தன்று. உடல் வேறுபாடுகள் எவ்வளவோ அவ்வளவினும் அதிகமானவை உள்ள வேறுபாடுகள். ஹிந்து மதத்தின் அடிப்படையான கோட்பாடுகளில் ஒன்று யாதெனில் மனிதர் எல்லாரும் வேறுபட்டவரே, எனினும் இவ்வேற்றுமையில் ஒருமை காணலாம் என்பதே. குடிகாரனுக்கும் சில மந்திரங்கள் இருக்கின்றன. விலை மகளிர் வீடு செல்பவனுக்குக்கூட உண்டு!

ஒழுக்கம் நன்னெறி என்பன பிறநோக்காகக் கொள்ள வேண்டியவை. பரிபூரண ஒழுக்கம் என்று இந்த உலகில் ஏதாவது இருக்கிறதா? அப்படியிருப்பதாக எண்ணினால் அது ஒரு மூட நம்பிக்கை. ஒவ்வொரு காலத்தில் தோன்றுகிற ஒவ்வொரு மனிதரையும் ஒரே அளவு கோல் கொண்டு மதிப்பிட நமக்கு உரிமையில்லை.

ஒவ்வொரு நாட்டிலும், ஒவ்வொரு காலத்திலும், மனிதர் ஒவ்வொருவரும் வாழும் சூழ்நிலை தனிச் சிறப்புடைய ஒன்று. சூழ்நிலைக்கு ஏற்ப எண்ணங்களும் மாறுதல் வேண்டும். மாட்டு இறைச்சி உண்பது நல்லொழுக்கம் என்று ஒருகால் கருதப்பட்டது. குளிர் மிகுந்த இடம் அது. நவதான்யப் பொருள்கள் பழகி அறியாக் காலம். அப்போது கிடைத்த முக்கியஉணவு மாமிசம் ஒன்றே. ஆகையால் அந்தக் காலத்தில், அத்தகைய குளிர் மிக்க இடத்தில் மாட்டு இறைச்சி உண்பது ஒரோவகையில் தவிர்க்க முடியாத ஒன்றாயிற்று. ஆனால்

இப்பொழுது மாட்டு இறைச்சி உண்பது ஒழுக்க நெறியன்று என்று கருதப்படுகிறது.

மாறுதல் இயலாத ஒரே பொருள் கடவுள் தான். சமூகம் இயங்கிக் கொண்டேயிருக்கிறது. ஜகத் என்றால் இயங்குவது; சலனமுள்ளது; அசைவது என்று பொருள். கடவுள் அசலம்; சலனமற்றவர்; இயங்குதலற்றவர்; அசைவில்லாதவர்.

நான் சொல்வது 'சீர்திருந்து' என்பதன்று; 'முன்னே செல்' என்பதே. சீர்திருத்தம் செய்ய வேண்டிய அளவுக்கு எதுவும் கெட்டு விடவில்லை. சூழ்நிலைக்கு ஏற்ப மாறுவதுதான், வாழ்க்கையின் இரசியம்; வாழ்க்கையின் மறைபொருள்களை வெளிப்படுத்தும் அடிப்படையான கொள்கை. மாறுதல் அல்லது அனுசரித்துப் போதல் என்பது, அடக்க முனையும் புறசக்திகளை எதிர்த்துப் போராடுவதன் விளைவே. எவன் நன்றாக அனுசரித்துப் போகிறானோ அவன் நீண்ட காலம் வாழ்கிறான். இதை நான் கூறுவிட்டாலும், சமூகம் மாறிக்கொண்டே இருக்கிறது; மாறியே ஆகவேண்டும். கிறுஸ்துவ மதமோ அல்லது விஞ்ஞானமோ சமூகத்தை மாற்றுவதில்லை. அவசியம்தான் அடிப்படை காரணமாக இருந்து வேலை செய்கிறது. வாழவேண்டும் அல்லது பட்டினி கிடக்க வேண்டும் என்ற அவசியம் தான் சமுதாயத்தை மாற்றுகிறது.

* * *

உலகில் மிகச்சிறந்த இயற்கைக் காட்சிகளை எல்லாம் இமயமலை உச்சியில் காணலாம். எவ்வளவு மனக் குழப்பமடைந்தவனாக இருப்பினும் அங்கே சிலகாலம் ஒருவன் வசிப்பானாகில் மன அமைதி அடைவான்.

கடவுள் என்பவர் உலகப் பொது நியதியின் உயரிதோர் உருவம். இந்த நியதியை அறிந்து விட்டால் பிறகு மற்றவை யாவும் இதன் அடக்கம் என்பது எளிதில் விளங்கும். கீழே விழும் பொருள்களுக்கும் நியூட்டனின் ஆகர்ஷணசித்தாந்தத்திற்கும் உள்ள சம்பந்தம் என்னவோ அதுவே கடவுளுக்கும் மதத்திற்கும் உள்ளது.

வழிபாடுகள் ஒவ்வொன்றும் மிக உயரிய பிராத்தனை கொண்டவை. தியானம் செய்ய முடியாதவனுக்குப் பூஜை அவசியம். உருவம் ஒன்று அவனுக்குத் தேவை.

தைரியமுள்ளவர்கள்தான் உண்மையாக நடக்க முடியும். சிங்கத்தையும் நரியையும் ஒப்பிட்டுப் பாருங்கள்.

ஆண்டவனிடமும், இயற்கையிலும் உள்ள நல்லன வற்றை நேசிப்பது கஷ்டமன்று. ஒரு குழந்தை கூடச் செய்து விடக்கூடிய ஒன்று. பயங்கரமானதையும் துன்பந் தர வல்லதையும் கூட நேசிக்க வேண்டும். குழந்தை தொந்தரவு கொடுத்தாலும் அதை ஒரு தந்தை நேசிக்கிறார் அல்லவா?

ஸ்ரீராம கிருஷ்ணர் கடவுள்; மனித வர்க்கத்தைக் காப் பாற்றுவதற்காக அவதரித்தவர். கோபிகா லீலை என்பது அன்பை அடிப்படையாகக் கொண்ட மதத்தின் உச்சநிலை அதில் தனித்தன்மை மறைகிறது; இரண்டறக் கலந்து விடு கிறது. "என் பொருட்டு பந்தங்களை எல்லாம் விட்டுவிடு" என்று கீதையில் போதித்ததை இந்த லீலையில்தான் ஸ்ரீ கிருஷ்ணன் நிதரிசனமாகக் காண்பிக்கிறான். பக்தி என் றால் என்ன வென்பதைப் புரிந்துகொள்ள வேண்டுமாயின், பிருந்தாவன லீலையில் இது பற்றி ஏராளமான புத்தகங்கள் எழுதப்பட்டுள்ளன. சரணடைக. இதுவே இந்தியாவின் மதம். இந்துக்களில் பெரும்பாலோர் ஸ்ரீ கிருஷ்ணனை வணங்கு கிறார்கள்.

ஏழை, பிச்சைக்காரன், பாபி, மகன், தகப்பன், மனைவி ஆகிய ஒவ்வொருவருக்கும் உகந்த 'கடவுள் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா. அவர் ஊடுருவி ஒவ்வொன்றையும் புனிதமாக்கு கிறார்; இறுதியில் நமக்கு அருள்பேறு கிடைக்குமாறு செய் கிறார். தத்துவ சாஸ்திர வல்லுநரும் படித்த மேதைகளும் காணமுடியாதவாறு தம்மை மறைத்துக்கொண்டு, எழுத்தறி வில்லாதவரும் குழந்தைகளும் காணவல்ல காட்சியளிக்கும் கடவுள்; அவரே நம்புவோரின் கடவுள்; அன்பரின் கடவுள்; அறிஞரின் கடவுள் அல்லர். கோபிகளைப் பொறுத்தவரை அன்பும் இறையும் ஒன்றே. அன்பின் அவதாரமாகவே அவனை அவர்கள் அறிந்தார்கள்.

துவாரகையில் ஸ்ரீ கிருஷ்ணன் கடமையைப் போதிக்கிறார்; பிருந்தாவனத்திலோ அன்பைப் போதிக்கிறார். அவருடைய குமாரர்கள் வஞ்சகர்களாக இருந்ததால், ஒருவரை மற்றொருவர் கொன்று குவிக்கவும் அனுமதித்தார்.

யூத, முகம்மதிய மதக் கோட்பாடுகளின்படி கடவுள் ஒரு பெரிய செஷன்சு நீதிபதி. நம்முடைய கடவுளோ, புறத்தே கண்டிப்பானவர்; அகத்தே அன்பும், இரக்கமும் கொண்டவர்.

அத்வைதத்தைப் பற்றிச் சரியாக அறிந்துகொள்ளாமல் எள்ளிநகைப்போர் சிலர் உள்ளனர். "சுத்தமாவது அசுத்தமாவது? நல்லொழுக்கமாவது தீயொழுக்கமாவது? இவை எல்லாம் மனிதர்களின் மூடநம்பிக்கைகள்" என்று இவர்கள் கூறுகிறார்கள். இவர்கள் தங்களுடைய செயல்களில் ஒழுக்க அடக்கம் ஏதும் கடைப்பிடிப்பதில்லை. இது சுத்தப் புரட்டு. இத்தகைய கருத்துக்களைப் பரப்புவதால் விளையும் தீங்கு அளவற்றதாகும்.

இந்த உடல் இருவகைக் கர்மங்களால் ஆனது; ஒன்று நல்லொழுக்கம், மற்றொன்று தீயொழுக்கம்; தீயனவே தரும் தீயொழுக்கம். உடம்பில் முள் குத்துகிறது; மற்றொரு முள்ளால் அதை எடுக்கிறேன்; பிறகு இரண்டையும் தூர எறிந்துவிடுகிறேன். பரிசுத்தமடைய விரும்பும் ஒரு மனிதன் புண்ணியம் என்னும் முள்ளால் பாவம் என்னும் முள்ளை அகற்றுகிறான். மேலும் அவன் உயிர் வாழ்கிறானாதலால் புண்ணியம் ஒன்றே நிற்கிறது. அதுவே மேலும் மேலும் புண்ணியம் செய்யத் தூண்டுகிறது. ஜீவன் முக்தனிடம் சிறிதளவு புனிதத் தன்மை இருக்கிறது. அதனால் அவன் வாழ்கிறான். ஆனால், அவன் செய்வனயாவும் புனிதத் தன்மை வாய்ந்தனவாயிருத்தல்வேண்டும்.

நல்லொழுக்கம் நம் வளர்ச்சிக்கு உறுதுணை; தீயொழுக்கம் நம் வீழ்ச்சிக்கு உறுதுணை. மூவகை இயல்புகள் கொண்டவன் மனிதன்: ஒன்று மிருக இயல்பு. இன்னொன்று மனித இயல்பு. மற்றொன்று தெய்வ இயல்பு. தெய்வ இயல்பினை வளர்க்கக் கூடியது நல்லொழுக்கம்; உன்னிடமுள்ள மிருக இயல்பை அழித்து, மனித இயல்புள்ளவனாகவேண்டும்.

அதாவது அன்பும் தர்மசிந்தனையும் உள்ளவனுகவேண்டும். அந்தக் கட்டத்தையும் தாண்டி நீ சுத்த சத்-சித்-ஆனந்தமாகவேண்டும். சுடுதலற்ற தீயாகவும், குறைவற்ற அற்புத அன்புள்ளவனுகவும், துன்ப உணர்ச்சியே இல்லாதவனுகவும் வேண்டும்.

பக்தி இருவகைத்து; ஒன்று வைதி பக்தி; இன்னென்று ராகானுகா பக்தி.

வைதி பக்தி என்பது வேதத்தில் நம்பிக்கை; வேத கட்டளைக்குக் கீழ்ப்படிதல்.

ராகானுகா பக்தி ஐந்து வகைப்படும்.

1. **சாந்தம்** — கிறிஸ்துவ மதத்தில் கூறப்பட்டிருப்பது போன்றது.

2. **தாஸ்யம்** — இராமனிடம் அனுமன் கொண்ட பக்தி போன்றது.

3. **ஸக்கியம்** — கிருஷ்ணனிடம் அர்சுனன் கொண்ட பக்தி போன்றது.

4. **வாத்ஸல்யம்** — கண்ணனிடம் வசுதேவர் கொண்ட பக்தி போன்றது

5. **மதுரம்** — கண்ணனிடம் கோபிகள் காட்டிய அன்பு போன்றது.

சமூகத்தை ஒரு நீள் வட்டத்திற்கு ஒப்பிட்டார் கேசவ சந்திரசென். இவ்வட்டத்தின் நடுநாயக சூரியனுக விளங்குவது இறை. மிக தூரத்தில் சமூகம் இருக்கும்போது, ஒரு அவதார புருஷர் வந்து அதைக் கடவுளுக்கு அருகில் அழைத்துச் செல்கிருர். மறுபடியும் அது கடவுளிடமிருந்து வெகுதூரம் சென்றுவிடுகிறது. இது ஏன் அவ்வாறு செல்ல வேண்டும்? என்னல் கூறமுடியாது. ஒரு அவதாரத்துக்கு என்ன அவசியம்? படைப்புக்கு என்ன அவசியம் இருந்தது? நம் எல்லோரையும் ஆண்டவன் ஏன் பரிபூரணர்களாகப் படைக்கவில்லை? இவைகளெல்லாம் லீலை—நமக்கு ஒன்றும் தெரியாது.

மனிதர் பிரம்மமாகலாம். ஆனால் கடவுளாக முடியாது. யாராவது ஒருவர் கடவுளாகியிருந்தால் அவருடைய படைப்பை எனக்குக் காட்டுங்கள் பார்க்கலாம். விசுவாமித்தரின் படைப்பு என்பது அவருடைய கற்பனையே. அது விசுவாமித்திரரின் சட்டத்திற்குப் பணிந்து நடந்திருக்கலாம். யாராவது ஒருவர் கடவுளாகியிருந்தால், படைப்பவர் இருவராகி அவர்தம் சட்டங்களில் முரண்பாடு ஏற்பட்டு, உலகமே முடிந்து போயிருக்கும். உலகத்தில் உள்ள சமநிலை மிகவும் நுண்மையானது; ஓர் அணுவை நீங்கள் மாற்றி வைத்தாலுங்கூட இந்த உலகம் முழுவதுமே அழிந்துவிடும்.

உலகில் மகான்கள் இருந்திருக்கிறார்கள். அவர்களுக்கும் நமக்கும் உள்ள வித்தியாசங்கள் கணக்கில் அடங்கா. ஆனால் இறையுடன் ஒப்புநோக்கும்போது அவர்கள் கடுகளவினரே. எல்லையற்ற பரம் பொருளின் முன் மற்றவை ஒரு பொருளாகா. ஆண்டவனுடன் ஒப்பிடும்போது விசுவாமித்திரர் ஒரு சிறு புழு; மனித உருக்கொண்ட புழு. வேறு என்ன?

ஆன்மிக, பௌதிக பரிணும தத்துவத்தின் தந்தை பதஞ்சலி.

பொதுவாக உயிர்கள் சூழ்நிலையைவிட வலிகுன்றியுள்ளன; சூழ்நிலைக்கு ஏற்ப அனுசரித்துக் கொள்ளப் போராடுகின்றன; சிலசமயம் இம்முயற்சியில் அளவு மீறிவிடுகின்றன; இவ்வாறு எல்லை மீறுங்கால் இன்னேரினமாக உடல் மாறுகின்றன. நந்தி ஒரு மனிதர்; அளவு மீறிய புனிதத்தன்மை பெற்றவர். அதனல் அவருடைய மனித உடல் அப்புனிதத்தன்மையை ஏற்க முடியாததாயிற்று. எனவே அவருடைய உடலில் இருந்த மூலக் கூறுகள் மாறின; தெய்விக உடலாக மாற்றப் பெற்றன.

போட்டி என்ற பயங்கர என்ஜின் இருக்கிறதே, அது எல்லாவற்றையும் நசுக்கி அழித்துவிடும். நீ வாழ வேண்டுமானல், காலத்திற்கு ஏற்றபடி அனுசரித்து நடந்துகொள்ள வேண்டும். நமது நாட்டில் விஞ்ஞானம் வளர்ச்சி பெறச் செய்ய வேண்டும். அறிவின் ஆற்றலே சக்தி. ஐரோப்பியர்களுக்குள்ள ஸ்தாபனத் திறமையை நாமும் கற்றுக்

கொள்ள வேண்டும். நீங்கள் படிக்க வேண்டும்; உங்கள் பெண்மணிகளையும், படிப்பிக்க வேண்டும். இளமை மணத்தை அறவே நிறுத்த வேண்டும்.

இந்தக் கருத்துக்கள் எல்லாம் இப்பொழுது சமூகத்திலே இருக்கின்றன. உங்களுக்கும் அது தெரியும். ஆனால் செயலாற்றும் துணிவு உங்களிடம் இல்லை. பூனைக்கு மணி கட்டுவது யார்? காலப் போக்கில் ஆச்சரியமான மனிதர் ஒருவர் வருவார். அப்போது இந்த எலிகள் எல்லாம் தைரியம் பெற்றனவாகும்.

பெரிய மகான் ஒருவர் உதிக்கும்போது சூழ்நிலைகளெல்லாம் அவர்தம் ஏவல் செய்யச் சித்தமாயிருக்கின்றன. காக்கை உட்கார்ந்தவுடன் பனம் பழம் விழுவது போல பழைய அழுக்கு மூட்டைகள் யாவும் அகன்றுவிடும். அவர் பீரங்கியிலிருந்து வரும் தீப்பொறி போன்றவர். அவருடைய பேச்சில் சாரம் இருக்கும். அவர்தம் வருகைக்காக நாம் உலகத்தைத் தயார் செய்து கொண்டிருக்கிறோம்.

ஸ்ரீ கிருஷ்ணன் சூழ்ச்சிக்காரர் அல்லர். யுத்தத்தைத் தடுப்பதற்காக அவர் தம்மாலியன்றவரை முயன்றார். போருக்கு வற்புறுத்தியவன் துரியோதனனே. ஆனால் போரில் இறங்கிய பின்னர் முன்வைத்த காலைப் பின்வைக்கக் கூடாது. அவனே கடமை செய்வோன். இக்கடமையிலிருந்து தப்பி ஓடாதே. அது கோழைத்தனம். ஏதாவது ஒன்றில் ஈடுபட்டால், அதைச் செய்து முடிக்கவேண்டும். ஓர் அங்குலமும் அசைதல் கூடாது. ஆனால் நாம் மேற்கொள்ளும் காரியம் மட்டும் அதர்மத்தின் பாற்பட்டதாயிருத்தல் கூடாது. ஸ்ரீ கிருஷ்ணன் ஈடுபட்ட யுத்தம் ஒரு தர்ம யுத்தமாகும்.

சாத்தான் பல்வேறு வேஷங்களில் தோன்றுவான். நீதி என்ற உருவத்தில் கோபம் வரும். கடமை என்ற உருவத்தில் மனோவிகாரங்கள் வரும். அவ்வாறு வரும்போது முதலில் மனிதன் அதை அறிகிறான்; ஆனால் பின்னர் மறந்து விடுகிறான். வக்கீல்களின் மனச்சாட்சியைப் போல எல்லாம் புரட்டு என்பதை முதலில் அவர் அறிவார். பிறகு,

அதுவே கட்சிக்காரர்களுக்கு ஆற்ற வேண்டிய கடமையாகிறது; இறுதியில் அவர்களுடைய மனச்சாட்சி கல்லாகி விடுகிறது.

யோகிகள் நர்மதை நதிக் கரையில் வாழ்கிறார்கள். அதுவே அவர்களுக்குச் சிறந்த இடம். காரணம் அங்கு தட்ப வெப்பம் சமமாக இருப்பதே. பக்தர்கள் பிருந்தாவனத்தில் வசிக்கிறார்கள்.

சிப்பாய்கள் சீக்கிரம் இறந்துவிடுகிறார்கள். இயற்கையில் குறைகள் மலிந்து இருக்கின்றன. விளையாட்டில் சிறந்தவர்களும் விரைவில் இறந்துவிடுகிறார்கள். கனவான்கள் பலமுள்ளவர்களாகவிருக்கிறார்கள்; ஏழைகளோ உடல் உறுதி படைத்தவர்களாகவிருக்கிறார்கள். மலச்சிக்கலுள்ள மனிதனுக்குப் படி உணவு பொருந்தலாம். நாகரிகமுள்ள மனிதன் மூளை வேலையின் பொருட்டு ஓய்வு கொள்ளல் அவசியம். உணவின் பொருட்டு, உப்புப்புளி, காரம், ஊறுகாய் முதலியவற்றை அவன் சேர்க்கவேண்டியவனாகிறான். காட்டுமிராண்டியோ ஒரு நாளைக்கு நாற்பது அல்லது ஐம்பது மைல் நடக்கிறான். மிக மோசமான உணவையும் அவன் ருசித்துச் சாப்பிடுகிறான்.

நமது பழக்கங்களெல்லாம் செயற்கையானவை. மாம்பழம் மிக எளிய ஒன்று. கோதுமையும் செயற்கை உணவே.

பிரம்மச்சரியத்தைக் கடைப்பிடித்து உடலில் உள்ள ஆன்மிக பலத்தை வளர்த்துக்கொள்ளுங்கள்.

இல்வாழ்வான் என்பவன் தன்னுடைய வருமானத்தைச் செலவிட வேண்டிய முறை இதுவே. கால் பாகம் அவனது குடும்பத்துக்கு; கால்பாகம் தர்மத்துக்கு; கால்பாகம் அவனுக்கு; கால் பாகத்தை அவன் மீதப்படுத்தவேண்டும்.

வேற்றுமையில் ஒற்றுமையே படைப்பின் ரகசியம். பொதுமையில் தனிமை.

காரணத்தை மட்டும் மறுப்பதேன்? காரியத்தையும் மறுத்திடுக. காரியத்தில் உள்ள ஒவ்வொன்றும் காரணத்திலும் அமைந்திருக்கும்.

கிறிஸ்துவின் பொதுவாழ்வு மொத்தம் பதினெட்டு மாதங்களே. இதன் பொருட்டு முப்பத்திரண்டு ஆண்டுகள் மௌனமாகத் தம்மைத் தயார் செய்துகொண்டிருந்தார். முகமது வெளியே வருவதற்கு முன்பே அவருக்கு நாற்பது வயதாகி விட்டது.

* * *

சாதாரண வாழ்க்கையில் ஜாதி முறை அவசியமாக விருக்கிறது என்பது உண்மையே. ஒரு குறிப்பிட்ட வேலையைச் செய்யும் சூட்சும புத்தியுள்ளவர்கள் ஒரு ஜாதியாகிருர்கள். ஆனுல் ஒரு தனிப்பட்ட மனிதனுக்கு எதில் திறமையிருக்கிறதென்பதை யார் முடிவு செய்வது? ஆன்மிக விஷயங்களில் தனக்கு விசேஷத் தகுதியிருக்கிறதென ஒரு பிராமணன் நினைத்தாஞகில், அதில் பகிரங்கமாக ஒரு சூத்ரனுடன் போட்டியிட அவன் ஏன் தயங்கவேண்டும்? பந்தயக் குதிரை ஒன்று இளைத்து வற்றிய இன்னொரு குதிரையுடன் போட்டி போட அஞ்சுமா?

கிருஷ்ண கர்ணும்ருதத்தை இயற்றியவரான பில்வமங்களின் சரிதத்தைப் பாருங்கள். தம்மால் கடவுளைக் காண முடியவில்லையென்பதற்காக இந்த பக்தர் தமது கண்களைப் பிடுங்கி எடுத்துவிட்டார்! தவருன காமம்கூடக் கடைசியில் சரியான பிரேமைக்குக் கொண்டு செல்லுமென்பதை அவருடைய வாழ்க்கை மெய்ப்பிக்கிறது.

நீண்ட காலம் முன்னரே மதவிஷயங்களில் வளர்ச்சி பெற்றதும், ஒவ்வொரு விஷயத்திலும் நுண்மை நாடி உயர் பொருளைப்பற்றி நின்றதுமே, இந்துக்களை இன்றைய தாழ் நிலைக்குக் கொண்டுவந்துவிட்டன. இந்துக்கள் மேற்கு நாட்டாரிடமிருந்து சிறிது லோகாயதத்தைக் கற்றுக் கொள்ளவேண்டும்; அவர்களுக்குச் சிறிதளவு ஆன்மிகத்தைக் கற்றுத்தரவேண்டும்.

உங்களுடைய மாதர்களுக்குக் கல்வி அளியுங்கள். அவர்களுடைய பிரச்னையை அவர்களிடமே விட்டுவிடுங்கள்.

அப்போது அவர்கள், தங்களுக்கு என்னென்ன சீர் திருத்தங்கள் தேவையென்பதைக் கூறுவார்கள். அவர்களைப் பற்றிய விஷயங்களைப் பேச, நீங்கள் யார்?

தோட்டிகளையும் பறையர்களையும் இன்றைய இழிநிலைக்குக் கொண்டுவந்தவர் யார்? நாம் இரக்கமின்றி நடந்து கொண்டதே. அதே சமயம் அழகாக அத்வைதம் பேசுகிறோம்! இது வெந்த புண்ணில் வேல்கொண்டு குத்துவது போலாகாதா?

ரூபமும் ரூபமின்மையும் இந்த உலகில் இணைந்து இருக்கின்றன. ரூபமற்றவற்றை, ரூபமுள்ளவைகளைக் கொண்டுதான் சிந்திக்கமுடியும். ரூபமுள்ளவைகளை ரூபமற்றவைகளுடன் இணைத்துத்தான் நாம் சிந்திக்கிறோம். இந்த உலகமே நம்முடைய சிந்தனைகளின் உருவம்தான். விக்கிரகம் என்பது மதத்தின் விளக்கம்.

கடவுளிடம் எல்லா இயல்புகளுமே இருத்தல் சாத்தியம் தான். ஆனால் மனித இயல்பு மூலமே நாம் அவனைக் காண முடியும். மனிதனை நேசிப்பதுபோலவே நாம் ஆண்டவனை நேசிக்கமுடியும்; தந்தையாகவும், தனயனாகவும் நேசிக்க இயலும். உலகில் பலம் வாய்ந்த அன்பு ஆணுக்கும் பெண்ணுக்குமிடையே உள்ள காதல் ஒன்றே; அதிலும் கள்ளக் காதல்தான்; கிருஷ்ணன்—இராதை காதல் மூலம் உணர்த்தப்படுவது இதுவே. வேதங்களில் எந்த இடத்திலுமே மனிதன் ஒரு பாபியாகப் பிறக்கிறான் என்று கூறப்படவில்லை. அவ்வாறு கூறுவது மனித இயல்பின் மீது கூறப்படும் அவதூறாகும்.

மெய்ப்பொருளை நேருக்கு நேராகக் காணும் ஒரு நிலை அடைவது எளிதன்று. அன்றொரு நாள் ஒரு படத்தில் மறைவாகப் போடப்பட்டிருந்த ஒரு பூனையைக் கண்டு பிடிக்க முடியவில்லை; அந்தப் படத்தின் பெரும் பகுதியில் பூனைதான் இருந்தது.

நீங்கள் யாருக்கும் தீங்கு செய்துவிட்டு, அமைதியாக உட்கார்ந்துகொண்டிருக்க முடியாது. கடவுள் பழிவாங்குவார். அதிலிருந்து நீங்கள் தப்பமுடியாது. உலக அமைப்பு அற்புதமானது.

காமம் கண்ணில்லாதது. அது நரகத்தில் ஆழ்த்தும். பிரேமைதான் அன்பு. அது சுவர்கத்துக்குக் கொண்டு போகும்.

கிருஷ்ணன்—இராதை காதல் காமத்தின் பாற்பட்டதன்று. "உனது பாதங்கள் என் இதயத்தில் பட்டால் காம உணர்ச்சியெல்லாம் பறந்துவிடும்" என்று கண்ணனிடம் கூறுகிறுள் இராதை.

புலன்களுக்கு அப்பாற்பட்ட நிலை அடையும் போது காமம் மடிகிறது. பிரேமை நிற்கிறது.

கவி ஒருவர் வண்ணுரப் பெண் ஒருத்தி மீது காதல் கொண்டிருந்தார். ஒரு நாள், அப்பெண்ணின் கால் மீது கொதிக்கும் பருப்பு விழுந்தது. கவியின் கால்களில் கொப்பளம் தோன்றியது.

கடவுளின் உன்னத அம்சம் சிவன்; அழகின் அம்சம் கிருஷ்ணன். பிரேமையானது நீல நிறமாகப் படிகிறது. நீல நிறம் தீவிரமான ஆழ்ந்த பிரேமையைக் குறிக்கும். சாலமன் "கிருஷ்ணனை"க் கண்டான். இந்தப் பொருளில் எடுத்துக்கொண்டால் கிருஷ்ணனை எல்லாருமே கண்டார்கள்.

இன்றும் கூட, உங்களுக்குப் பிரேமை ஏற்பட்டால் நீங்கள் இராதையைக் காணலாம். இராதையாகி அருள் பெறுங்கள். வேறு வழியே இல்லை. சாலமன் பாடல்களைக் கிறிஸ்தவர்கள் புரிந்துகொள்ளவில்லை. "அது ஒரு தீர்க்க தரிசனம். தேவாலயத்தின் மீது கிறிஸ்துவுக்குள்ள அபிமானத்தை அது சித்தரிக்கிறது" என்று கூறுகிறுர்கள். அல்லது இதெல்லாம் அபத்தம் என்று எண்ணி அதன்மீது ஏதாவது கதை கட்டுகிறுர்கள்.

இந்துக்கள், புத்தர் ஓர் அவதாரம் என்று நம்புகிறுர்கள்.

கடவுள் ஒருவர் நிச்சயமாக உண்டு என்று இந்துக்கள் உறுதியாக நம்புகிறுர்கள். ஆனல் அவர் இருக்கிறுரா, இல்லையா என்பதை அறிந்துகொள்வதற்குக் கூட புத்தமதம் முயற்சி செய்வதில்லை.

நடைமுறையில் நல்லவர்களாகுமாறு நம்மைத் தூண்டுவதற்காகவே புத்தர் அவதரித்தார். "நல்லவர்களாக இருங்கள்; ஆசைகளைக் கட்டுப்படுத்துங்கள்" என்று அவர் போதித்தார். அவ்வாறு இருந்தால், உங்களுக்கு துவைதம் உண்மையா, அத்வைதம் உண்மையா, ஒரே பொருள் தான் இருக்கிறதா அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவை உண்டா என்பது தெரிந்துவிடும்.

புத்தர் இந்து மத சீர்திருத்த வாதி.

ஒரே மனிதனை அவனுடைய தாயும், மனைவியும் வெவ்வேறு கண்ணோட்டத்துடன் பார்க்கின்றனர்; அவர்களுடைய உறவு வெவ்வேறாக இருக்கிறது. அதேபோன்று தீயவர்கள் கடவுளிடம் தீமை காண்கிறார்கள். நல்லவர்கள் அவனிடம் நல்லதை காண்கிறார்கள். எவ்வுருவும் அவனுக்கு ஏற்புடையதே. ஒவ்வொருவரும் தாம் கற்பனை செய்யும் விதத்தில் அவனைக் காணலாம். தண்ணீர் அதை வைத்திருக்கும் பாத்திரங்களுக்கு ஏற்பப் பல உருவங்களை எடுக்கிறது. எனினும் அப்பாத்திரங்கள் எல்லாவற்றுள்ளும் இருக்கும் நீர் ஒன்றே. ஆகையால் எல்லா மதங்களும் உண்மையானவையே.

கடவுள் கொடியர்; கொடியருமல்லர்; எங்கு முள்ளவர்; எங்கு மிலாதவர். ஆகவே அவர் எத்தனையோ முரண்பாடுகளையுடையவர். இயற்கையும் இத்தகைய முரண்பாடுகள் நிறைந்த ஒன்றே.

இச்சா சுதந்திரம். அதாவது கிரியா சுதந்திரம் உண்டென்று நீ எதைக் கருதுகிறாயோ அது அவசியத்தினால் பெறப்பட்ட ஒன்று. சிந்தனைக்கும் செயலுக்குமிடையே ஓர் எல்லையற்ற தொடர்புளது. முன்னும் உள்ளது; பின்னும் உளது. எனினும் செயல் ஒன்றே சுதந்திரம் என்று பெயர் பெறுகிறது. வெளிச்சம் உள்ள அறை வழியே பறவை ஒன்று சிறகடித்துப் பறந்து செல்வது போன்ற சுதந்திரம் அது. நாம் சுதந்திரமாயிருப்பதை உணருகிறோம். அதற்குக் காரணம் வேறேதும் இல்லை யென்று நினைக்கிறோம். விழிப்புணர்ச்சிக்கு அப்பால் செல்ல இயலாமையால் நாம்

சுதந்திரமாக இருப்பதாக எண்ணுகிறேம். விழிப்புணர்ச்சிக்கு அப்பால் அதைத் தொடர்தல் இயலாது. மெய்யான விடுதலை யுணர்ந்தோன் இறைவன் ஒருவனே. மகாபுருஷர்கள் இறைவனுடன் ஒன்றுபடுகின்றனர்; ஆகையால் உண்மையான சுதந்திரத்தை அவர்களும் அறிவார்கள்.

நீர் ஊற்றிலிருந்து வெளியே வரும் தண்ணீரைத் தடுத்துத் தேக்கி அந்த இடத்திலேயே நிற்கச் செய்யலாம். அதற்கு மேல் உங்களுக்குச் சுதந்திரமில்லை. ஊற்றுக்கண் மாருது; அப்படியேதான் இருக்கும். ஒவ்வொன்றும் முன்னை விதிப்படியே நடக்கும். அந்த முன்னை விதியின் ஒரு பகுதியே உங்கள் சுதந்திர உணர்வு. என்னுடைய செயலை நானே உருவாக்கிக் கொள்கிறேன். கர்ம வினைவை உணர்வதே பொறுப்பு. பரிபூர்ண அதிகாரம் இல்லை. இங்குள்ள அதிகாரமெல்லாம், அவசியத்தின் பேரில் நாம் செய்யும் ஒரு காரியத்தை, நமது திறமையினுல் ஏற்பட்டதாக உணர்வதுதான். “நான் செய்கிறேன்” என்று மனிதன் நினைக்கிருன்; சுதந்திர அதிகாரம் என்று அவன் கூறுவது இந்த எண்ணத்தையே. சுதந்திரத்துடன் பொறுப்பும் சேர்ந்து விடுகிறது. நம் மூலம் விதி என்ன செய்தாலும் சரி, நாம் அதன் வினைவை உணருகிறேம். எவரேனும் ஒருவரால் எறியப்படும் பந்து அதன் வினைவைத்தான் உணரும்.

சுதந்திரம் எனும் பெயரால் நமக்கு ஏற்படுகிற இந்த இயற்கைத் தேவையிருக்கிறதே இது, சூழ்நிலையுடன் நாம் கொண்டுள்ள விழிப்பு நிலைத் தொடர்பு எதையும் பாதிக்கவில்லை. தொடர்புமுறை மாறுவதில்லை. ஒன்று, ஒவ்வொருவரும் சுதந்திரமாக விருக்கிருர்கள். அல்லது ஒவ்வொருவரும் ஏதாவது ஓர் அவசியத்தின் பொருட்டு இருக்கிருர்கள். இதனுல் பாதகமில்லை; தொடர்பு ஒன்றுகவேயிருக்கும். பாவமும் புண்ணியமும் ஒன்றுகவே இருக்கும். “திருடுவது அவசியமாக விருந்தது” என்று ஒரு திருடன் கூறுவனுகில், தண்டிப்பதும் அவசியமாக விருக்கிறது என்றுதான் ஒரு மாஜிஸ்திரேட் கூறுவார். ஓர் அறையில் உட்கார்ந்து கொண்டிருக்கிறேம்; அந்த அறை சுற்றிக் கொண்டேயிருக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்போது நம்மிடையே மாறுதல் ஏதும் நிகழ்வதில்லை. எல்லையற்ற இந்தக்

காரண காரிய சங்கிலித் தொடரிலிருந்து விடுபடுவதுதான் முக்தி. முக்தர்கள் அவசியத்தினுல் தூண்டப்படுவதில்லை. அவர்கள் கடவுளைப் போன்றவர்கள். காரண காரியத் தொடரை அவர்களே ஆரம்பித்து வைக்கிருர்கள். கடவுள் ஒருவரே சுதந்திரமாக உள்ளவர்; முக்தர்களின் இச்சை யூற்று. முக்தர்கள் பெற்ற அநுபூதியும் இத்தகையதே.

வேண்டுதல் உணர்வே உண்மைப் பிரார்த்தனை; சொற்களன்று. வேண்டிய வேண்டியாங்கு அருளப் பெறுகி றீர்களா வென்பதைக் காத்திருந்து பார்க்கும் பொறுமை உங் களுக்கு வேண்டும்.

கடமை செய்து கண்ணியம் வளர்க்கவேண்டும். கடமை செய்வதன் மூலம், கடமை பற்றிய எண்ணம் அகற்றலாம். அதன் பின்னரே எல்லாம் ஆண்டவன் செயல் என்ற எண்ணம் நமக்கு ஏற்படுகிறது. இயந்திரம் நாம்; இயக்குவோன் அவன். இருள் நிறைந்தது இவ் வுடல்; ஒளி நிறை விளக்கு அவன். வெளிவரும் ஒளி யெல்லாம் ஆண்டவனுடையன. இதை நீங்கள் உணர்வ தில்லை. "நான்" என்று உணர்கிறீர்கள். இது மாயை. ஆண்டவன் கருத்துக்கு அடிபணிய நீங்கள் பயிலவேண் டும். இதற்கேற்ற சிறந்த பள்ளிக்கூடம் கடமைதான். கடமையே அறநெறியெனப்படுவது. ஆண்டவனுக்கு முற்றிலும் பணிந்து நடக்கப் பழக்கிக்கொள்ளுங்கள். "நான்" என்பதை அகற்றிவிடுங்கள். ஏமாற்றுதல்வேண்டாம். இவ் வாறு செய்தால் கடமை என்ற எண்ணமே உங்களிட மிருந்து அகன்றுவிடும். எல்லாமே அவன் செயல்தான். அதன்பிறகு நீங்கள் இயற்கையாகவே மன்னித்துவிடுவீர்கள்; பிறர் குற்றத்தை மறந்துவிடுவீர்கள்; மற்றும் இது போன்ற காரியங்களைச் செய்வீர்கள்.

பல்வேறு மக்களுக்குப் பல்வேறு படிகளில் உள்ள கடமையையும் அனுஷ்டானங்களையும் நமது மதம் கூறுகிறது.

மகான்களிடமே பூரண ஒளி காணலாம். மகா புருஷர் பளிங்கு போன்றவராவர். இப்பளிங்கின் குறுக்கும் நெடுக்கும்

கடவுளின் கிரணங்கள் ஊடுருவிச் செல்கின்றன. ஆகவே ஏன் ஒரு ஜீவன் முக்தனை வணங்கக்கூடாது ?

மாகான்களிடம் தொடர்புகொள்வது நல்லது. நீங்கள் மகான்களின் அருகில் சென்ருல், அவர்களை அறியாமல் அவர்களைச் சுற்றியுள்ள ஒவ்வொன்றிலும் புனிதத்தன்மை வீசுதல் காண்பீர்கள்.

உனக்குச் செய்த தீமையை எதிர்த்து நில்லாதே; ஆனல் மற்றையோருக்குச் செய்யப்படும் தீமையை எதிர்த்து நிற்கலாம். ஆண்டவனின் மெய்யடியராதல் வேண்டின் இன்பங்களை எல்லாம் துறந்துவிடல்வேண்டும். இன்பங்களை எல்லாம் நுகர்ந்திருக்கலாம். ஆனல் வழி காட்டுமாறு ஆண்டவனை வேண்டுக. அவர் அழைத்துச் செல்வார்.

இந்த உலகத்திற்கெல்லாம் அப்பாற்பட்டதும் மேலானதுமான ஒன்றை எந்த இதயம் விரும்புகிறதோ அந்த இதயத்தின் ஒரு சிறு பகுதியிலேயே இந்தப் பிரபஞ்சம் அடங்கும்.

சுயநலம் என்பது மனிதன் ஒவ்வொருவரிடமும் உள்ள சாத்தான் அவதாரம். சுயநலத்தின் ஒவ்வொரு பகுதியும் பேயே. இந்தச் சுயநலத்தை ஒரு புறம் அகற்றுங்கள். மற்ருெரு புறம் ஆண்டவன் வருவான். சுயநலம் முற்றும் அகற்றப்படும்போது ஆண்டவன் ஒருவன் அங்கு இருப்பான். ஒளியும் இருளும் ஒன்று சேர்ந்து இருத்தல் இயலாது.

திடமான, பரிசுத்தமான மனதின் அடையாளம் இச் சிறியதொரு "நான்" என்பதை மறத்தலே. ஆரோக்கியமுள்ள குழந்தை தனது உடலை மறந்துவிடுகிறது.

சீதை—அவள் பரிசுத்தமாகவிருந்தாள் என்று சொல்வது நிந்தனை. பரிசுத்தமே உருவாக அவள் அமைந்திருந்தாள் என்றே கூறவேண்டும். இந்த பூமியில் வாழ்ந்தவருள் அழகியதோர் உயரிய குணசித்திரம்.

இராமன் முன் சீதை போன்று ஒரு பக்தன் இருக்க வேண்டும். எத்தனையோ கஷ்டங்களுக்கு அவன் ஆளாகலாம். சீதை தன்னுடைய கஷ்டங்களையெல்லாம் பொருட்படுத்தவில்லை. அவள் இராமனில் ஒன்றினள்.

புத்த சமயம் பூரணமாய் நிறைந்த ஒன்று பற்றி எதும் நிருபிக்கவில்லை. ஓடையிலே ஓடுகின்ற தண்ணீர் மாறிக் கொண்டேயிருக்கிறது. ஓடை நீர் ஒன்றேயெனக் கூற நமக்கு உரிமை இல்லை. புத்தமதத்தினர் "ஒன்று" என் பதை மறுக்கின்றனர்; "பல" எனக் கூறுகின்றனர். "பல" என்பதை மறுக்கிறோம் நாம்; "ஒன்று" எனக் கூறு கிறோம். அவர்கள் கர்மா என்று அழைப்பதை, நாம் ஆன்மா எனக் கூறுகிறோம். ஒன்றன் பின் ஒன்றாக எழும் அலையின் தொடரே மனிதன் என்பது புத்தமதக் கோட்பாடு. ஒவ்வொரு அலையும் அழிகிறது. அழியும் அலை ஒவ்வொன் றும் அதற்கு அடுத்த அலையை எவ்விதமோ உற்பத்தி செய்து விடுகிறது. முதல் அலையும் இரண்டாவது அலையும் ஒன்றே என்பது மாயை. இம்மாயையினின்றும் விடுபடுவ தற்கு சத்கர்மா அவசியம்.

புத்த மதத்தினர் இவ்வுலகத்திற்கு அப்பால் எதையுமே உபதேசிக்கவில்லை. உலக நிலைக்கு அப்பால், பரிபூர்ணம் ஒன்று இருக்கிறது என நாம் கூறுகிறோம். உலகில் துக்கம் இருக்கிறது என்பதை புத்தமதம் ஒப்புக்கொள்கிறது. இந் தத் துக்கத்தைப் போக்குவது ஒன்றே போதுமானது என் றும் கூறுகிறது. நாம் சுகம் பெறுவோமா, என்பதை அறி யோம். மற்றவர்கள் போதித்த ஆன்மாவைப்பற்றி புத்தர் போதிக்கவில்லை. இந்துமதத்தின்படி ஆன்மா ஒரு தனிப் பொருள்; ஆண்டவன் பரிபூர்ணமானவர். அவை தம் உறவினை அழித்துக்கொள்கின்றன என்பதை இரண்டு மதங் களும் ஏற்றுக்கொள்கின்றன. ஆனால் அவ்வாறு உறவை அழிப்பதன் விளைவு என்னவென்பது பற்றி புத்தமதத்தினர் கூறுவதில்லை.

தற்போதைய இந்துமதமும் புத்த மதமும் ஒரு மதத் தின் இரு கிளைகளே. புத்தமதக் கிளை பட்டுப்போயிற்று; அதைச் சங்கரர் வெட்டி எறிந்துவிட்டார்.

ஹிம்சையும் பிறவும் காணப்பட்டமையின் வேதங் களைப் புத்தர் மறுத்தார் என்று கூறப்படுகிறது. புத்த மத வரலாற்றின் ஒவ்வொரு பக்கமும் வேதங்களுடன் (அதாவது சடங்குகள் சம்பந்தப்பட்டவை) நடத்திய போராட்டத்

தையே விவரிக்கும். ஆனால் இவ்விதம் போரிட அவருக்கு எவ்வித உரிமையும் இல்லை.

நிரீசுவர வாதத்தையே புத்தர் கூறினார். ஆனால் நம்முடைய மதத்தில் கடவுளைப்பற்றியே எங்கும் கூறப்பட்டுள்ளது. வேதங்கள் கூறுகின்றன; சகுணம் நிர்க்குணம் இரண்டும் பற்றிக் கூறுகின்றன: கீதை முழுதும் கடவுள் பற்றியே கூறப்படுகிறது. கடவுள் இல்லை என்றால், இந்து மதம் இல்லை; வேதங்களும் இல்லை. அஃதொன்றே அருள்பேறடையும் வழி. சந்நியாசிகள் பின்வரும் வாசகத்தைப் பன்முறை கூறவேண்டியவராவர். முக்தியடைய விரும்பும் நான் உலக நாதன் எவனோ வேத நாயகன் எவனோ அவனைச் சரணடைகிறேன்.

மதத்தின் ஒருமை இயைபை புத்தர் அறிந்திருக்க வேண்டும் என்று இப்பொழுது நாம் கூறலாம். அவர் மத வேற்றுமையைப் புகுத்தினார்.

நவீன இந்து மதமும் நவீன ஜைன மதமும், புத்தமதமும் ஒரே சமயத்தில் கிளைவிட்டன. கோணங்கியிலும் ஏமாற்று வித்தையிலும் ஒன்றை மற்றொன்று விழுங்கும் போட்டி சில காலம் நடந்தது.

* * *

கடவுள் அல்லாத எதையும் நாம் கற்பனை செய்ய முடியாது: நம்முடைய ஐம்புலன்களால் அறியக்கூடிய எல்லாம் அவரே. அதற்கு அப்பாலும் அவரே. அவர் ஒரு வகையில் பச்சோந்தி போன்றவர். ஒவ்வொரு மனிதனும் சமுதாயமும், ஒவ்வொரு காலத்தில் கடவுளைக்காணட்டும். ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு வடிவில் ஒவ்வோர் அம்சத்தைக் காண்கிறான். ஒவ்வொரு மிருகமும் இயற்கையிலிருந்து தனக்குத்தேவையான உணவை எடுத்துக்கொள்வது போல தனக்கு எது தகுதியோ அதை அவரிடமிருந்து பெற்றுக்கொள்ளட்டும்.

எல்லாருக்கும் ஒரே மாதிரி விதிகளிருப்பதே கிறிஸ்தவம் போன்ற மதங்களில் உள்ள குறை. ஆனால் இந்து

மதமோ மதவேட்கையின் பல்வேறு கட்டங்களில் இருப்பவருக்கும் முன்னேற்ற நிலையில் இருப்பவருக்கும் ஏற்ப உளது. லட்சியம் யாவும் பூரண நிலையில் உள்ளன. உதாரணமாக சாந்த லட்சியத்தை வசிஷ்டரிடத்திலும், அன்பு லட்சியத்தைக் கிருஷ்ணனிடமும், கடமை இலட்சியத்தை இராமர், சீதையிடமும், அறிவின் லட்சியத்தை சுகதேவரிடமும் காணலாம். இந்த இலட்சிய புருஷர்களையும் மற்ற லட்சிய புருஷர்களையும் ஆராய்ந்து பாருங்கள். எவர் உங்களுக்கு ஏற்றவராக இருக்கிறரோ அவரை ஏற்றுக்கொள்ளுங்கள்.

சத்தியத்தைப் பின்பற்றுங்கள். அது எங்கே கொண்டு போய் விட்டாலும் சரியே. கருத்துகளைக் கடைசி எல்லை வரை ஆராய்ந்து தர்க்க ரீதியான முடிவு காண்க. கோழைகளாய் இராதீர்கள்; பாசாங்குக் காரராயிராதீர்கள்.

உங்களுடைய லட்சியத்தின்மீது உங்களுக்கு ஆழ்ந்த பக்திவேண்டும். அது க்ஷண நேரத்தினதாயிருத்தல் கூடாது. அமைதியும் விடாமுயற்சியும் நிலை பேறும் கொண்ட பக்தியாக இருக்கவேண்டும். இடி மின்னல்களுக்கிடையே வானத்தை மட்டுமே பார்க்கக்கூடியதும், மழையிலிருந்து கிடைக்கும் தண்ணீர் தவிர மற்றெந்தத் தண்ணீரையும் குடிக்காததுமான சாதகப் பறவையைப் போன்றிருங்கள். புனிதமாக இருப்பதற்காக நடத்தும் போராட்டத்தில் அழியவும் தயாராய் இருங்கள். ஆயிரம் தடவை மரணம் வருவதாக இருந்தாலும் அதை வரவேற்கவேண்டும். அதைரியம் வேண்டாம். உயர்ந்த அமிர்தம் நமக்குக் கிடைக்கவில்லை என்பதற்காக, நாம் நஞ்சை அருந்த வேண்டுவதில்லை. இவைகளிலிருந்தெல்லாம் தப்பமுடியாது. மற்ற உலகங்களைப் போன்று இந்த உலகமும் நாம் அறியாத ஒன்றே.

தர்மம் ஒரு பொழுதும் தோல்வியடைவதில்லை. லட்சியத்தில் பக்தி கொண்டவர்களுடைய அனுதாபம் ஒரு போதும் குறைவதில்லை. பிறருக்காக அனுதாபம் காட்டுவதில் எப்போழுதும் சளைக்க மாட்டார்கள். ஆனல் சாதாரண மனிதர் பகைவரை நேசிப்பது சாத்தியமில்லை. தாங்கள் வாழவேண்டுமென்பதற்காக, மற்றவர்களை அவர்கள்

விரட்டி விடுகிறுர்கள். தர்மத்தையும், அன்பையும் அனுஷ்டித்தவர்கள் இவ்வுலகில் சிலரே. அவர்களில் ஒருவர் ஜனகர். இப்படிப் பட்ட மனிதர் சந்நியாசிகளைக் காட்டிலும் உயர்ந்தவராவார். துறவும், பரிசுத்தமும் உருவான சுகதேவர் ஜனகரைத் தம்முடைய குருவாக ஏற்றுக் கொண்டார்; ஜனகர் சுகதேவரிடம் கூறினுர் "நீ பிறவிலேயே சித்தன்; உனக்கு என்ன தெரியுமோ, உனக்கு உன்னுடைய பிதா எதெதைக் கற்றுக் கொடுத்தாரோ அவை யெல்லாம் உண்மைதான் என்று நான் உறுதி கூறுகிறேன்."

பொதுமையில் தனியே படைப்பின் திட்டம். விழிப்புணர்ச்சி ஏற்படுத்துவதில் ஒவ்வொரு கருவுக்கும் பங்கு உண்டு. மனிதன் தனித்தன்மை யுடையவன்; அதே சமயம் பொதுமையுடையவன். நம்முடைய தனித்தன்மையை உணரும் போதுதான், நமது தேசிய, பொதுமை இயல்பையும் கூட நாம் உணர்கிறோம். மனிதர் ஒவ்வொருவரும் ஓர் எல்லையற்ற வட்டத்தினை ஒப்பர்; இந்த வட்டத்தின் மையம் எல்லா இடங்களிலும் இருக்கிறது; ஆனுல் அதன் சுற்றுக்கோடோ யாண்டும் இல்லை. பயிற்சி மூலம் ஒருவன் எல்லாவற்றுள்ளும் தானேயிருத்தல் காணலாம். இதுவே இந்து மதத்தின் சாரம். ஒவ்வோர் உயிரிலும் தனது ஆன்மாவைக் காண்பவனே ஞானியாவான்.

ஆன்மிக நியதிகளைக் கண்டு பிடித்தவர்கள் ரிஷிகள். அத்வைதம் ஜீவான்ம வாதத்தை ஏற்பதில்லை என்கிறது. துவைதமோ ஜீவான்ம வாதத்தை ஏற்கிறது. பரம் பொருளினின்றும் வேறுபட்டது ஜீவன் என்று கூறுகிறது. இரண்டும் உண்மையே. ஒன்று நீருற்றுக்குச் சென்றது; மற்றென்று திருக்குளம் சென்றது. நம்முடைய உணர்வைப் பொறுத்தவரை நாமெல்லோரும் துவைதிகளே என்பது வெள்ளிடை. ஆனுல், அதற்கு அப்பால் நாமெல்லாரும் அத்வைதிகளே. இஃதொன்றே உண்மை. ஒவ்வொருவரையும் உனது சகோதரராக நேசி என்று கிறிஸ்தவம் கூறுகிறதே அம்மாதிரி யன்றி, ஒவ்வொருவரையும் உன் போலவே நேசி என்பது தான் அத்வைதக் கோட்பாடு. சர்வ சகோதர பாவம் நீங்குக; சர்வம் அகம் என்ற பாவம் ஓங்குக. நமது லட்சியம் "எல்லாமே என் சகோதரர்களே"

என்பதன்று; "எல்லாம் நானே" என்பதுதான். பேரின்பச் சித்தாந்தமும் அத்வைதத்தில் அடங்கும்.

"சோஹம்; நானே அவன்" அடிக்கடி இவ்வாறு சிந்தியுங்கள். முதலில் நீங்களே இச்சிந்தையைத் தூண்டுங்கள். பிறகு தானுகவே ஏற்படும். அது நரம்புவரை ஊடுருவிச் செல்லும். மீண்டும் மீண்டும் ஓயாது. சிந்திப்பதன் மூலம் நமது நரம்புகளில் கூட இந்த எண்ணம் செலுத்தப்படுதல் வேண்டும்.

முதலில் உங்களுடைய விழிப்புணர்ச்சியிலிருக்கும் துவைதத்தில் தொடங்குக; இரண்டாவது கட்டம் விசிஷ்டாத்வைதம்— "நான் உன்னில் இருக்கிறேன். நீ என்னில் இருக்கிருய். எல்லாம் கடவுளே" இது தான் கிறிஸ்துவின் போதனே.

மிக உயர்ந்த அத்வைதத்தை நடைமுறை அனுஷ்டானத்திற்குக் கொண்டு வரமுடியாது. விசிஷ்டாத்வைத நிலையில் தான் அத்வைதம் செயலாற்றுகிறது. துவைதம் என்பது பெரியதொரு வட்டத்தினின்றும் தனியாக இருக்கும் சிறிய வட்டம். இவ்விரண்டு வட்டங்களையும் இணைத்து நிற்பது பக்தி ஒன்றே. விசிஷ்டாத்வைதம் என்பது பெரிய வட்டத்துள்ளிருக்கும் சிறு வட்டம். சிறு வட்டம் சுழல்கிறது. சுழலச் செய்வது பெருவட்டமே. அத்வைதம்— சிறு வட்டம் விரிந்து விரிந்து பெரு வட்டத்தில் இணைதலே. அத்வைதத்தில் நான் என்பது ஆண்டவனில் மறைந்து விடுகிறது. இறைவன் இங்குளன்; அங்குளன்; இறைவன் யானே.

* * *

ஆண்டவன் திருநாமத்தைப் பலகாலும் சிந்திப்பதே பக்திக்கு வழி. மந்திரங்கள் சொற்கள் தான்; எனினும் அவற்றை மீண்டும் மீண்டும் சொல்வது பயன் தரும். ஜலங்கிமான் செட்டியின் சக்தி யெல்லாம் மந்திர ஜபம் செய்ததால்— அதாவது சில சொற்களைச் சில சடங்குகளுடன் கூறியதால்— ஏற்பட்டவையே. பண்டைய நாளில் நடந்த போரில் அஸ்திரங்கள், அல்லது பாணங்களுக்கிருந்த சக்தி யெல்லாம் மந்திரங்களினுல் ஏற்பட்டவையே. நம்முடைய

சாஸ்திரங்களெல்லா வற்றிலுமே ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. இந்த சாஸ்திரங்களெல்லாம் கற்பனையென்று நினைப்பது மூட நம்பிக்கையே.

பக்தி ஏற்படுவதற்கு நல்ல பக்தர் சகவாசம் நாடுக; கீதை, இமிடேஷன் ஆப் கிறைஸ்ட் போன்ற நூல்களைப் பயிலுக; கடவுளின் சிறப்பு பற்றியே எப்பொழுதும் எண்ணுக.

பக்தி வழியை மட்டும் வேதங்கள் கூறவில்லை. நிலவுலக நன்மை, தீமைகளை அடையும் வழிகளையும் கூறுகிறது. உங்களுக்கு எது வேண்டுமோ அதைக் கொள்க.

வங்காளம் பக்தி நிறைந்த, பக்தர்கள் நிறைந்த பகுதி. ஜகந்நாதர் ஆலயத்தில் விக்கிரகத்தைப் பார்ப்பதற்காகச் சைதன்யர் நின்ற கல்லானது. அவர் தம் அன்பாலும் பக்தியாலும் உகுத்த கண்ணீரால், தேய்ந்தது. அவர் சந்நியாசம் மேற்கொண்டபோது, தம் நாவில் சர்க்கரையைக் கரையாது வைத்துக் காட்டியதின் மூலம் தமக்குள்ள தகுதியை வெளியாக்கினார். பக்தியினால் தாம் பெற்ற அகக்கண் மூலம் பிருந்தாவனங் கண்டார்.

வாழ்க்கை வழிகாட்டியாக உங்களுக்குச் சில கூறுவேன். இந்தியாவிலிருந்து வருவனவற்றை மெய்யென்று நம்புங்கள்; நம்பாது விடுதற்குக் காரணங்கள் காணும்வரை நம்புங்கள். ஆனால் ஐரோப்பாவிலிருந்து ஏதாவது வந்தால் அதை நம்புவதற்குச் சரியான காரணங்களிருந்தாலின்றிப் பொய்யென்றே கருதுங்கள்.

ஐரோப்பியர்களின் ஏமாற்று வித்தைகளை நம்பி ஏமாந்து போகாதீர்கள். நீங்களே சிந்தித்துப் பாருங்கள். ஒன்றே ஒன்று உங்களிடம் குறையாக இருக்கிறது. நீங்கள் அடிமைகள்; ஐரோப்பியர்கள் என்ன செய்தாலும் நீங்கள் அதை அப்படியே பின்பற்றுவீர்கள். மனம் சக்தியற்றிருப்பதன் அடையாளம் இது.

சமூகமானது, தனக்கு வேண்டிய சாதனங்களை எப்பகுதியிலிருந்தும் பெறலாம். ஆனால் அது தனது சொந்த இயல்பில்தான் வளரவேண்டும்.

ஒரு புது பழக்கத்தைக் கண்டு அதிர்ச்சியடைவதே மூட நம்பிக்கையின் ஆணிவேர். இந்த மூட நம்பிக்கையே, நரகத்தின் முதல் வழி. கொள்கை வெறிக்கும், மதவெறிக்கும் கொண்டு செலுத்துவது. சத்தியமே சுவர்க்கம்; கொள்கை வெறியே நரகம்.

மனங் குவிதல்

மனங் குவிதலே அறிவின் பயன். அஃதின்றி ஏதும் செய்தல் இயலாது. சாதாரண மனிதன் தனது சிந்தனை சக்தியில் தொண்ணூறு சதவிகிதம் வீணாக்குகிறான்; ஆகையால், அவன் அடிக்கடி தவறு செய்கிறான். பயிற்சி பெற்ற மனமோ, மனிதனோ தவறு செய்வதில்லை. மனம் குவிந்து அகநோக்கு ஏற்படுங்கால் புலன்களெல்லாம் நமது பணியாளர்களாகும்; நமது எசமானர்களாக இரா. கிரேக்கர்தம் மனம் புறநோக்கில் குவிந்தது. அதன் பலன் கலை, இலக்கியம் முதலியவைகளில் தேர்ச்சி. இந்துக்களோ, அகநோக்கில் மனங்குவியப் பெற்றார்கள்; கண்டறியாத ஆன்மிகத்தினை நோக்கினார்கள்; யோக வித்தையை வளர்த்தார்கள். யோகம் என்பது புலனடக்குதல்; மனமடக்குதல்; சிந்தையடக்குதல். இதனால் பெறும் பயன் யாதெனில் அடங்கிக் கிடத்தற்குப் பதிலாக அடக்கிநடத்தற்குப் பயிற்சி பெறுகிறோம். மனம் எனப்படுவது ஒன்றன் மேல் ஒன்றாக—அடுக்கடுக்காக—உள்ளது எனலாம், ஒன்றன் பின் ஒன்றாகக் குறுக்கிடும் இத்தட்டுகளை எல்லாம் கடந்து காண்பதே நம் குறிக்கோள். யோகத்தின் முடிவும் லட்சியமும் ஆண்டவனை அறிவதே. இதற்குத் தொடர்நிலை அறிவுக்கும் அப்பாற் செல்லுதல் வேண்டும். புலனறிவு கடத்தல் வேண்டும். உலகம் புலன் வசப்பட்டது. அந்நிலையில் ஆண்டவனின் குழந்தைகள் தூங்கிக் கொண்டிருக்கின்றன. நிலைபேறான பரம் பொருளைக் காணாது உலகம் தூங்குகிறது. ஆண்டவனின் குழந்தைகள் அந்நிலையில் விழித்திருக்கின்றன. இக்குழந்தைகளே ஆண்டவனின் திருக்குமாரர்கள். புலன்களை வெற்றி காண்பதற்கு உள்ள ஒரே வழி மெய்ப் பொருளைக் காண்பதே. அப்போதே நாம் நமது புலன்களை வெற்றி கொள்ள முடியும்.

மனங்குவிதலாவது படிப்படியே சிறு எல்லையுள் மனத்தைக் கட்டுப்படுத்தல். ஒரு சிறு எல்லை; மேலும் சிறு எல்லை. இப்படியே. இவ்வாறு மனத்தைக் கட்டுப்படுத்துவதற்கு எட்டு வழிகள் உள்ளன. முதல் வழி இயமம்; அதாவது புறநினைவகற்றல். அறஒழுக்கங்கள் அனைத்தும் இதிலடங்கும். எவ்வுயிர்க்கும் தீயன சிந்தியாதே; தீயன செய்யாதே. பன்னீராண்டுகள் எவ்வுயிர்க்கும் தீயன செய்யாதிரு. சிங்கங்களும் புலிகளும் உனக்குப் பணியும். வாய்மை கடைப்பிடி. சிந்தை, சொல், செயல் ஆகிய முக்கரணங்களாலும் பன்னிரண்டு ஆண்டுகள் ஒருவன் உண்மையே கடைப்பிடிப்பானுயின் அவன் எண்ணியன எல்லாம் நடக்கும். சிந்தனை, சொல், செயல் ஆகிய மூன்றிலும் தூய்மையுடன் இரு. தூய்மையே எல்லா மதங்களுக்கும் அடிப்படை. உடல் தூய்மை தலையாயது. அடுத்தது நியமம். அதாவது மனம் யாண்டும் திரியா வண்ணம் கட்டுப்படுத்துவது. பிறகு ஆசனம். அதாவது அமரும் முறை. ஆசன முறைகள் 84. இவற்றுள் சிறந்தது எதுவெனில் ஒவ்வொருவருக்கும் இயல்பானது எதுவோ அதுவே. அதாவது சுலபமாக நீண்ட நேரம்வரை எந்த ஆசனமுறையில் அமர்ந்திருக்க முடியுமோ அதுவே. அதற்கு அடுத்தது பிராணுயாமம். அதாவது மூச்சைக் கட்டுப்படுத்துதல். அடுத்தது பிரத்தியாகாரம். புலன்களை அவை நாடும் புறப்பொருள்களிலிருந்து திருப்புதல். இதன் பின்னர் தாரணை. அதாவது மனங்குவிதல். அதற்கடுத்தது தியானம். (யோக முறையின் உயிர் நாடி இதுவே) முடிவில் சமாதி. நமது உடலும் மனமும் எவ்வளவு பரிசுத்தமாக இருக்கின்றனவோ அவ்வளவு விரைவில் பலன் கிட்டும். பூரண பரிசுத்தனுயிரு. தீயன சிந்தியாதே. தீய சிந்தை உன்னைக் கீழே கொண்டுவிடும். பூரண பரிசுத்தனுய் நம்பிக்கையுடன், நேர்மையுடன், விசுவாசத்துடன் இந்தப் பயிற்சி மேற்கொண்டால் முடிவில் உனது மனமானது எல்லையற்ற சக்தியின் ஒளிவிளக்கெனத் திகழும். அதன் விரிவுக்கு வரம்பேயில்லை. ஆனல், ஓயாத பயிற்சியும், உலகம் மீது பற்றுதல் இல்லாதிருத்தலும் இதற்கு அவசியம். ஒரு மனிதன் சமாதி நிலை அடைந்த பின்பு, அவனுடைய உடல் உணர்வெல்லாம் மறைந்துவிடுகின்றன. அப்போதே

அவன் விடுதலையடைகிறான்; அமரனாகிறான். பிரக்ஞையற்ற நிலையும் சமாதி நிலையும் புறத் தோற்றத்தில் ஒன்றே. எனினும் களிமண்ணும் தங்கமும் போல அவை வேறுபடுகின்றன. எவன் தன் ஆன்மா முழுவதையும் ஆண்டவனுக்கு அர்ப்பணம் செய்துவிடுகிறானோ அவன் சமாதி நிலை அடைந்தவனாவான்.

மனதின் ஆற்றல்

காரணமே காரியமாகிறது. காரணம் என்பது ஏதோ தனியாக நிற்கும் ஒன்று அன்று. காரியம் காரணத்தால் விளையும் மற்றொன்றும் அன்று. காரணம் அரும்பு; காரியம் மலர். காரணமே எப்போதும் காரியமாகிறது. சகஜமாக மக்களிடையே நிலவிவரும் கருத்து யாதெனில் தனித்த ஒரு காரணத்தின் விளைவே காரியம் என்பதுதான். இது சரியன்று. காரியம் காரணத்தின் செயல் நிலை.

பிரபஞ்சம் உண்மையில் ஒருமை இயல்பான ஒன்று. வேற்றுமைகள் யாவும் வெளித்தோற்றமே. இயற்கையில் பல்வேறு பொருள்களும், பல்வேறு சக்திகளும் இருப்பன போல் தோன்றுகின்றன. ஆனால் எல்லாமே ஒன்றுதான். உதாரணமாக, வேறுபட்ட இருபொருள்களை எடுத்துக்கொள்ளுங்கள். ஒரு கண்ணாடித் துண்டையும் ஒரு மரத்துண்டையும் எடுத்துக்கொள்ளுங்கள். அதை நன்கு பொடியாக்குக. இனியும் பொடியாக்குதல் இயலாது எனும் அளவு அரையுங்கள். பின் இரு பொருள்களுமே ஒன்றாகத் தோன்றுகின்றன. ஆராய்ந்து முடிவு காணுங்கால் எல்லாப் பொருள்களும் ஒன்றே. ஒன்றாயிருப்பது பலவாய்க் காட்சியளிப்பது வெறும் புறத்தோற்றமே. பரம்பொருள் ஒன்று. அந்த ஒன்றே பலவாகக் காட்சியளிக்கிறது.

கேட்டல், காணல், சுவைத்தல் இவை யாவும் மனம் பல்வேறு நிலைகளில் செய்வதே.

ஓர் அறையுள் நுழைந்தால், அங்குள்ள மனிதர்களும், பொருள்களும் படிப்பனபோல் தோன்றும்வண்ணம் அந்த அறையின் சூழ்நிலையை வசியம் செய்துவிடலாம்.

முன்னரே ஒவ்வொருவரும் ஓரளவு வசியப்பட்டே இருக்கின்றனர். இவர்கள் சுதந்திரமடைதல் வேண்டுமாயின், இவர்தம் உண்மை இயற்கையை அறிய வேண்டுமாயின், இந்த வசியம் நீங்கப்பெறல்வேண்டும்.

மனம் எவ்வளவு பரிசுத்தமாக இருக்கிறதோ, அவ்வளவு அதை அடக்கலும் எளிது. மன அடக்கம் வேண்டுமாயின், மனத்தூய்மை வலியுறுத்தப் பெறல்வேண்டும். மனோ சக்திகளைப் பெற விரும்பாதீர். அவற்றை விடுக. மனோ சக்திகளைப் பெறுபவன் அவற்றிற்கு அடிமையாகிறான். இப்படிப்பட்ட சக்திகளை நாடிச் செல்பவருள் அநேகமாக எல்லாருமே அவைகளுக்கு அடிமையாகின்றனர்.

மனவடக்கத்திற்குப் பெரிதும் வேண்டப்படுவது தூய ஒழுக்கமே. முற்றிலும் தூய ஒழுக்கமுள்ள ஒருவன், அதற்கு மேல் ஏதும் செய்யவேண்டியவன் அல்லன்; சுதந்திரமடைந்தவனே. முற்றும் தூய ஒழுக்கமுள்ள ஒருவன், எவர்க்கும் தீங்கு செய்யான்; எதற்கும் தீங்கு செய்யான். சுதந்திரமடைய விரும்புபவன் தீமை செய்யாதவனாக இருக்கவேண்டும். தீமையற்ற உள்ளம் கைவரப் பெற்றவனைக் காட்டிலும் சக்தி பெற்றவன் எவனும் இல்லை. அவன் முன் யாரும் போரிட முடியாது; பூசலிடவும் முடியாது. ஆம், அவன் இருத்தலே போதும்; வேறொன்றும் செய்தல் வேண்டாம். அதுவே அன்மதி உண்டாக்கும். அவன் முன்னால் யாரும் கோபப்பட முடியாது; யாரும் சண்டையிட முடியாது. மிருகங்கள்கூட, மூர்க்கங்கொண்ட மிருகங்கள் கூட, அவன் முன் அமைதியாயிருக்கும்.

முதுமை எய்திய யோகி ஒருவர், ஒரு குகையுள் வாழ்ந்து வந்தார். அவரை யானறிவேன். அவரது உடைமை என்பன எல்லாம், உணவு தயாரித்துக்கொள்வதற்கான இரண்டொரு சட்டிகள்தான். உண்பது சிறிதே; உடுப்பதும் ஒரு கோவணமே; வேறு ஏதும் இல்லை. நேரம் முழுவதும் தியானத்திலேயே கழித்தார்.

அவரது நோக்கில் எல்லாம் ஒன்றே. அஹிம்சை கைவரப்பெற்றவர் அவர். இந்தப் பிரபஞ்சத்தின் தலைவனாகிய பரமாத்மாவை அவர் ஒவ்வொரு பொருளிலும் கண்டார்.

ஒவ்வொரு மனிதருள்ளும் கண்டார்; ஒவ்வோர் உயிரிலும் கண்டார். மிருகத்தையும் "எனது பிரபுவே" என்றுதான் அவர் அழைத்தார். மிருகத்தையோ மனிதனையோ அவர் வேறுவகையாக அழைத்ததில்லை. ஒருநாள் திருடன் வந்து அவருடைய சட்டிகளில் ஒன்றை எடுத்துச் சென்றான். அது கண்டார்; அவன் பின்னால் ஓடினார்; நீண்ட தூரம் விரட்டிச் சென்றார். முடிவில் மூச்சுதிணறி நிற்க வேண்டியவனானான் திருடன். அவன் முன் சென்று அவனுடைய காலடிகளில் விழுந்தார் யோகி. "பிரபோ! என் இருப்பிடம் வந்து எனக்குப் பெருமை அளித்தீர்கள். மற்றொரு சட்டியையும் ஏற்றருள்க. அதுவும் தங்களுடையதே" என்று கூறினார். இக்கிழவர் இறந்துவிட்டார். உலகிலுள்ள ஒவ்வொன்றையும் அவர் நேசித்தார். அவசியமானால் ஓர் எறும்புக்காகவும் அவர் இறந்திருப்பார். இந்த மனிதர் தங்களுடைய நண்பரென்பதைக் காட்டு மிருகங்களும் உணர்ந்திருந்தன. பாம்புகளும் மூர்க்கமுள்ள விலங்குகளும் அவருடைய குகைக்குச் சென்று அவருடன் தூங்கும்; அவையாவும் அவரை நேசித்தன. அவர் முன் அவை பூசல் விளையா.

பிறர்தம் தவறு பற்றிப் பேசாதீர்; எவ்வளவு கெட்டதாயினும் அந்தத் தவறு பற்றிப் பேசாதீர். அப்படிப் பேசுவதனால் பெறும் பயன் ஏதும் இல்லை. ஒருவனுடைய தவறுகளைப் பற்றிப் பேசுவதன்மூலம் நீங்கள் அவனுக்கு ஒருபோதும் உதவுவதில்லை. அதற்குப் பதிலாக நீங்கள் அவனுக்குத் தீங்கு செய்கிறீர்கள். உங்களுக்கும் தீங்கிழைத்துக் கொள்கிறீர்கள்.

உணவிலும் பயிற்சியிலும் இவை எல்லாம் ஆன்மிக சாதனைக்குரிய துணையே. கட்டுப்பாடுகள் இருக்கலாம். ஆனால் இந்த அனுஷ்டானங்களே குறிக்கோளாகா. இவை சாதனங்களே.

மதச் சண்டை வேண்டாம். மதச் சச்சரவுகளும் ஆன்மிகம் இன்மையையே காட்டுகின்றன. மத சம்பந்தமான சண்டைகளெல்லாம் சத்து பற்றியன அல்ல; சக்கை பற்றியனவே. ஆன்மிகமும் தூய்மையும் நீங்கி ஆன்மா வரட்சியடையும் போதே சண்டைகள் ஆரம்பமாகின்றன. அதற்கு முன்பன்று.

இராஜயோக பாடங்கள்

பிராணன் *

சிருஷ்டி தத்துவம் யாதெனில் ஜடம் ஐந்நிலை பெற்றது என்பதே. ஐந்து நிலையாவன: ஈதர நிலை, ஒளி நிலை, வாயு நிலை, திரவ நிலை, கட்டி நிலை என்பனவாம்.

இவை யாவும் மிக மிக நுண்ணிய ஈதர் என்ற மூல பூதத்தினின்றும் தோன்றியவை. இப்பிரபஞ்சத்தில் நிலவும் சக்தியின் பெயர் பிராணன் என்பது. பஞ்சபூதங்களில் உறையும் சக்தி இதுவே. பிராணனை உபயோகிக்கும் பெருங் கருவி மனமே. மனம் கருவி. மனத்தின் பின் இருக்கும் ஆத்மா பிராணனைப் பற்றிக்கொள்கிறது. பிராணனே உல கத்தை இயக்கும் சக்தி ; ஒவ்வோர் உயிர்வடிவிலும் அதைக் காணலாம். இந்த உடல் அநித்யம். மனதும் அநித்யம். இரண்டும் சார்புள்ளவை யாதலின் அழிந்தே ஆகவேண்டும். இவற்றின் பின் நிலவுவது ஆன்மா. அது அழிவதில்லை. ஆன்மா எனப்படுவது பிராணனைக் கட்டுப்படுத்தி இயக்கும் சுத்த அறிவேயாகும். ஆனால் நம்மைச் சுற்றிக் காணப்படும் அறிவு என்றும் நிறைவிலா ஒன்று. நிறையறிவு எனும் பரிபூரண ஞானம் பெற்றவர்களே அவதார புருஷர்களாக — கிறிஸ்துவாகக் காண்கிறோம். அறிவானது எப்போதுமே தன்னை வெளிக்காட்டிக்கொள்ள விரும்புகிறது. இதன் பொருட்டு பல்வேறு நிலைகளில் வளர்ச்சிபெற்ற உடலையும் மனத்தையும் படைக்கிறது. உண்மையில் — இவைகளுக் கெல்லாம் அடிப்படையில் கவனித்தால் — எல்லா உயிர் களும் சமம்தான்.

மனம் மிக நுண்ணியது ; பிராணன் வெளித் தோன்றும் சாதனம். சக்தி உருத்தோன்றலுக்கு ஜடம் தேவை.

இந்தப் பிராணனை எவ்வாறு பயன்படுத்துவது என்பது தான் அடுத்த கேள்வி. நாம் எல்லோரும் அதை உப யோகிக்கிறோம். எனினும் எவ்வளவு வருந்தத்தக்க முறை யில் அதை வீணாக்குகிறோம் ! அறிவு அனுபவத்தின் விளைவு

* இந்தப் பாடங்களும், இதற்குப் பின்னால் உள்ள பக்தியோகத்தைப் பற்றிய பாடங்களும் இங்கிலாந்தில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ள குறிப்புகளிலிருந்து எடுக்கப்பட்டன. (ஆ-ர்)

என்பதே. தொடக்க நிலையின் முதல் கொள்கை ஐம்புலன்களுக்கு அப்பால் இருப்பதையும் அனுபவித்தல் வேண்டும்; உண்மையுணரும் பொருட்டு.

மூன்று நிலைகளில் இயங்குகிறது நம் மனம். உள்நனவு, நனவு, உயர் நனவு என்பன அம்மூன்று நிலை. யோகி மட்டுமே உயர் நனவு நிலை அடைகிறுன். யோக தத்துவம் முற்றிலுமே மனதுக்கு அப்பாலுள்ள ஒரு நிலை அடைதல் பற்றியதே. ஒளி அல்லது ஒலி அலைகளைக் கருத்தில் கொண்டால் இந்த மூன்று நிலைகளையும் அறியலாம். ஒளி அலைகளில் சில, கண்ணுக்குப் புலனுகா விதத்தில் மிக மந்தமாகச் செல்கின்றன. பின்னர் அவையே விரைந்து செல்லுங்கால் ஒளியாகக் காண்கிறோம். வேகத்தில் செல்லும்போது அவை நம் கண்ணுக்குப் புலனுவதில்லை. ஒளியும் இத்தகையதே.

உடல் நலம் கெடாது புலன்களைக் கடத்தல் எவ்வாறு என்பதே நாம் அறியவேண்டிய ஒன்று. மேற்கு நாட்டவர் மனம் மனேசித்திகள் சிலவற்றில் ஆழ்ந்துவிட்டது. அது விபரீதமாகிவிட்டது; நோயின் அறிகுறியாக அடிக்கடி காணப்படுகிறது. ஹிந்துக்கள் இதனை நன்கு பயின்று நினைவு பெற்றிருக்கிருர்கள். இப்போது எல்லாரும் இதைப் பயிலுதல் கூடும்; அச்சமில்லை; ஆபத்துமில்லை.

உள்ளத்தால் உடல் நோய் போக்கல் உயர் நனவின் சீரிய சான்று. ஏனெனில் உடல் நோய் போக்கும் எண்ணம் பிராணனில் தோன்றும் ஒரு வகை அலையாகும். அது வெறும் சிந்தனையாகச் செல்வதில்லை. அதைவிட உயர்ந்த ஒன்ருகக் செல்கிறது. அதை இன்னதென்று இப்போது பெயரிட்டுக் கூறுவதற்கில்லை.

சித்தம் ஒவ்வொன்றும் மூவகை நிலையுடையது. முதல் நிலை அகத்தோற்றம், இதுபற்றிய உணர்வு நமக்கில்லை. இரண்டாவது நிலை சித்தம் புறத்தே வரும் போதுள்ளது. மூன்ருவது நிலை நம்மிடமிருந்து செல்லும் போதிருப்பது. சித்தம் நீர்க்குமிழி போன்றது. சித்தம் சங்கற்பத்துடன் சேரும்போது சக்தி என்கிறோம். ஆகவே நீங்கள் உதவ விரும்பும் நோயாளியைக் குணப்படுத்துவது எண்ணமன்று; இந்த சக்தியே. இதன்மூலம் ஊடுருவிப்பாயும் ஆன்ம

மனிதன் "ஸூத்திராத்மா" என்று சமஸ்கிருதத்தில் அழைக்கப்படுகிறான்; அதாவது தன்னிழை.

பிராணனின் உயரிய இறுதித் தோற்றம் அன்பே. பிராணனிலிருந்து அன்பு தோன்றச் செய்வதில் வெற்றி பெற்று விட்டீர்களானல், அந்த க்ஷணமே நீங்கள் சுதந்திரம் பெற்று விடுகிறீர்கள். வருந்திப் பெறும் பெரிய பேறு அதுவே; பெறுதற்கரிய பேறு. பிறர் மீது குறை கூறுதீர். உங்களிடையே குறை காண்க.

ஒரு குடிகாரனைக் காண்பீரானல் அவனைக் குறைகூறுதீர். நீரே அவனுருவில் உள்ளீர் என்பதை நினைவில் வைப்பீர். குறையிலான் மற்றவரில் குறை காணன். உம்முள் என்ன இருக்கிறதோ அதையே பிறரிடமும் காண்கிறீர். சீர்திருத்த வழி இதுவே. உறுதியான வழி; பிறரைக் குறை கூறி பிறரில் குறைகாணும் எதிர்காலச் சீர்திருத்தவாதிகள், தாங்கள் புரியும் தீமையை நிறுத்தினல் போதும்; நலம் பெறும். இவ்வெண்ணம் உங்கள் உள்ளத்தில் ஆழ்ந்து பதிவதாக.

யோகப் பயிற்சி

உடலைப் பேணுக; உடலை வருத்துவோன் பேய் வாய்ப் பட்டோன். மனமகிழ்வுகொள். துயரமகற்று. யோகி எனப்படுவோன் மிகையுண்ணன்; உண்ணுதுமிரான்; மிகையுறங்கான்; உறங்காது மிரான். எல்லாவற்றிலும் எவன் சமநிலையைக் கடைப்பிடிக்கிருனே அவனே யோகியாதற்குரியன்.

யோகம் பயிலச் சிறந்த காலம் எது? அருணேதய காலம்; அஸ்தமன காலம்; இயற்கை அமைதியிலிருக்கும் காலம். இயற்கையின் உதவி பெறுக. எம்முறை எளிதோ அம்முறை அமர்க; நிமிர்ந்திருக்க. விலா எலும்பு, தோள் பட்டை, தலை ஆகிய மூன்றும் நேர்பட இருக்க. முதுகெலும்பை நேராக நிறுத்துக. கூனல் வேண்டாம்; பின் வளைதலும் வேண்டாம். பின்னர் உள்ளத்தில் உடலை நிறுத்துக; ஒவ்வோர் உறுப்பையும் எண்ணுக; உடலும் உடலுறுப்புகளும் நிறைவெய்தியனவாக நினைக்க. உலகெங்கும் அன்புக் கதிர் செலுத்துக. பின் மெய்யறிவு வேண்டுக. முடிவில் மனதை மூச்சுடன் இணைத்திடுக. உச்சுவாச

நிச்சுவாசத்திலே உள்ளம் குவியும், சக்தியைப் படிப் படியாக வளர்த்திடுக. இதன் காரணம் சிறிது சிறிதாக விளங்கப் பெறுவீர்.

ஓஜஸ்

ஓஜஸ் என்பது எதுவெனில் மனிதருக்கு மனிதர் வேறு பாடு காணச்செய்வது எதுவோ அதுவே. ஓஜஸ் அதிகமுள் ளவன் மனிதருள் தலைவனாகிறான். மகோன்னதமான வசீ கர சக்தியளிப்பது அதுவே. ஓஜஸ் உற்பத்தியாவது நாடி ஓட்டத்திலே. இதற்குரிய தனிச் சிறப்பாவது, சிற்றின்பத்தில் தோன்றும் சக்தியிலே இஃது எளிதில் உற்பத்தியாகிறது என்பதே. சிற்றின்ப சக்தி சிதறி வீண்போகாது காக்கப் பெறின் (செயல் என்பது சிந்தனை ஒருங்கு சேரப்பெறுவதே) அந்த சக்தியிலிருந்து ஓஜஸை உற்பத்தி செய்யலாம். இரு பெரும் நாடி ஓட்டங்கள் மூளையில் தொடங்கி, முதுகுத் தண் டின் இருபுறமும் செல்கின்றன. செல்லும் வழியில் தலையின் பின்னால் "௨" என்ற எண்ணின் உருவம் போன்று ஒன்றை ஒன்று தாண்டிச் செல்கின்றன. இவ்வாறு உடலின் இடது புறம் மூளையின் வலது புறத்தால் செலுத்தப்படுகிறது. இந்த ஓட்டச் சுழலின் அடிமுனையே காம உணர்ச்சியின் மையம் ; மூலாதாரம். முதுகுத் தண்டும், இடுப்பெலும்பும், இணையும் இடத்தில் உள்ள நரம்பு வலை. இடகலை பிங்கலை எனும் இருபெரு நாடி ஓட்டத்தில் ஏற்படும் சக்தியானது கீழே கொணரப்பட்டு இந்த இடத்தில் தொடர்ந்து சேமிக்கப் பட்ட வண்ணமிருக்கிறது. முதுகுத் தண்டில் உள்ள கடைசி எலும்பு இடுப்பிலுள்ள இந்த நரம்புவலைத் தொகுதியின் மேல் இருக்கிறது. இதை முன்னோர்கள் முக்கோணம் என்று உருவகப்படுத்தினார்கள். இதன் அருகில் சக்தி சேமிக்கப்பட்டிருப்பதால் இதை ஒரு ஸர்ப்பமாக உருவகப் படுத்தினார்கள். உள் நனவும், உயர் நனவும் இவ்விரண்டு நாடிகள் மூலமே செயலாற்றுகின்றன. உயர் நிறைவு என் செய்கிறது எனில் நாடி ஓட்டம் கீழ் நோக்கி வருங்கால் மீண்டும் அது மேல் நோக்கிச் செல்வதைத் தடுத்து மூலாதா ரத்தில் ஓஜஸாக மாற்றி முதுகுத் தண்டின் மேல் ஏற்றி விடுகிறது.

இயற்கையாக முதுகுத் தண்டு மூடப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த ஓஜஸ் செல்வதன் பொருட்டு அதைத் திறந்து

வழியேற்படுத்தல் இயலும். முதுகுத் தண்டின் ஓரிடத்தி லிருந்து மற்றொரு இடத்திற்கு இந்த நாடி ஓட்டம் செல்லும் போது நீங்களும் ஒரு நிலையினின்றும் மற்றொரு நிலையடை கிறீர்கள். இதனால்தான் மனித உயிரானது மற்ற உயிர்களி னும் சிறப்புப் பெற்றுள்ளது. எல்லா நிலைகளும் அனுபவங் களும் மனித உடலில் உள்ள ஜீவனுக்கே சாத்தியம். மற் றோர் உடல் நமக்குத் தேவையில்லை. மனிதன் விரும்பினால் இந்த உடலிலேயே தனது வேலையை முடித்துக்கொண்டு பின் சுத்த ஜீவனாக வாழலாம். ஓஜஸானது ஒவ்வொரு மையமாகத் தாண்டி மூளையிலுள்ள நெற்றிச் சுரப்பியை (மூளையின் இப்பகுதி என்ன கடமையைச் செய்கிறதென் பதை விஞ்ஞானம் வரையறுக்கவில்லை) அடையும் போது மனம், உடல் எனும் ஏதுமின்றி எல்லா விதமான பந்தங்களி லிருந்தும் விடுபட்டவனாகிறான். அற்புத சக்திகளால் விளை யும் பேராபத்து யாதெனில் மனிதன் தன்னையறியாமலே இவற்றில் விழுந்து உழல்கிறான்; இவற்றை நேர்வழியில் பயன்தரச்செய்வது எப்படி என்பதை, தனக்கு என்ன நேர்ந்துளதென்பதை அவன் அறியான். இதற்கு வேண்டிய பயிற்சியும் அவனுக்கு இல்லை. காம கேந்திரத்திலிருந்து இந்த சக்தி உற்பத்தியாகி யிருப்பதால் இந்த அற்புத சக்திகளை உபயோகப்படுத்தும் போது, சிற்றின்ப உணர்ச்சி கட்டுக்கடங்காமல் எழும். சீரிய சுக வழி எதுவெனில் இந்த அற்புத சக்திகளை வெளிப் படுத்தாதிருப்பதே. ஏனெனில், இவை பற்றிச் சரிவர அறி யாதவரும் பயிற்சி பெறாதவரும் இந்த அற்புத சக்திபெற்று மிகவும் பயங்கர விபரீதங்களுக்கு ஆளாகின்றனர்.

சங்கேதக் குறிகளுக்கு நாம் மீண்டும் திரும்புவோம். முதுகுத்தண்டின் மேலேறிச் செல்லும் ஓஜஸ் திருகுச்சுருள் போன்ற பாதையில் வளைந்து வளைந்து செல்லுவதால் அது ஸர்ப்பம் எனப்படுகிறது. இந்த ஸர்ப்பம் திரிகோண பீடம் எனும் எலும்பின் மீது அமர்ந்திருக்கிறது. அதை எழுப்பி னால் முதுகுத் தண்டில் ஏறிச் செல்கிறது. அது ஒவ்வொரு கட்டமாக ஏறிச்செல்லும்போது, ஒரு புது உலகமே நம் முன் தோன்றுகிறது; குண்டலினி சக்தி எழுப்பப்படுகிறது.

பிராணுயாமம்

பிராணுயாமம் செய்வது உள்ளத்தின் உயர் நனவுப் பயிற்சியாகும். பயிற்சி மூன்று பகுதிகொண்டது; முற்றிலும் மூச்சு பற்றியது. மூச்சை இழுப்பதெப்படி, நிறுத்துவதெப்படி, வெளியே விடுவதெப்படி என்ற பயிற்சி இது. நான்கு எண்ணும் வரை நாசிவழியே மூச்சை இழுக்கவேண்டும். பதினுறு எண்ணும் வரை மூச்சை அங்கு நிறுத்தவேண்டும். எட்டு எண்ணும் வரை மற்ருெரு நாசியால் வெளியே விடவேண்டும். பின்பு இதையே நாசியை மாற்றிச் செய்யவேண்டும். முதலில் உங்களது பெரு விரலால் நாசியை அழுத்தி மூடிக்கொண்டு இதைச் செய்யவேண்டிவரும். ஆயினும் நாளாவட்டத்தில் சுவாசம் உள்ளத்திற்கு அடங்கி நடக்கும். காலையிலும் மாலையிலும் நான்கு பிராணுயாமம் செய்யுங்கள்.

ஐயத்திற்கு அப்பாற்பட்டநிலை

"கழிவிரக்கம் கொள்—ஏன் என்ருல் சொர்க்கத்தின் அரசு அருகிலேயே இருக்கிறது" என்பது பைபிள் வாசகம். கழிவிரக்கம்கொள் என்பதற்குக் கிரேக்க மொழியில் மெடனுய்ட் என்ற சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. மெடனுய்ட் என்ருல் புறத்தே, பின்னுல், அப்பால் என்று பொருள். அதாவது அறிவுக்கு அப்பால் செல்—புலனறிவுக்கு அப்பால் செல்—என்பதாகும். அதாவது "அறிவுக்கு அப்பால் சென்று உன் உள்ளே பார்; அங்கு தேவலோக சாம்ராஜ்யத்தைக் காண்பாய்" என்பது இதன் பொருளாகும்.

சர் வில்லியம் ஹாமில்டன் என்பவர், தத்துவ நூல் ஒன்றன் இறுதியில், "தத்துவ சாஸ்திரம் இங்கே முடிகிறது; மதம் ஆரம்பமாகிறது" என்று குறிப்பிட்டுள்ளார். மதம் அறிவின் எல்லைக்குட்பட்டது அன்று; உட்படுத்தலும் இயலாது. புலன்களால் அறிவனவற்றைக் கொண்டே அறிவின் முடிவுகள் அமைகின்றன. ஆனுல் மதத்திற்கும் புலன்களுக்கும் சம்பந்தமே இல்லை. கடவுள் இருக்கிருரா இல்லையா என்ற ஐயப்பாடு உடையவர்கள், தாங்கள் கடவுளை அறிய முடியாது என்று சொல்கின்றனர். அதுவும் சரிதான். ஏனெனில் தங்களுடைய புலன்களுக்கு எட்டியவரை அவர்கள்

முயன்றுபார்த்து விட்டனராயினும், கடவுளைப்பற்றி அவர்கள் தெரிந்துகொள்ள முடியவில்லை. ஆகையால் மதத்தையும் அதாவது கடவுள் இருக்கிறார் என்பதையும், மரணமற்ற வாழ்வையும் மற்றும் இதுபோன்றவைகளையும் நிரூபிப்பதற்குப் புலனறிவுக்கு அப்பால் செல்ல வேண்டும். பெரிய தீர்க்க தரிசிகளும், மகான்களும் தாங்கள் கடவுளைப் பார்த்திருப்பதாகச் சொல்கிறார்கள். அதாவது அவர்களுக்கு ஆன்ம அனுபவம் கிடைத்திருக்கிறது. அனுபவம் இல்லாமல் அறிவில்லையாகையால் மனிதன் தனது ஆன்மாவில் கடவுளைக் காண வேண்டும். பிரபஞ்சத்தின் அந்த மகத்தான உண்மையை நேருக்கு நேராக மனிதன் கண்ட பிறகுதான் அவனுடைய ஐயங்கள் எல்லாம் நீங்கும்; அவன் மனதில் தெளிவில்லாதிருந்த விஷயங்களெல்லாம் சுத்தமாகத் தெளிவாகிவிடும். இதுதான் கடவுளைப் பார்ப்பதென்பது. இவ்வாறு யாரும் கூறுவதை நாம் அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதில்லை. இதன்படி நடந்து அது மெய்தானா என்று பார்க்க வேண்டியதுதான் நமது கடமை. மற்ற விஞ்ஞானங்களைப் போலவே மதத்திலுள்ளவைகளும் உண்மைதானா என்பதை நேருக்கு நேராக நீங்கள் காணலாம். ஆனால் ஐம்புலன்களுக்கு அப்பாற்பட்ட ஒரு அறிவுநிலைக்குச் சென்றால்தான் இது சாத்தியமாகும். மத சம்பந்தமான உண்மைகளை ஒவ்வொருவரும் சரிபார்க்க முடியும். நமது சிறந்த ஒரு லட்சியம் கடவுளைக் காண்பதே. சக்தி பெறுவது நமது லட்சியமன்று. சத்–சித் அன்பே லட்சியம்; அன்பே கடவுள்.

சிந்தனை கற்பனை தியானம்

கனவு காணவும் சிந்திக்கவும் (கற்பனைக்கும்) நாம் பயன்படுத்தும் மனத்திறன் இருக்கிறதே, அதே மனத்திறன் சத்தியத்தை நாம் காண்பதற்கும் பயன்படும். கற்பனை தீவிரமாக இருக்கும்போது, கற்பனை செய்யும் பொருள் கண்முன் தோற்றமளிக்கிறது. ஆகையால் கற்பனா சக்திமூலம் நோய் தீர்க்கலாம்; நன்றாக இருக்கும் உடலில் நோய் தோன்றச் செய்யலாம். நாம் ஒரு பொருளைப் பார்க்கும்போது, பல உருவம் காட்டும் கலைடோஸ் கோப்பில் வைக்கப்பட்டிருக்கும் வண்ணக் கற்கள் போன்று, மூளையின் அணுக்கள் ஒரு வரிசைக்கிரமத்தில் வந்து நிற்கின்றன.

இவ்வித வரிசைக் கிரமம் மீண்டும் பழையபடியே இருக்குமாறு செய்வதுதான் ஞாபகசக்தி என்பது. வைராக்கியம் எவ்வளவு அதிகமாகிறதோ, அந்த அளவு இந்த அணுக்களைப் பழைய நிலைக்குக் கொண்டுவருவதில் நாம் வெற்றி அடையலாம். உடலைக் குணப்படுத்தக் கூடிய சக்தி ஒன்றே; அது ஒவ்வொரு மனிதரிடமும் இருக்கிறது. மருந்தானது இந்தச் சக்தியைத் தூண்டுகிறது. உடலில் நுழைந்துள்ள நஞ்சை வெளியேற்ற, இந்தச் சக்தி நடத்தும் போராட்டமே நோயாகும். நஞ்சை வெளியேற்றும் சக்தியை மருந்து தூண்டும் எனினும், எண்ணத்தின் வேகம் மூலம் அதை இன்னும் நிரந்தரமாகத் தூண்டக்கூடும். உடல் நலத்தையும் பலத்தையும் பற்றிச் சிந்தனை உறுதியாக இருந்தால், நோயுற்றிருக்கும்போது சரியான உடல் நலத்தைப் பற்றிய ஞாபகம் ஏற்பட்டு, உடல் நலமாக இருந்தபோது மூளையின் உயிரணுக்கள் எந்த வரிசையில் இருந்தனவோ, அந்த வரிசையில் மீண்டும் திருத்தி அமைக்கப்படும். மூளையை அனுசரித்து உடலும் மாறிக் கொள்ளும்.

இதில் இரண்டாவது நிலை மற்றொருவர் சிந்தித்து நமது நோயைக் குணப்படுத்துவதாகும். ஒவ்வொரு நாளும் இதைப்பற்றிய உதாரணங்களை நாம் காணலாம். மனம் மனத்தின்மீது செயல்படும் ஒரு மார்க்கமே சொற்கள். நல்ல எண்ணங்களுக்கும் கெட்ட எண்ணங்களுக்கும் அவற்றின் சக்தி உண்டு. இவை பிரபஞ்சத்தில் நிறைந்து இருக்கின்றன. இந்தச் சிந்தனைகள் செயல்படும்வரை சிந்தனைகளாகவே இருக்கின்றன. உதாரணமாக, ஒருவன் அடிக்கிறான்; அடிக்கும்வரை, அவன் கையிலுள்ள சக்தியைக் காட்டும்வரை, அச்சக்தி எங்கிருந்தது? கையினுள் கரந்திருந்தது. நல்லெண்ணம் தீய எண்ணம் ஆகியவற்றின் வாரிசு நாம். தூய்மை பெற்றோமானால் — நல்லெண்ணம் தங்கக் கூடிய கருவியானால்—அவ்வெண்ணம் நுழையும். தீய எண்ணங்கள் நல்ல ஆன்மாவுக்குள் நுழைய மாட்டா. கெட்ட சிந்தனைகளுக்கு ஏற்ற விளைநிலம் கெட்ட மனிதர்களே. எண்ணங்கள் யாவும் கிருமிகள் போன்றவை; தங்களுக்கேற்ற நிலத்தில் பல்கிப் பெருகும். வெறும் சிந்தனைகள் சிறு சிறு அலைகள் போன்றவை; கடைசியாக ஒரு பேரலை கிளம்பி இச்சிற்றலைகளை எல்லாம் விழுங்கிவிடுகிறது.

பிரபஞ்சம் முழுதும் வீசக்கூடிய இந்தப் பேரலைகள் ஐந்நூறு ஆண்டுகளுக்கு ஒருமுறை ஏற்படுகின்றன; அப்போது இந்தப் பேரலை எவ்வித விதிவிலக்குமின்றி மற்றச் சிற்றலைகளை விழுங்கிவிடுகிறது. இந்தப் பேரலையே தீர்க்கதரிசியர் ஆவர். இந்தத் தீர்க்கதரிசி, தாம் வாழும் காலத்தின் சிந்தனையைத் தமது மனத்துள் பெற்றுத், தமது சிந்தனையை நன்கு வடித்து உலகிற்கு அளிக்கிறார். கிருஷ்ணர், புத்தர், கிறிஸ்து, முகமது, லூதர் ஆகியோரை இப்பேரலைகளுக்கு உதாரணங்களாகச் சொல்லலாம். இவர்கள் ஐந்நூறு ஆண்டுகளுக்கு ஒருமுறை தோன்றி, தங்கள் காலத்தில் வாழ்ந்த மனிதர்களுக்குமேல் உயர்ந்து நின்றார்கள். எப்போதுமே யார் அதிகப் பரிசுத்தமுள்ளவர்களாகவும், சிறந்த குணக் குன்றாகவும் இருக்கிறார்களோ அவர்கள்தான் உலகில் சமூக சீர்திருத்த இயக்கங்களைத் தோற்றுவிக்கிறார்கள். நம்முடைய காலத்தில் மீண்டும் இச்சிந்தனை அலைகள் எழுந்துள்ளன; இவைகளின் நடுநாயகமான கருத்து, இந்தப் பிரபஞ்சம் முழுவதும் நிரந்தரமாக எழுந்தருளியுள்ள கடவுளைப் பற்றியதாகும். இந்தக் கருத்தானது வெவ்வேறு உருவங்களில் வெவ்வேறு பிரிவினரிடையே பரவி வருகிறது. இச் சிந்தனை அலைகளில் ஆக்கமும் அழிவும் மாறிமாறி வருகின்றன; ஆயினும், ஆக்கவேலைகள் அழிவுவேலைகளை முறியடித்துவிடுகின்றன. ஒரு மனிதன் தனது ஆன்மிக லட்சியத்தை அடைவதற்காக ஆழ்ந்து செல்லும்போது, இனிமேலும் மூட நம்பிக்கையால் தான் கட்டுப்பட வேண்டிய அவசியமில்லை என்பதை உணர்கிறான். பெரும்பாலான உட்பிரிவுகளெல்லாம் தற்காலிகமானவை; நீர்மேல் குமிழிகள் போலத்தான் அவை இருக்கும். பொதுவாக அப்பிரிவுகளின் தலைவர்கள் சிறந்த ஒழுக்கமில்லாதவர்களாக இருப்பதுதான் இதற்குக் காரணம். வெறுப்புணர்ச்சி இல்லாத பரிசுத்தமான அன்பே, ஒழுக்கத்தை உருவாக்குகிறது. தலைவரிடம் ஒழுக்கம் இல்லாதபோது, அவர்மீது பற்று ஏற்படுவது சாத்தியமில்லை; தலைவர் பூரண பரிசுத்தமானவராக இருக்கும்போதோ நிலையான பற்றும் நம்பிக்கையும் ஏற்படுகின்றன.

ஒரு கொள்கை பற்றி, அதற்காக உங்களை அர்ப்பணித்துப் பொறுமையாகப் பாடுபடுங்கள். உங்களுக்கு ஆதரவான ஒரு காலம் வரும்.

கற்பனு சக்திக்கு மீண்டும் வருவோம்.

குண்டலினி சக்தியை மனத்தின்கண் கற்பனை செய்து பார்க்கவேண்டும். முக்கோண எலும்பின்மீது சுற்றிய பாம்பாக இது குறியிடப்படுகிறது.

ஏற்கெனவே விவரிக்கப்பட்டுள்ளதுபோல், சுவாசப் பயிற்சி செய்யுங்கள். மூச்சை நிறுத்தும்போது, எட்டு என்ற இலக்கத்தின்கீழ் பாயும் சக்தியாகக் கற்பனை செய்துகொள்ளுங்கள். அது கீழ் நுனியை அடையும்போது, மேற்கண்ட முக்கோணத்தின் மீதுள்ள பாம்பைத் தொடுவதாகவும், இவ்வாறு தொட்டவுடன் அந்தப் பாம்பு முதுகுத்தண்டில் உள்ள பாதை வழியாக மேலேறுவதாகவும் கற்பனை செய்யுங்கள். இந்த மூச்சானது கீழேயுள்ள முக்கோணத்தின் வழியாகச் செல்வதாக எண்ணிக்கொள்ளுங்கள்.

உடல் சம்பந்தமான பயிற்சி இத்துடன் முடிந்துவிட்டது. இதற்கு அடுத்த பயிற்சி மனப்பயிற்சியாகும்.

முதல் பயிற்சி "உட்சேரல்". அலையும் மனத்தை ஒன்றுசேர்த்துக் குவிப்பது. உடல் சம்பந்தமான பயிற்சி முடிந்த பின்பு மனமானது விரும்பியபடியெல்லாம் ஓடட்டும்; அதைத் தடுத்து நிறுத்தாதீர்கள். ஆனுல் வெளியேயுள்ள ஒரு சாட்சியைப் போல் இருந்து மனதின் செயல்களையெல்லாம் கவனித்துக்கொண்டிருங்கள். இப்போது இந்த மனமானது இரண்டு பகுதியாகப் பிரிகிறது ; ஒன்று மனம் செயல் புரிவது ; மற்ருென்று சாட்சியாய் நிற்பது. சாட்சி மனம் வலிமைபெறச் செய்க. அலையும் மனத்தை விரைவாகக் கட்டுப்படுத்துக. சாட்சி தனது கடமையை அதிகம் செய்யச் செய்ய அலையும் மனமானது படிப்படியாகத் தனது வேகத்தைக் குறைத்துக்கொள்ள வேண்டும். அது படிப்படியாகக் கட்டுப்பாட்டின்கீழ் வந்து கடைசியாக ஓய்ந்து நிற்கும்.

இரண்டாவது பயிற்சி : தியானம் ; தியானம் இரு பிரிவினது. உருவமுள்ள ஒன்றையே மனம் சிந்திக்க முடியும். நம்முடைய இயற்கை அவ்வாறு இருக்கிறது. இந்த அவசியத்தை உணர்ந்துதான், வெளி உருவங்கள், சடங்குகள்

ஆகியவைகளை மதம் வகுத்திருக்கிறது. ஓர் உருவமின்றி நீங்கள் கடவுளைத் தியானம் செய்ய முடியாது. சிந்தனையும் உருவமும் பிரிக்க முடியாதவை. ஆதலால் ஓர் உருவத்தைத் தேர்ந்தெடுத்து அந்த உருவத்தின்மீது உங்களுடைய மனதைப் பதிய வையுங்கள்.

மூன்றாவது பயிற்சி: மனதை ஒருமுகப்படுத்துதல்; தியானப் பயிற்சியின்மூலம் இதை அடையலாம். மனமானது வழக்கமாக ஒரு வட்டம்போல் சுற்றுகிறது; அது ஒரே முனையில் நிற்குமாறு செய்ய வேண்டும்.

முடிவு. இதுதான் பயிற்சியின் பலன்: மனமானது இதை அடையும்போது, நோயைக் குணப்படுத்துதல், தொலைவிலுள்ள காட்சிகளை அறிந்துகொள்ளுதல், மற்ற அற்புத சக்திகள் ஆகிய எல்லாமே கிடைக்கின்றன. ஏசுநாதர் செய்ததுபோல, உங்களுடைய சிந்தனையை எவர்மீதும் ஒரு கணத்தில் செலுத்தி, அந்தக் கணமே பலன் பெறலாம்.

சரியான முன்பயிற்சி இல்லாமலே சிலருக்கு இந்த அற்புத சக்திகள் கிடைத்திருக்கின்றன. ஆனால் மேற்கண்ட பயிற்சிகளையெல்லாம் படிப்படியாகச் செய்து பழகும்வரை பொறுத்திருக்குமாறு உங்களுக்கு நான் ஆலோசனை கூற விரும்புகிறேன். அப்போது ஒவ்வொன்றும் உங்கள் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும். அன்பே உங்களுடைய நோக்கமாக இருந்தால், நோய்களைக் குணப்படுத்தும் பயிற்சியை ஒரு சிறிதளவு நீங்கள் செய்து வரலாம். ஏனெனில் அன்பினால் தீங்கு விளையாது. மனிதன் குறுகிய நோக்கமுள்ளவனாகவும் பொறுமையற்றவனாகவும் இருக்கிறான். எல்லாரும் தமக்குச் சில சக்திகள் வேண்டுமென்று விரும்புகிறார்கள்; ஆனால் அவை தங்களுக்கு வருவதற்கு யாரும் சிறிது காலம் காத்திருக்கத் தயாராயில்லை. எல்லாரும் சக்திகளை விரயம் செய்து விடுகிறார்களே தவிர அவைகளைக் கட்டிக்காப்பதில்லை. சம்பாதிக்க எவ்வளவோ காலமாகிறது. அவ்வாறு சம்பாதித்த ஒன்றைப் பிறருக்கு வழங்குவதற்குச் சிறிது நேரம் போதும். ஆகையால் சக்திகள் கிடைக்கக் கிடைக்க அவைகளைச் சேமித்து வையுங்கள். அவைகளை வீணாகச் செலவழித்து விடாதீர்கள்.

நீங்கள் கட்டுப்படுத்திய இச்சை ஒவ்வொன்றும் உங்களுடைய சக்தியை அதிகமாக்கும். ஆகையால் மற்ற நீதி நெறிகளுடன் பதிலுக்குப் பதில் கோபப்படாமல் இருப்பது சிறந்த கொள்கையாகும். "தீமையை எதிர்த்து நில்லாதே" என்று கிறிஸ்துநாதர் கூறினர். இது ஒரு சிறந்த நீதிநெறி மட்டுமன்று; நடைமுறையில் நமக்கு அனுகூலமான உயர்ந்த கொள்கையுமாகும். இதை நாம் கண்டுணரும் வரை இதைப் புரிந்துகொள்ள முடியாது. ஏனெனில் எவன் கோபப்படுகிருனே அவன் தனது சக்தியை இழக்கிருன். ஆகையால் உங்கள் மூளையில் உள்ள கோபம், வெறுப்பு ஆகிய உணர்ச்சிகளை உங்கள் மனதிற்கு வரவிடக்கூடாது.

மற்ற பொருள்களுக்கெல்லாம் மூலப்பொருள் என்னவென்பதைக் கண்டுபிடித்தவுடன், இரசாயன சாஸ்திரியின் வேலை முடிவடைந்துவிடும். எல்லாம் ஒன்றே என்ற ஐக்கியத்தைக் கண்டுபிடித்தவுடன் மதவிஞ்ஞானத்தின் வேலையும் முடிவடைந்துவிடும். ஆயிரக்கணக்கான ஆண்டுகட்கு முன்பே இந்த நிலை பெறப்பட்டது. "நானும் எனது பிதாவும் ஒன்றே" என்று மனிதன் சொல்லும்போது, பரிபூரண ஐக்கிய நிலை அடைகிருன்.

பக்தியோகம் பற்றிய பாடங்கள்

பக்திமூலம் யோகம் செய்தல்

இராஜயோகம் பற்றியும் சுவாசப் பயிற்சிகள் குறித்தும் இதுவரை அறிந்துகொண்டோம். இனிமேல் பக்தி மூலம் யோகப் பயிற்சி பெறுவது எப்படியென்பதை ஆராய்வோம். ஒரு குறிப்பிட்ட முறைதான் அவசியம் என்பதில்லை. இதை நீங்கள் நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும். உங்களுக்கு ஏற்ற ஒன்றைத் தேர்ந்தெடுப்பதற்காகப் பல முறைகளையும் கோட்பாடுகளையும் உங்களுக்கு எடுத்துக்கூற விரும்புகிறேன்; ஒன்று இயைபின்றேல் மற்ருென்று இயைதல் கூடும்.

நம்முடைய இயல்பான உடல், ஆன்மா, அறிவு, செயல் ஆகிய எல்லாம் சமவளர்ச்சி பெற்ற மனிதர்களாக நாம் விரும்புகின்றோம். தேசங்களும் சரி, தனிப்பட்டவர்களும்

சரி, இவைகளில் ஏதாவது ஒன்று அதிக வளர்ச்சி பெற்றவர்களாக இருக்கிருர்கள். ஆகையால் அவர்களுக்கு அந்தக் குறிப்பிட்ட அம்சம் தவிர மற்றவை விளங்குவதில்லை. ஏதாவது ஒன்றில் அவர்கள் தீவிரமாக ஈடுபட்டிருப்பதால், மற்ற அம்சங்களைப் பற்றிப் பார்க்கவும் முடியாதவர்களாய் இருக்கின்றனர். சிறந்த இலட்சியம் என்பது நாம் எல்லா அம்சங்களும் பொருந்தியவர்களாய் இருக்கவேண்டும் என்பதுதான். நம்மில் ஒவ்வொருவரும் ஏதாவது ஓர் அம்சம் வளரப்பெற்றவர்களாய் இருப்பதால், மற்றவர்கள்மீது அனுதாபமோ ஆதரவோ காட்ட முடியாதவர்களாக இருக்கின்ரேம். உலகின் துன்பங்கள் எல்லாம் இதனுல்தான் ஏற்படுகின்றன. பூமிக்கு அடித்தளத்திலுள்ள சுரங்க வழியில் ஓர் இடத்திலிருந்து சூரியனைப் பார்க்கும் ஒரு மனிதனை எடுத்துக்கொள்ளுங்கள். அவன் சூரியனின் ஒரு தோற்றத்தை மட்டுமே காண்கிருன். ஒருவன் பூமியிலிருந்து சூரியனைப் பார்க்கிருன். மற்றொருவன் மூடுபனி வழியாகச் சூரியனைப் பார்க்கிருன். இன்னொருவன் மலையுச்சியிலிருந்து பார்க்கிருன் என வைத்துக்கொள்வோம். இவர்களில் ஒவ்வொருவருக்கும் சூரியன் ஒவ்வொரு விதமாகத் தோன்றுவான். இவ்வாறு சூரியனுடைய தோற்றங்கள் பல இருக்கின்றன. ஆனுல் உண்மையில் சூரியன் ஒன்றே; தோற்றங்கள் பல; காட்சிப் பொருள்—அதாவது சூரியன்—ஒன்றே.

ஒவ்வொரு மனிதனும் தனது இயல்புக்கு ஏற்ப ஒரு தனித்தன்மை பெற்றுள்ளான். சில லட்சியங்களைப் பின்பற்றி அவைகளை அடைவதற்காக ஒருகுறிப்பிட்ட பாதையையும் வகுத்துக்கொள்கிருன். ஆனுல் இறுதி லட்சியம் எல்லாருக்கும் ஒன்றே. ரோமன் கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்தவன் ஆழ்ந்த ஆன்மிகக் கருத்து உடையவனுக இருக்கிருன். ஆனுல் அவனிடம் பரந்த மனப்பான்மை இல்லை. ஒருமைக் கோட்பாட்டைச் சேர்ந்தவனுக்குப் பரந்த மனப்பான்மை இருக்கிறது என்ருலும் அவன் தனது ஆன்மிகத்தை இழந்துவிட்டான். மதமானது ஒரு குறிப்பிட்ட அளவுதான் முக்கியத்துவம் உள்ளது என்று எண்ணுகின்ருன். ரோமன் கத்தோலிக்க மதத்தினரின் ஆழ்ந்த ஆன்மிக உணர்வும், ஒருமைக் கோட்பாட்டினனின் பரந்த மனப்பான்மையும் இணைந்து இருக்கவேண்டும். வானம் போன்ற பரந்த

மனோபாவமும் வேண்டும்; சமுத்திரம் போன்ற ஆழ்ந்த நோக்கும் வேண்டும். கொள்கை வெறிபிடித்தவனுக்குள்ள உற்சாகம்வேண்டும்; நம்பிக்கையுள்ளவனின் உறுதி வேண்டும்; நாஸ்திகனின் விசால மனப்பான்மை வேண்டும்.

"சகிப்புத்தன்மை" என்பதற்கு இப்போது தவறான பொருள் கொள்ளப்படுகின்றது. தான் உயர்ந்த நிலையில் இருப்பதாக எண்ணும் கர்வம் பிடித்த ஒரு மனிதன் தன்னுடைய அக்கம்பக்கத்திலுள்ள மக்கள்மீது இரக்கத்துடன் கூடிய கண்ணோட்டம் செலுத்துவதைச் 'சகிப்புத்தன்மை' என்று கூறுகிறார்கள். இது பயங்கரமான கருத்தாகும்.

நாமெல்லாரும் ஒரே லட்சியத்தை நோக்கி ஒரே திசையில் சென்றுகொண்டிருக்கிறோம்; அவரவர் மனோநிலைக்கு ஏற்றவாறு பல்வேறு பாதைகளில் சென்றுகொண்டிருக்கிறோம். நாமெல்லாரும் சமநோக்கு உடையவர்களாக இருக்கவேண்டும். இதற்கும் மேலே ஒருபடி சென்று எந்த மாறுதல்களையும் ஏற்றுக்கொள்ளும் இயல்பாற்றல் பெற்றவராதல் வேண்டும். பிறருடைய வழியை நாம் சகிப்புத்தன்மையுடன் ஏற்றுக்கொள்வது மட்டும் போதாது. இதற்கெல்லாம் கடினமான காரியம் ஒன்றைச் செய்யவேண்டும்; வேறொரு மார்க்கத்தில் சென்று, அவன் முயற்சிகளிலும், அபிலாஷைகளிலும் அவனுடன் ஒன்றுபடவேண்டும். ஒவ்வொரு மதத்திலும் நேர்நிலை, எதிர்மறை என்ற இரண்டு அம்சங்கள் இருக்கின்றன. உதாரணமாகக் கிறிஸ்தவ மதத்தில் உள்ள அவதாரம் திருமூர்த்தி ஸ்வரூபம், ஏசுமூலம் அருள்பேறு அடைதல் ஆகியவைகளைப் பற்றி நீங்கள் கூறும்போது, நான் அவைகளை ஏற்றுக்கொள்ளத் தயாராயிருக்கிறேன். "நல்லது, இவைகளெல்லாம் உண்மை என்று ஏற்றுக் கொள்கிறேன்" என்று கூறுவேன். ஆனால் "கிறிஸ்து மதம் தவிர உண்மையான மதம் வேறு இல்லை; கிறிஸ்துவைத் தவிர அவதாரம் வேறு இல்லை" என்று நீங்கள் சொல்ல வரும்போதுதான் "நிறுத்துங்கள். உங்கள் கதவை அடைக்கும்போது, பிற மதங்களின் உண்மையை நீங்கள் மறுக்கும்போது, என்னால் ஒப்புக்கொள்ள முடியாது" என்று

சொல்லிவிடுவேன். ஒவ்வொரு மதமும் தெரிவிக்கவேண்டிய செய்தி இருக்கிறது. ஒவ்வொரு மதமும் கற்பிக்கவேண்டிய பாடம் இருக்கிறது. ஆனால் ஒரு மதம் மற்ற மதங்களை ஆட்சேபிக்கும்போது, மற்ற மதங்களுக்குத் தொந்தரவு கொடுக்கும்போது, அது எதிர்மறையான, ஆட்சேபகரமான ஒரு போக்கை அனுஷ்டிக்கிறது. எங்கே தொடங்குவது, எங்கே முடிப்பது என்று அதற்குத் தெரிவதில்லை.

ஒவ்வொரு சக்தியும் ஒரு சுற்று வந்துதான் முடிகிறது. மனிதன் என்று நாம் சொல்லும் சக்தியானது எல்லையற்ற இறைவனிடமிருந்து வந்தது. ஆகையால் அவனிடமே திரும்பிச் சென்றுகவேண்டும். இரண்டு வழிகளில் கடவுளிடம் மனிதன் திரும்பிச்செல்லலாம். இயற்கையை அனுசரித்து நிதானமாகத் திரும்பிச்செல்வது ஒருவழி. மனிதனை இவ்வழியிலேயே விட்டுவிட்டால் அவன் ஒரு சுற்றை முடித்துக் கடவுளிடம் திரும்பிச் செல்வான். ஆனால் நமது ஆன்மிக சக்தியின் பலத்தால் இந்தப் பாதையில் மேலும் செல்லாமல் நின்று, பலவந்தமாகப் பின்புறம் திரும்பிக் கடவுளைக் காண்பது மற்றொரு வழி. இது குறுக்கு வழி எனலாம். இதைத்தான் யோகி செய்கிறான்.

ஒவ்வொரு மனிதனும் தனது இயற்கைக்கு ஒத்த ஒரு லட்சிய மார்க்கத்தைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளவேண்டும். இந்த மார்க்கத்தையே ஒரு மனிதனின் இஷ்டம் என்று நாம் கூறுகிறோம். நீங்கள் அதைப் புனிதமானதாக (ஆகவே ரகசியமானதாக) வைத்திருக்கவேண்டும். கடவுளை வழிபடும்போது, உங்களுடைய இஷ்ட முறையில் வழிபடுங்கள். ஆனால், வழிபாட்டில் நீங்கள் தொடர்ந்து முயலும்போது, அது தானே வரும். கடவுள் மனிதனுக்கு அளித்த விசேஷ வெகுமதிகள் மூன்று உள்ளன. அவை மனித உடல், சுதந்திரமாக இருக்கவேண்டும் என்ற விருப்பம், ஏற்கனவே சுதந்திரமாக உள்ள ஒருவரிடம் உதவி பெறக்கூடிய சக்தி ஆகிய மூன்றுமேயாகும். ஆனால் உருவம் கொண்ட ஒரு கடவுள் இல்லாமல் பக்தி இருக்க முடியாது. காதலி இருந்தால் காதலன் வேண்டும். எல்லையற்ற ஒரு மனிதராகவே கடவுள் இருந்தாகவேண்டும்; ஏனெனில், மனிதர்களாக நாம் இருக்கும்வரை மனித ரூபத்தாலான கடவுளே நமக்குவேண்டும். மனித ரூபத்திலுள்ள ஒரு

கடவுளை-அப்படிப்பட்ட கடவுளையே-நாம் கண்டாகவேண்டும் என்ற அவசியம் இருக்கிறது. நாம் இந்த உலகில் பார்க்கும் பொருள்களில், வெறும் பொருளைமட்டும் நாம் பார்க்கவில்லை. அந்தப் பொருளுடன் நமது மனோநிலையும் சேர்ந்துதான் இருக்கிறது. நாற்காலியுடன் நாற்காலியைப் பற்றி நமது மனதில் உள்ள கருத்தையும் சேர்த்துத்தான் நாம் காண்கிறோம். முதலில் ஒவ்வொரு பொருளிலும் உனது மனதைச் செலுத்தவேண்டும். பின்னரே நீ அதைக் காணமுடியும். (உதாரணம்: வெள்ளையான, சதுரமான, பளபளப்பான, கடினமான பெட்டி ஒன்றை முதலில் மூன்றறிவு உள்ள மனிதன் ஒருவன் பார்க்கிறான். பின்னர் நான்கறிவுள்ள மனிதன் பார்க்கிறான். பின்னர் ஐந்தறிவுள்ள மனிதன் பார்க்கிறான் என்று வைத்துக்கொள்ளுங்கள். இவர்களில் கடைசியாகக் குறிப்பிடப்பட்டுள்ள மனிதனே, மேற்கண்ட பெட்டியின் எல்லாக் குணம்சங்களையும் காண்கிறான். மூன்றறிவுள்ள மனிதன் கண்டதைக் காட்டிலும் அதிகமான ஒரு குணம்சத்தை நான்கறிவு படைத்த மனிதன் கண்டிருப்பான். இதே பெட்டியை ஆறறிவு படைத்த ஒருவன் பார்ப்பதாக இருந்தால், ஐந்தறிவு படைத்தவன் கண்டதைக் காட்டிலும் அதிகமான ஒரு குணம்சத்தைக் கண்டிருப்பான்.)

அன்பையும், அறிவையும் நான் காண்பதால், பரம்பொருளானது அன்பாகவும் அறிவாகவும் விளங்குகிறது என்பதை அறிவேன். என்னிடம் அன்பைத் தோற்றுவிக்கும் ஒரு பொருள் எப்படி அன்பில்லாததாக இருக்கமுடியும்? பரம்பொருளை மனித குணம்சங்கள் இல்லாமல் நான் சிந்திக்க முடியாது. இந்தப் பிரபஞ்சத்தில் கடவுளை நம்மிடமிருந்து தனித்துப்பார்ப்பது முதலில் அவசியமே. கடவுளின் தரிசனம் மூன்று வகைப்படும்:

1. **மிகவும் கீழான நிலையில் உள்ள தரிசனம்:** நம்மைப் போன்று கடவுளுக்கும் ஓர் உடல் இருப்பதாகக் காண்பது. (பைஸன்டைன் கலை)

2. **இதைக் காட்டிலும் உயர்ந்த தரிசனம்:** மனிதனின் உயர்குணங்களை எல்லாம் ஒவ்வொன்றாக கடவுளுக்கு ஏற்றிக் கொண்டே செல்கிறோம். மூன்றாவது கட்டத்தை நாம் அடையும் வரை இவ்வாறு செய்துகொண்டே இருக்கிறோம்.

3. **மிக உயர்ந்த தரிசனம் :** நாம் கடவுளைக் காணல்.

இந்த மூன்று கட்டங்களிலுமே நாம் கடவுளைக் காண்கிறோம்; கடவுளை மட்டுமே காண்கிறோம் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். அதில் ஏமாற்றுதல் என்பது இல்லை. நாம் தவறு செய்யவும் இல்லை. பல்வேறு இடங்களிலிருந்து நாம் பார்த்தபோது, வெவ்வேறு விதமாகச் சூரியனைக் கண்டோமானாலும், சூரியன் ஒன்றே; அது சந்திரனன்று; வேறு எந்தப் பொருளுமன்று.

நம்மைப் போன்றுதான் நாம் கடவுளைக் காணவேண்டும் என்பது தவிர்க்க முடியாதது. நம்மைப் போன்று, ஆனால் எல்லையற்ற பெரிய உருவத்துடன், ஆண்டவன் இருப்பார். பரம்பொருளாக, நாம் கடவுளைக் கற்பனை செய்ய முயல்கிறோம் என்று வைத்துக்கொண்டாலும் நாம் ஒரு எல்லைக்கு உட்பட்ட, பரஸ்பர ஒப்புநோக்குடைய நிலைக்கு வந்துதான் காணவேண்டும்.

ஒவ்வொரு மதத்திலும் நாம் காணும் பக்தி இரண்டு பகுதிகள் கொண்டதாகும்: 1. அடையாளங்கள், உருவங்கள், சடங்குகள், சொற்கள் ஆகியவைகளைக்கொண்டு ஏற்படும் பக்தி. 2. அன்பு மூலம் ஏற்படும் பக்தி. இந்த உலகில் நாம் சில நியதிகளுக்குக் கட்டுப்பட்டு இருக்கிறோம்; இந்த நியதிகளை உடைத்தெறிய எப்போதுமே முயன்று கொண்டிருக்கிறோம்; எப்போதுமே கீழ்ப்படியாமலிருக்க, இயற்கையை நசுக்க முயன்றுகொண்டிருக்கிறோம். உதாரணமாக, இயற்கை நமக்கு வீடுகள் கொடுப்பதில்லை; நாம் அவைகளைக் கட்டிக்கொள்கிறோம். இயற்கை நம்மை நிர்வாணமாகப் படைக்கிறது; நாம் துணிகளைக் கட்டிக்கொள்கிறோம். சுதந்திரமாக இருப்பதே மனிதனின் லட்சியம்; இயற்கையின் நியதிகளை மாற்றுவதில் நாம் எவ்வளவு வலிகுன்றியுள்ளோமோ, அவ்வளவு நமக்குக் கஷ்டங்கள் ஏற்படுகின்றன. இயற்கையின் நியதிகளுக்குப் பணிந்து நாம் நடப்பதே சட்டப்பிரஷ்டர்கள் ஆவதற்காகவே; அதாவது சட்டத்திற்கு அப்பால் செல்வதற்காகத்தான். பணியாமல் இருப்பதுதான் வாழ்க்கை முழுவதும் நாம் நடத்தும் போராட்டம். (அதனாலேயே கிறிஸ்தவ மத விஞ்ஞானிகள் கூறுவதை நான் ஏற்றுக்கொள்கிறேன். மனிதனுடைய

சுதந்திரத்தையும் ஆன்மாவின் தெய்விகத்தையுமே அவை போதிக்கின்றன.) ஆன்மாவானது எல்லாச் சூழ்நிலைகளுக்கும் மேம்பட்டது. "இந்தப் பிரபஞ்சம் என்னுடைய பிதாவின் சாம்ராஜ்யம்; நான்தான் அவர் வாரிசு" என்ற கண்ணோட்டம் மனிதனுக்கு வேண்டும். "என்னுடைய ஆன்மாவானது எல்லாவற்றையும் அடக்கி வென்றுவிடும்."

நாம் சுதந்திரம் அடைவதற்கு முன்பு, நியதிகளை அனுசரித்தே செயலாற்றி வரவேண்டும். வெளி உதவிகள், முறைகள், உருவங்கள், சடங்குகள், கொள்கைகள், கோட்பாடுகள் ஆகிய எல்லாவற்றிற்குமே அததற்கு உரிய இடம் உண்டு. நாம் பலம் அடையும்வரை நமக்கு ஆதரவாகவும், நம்மைப் பலப்படுத்தவும் இவை அவசியம். அதற்குப் பின்பு இவை அவசியமில்லை. இவை நம்மை வளர்க்கும் தாதிகள் போன்றவை. ஆகையால், இளம் பருவத்தில் இவை தவிர்க்க முடியாதவை. புத்தகங்களும் செவிலித் தாய்களே; மருந்துகளும் அப்படியே. மனிதன் தன்னுடைய உடல்மீது தனக்குள்ள அதிகாரத்தை உணரும்வரை உழைக்கவேண்டும். நாம் அனுமதிக்கும் காலம்வரை மூலிகைகளும் மருந்துகளும் நம்மீது ஆதிக்கம் செலுத்தும். நாம் பலமடைந்த பின்பு, இந்த வெளி முறைகள் எல்லாம் அவசியமில்லை.

சொற்கள் மூலம் இயங்கும் பக்தி

உடல் எனப்படுவது ஸ்தூல உருவத்தில் காட்சி தரும் மனமேயாகும். மனம் நுண்ணிய அடுக்குகள் கொண்டது; நெருக்கமான அடுக்குகள்கொண்டது. மனிதன் தனது உடலை முற்றும் அடக்கியாளும் சக்தி பெறும்போது, அவனுடைய மனத்தையும் அடக்கும் சக்தி பெறுவான். ஒவ்வொரு மனதிற்கும் அதற்கென்றே விசேஷமான ஓர் உடல் இருப்பதுபோல ஒவ்வொரு சொல்லுக்கும் ஒரு தனிக் கருத்து இருக்கிறது. கோபம் வரும்போது "அடிமுட்டாள், மடையன்" என்று அழுத்தந் திருத்தமாகச் சொல்கிறோம். வருத்தமாக இருக்கும்போது "ஆ, ஐயோ" என்பன போன்று மென்குரலில் சொல்கிறோம். இவை எல்லாம் அவ்வப்போது தோன்றி மறையும் உணர்ச்சிகள். ஆனால் அன்பு,

அமைதி, சாந்தம், இன்பம், புனிதத் தன்மை போன்று நிரந் தரமாக உள்ள உணர்ச்சிகள்வேறு இருக்கின்றன. இந்த உணர்ச்சிகளைக் குறிக்கும் சொற்கள் ஒவ்வொரு மதத்திலும் உள்ளன. மனிதனின் உயர் உணர்ச்சிகளின் சின்னம் அச் சொற்கள். கருத்து சொல்லை உற்பத்திசெய்கிறது; அதே போலச் சொல்லானது சிந்தனை அல்லது உணர்ச்சியை உற்பத்திசெய்கிறது. இந்த இடத்தில்தான் சொற்களின் உதவி நமக்குத் தேவை. இப்படிப்பட்ட சொற்கள் ஒவ் வொன்றும் ஒரு லட்சியத்தைக் குறிக்கும். இந்தச் சொற்கள் புனிதமானவை வியக்கத்தக்க சக்தியுள்ளவை என்பதை நாம் அறிவோம். இவைகளைப் படிப்பதால் மட்டும் நமக்கு எவ்விதப் பலனும் ஏற்படாது. அவை பலன் அளிக்க வேண்டுமானால், அவைகளில் ஜீவன் ஊட்டப்படவேண்டும். கடவுள் உணர்வு பெற்றவரும் தற்போது **வாழ்ந்துகொண்டிருப் பவருமான** ஒருவர் அதைப் பயன்படுத்தி இருக்கவேண்டும். அவரால்தான் இந்தச் சொற்களில் உள்ள சக்தியைத் தூண்டிவிட முடியும். கிறிஸ்துவால் தூண்டிவிடப்பட்ட சக்தியானது தொடர்ந்து செயலாற்றுமாறு செய்யவே அவர் கைகளை வைத்து ஆசீர்வதித்தார். இந்தச் சக்தியை அளிக் கக் கூடியவர்தான் குரு எனப்படுவார். ஏசுவைப் போன்ற மற்ற பெரிய ஆசிரியர்களுக்குச் சொற்கள் அவசியமில்லை. ஆனால் இவர்களுக்கும் குறைந்த நிலையில் இருப்பவர் களுக்கே, சக்தியை வழங்குவதற்குச் சொற்கள் தேவைப் படுகின்றன.

பிறருடைய குற்றங்களைக் கவனியாதே. ஒரு மனித னின் தவறுகளைக் கொண்டு முடிவுகூறல் இயலாது. (உதா ரணமாக, ஒரு ஆப்பிள் மரத்திலிருந்து கீழே விழுந்த அழு கிப்போன அல்லது பழுக்காத ஆப்பிள்களை வைத்து நாம் முடிவு செய்வதாக வைத்துக்கொள்வோம். அது சரியா காது. அது போலவே, ஒரு மனிதனுடைய தவறுகள் அவ னுடைய குணம் அல்லது ஒழுக்கத்தைச் சரிவரக் காட்டா.) உலக முழுவதும் கெட்டவர்கள் அப்படித்தான் இருக்கிறார் கள் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். ஆசியா விலும் சரி, ஐரோப்பாவிலும்சரி, அமெரிக்கவிலும் சரி திரு டர்களும் கொலைகாரர்களும் ஒரே மாதிரிதான் இருக்கிறார் கள். அவர்களெல்லாரும் தனியாக ஒரு தேசத்தினர் என்று

கூறிவிடலாம். நல்லவர்கள், பரிசுத்தமானவர்கள், பலமான வர்கள் ஆகியோரிடையேதான் பல்வேறு வகையினர் உள் ளனர். மற்றவர்களிடமுள்ள வஞ்சகத்தைப் பற்றி எண் ணிக் கொண்டிராதே. வஞ்சகம் என்பது அறியாமையாலும் பலவீனத்தாலும் ஏற்படுவது. மக்களிடம் சென்று அவர்களி டம் பலவீனம் இருக்கிறது என்று கூறுவதால் என்ன பலன்? குறை கூறுவதாலும் அழிப்பதாலும் ஒரு பலனும் இல்லை. நாம் இவைகளைக் காட்டிலும் உயர்ந்தவைகளை அவர்களுக்கு அளிக்கவேண்டும். அவர்களுடைய மகத்தான இயற் கையை, அவர்களுடைய பிறப்புரிமையை அவர்களுக்கு எடுத்துக் கூறுங்கள். ஏன் மக்கள் கடவுளிடம் வரக்கூடாது? மிகமிகச் சிலரே தங்களுடைய புலன்களுக்கு அப்பாற்பட்ட இன்பங்களை அனுபவிக்கக் கூடியவர்களாய் இருக்கின்றனர் என்பதே இதற்குக் காரணம். பெரும்பாலானவர்கள் ஆன் மிக உலகக் கண்களால் பார்க்க முடியாது; காதுகளால் கேட்க முடியாது.

இப்போது அன்பு வழிபாட்டிற்கு வருவோம்.

"ஒரு சமய அமைப்புக்குள் பிறப்பது நல்லது; ஆனால், சாவது நல்லதன்று" என்று கூறப்பட்டிருக்கிறது. ஒரு மரம் சிறு செடியாக இருக்கும்போது அதைச் சுற்றியுள்ள வேலி அதற்கு ஆதரவும் பலமும் அளிக்கிறது. ஆனால் பின் னர் இந்த வேலி நீக்கப்பட்டாலன்றி அந்த மரத்தின் வளர்ச்சி யும் பலமும் தடைப்படும். உருவ வழிபாடு அவசியமான ஒரு கட்டம் என்பதை நாம் முன்பே கண்டோம். ஆனால் படிப்படியாகவும் மெதுவாகவும், அதைத் தாண்டி உயர்ந்த நிலைக்கு வரவேண்டும். ஆண்டவனிடம் நமக்குள்ள அன்பு பூரணத்துவம் அடையும்போது, "அவர் எல்லாம் வல்லவர், எங்கும் நிறைந்தவர்" என்பன போன்ற குணம்சங்களைப் பற்றி நாம் சிந்திப்பதில்லை. கடவுளிடமிருந்து எதுவும் நமக் குத் தேவையில்லை; ஆகையால் அவருடைய குணம்சங் களில் எதைப்பற்றியும் நமக்கு அக்கறையில்லை. நமக்கு வேண்டியது கடவுளுடைய அன்பே. ஆனால் அப்போதும் கூட, கடவுளிடம் மனித குணம்சங்களைக் காணும் இயல்பு நம்மை விட்டுவிடப் போவதில்லை; நம் உடலை விட்டுத் தாண்டிச் சென்றுவிட முடியாது; ஆகையால் நாம் ஒரு

வரை ஒருவர் நேசிப்பது போலத்தான் கடவுளை நேசிக்க முடியும்.

மனித அன்பு ஐந்து படிகள் கொண்டது.

1. மிகவும் கீழான, சாதாரணமான, அமைதியான அன்பு. இந்தக் கட்டத்தில் நமக்கு வேண்டிய பாதுகாப்பு, உணவு போன்ற எல்லாவற்றிற்கும் பிதாவை எதிர்பார்க்கிறோம்.

2. நம்மைச் சேவை செய்யத் தூண்டும் அன்பு. மனிதன் கடவுளைத் தனது ஆண்டானாகக் கொண்டு சேவை செய்ய விரும்புகின்றான். சேவை செய்ய வேண்டும் என்ற ஆர்வம் மற்ற உணர்ச்சிகளை எல்லாம் மீறி நிற்கிறது. ஆண்டவன் நல்லவரா, கெட்டவரா, அன்புள்ளவரா, அன்பில்லாதவரா என்றெல்லாம் நாம் பார்ப்பதில்லை.

3. நண்பனின் அன்பு. தோழர்கள், உடன் விளையாடுபவர்கள் போன்ற சமத்துவமானவர்களின் அன்பு. கடவுளைத் தனது தோழனாக மனிதன் உணர்கிறான்.

4. தாயன்பு. கடவுள் ஒரு குழந்தையாகக் கருதப்படுகிறார். முன்பு கூறப்பட்டவைகளை எல்லாம்விட உயர்ந்த அன்பாக இது இந்தியாவில் கருதப்படுகிறது. கடவுள் அச்சம் சிறிதும் இல்லாதிருப்பதே இதற்குக் காரணம்.

5. கணவன் மனைவி அன்பு. காதலுக்காகக் காதல். கடவுளைப் பரிசுத்தமான காதலன் அல்லது காதலியாகக் கருதுதல்.

"நான்கு கண்கள் சந்திக்கின்றன; இரண்டு ஆன்மாக்களில் மாறுதல் ஏற்படுகிறது; இந்த இரண்டு ஆன்மாக்களுக்கும் இடையே காதல் ஏற்படுகிறது; இரண்டும் ஒன்றுகின்றன" என்று அழகாகக் கூறப்பட்டிருக்கிறது.

கடைசியில் கூறப்பட்ட மிகவும் பரிசுத்தமான இந்த அன்பு ஒருவனுக்கு ஏற்பட்டு விட்டால் ஆசைகள் எல்லாம் மறைகின்றன; உருவங்கள், தத்துவங்கள், மதப்பிரிவு

உணர்ச்சிகள் ஆகிய எல்லாம் அவனை விட்டுப் போய்விடுகின்றன; முக்தி ஆசை கூட (பிறப்பு இறப்பு ஆகியவற்றிலிருந்து விடுதலை அடைவதே எல்லா மதங்களின் குறிக்கோளாகும்) விட்டுப் போகிறது. மிக உயர்ந்த அன்பில் ஆண்-பெண் பால் உணர்ச்சி கிடையாது. ஏனெனில் தூய ஐக்கியத்தையே நாம் காண்கிறோம். ஆண்-பெண்பால் உணர்ச்சி உடல்களைப் பிரித்து வைக்கிறது. எனவே பரிசுத்த தத்துவ நிலையில்தான் ஐக்கியம் சாத்தியமாகும். உடல் பற்றிய எண்ணம் எவ்வளவு குறைவாக இருக்கிறதோ, அவ்வளவு நம்முடைய அன்பும் பரிசுத்தமாக இருக்கும். இறுதியில் உடல் பற்றிய எண்ணமெல்லாம் மறந்து இரண்டு ஆன்மாக்களும் ஒன்றாகிவிடும். நாம் நமது அன்பையே காதலிக்கிறோம். அன்பானது உருவங்களை ஊடுருவி அவைகளுக்கு அப்பால் சென்றுவிடுகிறது. "அழகில்லாத பெண்ணும் அவள் காதலனுக்கு ரம்பையாகவே தோன்றுவாள்" என்று கூறப்பட்டிருக்கிறது. ஏனெனில் அழகில்லாத பெண் மீது அவளது காதலன் தனது அன்பைக் கொட்டிவிட்டான். முத்துச்சிப்பி தனக்குள் "அரிக்கும் பொருளை" ஏற்படுத்தும்போது, அதையே முத்தாக மாற்றக்கூடிய மற்றொரு பொருளையும் உண்டாக்கிவிடுகிறது. அதே போன்றுதான் மனிதனும் காதல் செலுத்துகிறான்; மிகச் சிறந்த ஒன்றையே காதலிக்கிறான்; அதில் சுயநலம் இல்லை. ஆகையால் மனிதன் அன்பையே காதலிக்கிறான். கடவுள் அன்புருவானவர்; நாம் கடவுளை நேசிக்கிறோம்; அன்பை நேசிக்கிறோம். அன்பையே நாம் காண்கிறோம். அன்பு விவரித்தற்கு இயலாதது. வெண்ணெய்தின்னும் ஊமையன், வெண்ணெய் எப்படியிருக்கும் என்பதை உங்களுக்கு எடுத்துச் சொல்ல இயலாதவனே. வெண்ணெய் வெண்ணைதான். அதை ருசி பாராதவர்களுக்கு அதன் ருசியையும் மற்ற குணம்சங்களையும் விளக்கிச் சொல்ல இயலாது. அன்பிற்காகவே அன்பு செலுத்துதல் என்பதையும் — அதை அனுபவியாதவர்களுக்கு — விளக்கிச் சொல்ல முடியாது.

அன்பை ஒரு முக்கோணமாகச் சித்திரிக்கலாம். இதில் முதல் கோணமானது, அன்பு ஒருகாலும் பிச்சை கேட்பதில்லை, எதுவுமே கேட்பதில்லை என்பதாகும். இரண்டாவது, அன்பு அச்சம் அறியாதது. மூன்றாவது உச்சி, அன்புக்காக

அன்பு செலுத்துவதாகும். அன்பின் சக்தியால் புலன்கள் நுண்மையானவைகளாகி உயர்ந்த நிலை அடைகின்றன. மனித உறவில் பரிபூரண அன்பென்பது அபூர்வமானது; ஏனெனில், மனித அன்பு பரஸ்பரமானது. ஆனால் கடவுள் அன்பானது எப்போதும் நீரோட்டமுடைய அருவிபோன்றது; யாரும் அதைத் தடுக்கவோ குறைக்கவோ முடியாது. மனிதன் எதையும் பிச்சை கேட்பவனாக இராமல், எதையும் விரும்பாமல், கடவுளைத் தனது உயர்ந்த லட்சியமாக எண்ணி அன்பு செலுத்துபவனாக இருந்தால், பரிணாம வளர்ச்சியின் உச்ச கட்டத்திற்கு அன்பு சென்றுவிடுகிறது. அது இந்தப் பிரபஞ்சத்திலேயே மகத்தான சக்தியாகிறது. இந்தச் சக்திகளை அடைய நீண்ட காலம் ஆகும். ஆகையால் நமது இயற்கையை அனுசரித்து அவைகளிலிருந்து நாம் தொடங்கவேண்டும். சிலர் சேவை செய்யப் பிறந்தவர்கள்; சிலர் தாயாக இருந்து அன்பு செலுத்தப் பிறந்தவர்கள். எப்படியும் பலன், ஆண்டவனை அடைவதே. இயற்கையினால் கிடைக்கும் உதவியை நாம் உபயோகப்படுத்திக் கொள்ள வேண்டும்.

உலகிற்கு நன்மை செய்தல்

“உங்களுடைய மதத்தால் சமுதாயத்திற்கு என்ன நன்மை?” என்று நம்மிடம் கேட்கப்படுகிறது. சத்தியத்தின் சோதனைக்களனாகச் சமூகம் கருதப்படுகிறது. இது தர்க்கவாதப் பொருத்தமற்றது. ஒவ்வொரு காலத்திலுமுள்ள சமுதாயம் வளர்ச்சியின் ஒரு கட்டந்தான்; அந்தக் கட்டத்தை நாம் தாண்டிச் சென்றுகொண்டிருக்கிறோம். ஆகவே சமுதாயத்தில் சத்தியத்தின் பலனை முடிவு செய்வதைக் காட்டிலும், ஒரு விஞ்ஞானக் கண்டுபிடிப்பானது ஒரு குழந்தைக்கு எந்த அளவு உபயோகமாகிறது என்பதைக் கொண்டு, அந்த விஞ்ஞானக் கண்டுபிடிப்பின் பலனை நாம் முடிவு செய்யலாம்! இதை எண்ணிப்பார்ப்பதே பயங்கரமாக இருக்கிறது. சமுதாயம் மாறாமல் ஒரு நிலையில் இருப்பதாக இருந்தால், அது குழந்தை குழந்தையாகவே இருப்பது போன்றதாகும். பூரணத்துவமுடைய “மனிதக்—குழந்தை” ஒன்று இருக்கமுடியாது; அந்த இரண்டுமே முரண்பட்டவை. ஆகையால் பரிபூரண நிலை அடைந்த

சமுதாயமும் இருக்கமுடியாது. இப்படிப்பட்ட ஆரம்பக் கட்டங்களிலிருந்து மனிதன் வளர்ச்சியடையவேண்டும்; நிச்சயம் வளர்ச்சியும் அடைவான். ஒரு கட்டத்தில் சமுதாயமானது நல்லதாக இருக்கும்; ஆனல் அது நம் முடைய லட்சியமாக இருக்கமுடியாது. அது ஓயாது மாறிக் கொண்டிருக்கும். தற்போதுள்ள வர்த்தக நாகரிகமானது, அதனுடைய ஏமாற்றுதல்கள் தில்லுமுல்லுகள் பகட்டுகள் ஆகியவற்றுடன் ஒழிந்துதான் ஆகவேண்டும். தனிப்பட்ட வர்கள் மூலம் சிந்தனையின் சக்தி வளர்ச்சி அடைவதே இப் போது உலகத்திற்குத் தேவை. "உனக்குள் இருக்கும் தாமரை மலருமாறு நீ ஏன் செய்யக்கூடாது? அப்போது வண்டுகள் தானுகவே அங்கு வந்துசேரும்" என்று என் னுடைய குரு கூறுவது வழக்கம். ஆண்டவன் பிரேமை யால் 'கிறுக்கடைந்திருப்பவர்கள்' உலகிற்குத் தேவை. உங்கள்மீது உங்களுக்கு நம்பிக்கைவேண்டும். அப்போது உலகின்மீது உங்களுக்கு நம்பிக்கை ஏற்படும். நம்பிக்கை யுள்ள ஆறு மனிதர்கள், ஆழ்ந்த பரிசுத்தமான ஒழுக்க முடைய ஆறு மனிதர்கள் செய்த காரியந்தான் இந்த உலக வரலாறும். மூன்று விஷயங்கள் நமக்குவேண்டும்: உணர்வதற்கான இதயம், சிந்தனைத் திறனுள்ள மூளை, வேலை செய்யக்கூடிய கைகள் ஆகிய மூன்றுமே நமக்கு வேண்டும். நாம் உலகத்தைவிட்டு வெளியே சென்று நம் மைத் தகுந்த பாத்திரங்களாக ஆக்கிக்கொள்வோம். முதலில் உங்களை ஜீவசக்தி நிறைந்தவர்களாகச் செய்து கொள்க. உலகின் இன்னல்களை உணர்க. எல்லா மனிதர் களும் உழைக்கத் தயாராய் இருக்கிறர்கள்; ஆனல் பிறர் கஷ்டத்தை உணரும் மனிதன் எங்கே? ஒரு இனேஷியஸ் லயோலாவை உற்பத்தி செய்த உணர்ச்சி எங்கே? உங் களுடைய அன்பையும் பணிவையும் சோதித்துப் பாருங்கள். பொருமையுள்ள மனிதன் அன்புள்ளவனுகவோ பணிவுள்ள வனுகவோ இருப்பதில்லை. பொருமை என்பது ஒரு பயங்கர மான, அருவருக்கத்தக்க பாவம். அது விந்தையான முறை யில் மனிதனிடம் புகுந்துவிடுகிறது. "என்னுடைய மனதில் ஏற்படும் பிரதிபலன் வெறுப்புணர்ச்சியுடன் கூடியதா, பொருமை சேர்ந்ததா?" என்று நீங்களே உங்களுக்குள் கேட்டுப்பாருங்கள். உலகில் சொரியப்படும் வெறுப்

புணர்ச்சியாலும் கோபத்தாலும் நல்ல காரியங்கள் கெட்டுப் போகின்றன. நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக இருந்தால், பலசாலியாக இருக்கிறீர்கள். உலகம் முழுவதற்குமே சமமானவராய் இருக்கிறீர்கள்.

சிந்தனை செய்க்கூடிய மூளை—நல்ல காரியங்கள் செய்வதற்கு வேண்டிய அடுத்த சாதனம்—இருக்கிறதே, அதை எண்ணிப்பார்த்தால், அது ஒரு வறட்சியான சகாராப் பாலைவனந்தான். **உணர்ச்சி** இருந்தாலன்றி அதனுல் தன்னந்தனியாக எதுவும் செய்யமுடியாது. ஒருபோதும் தவருத அன்பு உணர்ச்சி கொள்ளுங்கள், அப்புறம் மூளை தானுகச் சிந்தனை செய்ய ஆரம்பித்துவிடும். கைகள் தாமாகவே தர்ம காரியங்களைச் செய்யத் தொடங்கும். ரிஷிகள் இதே கனவாக இருந்து, கடவுளின் தோற்றத்தைக் கண்டிருக்கிருர்கள். ''இதயத்தில் பரிசுத்தமானவர்கள் கடவுளைக் காண்பார்கள்.'' பெரிய மகான்கள் எல்லோரும் கடவுளைத் தாங்கள் **கண்டிருப்பதாகக்** கூறுகிருர்கள். ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே இந்த தரிசனத்தைக் கண்டுவிட்டார்கள்; நமக்கு அப்பால் உள்ள ஒரே பொருளை அறிந்துவிட்டார்கள். ஆகவே இனிமேல் நாம் செய்யக்கூடியதெல்லாம் அவர்கள் வகுத்த வழி நிரப்புதலே.

*அன்னை வழிபாடு

இன்பமும் துன்பமும் நம் புலனுணர்வில் இணைந்த இரு அம்சங்கள்; ஒருபோதும் அகற்றமுடியாத இரு அம்சங்கள். எவை நமக்குத் துன்பம் தருகின்றனவோ, அவை நமக்கு இன்பமும் தரும். நம்முடைய உலகம் இந்த இரண்டும் கொண்டது. இவைகளை அகற்றல் முடியாது; நம்முடைய ஒவ்வொரு மூச்சிலும் இவை இருக்கின்றன. ஒன்றுக்கொன்று நேர் முரணுன இந்த் இரண்டிற்கும் ஒரு சமரச நிலைகாண உலகம் ஓயாது முயன்றுகொண்டிருக்கிறது. நேர் முரணுன இந்த இரண்டும் ஒன்ருகக் கலந்துள்ளதற்கு விளக்கம் காண ஞானிகள் முயன்று கொண்டிருக்கிருர்கள். கொழுந்துவிட்டு எரியும் தீப் போன்ற துயருக்கிடையே

* நியூயார்க்கில் சுவாமிஜி நடத்திய வகுப்பு ஒன்றிற்காகத் துண்டு துண்டாக அவர் எழுதியிருந்த குறிப்புகளை ஆதாரமாகக் கொண்டது.

அவ்வப்போது சிறிது இன்பம் கிடைக்கிறது; இருளை விலக்கி ஒளி அளிக்கும் இம் மின்வெட்டுகள் அந்த இருள் மேலும் செறியச் செய்கின்றன.

குழந்தைகள் பிறக்கும்போது எதிர்கால நம்பிக்கையுள்ளவைகளாகவே இருக்கின்றன. ஆனால் வாழ்நாளில் பாக்கி முழுவதும் ஒரே ஏமாற்றமாகவே இருக்கிறது; ஒரு லட்சியத்தைக் கூடப் பூரணமாக அவர்கள் அடைய முடிவதில்லை. ஒரு தாகத்தைக் கூடப் பூரணமாகத் தீர்க்க முடிவதில்லை. இப் புதிரைப் போக்கும் முயற்சியில் பின்னர் அவர்கள் ஈடுபடுகிறார்கள். இந்தப் பொறுப்பை மதம் ஏற்றுக் கொண்டிருக்கிறது.

பாரசீகர்களிடையே பரவியிருந்த துவைத அம்சமுள்ள மதங்களில் கடவுளும் சாத்தானும் இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது. யூதர்களின் மூலமாக இந்தக் கருத்து ஐரோப்பா, அமெரிக்கா முழுவதும் பரவியிருக்கிறது. ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு இதை அடிப்படையாக வைத்தே மற்ற கருத்துக்கள் எழுப்பப்பட்டன. ஆனால் இப்போது இது ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இல்லை என்பதை நாம் அறிவோம். பூரணமாக நல்லது எதுவுமில்லை. அதேபோல் பூரணமாகக் கெட்டது எதுவுமில்லை. ஒருவருக்கு நல்லதாக இருப்பது மற்றொருவருக்குக் கெட்டதாக இருக்கிறது. இன்று கெட்டதாக இருப்பது நாளை நல்லதாக இருக்கும். அதே போன்று இன்று நல்லதாக இருப்பது நாளை கெட்டதாகி விடும்.

முதலில், கடவுள் இனப்பிரிவின் கடவுளாகவேதான் கருதப்பட்டார். பிறகுதான் அவர் கடவுள்களுக்கெல்லாம் கடவுளானார். புராதன எகிப்தியர்கள், பாபிலோனியர்கள் ஆகியோர் கடவுளும் சாத்தானும் உண்டு என்ற இரட்டைக் கொள்கையை நடைமுறையில் காட்டினர். அவர்களுடைய மோலாக், கடவுள்களுக் கெல்லாம் கடவுளாக இருந்தார்; சிறைபிடிக்கப்பட்ட கடவுள்களெல்லாரும் அவரது ஆலயத்தில் அவருக்கு வழிபாடு செய்யுமாறு பணிக்கப்பட்டார்கள்.

ஆயினும் ஒரு புதிர் இருக்கிறது — உலகிலுள்ள தீமைகளுக்கெல்லாம் கண்காணிப்பாளர்யார்? எல்லாமே நல்லவை

தான். நாம்தான் அதைப் புரிந்துகொள்வதில்லை என்று பலர் நம்ப இடமில்லாமல் இருந்த போதும் நம்பிக்கொண்டிருக்கி ருர்கள். இது கடலில் மூழ்கிக் கொண்டிருக்கும் மனிதன் ஒரு வைக்கோலைப் பிடித்து மிதக்க எண்ணுவதற்கு ஒப்பாகும். மணலில் நமது தலையைமட்டும் புதைத்துக் கொண்டு நம்மை யாரும் கண்டு பிடிக்க முடியாது என்று நம்மையே ஏமாற்றிக் கொள்வதாகும். ஆயினும் நாமெல்லாரும் நீதி நெறியைக் கடைப்பிடிக்கிருேம். நீதி நெறியின் சாரமே தியாகம் செய் வதுதான். நான் பாடுபடுவது உங்களுக்காகவே; எனக்காக அன்று. ஆயினும் அது இப்பிரபஞ்சத்தின் மகத்தான கடவுள் கொள்கையுடன் எவ்வாறு முரண்படுகிறது! அவர் மிகவும் சுயநலமானவர்; நாம் அறிந்த எல்லாரையும்விட மிகக் கொடுமையாக, பிளேக், பஞ்சம், யுத்தம் ஆகியவை களின் மூலம் பழிவாங்குபவர்!

நாமெல்லாரும் இவ்வாழ்க்கையின் அனுபவங்களைப் பெற வேண்டும். கசப்பான அனுபவங்களிலிருந்து நாம் தப்பி யோட முயலலாம்; ஆனால் இன்ருே நாளையோ அவை நம் மைப் பிடித்துக்கொண்டுவிடும். எல்லாவற்றையும் தைரிய மாக எதிர்நின்று சமாளிக்காதவனைக் கண்டு நான் இரங்கு கின்றேன்.

வேதங்களில் கூறப்பட்டுள்ள மனுதேவனையே பார சீகத்தில் அஹ்ரிமான் எனக் கூறுகிருர்கள். ஆகவே இக் கேள்விக்குப் புராணங்கள் கூறிய விளக்கம் மறைந்து விட் டது; ஆனால் கேள்விமட்டும் மிஞ்சிநிற்கிறது; பதில் இல்லை; பரிகாரம் இல்லை.

ஆனல் தேவி வணக்கம் செலுத்திய பழைய வேதப் பாடல்களில், மற்ருெரு கருத்து கூறப்பட்டுள்ளது: "நான் தான் ஒளி. சூரியனிலும் சந்திரனிலும் இருக்கும் ஒளி நானே. எல்லா உயிர்களுக்கும் ஜீவனுக இருப்பதும் நானே." அன்னை வழிபாடு எனப் பின்னல் வளர்ச்சியுற்ற தத்துவத் தின் மூலக்கருத்து இதுவே. அன்னை வழிபாட்டின் மூலம் தாய்க்கும் தகப்பனுக்கும் நாம் வேறுபாடு காட்டவில்லை. இதனல் குறிக்கப்படும் முதல் கருத்து சக்தியே. "எல்லா உயிர்களிலும் இருக்கும் சக்தி நானே."

குழந்தை, மிக ஊக்கம் கொண்ட ஒரு மனிதனே. இந்தக் குழந்தை, சக்தியுள்ள ஒரு மனிதன் ஆகும்வரை படிப்படியாக வளர்கிறன். நன்மைக்கும் தீமைக்கும் இடையே வேறுபாடு காணும் எண்ணம் முதலில் ஏற்படவில்லை; வளர்ச்சியடையவில்லை. விழிப்புணர்ச்சி வளர்ந்தபோது சக்தி பழம் கருத்து என்று கண்டு கொண்டது. முதலில் ஒவ்வொரு கட்டத்திலும் தடையும் போராட்டமும் இருக்கும் என்பதுதான் உலக நியதி. அதன் எதிர்ப்பே சக்தி. அகசக்தி, புறசக்தி ஆகிய இரண்டின் ஆக்கமே நாம். ஒவ்வோர் அணுவும் செயலாற்றுகிறது; மனதிலுள்ள ஒவ்வொரு சிந்தனைக்கும் எதிர்ப்பளிக்கிறது. நாம் பார்க்கும் ஒவ்வொன்றும், நாம் அறிந்த ஒவ்வொன்றும் இந்த இரண்டு சக்திகளினாலும் ஆனவையே.

கடவுளைப் பற்றிய தத்துவம் ஓரளவு புதியதாகும். வேதங்களில் கூறப்பட்டுள்ள வருணனும், இந்திரனும் பக்தர்களுக்குச் சிறந்த வரங்களை அளிக்கின்றனர். இது மனிதர்களிடம் உள்ளதைவிட அதிக மனிதத் தன்மை வாய்ந்த ஒரு சிந்தாந்தம்.

உலகில் காட்சிதரும் எல்லாப் பொருள்களுக்கும் பின்னே ஒரு சக்தி இருக்கிறது என்பது ஒரு புதுக் கோட்பாடு. எங்கும் சக்தி; சக்திதான். தீமையின் உருவில் இருப்பினும் சரி; உலக ரட்சகனாக இருப்பினும் சரி. இதுதான் புது சித்தாந்தம்; பழைய சித்தாந்தம் மனிதக் கடவுள் சித்தாந்தம். பிரபஞ்ச முழுவதும் ஊடுருவி நிற்கும் ஒரே சக்தி என்ற சித்தாந்தத்தின் தலைவாயில் இங்கு இருக்கிறது.

"தீமையை அழிக்க ருத்திரன் விரும்பும்போது அவரது அம்புகளை நான் ஏவுகிறேன்"

இதன்பின் நீண்ட காலம் செல்லுமுன்பே கீதை கூறுகிறது: "ஓ அர்ஜுனா நான்தான் ஸத்; நான்தான் அஸத்; நல்லவனும் நானே; கெட்டவனும் நானே; அடியார்களிடம் உள்ள சக்தியும் நானே; தீயவர்களிடம் உள்ள சக்தியும் நானே" ஆனால் விரைவில் உண்மை ஒட்டுப் போடப்படுகிறது. இந்தத் தத்துவம் தூங்கிவிடுகிறது. "நல்லது செய்வது பலன் அளிக்கும்வரை நல்லதில் உள்ள சக்தி நானே" என்று ஒட்டுப் போடப்பட்ட தத்துவம் கூறுகிறது.

பாரசீக நாட்டு மதத்தில் சாத்தானைப் பற்றிய தத்துவம் இருந்தது; ஆனால் இந்தியாவில் இல்லை. பின்னால் வந்த புத்தகங்கள் இந்தக் கருத்தைச் சேர்த்துக்கொண்டன. உலகில் தீமை இருக்கிறது. அதை நாம் மறுப்பதற்கில்லை. இந்தப் பிரபஞ்சம் உண்மை. அது உண்மையாயின், அது நன்மையும் தீமையும் கலந்ததாக இருக்கிறது என்பதும் உண்மை. யார் ஆட்சி செலுத்துகிறார்களோ அவர்கள் நன்மை தீமை இரண்டின் மீதும் ஆட்சிசெலுத்தவேண்டும். ஒரு சக்தி வாழச் செய்கிறது என்றால், அதே சக்தி நம்மைச் சாகுமாறும் செய்கிறது. உலகில் சிரிப்பைக் காட்டிலும் கண்ணீர்தான் அதிகம் இருக்கிறது. மலர்களைப் படைத்தவர் யார்? இமயத்தைப் படைத்தவர் எவர்? மிகவும் நல்லவரான ஒரு கடவுள்! என்னுடைய பாவங்களையும் பலவீனங்களையும் உண்டாக்கியவர் யார்?—கர்மா, சாத்தான் நான்தான். இப்படிப்பட்ட சிந்தனை இந்தப் பிரபஞ்சத்தை நொண்டி ஆக்குகிறது. அதைப் பின்பற்றி, இந்தப் பிரபஞ்சத்தைப் படைத்தவரான கடவுளும் நொண்டியாகிறார்!

நன்மையும் தீமையும் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத இரண்டு தனிப்பட்ட அம்சங்கள் என்ற எண்ணமானது, நம்மை இரக்கமில்லாத காட்டுமிராண்டிகள் ஆக்கிவிடுகிறது. தாசியைக் கண்டவுடன் நல்ல பெண் விலகி ஓடுகிறாள். ஏன்? சில விஷயங்களில், தாசி மேற்கண்ட நல்ல பெண்ணைவிட எண்ணற்ற மடங்கு உயர்ந்தவளாய் இருக்கக் கூடும். மேற்கண்ட கருத்து உலகில் நிரந்தரப் பொறுமையையும் ஏற்படுத்துகிறது. மனிதர்களுக்கிடையே, நல்ல மனிதர்களுக்கும் அவர்களைக்காட்டிலும் சற்றுக் குறைந்த நல்ல மனிதர்களுக்கும் அதாவது தீய மனிதர்கள் என்று கூறப்படுவோருக்கும் இடையே நிரந்தரமான வேலியை ஏற்படுத்திவிடுகிறது. இப்படிப்பட்ட காட்டுமிராண்டித்தனமான கருத்து தீயதாகும்; கொடியதைவிடக் கொடியதாகும். நன்மையும் தீமையும் தனித்தனி அம்சங்களல்ல. எது குறைந்த நன்மையோ அந்த நாம் தீமை என்கிறோம்.

சிலர் அடியார்; வேறு சிலர் பாவியர். நல்லவர் தீயவர் ஆகிய இருசாராருக்கும் சூரியன் பிரகாசிக்கிறான். சூரியன் ஏதாவது வேறுபாடு காண்கிறானா?

கடவுள் நமது பிதா என்ற பழைய கொள்கை, இன்பங்களின் மீது கடவுள் ஆட்சிசெலுத்துகிறார் என்ற இனிய எண்ணத்தின் மீது ஏற்பட்டதாகும். உண்மைகளை மறுக்க நாம் விரும்புகிறோம். தீமையென்பது இல்லை. அது ஒரு பூஜ்யம். "நான்" என்பது தீயது. "நான்" என்ற எண்ணம் அதற்குரிய அளவுக்குமேல் மிக அதிகமாக இருக்கிறது என்று எண்ண முயல்கிறோம். "நான்" என்பது பூஜ்யமா? ஒவ்வொரு நாளும் நான் இதை உணர முயல்கிறேன்; ஆனால் வெற்றி பெறுவதில்லை.

இந்த எண்ணங்கள் எல்லாம், தீமையைப் பறக்கவிடும் முயற்சிகளே. ஆனால் தீமைகளை நாம் தைரியமாக எதிர்த்துச் சமாளிக்கவேண்டும். எல்லாவற்றையும் எதிர்த்துச் சமாளியுங்கள். "சந்தோஷத்திலும் நல்லவற்றிலும் மட்டும் நான் கடவுளுக்கு அன்பு செலுத்துவேன்; துயரத்திலும் தீயவற்றிலும் செலுத்தமாட்டேன்" என்று யாருக்கும் நாம் ஒப்பந்தம் எழுதிக்கொடுத்திருக்கிறோமோ?

விளக்கின் ஒளியில் ஒருவன் கள்ளக் கையெழுத்திடுகிறான்; மற்றொருவன் பஞ்சநிவாரணத்திற்காக ஆயிரம் டாலர் 'செக்' எழுதிக்கொடுக்கிறான். மேற்கண்ட இருவர் மீதும் அந்த விளக்கின் ஒளி வீசத்தான் செய்கிறது; அது வேறுபாடு காட்டுவதில்லை. விளக்கிற்கு நன்மை தீமை தெரியாது; நல்லது அல்லது தீயது ஆக்கிக்கொள்பவர் நீங்களும் நானுமே.

இந்தத் தத்துவத்துக்கு ஒரு புதுப்பெயரிட்டு அழைக்க வேண்டும். அது தாய் என்று அழைக்கப்படுகிறது. நீண்ட காலத்திற்கு முன்பு பெண் எழுத்தாளர் ஒருவரைத் தேவியாகவைத்து வணங்கியதன்மூலம் இது தொடங்கியது. இதன் பின்னர் சாங்கியர் வந்தார்; எல்லாச் சக்தியுமே பெண்மைதான் என்று அவர் கூறினார். காந்தம் நகராமல் இருந்த இடத்திலேயேதான் இருக்கிறது; இரும்புத்தூள்கள்தான் அதை நோக்கி நகர்ந்து செல்கின்றன.

இந்தியாவில் எல்லாப் பெண்களையும்விடத் தாய் உயர்ந்தவளாகக் கருதப்படுகிறாள்; மனைவியைக் காட்டிலும்

உயர்ந்தவளாகக் கருதப்படுகிருள். மனேவியும் குழந்தைகளும் ஒரு மனிதனைக் கைவிட்டுவிடலாம்; ஆனுல் அவனுடைய தாய் ஒருபோதும் கைவிடமாட்டாள். தாய் எல்லாரிடமும் ஒரேமாதிரியாக இருக்கிருள். அல்லது, தனது குழந்தையைச் சற்று அதிகமாக நேசிக்கிருள். வியாபார அடிப்படையில் இல்லாத, ஒருபோதும் மயங்கி மடிந்து போகாத தூய அன்பின் சின்னமாகத் தாய் விளங்குகிருள். இப்படிப்பட்ட அன்பு யாருக்கு இருக்கமுடியும்?—தாய்க்குத்தான்! மகனுக்கோ, மகளுக்கோ, மனேவிக்கோ அன்று.

"எல்லா இடங்களிலும் வியாபித்திருக்கும் சக்தி நானே" என்று தாய் கூறுகிருள். இந்தப் பிரபஞ்சத்தைப் படைத்துக்கொண்டிருக்கும் தாய், மறுநாளே இந்தப் பிரபஞ்சத்திற்கு அழிவைக் கொண்டுவரும் தாய், அந்தத் தாயே மேற்கண்டவாறு கூறுகிருள். அழிவு என்பது ஆக்கவேலேயின் தொடக்கம் என்பதைக் கூறவேண்டியதில்லே. ஒரு குன்றின் உச்சி என்பது ஒரு பள்ளத்தாக்கின் ஆரம்பமாகும்.

தைரியமாக இருங்கள். உண்மைகளே மறுக்காமல் எதிர் நில்லுங்கள். தீயனவால் விரட்டப்பட்டுப் பிரபஞ்சம் முழுவதும் ஓடாதீர்கள். தீயவை தீயவைதான். ஏன் அஞ்சவேண்டும்?

எல்லாம் தாயின் விளேயாட்டே; ஆழ்ந்து கவலேப்பட வேண்டியது எதுவுமில்லே. எல்லாம்வல்ல சக்தியை எது தூண்டியிருக்க முடியும்? இப்பிரபஞ்சத்தை அன்னே சிருஷ்டி செய்யுமாறு எது செய்திருக்க முடியும்? அவளுக்காக லட்சியம் என்பது இருந்திருக்க முடியாது. ஏன்? ஏனெனில், இன்னும் லட்சியம் கிட்டவில்லே. இந்தப் படைப்பு எதற்காக? எல்லாம் வேடிக்கை. நாம் இதை மறந்துவிட்டு, ஒருவருடனெருவர் சண்டையிட்டுக் கொண்டு துன்பத்தை வரவழைத்துக்கொள்கிறோம். நாமெல்லாம் தாயின் விளேயாட்டுப் பொம்மைகள்.

குழந்தையை வளர்ப்பதில் தான் படும் சித்திரவதையைத் தாய் எவ்வாறு பொறுமையுடன் சகித்துக்கொள்கிருள் என்பதைப் பாருங்கள். அவள் அதில் இன்பம் காண்கிருளா? ஆம், நிச்சயமாக இன்பம் காண்கிருள். சாப்பிடாமல் இருப்பதில், பிரார்த்தனே செய்வதில், காவல் காத்துக்

கொண்டிருப்பதில் அவள் இன்பம் காண்கிறாள். மற்ற எதையும்விட இதை விரும்பிச் செய்கிறாள். ஏன்? இதில் சுயநலம் இல்லை.

இன்பம் வரும் — நல்லது, யார் அதைத் தடுக்கிறார்? துன்பம் வருமே, அதையும் வரவேற்க. ஒரு மாட்டின் கொம்பில் ஒரு கொசு உட்கார்ந்துகொண்டிருந்தது. சிறிது நேரம் கழித்துக், கொசுவின் மனச்சாட்சி அதை உறுத்தியது. அது காளையைப் பார்த்துக் கூறியது, "காளையாரே! நான் நீண்ட நேரமாக இங்கு உட்கார்ந்திருக்கிறேன். ஒருவேளை உங்களுக்கு அது தொந்தரவாக இருக்கலாம். அதற்காக வருந்துகிறேன்." காளை பதில் அளித்தது: "இல்லை, இல்லை. சிறிதும் தொந்தரவு இல்லை. உன்னுடைய குடும்பம் முழுவதையுமே கூட்டிக் கொண்டுவந்து என்னுடைய கொம்பில் வசிக்கலாம்; நீ எனக்கு என்ன செய்துவிட முடியும்?"

துன்பத்தின் விஷயத்திலும் நாம் ஏன் இதைக் கூற முடியாது? தாயிடம் நம்பிக்கை இருந்தால் தானே தைரியம் வந்துவிடும்.

"நான்தான் உயிர்; நான்தான் மரணம்." அவளுடைய நிழல்தான் சாவும் பிறப்பும். இன்பத்துக்கெல்லாம் இன்பம் அவளே. துன்பத்திலெல்லாம் துன்பமும் அவளே. ஓர் உயிர் பிறந்தால் அதுவும் அவளே; சாவு வந்தால் அதுவும் அவளே. சுவர்க்கம் கிடைத்தாலும் அவள்தான்; நரகம் கிடைத்தாலும் அவள்தான்; ஆகவே தைரியமாகக் குதியுங்கள். நமக்கு இதைக் காணக்கூடிய நம்பிக்கையுமில்லை; பொறுமையும் இல்லை. தெருவில் போகும் மனிதனை நாம் நம்புகிறோம். உலகத்திலேயே நாம் நம்பாத ஒருவர் இருக்கிறார் என்றால் அவர்தான் கடவுள். நமக்கு அனுகூலமான காரியங்களைச் செய்யும்போது, நாம் அவரை நம்புகிறோம். ஆனால் அடிமேல் அடி வாங்கியபின் சுயதேவைப் பூர்த்தி அடைந்த மனம் சாகவேண்டிய ஒருநாள் வரும். நாம் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் அகங்காரம் என்ற பாம்பு படமெடுத்து ஆடுகிறது. பாதையில் பல முட்கள் இருப்பதற்காக நாம் மகிழ்வுறவேண்டும். அவை இந்த நல்ல பாம்பின் படத்தில் குத்துகின்றன.

கடைசியில் சரணுகதி வருகின்றது. அப்போது எல்லாவற்றையும் நாம் தாயிடம் அர்ப்பணம் செய்துவிடுகிறேம். துன்பம் வந்தாலும் வரவேற்புத்தான்; இன்பம் வந்தாலும் வரவேற்புத்தான். இந்த நிலையில் நமக்கு அன்பு ஏற்பட்டால், கூனல் குறுகலாக இருப்பவை எல்லாம் நிமிர்ந்து நேராகிவிடும். பிராமணர்களானுலும் சரி, நாய்களானுலும் சரி. நம்முடைய கண்ணேட்டம் ஒன்ருகவே இருக்கும். இந்தப் பிரபஞ்சத்திலுள்ள அனைவரையும், ஒரே மாதிரியாக நேசியாதவரை, அவர்கள்மீது பாரபட்சமற்ற குறையாத அன்பு செலுத்தாதவரை நாம் மீண்டும் மீண்டும் குறையுள்ளவர்கள் ஆவோம். ஆனுல் அவ்வித அன்பு செலுத்திஞலோ, பலவாகத் தோன்றும் வேற்றுமைகள் எல்லாம் மறைந்துவிடும். எல்லாவற்றிலுமே எல்லையற்ற, நிரந்தரமான ஒரே தாயைக் காண்போம்.

நாரதர் பக்தி சூத்திரங்கள்

(அமெரிக்காவில் சுவாமிஜி மொழிபெயர்த்துக் கூறியவை)

அத்தியாயம் 1.

1. கடவுள்மீது கொண்டுள்ள தீவிர பிரேமையே பக்தி.

2. அன்பில் கடைந்தெடுத்த அமுதம் பக்தி.

3. எதைப் பெற்ருல் மனிதன் பூரணனுகவும், சிரஞ்சீவித்துவ முள்ளவனுகவும், என்றும் திருப்தியுள்ளவனுகவும் ஆவானே, அதுதான் பக்தி.

4. எதை அடைந்தால், அதற்குமேல் மனிதனுக்கு ஆசைகள் ஏற்படாவோ, எதைக் கண்டும் பொருமைப்படாத நிலையை மனிதன் அடைவானே, எதை அடைந்தால் மனிதன் வீண்கர்வம் கொள்ளமாட்டானே, அதுதான் பக்தி.

5. எதை அறிந்தால் மனிதன் ஆன்மிகத்தில் நிறைவு பெறுகிருனே, எதை அறிந்தால் மனிதன் அமைதி பெற்று ஆண்டவனிடம் மட்டுமே இன்பம் காண்கிருனே அதுவே பக்தி.

6. பக்தியே எல்லா ஆசைகளுக்கும் முட்டுக்கட்டை யாதலால் எந்த ஆசையையும் நிறைவேற்ற அதைப் பயன் படுத்த முடியாது.

7. சாதாரணமாக மக்கள் கடைப்பிடிக்கும் வழிபாட்டு முறைகளையும் சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ள வழிபாட்டு முறைகளையும் விட்டுவிடுவதே சந்நியாசம்.

8. எவர்தம் ஆன்மா பூரணமாக ஆண்டவனிடம் லயிக்கிறதோ அவரே பக்தி சந்நியாசி. ஆண்டவன்மீது அன்பு செலுத்துவதற்கு இடையூருக இருப்பவைகளை யெல் லாம் அவர் ஒழித்துவிடுவார்.

9. வேறு புகலிடங்களை விட்டு ஆண்டவனையே அவன் புகலிடமாகக் கொள்கிருன்.

10. ஒருவனது வாழ்க்கை ஸ்திர நிலை அடையும் வரை சாஸ்திரங்களைப் பின்பற்ற வேண்டும்.

11. இல்லையேல் சுதந்திரம் என்ற பெயரில் தீயவற் றைச் செய்யும் அபாயம் இருக்கிறது.

12. பிரேமையானது ஒரு நிலையான கட்டத்தை அடைந்த பின்பு சமூக மரபுகள்கூட—உயிரைப் பாதுகாப்ப தற்கு அத்தியாவசியமானவை தவிர — கைவிடப்படு கின்றன.

13. பிரேமைக்குப் பல இலக்கணங்கள் கூறப்பட் டுள்ளன. ஆனல் அவைகளெல்லாம், பிரேமையின் ஆரம்ப அடையாளங்களே என்று நாரதர் நவில்கின்ருர். சிந்தனை, சொல், செயல் எல்லாவற்றையும் ஆண்டவனிடம் அர்ப்பணித்த பின்பு, கடவுளைச் சிறிது நேரம் மறப்பதுகூட ஒருவருக்கு ஆருத்துயர் தரும்போது, பிரேமை ஆரம்பமாகி விட்டது.

14. கோபிகளிடம் இருந்தது போன்ற பிரேமை வேண்டும்.

15. ஏனெனில் கிருஷ்ணனை அவர்கள் தங்களுடைய காதலனுகக் கொண்டார்கள். எனினும் அவனுடைய கடவுள் தன்மையை ஒருபோதும் மறக்கவில்லை.

16. இல்லையேல் அவர்கள் கற்பை இழந்த பாவத்திற்கு உள்ளாகியிருப்பார்கள்.

17. இதுதான் அன்பில் உயர்ந்தது; ஏனெனில், இதில் பிரதிபலன் வேண்டுமென்ற விருப்பம் இல்லை. மனித அன்பிலோ பிரதிபலன் வேண்டுமென்ற விருப்பம் இருக்கிறது.

அத்தியாயம் 2.

1. பக்தியானது, கர்மயோகம், ஞானயோகம், ராஜ யோகம் ஆகியவற்றைக் காட்டிலும் சிறந்தது. ஏனெனில், பக்தி எதிர்பார்க்கும் பலன் பக்தியே. பக்திதான் சாதனமும் லட்சியமும் ஆகும்.

2. உணவு இருப்பதைப் பார்ப்பதாலோ, அல்லது அது இருப்பதை அறிந்ததனுலோ, ஒருவனுடைய பசி தீராது. அதுபோலவே பிரேமைமட்டும் ஏற்படாவிடில், கடவுள் ஒருவர் இருக்கிருர் என்று அறிவதினுலோ, அல்லது புலனுணர்வினுலோ ஒருவன் திருப்தி அடைந்துவிட முடியாது. ஆகையால், பிரேமையே உயர்ந்தது.

அத்தியாயம் 3.

1. பக்தியைப் பற்றி இவைகளையெல்லாம் பெரிய மகான்கள் கூறியிருக்கிருர்கள்.

2. இந்தப் பக்தியை விரும்பும் ஒருவர் தம்முடைய புலன்களால் கிடைக்கும் இன்பங்களை, ஏன், மக்களின் சகவாசத்தைக்கூட துறந்துவிட வேண்டும்.

3. அல்லும் பகலும் பக்தன் பக்தி பற்றியே நினைக்க வேண்டும்; வேறு எந்த எண்ணமும் கூடாது.

4. எங்கே கடவுளைப் பற்றிப் பேசுகிருர்களோ, எங்கே பஜனை செய்கிருர்களோ, அங்கே அவன் செல்ல வேண்டும்.

5. முக்தியடைந்த ஒரு ஆன்மாவின் அனுக்கிரகமே நமக்குப் பக்தி தோன்றுவதன் முக்கிய காரணம்.

6. அப்படிப்பட்ட ஒரு பெரிய ஆன்மாவைக் காண்பது துர்லபம்; ஆனுல் சந்தித்து விட்டாலோ நம்முடைய ஆன்மா நிச்சயம் காப்பாற்றப்படும்.

7. கடவுளின் கிருபையால்தான் இப்படிப்பட்ட குருக்கள் நமக்குக் கிடைக்கிருர்கள்.

8. அவருக்கும் அவருடைய அடியார்களுக்கும் இடையே வேறுபாடு எதுவும் இல்லை.

9. ஆகையால் இவர்களை நாடிச் செல்.

10. கெட்டவர்கள் சகவாசத்தை எப்போதும் விலக்கி ஒதுக்க வேண்டும்.

11. ஏனெனில் அப்படிப்பட்ட சகவாசத்தால், காமமும், கோபமும், மாயையும் ஏற்படுகின்றன. இலட்சியத்தை நாம் மறந்து விடுகிரேும். வைராக்கியம் அழிகிறது. பொதுவாக எல்லாமே அழிந்து விடுகின்றன.

12. இந்தத் தொந்தரவுகள் எல்லாம், முதலில் சிறு அலைகள்போல் தோன்றுகின்றன. ஆனல் துஷ்டர்கள் சகவாசமானது அவைகளைக் கடல்போல் பெரிதாக்குகிறது.

13. பற்றை எவன் விட்டொழிக்கிருனே, மகான்களுக்கு எவன் சேவை செய்கிருனே, எவன் தனியாக வசிக்கிருனே, எவன் இந்த உலக பந்தங்களைத் துறந்து விடுகிருனே, எவன் இயற்கையின் குணும்சங்களுக்கு அப்பால் செல்கிருனே, எவன் தனது வாழ்வுக்குக் கடவுளை நம்பியிருக்கிருனே அவன் மாயையை வெல்வான்.

14. எவன் கர்மத்தின் பலன்களைத் துறக்கிருனே, எவன் எல்லாக் கர்மத்தையும், இன்பம், துன்பம் என்ற இரண்டையும் விட்டொழிக்கிருனே, எவன் சாஸ்திரங்களைக் கூட விட்டுவிடுகிருனே, அவனுக்கும் கடவுள்மீது இடையருத பக்தி ஏற்படுகிறது.

15. வாழ்க்கை என்னும் இந்த நதியைத் தாண்டுகிருன்; மற்றவர்களும் தாண்ட உதவுகிருன்.

அத்தியயாம் 4.

1. பிரேமையின் இயல்பை வார்த்தைகளால் விவரிக்க முடியாது.

2. தான் உண்ணும் பொருள்களின் ருசியை ஓர் ஊமையன் கூறமுடியாது. ஆனல் அவனுடைய செயல்களி

லிருந்து, அவனுடைய உணர்ச்சிகளைப் புரிந்து கொள்ள லாம். அதேபோல ஒரு மனிதன் தனது பிரேமையைச் சொற்களால் விவரிக்க முடியாது. ஆனால் அவனுடைய செயல்கள் அவன் உணர்ச்சிகளைக் காட்டிவிடும்.

3. சில அபூர்வமான மகான்கள் மட்டும், இந்த உணர்ச்சியைச் சொற்களால் விவரித்திருக்கிறார்கள்.

4. எல்லாக் குணங்களுக்கும் அப்பால், எல்லா ஆசைகளுக்கும் அப்பால், எப்போதும் குறைவற்று, வளர்ந்து கொண்டு போகும் உணர்வே பிரேமை.

5. ஒருவனுக்குப் பிரேமை ஏற்பட்டவுடன் அவன் எல்லா இடங்களிலும் பிரேமையைக் காண்கிறான்; கேட்கிறான்; எல்லா இடங்களிலும் பிரேமை பற்றியே பேசுகிறான்; அதைப்பற்றியே சிந்திக்கிறான்.

6. நம்முடைய குணங்கள், நிலைகளுக்கு ஏற்றபடி இந்தப் பிரேமையானது பல்வேறு விதங்களில் வெளிப்படுகிறது.

7. குணங்களாவன:— தாமசம் (மந்தம், புத்திக் குறைவு) இராஜஸம், (அமைதியற்ற தன்மை, செயலாற்றும் தன்மை) சத்வம் (தூய்மை, சாந்தம்) நிலைகளாவன: ஆர்த்தம் (சங்கடம் நீக்கவிரும்பும் நிலை) அர்த்தார்த்தி (பொருளொன்றை விரும்பும் நிலை) ஜிஞ்ஞாஸு (சத்தியத்தை நாடிச் செல்லும் நிலை) ஞானி (அறிந்தவன் நிலை.)

8. இவைகளில் முன்னால் கூறப்பட்டவற்றைக் காட்டிலும் பின்னால் கூறப்பட்டவை உயர்ந்தவை.

9. வழிபாடு முறைகளில் பக்திதான் எளிதானது.

10. பக்தி இருப்பதற்கு அத்தாட்சி அதுவே; அதற்கு மற்ற அத்தாட்சி தேவையில்லை.

11. அதனுடைய இயற்கையே அமைதிதான்; பரிபூரண சாந்திதான்.

12. பக்தி யாருக்கும் எதற்கும் தீங்கு விளைவிக்க ஒரு போதும் முயல்வதில்லை. சாதாரணமாகப் பொது மக்கள் பின்பற்றும் வழிபாட்டு முறைகளுக்கும் அது குறுக்கே நிற்பதில்லை.

13. காமத்தைப் பற்றியோ, கடவுள்மீது ஐயப்பாடு தெரிவித்தோ, அல்லது ஒருவருடைய எதிரிகளைப் பற்றியோ நடைபெறும் சம்பாஷணைகளைக் கேட்கக்கூடாது.

14. அகங்காரம் கர்வம் முதலியவற்றை விட்டுவிட வேண்டும்.

15. இந்த உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்றால், அவைகளைக் கடவுளிடம் சமர்ப்பியுங்கள். உங்களுடைய செயல்களை அவர் பொறுப்பில் விட்டுவிடுங்கள்.

16. காதல், காதலிப்பவர், காதலிக்கப்படுபவர் ஆகிய மூன்றையும் இணைத்து, ஆண்டவனுடைய நிரந்தர வேலையாளாக, மணமகளாக நம்மை எண்ணி வழிபட வேண்டும். ஆண்டவனிடம் இவ்வித பிரேமை கொள்ள வேண்டும்.

அத்தியாயம் 5.

1. கடவுள்மீது செலுத்தப்படும் பிரேமையே உயர்ந்தது.

2. இப்படிப்பட்ட பிரேமை உள்ளவர்கள் பேசும்போது, அவர்களுடைய தொண்டை கட்டுகிறது. அவர்கள் அழுவார்கள்; கதறுவார்கள். புனிதத் தலங்களுக்குப் புனிதத்தன்மை அளிப்பவர்கள் அவர்களே. அவர்களிடம் கடவுள் தன்மை ஊடுருவி நிற்பதால், நல்ல காரியங்களை மேலும் நல்ல காரியங்களாகவும், நல்ல நூல்களை மேலும் நல்ல நூல்களாகவும் செய்கிறார்கள்.

3. ஒரு மனிதன் கடவுள்மீது பிரேமைகொள்ளும் போது, அவனது மூதாதையர்கள் மகிழ்கிறார்கள். தேவர்கள் ஆனந்த நர்த்தனமிடுகிறார்கள். பூவுலகத்திற்கு ஒரு மகான் கிடைக்கிறார்.

4. இப்படிப்பட்ட பக்தர்களுக்கு, உயர்சாதி–கீழ்சாதி, ஆண்-பெண், அறிவுள்ளவர்-அறிவில்லாதவர், அழகானவர்–அழகில்லாதவர், உயர்பிறப்பு-கீழ்பிறப்பு, தனவந்தர்–ஏழை என்ற வேறுபாடுகள் இல்லை.

5. ஏனெனில், இவர்கள் எல்லாரும் கடவுளால் படைக்கப்பட்டவர்களே.

6. வாக்குவாதங்களைத் தவிர்க்கவேண்டும்.

7. ஏனெனில், அவைகளுக்கு முடிவே இல்லை. அவை நம்மை நல்ல முடிவுக்கு இட்டுச் செல்வதில்லை.

8. பக்தியைப் பற்றிக் கூறும் புத்தகங்களைப் படியுங்கள்; பக்தியை வளர்க்கக்கூடிய செயல்களைச் செய்யுங்கள்.

9. இன்ப துன்பம், லாப நஷ்டம் பற்றிய ஆசைகளை எல்லாம் விட்டுவிடுங்கள். கடவுளை இரவும் பகலுமாக வழி படுங்கள். ஒரு க்ஷணத்தைக்கூட வீணைகச் செலவிடக் கூடாது.

10. அஹிம்சை, சத்தியம், பரிசுத்தம், இரக்கம், கடவுள் தன்மை ஆகியவைகளை எப்போதும் கடைப்பிடிக்க வேண்டும்.

11. மற்ற சிந்தனைகளை எல்லாம் விட்டுவிட்டு, மனம் பூரணமாக, இரவும் பகலும் ஆண்டவனையே வழிபட வேண்டும். இவ்வாறு இரவும் பகலும் ஆராதனை செய்யப் படும் கடவுள் பக்தர்களுக்குத் தன்னை வெளிப்படுத்துவார்; தன்னைப் பக்தர்கள் உணருமாறு செய்வார்.

12. முக்காலத்திலும் அன்பே பெரியது! ஆகையால், புராதன ஞானிகளைப் பின்பற்றி, உலகத்தவரின் ஏளனத் திற்கு அஞ்சாமல், அன்பின் தத்துவத்தைப் போதிக்க நாங்கள் தைரியமாக முன்வந்துள்ளோம்.

கலை

முக்கிய தத்துவம் எதுவோ அதன்மீது கருத்தும் கவனமும் பற்றச்செய்தலே கலைக்குச் சிறப்பு. கலைகள் யாவற்றினும் மிகக் கடினமானது நாடகம். நாடகம் கவரவேண்டிய அம்சங்கள் இரண்டு. ஒன்று செவி. மற்றொன்று கண். ஒரு காட்சியில் ஒரே ஓர் அம்சத்தை மாத்திரம் வடித்துக் காட்டுவது சுலபம். பல அம்சங்களை வடித்துக்காட்டி அதே சமயத்தில் முக்கிய தத்துவத்தின்மீது கருத்தையும் பதிய வைப்பது என்பது ரொம்பவும் சிரமமான காரியம். இன்னொரு சிரமமான காரியம் எது எனில் மேடை அமைப்பு; நிர்வாகம். முக்கிய தத்துவம் மனத்தினின்று நீங்காவண்ணம்—முக்கிய தத்துவத்தினின்றும் கருத்துப் பிறழாவண்ணம்—பல்வேறு விஷயங்களை ஒருங்குகாட்டி மேடைமீது கொண்டுவந்து நிறுத்துதல்.

இசை

துருபதம், கியால் போன்றவற்றில் சாஸ்திரீய சங்கீதம் காணலாம். ஆனால் உண்மையான சங்கீதத்தைக் கீர்த்தனைகளில்தான் காணல்கூடும். மாதுர விவஹார கீர்த்தனங்கள்; கவனங்கள். ஏன் எனில் அவற்றில் உணர்ச்சியிருக்கிறது. உணர்ச்சியே ஜீவன்; எல்லாவற்றிற்கும் அடிப்படையான ரகசியம். சாதாரண ஜனங்களின் பாடல்களிலே இனிய கீதம் மிகுந்திருத்தல் காணலாம். அவற்றையெல்லாம் சேகரித்தல் வேண்டும். துருபதம் முதலியவற்றின் சாஸ்திரீய நுணுக்கங்களை எல்லாம் கீர்த்தனைகளில் அமைத்தால் இசை நிறைவுபெறும்.

மந்திரமும் மந்திர சைதன்யமும்

குரு சிஷ்ய பரம்பரையாக வழங்கப்பட்டு வரும் சொற்கள் சில. அவற்றை ஜபம் செய்வதால் ஒருவித சித்தி பெறலாம். இது மந்திர சாஸ்திரிகளின் நம்பிக்கை. மந்திர சைதன்யம் எனும் சொல் இருவகையில் பொருள்கொள்ளப் படுகிறது. குறிப்பிட்டதொரு மந்திரத்தை ஜபித்தால் அதன் அதிதேவதையான உங்கள் இஷ்ட தேவதையை

நீங்கள் காண்பீர்கள் என்பது சிலர் கூறும் பொருள். மற்றும் சிலர் கூறும் பொருள் வருமாறு: தகுதியற்ற ஒரு குருவிட மிருந்து மந்திரோபதேசம் பெற்று அதனை ஜபிக்க விரும்பினால் அதற்குச் சில பரிகாரங்கள் செய்யவேண்டும். அவ்வாறு செய்து அந்த மந்திரத்தைச் சேதனமாக்கவேண்டும். அதாவது உயிர்பெறச் செய்தல்வேண்டும். அதன் பிறகே அதனை ஜபித்தால் பலன்தரும். இவ்வாறு ஜீவன் பெறும் வெவ்வேறு மந்திரங்கள் வேறு வேறு குறி காட்டும். எனினும் எல்லாவற்றிற்கும் பொதுவான குறி ஒன்றுண்டு. அது யாதெனில் சிரமம் ஏதுமின்றி நீண்ட காலம் ஜபம் செய்ய இயலும்; சீக்கிரத்தில் மனம் ஒருமுகமாகும். இது தாந்த்ரீக மந்திரம் பற்றியது.

வேதகாலந்தொட்டு மந்திரங்கள் பற்றிய இருவகைக் கருத்துகள் நிலவிவருகின்றன. யாஸ்தரும் பிறரும் வேதங்கள் பொருள் உள்ளவை என்பர். ஆனால் புராதன மந்திர சாஸ்திரிகளோ வேதமந்திரங்கள் பொருள் அற்றவை என்பர். யாக காலத்தில் பாராயணம் செய்வதற்கே தக்கவை; அப்போது உலக சுகாநுபவங்கள் பலவற்றைத் தர வல்லவை; ஆன்மிக அறிவு அளிக்கவல்லவை என்பர் பின்னையது உபநிஷதங்களைச் சொல்வதால் ஏற்படுவது.

இறைபற்றிய கருத்து

இயற்கை நியதிகளுக்கு அப்பாற்பட்டதும் சுதந்திரமுள்ளதுமான ஒன்றைக் காணவே மனித உள்ளம் வேட்கை கொண்டுள்ளது. வேதாந்திகள் அத்தகைய நிலைபேறுள இறையொன்றுளது என்ற நம்பிக்கைஉடையவர்கள்; சாங்கியரும் பௌத்தருமோ ஜன்யேசுவர நம்பிக்கையுடையவர். அதாவது, மனிதனுக இருந்து ஆன்மிக சாதனையால் உயர்ந்து இறைமைபெற்ற கடவுளை நம்புகிறவர். அவதாரம் எனும் தத்துவத்தின் மூலம் புராணங்கள் இவ்விரு கருத்துக்களிடையேயும் சமரசம் காண்கின்றன. அதாவது ஜன்யேசுவரன் நித்ய ஈசுவரனே. மாயை காரணமாகவே ஜன்யேசுவர உருவில் காட்சி தருகிறுன் என்று கூறுகின்றன. சாங்கிய வாதம் நிலைபேறுள இறை நம்பிக்கையை எதிர்ப்பது. "விடுதலைபெற்ற ஆன்மா இந்தப் பிரபஞ்சத்தைப் படைத்தல்

எவ்வாறு?" என்று இவர்கள் வாதிக்கிருர்கள். இவ்வாதம் பொய் அடிப்படையில் எழும் ஒன்று. எங்ஙனம் எனில், விடுதலைபெற்ற ஆன்மாவை ஏவுதல் இயலாது. அவர் விடுதலை பெற்றவர்; சுதந்திரமாயுள்ளவர்; விரும்பும் வண்ணம் செய்பவர். ஜன்யேசுவரர் படைத்தற்கியலாதவர்; பாதுகாத்தற்கியலாதவர்; அழித்தற்கும் இயலாதவர். இவ்வாறு வேதாந்தம் கூறுகிறது.

உணவு

மனிதராக வாழுமாறு மற்றையோருக்கு உபதேசம் செய்கிறீர்; ஆனுல் நல்லுணவு அளிக்க இயலாதவராயிருக்கிறீர். சென்ற நான்கு ஆண்டுகளாக நான் இதுபற்றிச் சிந்தித்து வருகிறேன். கோதுமை அவல் போன்ற ஏதாவது ஒன்று செய்யலாமா என்று சோதிக்க விரும்புகிறேன். அது முடியுமானுல் தினந்தோறும் வேறுவேறு வகையான உணவு பெறலாம். குடி தண்ணீர் சம்பந்தமாக நம் நாட்டுக்கேற்றதொரு நீர்வடிகட்டியைத் தேடினேன். சட்டிபோல் அகன்றதொரு பீங்கான் பாத்திரத்தைக் கண்டுபிடித்தேன். அதன் வழியே நீரை வடிகட்டினுல் கிருமிகள் யாவும் அதில் தங்கும். ஆனுல் நாளடைவில் அந்தப் பீங்கான் பாத்திரம் கிருமிகளின் உறைவிடமாகிவிடுமே. வடிகட்டிகளால் விளையும் ஆபத்து இதுவே. தொடர்ந்து தேடினேன். நீரைச் சுத்தமாக வடிகட்டிப் பின் பிராணவாயு புகுத்தும் முறையொன்று கண்டேன். நீர் சுத்தமாயிற்று. இந்த நீரை உபயோகித்தால் உடல் நலம் பெருகுதல் உறுதி.

துறவும் இல்வாழ்வும்

துறவி, இல்வாழ்வோன், ஆகிய இவ்விருவர்தம் கடமைகள் பற்றிப் பேசியபோது சுவாமியவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டார்கள் :—

துறவி, தான் உயர்நிலை அடையும்வரை அதாவது பரமஹம்ஸநிலை பெறும்வரை, இல்வாழ்வோன் உபயோகித்த உணவையோ படுக்கையையோ பிறவற்றையோ தவிர்ப்பது நன்று. வெறுப்பினுல் அன்று; தன்னைப் பாதுகாத்தற்கு. 'நமோ நாராயணுய' என்று கூறி இல்வாழ்பவன் துறவிக்கு

வணக்கம் செலுத்தவேண்டும். துறவியும் இல்வாழ்வோனை ஆசீர்வதிக்கவேண்டும்.

मेरुसर्षपयोर्यद्वत् सूर्यखद्योतयोरिव ।

सरित्सागरयोर्यद्वत् तथा भिक्षुगृहस्थयोः ॥

"துறவிக்கும் இல்வாழ்வோனுக்கும் இடையே உள்ள வேற்றுமை, பெருங்குன்றுக்கும் சிறு கடுகுக்கும் உள்ள வேற்றுமை போன்றது; சூரியனுக்கும் மின்மினிக்கும் இடையே உள்ள வேற்றுமை போன்றது; கடலுக்கும் கால் வாய்க்கும் உள்ள வேற்றுமை போன்றது."

ஒவ்வொருவரும் இந்த சுலோகத்தைச் சொல்லுமாறு செய்தார் சுவாமி. வேதாந்த சுலோகங்கள் சிலவற்றைத் தாமே கூறினர். "இந்த சுலோகங்களை நீங்கள் ஒவ்வொரு வரும் மீண்டும் மீண்டும் சொல்லிக்கொண்டே இருக்க வேண்டும். சிரவணம் என்பது குருமூலம் கேட்டல் மட்டு மன்று. தமக்குள் மீண்டும் மீண்டும் சொல்வதுமாகும்."

आवृत्तिरसकृदुपदेशात्—

"வேதசூத்திரங்கள் மீண்டும் மீண்டும் பாராயணம் செய்யப்படவேண்டியவை. இவ்வாறு செய்யவேண்டுமென் பது வலியுறுத்தப்பட்டுள்ளது." இதையே இந்த வேதாந்த சூத்திரத்தில் வியாசர் வலியுறுத்துகிறர்.

குருவின் தகுதி வினவல்

சம்பாஷணையொன்றின் இடையே சுவாமியவர்கள் எழுச்சியுடன் கூறியது வருமாறு:—

வியாபார முறையில் கணக்குப் போட்டுப் பார்க்கும் எண்ணம் ஒழி. ஏதாவது ஒரு பொருளின்மேல் உள்ள பற்றுதலைமட்டும் விட்டுவிட உன்னல் இயலுமானல் விடுதலை வழி புகுந்துவிட்டாய். பொது மகளிரைக் காணுதே. பாவியைப் பாராதே. சாதுவைக் காணுதே. பொது மக ளிரும் தெய்வ அன்னையே. இவ்வாறு சந்நியாசி சொல்வார்.

ஒருமுறை சொல்வார் ; இருமுறை சொல்வார். பிறகு 'ஒழுக்க மற்றவளே! தீயவளே' என்பார். அறியாமை ஒரு கணத்தில் மறையும். 'சிறிது சிறிதாக மறையும் என்று சொல்வது தவறு. தம் குரு லட்சியத்தினின்று நழுவியபோதிலும் குரு பக்திமிக்க சிஷ்யர்கள் இருக்கிறார்கள். ராஜபுதனத்திலே ஒரு சிஷ்யனைக் கண்டேன். அவனுடைய குரு மதம் மாறி விட்டார் ; கிறிஸ்தவ மதத்தைத் தழுவினார். எனினும் அவரது சிஷ்யன் தனது காணிக்கையை நிறுத்தவில்லை; அளித்துவந்தான். மேற்கு நாட்டு எண்ணத்தை விடு. ஒரு குருவைத் தேர்ந்தெடுத்தபின் அவரை ஒட்டியிரு. வேதாந்தத்தில் ஒழுக்கமில்லை என்று கூறுவோர் குழந்தைகளே. அவர்கள் கூறுவதும் ஒரு வகையில் சரிதான். வேதாந்தம் ஒழுக்கத்தினும் விழுமியது ; உயரியது ; அப்பாற்பட்டது. உயர்ந்தன பற்றியே பேசுங்கள். ஏனெனில் நீங்கள் சந்நியாசியாகிவிட்டீர்கள்.

வற்புறுத்தி ஏதாவது ஒன்றை பிரம்மமாகக் கருதுக. ராமகிருஷ்ணரைக் கடவுளாகக் கருதல் எளிது. ஆனால் அதிலே என்ன ஆபத்து என்றால் பிறரில் கடவுள் காணல் இயலாது. இறைவன் என்றுமுளன் ; எங்கும் உளன் ; உருவின் உருவினனாக அவனைக் கருதல் இறை நிந்தனையாகும். உருவ வழிபாட்டின் இரகசியம் யாதெனில் ஒன்றிலே உங்களது இறை நோக்கை வளர்க்க முயற்சி செய்கிறீர்கள் என்பதே.

ஸ்ரீ ராமகிருஷ்ணரும் அவர்தம் கருத்தும்

ஸ்ரீ ராமகிருஷ்ணர் தம்மை ஓர் அவதார புருஷராகவே கருதினார் ; எனக்கு அது விளங்கவில்லை. வேதாந்தக் கருத்தில் அவர் ஒரு பிராமணர் என்று நான் சொல்வது வழக்கம். அவர் மறைவதற்கு முன் மரணாவஸ்தையிலிருந்த போது நான் நினைத்தேன் "இப்போது இவர் தம்மை அவதார புருஷரென்று சொல்வாரா" என்று. "ராமனாகவும், கிருஷ்ணனாகவும் அவதரித்தவரே இப்போது ராமகிருஷ்ணராக அவதரித்துள்ளார். உன்னுடைய வேதாந்தக் கருத்தில் அன்று" என்றார் அவர். அவர் என்மீது அன்பு காண்டார் ; ஆழ்ந்த அன்பு. இதனால் பலருக்கு என்

மீது பொறுமை. ஒருவரைக் கண்டவுடனே அவர்தம் குணத்தை அறிந்துகொள்வார் அவர். தம் கருத்தை ஒரு போதும் மாற்றமாட்டார். ஒருவர்தம் குணங்களை நாம் ஆராய்ந்து அறிகிறோம். அவரோ புலன் அறிவுக்கு அப்பால் ஊடுருவி அறிய வல்லவர். எனவே நமது முடிவுகள் தவறும். சிலரை மட்டும் அவர் அந்தரங்கமாக அழைப்பார். யோக ரகசியங்களை உபதேசிப்பார். மற்றையோருக்கு உபகதை மூலம் உபதேசிப்பார். தமது பணியாற்றற் பொருட்டு அந்தரங்கத்தில் உபதேசம் செய்த அவ்விளைஞர்களை அவர் தயாரித்து வந்தார். இவர்களைப்பற்றி எவ்வளவோ பேர் அவரிடம் புகார் கூறினர். எனினும் அவற்றிற்குச் செவி சாய்த்தாரில்லை. அந்தரங்கமாகவன்றி பகிரங்கமாகவே இருந்திருந்தால் இன்னும் உயரிய மதிப்பு ஏற்படலாம். ஆனல் எனக்கென்னவோ அவரிடம் ஒரு குருட்டு பக்தி. “என்னை நேசிப்பவன் எனது நாயையும் நேசிப்பவனே” என்று சொல்லுகிறார்களே! அந்த மாதிரி அந்த பிராமண குருமீது நான் அன்புகொண்டுவிட்டேன்; ஆழ்ந்த அன்பு. அதனல் அவருக்கு அன்பான எல்லாம் எனக்கு அன்பானவையே. அவர் போற்றியவற்றை நானும் போற்றுகிறேன். என் இஷ்டப்படி விட்டுவிட்டால் நான் எங்கே ஒரு தனிக்கூட்டம் சேர்த்து விடுவேனே என்று பயந்தார்.

“இந்த வாழ்விலே உனக்கு ஆன்ம ஞானம் சித்தியாது” என்று சிலருக்குச் சொல்வார் அவர். இத்தகைய பகிரங்க பட்சபாதம் ஏன் என்ருல் அவர் எல்லாவற்றையும் உய்த்துணர்ந்திருந்தலே. ஒரு விஞ்ஞானியைப் போல ஒவ்வொருவரையும் அவரவருக்கு ஏற்றமுறையில் நடத்த அறிந்திருந்தார் அவர். அந்தரங்க வட்டத்தினர் தவிர வேறு எவரும் அவருடைய அறையில் உறங்க அனுமதிக்கப்படமாட்டார். அவரைக் காணுதவர் முக்தி பெறமாட்டார் என்பதும், மும்முறை கண்டவர் முக்தி பெறுவார் என்பதும் உண்மையல்ல.

உயர்ந்த சாதனைகளுக்குத் தகுதியற்ற பாமரர்களுக்கு நாரதர் பக்தி சூத்திரங்களை உபதேசித்து வந்தார்.

பெரிதும் துவைதத்தையே அவர் உபதேசித்தார். எவருக்கும் அத்வைத உபதேசம் செய்வதில்லை என்ற நியதி

யுடனிருந்தார். ஆனால் எனக்கு மட்டும் அத்வைதம் உபதேசித்தார். ஏனெனில் முன்னரே நான் துவைதியாயிருந்தேன்.

ஸ்ரீராமகிருஷ்ணர் தேசத்தின் லட்சிய புருஷர்

ஒரு நாடு விழித்தெழல் வேண்டுமாயின், முன்னேறுதல் வேண்டுமாயின் அதற்கொரு லட்சியம் வேண்டும். அந்த லட்சியம் எது? குறிகுணம் ஏதுமிலாத பரம்பொருளே. குறிகுணம் ஏது மில்லாத லட்சியத்தினால் எல்லாரும் உணர்வு பெறல் இயலாது. எனவே உருவ லட்சியம் ஒன்று தேவை. அத்தகைய லட்சிய உருவமே ஸ்ரீராமகிஷ்ணர். ஏனைய உருவம் ஏதும் நமது இன்றைய லட்சிய உருவாயிருத்தற்கியலாதே. ஏன் எனில் அந்தக் காலம் மலையேறி விட்டது. எல்லாரும் வேதாந்த வாழ்வு வாழ வேண்டுமானால் தற்போதைய தலைமுறையினருடன் அநுதாபமுள்ள ஒருவர் வேண்டும். ஸ்ரீராமகிருஷ்ணர் இதை நிறைவேற்றுகிறார். எனவே இவரையே எல்லாருக்கும் முன் வைத்தல் வேண்டும். அவர் ஒரு சாதுவா அல்லது அவதார புருஷரா என்பது பற்றிய கவலை வேண்டுவதில்லை.

மீண்டும் ஒரு முறை நம்மிடை வருவதாக அவர் கூறினார். அப்போது அவர் விதேக முக்தி பெறுவார் என்று நினைக்கிறேன். நீங்கள் செயல்புரிய விரும்பினால் இஷ்ட தேவதை யொன்று உங்களுக்கு வேண்டும். கார்டியன் ஏஞ்சல் என்று கிறிஸ்தவர்கள் சொல்லுகிறார்களே அதுபோல.

ஒவ்வொரு நாடும் ஒவ்வோர் இஷ்ட தேவதையைப் பற்றிக் கொள்கின்றது. இவை ஒவ்வொன்றும் மற்றவைகளை அடக்கித் தாமே மேலோங்கி நிற்க விரும்புகின்றன. இவ்வாறு நான் நினைக்கிறேன். இத்தகைய இஷ்ட தேவதை ஒரு நாட்டுக்கு நல்ல தொண்டு செய்ய இயலாததாகி விடும் என்றே கருதுகிறேன்.

சொற்பொழிவுக் குறிப்புகள்

மதத்தில் கூலிப்பட்டாளம்

[1893-ம் ஆண்டு நவம்பர் மாதம் 23-ந் தேதி மின்னு போலி நகரில் ஆற்றிய சொற்பொழிவு. 'மின்னுப்போலி ஜர்ன'லில் வெளிவந்தது.]

சென்ற கோடையில் சிகாகோ நகரில் நடைபெற்ற மதப் பேரவையில் முக்கியமாக விளங்கிய சுவாமி விவேகானந்தர் எனும் இந்திய பிராமண குருவின் வாயிலாக கீழ்த் திசை மதக்கருத்து பற்றி அறியும் ஆவலுடன் நேற்று காலை யூனிட்டேரியன் மாதா கோவிலில் ஏராளமான மக்கள் குழுமியிருந்தார்கள். பெரிபாடிக் கிளப்பினர் இப்பெரியாரை மின்னுபோலி நகருக்கு அழைத்து வந்தனர். சென்ற வெள்ளிக்கிழமை மாலை அவர் அங்கே சொற்பொழிவாற்றினார். நேற்றைய சொற்பொழிவுக்காக இந்த வாரம் வரை இங்கேயே இருக்குமாறு அவர் வேண்டப்பட்டார்.

மத போதகரான டாக்டர் எச். எம். சைமன், சமயம், நம்பிக்கை, அறம் என்பன பற்றிய பாலின் போதனைகளைப் படித்தார். 'இவற்றில் உயரியது அறம்' இதே மாதிரி போதிக்கும் ஹிந்து போதனைகள் சிலவற்றையும் படித்தார். முஸ்லிம் போதனைகளையும் படித்தார். ஹிந்து நூல்களிலிருந்தும் சில பகுதிகளைப் படித்தார். எல்லாம் பாலின் போதனைகளுக்கு அரண் செய்பவையே.

இரண்டாவது துதிப்பாடலுக்குப்பின் சுவாமி விவேகானந்தர் அறிமுகம் செய்து வைக்கப்பட்டார். மேடையின் முன் வந்து நின்று ஹிந்து கதை ஒன்றைக் கூறி, குழுமியிருந்தவர்களைக் கவர்ந்தார் அவர். தூய ஆங்கில மொழியில் அவர் கூறினர்:

"குருடர் ஐவர் பற்றியதொரு கதையை இப்போது நான் உங்களுக்குச் சொல்வேன். இந்தியாவிலே ஒரு கிராமத்தின் வழியே ஓர் ஊர்வலம் சென்று கொண்டிருந்தது. அதைக் காணும்பொருட்டு மக்கள் கூடினர். அலங்கரித்து

அழைத்து வரப்பெற்ற யானையைக் காணப் பெரிதும் விரும்பினர்; கண்டனர்; மகிழ்ந்தனர். குருடர் ஐவரும் காண முடியாது தவித்தனர். யானையைத் தடவிப் பார்த்தாவது மகிழ எண்ணினர். அவ்வாறே தடவிப் பார்க்க அவர்கள் அனுமதி பெற்றுர்கள். ஊர்வலம் சென்றது. மக்கள் திரும்பினுர்கள். குருடர்களும் வீடுதிரும்பினுர்கள். யானை பற்றிப் பேசினுர்கள்.

"சுவர் மாதிரி இருந்தது" என்முன் குருடரில் ஒருவன்.

"இல்லை; இல்லை. கயிறு மாதிரி இருந்தது" என்முன் இன்னெருகுருடன்.

"நீங்கள் சொல்வது தவறு. பாம்பு மாதிரி இருந்தது" என்முன் மூன்ருவது குருடன். வாக்கு வாதம் முற்றியது.

"தலைகாணி போலிருந்தது" என்முன் நான்காவது குருடன்.

வாய்ச் சண்டை முற்றியது. குருடர் ஐவரும் அடிபிடி சண்டையில் இறங்கினர். அந்நிலையில் அங்கே ஒருவன் வந்தான்; பார்வையுள்ளவன்; இரண்டு கண்களும் நல்ல நிலையில் உள்ளவன். "என்ன விஷயம்? ஏன் சண்டையிடுகிறீர்கள்?" என்று கேட்டான் அவன். குருடர் ஐவரும் தாம் யானை பார்த்த விஷயத்தைக் கூறினர். அப்போது வந்தவன் கூறினுன்:

"நீங்கள் ஒவ்வொருவரும் கூறுவது சரியே. ஆனல் நீங்கள் ஒவ்வொருவரும் தடவிப்பார்த்தது யானையின் ஒவ்வோர் உறுப்பே. சுவர் போன்றிருந்தது யானையின் உடல். கயிறுபோல் இருந்தது வால். பாம்பு போலிருந்தது துதிக்கை. தலைகாணிபோலிருந்தது பாதம். சண்டையிடுவதை நிறுத்துங்கள். நீங்கள் ஒவ்வொருவரும் சொல்வது சரி. யானையின் பல்வேறு பகுதிகளை நீங்கள் பார்த்தீர்கள்"

மதமும் இத்தகைய பூசலுக்குட்பட்டு விட்டது. மேற்கு நாட்டு மக்கள் தங்கள் மதமே தெய்வ மதம் என்று கருதினுர்கள். கிழக்கு நாட்டு மக்களும் இதே மாதிரி எண்ணினுர்கள்.

இருவரும் தவறே செய்தனர். ஒவ்வொரு மதமும் தெய்வ மதமே.

மேற்கு நாட்டுக் கருத்து பற்றிய கண்டனங்கள் பல. 'சந்தைக்கடை மதத்தினர்' என்று கிறிஸ்தவர்கள் குறை கூறப்பட்டார்கள். "கடவுளே எனக்கு இதைக் கொடுங்கள்; அதைக் கொடுங்கள். இதைச்செய்யுங்கள்; அதைச் செய்யுங்கள்" என்று எப்போதும் கடவுளிடம் பிச்சை கேட்டுக்கொண்டிருக்கிறுர்கள். ஹிந்துவுக்கு இது விளங்கவில்லை. கடவுளிடம் பிச்சை கேட்பது தவறு என்று அவன் நினைத்தான். கேட்கக்கூடாது. கொடுக்கவேண்டும். கடவுளுக்குக் கொடுக்க வேண்டும், மற்றையோருக்குக் கொடுக்க வேண்டும் என்று கருதினுன். மேற்கு நாட்டினர் பலர் தெய்வ சிந்தனை யுடையராயிருத்தல் கண்டான். எல்லாம் நலமாயுள்ளவரை இந்த தெய்வ சிந்தனை யிருக்கிறது. கொஞ்சம் நலக்கேடு வந்தால் தெய்வம் மறக்கப்படுகிறது. ஆனுல் ஹிந்து அப்படிச் செய்வதில்லை. கடவுளை அன்புருவாக அவன் காண்கிறுன். தாயாகவும், தந்தையாகவும் காண்கிறுன். தாயாகக் காண்பதில்தான் அன்பு நிறைவெய்துகிறது. மேற்கு நாட்டுக் கிறிஸ்தவர் ஒரு வாரம் முழுவதும் டாலருக்காக உழைப்பார். அது கிடைத்தவுடனே கடவுளைத் துதிப்பார். "கடவுளே இந்த நன்மைக்காக வந்தனம்; நன்றி" என்பார். பிறகு பணம் முழுவதையும் தமது சட்டைப் பையில் போட்டுக் கொள்வார். ஆனுல் ஓர் இந்துவோ பணத்தைச் சம்பாதிப்பான். ஏழைகளுக்கும் அதிருஷ்ட ஈனர்களுக்கும் உதவுவான். இவ்வாறு கடவுளுக்கே அப்பணத்தைக் கொடுப்பான்.

இவ்வாறு கூறி மேற்கு நாட்டுக் கருத்தையும் கிழக்கு நாட்டுக் கருத்தையும் ஒப்புநோக்கிக் காட்டினுர். கடவுள் பற்றிப் பேசியபோது அவர் குறிப்பிட்டார்:—

மேற்கு நாட்டவராகிய நீங்கள் நினைக்கிறீர்கள் உங்களிடம் தான் கடவுள் இருக்கிறுர் என்று. உங்களுக்குக் கடவுள் பக்தி இருந்தால் குற்றங்கள் இவ்வளவு மலிந்திருப்பது ஏன்? பத்தில் ஒன்பது பேர் ஆஷாட பூதிகளாக இருப்பது ஏன்? கடவுள் இருக்குமிடத்தில் உள்ளொன்று வைத்துப் புறமொன்று கூறும் ஆஷாடபூதிகள் இருக்கக்கூடாதே.

ஆஷாடபூதிகளுக்கு இடமில்லையே. ஆண்டவனை வழிபடும் பொருட்டுப் பெரிய பெரிய ஆலயங்களை எழுப்பியுள்ளீர். வாரம் ஒரு முறை அங்கு செல்கின்றீர். வாரம் ஒருமுறை ஆலயம் செல்வது மேற்கு நாட்டில் நாகரிகமாகி விட்டது. இந்த நாகரிகம் எனும் ஒரு காரணத்திற்காகவே உங்களில் பலர் ஆலயம் செல்கின்றீர். அவ்விதமிருக்க கடவுள் மீது பூரண பாத்தியதை கொண்டாட உங்களுக்கு என்ன உரிமையிருக்கிறது மேற்கு நாட்டினரே ?

இங்கே பலத்த கரகோஷம் செய்து ஆரவாரித்தனர். பிறகு சுவாமி மேலும் கூறினர் :—

ஹிந்து மதத்தினராகிய நாங்கள் கடவுளை வணங்குகிறோம். அவர் அருள்வதன் பொருட்டன்று ; அன்பின் பொருட்டு. அன்புக்காகவே; அவர் அன்புருவாயிருத்தலால். அன்பு வழிபாடில்லாத மதத்தில் கடவுள் இல்லை. அன்பு வழிபாடற்ற சமுதாயத்தில் கடவுள் இல்லை. அன்பு வழிபாடில்லா மக்களிடையே கடவுள் இல்லை. மேற்கு நாட்டவராகிய நீங்கள் வியாபார அனுஷ்டான முடையவர்கள் ; பெரும் பெரும் புதுமை அனுஷ்டான முடையவர்கள். ஆனல் கீழ்த்திசை நாட்டவராகிய நாங்களோ மத அனுஷ்டான முடையவர்கள். வியாபாரமே உங்கள் காரியம். மதமே எங்கள் காரியம்.

நீங்கள் இந்திய நாட்டுக்கு வந்து வயலில் வேலைசெய்யும் ஒருவனிடம் சென்று பேசினல் அரசியல் பற்றி அவன் ஏதும் அறியாதிருப்பதை அறிவீர்கள். ஆனல் மதம் பற்றி அவனிடம் பேசினல் மதத்திலுள்ள பல்வேறு முறைகள் பற்றியெல்லாம் அவன் அறிந்திருத்தல் காண்பீர்கள்.

"உங்கள் அரசாங்கம் எத்தகையது ?" என்று கேளுங்கள்.

"எனக்குத் தெரியாது. வரி கொடுக்கிறேன். அவ்வளவு தான் எனக்குத்தெரியும்" என்பான்.

உங்கள் நாட்டுத் தொழிலாளருடன் நான் பேசினேன் ; விவசாயிகளுடன் பேசினேன். அவர்கள் அரசியல் நன்கு அறிந்திருத்தல் கண்டேன். ஜனநாயகக் கட்சியிடமோ

அல்லது குடியரசுக் கட்சியிடமோ அனுதாபமுடையவரா யிருத்தல் கண்டேன். வெள்ளிக் கட்டுப்பாடு நீங்க வேண்டுமா? தங்க நிர்ணயம் வேண்டுமா என்பன போன்ற விஷயங்களை எல்லாம் நன்கு அறிந்திருத்தல் கண்டேன். ஆனால் மதம் பற்றி அவருடன் பேசினால் ஒன்றும் அறியாதிருத்தல் கண்டேன். மாதா கோவிலுக்குப் போகிறார்கள் காணிக்கை செலுத்துகிறார்கள். அவ்வளவுதான். கடவுளைப்பற்றி அவர்கள் அறிந்தது இவ்வளவே.

குருட்டு நம்பிக்கைகள் இந்தியாவில் உள்ளன என்பது ஒப்புக்கொள்ளக் கூடியதே. எந்த நாட்டவரிடம்தான் குருட்டு நம்பிக்கை இல்லை? ஒவ்வொரு சமுதாயமும் கடவுளைத் தம் ஏகபோக உரிமையாகக் கொண்டாடுகின்றன. கடவுள் எல்லாருக்கும் உண்டு. நல்லதுசெய்யும் உணர்ச்சி எதுவும் கடவுளே. மேற்கு நாட்டவராயினும் சரி. கிழக்கு நாட்டவராயினும் சரி. கடவுள் வேட்கை கொள்ள வேண்டும். தண்ணீரில் மூழ்கிய ஒருவன் மூச்சு விடுவதற்கு எப்படி வேட்கை கொள்வானோ, விருப்பம் கொள்வானோ, அஃதின்றி உயிர்வாழ முடியாதென்று நினைப்பானோ அத்தகைய வேட்கைவேண்டும்; விருப்பம்வேண்டும். அஃதின்றி உயிர்வாழ முடியாதென்ற நினைப்பு வேண்டும்.

இவ்விதம் கடவுள் வேட்கை எழும்போது நீங்கள் இந்தியாவில் வரவேற்கப்படுவீர்கள். ஏனெனில் அப்போது கிறிஸ்தவப் பாதிரிமார் கடவுளுடன் இந்தியாவுக்கு வருவர்; இந்தியா கடவுளை அறியாதது என்ற நம்பிக்கையுடன் வரமாட்டார்; வெறி நிறைந்த உள்ளத்துடன் அல்ல. அன்பு கனிந்த உள்ளத்துடன் வருவர்.

மனிதனின் விதி

[1894-ம் ஆண்டு ஜனவரி மாதம் 17ந் தேதி மெம்பிஸ் நகரில் ஆற்றிய சொற்பொழிவு. 'அப்பீல் - அவலங்கி'யில் வெளிவந்தது.]

கூட்டத்துக்கு வந்திருந்தவர் தொகை பெரிது என்றே கூறவேண்டும். இலக்கிய அறிஞர்கள், இசை வல்லுநர்கள்,

வழக்கறிஞர்கள், லேவாதேவிக்காரர்கள் இன்னோரன்ன பலரும் வந்திருந்தனர்.

சொற்பொழிவு நிகழ்த்தியவர் அமெரிக்க நாவலர்களினின்றும் பெரிதும் வேறுபட்டவர். கணிதப் பேராசிரியர் ஒருவர் தமது மாணவருக்கு பீஜ கணித பாடம் ஒன்றை எவ்வாறு விளக்கிச் சொல்வாரோ அவ்வாறு தமது கருத்தை விவரிக்கிறார். எதிர் வாதங்களை எல்லாம் வெற்றிகாணற் குரிய தன்னம்பிக்கையும் மகாசக்தியும் உடையவராகச் சொற்பொழிவாற்றுகிறார். தர்க்கரீதியில் முடிவு காணாத எதையும் அவர் சொல்வதில்லை. அவர் தம் சொற்பொழிவுகள் பெரும்பாலும் இங்கர்ஸாலின் தத்துவரீதியில் அமைந்துள்ளன. கிறிஸ்தவர்களைப் போன்ற கடவுள் நம்பிக்கையுடையவரல்லர். என்றோ ஒருநாள் தீர்ப்புக்கூறப்படுவதிலும் தண்டனை அளிக்கப்படுவதிலும் நம்பிக்கையுடையவரல்லர். மனம் அழிவில்லாதது என்பதை நம்புகிறவரல்லர். சுதந்திரமாயில்லாத எதுவும் அழியாதது அன்று என்பவர். அவர் சொல்கிறார் :

வெகு தூரத்திலே இந்தப் பிரபஞ்சத்தின் ஒரு மூலையில் அமர்ந்து மனிதகுமாரன் பூமியில் செய்கிற நல்ல காரியங்களுக்கு வெகுமதியும், தீய காரியங்களுக்குத் தண்டனையும் வழங்குகிற அரசன் அல்ல கடவுள். மனிதன் உண்மையை உணரும் காலம் வரும். 'நானே கடவுள். அவர் உயிருக்கு உயிரானவன் நானே' என்று கூறும் காலம் வரும்.

நமது உண்மை இயல்பே கடவுளாயிருக்கும் போது, நமது அழியாத தத்துவமே கடவுளாயிருக்கும்போது அவர் எங்கேயோ வெகு தொலைவிலிருப்பதாக ஏன் போதிக்கிறீர் ?

பாவம் பற்றிய உங்கள் மதபோதனை கண்டு மருளாதீர் ; மயங்காதீர். ஏனெனில் அதே மதம் தூய்மை பற்றியும் போதிக்கிறது. ஆதாம் வீழ்ச்சியுற்றபோது அவன் தூய்மை தவறினான். (கை தட்டல்) தூய்மையே நம் உண்மை இயல்பு. அதை மீண்டும் பெறுவதே மதத்தின் குறிக்கோள். மனிதர் எல்லாரும் தூயவரே ; மனிதர் எல்லாரும் நல்லவரே. இதற்கு மறுப்புகள் தோன்றலாம். சிலர் முரடராயிருப்பது ஏன் என்ற கேள்வி எழலாம்.

முரடன் என்று நீங்கள் எவனைக் கருதுகின்றீரோ அவன் குப்பையில் கிடக்கும் வைரம். அந்த வைரத்தின் மீது படர்ந்திருக்கும் அழுக்கைப் போக்குக. மாசற்ற வைரமாக ஒளிவிடுதல் காண்பீர். இதன் மீது மாசு படர்ந்திருந்ததா என்று தெரியாதபடி அவ்வளவு ஜ்வலிக்கும். ஆன்மா ஒரு வைரம் என்பதை நாம் ஒப்புக்கொள்ளத்தான்வேண்டும்.

நமது சகோதரனைப் பாவி என்றழைப்பதைவிட மட்டமானது எதுவுமிருக்க முடியாது. சிங்கம் ஒன்று ஆட்டு மந்தையில் புகுந்தது. ஆட்டுக்குட்டி ஒன்றைக் கொன்றது. ஆடுகள் ஓடின. அவற்றுடன் சிங்கக் குட்டி ஒன்றும் ஓடிற்று. இந்தச் சிங்கக் குட்டியைக் கண்டது ஓர் ஆடு. அதன் பின்னே சென்றது சிங்கக் குட்டி. ஆட்டின் பாலை உண்டு வளர்ந்தது. ஆடுகளைப் போலவே புல், தழை ஆகியவற்றை மேய்ந்தது. கிழச்சிங்கம் ஒன்று ஒரு நாள் இந்தச் சிங்கக்குட்டியைக் கண்டது. ஆட்டுக் கூட்டத்தினின்றும் அதைப் பிரிக்க முயன்றது. சிங்கக் குட்டியோ ஆடுகளுடன் ஓடிவிட்டது. குட்டிச் சிங்கம் மீண்டும் வரும் வரையில் கிழச்சிங்கம் காத்திருந்தது. அது வந்த உடனே, அதன் மீது பாய்ந்து கெட்டியாகப் பிடித்துக்கொண்டது. தெளிந்த நீரோடை ஒன்றன் அருகே கொண்டுசென்றது. "தண்ணீரில் உன் உருவத்தைப் பார். நீ ஆட்டுக்குட்டியன்று; சிங்கம்" என்றது. தண்ணீரில் தன் உருவம் கண்டது குட்டிச் சிங்கம். "நான் ஆட்டுக்குட்டியன்று; சிங்கக் குட்டி" என்றது. நாம் ஆடுகள் அல்ல. ஆடுகள் என்று நாம் நம்மை கருதல்வேண்டாம். நாம் சிங்கங்கள். ஆடுகள் போல் புல் தின்னுதீர்; கனைக்காதீர்.

சென்ற நான்கு மாதங்களாக நான் அமெரிக்காவில் இருக்கிறேன். மசா செட்டில் சீர்திருத்தச் சிறையொன்றுக்குச் சென்றேன். எந்தக் குற்றத்திற்காக அந்தக் கைதிகள் அச்சிறையில் இருக்கிறுர்கள் என்பதை அந்த ஜெயிலர் அறியான். தர்மக் கட்டளை அவனிடமிருக்கிறது. ஓர் ஊரில் மூன்று பத்திரிகைகள். மூன்றும் அறிஞர்களால் நடத்தப்படுவன. குற்றம் செய்பவருக்குக் கடும் தண்டனையளிக்க வேண்டும், அது அவசியம் என்று எடுத்துக்காட்டப் பாடுபடுகின்றன இப்பத்திரிகைகள். தண்டிப்பதைவிட இரக்கம்

கொள்வதே நல்லது என்கிறது ஒரு பத்திரிகை! கடுந் தண்டனைபெற்ற குற்றவாளிகளில் 50 சதவிகிதத்தினரே திருந்தி யோக்கியமான வாழ்வில் ஈடுபடுகின்றனர். எளிய தண்டனை பெற்றோருள் 90 சதவிகிதத்தினர் திருந்தி நல் வாழ்வில் ஈடுபடுகின்றனர். இவ்வாறு ஒரு பத்திரிகாசிரியர் புள்ளிவிவரங்களுடன் எடுத்துக்காட்டுகிறார்.

மதம் என்பது மனித இயல்புக் குறையின் விளைவன்று. கொடுங்கோலச்சத்தால் ஏற்படுவதன்று. மதம் அன்பு; மலரும் அன்பு; விரியும் அன்பு; வளரும் அன்பு. இந்தக் கை கடிகாரத்தைப் பாருங்கள். ஒரு சிறு சம்புடத்துக்குள் ஓர் இயந்திரம்; விசை எல்லாமுள்ளன. விசையை முடுக்கி விட்டால் கடிகாரம் தன்னியல்பு பெறுகின்றது. கடிகாரத் துள்ளிருக்கும் விசைபோன்றீர் நீவிர். கடிகாரங்கள் எல்லாம் ஒரே மாதிரியான விசையுடனிருத்தல் அவசியமில்லை. அதேபோல் நம் எல்லாருக்கும் ஒரே மாதிரி மதம் இருக்க வேண்டுமென்ற அவசியமும் இல்லை. நாம் எதன் பொருட் டுச் சண்டையிடல்வேண்டும்? நாம் எல்லாருக்கும் ஒரே மாதிரி எண்ணமிருந்தால் உலகம் மரித்துவிடுமே. புற அசைவையே நாம் செயல் என்கிறோம்: அக அசைவே சிந்தனை; எண்ணம். ஒரு கல்லை உயரத்தில் வீசினால் அது பூமியில் விழுகிறது. எதனால் விழுகிறது? பூமியின் ஆகர்ஷண சக்தியினால் விழுகிறது என்று சொல்கிறீர்கள். வண்டி இழுக்கிறது குதிரை. குதிரையை இழுப்பவர் யார்? கடவுள். இதுவே அசைவு சித்தாந்தம். சுழல் எதைக் காட்டுகிறது? ஆற்றிலே ஓடும் நீரின் வேகத்தைக் காட்டு கிறது. வேகத்தைக் குறைத்துவிடுங்கள்; தடுத்துவிடுங்கள். என்ன காண்பீர்? தேக்கம் காண்பீர். அசைவே உயிர். பன்மைவேண்டும். அதில் ஒருமையும் வேண்டும். ரோஜா மலர் மணம் வீசுகிறது; நறுமணம். அம்மலருக்கு ரோஜா என்று பெயரிடாமல் வேறு ஏதாவது ஒரு பெயரிட்டுவிட் டால் அதன் நறுமணம் எங்கேயாவது ஓடிவிடுமா? ஓடாது. அப்போதும் மணம் வீசும். அதுபோல உங்கள் மதத்திற்கு எப்பெயரிட்டு அழைத்தால் என்ன? பெயர் வேறுபாடு ஒரு பெரும் விஷயமன்று.

ஒரு கிராமத்தில் குருடர் அறுவர் வசித்தனர். யானை பார்க்க விரும்பினர். பார்ப்பது எப்படி? தடவிப்பார்த்தனர்.

ஒருவன் யானையின் வாலைத் தடவிப் பார்த்தான்; இன்னொருவன் காதைத்தடவிப் பார்த்தான்; வேறு ஒருவன் துதிக்கையைத் தடவிப் பார்த்தான்; மற்றொருவன் உடலைத் தடவிப் பார்த்தான். இந்தக் குருடர் எல்லாரும் சேர்ந்து, தாங்கள் பார்த்த யானையை வர்ணிக்கத் தொடங்கினர். அது ஒரு பெரிய கயிறு போலிருந்தது என்றான் ஒருவன். சுவர் போலிருந்தது என்றான் இன்னொருவன். விசிறி போலிருந்தது என்றான் இன்னொருவன். மலைப்பாம்பு மாதிரி இருந்தது என்றான் மற்றொருவன்.

வாய்ச்சண்டை முற்றியது. அடிபிடி சண்டை ஆரம்பமாயிற்று. அப்போது அங்கே ஒருவன் வந்தான். பழுதில்லாத கண்களையுடையவன் அவன். என்ன விஷயம் என்று விசாரித்தான். குருடர் கூறினர்:—

"நாங்கள் எல்லாரும் யானையைக் கண்டோம். ஆனால் ஒவ்வொருவரும் வேறு வேறு விதமாக அதை விவரித்தோம். அதனால் ஒருவர் கூற்றுப் பொய் என்று இன்னொருவர் கூறினோம்."

வந்தவன் சொன்னான்:

"நீங்கள் எல்லாரும் பொய்யரே. காரணம் நீவிர் எல்லாரும் குருடர்; காண இயலாதர்."

நமது மதம் பற்றிய விஷயமும் இத்தகையதே. குருடர் யானை காணச் செய்தோம். (கை தட்டல்) இந்தியத் துறவி ஒருவர் கூறினர்:

'பாலைவனத்து மணலைக் கசக்கி எண்ணெய் எடுப்பேன்' என்று நீங்கள் கூறினால் நான் நம்புவேன். 'முதலை வாயில் அகப்படாமல் அதன் பல்லைப் பிடுங்குவேன்' என்று சொன்னாலும் நம்புவேன். மூடபக்தியுள்ளவனை மாற்றுதல் இயலும் எனில் நான் நம்பவே மாட்டேன். மதவேறுபாடுகள் இவ்வளவு ஏன்? என நீங்கள் கேட்கிறீர்கள். அதற்கு விடை இதுவே: குன்றுகளினின்றும் வீழ்கின்ற சின்னஞ்சிறு அருவிகள் பல. ஆனால் அவை எல்லாம் முடிவில் மாபெருங் கடல் அடைதல் உறுதி. பல் வேறு மதங்களும் அத்தகை

யனவே. அவை யாவும் முடிவில் நம்மை இறையோடி சைப்பனவே. சென்ற 1900-ம் ஆண்டுகளாக நீங்கள் யூதர் களை நசுக்க முயன்று வருகிறீர்கள். முடிந்ததா? இல்லை. ஏன்? எதிரொலி கூறுகிறது: அறியாமையும் மூடபக்தியும் உண்மையை அழித்தற்கியலாதவை.

இதே ரீதியில் சுமார் இரண்டு மணிநேரம் பேசியபின் இவ்வாறு கூறி முடித்தார்:

"உதவுக; அழித்தல் வேண்டாம்."

மீண்டும் பிறத்தல்

[1894-ம் ஆண்டு ஜனவரி மாதம் 19-ந் தேதி மெம்பிஸ் நகரில் ஆற்றிய சொற்பொழிவு. அப்பீல் அவலங்கியில் வெளி வந்தது.]

காவியுடையும், தலைப்பாகையும் அணிந்த துறவி சுவாமி விவேகானந்தர் நேற்றிரவு மூன்றுவது தெருவில் உள்ள 'லாஸெட் அகடாமி' யில் ரசிகர் பலர் குழுமிய கூட்டத் திலே மீண்டும் சொற்பெருக்காற்றினர். மறுபிறவி அல்லது கூடுவிட்டுக் கூடுபாய்தல் என்பது எடுத்துக்கொண்ட பொருள். இதைவிட சாதகமான ஒன்று அவருக்கு முன் னர் கிடைக்கவில்லை என்றே கொள்ள வேண்டும். கூடு விட்டுக் கூடுபாய்தல் அல்லது மறுபிறவி என்பது கீழ்த்திசை நாடுகளில் பெரிதும் ஏற்கப் பெற்ற நம்பிக்கை. உள் நாட்டி லும் சரி வெளி நாட்டிலும் சரி. இந் நம்பிக்கையை ஆதரித்து நிற்க அவர்கள் எப்போதும் தயாராயிருப்பார்கள். விவேகானந்தர் சொன்னர்:

பழமையான மதங்கள் எல்லாவற்றிலும் உள்ள மிகப் பழைய கொள்கை இது. இதனைப் பலர் அறியார். பார்சி யரிடையே இக்கொள்கை நிலவியது; யூதரிடை நிலவியது; கிறிஸ்தவ மதபீடத்தின் முதல் குருமாரிடம் நிலவியது; அராபியரிடை நிலவியது. ஹிந்துக்களிடமும் பௌத்தரிட மும் நிலவி வருகிறது.

விஞ்ஞான காலம் வரை இந்நிலையிலிருந்தது. விஞ்ஞா னம் என்பது என்ன? சக்தியை அறிதல்; ஆராய்தல்.

மேற்கு நாட்டவராகிய நீங்கள் என்ன நினைக்கிறீர்கள். இது ஏதோ நெறிபிறழும் ஒன்று என்று நினைக்கிறீர்கள். எனவே இது பற்றித் தர்க்க ரீதியில் ஆராய்தல்வேண்டும். அதற்கு உலகம் முழுவதும் பார்க்கவேண்டும். இந்தப் பிரபஞ்சத்தை ஆள்பவன் ஒருவன் உளன் என்பதை நாம் எல்லாரும் நம்புகிறோம். அப்படியானால் இயற்கையில் எங்கும் நீதியே நிலவவேண்டுமல்லவா? என்ன காண்கிறோம்? அநீதியல்லவா காண்கிறோம். நல்ல செல்வ சுகபோகத்தில் பிறக்கிறான் ஒருவன். வாழ்நாள் முழுவதும் சூழ்நிலை அவனுக்கு சாதகமே செய்கிறது; சந்தோஷமளிக்கிறது. உயர் நிலை அடையச்செய்கிறது. இன்னொருவன் இதற்கு நேர் மாறான நிலையிலிருக்கிறான்; சமூகத்தால் புறக்கணிக்கப்படுகிறான்; சீர்கேடுற்றுச் சாகிறான். இந்தப் பட்சபாதம் எதற்கு? கூடுவிட்டுக் கூடு பாய்தல் எனும் மறுபிறவித் தத்துவம் இதற்கு விடையளிக்கிறது; நெறியற்றவனுக்காமல் நீதிக்கருத்தை வழங்குகிறது. 'ஆண்டவன் சித்தம்' என உங்களில் சிலர் கூறுதல் கூடும். இது விடையாகாது; விஞ்ஞான முறையுமன்று. ஒவ்வொன்றுக்கும் ஒரு காரணமுண்டு; காரணத்தைக் கடவுள் மேலேற்றும் கொள்கை ஒருவனை நெறியற்றவனுக்கும். இது எவ்விதம் தர்க்கத்துக்கு ஏற்புடைத்தன்றோ அவ்விதமே உலகாயதமும் தர்க்கத்துக்கு ஏற்புடைத்தன்று. காரணத்தின் விளைவே காரியம். எனவே இக்காரணங்களால் மறுபிறவி எனும் தத்துவம் அவசியமாகிறது. இவ்வுலகில் நாம் பிறந்துள்ளோம். இது தான் முதல் சிருஷ்டியா? சூன்யத்திலிருந்து எதையாவது சிருஷ்டிக்க முடியுமா? ஆராய்ந்து பார்க்குங்கால் இது மடமை மிக்கதொரு சொல்லன்றோ. இது சிருஷ்டியன்று; படைப்பன்று; இது பரிணாமம்; தோற்றம்.

காரணமின்றி ஒரு காரியம் நிகழாது. தீயில் விரலை வைத்தால் விளைவது என்ன? விரல் சுடப்படுவதன்றோ? இவ்வாறு எனது விரல் சுடக் காரணம் யாது? தீயில் விரலைவைத்த செயலன்றோ? இந்தக் காரணகாரிய நியதி, இயற்கைக்கும் பொருந்தும். இயற்கை இல்லாத காலம் இல்லை. ஏன்? அதற்குக் காரணமாகியது என்றுமுளது. விவாதத்தின் பொருட்டு சிருஷ்டியே இல்லாத காலம் ஒன்று இருந்ததாக வைத்துக்கொள்வோம். அப்போது இவ்வளவு

ஜடமும் எங்கிருந்தன? புதிதாகப் படைப்பது எனில் ஏராளமான புதிய சக்தி புகுத்த வேண்டுமல்லவா? இது இயலாத காரியம். பழையனவற்றை மீண்டும் படைக்கலாம். புதிதாகப் பிரபஞ்ச சேர்கை இயலாது.

மறு பிறவி எனும் இந்த சித்தாந்தத்தை கணித முறையில் விளக்க இயலாது. அனுமானங்கள் தர்க்க ரீதியில் நம்ப இயலாதவை. எனது கருத்து யாதெனில் மறு பிறவி எனும் இந்த சித்தாந்தத்தை நிலை நாட்டுதற்கு இதைவிடச் சிறந்த அனுமானம் எதுவும் இதுகாறும் கூறப்படவில்லை.

மின்னுப்பொலி நகரிலிருந்து வரும் ரயிலில் ஒரு சம்பவம் நடந்தது. இடையன் ஒருவன் அந்த வண்டியிலிருந்தான். அவன் முரடன்; பிரஸ்பிடீரியன் ரகத்தைச் சேர்ந்தவன். நான் எங்கிருந்து வருபவன் என்று கேட்டான். இந்தியாவிலிருந்து வருபவன் என்றேன். எம்மதத்தினன் என்று கேட்டான். "ஹிந்து" என்றேன். "அப்படியானல் நீ நரகமே செல்வாய்" என்ருன்.

இந்த மறுபிறவித் தத்துவத்தை அவனிடம் கூறினேன்; விளக்கிக் கூறினேன். தனக்கு இதிலே எப்போதும் நம்பிக்கையுண்டென்று அவன் கூறினன். காரணம் யாதெனில் ஒருநாள் அவன் விறகு வெட்டிக் கொண்டிருந்தபோது அவனது சகோதரி வந்தாள். அவனுடைகளை அணிந்து வந்தாள். தான் எப்போதும் ஆணுயிருந்ததாகச் சொன்னளாம். எனவே அவன் இந்த மறுபிறவியில் நம்பிக்கை கொண்டானும். இந்த தத்துவத்தின் அடிப்படையே இது தான்: ஒருவனின் செயல்கள் நல்லனவாயின் அவன் உயரியவனுவான். செயல்கள் தீயனவாயின் இழிந்தவையாயின் இழிந்த பிறப்பினனுவான்.

இந்த தத்துவத்தில் காணப்படும் அழகு யாதெனில் இஃதளிக்கும் நன்னெறி விசையே. "நடந்தது நடந்தாயிற்று. இன்னும் நன்கு செய்திருக்கலாம்" என்று கூறுகிறது அது. மீண்டும் தீயில் விரலை வைக்காதீர். ஒவ்வொரு கணமும் புதிய சந்தர்ப்பமே.

இந்த ரீதியில் சிறிது நேரம் விவேகானந்தர் பேசினுர். மகிழ்ச்சியால் அடிக்கடி கைதட்டிக் களித்தனர் அவையினர்.

இன்று மாலே 4 மணிக்கு லாஸெட் அகாடமியில் 'இந்தியாவின் பழக்க வழக்கங்கள்' எனும் பொருள் பற்றி சுவாமி விவேகானந்தர் மீண்டும் பேசுவார்.

சமரச சன்மார்க்கம்

[1894-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 21-ந் தேதி மெம்பிஸ் நகரில் ஆற்றிய சொற்பொழிவு. அப்பீல்-அவலங்கியில் வெளிவந்தது.]

ஹீப்ரு இளைஞர் சங்க மண்டபத்திலே 'சமரச சன்மார்க்கம்' எனும் பொருள் பற்றி சுவாமி விவேகானந்தர் பேசினர். அவர் தம் விரிவுரைகளின் மகுடமெனத்தக்கது இதுவே. இதனுல் இந்நகர மாந்தர் அப்பெரியார்பால் கொண்டுள்ள பெருமதிப்பு மேலும் உயர்ந்தது.

இதுகாறும் சுவாமி விவேகானந்தர் ஏதாவதொரு தர்ம காரியத்தின் பொருட்டே விரிவுரை நிகழ்த்திவந்தார். எனினும் நேற்றிரவு தம் பொருட்டே நிகழ்த்தினர். இந்தச் சொற்பொழிவினை ஏற்பாடு செய்தவர் ஸ்ரீ. ஹீ. எல். பிரங்லி என்பவர்; விவேகானந்தர்மீது பெருமதிப்புடையவர்; நண்பர். கீழ்த்திசைப் பேரறிஞரான அவர்தம் சொற்பொழிவு கேட்டற்பொருட்டு அந்த மன்றத்திலே இரு நூறுக்கும் அதிகமானவர் கூடினர்.

தொடக்கத்தில் சொற்பொழிவாளர் எழுப்பிய வினா இதுவே: மதங்கள் எல்லாம் அந்த மதக் கோட்பாடுகள் குறிப்பன போல அவ்வளவு வேற்றுமை கொண்டனவோ?

வேற்றுமை இல்லை என்றுர் அவர். தொடக்கம் முதல் இன்றுவரை ஒவ்வொரு மதமும் அடைந்துள்ள வளர்ச்சியை அவர் எடுத்துக்காட்டினர். ஆதி மனிதர் வெவ்வேறு வகையில் கடவுளை உருவகப்படுத்தினர். அது காலத்தின் தேவை. காலம் மாற மாற மனித அறிவு வளர்ந்தது. அதற்கேற்ப கடவுள் பற்றிய கருத்தும் வளர்ந்தது. சிறிது சிறிதாக வேற்றுமைகள் மறைந்தன. எங்கும் நிறைந்த எல்லாம் வல்ல கடவுள் ஒருவரே என்ற கருத்துத் தோன்றியது. ஏதோ ஒருவகைக் கடவுள் நம்பிக்கையற்ற காட்டுமிராண்டியையும் இன்று காணல் அரிது.

நவீன விஞ்ஞானம் இது ஒரு ஞான விளக்கமா இல்லையா என்று சொல்லவில்லை. காட்டுமிராண்டிகளிடையே

திண்ணிய அன்பு இல்லை; உறுதியான அன்பு இல்லை. அவர்கள் பயந்த வாழ்க்கையினர்; குருட்டு நம்பிக்கையினர். அந் நம்பிக்கையில் ஏதோ ஒரு தெய்வம் அவர்தம் மனக்கண் உருவாயிற்று. பயங்கரமான கொடிய தெய்வம். அத் தெய்வத்தின் முன் நடுங்கினர்; பயந்தனர். தமக்கு எது விருப்பமோ அது அந்த பயங்கர துர்த்தேவதைக்கும் விருப்பமானதே என்று கருதினர். தமது கோபம் தணிப்பன யாவும் அந்த தெய்வத்தின் சீற்றம் தணிக்கும் என்று கருதினர். தம் சக காட்டுமிராண்டிகளிடமும் இவ்வாறே அல்லலுற்றனர்.

இத்தகைய காட்டுமிராண்டி எவ்வாறு தனது முன்னோர் வழிபாட்டினின்றும் மாறி யானைகளை வழிபடத்தொடங்கினான் என்றும், பின்னர் இடியையும் புயலையும் தெய்வமாக வணங்கினான் என்றும், சரித்திர ஆதாரங்களுடன் விவேகானந்தர் விளக்கினார்.

"அக்கால உலகம் பல தெய்வங்களை வணங்கிவந்தது. சூரிய உதய அழகும், அஸ்தமன கம்பீரமும், மின்னுகின்ற நட்சத்திரங்களும் அவற்றின் பின்னணியில் விளக்கொளிக் காட்சி தரும் விண்ணும், இடி மின்னல்களின் அறியமுடியா வகையும், கண்டான் ஆதிமனிதன். தன் கண் முன் காட்சி தருவனவற்றையெல்லாம் ஆட்டிப்படைக்கும் வல்லமை வாய்ந்த சக்தியொன்றுளது என்றுணர்ந்தான்.

"பின்னர் வந்தது வேறொரு காலம்—'ஒன்றே தெய்வம்' என்ற காலம். பல்வேறு தெய்வங்கள் மறைந்தன; தெய்வங்களுக்கெல்லாம் தெய்வமாக பிரபஞ்ச நாயகனை ஒன்றி காட்சியளித்தன" என்றார்.

பிறகு அவர் ஆரியர்தம் வரலாற்றினை விவரித்தார்.

"இறையோடிசைந்து வாழ்கிறோம். அவரே இயக்கம்" என்று கூறிய காலம் வரை விளக்கினார். பிறகு மற்றொரு சகாப்தம். அதாவது வேதாந்த காலம். இவர்கள் என்ன செய்தார்கள்? பல தெய்வம், ஒரு தெய்வம், பிரபஞ்சம், தெய்வசிருஷ்டி ஆகிய கொள்கைகளை எல்லாம் மறுத்தார்கள். "ஆன்மாவின் ஆன்மாவே சத்தியம்; நித்தியம்; என்றுமுளது. எனது இயல்பே வாழ்வு; எனக்கு விரிவளிப்பது" என்றார்கள்.

பின்னர் விவேகானந்தர் புத்த மதம் பற்றி விவரித்தார். புத்த மதவாதிகள் கடவுள் உண்டென்று கூறவில்லை; இல்லையென்றும் சொல்லவில்லை. புத்தரிடம் உபதேசம் பெறச் சென்றபோது அவர் என்ன சொன்னர்? 'உலகில் துன்பமே காண்கிறீர். அதைப் போக்க முயல்க' என்ருர். பௌத்தன் ஒருவனுக்குத் துக்கம் என்பது எப்போதுமிருப்பது. சமூக வாழ்வே அவனது இருப்பின் அளவுகோல். ஹிந்துக்களது பழைய சுவிசேஷங்களையும் (ஹீப்ரூ) கிறிஸ்தவர்களது புதிய சுவிசேஷங்களையும் நம்பியவர் முகம்மதியர் என்ருர் அவர். முகம்மதியர்கள் கிறிஸ்தவர்களை விரும்புவதில்லை. 'வேதப்புரட்டர்' என்றும் மனிதனை வழிபடுவோர் என்றும் கூறினர். தம்மைப் பின்பற்றுவோர், தமது படத்தைக் கூட வைக்கலாகாது என்று முகம்மது தடுத்தார்.

"இந்த மதங்கள் எல்லாம் உண்மையானவையா? அல்லது சிலவே உண்மையா? மற்றுஞ்சில பொய்யானவையா?" இதுவே அடுத்த கேள்வி.

இவை எல்லாம் ஒரே முடிவுக்கு வந்துள்ளன. அதாவது பரிபூர்ணமான எல்லையற்ற ஒன்றுளது என்பதே. மதத்தின் குறிக்கோள் ஒற்றுமை. அவ்வப்போது காணப்படும் பல்வேறு தோற்றங்கள் யாவும் ஒருமையின் பலவகைத் தோற்றங்களே. மதத்தினை ஆராயுங்கால் என்ன தோன்றுகிறது? மனிதன் பொய்யினின்று உண்மை நோக்கிச் செல்லவில்லை. எளிய உண்மையிலிருந்து உயரிய உண்மைக்குச் செல்கிருன் என்பதே.

ஜனக்கூட்டத்திடையே ஒருவன் ஒரு சட்டை கொண்டு வருகிருன். சிலர் என்ன சொல்கின்றனர். அச்சட்டை தங்களுக்குப் பொருந்தவில்லை என்று சொல்கின்றனர். நீங்கள் அப்பால் விலகுங்கள்; உங்களுக்குச் சட்டை கிடைக்காது என்கிருன் அவன். கிறிஸ்தவ மதகுரு ஒருவரிடம் சென்று, அவர் மதக் கொள்கைகளுடன் மாறுபட்டவர்களைப் பற்றிக் கேளுங்கள். 'அவர்கள் கிறிஸ்தவரல்லர்' என்பார். ஆனல் இதனினும் மேன்மையான போதனை நம்மிடமுளது. நமது இயல்பு; அன்பு, விஞ்ஞானம் இவை நமக்கு உயரிய போதனை செய்கின்றன. ஆற்றின் சுழல்போல, இவற்றை அகற்றினல், தேக்கமே

தோன்றும். கருத்து வேற்றுமையை அழித்துவிட்டால் சிந்தனை மழுங்கிவிடும். இயக்கம் அல்லது அசைவு தேவை. சிந்தையே உள்ளத்தின் அசைவு; இயக்கம். இயக்கம் இன்றேல் சாவு.

ஒரு கிண்ணம் நீரில் ஒரு சிறுதுளி காற்றைப் புகுத்தினால் என்ன காண்கிறோம்? அக்காற்று துடித்தல் காண்கிறோம். எதற்காக? வெளியே உள்ள எல்லையற்ற வெளியில் கலப்பதன் பொருட்டு. ஆன்மாவின் இயல்பும் இத்தகையதே. இந்த உடலினின்றும் விடுபட்டுத் தன்னியல்பு மீண்டும் பெறவே அது போராடுகிறது. தனது எல்லையற்ற விரிவை மீண்டும் பெற முயல்கிறது. எங்கும் இதேதான். கிறிஸ்தவராயினும் சரி, முகம்மதியராயினும் சரி, மதகுருவாயினும் சரி, நிரீசுவரவாதியாயினும் சரியே. எல்லாருள்ளும் ஆன்மா போராடுகிறது. மலையில் தோன்றும் நதியானது ஆயிரம் மைல் சுற்றித்திரிந்து ஓடிவந்து கடலை அடைகிறது. அந்த இடத்தில் ஒருவன் நிற்கிறான். திரும்பிச் சென்று நேரான வழியில் வரச்சொல்கிறான். அவன் அறிவிலியன்றோ. ஸயன்மலை வீழ் நதி நீங்கள். இமயத்தின் உன்னத சிகரத்தினின்றும் ஓடிவரும் நதி நான். நீங்கள் என்போல் திரும்பிச் சென்றுவருமாறு நான் சொல்லேன். அஃது அறியாமையினும் பெரிய தவறு. உங்கள் மதத்திலே ஊன்றிய பற்றுக்கொள்க. உண்மை ஒருபோதும் அழியாது. புத்தகங்கள் அழியும். தேசங்கள் அழியும். ஆனால் சத்தியத்தை எவனாவது ஒருவன் காப்பான். மீண்டும் சமுதாயத்துக்கு அளிப்பான். அதுவே ஆண்டவனின் இடையறாத பெருந்தோற்றத்துக்குச் சான்று பகரும்.

புத்தமதம் : ஆசிய ஜோதியின் சமயம்

[1894-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 19ந் தேதி டிட்ராயிட் நகரில் ஆற்றிய சொற்பொழிவு. 'டிட்ராயிட் டிரைப்யூ' னில் வெளிவந்தது.]

புத்த மதம்—ஆசிய ஜோதியின் சமயம் எனும் பொருள் பற்றி நேற்றிரவு சுவாமி விவேகானந்தர் சொற்பொழிவாற்றினார். சுமார் 150 பேர் கூடியிருந்தனர். (500 பேர் என்பது பத்திரிகையின் மதிப்பு.) மதிப்புக்குரிய டாம். எம். டிக்கின்ஸன் சுவாமி அவர்களை அவையினருக்கு அறிமுகம் செய்துவைத்தார்.

"இந்த மதம்தான் தெய்விகமானது, இந்த மதம் பாழானது என்பதை எவரே எடுத்துக்காட்ட வல்லார்? எவரே பிரித்துக்காட்ட வல்லார்?" என்று கேட்டார் டிக்கின்ஸன் தமது முன்னுரையில்.

சுவாமி விவேகானந்தர் இந்தியாவின் பூர்விக மதங்களை எல்லாம் விரிவாக எடுத்துக்கூறினார். உயிர்களைப் பலியிட்டு யாகம் செய்தல் பற்றிக் கூறினார். புத்தரின் பிறப்பும் வாழ்வும் பற்றி எடுத்துரைத்தார். பிறவி, வாழ்க்கை பற்றிய ரகசியங்களை அறிதற்கு அவர் உள்ளம் துடித்ததை விவரித்தார். அவர் மேற்கொண்ட முயற்சிகளையும் முடிவையும் கூறினார்.

"புத்தர், மனித குலத்தின் சிகரமாக விளங்கினார். பகைவரும் பழித்தற்கரியராய், பிறர் நலமே நாடுபவரிடம் அவர் வாழ்ந்தார். ஆன்மா வேறு உடலில் புகுதல் பற்றி அவர் ஏதும் உபதேசிக்கவில்லை. கடலில் ஒன்றன்பின் ஒன்றாக எழுந்துவிழும் அலைபோன்றது பிறவி என்றார். அவ்வளவே. இறைவன் உளன் என்றாரில்லை; இலன் என்றும் கூறினாரில்லை" என்றார் விவேகானந்தர்.

"நாம் ஏன் நல்லவராயிருக்கவேண்டும்?" என்று கேட்டார்கள் சிஷ்யர்கள்.

"ஏன் எனில், நீங்கள் நல்லவை சில பெற்றீர். உங்கள் சந்ததியாருக்கும் நல்லவை சில விட்டுச் செல்வீர். நல்லன

ஓங்குக; வளர்க; முன்னேறுக. அதற்கு நாம் உதவுவோமாக. நன்மையின் பொருட்டு" என்றார் அவர்.

தெய்வதூதருள் முதல்வர் அவரே. எவரையும் அவர் அவதூறு செய்தாரல்லர்; நிந்தித்தாரல்லர்; ஆணவம் கொண்டாரல்லர். நாம் உய்யும் வகையை நாமே வகுத்து உழைத்தல் வேண்டும் என நம்பினார்.

இவ்வுலகு நீத்தபோது அவர் கூறினார்:

"உனது சமயத்தை நீயே வகுத்துக்கொள். எவரையும் துணை கொள்ளவேண்டாம். உனக்கும் சரி. மற்றெவருக்கும் சரி. நான் ஏதும் சொல்ல முடியாது."

மாந்தருள் நிலவும் சமமின்மை கண்டு வெகுண்டார் அவர்; கண்டித்தார். உயிர்கள் யாவும் சமமே என்று போதித்தார் அவர். மது விலக்குக் கொள்கையை முதன் முதல் வகுத்தவர் அவரே. "நல்லவனாயிரு; நல்லன செய் என்றார் அவர். கடவுள் இருந்தால் நல்லவனாக நடந்து அவரை அடை. கடவுள் இல்லையேல் நல்லவனாயிருத்தலே போதும். துன்பங்களுக்கெல்லாம் காரணம் அவனே எனலாம். நல்லவற்றிற்காகப் பாராட்டலாம்." என்றார் அவர். மடங்களையும் சாமியார்களையும் முதன் முதல் தோற்றுவித்தவர் அவரே. இந்தியாவில் வாழ்ந்த கோடிக்கணக்கான ஏழை எளிய மக்களின் ரட்சகராக அவர் தோன்றினார். அவரது தத்துவத்தை அறியும் சக்தி அந்த மக்களுக்கில்லை. ஆனால் அவரைக் கண்டனர்; போதங் கேட்டனர்; பின்பற்றினர்.

"புத்த மதமே கிறிஸ்துவ மதத்தின் அடிப்படை. கத்தோலிக்க மதபீடம் தோன்றிய இடம் பௌத்த மதமே" என்று கூறி முடித்தார் சுவாமி விவேகானந்தர்.

*யோக விஞ்ஞானம்

[1900-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 13-ந் தேதி கலிபோர்னியாவைச் சேர்ந்த அலமேடா நகரத்து டக்கர் மன்றத்தில் ஆற்றிய சொற்பொழிவு.]

யோகம் என்பது சமஸ்கிருதச் சொல்; மிகப் பழைய சொல். சித்த விருத்தி நிரோதம் என இது விவரிக்கப்படுகிறது. அதாவது சித்தத்தை அடக்கும் முறையைக் கற்பிக்கும் சாத்திரம் என்பது இதன் பொருள். சித்தம் என்பது மனம் தோன்றுதற்கு ஆதாரமானது; அகத்தும் புறத்தும் உள்ள சூழ்நிலைகளால் அலைக்கப்படுவது. இவ்வாறு அலைமோதுதலால் தன் நிலை மாருதிருக்கும் வண்ணம் மனத்தைக் கட்டுப்படுத்துவது எப்படி என்பதை யோகம் கற்பிக்கிறது.

இதன் பொருள் யாது? மதத்தைப் பற்றிய நூல்களும், கருத்துக்களும் நூற்றுக்குத் தொண்ணூறு பங்கு யூகமே; கற்பனையே. ஒருவர் ஒருவகையாகச் சொல்வர். மற்றொருவர் இன்னொரு வகையாகச் சொல்வர். அறிவிலே சிறிது ஆற்றல் மிகுந்தவன் பிறர் கூறுவனவற்றை வெற்றி காண்பான்; புதிதாக ஒன்று கூறுவான். சென்ற இரண்டாயிரம் வருஷங்களாகவோ அல்லது நாலாயிரம் வருஷங்களாகவோ இப்படித்தான் மத ஆராய்ச்சி நடந்து வந்திருக்கிறது. எவ்வளவு காலமாக இவ்வாறு நடைபெற்று வந்துள்ளது என்பது கூற இயலாது. காரண காரியரீதியில் தர்க்கம் செய்ய முடியாதபோது "நான் சொல்வதை நம்பு" என்று சொன்னார்கள். "நம்பிக்கை" என்றார்கள். பலசாலிகள் தங்கள் நம்பிக்கையைப் பிறர்மீது திணித்தார்கள். இப்போதும் இவ்வாறு நடைபெறுகிறது.

இவ்வளவில் அமையாதவர் சிலர் இருந்தனர். "இச் சிக்கல் தீரும் வகையாது?" என்று வினவினர். பௌதிக சாஸ்திரத்தில் கற்பனைக்கும் யூகத்துக்கும் இடமுண்டா? ரசாயனத்தில் யூகிப்பதுண்டா? கணிதத்தில் யூகிப்பதுண்டா? இல்லையே. அவ்விதமிருக்க மத விஷயத்தில்

---

* இடா ஆன்ஸெல் குறிப்பெடுத்ததொரு பிரசங்கத்தின் பகுதி. 'வேதாந்தா அண்ட் தி வெஸ்ட்' என்ற சஞ்சிகை (ஜூலை – ஆகஸ்டு 1957) யில் வெளிவந்தது. (C. W. IV பக் 218 காண்க).

மட்டும் யூகம் எதற்கு? கற்பனை எதற்கு? மதமும் மற்ற விஞ்ஞானங்கள் போல ஏனிருத்தலாகாது? என்று வினவினர்.

இவ்வழி வகுத்தனர்; ஆன்மா என்ற ஒன்று இருப்பது உண்மையானல் அஃது அழியாத ஒன்ருனல், அகில பிரபஞ்சத்தையும் ஆட்சி செலுத்தும் ஆண்டவன் ஒருவன் இருப்பது உண்மையானல் அவன் இங்கே இருத்தல் வேண்டும்; அவனை இங்கே உணர்ந்து அறிதல் வேண்டும்.

புறக்கருவி கொண்டு மனத்தை ஆராய்தல் இயலாது. நான் சிந்திக்கும்போது எனது மூளையை உற்று நோக்கினல் என்ன காண்பீர்? சிந்தனை காண்பீரா? உணர்வு காண்பீரா? உருவம் காண்பீரா? ஏதும் காணமாட்டீர். அணுச் சேர்க்கை சிலவற்றையே காண்பீர். பௌதிக, ரசாயன மாறுதல் சிலவே காண்பீர்; அசைவுகள் சிலவே காண்பீர். இத்தகைய ஆராய்ச்சி போதாது என்பதை இவ்வுதாரணத் தினின்றும் அறிதல் கூடும்.

மனதை ஆராய்ந்து அறிய வல்ல முறை ஏதேனும் இருக்கிறதா? இருந்தால்தான் மதம் பற்றிய விஞ்ஞானம் சாத்தியமாகும். இது சாத்தியமே என்று கூறுகிறது ராஜ யோகம். நாம் எல்லாரும் அவ்வழி முயன்று ஓரளவு வெற்றியும் காணலாம். ஆனல் ஒரே ஒரு சிரமமிருக்கிறது. புற விஞ்ஞானத்தில் பொருளைக் கூர்ந்து நோக்குதல் எளிது. ஆராய்ச்சிக் கருவிகளும் திடமானவை. ஆராய்ச்சிப் பொருள், ஆராய்ச்சிக் கருவி ஆகிய இரண்டும் புறத்தவை. ஆனல் மன ஆராய்ச்சியிலோ இரண்டும் ஒன்றே. ஆராய்ச்சிப் பொருள் ஆராய்ச்சிக்கருவி ஆகிய இரண்டும் ஒன்றே.

புற ஆராய்ச்சி மூளைக்குச் செல்லும்; பௌதிக, ரசாயன மாற்றம் பெறும். ஆனல் விடைகாண இயலாது. உணர்வெனப்படுவது யாது? சிந்தனை எனப்படுவது யாது? எண்ணங்கள் எல்லாம் எங்கிருந்து வருகின்றன? எங்கே செல்கின்றன. இவற்றை மறுத்தல் இயலாது. இவை உண்மை. எனது மூளையை நான் கண்டதில்லை. அவ்விதம் ஒன்று இருப்பதாக ஏற்றுக் கொள்கிறேன். ஆனல் மனிதன் தனது

சுய உணர்வையும் சிந்தனையையும் மறுத்தல் இயலாது; இல்லை யென்று சொல்ல முடியாது.

பெரும் பிரச்னை நாமே. கண்களால் காண இயலாத நீண்டதோர் சங்கிலியா நான்? ஒன்றுடன் மற்றொன்று தொடர்பில்லாமல் வெகு வேகமாக ஒன்றன் பின் ஒன்றாக ஓடிவரும் பொருளா? என்றும் திரவ நிலையில் சுழன்று ஓடும் உணர்வா நான்? அல்லது இதைவிட மேலான ஒன்று? ஒரு திடப் பொருளா? ஓர் உருவா? ஆன்மா என்றழைக்கப்படும் ஒன்று? ஆன்மா என்ற ஒன்றுளதா? இலதா? எவ்விதத் தொடர்புமற்ற உணர்வு நிலை கொண்ட மூட்டையா மனிதன்? அல்லது உருட்டித்திரட்டிய பொருளா? இது பெரிய சர்ச்சை. நாம் ஓர் உணர்வு மூட்டையே யாயின் அழிவின்மை என்பது வெறும் மயக்கமே.

அவ்விதமின்றி என்னுளே தனிப் பொருள் ஏதாவது ஒன்று இருப்பின்-மூலப்பொருள் என்று சொல்லக்கூடியது-திடப்பொருள் இருந்தால் நான் அழிவில்லாதவன். மூலப் பொருள் அழிக்கமுடியாதது; துண்டு துண்டாக உடைக்க முடியாதது. கலப்புப் பொருள்களே சிதைத்தற்கியலும் பொருள்கள்.

புத்த மதம் நீங்கிய ஏனைய மதங்கள் எல்லாம் இத்தகைய பொருளை நம்புகின்றன; அதை அடையும் பொருட்டு ஏதாவது ஒரு வகையில் போராடுகின்றன. புத்தமதம் மூலப் பொருளை மறுக்கிறது; இல்லையென்கிறது; அவ்வளவில் திருப்தியடைந்து விடுகிறது.

கடவுள், ஆன்மா, அழிவின்மை, இவை போன்ற சர்ச்சைகளில் ஈடுபட்டு மனம் புண்ணுகாதீர் என்கிறது. ஆனல் உலகின் பிற மதங்கள் எல்லாம் மூலப் பொருளையே பற்றி நிற்கின்றன. மனிதனுக்குள்ளிருக்கும் வஸ்து ஆன்மாவே என்றும் பிரபஞ்சத்தின் பரம் பொருள் இறைவனே என்றும் அவை நம்புகின்றன; ஆன்மா அழிவில்லாதது என்று நம்புகின்றன. இவை எல்லாம் யூகமே. பௌத்தர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கு மிடையே உள்ள சர்ச்சை தீர்ப்பவர் யார்? "எனது பைபிள் இவ்வாறு சொல்கிறது" என்கிருன் கிறிஸ்தவன். "உனது புத்தகத்தை நான் நம்பவில்லை" என்கிருன் பௌத்தன்.

கேள்வி என்ன என்றால் நாம் எது என்பதுதான். ஆன்மா எனும் திடப்பொருளா? அல்லது மாறி மாறி அலை மோதும் மனமெனும் மென் பொருளா? நமது மனம் அடிக்கடி மாறும் ஒன்று. அதனுள் மென் பொருள் ஏது? நாம் காணவில்லையே. நான் இப்போது ஒரு பொருளாயிருக்கிறேன். மறுகணம் வேறு ஒரு பொருளாயிருக்கிறேன். இந்த மாதல்களை எல்லாம் ஒரு கணநேரமாவது நிறுத்த உங்களால் இயலுமானல் அந்த வஸ்துவை நான் நம்புவேன்.

கடவுளிடமும், சுவர்க்கத்திடமும் கொள்ளப்படும் நம்பிக்கை யாவும் சிறு நம்பிக்கைகளே; அற்ப நம்பிக்கைகளே; மதங்கள் வகுத்த கற்பனைகளே. விஞ்ஞான ரீதியான மதம் எதுவும் இவ்வகை கூறாது.

யோகம் என்பது சித்தத்தை நிறுத்தக் கற்பிக்கும் விஞ்ஞானமாகும்; மனம் மாறுவகை கற்பிக்கும் விஞ்ஞானம். பூரண யோகத்தில் மனம் பற்றி நிற்க வெற்றி காண்பீரேல் அந்தக் கணமே இப்பிரச்னைகளுக்கு முடிவு கண்டவர் ஆவீர். நீவிர் யார் என்பதை அறிந்தவராவீர். மாறுதல்களை எல்லாம் வெற்றி கண்டவராவீர். பின்னர் உங்கள் மனதை அதன் விருப்பம் போல் ஓடவிடலாம்.

ஆனல் இது முன்பிருந்த மனமன்று; வேறு; உங்கள் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடக்கும் மனமாகும். உங்களைக் கீழே தள்ளிவிடக்கூடிய முரட்டுக் குதிரையன்று. நீங்கள் கடவுளைக்கண்டு விட்டீர்கள். இனி இது யூகமன்று; கற்பனையன்று. பின்னர் உங்களுக்குப் பெயர் வேண்டுவதில்லை; புத்தகம் வேண்டுவதில்லை; வேதம் வேண்டாம்; வாக்குவாதங்கள் வேண்டாம். நீங்கள் உங்களை அறிந்து விட்டீர்கள். இந்த மாறுதல்களுக் கெல்லாம் அப்பாற்பட்ட திட வஸ்து நான்; மாறுதல் யான் அல்லன். அவ்விதமிருப்பின் அவற்றைத் தடுத்து நிறுத்தும் வல்லமை பெறேன். மாறுதலைத்தடுக்க வல்லவன் யான். எனவே மாறுதல் அல்லேன். இதுவே யோக விஞ்ஞான தத்துவம்.

இந்த மாற்றங்களை நாம் விரும்புவதில்லை. மாறுதல் விரும்பாதவர் நாம். எனினும் மாறுதல் ஒவ்வொன்றும் நம் மீது திணிக்கப்படுகின்றன. எங்கள் நாட்டில் மாடுகள் செக் கிழுக்கும். அவற்றின் கழுத்தில் நுகத்தடியிருக்கும். அந்த

நுகத்தடி செக்கடியில் இணைக்கப் பெற்றிருக்கும். நுகத் தடியின்முன்னே புல் கட்டு ஒன்று கட்டித் தொங்கவிடப் பட்டிருக்கும். மாடுகளின் கண் எதிரே தொங்கும். ஆனால் அந்தப் புல் மாட்டின் வாய் எட்டாது. எனவே புல்லைப் பற்றித்தின்னும் வேகத்திலே செல்லும் மாடு. இதனால் செக்கு சுழலும். செக்கிழுக்கும் மாடுகள்போல் சுழன்று உழல்பவர் நாம். இந்த மாறுதலை எவரும் விரும்புவதில்லை. நிச்சயமாக இல்லை. எனினும் இம்மாறுதல்கள் நம்மீது திணிக்கப்படுகின்றன. தடுப்பது நம்மால் இயலாத ஒன்று. யந்திரத்தில் சிக்கிக்கொண்டுவிட்டால் சுழலவேண்டியது தான். அவ்விதம் சுழலாது நின்றுவிட்டாலோ... முன்னை யினும் அதிக தீமை விளையும்.

துன்பங்கள் நம்மை நாடிவருகின்றன. அவை ஏன் துன்பம் தருகின்றன ? நாம் விரும்பாததால்; நம்மீது திணிக்கப்படுதலால். இயற்கை ஆணையிடுகிறது. நாம் கீழ்ப்படிகிறோம். நமக்கும் இயற்கைக்கும் பரஸ்பர அன்பு ஏதுமில்லை. நம் முயற்சியெல்லாம் இயற்கையினின்றும் விடு படுதற்கே. இயற்கை கண்டு மகிழ்வதாகச் சொல்கிறோம். ஆனால் நன்கு ஆராய்ந்து பார்த்தால் எல்லாவற்றினின்றும் விடுபட முயற்சி செய்கிறோம். வேறு எதையோ அனுபவிக்க முயல்கிறோம் ; அதற்குப் புதுவழி காண்கிறோம். பிரெஞ்சுக் காரன் ஒருவன் இங்கிலீஷ்காரன் ஒருவனை அழைத்தான் மதுவருந்த. மிகப் பழைய மதுவிருப்பதாகக் கூறினான். மது எடுத்துவருமாறு பட்லரிடம் சொன்னான். பட்லரும் பாட்டில் நிறையப் பழைய மது கொண்டுவந்தான். கண் ணாடி டம்ளரில் ஊற்றினான்; கொடுத்தான். இங்கிலீஷ் காரன் அதை அருந்தினான். பட்லர் கொண்டுவந்தது என்ன ? மதுவா ? அன்று ; விளக்கெண்ணெய் ! இந்த பிரெஞ்சுக்காரன் போன்றது இயற்கை. நாமும் அவ்விதமே காலமெல்லாம் விளக்கெண்ணெய் குடிக்கிறோம்; இதைத் தடுக்க இயலாதவராயிருக்கிறோம்.

மனிதர் சிந்திக்கும் சக்தியிழந்துவிட்டனர் ; இயந்திரங்க ளாகிவிட்டனர். பூனை, நாய், முதலிய பிராணிகளைப்போல இவர்களையும் சாட்டை கொண்டு அடிக்கிறது இயற்கை.

அவர்கள் இதை எதிர்ப்பதில்லை; சிந்திப்பதுமில்லை. அவர்களும் சிறிது உலகானுபவம் பெற்றவராகிறுர்கள்.

சிலர்மட்டும் வினவுகின்றனர். இது என்ன? இந்த அனுபவங்கள் எல்லாம் எதற்கு? நான் யார்? விடுதலைக்கு வழியுண்டா? வாழ்க்கைக்கு ஏதேனும் பொருள் உண்டா?

நல்லவர் மரிக்கின்றனர்; தீயவரும் மரிக்கின்றனர்; அரசரும் மரிக்கின்றனர்; ஆண்டிகளும் மரிக்கின்றனர். மரணமே துன்பம்; பெருந்துன்பம். அதைத் தவிர்க்கவே நாம் நமது காலம் முழுவதும் முயல்கிறேம். வசதியானதொரு மதத்தைத் தழுவி மரணம் எய்தினுல் ஜான்களையும் ஜாக்குகளையும் கண்டு மகிழ்வில் காலம் கழிக்கப் போவதாகக் கருதுகிறேம்.

உங்களுடைய நாட்டிலே ஜான்களையும் ஜாக்குகளையும் கொண்டுவந்து ஆவியுருவில் உங்களுக்குக் காட்டுகிறுர்கள். அந்த மாதிரி மனிதர்களைப் பலமுறை நான் கண்டிருக்கிறேன்; கை குலுக்கியிருக்கிறேன். உங்களில் பலர் அவர்களைப் பார்த்திருத்தல் கூடும். பயானே வாத்திய ஒலியெழுப்பி பேலாலாந்து என்று அவர்கள் பாடுகிறுர்கள். அமெரிக்கா ஒரு பரந்த தேசம். எனது நாடு உலகின் மற்ருெரு பகுதியிலிருக்கிறது. பேலாலாந்து எங்குளது என்பதை யானறியேன். பூகோள புத்தகத்திலும் நீங்கள் அதைக் காணல் இயலாது. நமது வசதியான மதத்தைப் பாருங்கள். நைந்து செல்லரிக்கப்பட்ட பத்தாம் பசலி நம்பிக்கை!

இவர்கள் சிந்திக்கும் திறனற்றவர்கள். இவர்களை என்ன செய்ய முடியும்? இவர்களை உலகம் அரித்துத் தின்று விட்டது. சிந்திப்பதற்கு அவர்களிடம் ஏதும் இல்லை. அவர்தம் எலும்புகள் எல்லாம் உளுத்துப் போயின. அவர்தம் மூளை பாலாடைக் கட்டிபோலாகிவிட்டது. இவர்பால் நான் இரக்கம் கொள்கிறேன். அவர்கள் சௌகரியம்போல் இருக்கட்டும். பேலாலாந்திலிருக்கும் தமது மூதாதையரைக் காண்பதில் சிலர் மன அமைதி கொள்கின்றனர் போலும்!

இத்தகைய ஆவியுலக நடுவினர் ஒருவர் எனது முன்னேரை அழைத்து வருவதாக என்னிடம் கூறினுர்.

"நிறுத்து. வேறு எதுவேண்டுமானாலும் உன் விருப்பப்படி செய். என் முன்னோரை அழைத்தால் நான் சும்மா இருக்க மாட்டேன்" என்றேன் நான். நடுவினர் அன்பு கொண்டார்; எனது முன்னோரை அழையாதிருந்துவிட்டார்.

எங்கள் நாட்டிலே எங்களுக்கு ஏதாவது துன்பம் நேர்ந்தால் புரோகிதரை அழைத்து சாந்தி செய்துவிடுவது வழக்கம். அதனால் திருப்தியடைவோம். சிறிது சௌகரியம் ஏற்படும். இல்லாவிட்டால் புரோகிதருக்குக் கொடுப்போமா? அந்த சௌகரியம் சில காலம் இருக்கும். பிறகு எதிராகும். மீண்டும் துன்பம். அதே துன்பம். இங்கே எப்போதுமிருக்கிறது. "எங்கள் மதத்தை நம்பினால் நீங்கள் பத்திரமாகப் பாதுகாக்கப்படுவீர்" என உங்கள் நாட்டினர் எங்கள் நாடு வந்து கூறுகின்றனர். சமூகத்தின் கீழ்த்தட்டில் உள்ள எங்கள் நாட்டு மக்கள் அவர்கள் சொல்வதை நம்புகிறார்கள். அவர்கள் பிச்சைக்காரராக மாற்றம் பெறுகிறார்கள். அவ்வளவே, வேறு எவ்வித மாறுதலுமில்லை. இதுவா மதம்? இது அரசியல்; மதமன்று. இது மதம்தான் என்று நீங்கள் கூறலாம். மதம் என்பதன் பொருளை இழிவாக்கலாம். ஆனால் அது ஆன்மிகமன்று.

ஆண் பெண் ஆகிய இரு பாலருள் பல்லாயிரத்தில் சிலரே உயிர் வாழ்வை எண்ணுகின்றனர். மற்றையோர் ஆட்டுமந்தையினரே.

பல்லாயிரம் பேருள் சிலரே பிறவிப் பிணியினின்றும் விடுதலை பெறுதற்கு எண்ணுகின்றனர்; முயல்கின்றனர். விடுதலைபெற வழியுண்டா? என்பதே கேள்வி. வழியுண்டேல் அஃது ஆன்மாவில்தான் உளது; வேறெங்குமில்லை. வேறு மார்க்கங்களில் தேடியாயிற்று. வழி காணவில்லை. அமைதி ஏற்படவில்லை. இவ்வளவு தத்துவங்களும் பிறவும் இருப்பது ஒன்றே இதற்குச் சான்று.

விடுதலை வழி நமக்குள்ளேயுள்ளது என்கிறது யோக விஞ்ஞானம். நம்மை நாமே தனியாக்கிக்கொள்ளவேண்டும். உண்மை ஏதேனும் ஒன்றிருக்குமாயின் அது நாமே நமது சத்தே என்பதை நாம் உணர்வோம். இயற்கையால் அங்குமிங்கும் உந்தப்படுதல் ஒழிவோம்.

தோற்ற உலகு மாறும் தன்மையது; எப்போதும் மாறிக்கொண்டேயிருக்கிறது. மாறுதல் இல்லாத ஒன்றை அடைவதே நம் லட்சியம். நாம் அதுவாயிருக்கவிரும்புகிறோம். தனிப்பொருளை உணர விரும்புகிறோம். மாறுதலற்ற சத்தியப் பொருளை அறிய விரும்புகிறோம். அவ்வாறு அந்த உண்மைப்பொருளை உணராவகை நம்மைத்தடுத்து நிற்பது எது? சிருஷ்டி. சிருஷ்டியுள்ளம் சதா காலம் சிருஷ்டித்துக் கொண்டேயிருக்கிறது. அவ்வாறு சிருஷ்டி செய்யப்பட்டவற்றுடன் கலந்துவிடுகிறது. எனினும் கடவுளைக் கண்டறிந்தது சிருஷ்டியே என்பதை நாம் மறந்துவிடலாகாது. ஒவ்வோர் ஆன்மாவிலும் அந்தப் பூரணப்பொருளைக் கண்டறிந்தது சிருஷ்டியே.

முன்னர் கூறிய விளக்கத்துக்குத் திரும்புவோம். சித்தத்தை இந்த மாறுதல்களில் சிக்கவிடாது தடுத்து நிறுத்துவதே யோகம். இந்த சிருஷ்டியை நிறுத்திவிட்டால்—அது சாத்தியமானால்—அதன் பிறகு நமது உண்மை நிலையை நாமே அறிவோம். சிருஷ்டிக்கப்படாதது எதுவோ, சிருஷ்டிப்பது எதுவோ அது தோன்றும்.

யோகத்தின் முறைகள் பல. கடுமையானவை சில. அவற்றில் வெற்றி காண்பதற்கு நீண்ட பயிற்சி தேவை. எளியவை வேறு சில. விடாமுயற்சியும் வலிவும் உடையோர் இதைப் பயின்று பெரும் வெற்றி காண்பர். இயலாதோர் எளிய முறைகளைப் பின்பற்றிச் சிறிது பயன் பெறுவர்.

மனத்தை முறையாக ஆராய்ந்தால் அதனுடன் போராடி நிற்பது எவ்வளவு கடினம் என்பது விளங்கும். நாம் எல்லாரும் உடல்களானோம். நாம் ஆன்மா என்பதை அறவே மறந்துவிட்டோம். நம்மைப்பற்றி எண்ணும்போது உடல் ஒன்றே மனக்கண் முன் தோன்றுகிறது. உடல்தான் நாம் எனப் பேசுகிறோம். நாம் அனைவரும் உடலே. இந்த உடலினின்றும் ஆன்மாவைப் பிரித்தல் வேண்டும். எனவே பயிற்சி எங்கே தொடங்குகிறது? உடலில். ஆன்மா காட்சிதரும் வரை இப்பயிற்சி உடலிலே நடக்கிறது. இப்பயிற்சியின் உட்கருத்து யாதெனில் மனம் குவியப் பெறுதலே; தியான சக்தி பெறுதலே.

கிறிஸ்து பெருமான் மீண்டும் எப்பொழுது வருவார்?

இது பற்றி நான் பெரிதும் கருத்துச் செலுத்துவது இல்லை. முக்கியமான கொள்கை பற்றியே பேசவேண்டியவனாயிருக்கிறேன். கடவுள் மீண்டும் மீண்டும் அவதரித்துக் கொண்டேயிருக்கிறார்; கண்ணனாகவும் இராமனாகவும் புத்தராகவும் அவர் இந்தியாவிலே அவதரித்திருக்கிறார்; மீண்டும் அவதரிப்பார். இதையே நான் போதிக்க வேண்டியவன். உலகமானது ஐந்நூறு ஆண்டுகளுக்கு ஒருமுறை சீர் அழிந்து தாழ்கிறது எனவும், அதன் பிறகு ஆற்றல் மிகுந்த ஆன்ம அலை ஒன்று தோன்றுகிறது எனவும், அந்த ஆன்ம அலையின் மேலே ஒரு கிறிஸ்து வீற்றிருக்கிறார் எனவும், எளிதிலே மெய்ப்பித்துக்காட்ட இயலும்.

இப்பொழுது உலகம் எங்கும் ஒரு பெரிய மாற்றம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. சக்கரச் சுழற்சி போல, முறையாகச் சுழன்று சுழன்று ஏற்பட்டுவரும் மாற்றங்களுள் இது ஒன்று. வாழ்விலே உள்ள பற்றுக் கோட்டினையே தாம் இழந்து வருவதாக மனிதர் காணத் தொடங்கி உள்ளனர். அவர் எப்பக்கம் திரும்புவர்? கீழ் நோக்கியா? மேல்நோக்கியா? மேல் நோக்கியே திரும்புவர். இஃது உறுதி. எவ்வாறு அது கீழ் நோக்கி இருக்க இயலும்? உடைப்பிலே குதியுங்கள்; உங்கள் உடலாலும், ஆன்மாவாலும் அந்த உடைப்பை நிரப்புங்கள். உயிரோடு இருக்கையில், உலகம் சீர் அழிந்து தாழ்தலை நீங்கள் எவ்வாறு ஒப்புவீர்?

மனிதனுக்கும் கிறிஸ்துவுக்கும் உள்ள வேற்றுமை

தோற்றம் பெற்றுள்ள உயிர்களிலே வேறுபாடு பெரிதும் காண்கிறோம். தோற்றம் பெற்றுள்ள உயிராய் விளங்கும் நீங்கள் ஒரு போதும் கிறிஸ்துவாக முடியாது. களிமண்ணைக் கொண்டு ஒரு யானை செய்யுங்கள். அதே களிமண் கொண்டு ஒரு சுண்டெலியை அமையுங்கள். அவ்விரண்டையும் நீரிலே அமிழ்த்தி வையுங்கள். இரண்டும் ஒன்றாகிவிடும். களிமண் என்ற முறையிலே அவை எப்பொழுதும் ஒன்றே;

செய்யப்பட்ட பொருள்கள் என்ற முறையிலேதான் அவை மாறுபட்டவை. பரம்பொருளால் ஆனவரே கடவுளும் மனிதரும். பரப்பிரம்மம் அல்லது எங்கும் நிறைந்தவர் என்ற முறையிலே நாம் எல்லாரும் ஒருவரே. ஆனால் தனித்த உயிர்கள் என்ற முறையிலே கடவுளே என்றுமுள தலைவர்; நாமோ என்றும் பணியாளர்.

உங்களிடத்திலே மூன்று பொருள்கள் உள்ளன. (1) உடல், (2) மனம், (3) ஆன்மா. ஆன்மா தொட்டு அறிய முடியாத ஒன்றாகும். மனம் பிறப்பும் இறப்பும் உடையது. அவ்வாறே உடலும். நீங்கள் அந்த ஆன்மாவே. என்றாலும், நீங்கள் உங்களைப் பலகாலும் உடல் என்றே எண்ணிக் கொள்கிறீர்கள். "நான் இங்கே இருக்கிறேன்" என்று ஒருவன் சொல்லும்போது, அவன் தன் உடலையே நினைத்துக் கொள்கிறான். அடுத்த வினாடியிலே நீங்கள் மிக உயர்ந்த நிலையில் இருக்கிறீர்கள். அப்போது, "நான் இங்கே இருக்கிறேன்" என்று நீங்கள் சொல்வதில்லை. ஒருவன் உங்களை ஏசுகிறான், அல்லது சபிக்கிறான். அதற்காக நீங்கள் சீற்றம் கொள்வதில்லை. அப்போது நீங்கள் ஆன்ம நிலையில் இருக்கிறீர்கள். "நானே மனம் என்று நான் நினைக்கும் போது, எக்காலத்திலும் அணையாத பெருஞ்சோதியாய் விளங்கும் உம்முடைய கூறிலே, ஒரு தீப்பொறியாய் இருக்கிறேன்; என்னை ஓர் ஆன்மாவாக நான் உணரும் போது, "நீரும் நானும் ஒன்றே" என்று உரைக்கிறான் பக்தன். ஆன்மாவைக்காட்டிலும் பழைய பொருளா மனம்?

கடவுள் ஆராய்ந்து பார்ப்பது இல்லை. உங்களுக்கு ஒன்று தெரிந்தால் அதை நீங்கள் ஏன் ஆராய்ந்து பார்க்க வேண்டும்? சில கருத்துகளைத் தெரிந்து கொள்வதற்காகவும், அவற்றைக் கொண்டு ஒரு பொதுவான தத்துவத்தை நிலை நாட்டவும், நாம் எப்பொழுதும் புழுக்களைப் போல நெளிந்து கொண்டே இருப்பது, பலவீனத்தின் அறிகுறியாகும். அவ்வாறு செய்த முயற்சி எல்லாம் தவிடுபொடி ஆகிவிடுகின்றன. மனத்திலும், ஒவ்வொரு பொருளிலும், ஆன்மா பிரதிபலித்து நிற்கின்றது. ஆன்மாவின் ஒளியே மனம் உணர்ச்சி பெறச் செய்கிறது. ஒவ்வொரு பொருளும் ஆன்மாவின் விளக்கமே. மனங்கள் எல்லாம் கண்ணாடிகள் போன்றவை. அன்பு,

அச்சம், பகைமை, ஒழுக்கமின்மை என்று நீங்கள் குறிப்பிடுவன எல்லாம் ஆன்மாவின் பிரதிபிம்பங்களே. பிரதிபலிக்கும் கண்ணுடி மாசு அடைந்திருந்தால், பிரதிபிம்பங்களும் மாசுற்றுத் தெளிவு இல்லாது இருக்கும்.

கிறிஸ்துவும் புத்தரும் ஒருவரா?

புத்தரே ஏசுவாய் அவதரித்தார் என்பது என் உள் மகிழ் கருத்தாகும். "நான் ஐந்நூறு ஆண்டுகளில் திரும்பவும் வருவேன்" என்று புத்தர் தீர்க்க தரிசனமாகக் கூறியுள்ளார். அந்த ஐந்நூறு ஆண்டு காலத்தில் இங்கே கிறிஸ்துநாதர் தோன்றினுர். மனித இயல்பு என்ற முழுப் பரப்பிலே தோன்றிய இருபெரும் ஜோதி என இவர்கள் விளங்குகிருர்கள். இருவர் தோன்றினர். ஒருவர் புத்தர்; இன்னெருவர் கிறிஸ்து. இவ்விருவரும் இரு பெரும் ஜீவன்கள். பேராற்றல் பெற்ற மகான்கள்; கடவுளர். இவ்விருவரும் உலகப் பரப்பணைத்தையும் தமக்குள் பங்கிட்டுப் பிரித்துக் கொண்டனர். அறிவானது சிறு அளவிலாதல் உலகிலே எங்கெங்கு தோன்றி இருப்பினும், அங்கெல்லாம் புத்தரையோ அல்லது கிறிஸ்துவையோ வணங்குகின்றனர். அவர் போன்ருர் மீண்டும் வருதல் அருமை. எனினும், அத்தகையோர் தோன்றுவர் என்பது எனது நம்பிக்கை. ஐந்நூறு ஆண்டுகளுக்குப் பிறகு மகம்மது தோன்றினுர். அதன் பிறகு ஐந்நூறு ஆண்டுகள் கழித்துத் தோன்றினுர் புரொட்டெஸ்டன்ட்டு மதத்தைப் பரப்பிய லூதர். அதன் பின் உள்ள காலமே இப்பொழுது நடந்துவருகிற காலமாகும். சில ஆயிரம் ஆண்டிலே புத்தர், கிறிஸ்து ஆகிய இவ்விருவரும் தோன்றியது ஓர் அரிய செயலாகும். அத்தகைய இருவர் போதாவோ? கிறிஸ்துவும் புத்தரும் கடவுளர். மற்றவர்கள் தீர்க்க தரிசிகள். இவ்விருவர்தம் வாழ்க்கை வரலாறுகளைப் படிப்பீர்; ஆற்றல் என்பது எவ்வாறு இவர்களிடத்திலே விளக்கமுறுகிறது என்பதைக் கண்டறிவீர். அமைதியானவர்கள், எதையும் எதிர்க்காத பண்புடையவர்கள், எதையும் பெற்றிராத பரம ஏழைகள், தங்களிடத்தே ஒரு காசும் இல்லாதவர்கள், தங்கள் வாழ்நாள் முழுதும் இகழப்பட்டவர்கள், சமயப்பகைவர்கள், மூடர்கள்,

என்று இகழப்பட்டவர்கள். இவர்கள் மனித சமுதாயத்திலே செலுத்திய மிகப் பெரிய ஆன்ம பலத்தை நினைத்துப் பாருங்கள்.

பாவத்திலிருந்து விடுதலை

அஞ்ஞானத்திலிருந்து விடுதலை பெறுவதன் மூலம் நாம் நம்மைக் காப்பாற்றிக்கொள்ளவேண்டும். அவ்வாறு காப்பாற்றிக் கொள்வது வாயிலாகத்தான் நாம் பாவத்திலிருந்து விடுதலை பெறவேண்டும். அஞ்ஞானம் என்ற காரணத்திலிருந்து பாவம் என்ற காரியம் தோன்றுகிறது.

தெய்வ அன்னையிடம் திரும்புதல்

தாதியானவள் குழந்தையை எடுத்துக்கொண்டு தோட்டத்திற்குப் போய் அங்கு அதனோடு விளையாடிக்கொண்டிருக்கையில், வீட்டுக்குள் வந்துசேரும்படி குழந்தைக்குத் தாயானவள் செய்தி அனுப்புகிருள். விளையாட்டிலே முழுக் கவனத்தையும் செலுத்திவிருக்கிற குழந்தை, "நான் வரமாட்டேன்; எனக்கு உணவு வேண்டுவதில்லை" என்று சொல்கிறது. சிறிது நேரம் சென்ற பிறகு களைத்துப்போன குழந்தை, "நான் என் அம்மாவிடம் போகிறேன்" என்கிறது. "இதோ பார், ஒரு புதிய பொம்மை!" என்று தாதி கூறுகிருள். "பொம்மை வேண்டாம். அம்மாவே வேண்டும்" என்று அழுகிறது. தாயிடம் சேரும்வரை அழுகையை நிறுத்துவதில்லை. நாம் எல்லாரும் குழந்தைகளே. கடவுளே தாய். பணம் செல்வம் என்ற இவை போன்ற பொருள்களை எல்லாம் தேடுவதிலே நாம் கருத்துச் செலுத்தி வருகிருேம். என்ருலும், நாம் விழிப்புறும் நேரம் ஒன்று தோன்றியே தீரும். அப்பொழுது, பணத்தையே தேடி அலையும் இந்த இயல்பானது மேலும் பல விளையாட்டுப் பொருள்களைத் தர முயலும். "வேண்டா; இதற்கு முன் பெற்றதே போதும், ஆண்டவனிடம் செல்வேன்" என்று கட்டாயம் நாம் சொல்வோம்.

கடவுளிடமிருந்து நீங்கிய தனித்த தன்மை என்பதே இல்லை

நாம் கடவுளிடமிருந்து தனியாகப் பிரித்து எடுத்து அகற்ற முடியாத நிலையில் உள்ளோம். நாமும் அவரும் எப்பொழுதும் ஒன்றே என்ருல், நமக்கென ஒரு தனித்த நிலை

இல்லையா? ஆம், உண்டு. அதுவே கடவுள். நம்முடைய தனித்த இயல்பே கடவுள் என்பது. இந்த உண்மையான தனித்த நிலையை நீங்கள் இப்பொழுது பெற்றில்லை. இந்த உண்மையான நிலையை நீங்கள் இப்பொழுது அடைந்து கொண்டிருக்கிறீர்கள். பிரித்து எடுத்து அகற்ற முடியாத தன்மையே தனித்த தன்மை என்பதாகும். நாம் இப் பொழுது பெற்றிருக்கிற நிலையைத் தனித்த நிலை என்று எவ் வாறு கூற இயலும்? ஒருமணி நேரத்திலே வேறு ஒரு வழி யிலே சிந்திக்கின்றீர்கள்; இரண்டு மணி நேரம் கடந்த பிறகு மற்றுமோர் வழியிலே சிந்திக்கின்றீர்கள். தனித்த நிலை என்பது என்றுமே மாறாத நிலையாகும். இப்பொழுது உள்ள நிலையானது ஊழிக்காலம் வரையில் அப்படியே மாறாமல் நீடித்திருப்பது ஒரு பெரிய ஆபத்தாகும். அப்படி மாற்றமே இல்லையானால் ஒரு திருடன் எப்பொழுதும் திருட னாகவே இருப்பான்; ஒரு தீயோனும் அவ்வாறே தீயோனா கவே இருப்பான்; ஒரு குழந்தை மரிக்குமானால் அது ஒரு குழந்தையாகவே இருக்கும். உண்மையான தனித்த நிலை என்பது எப்பொழுதும் மாறுபடாத நிலையாகும்; அது எப் பொழுதும் மாறவே மாறாது. அதுவே, நம் அகத்தே வீற் றிருக்கும் கடவுளாகும்.

விதியை வகுப்பவன் மனிதனே

தென்னிந்தியாவிலே ஆற்றல் மிக்க குலம் ஒன்று இருந்தது. அக்குலத்தவர்கள் அப்போதைக்கப்போது வாழ்ந்த சிறந்த மனிதர்களின் ஜாதகங்களை எல்லாம் கணித்து, அவற்றைத் திரட்டிவைப்பது என்ற விதியை ஏற்படுத்திக்கொண்டார்கள். அதன்படி அவர்களுடைய வாழ்நாளில் என்ன என்ன நிகழ்ச்சிகள் முக்கியமாக நிகழும் என்று சோதிடர்கள் எழுதி வைத்திருந்த குறிப்புகளோடு, அதன் பிறகு வாழ்க்கையில் நடந்த நிகழ்ச்சிகளை ஒப்பிட்டுப் பார்த்தார்கள். இப்படியே ஓர் ஆயிரம் ஆண்டுகாலம் செய்து வந்தார்கள். அதன் பிறகு சில ஒற்றுமைகளைக் கண்டார்கள். அவ்வொற்றுமைகளைக் கொண்டு, பொது விதிகளை வகுத்துக் கொண்டார்கள். அவற்றை எல்லாம் ஒரு பெரிய புத்தகமாகச் செய்து கொண்டார்கள். இவ்வாறு செய்து வந்த குலம் அழிந்து போயிற்று. என்றாலும், சோதிடர்களது குடும்பமானது வாழ்ந்து வந்தது; அந்தப் புத்தகமும் அவர்களிடத்தே இருந்தது. சோதிடம் இவ்வாறே தோன்றி இருக்கலாம். சோதிடத்தின் சிறுசிறு அமிசங்களிலுங்கூட அளவு கடந்த கருத்துச் செலுத்துதல் இந்துக்களை மிகவும் கெடுத்து வருகிற மூடப் பழக்கங்களுள் ஒன்றாகும்.

கிரேக்கரே முதன் முதல் சோதிடத்தை இந்தியாவிற்கு அளித்தனர்; இந்துக்களிடமிருந்து வான சாத்திரத்தை எடுத்துச் சென்றனர். இது என் கருத்து. இந்தியாவிலே பழைய பலி பீடங்கள் ஒரு குறிப்பிட்ட க்ஷேத்திரக் கணிதப் படம் போன்று கட்டப்பட்டு இருப்பதைக் காணலாம்; மேலும் அங்கு, வானத்திலே விண்மீன்கள் குறிப்பிட்ட இடங்களில் இருக்கும் போது, சில காரியங்களைச் செய்தாக வேண்டும். ஆகவே, கிரேக்கர் இந்துக்களுக்குச் சோதிடத்தைத் தந்தனர் என்றும், இந்துக்கள் அவர்களுக்கு வான சாத்திரத்தைத் தந்தார்கள் என்றும் நான் கருதுகிறேன்.

இன்னின்னவை நிகழப்போகின்றன என்று வியப்புறும்படி முன் கூட்டியே சொன்ன சில சோதிடர்களை நான் பார்த்திருக்கிறேன். விண்மீன்களைக் கொண்டு மட்டும், அல்லது

அவை போன்றவற்றைக் கொண்டு மட்டும், அவர்கள் அந் நிகழ்ச்சிகளை முன்கூட்டியே சொன்னார்கள் என்று நான் நம்ப வில்லை. வந்தவர்களது மனத்தில் உள்ளதை அவர்களது முகக்குறிப்பைக் கொண்டு அறிந்து கூறியனவாகும் அவற் றிற் பல. சில சமயங்களில் வியப்புறும் வண்ணம் அவர்கள் சோதிடம் கூறினார்கள். எனினும் பெரும்பாலான சமயங் களில் அவர்கள் கூற்று பொய்யாகின்றது. இலண்டன் மாநக ரிலே இளைஞன் ஒருவன் என்னிடம் வந்து, "அடுத்த ஆண்டு நான் எவ்வாறு இருப்பேன்" என்று கேட் பது வழக்கம். "ஏன் அவ்வாறு கேட்கிறாய்?" என்று நான் அவனை வினவினேன். "நான் என் பணத்தை எல்லாம் இழந்து மிகமிக ஏழையாய் ஆகிவிட்டேன்" என்று அவன் மொழிந்தான். பலருக்குப் பணம் ஒன்றே கடவுள். பணம் இல்லாதவர் எல்லாவற்றை யும் இழந்து, சக்தியற்றிருப்பதாக உணரும் போது, பணம் சம்பாதிப்பதற்கு எல்லாவிதமான விபரீத முறைகளையும் கையாளுகின்றார்கள்; சோதிடமும் பிறவும் நாடுகின்றார் கள். 'விதி என்போர் கோழையர்; மூடர்' என்னும் சமஸ் கிருதப் பழமொழி ஒன்று கூறுகிறது. ஆற்றல் மிக்கோன் எழுந்து நின்று, "எனக்குரிய விதியை நான் வகுப்பேன்" என்று மொழிவான். முதுமையை அடைந்து கொண்டிருப்ப வர்களே விதியைப் பற்றிப் பேசிக்கொண்டிருப்பார்கள். இளம் பருவத்தே உள்ள மக்கள் பொதுவாகச் சோதிடத்தை நாடுவதில்லை. கிரகங்களின் ஆற்றலுக்குக் கட்டுப்பட்டவர் களாக நாம் இருக்கலாம். என்றாலும், நாம் அதைப் பெரிதாக நினைத்துக் கொண்டிருத்தல் ஆகாது. "விண்மீன்களைக் கொண்டு கணக்கிட்டும், இவை போன்ற வேறு தந்திரங் களைக் கையாண்டும் வயிறு வளர்ப்பவர்களை நாம் புறக் கணிக்க வேண்டும்" என்று புத்தர் கூறுகிறார். இந்துவாகப் பிறந்தவர்களுள் புத்தர் மிகவும் பெரியவர். ஆகையால், உண்மை உணர்ந்தே அவர் அவ்வாறு சாற்றியுள்ளார். நட்சத் திரங்கள் வரட்டுமே; அவற்றால் என்ன தீங்கு ஏற்படும்? ஒரு விண்மீன் என் வாழ்க்கைக்கு இடையூறு விளைக்கும் என்றால், அத்தகைய வாழ்க்கையானது ஒரு சிறு காசுக்கும் உதவாது. சோதிடமும், மர்மமான இப்பொருள்கள் எல்லா மும், பொதுவாகப் பலவீனம் அடைந்துள்ள ஒரு மனத்தின்

அறிகுறிகளாகும். ஆகவே, இத்தகைய எண்ணங்கள் உங்கள் மனத்தை உறுத்தும் நிலை ஏற்படுகிறபோது, உடனே மருத்துவர்களை அணுக வேண்டும்; நல்ல உணவும் நல்ல ஓய்வும் கொள்ள வேண்டும்.

ஒரு தோற்றத்திற்கு உரிய விளக்கத்தை அந்தத் தோற்றத்தின் இயல்பிலிருந்தே நீங்கள் பெறக்கூடும் என்றால், அந்த இயல்பிற்கு வெளியே அந்த விளக்கத்தைக் காண முயல்வது அறிவின்மையாகும். உலகமானது தன்னைத் தானே விளக்கி நிற்குமானால், அந்த விளக்கத்தை அதற்கு வெளியே காண முயல்வது அறியாமையாகும். மனித வாழ்க்கையிலே தோன்றும் தோற்றங்கள் பலவற்றை நீங்கள் கண்டிருக்கிறீர்கள். அவற்றிலே மனிதனது ஆற்றலைக் கொண்டு விளக்க முடியாத தோற்றங்கள் எவற்றையேனும் நீங்கள் எப்பொழுதாவது கண்டது உண்டா? ஆகவே, நட்சத்திரங்களையோ, இந்த உலகத்திலுள்ள வேறு எதனையோ நாடுவதால் என்ன பயன்? என்னுடைய இக்கால நிலைமைக்கு என்னுடைய ஊரே போதிய விளக்கமாகும். ஏசுநாதருக்கும் இதுவே பொருந்தும். அவர் தந்தையார் ஒரு தச்சரே என்பதை நாம் அறிவோம். அவரது ஆற்றலுக்கு உரிய விளக்கத்தை அறிவதற்கு நாம் வேறு எவரிடமும் செல்லவேண்டுவது இல்லை. அவரது முற்பிறவியின் பயனாகவே அவர் தோன்றினார். அந்த முற்பிறப்பு முழுதும் இந்த ஏசுநாதர் தோன்றுவதற்கான ஆயத்தமே. விலங்கு உடல்களையே மீண்டும் மீண்டும் புத்தர் பெற்று வந்தார். தாம் இறுதியிலே எவ்வாறு புத்தரானார் என்பதை அவர் சொல்லியிருக்கிறார். ஆகவே, விளக்கம் பெறுவதற்காக நட்சத்திரங்களை நாடுவதால் என்ன பயன்? அவை ஏதோ ஒரு சிறு ஆதிக்கத்தைச் செலுத்தி வந்தாலும் வரலாம். அந்த நட்சத்திரங்களைப் புறக்கணிக்க வேண்டுவது நமது கடமை தவிர, அவை சொல்வதைக் கேட்டுக் கோழைகளாவது நமது கடமை ஆகாது. நான் போதிப்பதிலே முக்கியமானவற்றில் முதலாவதாக வற்புறுத்துவது இதுவே: அதாவது, ஆன்ம பலவீனத்தையோ, மனபலவீனத்தையோ, அல்லது, உடலின் பலவீனத்தையோ உண்டுபண்ணுகிற எதையும் உங்கள் கால் விரல்களாலும் தொடுதல் ஆகாது என்பதே.

மனிதனது அகத்தே இருக்கும் இயற்கையான ஆற்றலின் தோற்றமே சமயமாகும். அளவிலா ஆற்றல் விசை ஒன்று இந்தச் சிறு உடலுக்குள்ளே சுருள்சுருளாகச் சுருட்டி வைக்கப்பட்டிருக்கிறது. அந்தச் சுருளானது விரிந்து கொண்டே இருக்கிறது. அது விரிந்துகொண்டே போகப் போக, உடல்கள் ஒன்றின் பின்னே ஒன்ருகத் தோன்றி வருவதும் போதவில்லை. ஆகவே அந்த விசையானது இந்த உடல்களை எறிந்துவிட்டு, மிக உயர்ந்த உடல்களை எடுத்துக் கொள்கிறது. இதுவே மனிதனது வரலாறு; சமயத்தின் வரலாறு; நாகரிகத்தின் வரலாறு; முன்னேற்றத்தின் வரலாறு. கட்டுண்டு கிடக்கும் இராட்சத வலிமை படைத்த **புரோமீதியஸ்***. தன் கட்டுக்களைத் தானே அழித்துக்கொண்டு வருகிருன். ஆற்றலானது எப்பொழுதும் வெளிப்பட்டுக் கொண்டே இருக்கும். சோதிடம் போன்ற கருத்துகளை எல்லாம், அவற்றில் ஒரு கடுகு அளவு உண்மை இருந்தாலும், புறக்கணித்தே தீர வேண்டும்.

ஒரு சோதிடனைப் பற்றிய பழைய கதை ஒன்று உண்டு. அவன் ஓர் அரசனிடம் சென்று, "நீங்கள் ஆறு மாதங்களில் இறந்துவிடப் போகிறீர்கள்" என்று கூறினன். அரசன் அஞ்சினன். அவ்வச்சம் என்செய்தது? சாகும் நிலைக்கு அவனை உந்தியது. அவனுடைய மந்திரி நுட்பபுத்தி படைத்தவன். 'இந்தச் சோதிடர்கள் மூடர்கள்' என்று அவன் அரசனிடம் கூறினன். மந்திரி கூறியதை அரசன் நம்பவில்லை. மீண்டும் சோதிடனை அரண்மனைக்கு வரவழைத்தல்லாது வேறு வழியால் சோதிடர்களை மூடர்கள் என அரசனுக்குக் காட்ட முடியாது என்பதை மந்திரி கண்டான். சோதிடன் வந்ததும், அவன் கணித்த கணக்குகள் சரிதானு என்று மந்திரி கேட்டான். அவற்றில் ஒருதவறும் இருக்கவே இயலாது என்று கூறி, மந்திரியைத் திருப்தி செய்வதற்காக,

---

* புரோமீதியஸ் என்பான் திதான் பாபெதஸ் என்பானுக்கு மைந்தன்; எபிமிதியஸ் என்பானுக்கு உடன்பிறந்தவன். அவன் களிமண்ணுல் மனிதனைச் செய்து, உயிர் கொடுக்கச் சுவர்க்கத்திலிருந்து தீயைத்திருடிக் கொணர்ந்தான். ஜியஸ் என்னுங்கடவுளர் தலைவன் அவனைத் தண்டிக்க, ஒரு பாராங்கல்லிற் பிணித்து அவனைக் கொத்தித்தின்னுமாறு ஒரு கழுகை ஏவினன். கழுகு கொத்திய பகுதி இரவில் மீண்டும் வளர்ந்தது. ஹெர்குலீஸ் என்பான் வந்து கழுகைக் கொன்று விடுவிக்கும்வரை புரொமீதியஸ் பெரிதும் வருந்தினன்.

தான் கணித்த கணக்குகளையெல்லாம் மீண்டும் ஒரு முறை பார்த்து, அவை முழுதும் சரியே என்று சோதிடன் கூறினன். அரசனது முகம் நீல நிறம் போல் ஆயிற்று. "நீ எப்பொழுது இறப்பாய் என்று எண்ணுகின்ருய்?" என்று மந்திரி சோதிடனைக் கேட்டான். "பன்னிரண்டு வருடத்திலே" என்று விடை கூறினன் சோதிடன். மந்திரி தன் கத்தியை வேகமாக உருவி, சோதிடனது தலையை வெட்டி வீழ்த்தினன். "இவனைப் பொய்யன் என்று இப்பொழுது காண்கிறீர்களா? இவன் இந்த விநாடியே இறந்து போனன்!" என்று அரசனிடம் சொன்னன்.

உங்கள் நாடு உயிர்வாழவேண்டும் என்று நீங்கள் விரும்பினல், இவற்றை எல்லாம் நீங்கள் அணுகுவதே கூடாது. பொருள்கள் உண்மையிலே நல்ல பொருள்களா என்பதைச் சோதித்து அறிவதற்கு உரிய ஒரே சோதனை அவை நம்மைப் பலம் அடையச் செய்கின்றனவா என்று கண்டறிவதே ஆகும். நல்லது வாழ்வு அளிக்கும்; தீயது சாவைத் தரும். சோதிடம் முதலிய இந்த மூடநம்பிக்கைக் கருத்துகள் காளான்கள் போல் உங்கள் நாட்டில் தோன்றியுள்ளன.

தர்க்க முறையில் ஆராய்ந்து பார்க்கும் திறமை இல்லாத பெண்டிர் அவற்றை நம்பும் ஆர்வத்தோடு இருக்கின்றனர். பெண்டிர் தமது விடுதலைக்காக முயன்றுகொண்டிருக்கின்றனர்; ஆதலால், அவர்கள் இன்னும் அறிவிலே தேறியவர்களாகாமலே இருக்கின்ருர்கள். தலைப்பிலே காணும் செய்யுள் வரிகளை ஒருத்தி மனப்பாடம் செய்துவிட்டு, **பிரௌனிங்** என்பார் புதிய கவிகள் எல்லாம் தனக்குத் தெரியும் என்று கூறுகிருள். மற்றும் ஒருத்தி ஒரு தொடர்பைச் சேர்ந்த மூன்று சொற்பொழிவுகளைக் கேட்டுவிட்டு, இந்த உலகிலுள்ள எல்லாம் தனக்குத் தெரியும் என்று எண்ணுகிருள். பெண்களுக்கு இயல்பாகவே அமைந்திருக்கும் மூட நம்பிக்கையை அவர்களால் விலக்க இயலவில்லை என்பதே ஓர் இடராய் இருக்கிறது. அவர்களிடம் நிரம்ப பணம் இருக்கிறது; ஆனல், அவர்களது கல்வி அறிவோ சிறிது. அவர்கள் இப்பொழுது இருக்கும் நிலையைவிட்டு மேலான நிலைக்குச் செல்லும் நிலையில் இருக்கின்ருர்கள். அவர்கள் ஒரு திடமான நிலையை அடையும்போது, அவர்கள் சரியாகிவிடுவார்கள்.

இப்பொழுது அவர்களை வஞ்சகர்கள் ஏமாற்றி வருகின்றனர்கள். நான் சொன்னதைக் கேட்டு நீங்கள் வருந்த வேண்டாம். எவருக்கும் நான் தீமையை எண்ணவில்லை. ஆனால், நான் உண்மையைச் சொல்லியே தீரவேண்டும். சோதிடம் போன்ற இந்தப் பொருள்களுக்கு ஆளாவதற்கு எவ்வளவு எளியராய் இருக்கிறீர்கள் என்பதை நீங்கள் உணரவில்லையா? இப்பெண்கள் எவ்வளவு கபடமில்லாமல் இருக்கின்றனர்கள்! எல்லாரிடத்தும் மறைந்து ஒளிரும் தெய்வத் தன்மையானது எவ்வாறு எப்பொழுதும் அழியாது இருக்கிறது! இதை நீங்கள் காணவில்லையா? தெய்வத்திடம் எவ்வாறு விண்ணப்பம் செய்துகொள்ளவேண்டும் என்பதை அறிந்துகொள்வதற்கே சொல்கிறேன்.

என் வாழ்நாள் நீள நீள, ஒவ்வொரு மனிதனும் தெய்வத் தன்மை பொருந்தியவன் என்ற கருத்து என் உள்ளத்திலே உறுதிபெறுகிறது. ஒருவனோ, அல்லது ஒருத்தியோ, எவ்வளவு அற்பத் தனத்தோடு இருப்பினும், அவனிடத்திலோ, அல்லது அவளிடத்திலோ உள்ள தெய்வத் தன்மை அழிவதே இல்லை. அந்தத் தன்மையை அடைவது எப்படி என்பதை மாத்திரம் அவனும் அவளும் அறியாதிருக்கின்றனர். அவர்கள் உண்மையைக் காணவும் அறியவும் காத்து நிற்கின்றனர். அவர்களை எல்லா விதமான மூடச் செயல்களாலும் ஏமாற்றத் தீயோர் முயன்று கொண்டிருக்கின்றனர். ஒருவன் மற்றவனைப் பணத்திற்காக வஞ்சித்தால், அவன் ஒரு மூடன், போக்கிரி எனச் சொல்கிறீர்கள். மற்றவர்களை ஆன்மத் துறையிலே ஏமாற்றுவது எவ்வளவு பெரிய கொடுஞ் செயலாகும்; பாவச் செயலாகும்! இது மிகவும் கெட்டது. உண்மை என்பது உங்களைக் கட்டாயம் பலமுடையவர்களாகச் செய்ய வேண்டும்; மூடக்கொள்கைக்கு ஆளாகா வண்ணம் கட்டாயப்படுத்த வேண்டும்; இதுவே உண்மையைக் கண்டு அறிவதற்குரிய சோதனை. மூடக் கொள்கைகளுக்கு ஆளாகாதவாறு உங்களை உயர்த்துவதே தத்துவ ஞானிகளுடைய கடமை. இந்த உலகம், இந்த உடல், இந்த மனம் என்பவை கூட மூடக்கருத்துகளே. கட்டுத் திட்டம் என்பன சிறிதும் இல்லாத எத்தகைய ஆன்மாக்கள் நீங்கள்! மின்னுகிற விண்மீன்களால் நீங்கள் ஏமாற்றப்படவேண்டுமா! இது வெட்கப்படுவதற்கு உரிய ஒரு

நிலையாகும். நீங்கள் தெய்வங்கள். மின்னுகிற நட்சத்திரங்களின் வாழ்வே உங்களால் ஏற்பட்ட வாழ்வாகும்.

நான் ஒரு சமயம் இமையமலையிலே பிரயாணம் செய்தேன். பாதை எங்கள் முன்பு நீண்டே நின்றது. ஏழைத் துறவிகளாகிய எங்களைத் தூக்கிச் செல்ல எவரே வருவர். ஆகவே, நாங்கள் வழி முழுவதும் நடந்துதீர வேண்டியிருந்தது. எங்களிலே கிழவர் ஒருவர் இருந்தார். அந்தப் பாதையானது நூற்றுக்கணக்கான மைல்தூரம் உயர்ந்தும் தாழ்ந்தும் இருந்தது. அந்தக் கிழத் துறவியார் தம் முன்னே இருக்கும் பாதையின் நிலைமை கண்டு, "ஐயோ, இதை எப்படிக் கடந்து செல்வது! என்னால் இனிமேல் சிறிதும் நடக்க இயலாது; என் இதயம் வெடித்துவிடும்!" என்றார். "கீழே குனிந்து பாரும்" என்று நான் அவரிடம் சொன்னேன். அவரும் அவ்வாறே பார்த்தார். "உமது கீழ் இருக்கிற இந்தப் பாதையே நீர் இது வரையில் நடந்து வந்ததாகும். இந்தப் பாதையேதான் நீர் உமது எதிரில் பார்ப்பதும். எதிரில் இருக்கிற பாதையும் விரைவில் உமது கீழதாகிவிடும்" என்று நான் மொழிந்தேன். உயர்ந்த பொருள்கள் எல்லாம் உங்கள் காலடியில் இருக்கின்றன. நீங்கள் விரும்பினால், விண்மீன்களை விழுங்கிவிடலாம். இதுவே உங்கள் உண்மை நிலை. வலிமையுடனிருங்கள்; மூடக் கருத்துகளை உதறித் தள்ளுக; விடுதலை பெறுக.

கடவுள் : சகுணமும் நிர்குணமும்

சகுணக் கடவுள் என்று நீங்கள் எதைக் கூறுகிறீர்களோ அது நிர்குணக் கடவுளாகவும் இருக்கிறது. கடவுள் சகுணமாயும் நிர்குணமாயும் ஒரே சமயத்தில் இருக்கிறார். இது என் கருத்தாகும். உருவத்தோடு இருக்கிற உருவமற்ற சீவன்கள் நாம். அதீதப் பொருளில் இதை மொழிவோமானால் நாம் உருவமற்றவர்கள் என்று கூற வேண்டும். ஒப்புக் கருத்தில் சொன்னால், நாம் உருவம் பெற்றவர்கள் என்று கூறவேண்டும். நீங்கள் ஒவ்வொருவரும் எங்கும் பரவித் தோன்றி இருக்கும் சீவன்களே. இதைக் கேட்பதற்கு நீங்கள் முதலில் தயங்குவீர்கள். ஆனால், நான் உங்கள் முன் நிற்பது எவ்வளவு நிச்சயமோ, அவ்வளவு நிச்சயமானது. ஆன்மாவானது எங்கும் பரவி நிற்பதை எவ்வாறு தவிர்க்க இயலும்? அதற்கு நீளமும் இல்லை; அகலமும் இல்லை; வேறு எந்த விதமான சடப் பொருள் தன்மையும் இல்லை. நாம் எல்லாரும் ஆன்மாக்கள் என்றால், நம்மை ஓர் இடத்தில் அடைக்க இயலாது. இடத்தை இடந்தான் எல்லை வகுத்து அடக்கும். அவ்வாறே சடப் பொருளே சடப்பொருளை எல்லை வகுத்து அடக்கும். இந்த உடலுக்குள் நாம் அடக்கப்பட்டிருந்தால், நாம் ஒரு சடப்பொருளே. அப்போது உடலும் ஆன்மாவும் ஒவ்வொரு பொருளும் சடப் பொருளே. "இந்த உடலில் வாழ்கிறோம்" என்பதும், "இது ஆன்மாவுக்கு உடலாக அமைந்தது" என்பதும் சௌகரியத்திற்காக வழங்கும் சொற்களே. இவற்றிற்கு அப்பால் இச்சொற்களுக்குப் பொருளே இல்லை. ஆன்மா ஒரு வட்டம். அந்த வட்டத்திற்கு ஒரு மையப்புள்ளி உண்டு; ஆனால், அதற்குச் சுற்றளவு எங்கும் இல்லை என்று நான் வட்டத்திற்கு இலக்கணம் கூறியது உங்களில் பலருக்கு நினைவிருக்கும். உடல் இருக்கும் இடத்தில் அந்த மையப் புள்ளி இருக்கிறது. அங்கேதான் தொழில் அசைவுகள் தோற்றம் பெறுகின்றன. நீங்கள் எங்கும் பரவியிருக்கிறீர்கள் என்றாலும், ஒரு புள்ளியில் நீங்கள் செறிவுற்று இருப்பதை மட்டும் நீங்கள் உணர்ந்திருக்கிறீர்கள். அந்தப் புள்ளி சடப் பொருளின் துகள்களைச் சேர்த்துக் கொண்டு,

தன்னை வெளிப்படுத்துவதற்கு வேண்டிய கருவியாய் அமைந்து விடுகிறது. அது எக்கருவி மூலம் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறதோ, அதற்கு உடல் என்பது பெயர். ஆகவே, நீங்கள் எங்கும் இருக்கிறீர்கள். ஓர் உடல், அதாவது ஒரு கருவி பயனற்றுப் போகிற போது, மையப் புள்ளியாய் இருக்கும் நீங்கள் வேறு இடத்திற்கு நகர்ந்து சென்று, சடப் பொருள்களின் நுண்ணிய துகள்களையும் பருந் துகள்களையும் சேர்த்துக்கொண்டு, அது வாயிலாக அது தன் தொழிலைச் செய்து வருகிறது. இதுவே மனிதன். அப்படியானால், கடவுள் யார்? கடவுள் ஒரு வட்டம். அந்த வட்டத்திற்குச் சுற்றளவு எங்கும் இல்லை; ஆனால், அதன் மையப் புள்ளியோ, எங்கும் உண்டு. அந்த வட்டத்தின் ஒவ்வொரு புள்ளிக்கும் உயிர் உண்டு; உணர்வு உண்டு; சுறுசுறுப்பு உண்டு; தொழிலும் உண்டு. கட்டுப்பாடுகளை உடைய ஆன்மாக்களாகிய நம்மிடத்திலே, ஒரு புள்ளிக்கு மாத்திரம் உணர்வு உண்டு; அந்தப் புள்ளியானது முன்னும் பின்னுமாக நகரும். பிரபஞ்சத்தின் வாழ் நாளோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது, உடலின் வாழ் நாள் மிகமிகச் சிறிதே. அவ்வாறே கடவுளோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது, பிரபஞ்சமானது அணுவினும் சிறிதே. 'கடவுள் உரைக்கிறார்' என்று நாம் கூறும்போது, பிரபஞ்சம் வாயிலாகக் கடவுள் மொழிகின்றார் என்று நாம் கூறுகிறோம். காலம் இடம் என்ற எல்லைகளுக்கு அப்பாற்பட்டவர் கடவுள் என்று நாம் நவிலும் கடவுள் உருவம் இல்லாத சீவன் என்று நாம் சொல்கிறோம். இவ்வாறெல்லாம் நாம் சொன்னாலும் கடவுள் உண்மையில் மாற்றம் இல்லாத சீவனே.

ஓர் எடுத்துக்காட்டுக் கூறலாம். நாம் இங்கு நின்று கொண்டு கதிரவனைப் பார்க்கிறோம். நீங்கள் ஞாயிற்றை நோக்கிச் செல்ல விரும்புகிறீர்கள் என வைத்துக்கொள்வோம். பகலவனை நோக்கிச் சில ஆயிரம் மைல்கள் சென்ற பிறகு, முன்னே பார்த்ததைவிட மிகப்பெரிய வேறு ஒரு வெய்யோனைப் பார்ப்பீர்கள். மேலும் பரிதியை நோக்கி நெடுந்தூரம் சென்றுவிட்டீர்கள் என்று வைத்துக்கொள்வோம். அந்த இடத்திலே முன்பு பார்த்ததைக் காட்டிலும் மிகப் பெரியதோர் செஞ்சுடரோனைப் பார்ப்பீர்கள். இறுதியிலே பல கோடி மைல்கள் குறுக்களவு உள்ள பெரிய,

உண்மையான, தினகரனைப் பார்ப்பீர்கள். நீங்கள் பிரயாணம் செய்த தூரத்தைப் பல பகுதிகளாக—தங்குமிடங்களாக—பகுத்துக்கொள்வோம். ஒவ்வொரு தங்குமிடத்திலிருந்தும் சூரியனது நிழற்படத்தை எடுத்தீர்கள் என்றும், திரும்பி வந்த பிறகு அவற்றை எல்லாம் ஒப்பிட்டுப் பார்த்தீர்கள் என்றும் வைத்துக்கொள்வோம். அப்படங்கள் எல்லாம் வெவ்வேருகத் தோன்றும். ஏனெனில், முதல் தோற்றம் ஒரு சிறிய சிவந்த பந்தாகும்; ஆனல், உண்மை ஆதவன் பலகோடி மைல் குறுக்களவு உள்ள பெரிய உருவமாகும். என்ருலும், முதலில் பார்த்ததும் இறுதியில் பார்த்ததும் அதே விரிசோதிதான். இதைப் போன்றதே கடவுளைப் பற்றிய கருத்தும். எல்லையற்ற பரம்பொருளைப் பல்வேறு தங்குமிடங்களிலிருந்து பார்க்கிருேம்; பல்வேறு மன நிலைகளில் இருந்து பார்க்கிருேம். அறியாமையின் அடிப்படையில் இருப்பவன் கடவுளைத் தன் முன்னோர்களில் ஒருவராகக் காண்கிருன். அவன் அறிவில் உயர்ந்து அங்கிருந்து பார்க்கும் போது, ஒரு கோளின் ஆட்சித் தலைவராகக் கடவுளைக் காண்கிருன். அவன் மீண்டும் அறிவில் உயர்ந்து அங்கிருந்து பார்க்கும்போது, பிரபஞ்சத்தின் ஆட்சித்தலைவராகக் கடவுளைக் காண்கிருன். மிகமிக உயர்ந்த அறிவைப் பெற்ற மனிதன் தானே கடவுள் என்பதைக் காண்கிருன். கடவுள் ஒருவரே. பெற்ற வெவ்வேறு விதமான அனுபவங்கள் எல்லாம் அளவின் வேறுபாடே; தோற்றங்களின் வேறுபாடே; அறிவுநிலைகளின் வேறுபாடே.

அவதாரம்

கிறிஸ்துபெருமான் கடவுளே—சகுணக் கடவுள்; மனிதனாய் அவதரித்தார். கடவுள் பல தடவைகளில் பல்வேறு உருவங்களில் தோன்றியுள்ளார். இந்த உருவங்களைத்தான் நீங்கள் வாழ்த்தி வழிபட இயலும். கடவுளை அவரது தூய மெய்யான இயல்பிலே வாழ்த்தி வணங்க இயலாது. அத்தகைய கடவுளை வணங்குவது என்பது பேதமையாகும். ஏசு கிறிஸ்துவை, மனித உருக்கொண்ட தெய்வத்தை, நாம் தெய்வமாக வணங்கவேண்டும். உருவம் பெற்ற தோற்றமாக விளங்கும் கடவுள் நிலையினும் உயர்ந்த நிலையை நீங்கள் வணங்க இயலாது. ஏசுநாதர்வேறு கடவுள்வேறு என்றெண்ணி வணங்குவதை ஏசுவினும் வேருகிய கடவுளை எவ்வளவு விரைவில் விட்டுவிடுவார்களோ, அவ்வளவும் நல்லது. எகோவாவையும் அழகான ஏசுகிறிஸ்துவையும் நீங்கள் சிலையாகவோ சித்திரமாகவோ உற்பத்தி செய்வதை நினைத்துப் பாருங்கள். ஏசுவைக்காட்டிலும் உயர்ந்த ஒரு கடவுளை நீங்கள் உற்பத்திசெய்ய முயலும்போது, உங்கள் முயற்சி எல்லாம் பாழாகின்றன. கடவுள் ஒருவரே கடவுளை வணங்க முடியும். கடவுளை வணங்கும் உரிமையோ தகுதியோ மனிதனுக்கில்லை. உருவம் படைத்த தோற்றங்களாய் விளங்கும் கடவுள் நிலைக்கு அப்பாற்பட்ட கடவுளை வணங்கும் முயற்சியானது மனிதகுலத்திற்கே தீமை பயக்கும். உங்களுக்கு வீடுபேறு வேண்டுமானுல், ஏசுகிறிஸ்துவுடன் நெருங்கிய தொடர்பினைக் கொள்ளுங்கள். ஏனெனில், உங்கள் எண்ணத்தால் எண்ணுகிற எந்தக் கடவுளைக் காட்டிலும் மிக உயர்ந்த நிலையில் இருப்பவர் ஏசுவே. ஏசு ஒரு மனிதரே என்று நீங்கள் நினைப்பீர்களாயின், அவரை நீங்கள் வணங்கவேண்டாம். ஏசுவே கடவுள் என்ற உண்மை உங்களுக்குப் புலப்படுகின்றபோது, அவரை நீங்கள் வணங்கலாம். ஏசுவை ஒருமனிதர் என்று சொல்கிறவர்கள் அவரைக் கடவுளாக வணங்கினுல், அவர்கள் தெய்வ நிந்தனை என்ற குற்றம் புரிந்தவர்கள் ஆவார்கள். அவரை மனிதராகவும் கடவுளாகவும் கொள்வது ஆகாது. அவரை முழுதும் மனிதராகக் கொள்ளவேண்டும், அல்லது முழுதும் கடவுளாகக் கொள்ளவேண்டும். ‘‘**மகனைப்** பார்த்தவர் **தந்தையைப்**

பார்த்தவராவர்'' என்பது விவிலிய வேத வாக்கு. **மகனைப்** பார்க்காமல், **தந்தையைக்** காண உங்களால் இயலாது. **மகனைக்** காணுமலே **தந்தையைக்** காணலாம் என்பது பொருளற்ற வீண்பேச்சு; குழப்பம் மிகுந்த தெளிவிலாத் தத்துவம்; பகற்கனு, ஆன்ம வாழ்க்கையில் உங்களுக்கு ஒரு பற்றுக்கோடு வேண்டுமானுல், ஏசுவின் உருவிலே விளக்க முற்று நிற்கும் கடவுளை மிகவும் நன்ருகப் பற்றிக்கொள்ளுங்கள்.

தத்துவ மொழியிலே மொழிந்தால், ஏசுவாகவோ அல்லது புத்தராகவோ எவரும் மனித உருவில் வாழவில்லை என்று கூறவேண்டும்; அவர்கள் உருவங்களிலே நாம் கடவுளைக் கண்டதாகக் கூறவேண்டும். ஏசுவானவர் எப்பொழுதும் சிலுவையில் அறையப்படவில்லை என்றும், அது ஒரு தோற்றம் என்றும் ஏசுவை எவரும் சிலுவையில் அறைய இயலாது என்றும் குரானிலே மகம்மதுநபி மீண்டும் மீண்டும் கூறுகிருர்.

தத்துவ மதத்திலே மிகமிகத் தாழ்ந்த நிலை என்பது துவித நிலையாகும்; மிகமிக உயர்ந்த நிலை என்பது திரியேக நிலை—அல்லது மூன்றும் ஒன்ருய் இருக்கும் நிலையாகும். இயற்கையிலும் மனித ஆன்மாவிலும் கடவுள் ஊடுருவியிருக்கிருர். இதனைக் கடவுள், இயற்கை, ஆன்மா என்ற மூன்று கிளைகளாகப் பிரிந்து நிற்கும் முத்தத்துவ நிலையாக நாம் காண்கிருேம். அதே சமயத்தில் இம்மூன்றும் ஒருபரம் பொருளிலிருந்து உற்பத்தியான பொருள்களே என்ற உண்மையும் புலப்படும். இந்த உடலானது ஆன்மாவிற்குப் போர்வையாய் இருப்பது போல, இந்த ஆன்மாவானது கடவுளுக்கு ஓர் உடலாய் இருக்கிறது. நான் எப்படி இயற்கையின் ஆன்மாவாய் இருக்கிறேனே, அப்படியே கடவுளும் எனது ஆன்மாவிற்கு ஆன்மாவாய் இருக்கிருர். உங்களை சூழ்ந்திருக்கும் இயற்கையிலே, நீங்கள் அதன் நடுவாய் இருந்து, இயற்கை முழுவதையும் கண்டு வருகிறீர்கள். இந்த இயற்கை, ஆன்மா, கடவுள் என்ற மூன்றும் சேர்ந்து இந்தப் பிரபஞ்சம் என்ற தனித்து இயங்கும் பொருளை ஆக்கியிருக்கின்றன. ஆகவே, இவை மூன்றும் சேர்ந்த ஓர் ஐக்கிய நிலை என்பதும் உண்டு; இவை தனித்தனி என்ற தனி

நிலையும் உண்டு; வேறு ஒருவிதமான முத்தத்துவ நிலை என்பதும் உண்டு. இது பெரும்பாலும் கிறிஸ்தவர்களது முத்தத்துவ நிலை போன்றது. கடவுள் என்பவர் எல்லையிலாப் பரம்பொருள் ஆவர். கடவுளை அவரது எல்லையற்ற பரம் பொருளாக விளங்கும் தன்மையிலே நம்மால் காண இயலாது. "இதுவன்று; இதுவன்று" என்று மட்டுந்தான் நாம் அந்த நிலையைப் பற்றிப் பேச இயலும். என்றாலும், கடவுள் நிலைக்கு மிகமிக அணித்தே உள்ள சில பண்புகளை நாம் பெற இயலும். சத் என்பது முதற்பண்பு; சித் என்பது இரண்டாவது பண்பு; ஆனந்தம் என்பது மூன்றாவது பண்பு. இவை முறையே உங்களுடைய **தந்தை, மகன்,** பரிசுத்த ஆவி என்பனவற்றோடு பெரிதும் ஒத்திருக்கும். சத்தாகிய **பிதா**விடமிருந்து எல்லாப் பொருள்களும் தோன்றுகின்றன. மேலே குறிப்பிட்ட ஞானமே **மகன்.** கடவுளானவர் ஏசுவினிடத்தில் தோற்றமுற்று விளங்குவார். ஏசு பிறப்பதற்கு முன்பு கடவுளானவர் எங்கும் பரவி இருந்தார்; எல்லா உயிர்ப்பொருளிலும் இருந்தார். ஆனால் இயேசு கிறிஸ்துவிலேதான் நாம் கடவுளை உணரலானோம். இதுதான் கடவுள். பரிசுத்த ஆவி என்பதுதான் மூன்றாவதாகிய ஆனந்தமாகும் இந்த அறிவை நீங்கள் அடைகின்ற போது, நீங்கள் ஆனந்தம் அடைவீர்கள். ஏசுகிறிஸ்துவை உங்கள் உடலுக்கு உள்ளே பெறுகின்றபோது, நீங்கள் ஆனந்தம் பெறுவீர்கள். அவ்வாறு நீங்கள் ஆனந்தம் பெற்ற நிலையே இம்மூன்றும் ஒன்றுகலந்த நிலையாகும்.

பிராணுயாமம்

முதன் முதலில் பிராணுயாமத்தின் பொருள் பற்றிச் சிறிது அறிய முயல்வோம். பிரபஞ்சத்திலுள்ள எல்லாச் சக்திகளின் தொகுப்பே பிராணன் என்ற குறிப்பினைத் தத்துவ நூல் வழங்குகிறது. தத்துவ ஞானிகளின் கொள்கைப்படி இந்தப் பிரபஞ்சமானது அலைகள் போன்ற வடிவிலே வெளியாகிக் கொண்டிருக்கிறது. அது எழுகின்றது; மீண்டும் வீழ்கின்றது; உருகிப்போகின்றது. மீண்டும் இந்த விதமான வேறுபாடுகளுடன் எல்லாம் அது தோற்றமுற்று வெளிப்படுகின்றது. வெளியான வண்ணமே திரும்பவும் அது மெதுவாகவும் படிப்படியாகவும் சுருங்கித் தன் முன்னை நிலையை அடைகிறது. இவ்வாறு அது ஒரு நாடியின் துடிப்புப் போன்று இயங்கிக்கொண்டேயிருக்கிறது. இந்த உலகம் முழுவதும் சடப்பொருளாலும் சக்தியாலும் ஆக்கப்பட்டிருக்கிறது. ஆகாசம் என்றும் ஈதர் என்றும் சொல்லப்படுகிற ஒரு பொருளே உலகப் படைப்புக் காலத்தில் முதன் முதல் தோன்றிய சடப்பொருளாகும். இந்த முதற்பொருளிலிருந்தே கடினப் பொருளாகவும் நீர்ப்பொருளாகவும் இருக்கிற சடப் பொருள்கள் எல்லாம் தோன்றின என்று வடமொழித் தத்துவ ஞானிகள் கூறுகின்ருர்கள். மேலும் நாம் இயற்கையில் காணும் சக்திகள் எல்லாம் உற்பத்திக் காலத்தில் தோன்றிய ஆதி சக்தியின் தோற்றங்கள் ஆகும் என்றும், இந்த ஆதி சக்தியின் பெயர் பிராணன் என்றும் அதே வடமொழித் தத்துவ ஞானிகள் கூறுகின்ருர்கள். இந்தப் பிராணன் மேலே குறிப்பிட்ட ஆகாயம் என்பதோடு கலந்து இந்தப் பிரபஞ்சத்தை உண்டாக்குகிறது. நெடுங்காலத்திற்குப் பிறகு—இந்த நெடுங்காலத்தை **'யுகம்'** என்பர்—ஓய்வுக் காலம் என்பது ஒன்று உண்டு. ஒரு சுறுசுறுப்புக் காலமும், அதன் பிறகு ஓர் ஓய்வுக் காலமும் அமையும். இதுவே எல்லாவற்றிற்கும் பொதுவான இயற்கையாகும். இந்த ஓய்வுக் காலம் தொடங்கும் போது, இந்தப் பிரபஞ்சத்தில் நாம் பார்க்கிற உருவங்கள் எல்லாம், ஞாயிறு, திங்கள், விண்மீன்கள் என்ற இத்தோற்றங்கள் எல்லாம் உருகி உருகி மீண்டும் ஆகாயம் ஆகின்றன. இத்தகைய ஈதர் அல்லது

ஆகாயம் சிதறுண்டு சிதறுண்டு பரவிவிடுகின்றது. உடலி லிருக்கிற சக்திகளாகவும், நெஞ்சிலுள்ள சக்திகளாகவும், பூமியின் ஈர்க்கும் சக்தியாகவும், ஈர்ப்புச் சக்தியாகவும், இயக்கமாகவும், எண்ணமாகவும் உள்ள இந்தச் சக்திகள் எல்லாம் சிதறிப் போய், படைப்புக் காலத்தே தோன்றிய முதல் பிராணனில் கலந்துவிடுகின்றன. இதனுல், பிராணு யாமத்தின் அவசியத்தை நாம் அறியலாம். எங்கெங்கும் ஈதர் நம்மைச் சூழ்ந்து இருப்பது போலவும், இது நம்மை ஊடுருவி நிற்பது போலவும், நாம் காண்கிற ஒவ்வொன்றும் ஈதராலேயே ஆக்கப்பட்டிருக்கிறது. பனிக்கட்டித் துண்டு கள் ஏரியில் மிதப்பது போல நாம் ஈதரில் மிதந்துகொண் டிருக்கிறோம். பனிக்கட்டித் துண்டுகள் ஏரி நீரில் உற்பத்தி யாகும் போதே அந்த ஏரி நீரில் அவை மிதக்கின்றன. ஆகவே, இருக்கிற ஒவ்வொரு பொருளும் இந்த ஆகாயத் தால், ஈதரால் ஆக்கப்படுகின்றது; இந்த ஆகாயம்—ஈதர்— என்ற கடலிலேயே அது மிதந்துகொண்டுமிருக்கின்றது. சக்தி என்றும் ஆற்றல் என்றும் கூறப்படுகிற இந்தப் பிராணனுல் ஆன பரந்து விரிந்த கடலால் நாம் சூழப்பட்டிருக்கிறோம். இந்தப் பிராணனையே நாம் சுவாசிக்கிறோம். இந்தப் பிராண ஞலே நமது இரத்தம் உடல் முழுதும் சுற்றிச் சுற்றி ஓடிக் கொண்டிருக்கிறது. நமது நரம்புகளிலும் தசைகளிலும் இருக்கும் சக்தி இந்தப் பிராணனே. நமது மூளையிலும் இருக் கும் சக்தி இந்தப் பிராணனே. எல்லாச் சடப்பொருளும் ஒரே ஆகாயத்தின் பல்வேறு விதமான தோற்றங்களாய் இருப்பது போல, எல்லாச் சக்திகளும் இந்த ஒரே பிராணனுடைய பல்வேறு தோற்றங்களாகவே இருக்கின்றன. தூலப் பொரு ளுக்கு உரிய காரணங்களை நாம் நுண் பொருளிலே எப் பொழுதும் காண்கிறோம்.

இரசாயன சாஸ்திரியார் ஒருவர் கனத்த உலோகக் கனிப்பொருள் துண்டொன்றை எடுத்து அதைப் பிரித்துப் பிரித்து அதிலுள்ள மூலப் பொருள்களைப் பார்க்கிருர். அந் தக் கடினமான தூலப் பொருள்களைப் பார்க்கிருர். அந்தக் கடினமான தூலப் பொருள் எந்த எந்த நுண் பொருள் களாலே ஆக்கப்பட்டிருக்கின்றது என்பதை அவர் கண்டு பிடிக்க விரும்புகிருர். அவ்வாறே நாம் நம்முடைய கருத்தி லும் அறிவிலும் இருக்கிற நுண்பொருள்களைக் கண்டுபிடிக்க

விரும்புகிறோம். தூலப் பொருளின் விளக்கம் நுண்பொருளில் இருக்கிறது. தூலப் பொருள் காரியம்; நுண்பொருள் காரணம். நாம் பார்க்கிற, உணர்கிற இந்தத் தூல உலகத்திற்கு உரிய காரணமும் விளக்கமும் நமது எண்ணத்தின் அடியிலே இருக்கின்றன. நம்முடைய இந்த மனித உடலிலே தூல அசைவுகளையே நாம் முதலில் காண்கிறோம்: அவைகளே கைகளின் அசைவும் உதடுகளின் அசைவுமாம். இவற்றிற்கு உரிய காரணங்கள் எங்கு இருக்கின்றன? இந்தத் தூல அசைவுகளுக்கு உரிய காரணம் நுண்ணிய நரம்புகளே. இந்த நுண்ணிய நரம்புகளின் அசைவுகளை நாம் உணரவே இயலாது. நம் ஐம்புலன்களால் பார்க்கவோ அல்லது தொடவோ அல்லது அவற்றினுடைய ஆதாரத்தைக் கண்டு பிடிக்கவோ இயலாதபடி இந்த நரம்புகளின் அசைவுகள் நுண்ணியனவாய் இருக்கின்றன. இந்த நரம்புகளின் அசைவுகள் வேறு சில மிக நுண்ணிய அசைவுகளால் ஏற்படுகின்றன. அவற்றை நாம் எண்ணங்கள் என்கிறோம். அந்த எண்ணமும் மிகவும் பின்புறத்தே உள்ள வேறு ஒரு நுண்பொருளால் ஏற்படுகின்றது. அந்த நுண்பொருளே நமது ஆன்மா ஆகும். நம்மையே நாம் அறிந்து கொள்வதற்கு நமது புலன் அறிவை முதன் முதல் நுண்மைப் படுத்திக்கொள்ள வேண்டும். நமது உடலுக்குள்ளே எப்பொழுதும் ஏற்பட்டுக் கொண்டேயிருக்கும் நுண்மையான அசைவுகளைக் காண்பதற்கு இதுவரையில் கண்டு பிடிக்கப்பட்ட நுண்பொருள்மானியோ (மைக்ராஸ்கோப்போ) அல்லது வேறு கருவிகளோ நமக்கு உதவா. அத்தகைய கருவிகளைக் கொண்டு நாம் அந்த அசைவுகளை எப்பொழும் காணவே இயலாது. ஒரு யோகி தன் மனத்தை ஆராய்ந்து பார்ப்பதற்கு வேண்டிய கருவியை உற்பத்தி செய்துதரக் கூடிய ஒரு விஞ்ஞானத்தை அறிந்திருக்கிறான். அந்தக் கருவி அந்த மனத்திலேயே இருக்கிறது. மிக மிக நுண்மையான உணர்வுகளையும் அறிகிற ஆற்றல் பெறும் தகுதி மனத்திற்கு உண்டு. அத்தகைய தகுதியை வேறு எந்தக் கருவியும் எப்பொழுதும் பெற இயலாது.

இத்தகைய மிக மிக நுண்ணிய, உணர்ந்து அறியும் அறிவுச் சக்தி என்பதைப் பெறுவதற்காக நாம் தூலத்திலிருந்து தொடங்கவேண்டி இருக்கிறது. இந்தச் சக்தி நுண்மை

அடைய அடைய, நாம் நமது இயல்பின்—இயற்கையின் அகத்தே மிகமிக ஆழ்ந்து செல்கிறோம். முதலில் தூல அசைவுகள் நமக்குப் புலப்படும். அதன்பிறகு எண்ணத்தின் நுண்ணிய அசைவுகள் புலப்படும். அப்போது எண்ணம் தோன்றுவதன் முன்னே, அது தோன்றப் போவதை நாம் முன் கூட்டியே அறிந்து கொள்ளும் திறமுடையவராவோம்; அந்த எண்ணம் செல்லும் போக்கினையும், அது எங்கு முடிகிறது என்பதையும் நாம் அறிந்து கொள்வோம். சாதாரண மனத்திலே ஓர் எண்ணம் எழுகின்றது. அந்த எண்ணம் எவ்வாறு எழுந்தது? எங்கிருந்து வந்தது என்பதை அந்த மனம் அறியாது. அலைகள் எழுகின்ற கடல் போன்றது மனம். அக்கடலில் எழுகிற அலையை மனிதன் ஒருவன் பார்க்கலாம். என்றாலும், அந்த அலை அங்கு எப்படி வந்தது என்பதையோ, அல்லது எங்கு அது தோன்றிற்று என்பதையோ, எங்குச் சென்று அது அழிந்து போகும் என்பதையோ அவன் அறிய மாட்டான். எனவே, இவற்றிற்கு அப்பால் அவனால் செல்லவே இயலாது. ஆனால், புலன் அறிவு—உணர்ந்து அறியும் அறிவு—நுண்மை அடையும் போது, இந்த அலையின் போக்கை நெடுந்தூரம் காணலாம். அது நீரின் மேற்பரப்பில் தோன்றுவதன் முன்னரே அதை அறிந்து கொள்ளலாம். மேலும் அது மறைந்துபோகிற இடத்திலிருந்து நெடுந்தூரம் வரையில் அதன் செலவைத் தொடர்ந்து பார்க்க நம்மால் இயலும். அப்போது நாம் உள நூலை உள்ளது உள்ளபடியாக அறிய இயலும். இக்காலத்தில் மனிதர் இதைப் பற்றியோ அதைப் பற்றியோ எண்ணி, பல நூல்களை எழுதுகின்றனர். அவை யாவும் மக்களைத் தவறான பாதையில் கொண்டு செல்கின்றன. ஏனெனில், அவ்வாறு எழுதுகிறவர்கள் தங்களது மனத்தை ஆராய்ந்து பகுத்துணரும் ஆற்றல் இல்லாதவர்கள். மேலும், அவர்கள் தாங்கள் அறியாத பொருள்களைப் பற்றிப் பேசுவோர்களாகவும், தாங்கள் அறியாத பொருள்களைப்பற்றி ஊகம் செய்வோர்களாகவும் இருக்கின்றார்கள். எல்லா விஞ்ஞானமும் உண்மைகளையே அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். இந்த உண்மைகள் எல்லாம் காணத்தக்கனவாய் இருக்க வேண்டும். இந்த உண்மைகளினூடே மறைந்திருக்கும் ஒரு பொது விதியை நாம் அறிந்து வெளிப்படுத்த வேண்டும்.

ஒரு பொது விதியைக் கண்டுபிடிக்கும் அளவுக்கு உங்களிடம் சில உண்மைகள் சேர்கிற வரையில், நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கப் போகிறீர்கள்? ஆகவே பொது விதியைக் காண முயலும் முயற்சிகள் எல்லாம், நாம் அவ்வாறு காண்ப தற்குக் காரணமாக உள்ள பொருள்களைப் பற்றிய உண்மை களை நன்ருக அறிந்துகொண்டு, அந்த அறிவை அடிப்படை யாகக் கொண்டிருக்க வேண்டும். ஒருவர் ஒரு கொள் கையை எடுத்துக் கூறுகிருர். அதோடு வேறு பல கொள்கை களை ஒன்றின்பின் ஒன்ருகக் கூறிக்கொண்டே போகிருர். இவ்வாறு செய்து ஒன்றுக்கு ஒன்று சம்பந்தம் இல்லாத கொள்கைகளை நிரப்பி ஒரு முழுப் புத்தகத்தை உருவாக்கி விடுகிருர். அந்தக் கொள்கைகளுள் ஒன்றிலாவது கடுகளவு கருத்தோ பொருளோ இல்லை. உங்கள் மனத்தைப் பற்றிய உண்மைகளை நீங்கள் முதலில் தேடித்திரட்டிக் கொள்ள வேண்டும் என்றும், உங்கள் மனத்தைப் பகுத்துணர்ந்து அறியும் சத்திகளை நுண்மையாக்கிக்கொண்டே சென்று உள்ளே நடப்பதை நீங்கள் பார்க்கும் போதுதான் உங்கள் மனத்தைப் பற்றிய உண்மைகளைத் தேடித் திரட்ட இயலும் என்றும், இந்த உண்மைகளைத் தேடித் திரட்டிக்கொண்ட பிறகு நீங்கள் பொதுவிதியை எடுத்துக் கூறலாம் என்றும், அப்பொழுதுதான் உண்மையான உளநூல் விஞ்ஞானத்தை நீங்கள் அறிந்தவர்கள் ஆவீர்கள் என்றும் **ராஜயோகம்** என்ற விஞ்ஞானம் கூறுகிறது. நான் முன்னே கூறியபடி நுண்மை யான அறிவாற்றலைப் பெறுவதற்கு, தூலமாக அறியும் அறி வாற்றலின் உதவி நமக்கு முதலில்வேண்டும். வெளிப்படை யாகத் தோன்றும் செயலின் போக்கு, தூலமானது. இதைப் பற்றிக்கொண்டு மேலும் மேலும் சென்ருல், அறிவாற்றல் தொடர்ந்து படிப்படியாக நுண்மையாகி வரும்; முடிவிலே அது தன் நுண்மையின் உச்ச நிலையை அடைந்துவிடும். ஆகவே, இந்த உடலும் இதில் நாம் பெற்றிருக்கிற ஒவ் வொரு பகுதியும் ஒன்ருேடு ஒன்று வேறுபட்டவை அல்ல; அவை எல்லாம் கடினமான பகுதியிலிருந்து படிப்படியாக நுண்மை எய்திச் செல்லும் ஒரு சங்கிலித் தொடரின் வளை யங்கள் போன்றவை எனலாம். நீங்கள் எல்லாம் நிறைந்த ஒரு முழுமை. இந்த உடலானது உள்ளே இருப்பனவற்றின் கடினமான வெளித்தோற்றமாகும். வெளிப்புறம் தூலமானது;

உட்புறம் நுண்மையானது. இவ்வாறு உட்பகுதி எல்லாம் படிப்படியாக நுண்மை அடைந்துகொண்டே சென்று, ஆன்மாவில் நுண்மையின் உச்சநிலை ஏற்படுகிறது. இவ்வாறு ஆன்மாவை அடைகின்றபோதுதான், இந்த ஆன்மாவே இவ்வாறு எல்லாம் ஆகியிருக்கிறது என்பதையும், இந்த ஆன்மாவே முதலில் மனமாகி, பிறகு இந்த உலகமாயிற்று என்பதையும், இந்த ஆன்மாவைத் தவிர்த்து வேறு ஒன்றும் இல்லை என்பதையும், வேருகத் தெரிகிற இவை எல்லாம் அந்த ஆன்மாவிலிருந்து தோன்றிப் படிப்படியாக நுண்மையை இழந்து படிப்படியாகக் கடினமாகிய பகுதிகளே ஆகும் என்பதையும் அறிவோம். இதை ஓர் உவமையாகக் கொண்டு பார்த்தால், இந்த உலகம் முழுதும் ஒருதூலமான தோற்றம் என்பதையும், அதற்கு அப்பால் நுண்மையான அசைவுகள் இருக்கின்றன என்பதையும் அறிகிறோம். அந்த நுண்மையான அசைவைத்தான் நாம் கடவுளது சித்தம் என்கிறோம். அதற்கு அப்பால் எங்கும் பரவிநிற்கும் பரம்பொருள் இருக்கிறது. பரவிநிற்கும் இந்தப் பரம்பொருளே கடவுளாகிறது என்பதையும், அதன் பிறகு இந்த உலகமாகிறது என்பதையும் பின்னர் அறிவோம். இந்த உலகம் ஒன்று, கடவுள் மற்றொன்று, பரந்து நிற்கும் பரம்பொருள் இன்னொன்று என்பது கருத்தன்று. இவற்றையெல்லாம் ஊடுருவி நிற்கும் ஒரே ஐக்கியத்தின் பல்வேறு தோற்றங்களே இவை எனக்கொள்ளவேண்டும். இவை எல்லாம் நமது பிராணயாமத்திலிருந்து புலனாகின்றன. உடலுக்கு உள்ளே ஏற்பட்டுக்கொண்டே இருக்கிற இந்த நுண்மையான அசைவுகள் நமது சுவாசத்தோடு தொடர்புகொண்டவை. நாம் இந்தச் சுவாசத்தைப் பற்றிக்கொண்டு, இதை இயக்கவும் கட்டுப்படுத்தவும் கற்றுக்கொண்டால், படிப்படியாக நுண்மை அடைந்து செல்லும் அசைவுகளையும் நாம் மெல்ல அணுக இயலும். மேலும், அந்தப் பிராணனை—மூச்சை—பற்றிக்கொண்டே சென்றால், மன உலகை அடையலாம். சென்ற பாடத்தின் போது, நான் உங்களுக்குக் கற்றுத் தந்த முதல் மூச்சுப் பயிற்சியானது இப்போதைக்கு ஏற்றதோர் எளிய பயிற்சியே. இம் மூச்சுப் பயிற்சிகளில் சில கடினமானவை. கடினமான மூச்சுப் பயிற்சிகளுக்குத் தக்க உணவுக் கட்டுப்பாடும் வேறு கட்டுப்

பாடுகளும் பெரிதும் தேவை. அவற்றை உங்களுள் பெரும் பாலாரால் மேற்கொள்ள இயலாது. ஆதலால், நான் அவற்றை விலக்கி வைப்பேன். ஆகவே நாம் துரிதமற்ற பாதைகளையும் எளிய பயிற்சிகளையும் மேற்கொள்ளலாம். இந்த மூச்சுப் பயிற்சியில் மூன்று பாகங்கள் இருக்கின்றன. முதற்பாகத்தில் மூச்சை உள்ளே இழுக்கவேண்டும். இதனை வடமொழியில் '**பூரகம்**' என்பர். பூரகம் என்பதற்கு 'நிரப்புதல்' என்பது பொருள். இரண்டாவது பாகத்தை '**கும்பகம்**' என்பர். 'நிறுத்திவைத்துக்கொள்ளுதல்' என்பது இதன் பொருள்; அதாவது, நுரையீரல்களைக் காற்றால் நிரப்பி, அதை வெளிவராதபடி தடுத்துவைத்தல். மூன்றும் பகுதி '**இரேசகம்**' எனப்படும். 'மூச்சை வெளியே விடுதல்' என்பது இதன் பொருள். மூச்சை உள்ளே இழுத்து அதை அங்கே நிறுத்திவைத்துப் பிறகு அதை மெள்ள விடுகிற பயிற்சியே நான் இன்று கற்றுத்தரப்போகிற முதற்பயிற்சியாகும். மூச்சுப் பயிற்சியில் மற்றுமொருபடி இருக்கிறது. அதை நான் இன்று கற்றுத் தரப்போவதில்லை. ஏனெனில், அதை உங்களால் நினைவில் வைத்திருக்க இயலாது. அது அவ்வளவு சிக்கலானது. மூச்சுப் பயிற்சியிலுள்ள இந்த மூன்று பாகங்களும் சேர்ந்ததே ஒரு பிராணயாமமாகும். இந்த மூச்சுப் பயிற்சியை முறையாகப் பயிலவேண்டும். அல்லாவிடில், உங்களுக்கு ஆபத்து நேரிடும். எண்ணிக்கைகளால் இந்த மூச்சுப் பயிற்சியானது ஒழுங்குமுறை செய்யப்பட்டு இருக்கிறது. குறைந்த எண்ணிக்கையை நான் உங்களுக்கு முதலில் சொல்லித்தருகிறேன்: நான்கு வினாடி மூச்சை உள்ளே இழுங்கள்; பிறகு எட்டு வினாடி அதை அடக்கி வைத்திருங்கள்; பிறகு அதை மெதுவாக நான்கு வினாடிகளில் வெளியே விடுங்கள். இவ்வாறு காலையில் நான்கு முறையும் மாலையில் நான்கு முறையும் பயிலுங்கள். மேலும் அறிய வேண்டிய ஒன்று இருக்கிறது. ஒன்று, இரண்டு, மூன்று என்று பொருளில்லாமல் எண்ணுவதைவிட, நீங்கள் தெய்விகமாகக் கருதுகிற ஒரு சொல்லைப் பல தரம் சொல்லுதல் மிகவும் நல்லது. எங்கள் நாட்டில் பல குறிப்புச்சொற்களைக் கையாளுகிறோம். எடுத்துக்காட்டு, '**ஓம்**' என்னும் சொல். இதன் பொருள் கடவுள் என்பது. ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு என்று எண்ணுவதற்குப்

பதிலாக இதை உச்சரிப்பது உங்களுடைய நோக்கத்திற்கு மிகமிக நல்லது. மற்றும் ஒன்று : இந்த மூச்சுப் பயிற்சியில் முதலில் இட நாசியால் மூச்சை இழுத்து, வலநாசியால் வெளியேற்ற வேண்டும். அடுத்த தடவை பயிலும் போது, வல நாசியால் மூச்சை இழுத்து, இட நாசியால் வெளியேற்ற வேண்டும். இவ்வாறு மாற்றிமாற்றிப் பயிலவேண்டும். விரும்புகிறபடி, விரும்பிய நாசி வழியாக மூச்சு இழுக்கும் அல்லது விடும் திறத்தை முதலில் நீங்கள் பெறவேண்டும். சிறிது காலத்திற்குப் பிறகு இவ்வாறு செய்வது உங்களுக்கு இயல்பாகிவிடும்; எளிதாகிவிடும். இப்பொழுது அந்த ஆற்றல் உங்களுக்கு இல்லை. ஆகவே, ஒரு நாசி வழியாக மூச்சை இழுக்கும் போது, மற்ற நாசித் துவாரத்தை விரலால் அடைத்துக்கொள்ள வேண்டும். மூச்சை அடக்கி வைத்திருக்கும் போது, இரண்டு துவாரங்களையும் விரல்களால் அடைத்து வைக்கவேண்டும்.

முதல் இரண்டு பாடங்களை மறந்து விடக்கூடாது. நிமிர்ந்து உட்காருவது முதல் தேவையாகும். உடல் சுகாதாரத்தோடும் பலத்தோடும் இருக்கிறது என்று எண்ணுவது இரண்டாவது தேவையாகும். பிறகு உங்களைச் சுற்றிலும் அன்பு அலைகள் சூழும்படி செய்து, உலக முழுதும் இன்பமாய் இருப்பதாக நீங்கள் எண்ணவேண்டும். அதன் பிறகு உங்களுக்குக் கடவுள் நம்பிக்கை இருப்பின், நீங்கள் பிரார்த்தனை புரியலாம். அதன் பிறகு மூச்சுப் பயிற்சியைத் தொடங்குக.

உங்களுள் பலருக்கு உடம்பிலே சில மாற்றங்கள் ஏற்படும். உடல் எங்கும் பிடுங்கி இழுப்பதைப் போன்ற உணர்ச்சிகள், நரம்புக் கோளாறுகள் ஏற்படலாம். சிலருக்கு அழுவது போன்ற உணர்ச்சி ஏற்படும். சில சமயம் கடுமையான உடல் நடுக்கம் ஏற்படும். அஞ்ச வேண்டாம். பயிற்சியைத் தொடர்ந்து செய்யும் போது, இவை ஏற்பட்டே தீரும். உடல் முழுதும் வேறு ஒரு புதுமுறையில் ஒழுங்கு படுத்தப்படும். மூளையில் எண்ணத்திற்காகப் புதிய பாதைகள் ஏற்படும். உங்கள் வாழ்நாள் முழுவதிலும் இதுவரையில் தொழிற்படாத நரம்புகள் தொழிற்படத் தொடங்கும்; பல புதிய மாற்றங்கள் உடலிலே தொடர்ந்து ஏற்பட்டுக் கொண்டே இருக்கும்.

அன்பு மதம்

[1895-ஆம் ஆண்டு, நவம்பர்த் திங்கள், 16-ஆம் நாள் லண்டன் மாநகரில் ஆற்றிய சொற்பொழிவின் குறிப்புகள்.]

அனுபவ ஞானத்தின் உச்சியை அடைவதற்குக் குறிகளையும் சின்னங்களையும் சடங்குகளையும் ஒருவன் மேற்கொள்ள வேண்டிய அவசியம் இருப்பதால் "ஒரு சமயத்தில் பிறப்பது நல்லது; ஆனல் ஒரு சமயத்தானகச் சாவது தீது" என்று நாங்கள் இந்தியாவில் கூறுவது உண்டு. ஒரு சிறு செடியின் பாதுகாப்பிற்கு அதைச் சுற்றி ஒரு வேலி வேண்டும். அது மரமாகி வளர்ந்த பிறகு அந்த வேலி இடையூருகவே இருக்கும். ஆகவே பழைய முறைகளைக் குறை கூறுவதும் கண்டிப்பதும் அவசியம் இல்லை. சமயத்தில் வளர்ச்சி இருக்க வேண்டும் என்பதை நாம் மறந்து விடுகிரேம்.

முதலில் நாம் ஓர் உருவக் கடவுளை நினைக்கிரேம். அவரைப் படைப்புக் கடவுள், எல்லா ஆற்றலும் பெற்றவர், எல்லா ஞானமும் பெற்றவர் என்று இப்படிப் பலவாறு வழங்குகிரேம். ஆனல், அன்பு தோன்றும்போது, கடவுள் அன்பே ஆகிவிடுகிருர். அன்போடு தொழுபவன் கடவுள் எப்படிப் பட்டவர் என்பதைக் கருதுவதில்லை. ஏனெனில், அவன் கடவுளிடமிருந்து ஒன்றையும் பெற விரும்பவில்லை. "நான் ஒரு பிச்சைக்காரன் அல்லேன்" என்று இந்து மகான் ஒருவர் கூறுகிருர். அவர் அஞ்சுவதில்லை. கடவுளை நாம் ஒரு மனிதராகவே கருதி அன்பு செலுத்துகிரேம்.

அன்பை அடிப்படையாகக் கொண்ட சில முறைகளை இங்கே காணலாம்: (1) **சாந்த முறை**: இது எல்லார்க்கும் கடவுளே தந்தையார் என்ற கருத்தும், அதனல் எல்லார்க்கும் உதவி செய்ய வேண்டும் என்ற கருத்தும் நிறைந்த பொதுவான அமைதியான அன்பு. இத்தகைய அமைதியான அன்பு முறையே இது.

(2) தாச முறை: கடவுளை நன்மையும் தண்டனையும் தரு கிற தலைவராகவோ, அதிகாரியாகவோ, அரசனாகவோ கருதி, அக் கடவுளுக்குத் தொண்டனாகத் தொண்டு புரியும் குறிக்கோளுடன் இருக்கும் முறை இது.

(3) வாத்சல்ய முறை: கடவுளைத் தாயாக அல்லது குழந் தையாகப் பாவிக்கும் முறை இது. இந்தியாவிலே தாயான வள் எப்பொழுதும் குழந்தையைத் தண்டிப்பது இல்லை. மேலே குறிப்பிட்ட இந்த மூன்று முறைகளிலும் கடவுளுக்கு ஒரு சிறந்த உருவத்தைக் கற்பித்துக் கொண்டு, அதை வழி படுதலே இது.

(4) நட்பு முறை: கடவுளைத் தன் நண்பனாகப் பாவிக் கும் முறை இது. இம்முறையில் அச்சம் என்பதே இல்லை. கடவுள் சமத்துவமானவர் என்ற உணர்ச்சியும், அவர் நெருங் கிப் பழகுகிறவர் என்ற உணர்ச்சியும் இம் முறையில் உண்டு. கடவுளை நண்பராகவும் விளையாட்டுத் தோழராகவும் கருதி வழிபடுகிற இந்துக்கள் இருக்கிறார்கள்.

(5) மதுர முறை: கணவனுக்கும் மனைவிக்கும் உள்ள காதல் போன்ற இனிய காதல் முறை இது. **செயிண்ட் தெரி சாவும்,** பரமானந்த நிலையடைகிற மகான்களும் இதற்கு உதா ரணங்கள். பாரசீகர்களிடத்திலே கடவுளை மனைவியாகப் பாவிக்கும் பாவனை உண்டு. இந்துக்கள் கடவுளைக் கணவ ராகப் பாவிப்பார்கள். 'எனக்கு தெய்வமே கணவன் எல் லாம்' என்று பிரசாரம் செய்த பேரரசி **மீரா பாயை** நாம் இங்கு நினைவு கொள்ளலாம். இவ்வாறு கருதும் பாவனை யை பெரியதாக்கி — மிகைப்படுத்தி — கடவுளை வல்ல மையுடையவர் என்றும், பிதா என்றும் கூறுவது தெய்வ நிந் தனை ஆகும் என்று கூறுவோரும் இருக்கின்றனர். இந்த வழிபாட்டு முறையில் பயிலும் மொழியானது காமம் நிறைந்த மொழியாக இருக்கும். சிலர் கள்ளக் காதல் மொழியைப் பயன் படுத்துவர். கண்ணபிரானும் கோபிகைகளும் கொண்ட காதல் இதைச் சார்ந்தது. தொழுபவன் இவற் றால் எல்லாம் மிகுந்த கீழ்நிலையை அடைவான் என்று பெரும்பாலும் தோன்றும். இதனால் கீழ்நிலை ஏற்படவே செய்கிறது. என்றாலும் இம் முறையால் பெரியார் பலரும் தோன்றியுள்ளனர். மனிதனால் ஏற்படுத்தப்படுகிற எந்த

ஏற்பாடும குற்றம் குறை இல்லாமல் இராது. ஏழைகளும் பிச்சைக்காரர்களும் இருக்கிறார்கள் என்று நீங்கள் சமையல் செய்யாதிருப்பீர்களா? திருடர்கள் இருக்கிறார்கள் என்று நீங்கள் உடைமை ஏதும் இல்லாதிருப்பீர்களா? "என் காதலியே, உன் உதடுகள் தந்த ஒரு முத்தத்தை ஒரே தடவை சுவைத்து, நான் வெறி பிடித்துப் போனேன்!" என்பது காதலன் ஒருவனுடைய காதல் மொழியாகும்.

ஒருவன் ஒருசமய வகுப்பைச் சார்ந்தவனாகவோ. அல்லது சடங்குகளில் ஈடுபாடு உடையவனாகவோ நெடுங்காலம் இருக்க இயலாது என்பதே இக்கருத்தின் சாரமாகும். இந்தியாவிலே சுதந்திரம் என்ற இறுதி நிலைக்குச் சமயம் கொண்டு செல்கிறது. இந்தச் சுதந்திரத்தையும் துறந்துவிட்டு, 'எல்லாம் அன்பே; எல்லாம் அன்பிற்காகவே' என்ற நிலை அதன் பிறகு ஏற்படுகிறது. இவற்றின் இறுதி நிலையே வேற்றுமையற்ற அன்பு நிலை. அதுவே ஆன்ம நிலை.

ஒரு பாரசீகப் பாட்டு உண்டு. ஒரு காதலன் தன் காதலி வீடு சென்றான்; கதவைத் தட்டினான். "யார்?" என்று அவள் கேட்டாள். "உன் காதலன்" என அவன் பதில் கூறினான். "போய் விடு; அப்பேர்ப்பட்டவனை எனக்குத் தெரியாது" என்று அவள் மறுமொழி பகர்ந்தாள். ஆனால், அவள் நான்காவது முறை கேட்டபோது, "நீயே நான்; ஆதலால் என் காதலியே, நீ எனக்குக் கதவைத்திற" என்று கூறினான். உடனே கதவு திறக்கப் பட்டது. இவ்வாறு அந்தப் பாரசீகப் பாட்டு சொல்கிறது.

ஒரு பெண் கூற்றாகக் காதலை விளக்குகிறார் ஒரு பெரிய மகான். "நான்கு கண்கள் சந்தித்தன. உடனே இரண்டு ஆன்மாக்களில் மாற்றங்கள் ஏற்பட்டன. இப்பொழுது நான் அவனை ஆண் என்றோ என்னைப் பெண் என்றோ கூற இயலாது; அல்லது அவனைப் பெண் என்றோ என்னை ஆண் என்றோ கூற இயலாது. இது மட்டும் எனக்கு நினைவில் இருக்கிறது: முன்பு நாங்கள் இரண்டு ஆன்மாக்கள்; காதல் தோன்றிற்று; நின்றது ஓர் ஆன்மா."

மிக உயர்ந்த காதலில் காண்பது ஆன்மாக்களின் ஐக்கியமே. வேறுவிதமான காதல் எல்லாம் விரைவில் அழிந்து

விடும். ஆன்மிகக் காதல் ஒன்றே நிலைத்திருப்பது; அதுவே வளரும்.

காதல் ஒரு குறிக்கோளை நோக்கி நிற்கிறது. இதுவே ஒரு முக்கோணத்தில் இருக்கிற மூன்றாவது கோணமாகும். கடவுளே காரணமாகவும், படைப்போராகவும், தந்தையராகவும் இருக்கிறார். அன்பு சிகரமாய் இருக்கிறது. தான் பெற்ற குழந்தை கூன் முதுகோடு இருக்கிறதே என்று தாய் வருந்துகிறாள். ஆனால், சில நாள் அதற்குப் பாலூட்டி அதனை வளர்த்து விட்டதும், அதனை அன்புடன் பாராட்டுகிறாள்; அதனை மிகமிக அழகிய குழந்தையாகவும் கருதுகிறாள். கறுத்த எதியோப்பியப் பெண்ணின் முகத்திலே, அழகில் பேர்போன 'ஹெலன்' என்ற கிரேக்க அரசிளங்குமரியின் அழகையே ஒரு காதலன் காண்கிறான். என்ன நடக்கிறது என்பதை நாம் பொதுவாக உணர்வதில்லை. எதியோப்பியப் பெண்ணின் முகம் அல்லது புருவம் குறிப்பிட்ட ஒரு விருப்பத்தைக் குறிப்பிடுகிற எண்ணமாகும். அதனால் காதலன் ஹெலனை—அழகே உருவான ஒருத்தியை—காண்கிறான். தான் விரும்பிய அந்தக் குறிக்கோள் அழகு அவனது எண்ணத்தில் படிந்து, அந்த எண்ணமாகவே நிறைந்துவிடுகிறது. ஒரு முத்துச் சிப்பியானது மணலையே முத்தாகச் செய்துவிடுவது போல. கடவுளே இந்தக் குறிக்கோள். இந்தக் குறிக்கோள் மூலம் ஒருவன் எல்லாவற்றையும் காணலாம்.

ஆதலால், காதலையே போற்றிச் சிந்தித்துக் காதலிக்கிற நிலைக்கு வருகிறோம். இக்காதலை விளக்க இயலாது. இதனைச் சொல்லும் திறமை சொற்களுக்கு இல்லை. இதனை விளக்கத் தெரியாத ஊமையாய் இருக்கிறோம் நாம்.

காதல் நிலையில் புலன்கள் பெருக்கம் பெறுகின்றன. பல குணங்களோடு மனிதக் காதல் கலந்து நிற்கிறது என்பதை நாம் நினைவுகொள்ளவேண்டும். காதலிக்கிற மற்றவரது மனப்போக்கிற்கு ஏற்பவும் காதலின் தன்மை அமையும். காதல் ஒன்றோடு சம்பந்தப்பட்டு, அதன் தன்மைக்குத் தக்கவாறும் அமைந்திருக்கும். அந்த சம்பந்தத்தை — அதனால் ஏற்பட்ட நிலையை—விளக்குவதற்கு ஏற்ற சொற்கள் இந்திய

மொழிகளில் உண்டு. மிகமிகத் தாழ்ந்த காதல் தன்னலத்தால் ஆனது; காதலிக்கப்படுவதால் ஏற்படுகிற மகிழ்ச்சியால் ஆனது அக்காதல். "ஒருவர் தம் கன்னத்தைக் காட்டுகிறார்; மற்றவர் முத்தமிடுகிறார்" என்று நாங்கள் இந்தியாவில் சொல்வதுண்டு. இந்தக் காதலினும் உயர்ந்தது இருவர் பாலும் முகிழ்த்து நிற்கும் இருதலைக் காதலாகும். காதலனைக் காதலியும், காதலியைக் காதலனும் காதலித்து நிற்கும் இந்த இருதலைக் காதல் நிலையும், பின்னர் மறைந்து போகும். உண்மைக் காதல் எல்லாவற்றையும் தானே தரும்; ஏதொன்றையும் ஏற்காது. காதலிக்கிற பொருளைக் காணவும் நாம் விரும்புவதில்லை; அந்த உயர்ந்த தன்னலமற்ற காதலில், நம் உணர்ச்சியை வெளிப்படுத்துவதற்கு நாம் ஏதொன்றையும் செய்ய வேண்டுவதில்லை. கொடுத்துக் கொண்டே இருக்கும் நிலையே நமக்குப் போதும் என்ற எண்ணம் அந்தக் காதலில் ஏற்படும். இத்தகைய காதலால் மனிதரில் ஆணையோ, பெண்ணையோ காதலிக்க இயலாது; அவ்வாறு கடவுளைத்தான் காதலிக்க இயலும்.

தெருவிலே சண்டையிட்டுக்கொள்கிற சிறுவர்கள் கடவுள் பெயரால் ஆணையிட்டால் இந்தியாவிலே அதைத் தெய்வ நிந்தனையாகக் கருதுவதில்லை. "நெருப்பிலே கையை வை. அதன் சூட்டை நீ உணர்ந்தாலும் சரி, உணராவிட்டாலும் சரி; அதனால் நீ எரிக்கப்படுவாய். ஆகவே, கடவுள் பெயரைச் சொல்வதனால் ஏற்படுவது தீங்கன்று; நன்மையே" என்று நாங்கள் சொல்வதுண்டு.

தெய்வ நிந்தனை என்ற கருத்து யூதர்களிடமிருந்து வந்தது. பாரசீகர்களது அரச பக்தியின் வெளித்தோற்றத்தால், அவர்கள் பெரிதும் கவரப்பட்டார்கள். கடவுள் நீதிபதியாய் இருக்கிறார் என்ற கருத்தும், தண்டிப்போராய் இருக்கிறார் என்ற கருத்தும், கருத்தளவில் தவறானவை அல்ல; ஆனால் தாழ்ந்தவை; காட்டுமிராண்டிகளுக்கு ஏற்றவை. முக்கோணத்தின் மூன்று கோணங்கள் போல் மூன்று காதல் கருத்துகள் இருக்கின்றன: காதல் பிச்சை கேளாது என்பது ஒரு கோணம்; காதல் பயம் அறியாது என்பது இரண்டாவது கோணம்; காதல் எப்பொழுதும் ஒருகுறிக்கோள் நிலையிலேயே இருக்கும் என்பது மூன்றாவது

கோணம். "காதல் என்ற ஒரு பொருள் இந்த உலகத்தை நிறைத்து நிற்க இல்லை என்றால், எவரால் ஒரு இமைப் பொழுது சுவாசித்திருக்க இயலும்?" என்பது ஒரு காதற்பாட்டு.

நாம் சேவை புரியவே பிறந்துள்ளோம் என்பதை நம்முள் பலர் அறியலாம். பயன்களை நாம் கடவுளிடத்தில் விட்டுவிடவேண்டும். கடவுள்பால் நாம் கொண்டிருக்கும் காதலின் பொருட்டே நம் சேவை செய்யப்பட்டது. ஆகவே, தோல்வி ஏற்படின் நாம் கவலையுற வேண்டுவதில்லை. கடவுள் மேல் நாம் கொண்டிருக்கும் காதலின் பொருட்டே நம் சேவை செய்யப்பட்டது.

பெண்களிடத்திலே தாய்மைப் பண்பு கூர்ந்து விளங்குகிறது. கடவுளைத் தம் குழந்தைகள் என்ற கருத்தோடே அவர்கள் தொழுகின்றார்கள். கடவுளை அவர்கள் எதையும் கேட்பதில்லை; அக்கடவுளின் பொருட்டு அவர்கள் எதையும் செய்வார்கள்.

இந்த ஆழ்ந்த கருத்துகளில் பலவற்றைக் கத்தோலிக்க மதம் குறிப்பிடுகிறது. ஆனால் அம்மதம் குறிப்பிடுவது அவர்களது குறுகிய மனப்பான்மை உணர்த்துகிறது. என்றாலும், அதுவும் மிகமிக உயர்ந்த சமயப் பண்பையே உணர்த்துகிறது. இக்காலச் சமூகத்திலே, புராடெஸ்டெண்டு மதமானது விரிந்த மனமுடையது; ஆனால் ஆழமில்லாதது. ஒரு குறிப்பிட்ட விஞ்ஞானக் கண்டுபிடிப்பினால் ஏற்படும் பயன் என்ன என்று ஒரு சிறு குழந்தையைக் கேள்வி கேட்பது எவ்வளவு தவறோ அவ்வளவு தவறாகும், ஓர் உண்மையை அதனால் ஏற்படும் நன்மையைக் கொண்டு நிர்ணயம் செய்ய முயல்வது.

சமூகத்தை நாம் கடந்து செல்லவேண்டும். சட்டங்களை உடைத்தெறிந்து, சட்டங்களை மீறியவர்களாக நாம் மாற வேண்டும். இயற்கையை வெல்வதற்கே, நாம் இயற்கைக்கு அடங்கி வாழ்கிறோம். கடவுள் பணம் என்ற இரண்டிற்கும் சேவை செய்ய முடியாது என்பதே பற்றினைத் துறத்தல், விடுதல் என்பதன் பொருள்.

உங்கள் எண்ணத்தின் ஆற்றலும் காதலின் ஆற்றலும் வன்மையுற அவற்றைப் பழகுங்கள். உங்களுடைய மனத் தாமரையை மலரவிடுங்கள். தேனீக்கள் அதனை நாடித் தாமே வந்து சேரும். முதலில் உங்களிடத்தில் நம் பிக்கை வையுங்கள்; பிறகு கடவுளிடத்தில் நம்பிக்கை வையுங்கள். ஆற்றல் மிக்க சிலர் இந்த உலகத்தைத் தாம் விரும்பியவாறு இயங்க வைப்பர். உணர நமக்கு ஓர் இதயம் தேவை; சிந்திப்பதற்கு ஒரு மூளை தேவை; வேலை செய்வதற்கு வலிய தோள் தேவை. விலங்குகளின் நன்மைக்காகப் புத்தர் தம்மைத் தியாகம் செய்துகொண் டார். சேவை புரிவதற்குரிய தகுதி வாய்ந்த பிரதிநிதியாக உங்களைச் செய்து கொள்ளுங்கள். ஆனல், சேவை புரிபவர் நீங்கள் அல்லீர்; கடவுளே. உலகம் முழுவதும் ஒருவரி டத்தில் அடங்கியிருக்கிறது. உலகத்துச் சக்திகள் அனைத் தும் ஓர் அணுப்பொருளின் அகத்தே அடங்கியிருக்கின்றன. இதயத்திற்கும் மூளைக்கும் பிணக்கு ஏற்படுகிறபோது, இத யத்தின் படி நடப்பீர்.

நேற்று, போட்டி என்பது சட்டமாய் இருந்தது. இன்று, கூட்டுறவு என்பது சட்டமாய் இருக்கிறது. நாளைய தினம், சட்டமே இராது. உங்களை மகான்கள் புகழட்டும்; அல்லது உலகம் இகழட்டும். உங்களுக்குச் செல்வ வளம் ஏற்படட்டும்; அல்லது வறுமைக்கும் கந்தைக்கும் நீங்கள் அடிமை ஆகுங்கள். ஒருநாள், காட்டிலுள்ள தழைகளையும் கிழங்குகளையும் உணவாகக் கொள்ளுங்கள். மறுநாள், ஐம் பது வித உணவுகளுடன் விருந்து உண்ணுங்கள். வலப் பக்கமும் பாராமல், இடப்பக்கமும் பாராமல், நீங்கள் உங்கள் பணியைத் தொடர்ந்து செய்துகொண்டிருங்கள்.

பாவா ஹாரி பாபா என்ற மகான் எவ்வாறு தம் பாத்திரங் களை அவசரமாக எடுத்துக்கொண்டு, திருடனைத் தொடர்ந்து ஓடி, அவன் காலில் விழுந்து, “கடவுளே, அங்கிருந்தது நீங் களே என்பதை நான் அறியாது போனேன். இவற்றை எடுத்துக்கொள்ளுங்கள். இவை உங்கள் உடைமையே. உங்கள் குழந்தையாகிய என்னை மன்னியுங்கள்” என்று

கூறியதை ஒரு கேள்விக்கு விடையாகக் கூறியே சுவாமி அவர்கள் பேசத் தொடங்கினார்கள்.

அம் மகானே ஒரு நல்லபாம்பால் கடிக்கப்பட்டார். இரவு தொடங்கும் சமயத்தில் அவர் குணம் அடைந்தார். "என் காதலியிடமிருந்து ஒரு தூதன் என்னிடம் வந்தான்" என்று அவர் சொன்னார். இதையும் சுவாமி விவேகானந்தர் கூறினார்.

ஞானமும் கருமமும்

[1895-ஆம் ஆண்டு, நவம்பர்த் திங்கள் 23-ம் நாள் லண்டன் மாநகரில் ஆற்றிய சொற்பொழிவின் குறிப்புகள்]

எண்ணத்தின் வலிமையிலிருந்து மிகப் பெரியதோர் ஆற்றல் பிறக்கிறது. ஒரு பொருள் எவ்வளவு நுண்மையாய் இருக்கிறதோ, அவ்வளவு மாபெரும் சக்தியாய் விளங்குகிறது. எண்ணத்தின் மௌன சக்தியானது மக்களைத் தூண்டும்; அவர்கள் நெடுந்தொலைவில் இருப்பினும்—தூண்டும். ஏனெனில், மனம் ஒன்றுகவும் இருக்கிறது; பலவாகவும் இருக்கிறது. உலகமே ஒரு சிலந்திக் கூடு; மனங்களே சிலந்திப் பூச்சிகள்.

எங்கும் வியாபித்து இருக்கும் பரம்பொருளின் தன்மைகள் எவ்வளவோ, அவ்வளவே இந்தப் பிரபஞ்சம். அவரை நாம் நம் புலன்களால் காணும்போது, இந்தப் பிரபஞ்சமாகப் புலப்படுகிருர். இது ஒரு மாயை. ஆகவே, இந்தப் பிரபஞ்சமானது ஒரு பொய்த்தோற்றம்; சூரியன் காலையிலே செந்நிறப் பந்தாகத் தோன்றுவது போல ஒரு குறையுடைய தோற்றமே. இவ்வாறே எல்லாத் தீமைகளும் கொடுமைகளும் குறைபாடுகளே; நன்மையினது தெளிவில்லாத் தோற்றங்களே.

ஒரு நெடுங்கோட்டினை அளவின்றி நீட்டிக்கொண்டே போனுல் அது ஒரு வட்டம் ஆகிவிடும். நன்மையை நாடிச் செல்வோமானுல் நாம் ஆன்மாவிடம் போய் நிற்போம். நானே எல்லா இரகசியப் பொருளும், கடவுளும். நானே உடலும் மனிதனது தாழ்ந்த பண்பும். நானே இந்தப் பிரபஞ்சத்தின் கடவுளும்.

ஒருவன் ஏன் மிகுந்த ஒழுக்கத்தோடும் தூய்மையோடும் இருக்கவேண்டும்? இவற்றுல் அவனது எண்ணம் வலிமை பெறுகிறது. உண்மையான தன்மையினை உணர்த்துவதன் மூலம் எண்ணத்திற்கு வலிமை தருகிற ஒவ்வொன்றும் ஒழுக்கமே. இதற்கு மாறுனதை விளைவிக்கிற ஒவ்வொன்றும் ஒழுக்கமின்மை ஆகும். ஒழுக்கத்தை அளக்கும் கருவி

யானது நாட்டுக்கு நாடு மாறுபடும்; மனிதனுக்கு மனிதன் மாறுபடும். சட்டங்களுக்கும் சொற்களுக்கும் இவை போன்றனவற்றிற்கும் மனிதன் அடிமையாய் இருக்கும் நிலையிலிருந்து அவன் விடுதலை பெறவேண்டும். இப்பொழுது நாம் பெற்றிருக்கும் எண்ணமானது கட்டுத்திட்டத்திற்கு ஆளாகாத சுதந்திர எண்ணமன்று; ஆனால், நாம் சுதந்திரம் பெறுகிற போது, நமது எண்ணமும் கட்டுத்திட்டத்திலிருந்து விடுதலை பெற்று, சுதந்திர நிலை அடையும். இந்த உலகத்தைத் துறப்பதே துறவாகும்; விடுதலையாகும். புலன்கள் வாயிலாகச் சினம் தோன்றுகிறது; துன்பம் தோன்றுகிறது. துறவு நிலை ஏற்படாத வரையில், ஆன்மாவும் அதைத் தொழிற்படுத்துகிற விருப்பு வெறுப்புகளும் வெவ்வேருகவே இருக்கும். இறுதியில் அவை ஒரு தன்மையன ஆகும். மனிதன் ஒரு காலத்தில் விலங்காகவே இருந்தான்; பிறகு துறவு உணர்ச்சியைப் பெற்று நிற்கிருன்.

ஒரு சமயம் உடலைப் பெற்றிருந்தேன்; பிறவி எடுத்தேன்; ஆடிஓடித்திரிந்தேன்; இறந்தேன். இவை எத்தகைய வேதனை தரும் எண்ணங்கள்! ஓர் உடலில் சிறைப்பட்டு, விடுதலை பெறுவதற்காகப் புலம்பிக்கொண்டிருந்த நிலையை எண்ணிப் பார்ப்பது எத்தகைய வேதனை தரும் எண்ணம்!

விருப்பு வெறுப்புகளை விடவேண்டும் என்ருல் நாம் எல்லாரும் துறவிகள் ஆக வேண்டுமா? அப்பொழுது மற்றவர்களுக்கு உதவிபுரிபவர் யார்? விருப்பு வெறுப்புகளை விடுதல் என்பது துறவிகளாகி விடவேண்டும் என்பது அன்று. எல்லாப் பிச்சைக்காரர்களும் கிறிஸ்துகளா? வறுமை என்பதற்குப் புனிதத்தன்மை என்பது பொருள் அன்று. வறுமை என்பது பெரும்பாலும் புனிதமின்மைக்கு அறிகுறி. விருப்பு வெறுப்புகளை விடுவது என்பது மனத்தின் செயல். அது எப்படி ஏற்படுகிறது? நான் பாலைவனத்தில் இருந்தபோது நீர் வேட்கை ஏற்பட்டது. அப்போது நான் அங்கு ஓர் ஏரியைக் கண்டேன். அழகிய காட்சி நிறைந்த நிலத்தின் நடுவே அது இருந்தது. அதைச் சுற்றிலும் மரங்கள் இருந்தன; அவற்றின் நிழல் தலைகீழாக அந்நீரில் தெரிந்தது. பிறகு இக் காட்சி முழுதும் வெறும்

பொய்த்தோற்றமே என்பது புலனாயிற்று. அதன் பிறகுதான் இக்காட்சியை ஒரு மாதகாலம்வரை தினந்தோறும் பார்த்து வந்தேன் என்பதையும், அன்றைய தினம் நீர்வேட்கை ஏற்பட அது ஒரு பொய்க் காட்சி—கானல் நீர்—என உணர்ந்தேன் என்பதையும் அறிந்தேன். மீண்டும் ஒரு மாத காலம் நான் அதைப் பார்த்தேன். அவ்விதம் பார்க்கும் போது, நான் அதை உண்மை என ஒருபொழுதும் கருதவில்லை. இவ்வாறே நாம் கடவுளை அடையும்போது, உலகத்தைப் பற்றிய கருத்தும், உடலைப் பற்றிய கருத்தும், மற்றும் இவை போன்ற கருத்தும் மறைந்து போம். ஆனால் அக்கருத்துகள் மீண்டும் மீண்டும் தோன்றும். அடுத்த முறை •அத்தகைய கருத்துத் தோன்றும் போது அது பொய்க் கருத்தென்பதை நாம் உணர வேண்டும்.

உலக வரலாறு என்பது புத்தர் ஏசுகிறிஸ்து முதலானவர்களது வரலாறே. உலகத்துக்கு வேண்டிய நன்மைகள் மிகப்பலவற்றைக் காமம் வெகுளி முதலியவற்றை விட்டவர் செய்கின்றனர். சேரிகளிலே ஏசுநாதர் இருப்பதாக எண்ணிக்கொள்ளுங்கள். அவர் அங்குள்ள துன்பங்களைக் காண மாட்டார். ஆனால், அங்குள்ளவர்களைப் பார்த்து, "என் சகோதரர்களே! நீங்கள் எல்லாரும் தெய்வத் தன்மை பெற்றவர்கள்" என்று கிறிஸ்து மொழிவார். அவரது சேவை அமைதியானது. அவர் காரணங்களை நீக்கிவிடுகிறார். இந்தப் பணியானது உண்மையிலேயே ஒரு மாயையாகும் என்பதை நீங்கள் அறிகிறபோது, உலகத்தின் நன்மைக்காக உழைக்கும் திறமையை நீங்கள் பெறுவீர்கள். எவ்வளவு நீங்கள் மெய் மறந்து இந்தப் பணியைச் செய்கிறீர்களோ, அவ்வளவு நல்லது. ஏனெனில் அப்போது இந்தப் பணியானது அறிவுமிகுந்த சமாதிநிலை அறிந்த செயலாய் இருக்கும். நன்மையை அல்லது தீமையை நாடி நாம் நிற்கவில்லை. உண்மைக்கு அருகில் இருப்பவை நன்மையும் மகிழ்ச்சியுமே ஒழிய, இவற்றிற்கு மாறுபட்ட தீமையும் துன்பமும் அல்ல. ஒருவனது கால் விரலில் முள் தைத்துக் கொண்டது. அதனை அவன் வேறு ஒரு முள்ளாற்குத்தி எடுத்து விட்டான். முதலில் தைத்த முள் தீமை; முள்ளை எடுத்த இரண்டாது முள் நன்மை. நன்மை தீமைகளுக்கு அப்பாற்பட்ட அமைதி நிலையே ஆன்மா. இந்தப் பிரபஞ்சமானது தேய்ந்து

கொண்டே போகிறது. மனிதன் கடவுளை அணுகிக் கொண்டேயிருக்கிறான். ஒரு விநாடி நேரம் அவன் உண்மைக் கடவுள் நிலையில் இருப்பான். அவன் அந்த நிலையில் இருக்கும் போது, வேறு புதிய நிலையைப் பெற்றவன் என்று மொழிவர்; தேவதூதன் என்பர். இப்பொழுது அவன் முன்னர் உலகம் நடுங்கி நிற்கும். ஒரு மூடன் தூங்கி, மூடனாகவே விழித்தெழுகிறான். ஆனால் மெய்மறந்த அறிவு படைத்தவன்—அறிவுமிக்க அடிமனம் பெற்றவன்—அளவிலா அறிவோடும், தூய்மையோடும், அன்போடும் கூடிய மனிதக்கடவுளாக வெளி ஏறுகிறான். இதுவே சமாதிநிலையின் பயனாகும்.

போர்க்களத்திலுங்கூட நாம் ஞானப் பயிற்சி புரியலாம். கீதை அவ்வாறு போதிக்கப்பட்டது. மனத்திலே மூன்று நிலைகள் உண்டு: சுறுசுறுப்பு நிலை, சுறுசுறுப்புக் குறைந்த நிலை, அமைதி நிலை. சுறுசுறுப்பு நிலையிலே விரைந்து செல்லும் பெரிய அலைகள் இருக்கின்றன. சுறுசுறுப்புக் குறைந்த நிலையிலே மிக விரைவு படைத்த சிறு அலைகள் இருக்கின்றன. அமைதிநிலையிலே மிகமிக விரைவு படைத்த மிகச்சிறு அலைகள் உள்ளன. தேரில் அமர்ந்திருப்பது ஆன்மா என்பதை அறிவீர்களாக. உடலே தேர். பொறி புலன்களே குதிரைகள்; மனமே கடிவாளம்; அறிவே தேர்ப்பாகன். இத்தகைய தேரில் ஏறிச் சென்றே மனிதன் மாயை என்ற கடலைக் கடக்க வேண்டும். அதற்கு அப்பாலும் அவன் செல்கிறான். அவன் கடவுளை அடைகிறான். ஒருவன் தன் புலன்களுக்கு அடிமையாகி இருக்கும்போது, அவன் இந்த உலகத்தைச் சார்ந்தவனாய் இருக்கிறான். அவன் தன்புலன்களைக் கட்டி ஆள்கிற போது, இவ்வுலகப் பற்றைத் துறந்தவன் ஆகிறான்.

மன்னித்து விடும் தன்மைகூட, பலமிழந்தோ அல்லது செயலற்றோ இருக்குமானால், அது உண்மையான தன்மை அன்று. அதைவிடப் போரிடுவதே மேலானது. மிகப்பல தேவதூதர்களுக்கு வெற்றி கிடைக்குமாறு செய்யும் திறம் உங்களுக்கிருக்கும் போது, நீங்கள் மன்னிப்பை வழங்குவீர்களாக. "நம் பகைவர்களை நாம் மன்னித்துவிடுவோமாக"

என்கிருன் அருச்சுனன். "ஞானிகளின் மொழி பேசு கிருய்; நீ ஞானியில்லை; கோழை, எனப் பதில் கூறுகிருர் அவனுக்குத் தேர்ப்பாகனுய்ப் பணிபுரியும் கண்ணபிரான். நீரிலே வளர்கிற தாமரை இலையானது, அந்நீரால் நனைக் கப்படாது இருப்பது போல, ஆன்மாவானது இந்த உலகத் திலே இருக்கவேண்டும். இந்த உலகம் ஒரு போர்க்களம். போரிட்டே நீங்கள் முன்னேறிச் செல்ல வேண்டும். கட வுளைக் காணும் முயற்சிக்காகவே இந்த உலக வாழ்க்கை ஏற் பட்டிருக்கிறது. விருப்பு வெறுப்புகளைத் துறந்த துறவு பலத்தால் வலிமை பெற்றுத் திகழும் சித்தத்தின் காட்சியாக உங்களது வாழ்வு விளங்கும்படி வாழ்க.

கட்டியாள்கிருேம் என்ற உணர்வுடனே மூளை மையங் களை எல்லாம் கட்டியாள நாம் அறிந்துகொள்ள வேண்டும். அவ்வாறு செய்வதற்கு உரிய சில படிகளாவன:—

முதற்படி:- வாழ்விலே மகிழ்தல். துறவு என்பது ஒரு கொடுமை. பிரார்த்தனை புரிவதைக் காட்டிலும் நகைப்பது மிக நல்லது. பாடுவீர்களாக. கவலை கொள்ளாதீர்கள். உங் கள் கவலையால் பிறரும் கவலையுறுமாறு செய்யாதீர்கள் என்று தெய்வத்தின் பெயரால் கெஞ்சிக் கேட்டுக் கொள்கி றேன். சிறிது இன்பத்தையும் சிறிது துன்பத்தையும் கடவுள் விலைக்கு விற்பதாக ஒரு போதும் நினைக்காதீர்கள். மலர்களும் படங்களும் சாம்பிராணிப்புகையும் உங்களைச் சூழ்ந்து இருக்கட்டும். மலையின் உச்சிகளை நாடி மகான்கள் சென்றது இயற்கையின் இன்பத்தை நுகர்வதற்கேயாம்.

இரண்டாம் படி :- தூய்மை

மூன்ரும் படி :- மனத்திற்கு முழுப் பயிற்சி அளித்தல். உண்மை அல்லாததை வேருகவும் உண்மையை வேருகவும் காரணத்தோடு பகுத்தறிவீர்களாக. கடவுள் ஒருவரே உண்மையானவர் என்பதை அறிந்து கொள்க. நீங்கள் கடவுளல்லீர் என்று ஒரு விஞடி நேரம் நினைத்தாலும் கூட, நீங்கள் பெரும்பயத்திற்கு ஆளாவீர்கள். "நானே **அவன்**" என்று நீங்கள் நினைக்கும் போது, பெரிய மகிழ்ச்சியும் அமைதியும் உங்களுக்கு ஏற்படும். புலன்களை அடக்கி ஆள் வீர்களாக. என்னை ஒருவன் இகழ்வாஞனல், அப்போது

நான் அவனிடத்தில் கடவுளைக் காணவேண்டும். என் பல மின்மை காரணமாக அக் கடவுளே ஏசி இகழ்வோனுக அவன் உருவில் வந்திருக்கிறுர் என்பதை நான் காணவேண் டும். எந்த ஏழைக்கு நீங்கள் நல்லதைச் செய்தீர்களோ, அவன் உங்களுக்கு ஒரு வாய்ப்பினைத் தருகிறுன். அவன் கடவுள் அருளால், கடவுளை வழிபடும் வாய்ப்பை உங் களுக்கு வழங்குகிறுன்.

தன்னம்பிக்கை உடைய சிலரது வரலாறே உலக வரலாருகும். உள்ளே மறைந்திருக்கும் தெய்வத் தன் மையை வெளிப்படுமாறு செய்யவல்ல ஆற்றல் அத் தன்னம் பிக்கைக்கு உண்டு. நீங்கள் எதை வேண்டுமானுலும் செய்யலாம். அளவு கடந்த ஆற்றல் வெளிப்படும் அள வுக்கு நீங்கள் முயலாத போதுதான் தோல்வி அடைவீர் கள். தன்னம்பிக்கையை ஒருவன் எப்பொழுது இழக்கி ருனே, அப்பொழுதே அவன் சாவான்; அவ்வாறே ஒரு நாடு தன்னம்பிக்கையை எப்பொழுது இழந்துவிடுகின்றதோ, அப்பொழுதே அது அழியும்.

சமயக் கொள்கைகளாலோ முரட்டுத்தனத்தாலோ வெல்லமுடியாத ஒரு தெய்வம் உடலுக்குள்ளே இருக்கிறது. நாகரிகம் எங்கு எங்கு இருக்கிறதோ, அங்கங்கெல்லாம் கிரேக்க ஞானியர் சிலருடைய கருத்துகளே நிலவுகின்றன. எப்பொழுதும் சில தவறுகள் இருந்தே தீரும். ஆகவே கவலையுருதீர்கள். உங்கள் உட்பார்வை—அகநோக்கு— பெரிதாய் இருக்கட்டும். “செய்தது, செய்தாகிவிட்டது. அதனையே மிக நல்லதாகச் செய்திருக்கலாமே” என்று எண்ணிச் சஞ்சலமுறுவதை விடுக. கடவுளாக மனிதன் இருந்திராவிட்டால், மனிதகுலமானது தன் பிரார்த்தனை களாலும், தான் செய்த குற்றங்களுக்காக மனவருத்தம் கொள்கிற முறைகளாலும் அழுகையாலும் இதற்குள் பைத் தியக்கார குலமாகியிருக்குர்.

எவரும் கைவிடப்படார். எவரும் அழிக்கப்படமாட் டார். எல்லாரும் இறுதியிலே குற்றம் குறையற்ற தூய நிலையினை எய்துவர். “என்னுடைய சகோதரர்களே! முன் னேறி வாருங்கள். தூய்மையின் எல்லையில்லாக் கடலே

நீங்கள்! கடவுளராய் இருங்கள்! கடவுளராய் விளங்குங்கள்!'' என்று இரவும் பகலும் சொல்லிக்கொண்டே இருங்கள்.

நாகரிகம் என்பது என்ன? அகத்தே இருக்கும் கடவுளை உணர்த்துவதே நாகரிகம். உங்களுக்குக் காலம் கிடைக்கும் போது, இக்கருத்துகளை உங்கள் மனத்திற்குள்ளேயே பலதரம் சொல்லிக்கொண்டிருங்கள்; விடுதலையையும் விரும்பிக்கொண்டே இருங்கள். படிகள் எல்லாம் இவைகளே. கடவுள் அல்லாத ஒவ்வொரு பொருளையும் புறக்கணித்து விடுங்கள். கடவுளாக இருக்கிற ஒவ்வொரு பொருளையும் வற்புறுத்திச் சொல்லுங்கள். இரவும் பகலும் இதனை மனத்திற்குள்ளே உறுதியாகச் சொல்லிக்கொண்டே இருங்கள். இவ்வாறு செய்து வந்தால், திரைச் சீலையின்—மாயையின்—கனமானது மெலிந்துகொண்டே வரும்.

நான் மனிதனும் அல்லேன்; தேவதூதனும் அல்லேன்; எனக்குப் பால்வேற்றுமையோ, அளவு எல்லையோ இல்லை. அறிவே நான். **அவனே** நான். எனக்குக் கோபமோ பகையோ இல்லை; எனக்கு இன்பமும் இல்லை; துன்பமும் இல்லை. மரணம் என்பதோ பிறப்பு என்பதோ எனக்கு எப்பொழுதும் ஏற்பட்டதில்லை. ஏனெனில் நிறைந்த அறிவே நான்; நிறைந்த பேரின்பமே நான். என் ஆன்மாவாய் இருக்கிற **அவனே** நான். **அவனே** நான்.

உங்களுக்கு உடலே இல்லாது இருக்க முயல்வீர்களாக. உங்களுக்கு உடல் ஒன்று எப்பொழுதும் இருந்தது இல்லை. உங்களுக்கு உடல் உண்டு என்பது முற்றும் மூடக்கொள்கையாகும். ஏழைகள், தாழ்த்தப்பட்டவர்கள், கொடுமைக்கு ஆளாகி நிற்பவர்கள், நோயாளிகள் என்ற எல்லாருக்கும் நீங்கள் பெற்ற கடவுள் எண்ணம் பிறக்குமாறு செய்க.

இத்தகைய எண்ணத்தின் அலையானது சற்றேறக் குறைய ஐந்நூறு ஆண்டுகளுக்கு ஒருமுறை உலகம் எங்கும் பரவுகிறது. சிறுசிறு அலைகள் பல திசைகளிலும் தோன்றுகின்றன. ஆனால், ஒரு பெரிய அலையானது அவற்றை எல்லாம் விழுங்கிவிட்டு, சமுதாயத்தின் மேல் எல்லாம் ஓடிப் பரவி நிற்கின்றது. அந்தப் பேரலையே மிகப்பல பண்புகளைத்

தரவல்ல இந்தத் தெய்விக எண்ணத்தை வளர்க்கும் திறம் பெற்றது.

கண்பூசியஸ், மோஸஸ், பிதாகொரஸ், புத்தர், கிறிஸ்து, மகம்மது, லூதர், கால்வின், சீக்கியர் என்ற பெயர்களும், பிரம்மஞானம், ஆன்மஞானம் என்ற ஞானங்களும் மனிதனிடத்தே உள்ள தெய்வத்தன்மையை விளக்குவன ஆகும்.

மனிதன் பலமில்லாதவன் என்று ஒருபோதும் சொல்லாதீர்கள். ஞானமும் யோகமும் மற்ற முறைகளைக்காட்டிலும் உயர்ந்தவை அல்ல. அன்பே ஒரு குறிக்கோள். அதைப் பண்படுத்துவதற்கு வேறு எப்பொருளும் அதற்குத் தேவை இல்லை. அன்பே கடவுள். ஆகவே, பக்திமுறையாலுங் கூட நம் மனத்தகத்தே இருக்கும் கடவுளை அடையலாம். நானே அவன். நகரம், நாடு, விலங்குகள், இந்த உலகம் என்ற இவற்றின் மேல் ஒருவனுக்கு அன்பில்லை என்றால், அவன் எவ்வாறு வேலை செய்ய இயலும்? பலவிதமாக வேறுபட்டு இருப்பனவற்றில் உள்ளூர அமைந்து நிலவும் ஒற்றுமைப் பண்பைக் காண்பதற்கு அறிவாராய்ச்சி வழி கோலுகிறது. நாத்திகர்களும் 'கடவுள் உண்டா இல்லையா?' என்ற ஐயப்பாடு உடையவர்களும் சமுதாய நன்மைக்காக சேவை புரிவார்களாக. இவ்வாறு செய்யின் கடவுள் தோன்றுவார்.

நீங்கள் ஒரு குறிப்பிட்ட குற்றம் புரியாதிருக்கவேண்டும். எச்சரிக்கையோடிருக்க வேண்டும். அதாவது நீங்கள் எவருடைய நம்பிக்கையிலும் கலக்கத்தை உண்டுபண்ணுதல் ஆகாது. சமயம் என்பது கொள்கையால் ஆனதன்று என்பதை நீங்கள் அறியவேண்டும். எவ்வாறு இருக்கிறோம், எவ்வாறு ஆகிக்கொண்டிருக்கிறோம், எவ்வாறு அனுபவ சக்தி பெறுகிறோம் என்பதே சமயம். எல்லாரும் பிறவி விக்கிரக ஆராதனைக்காரரே. மிகமிகத் தாழ்ந்த நிலையில் இருப்பவன் ஒரு விலங்கு. மிகமிக உயர்ந்த நிலையில் இருப்பவன் குற்றம் குறையற்ற பண்பினன். இவ்விருவருக்கும் இடையேயுள்ள நிலையில் இருப்பவர்கள் ஓசை, நிறம், கொள்கை, சடங்கு முதலியன பற்றி எண்ணியே தீர வேண்டும்.

உருவ வணக்கத்தை விட்டுவிடும் நிலை உங்களுக்கு ஏற்பட்டு விட்டதா என்பதை அறிய இது ஒரு சோதனை : "நான் என்று சொல்லும் போது, உடல் என்ற எண்ணம் உங்கள் எண்ணத்தில் தோன்றுகிறதா இல்லையா?" உடல் என்ற எண்ணம் தோன்றுமானால் இன்னும் சிலையை வணங்கிக் கொண்டிருப்பவர்களே நீங்கள். சமயம் என்பது அறிவுப் பேச்சே அன்று. அது ஓர் அனுபவ சக்தி ஆகும். கடவுளைப் பற்றி எண்ணிக்கொண்டிருப்பீர்களானால், நீங்கள் மூடர்களே. அறிவில்லாதவன் தன் பிரார்த்தனையாலும் பக்தியாலும் தத்துவஞானியைக் காட்டிலும் உயர்ந்த நிலையினை எய்தக் கூடும். கடவுளை அறிவதற்கு எந்தத் தத்துவமும் வேண்டுவது இல்லை. பிறருடைய நம்பிக்கையைக் கலைக்காது இருப்பதே நமது கடமை. அனுபவமே சமயம். எல்லாவற்றைக் காட்டிலும், எல்லாவற்றிலும் உண்மையோடு இருங்கள். ஒன்றிலேயே சார்ந்துவிடுதல் துன்பத்தைத் தரும். ஏனெனில், அது விருப்பத்திற்கு வித்து. ஏழை ஒருவன் பொன்னைப் பார்க்கிறான்; அப்பொன் தனக்குத் தேவை என்று நெஞ்சில் தோன்றுகிற எண்ணத்தோடு அவன் ஒன்றுகிவிடுகிறான். சாட்சியாக இருங்கள். எதிர்ப்பதற்கோ, அல்லது மறுப்பதற்கோ எதையும் நீங்கள் அறியவேண்டாம்.

நான் உண்மையில் எதுவோ அதுவாகவே இருக்கிறேன்

[1900-ஆம் ஆண்டு, மார்ச்சுத்திங்கள், 20-ஆம் நாள் சான்பிரான்சிஸ்கோ நகரில் ஆற்றிய சொற்பொழிவின் குறிப்பு]

இன்றிரவு பேசப்போகும் பொருள் மனிதன் இயற்கைக்கு வேருக உள்ள மனிதன்—என்பதாகும். நீண்ட காலமாக இயற்கை என்ற சொல்லானது பெரும்பாலும் வெளித் தோற்றங்களை மட்டும் குறிப்பதற்குப் பயன்படுத்தப் பட்டு வந்தது. இந்தத் தோற்றங்கள் ஒரு சீராக முறையாக வருவது கண்டனர். இவை அடிக்கடி அந்த ஒழுங்கு முறையிலே இயங்கிக்கொண்டிருந்தன. இறந்த கால நிகழ்ச்சி மீண்டும் நிகழ்ந்தது. ஒரு முறை மட்டும் அன்று; பல முறை. ஆகவே, இயற்கையானது ஒரு சீரோடு முறையோடு இயங்குவது என்று முடிவு கட்டினர். இயற்கையுடன் மிக நெருங்கிய தொடர்புடையது சீரான ஒழுங்கு முறை என்னும் கருத்து எழலாயிற்று. இந்த முறையின் உதவியின்றி இயற்கைத் தோற்ற நிகழ்ச்சிகளை அறிய இயலாது. இந்த ஒழுங்கு முறையே சட்டத்திற்கு விதிக்கு—அடிப்படையாகும்.

இயற்கை என்ற சொல்லும் ஒழுங்கு முறை என்ற கருத்தும் படிப்படியாக நமது உயிரிலும் மனத்திலும் ஏற்படும் இயக்கங்களாகிய அக நிகழ்ச்சிகளுக்கும் பயன் படுத்தப் பட்டன. வெவ்வேறு வகையாக வேறுபடுத்திக் காட்டப்படுவது எல்லாம் இயற்கையே. செடியின் தன்மை இயற்கை. விலங்கின் தன்மை இயற்கை. மனிதன் தன்மையும் இயற்கை. குறிப்பிட்ட முறைமைகளுக்கு ஏற்ப மனிதனது உயிரானது இயங்கிக்கொண்டிருக்கிறது; அவ்வாறே அவனது மனமும் இயங்கிக் கொண்டிருக்கிறது. எண்ணங்கள் தாமே தோன்றிவிடுவதில்லை. அவை ஒரு முறைமையில் தோன்றி, நிலைத்து நின்று, அழிந்து போகின்றன. வேறு விதமாகச் சொல்ல வேண்டுமானல், இயற்கையின் புற நிகழ்ச்சிகள்

எவ்வாறு விதிகளால் கட்டுப்பட்டிருக்கின்றனவோ, அவ்வாறே உடலுக்கு உள்ளே நிகழும் நிகழ்ச்சிகளும் மனிதனது உயிரும் மனமும் விதிகளால் கட்டுப்பட்டிருக்கின்றன.

மனிதனது மனத்தையும் உயிர்வாழ்தலையும் பற்றிய விதியை நாம் கருதும் போது, சுதந்திரத்துடன் கூடிய சித்தம், சுதந்தரத்துடன் கூடிய உயிர்வாழ்க்கை என்பன இல்லை என்பது புலனாகும். எவ்வாறு விலங்குகளின் தன்மையானது முழுதும் விதிகளுக்குக் கட்டுப் பட்டு இயங்கிக்கொண்டிருக்கிறது. என்பதை நாம் அறிவோம். விலங்கானது சுதந்திரச் சித்தத்துடன் இருப்பதாகத் தெரியவில்லை. இந்த உண்மை மனிதனுக்கும் பொது. மனிதத்தன்மையுங்கூட விதிகளுக்குக் கட்டுபட்டே இருக்கிறது. மனிதனது மனத்தின் செயல்களைக் கட்டுப் படுத்திவரும் விதிக்குக் கர்மவிதி—ஊழ்விதி—என்பது பெயர்.

ஒன்றும் இல்லாத சூனியத்தைக் கொண்டு செய்யப்பட்ட எந்தப் பொருளையும் எவரும் கண்ணாலும் பார்த்ததில்லை. மனத்திலே ஏதாவது பிறக்குமானால், அதுவும் ஏதாவது ஒன்றிலிருந்தே பிறந்திருக்க வேண்டும். சுதந்திரச் சித்தத்தைப் பற்றி நாம் பேசும்போது, எதனாலும் இயக்கப் படாத சித்தம் என்பதையே நாம் எண்ணுகிறோம். அத்தகைய சித்தம் உண்மையில் இல்லவேயில்லை. சித்தம் ஒன்றால் இயக்கப்படுகிறது. அது ஒன்றால் இயக்கப்படுவதால், அது சுதந்திரத்தோடு இருக்க இயலாது. அது விதிகளுக்குக் கட்டுப்பட்டிருக்கிறது. நான் உங்களிடம் பேசுவதற்கு விரும்புகிறேன்; நீங்களும் நான் சொல்வதைக் கேட்க விரும்புகிறீர்கள். இவை ஒருவிதியினால் நிகழ்வன. நான் செய்கிற அல்லது நினைக்கிற, அல்லது உணர்கிற ஒவ்வொன்றும், என் நடத்தையின் ஒவ்வொரு பகுதியும், எனது ஒவ்வோர் இயக்கமும் ஆகிய இவை எல்லாம் ஒன்றால் ஏற்படுகின்றன; ஆகவே, இவை சுதந்திரம் அற்றவை. என் உயிரையும் மனத்தையும் இவ்வாறு கட்டுப்படுத்தி இயக்கும் முறைமைக்குக் கருமவிதி—ஊழ்விதி—என்பது பெயர்.

பழங்காலத்திலே இத்தகைய கொள்கையை மேல் நாட்டுச் சமுதாயத்திலே பரப்பியிருந்தால், அது பெருங் குழப்பத்தை உண்டுபண்ணி இருக்கும். தனது மனமானது

விதிகளால் கட்டுப்பட்டிருக்கிறது என்று எண்ண, மேல்நாட்டினனுக்கு விருப்பம் இல்லை. பழங்காலத்துத் தத்துவக் கொள்கையால் இந்த ஊழ்விதியானது. எப்பொழுது எடுத்துக் கூறப்பட்டதோ, அப்பொழுதே அது இந்தியாவிலே ஒப்புக் கொள்ளப்பட்டது. மனத்தின் சுதந்திரம் என்பது ஒன்று இல்லவே இல்லை; அது இருக்கவும் இயலாது. இந்தியரது மனத்திலே இந்தப் போதனை ஒரு கலக்கத்தையும் ஏன் உண்டு பண்ணாது போயிற்று? இந்தியா இதனைச் சாந்தத்துடன் ஏற்றுக் கொண்டது. அதுவே இந்தியரது கருத்தின் சிறப்பியல்பாகும். உலகத்திலுள்ள வெவ்வேறான கருத்துகள் ஒவ்வொன்றிலிருந்தும் இந்தியரது கருத்தானது இந்தச் சிறப்பியல்பால் மாறுபட்டிருக்கின்றது.

புறஇயற்கையும் அக இயற்கையும் வெவ்வேறானவை அல்ல; அவை உண்மையில் ஒன்றே. இயற்கை நிகழ்ச்சிகள் எல்லாவற்றின் மொத்த தொகுப்பே இயற்கை எனப்படுகிறது. இருப்பன எல்லாம், இயங்குவன எல்லாம், இயற்கை எனப் பெயர் பெறும். சடப் பொருளுக்கும் மனத்திற்குமிடையே நாம் பெரிய வேறுபாட்டினைக் கற்பித்துக்கொண்டிருக்கிறோம்; சடப் பொருளிலிருந்து மனமானது முற்றும் வேறுபட்டது என்று நாம் கருதுகிறோம். உண்மையிலே, அவை ஒரே தன்மையனவாகும்; அதில் சரிபாதியானது மற்றொரு சரிபாதியைத் தொடர்ந்து இயக்கிக் கொண்டே இருக்கிறது. சடப் பொருளானது பல்வேறு விதமான உணர்ச்சிகளாக மனத்திலே பதிந்துகொண்டே இருக்கிறது. இந்த உணர்ச்சிகள் எல்லாம் சக்தியேயன்றி வேறு அல்ல. வெளியே ஏற்படும் சக்திக்கு ஏற்றவாறு இயங்குவதற்கும், அல்லது அதன் தாக்குதலுக்கு ஆளாகாது தப்பி அகல்வதற்கும் கொள்ளும் சிந்தையிலிருந்து பிறக்கும் அகச்சக்தியே
...கின்றது.

...ருள், மனம் என்னும் இரண்டும் உண்மையில்
...விர வேறல்ல. அவற்றை எவ்வளவு தூரம்
...யலுமோ அவ்வளவு தூரம் பிரித்தறிந்தால்,
...ண்டும் அடிப்படையிலே — வேரிலே—ஒன்றே
...றிவீர்கள். புறச்சக்தியானது எவ்வாறாவது அகச்
...ண்டாக்கிவிடும் என்ற உண்மையால், அவை

எங்கோ ஓர் இடத்தில் ஒன்றோடொன்று சேர்கின்றன என்பதையும், அவை தொடர்ந்து இயங்கிக்கொண்டே இருக்க வேண்டும், ஆகவே அடிப்படையில் வெவ்வேறு அல்லாத ஒரே சக்தியாய் இருக்கவேண்டும் என்பதையும் அறியலாம். பொருள் தம் அடிப்படையிலே எளிமையாகவும் பொதுவாகவும் இருக்கும். அதே சக்தியானது சடப்பொருளாக ஓர் உருவத்திலும், மனமாக வேறு ஓர் உருவத்திலும் தோன்றுவதால், மனமும் சடப்பொருளும் வெவ்வேறு எனக் கருதுவது சரியன்று. மனம் சடப்பொருளாக மாறுகிறது; சடப்பொருள் மனமாக மாறுகிறது. எண்ணச் சக்தியானது நரம்புச் சக்தியாகிறது; தசைச் சக்தியாகிறது; தசைச் சக்தியும் நரம்புச் சக்தியும் எண்ணச் சக்தியாகின்றன. இந்தச் சக்திகள் யாவுமே— சடப்பொருளாகவோ, அல்லது மனமாகவோ வெளிப்பட்டாலும்—இயற்கை என்பதைக் குறிக்கும்.

மிகமிக நுண்மையான மனத்திற்கும் மிகமிகத் தூலமான சடப் பொருளுக்கும் இடையே உள்ள வேறுபாடு, அளவிலே உள்ள வேறுபாடே. ஆகவே, பிரபஞ்சம் முழுவதையும் மனம் என்றும் குறிப்பிடலாம்; சடப்பொருள் என்றும் குறிப்பிடலாம்; எவ்வாறு குறிப்பிட்டாலும் அது தவருகாது. மனத்தைப் பண்படுத்தப்பட்ட சடப் பொருள் என்றும், உடலைத் தூலமாக்கப்பட்ட மனம் என்றும் நீங்கள் கொள்ளலாம். எதை எப்பெயரால் குறிப்பிடினும், வேற்றுமை சிறிதும் இல்லை. உலகாயதக் கொள்கைக்கும் ஆன்மிகக் கொள்கைக்கும் இடையே இருக்கும் பிணக்கால் ஏற்படும் இடர்கள் எல்லாம் தவருன எண்ணத்தால் ஏற்பட்டவை. உண்மையிலே இவ்விரண்டிற்கும் இடையே எந்தவிதமான வேறுபாடும் இல்லை. நானும் மிகமிகத் தாழ்ந்த பன்றியும் ஒரே தன்மையின் அளவிலேதான் வேறுபடுகிறோம். பன்றியில் வெளிப்பட்டிருக்கிற அளவானது சிறிது. என்னிடத்தில்வெளிப்பட்டிருக்கிற அளவானது பெரிது. சிற்சில சமயங்களில் நான் அளவில் தாழ்ந்தும், பன்றி அளவில் உயர்ந்தும் இருக்கலாம்.

'முதலில் பிறப்பது மனமா, அல்லது சடப் பொருளா?' என்று விவாதித்துக் கொண்டிருப்பதால் ஒரு பயனும் இல்லை. மனம் முதலாக, அதிலிருந்து சடப்பொருள் தோன்றுகிறதா?

அல்லது சடப்பொருள் முதலாக, அதிலிருந்து மனம் தோன்றுகிறதா? பயனற்ற இக்கேள்விகளிலிருந்துதான் தத்துவ வாதங்கள் பல தோன்றியுள்ளன. 'முட்டை முதலா, அல்லது கோழி முதலா?' என்று கேட்பது போன்றது இது. மனமும் சடப் பொருளும், சடப்பொருளும் மனமும் என்ற இவ்விரண்டுமே முதல்; இவ்விரண்டுமே கடை. முதலில் தோன்றியது சடப்பொருள், அது படிப்படியாக நுண்மையுற்று மனமாகிறது என்று நான் கூறினுல், சடப்பொருள் தோன்றுவதற்கு முன்பே மனம் என்பது இருந்திருக்க வேண்டும் என்பதை நாம் ஒப்புக்கொண்டே தீரவேண்டும். அவ்வாறு இல்லையானுல், எதிலிருந்து சடப்பொருள் தோன்றியிருக்க இயலும்? மனத்திற்கு முன்பே இருப்பது சடப்பொருள், சடப்பொருளுக்கு முன்பே இருப்பது மனம். இது முழுதும் கோழியும் முட்டையும் பற்றிய கேள்வி போன்றதே.

இயற்கை முழுதும் காரணவிதியால் கட்டுண்டிருக்கிறது; மேலும் அது காலத்தையும் இடத்தையும் சார்ந்திருக்கின்றது. இடத்திற்கு அப்பால் நாம் எதையும் காண இயலாது; என்ருலும், நாம் இடத்தை அறியாதிருக்கிருேம். காலத்திற்கு அப்பால் நாம் எதையும் உணர்ந்து அறியமுடியாது; என்ருலும், நாம் காலத்தை அறியாதிருக்கிருேம். காரணவிதியின் துணையினுல் அன்றி நாம் எதையும் அறிய இயலாது; என்ருலும், நாம் காரண விதியை அறியாதிருக்கிருேம். காலம் இடம் காரணவிதி என்ற இந்த மூன்றும் ஒவ்வோர் இயற்கை நிகழ்ச்சியிலும் இருக்கின்றன; ஒவ்வோர் இயற்கை நிகழ்ச்சியிலும் இம் மூன்றும் இருந்தே தீரும்; என்ருலும், இம்மூன்றும் இயற்கை நிகழ்ச்சிகள் அல்ல. ஒவ்வொரு பொருளையும் அறிவதற்கு முன்பே, அதனை வார்த்து எடுக்க வேண்டிய அச்சாகவோ, அல்லது உருவமாகவோ, பயன்படுவன இம்மூன்றுமே. சடப்பொருள் என்பதற்குக் காலமும் இடமும் காரணவிதியும் என்ற மூன்றையும் ஒருங்கே பெற்றுள்ள ஒன்று என்பது பொருள். மனம் என்பதற்குக் காலமும் இடமும் காரணவிதியும் என்ற மூன்றையும் ஒருங்கே பெற்றுள்ள ஒன்று என்பது பொருள்.

இந்த உண்மையை வேறு விதமாகவும் வெளியிடலாம். ஒவ்வொரு பொருளும் பெயரையும் உருவத்தையும் ஒருங்கே

பெற்றுள்ளதாகும். பெயரும் உருவமும் தோன்றி மறையலாம்; ஆனல், ஒரே தன்மையோடு நிலைத்திருப்பது பொருள் ஒன்றே. பொருள், உருவம், பெயர் என்ற மூன்றும் இந்தக் குடத்தை உண்டுபண்ணுகின்றன. இது உடைந்து போனல், நீங்கள் அதைக் குடம் என்று கூறுவதே இல்லை; இக்குடத்தின் உருவத்தையும் காண்பதில்லை. இதன் பெயரும் வடிவமும் மறைந்து போயின. ஆனல், இதன் பொருள் மட்டும் முன்போலவே நிலைத்திருக்கிறது. பொருளிலே ஏற்படுகிற வேறுபாடு முழுதும் பெயரால் வடிவாலுமே ஏற்படுகின்றது. பெயரும் வடிவமும் உண்மையல்ல; ஏனெனில், அவை மறைந்து போகின்றன. நாம் இயற்கை என்று குறிப்பிடுவது மாருதும் அழியாதும் இருக்கிற பொருளையன்று. காலம் இடம் காரணவிதி என்ற இம் மூன்றுமே இயற்கை. பெயரும் வடிவமும் என்ற இரண்டும் இயற்கை. மாயை என்பதும் இயற்கை. ஒவ்வொரு பொருளும் எந்தப் பெயரோடும் வடிவத்தோடும் உண்டுபண்ணப்படுகிறதோ, அந்தப் பெயரும் வடிவமும் மாயையாகும். மாயை என்பது ஓர் உண்மைப் பொருள் அன்று. அந்த மாயை உண்மைப் பொருளாய் இருந்தால், அதை நாம் அழிக்கவோ மாற்றவோ இயலாது. பொருள் என்பது நிலையான பொருள். மாயை என்பது வெறுந்தோற்றம். எதனுலும் அழிக்க முடியாத "நான்" என்ற பொருளும் இருக்கிறது. எப்பொழுதும் தொடர்ந்து மாறிக்கொண்டும் மறைந்து கொண்டும் இருக்கிற "நான்" என்ற வெறுந் தோற்றப் பொருளும் இருக்கிறது.

நிலைத்திருக்கிற ஒவ்வொரு பொருளுக்கும் இரண்டு தன்மைகள் உண்டு என்பது உண்மை. ஒன்று அகநிலை—உள்ளமைப்புத் தன்மை; இது மாருதது; அழியாதது. மற்றென்று, வெளித்தோற்றத் தன்மை; இது மாறுவது; அழிவது. மனிதன் உண்மைத் தன்மையிலே பொருளாகவும் ஆன்மாவாகவும் உயிராகவும் இருக்கிருன். இந்த ஆன்மா—இந்த உயிர்—என்றும் மாருதது; என்றும் அழியாதது. ஆனல் இதற்கு ஓர் உருவம் என்ற போர்வையும் பெயரும் உண்டு. இந்த உருவமும் பெயரும் மாருதவை அல்ல; அழியாதவை அல்ல; தொடர்ந்து மாறிக்கொண்டும் அழிந்துகொண்டும் இருப்பன. மாறிக்கொண்டிருக்கும் தன்மையனவான

உடலும் மனமும் அழிவுருத் தன்மையைப் பெறவேண்டும் என்று மக்கள் அறிவில்லாது முயன்றுகொண்டிருக்கிருர்கள். அவர்கள் அழியாத, நிலையான, ஓர் உடலைப் பெற விரும்பு கிருர்கள். அத்தகைய அழியாமையை நான் விரும்பவில்லை.

எனக்கும் இயற்கைக்குமிடையே எத்தகைய தொடர்பு இருக்கிறது? இயற்கையானது பெயரையும் வடிவத்தை யும், அல்லது காலத்தையும் இடத்தையும் காரணவிதியை யும் குறிப்பிடும் போது, நான் அந்த இயற்கைக்கு அப்பாற் பட்டவன். ஏனெனில், நான் சுதந்திரமானவன்; அழிவில் லாதவன்; மாருதவன். என்னுடைய சித்தம் சுதந்திர முடையதா அன்ரு என்ற கேள்வி பிறக்கவில்லை; நான் எந்த விதமான சித்தத்திற்கும். அறவே அப்பாற்பட்டவன். சித்தம் எங்கு இருப்பினும், அதற்கு எப்பொழுதும் சுதந் திரம் இல்லை. சுதந்திரமான சித்தம் என்பதொன்று இல் லவே இல்லை. எந்தப் பொருள் சித்தம் ஆகிறதோ, அந்தப் பொருளுக்குச் சுதந்திரம் உண்டு. ஆனுல், அது சித்தமாக மாறினதும் அதற்குப் பெயரும் வடிவமும் வந்து சேர்கின்றன. அந்தப் பெயருக்கும் வடிவத்திற்கும் அது அடிமையாகிறது. அந்தப் பொருளே ஆன்மா. இந்த ஆன்மா ஒரு பெயரை யும் ஒரு வடிவத்தையும் பெற்ற உடனே, சுதந்திரம் இழந்து கட்டுபாடுகளுக்கு ஆளாகிறது. இதுவே இவ்வாறு ஆவதன் முன் சுதந்திரத்தோடு விளங்கிற்று. ஆன்மாவானது உருவத் தையும் பெயரையும் பெற்றுச் சுதந்திரம் இழந்துவிட்ட போதிலும், இது தன் பழைய சுதந்திர நிலையை மறந்துவிடு வதில்லை. அதனுலே தான், ''நான் சுதந்திரம் உடையவன்; இந்த அடிமைத்தனத்தில் இருந்தபோதிலும், எனக்குச் சுதந் திர இயல்பு உண்டு,'' என்று அந்த ஆன்மா கூறுகிறது. ஆன்மா தன் பழைய, உண்மையான, சுதந்திர நிலைமையை எப்பொழுதும் மறந்துவிடுவது இல்லை.

ஆன்மாவானது சித்தமானதும், அது தன் பழைய சுதந் திரத்தை உண்மையில் இழந்துவிடுகிறது. இயற்கை விரும் பிய வண்ணம் அந்தச் சித்தம் ஆடித்தீரவேண்டும். நீங்களும் நானும் பன்னெடுங்காலமாய் அவ்வாறே ஆடிவருகிரேம். நாம் பார்ப்பது, செய்வது, அறிவது எல்லாம், நமது எண் ணங்கள், செயல்கள் எல்லாம், இயற்கையானது கட்டளை இட்ட வண்ணம் நாம் ஆடிய ஆட்டங்களே. இவற்றில்

ஏதொன்றிலும் சுதந்திரம் என்பது முன்பும் இருந்ததில்லை; இப்பொழுதும் இல்லை. மிகமிகத் தாழ்ந்தவையிலிருந்து மிக மிகச் சிறந்தவை வரையிலுள்ள எண்ணங்களும் செயல்களும் எல்லாம் விதிகளுக்குக் கட்டுப்பட்டவைகளே. இவற்றில் ஏதொன்றுக்கும் நமது ஆன்மாவுக்கும் தொடர்பே இல்லை.

எனது உண்மையான ஆன்மா இந்த விதிக்கு அறவே அப்பாற்பட்டது. அடிமைத்தனத்தை ஏற்று, இயற்கையின் கட்டளையையும் ஏற்று, விதிகளுக்கு அடங்கி, நீங்கள் வாழ்வதால் அந்த விதிகளின் கீழ் நீங்கள் சந்தோஷமாக இருக்கிறீர்கள். நீங்கள் எவ்வளவுக்கு எவ்வளவு இயற்கைக்குக் கீழ்ப்படிந்து அதன் கட்டளையின்படி நடக்கிறீர்களோ, அவ்வளவுக்கு அவ்வளவு கட்டுண்டு போகிறீர்கள். எவ்வளவுக்கு எவ்வளவு நீங்கள் அறியாமையோடு இருக்கிறீர்களோ, அவ்வளவுக்கு இந்தப் பிரபஞ்சத்திலுள்ள ஒவ்வொன்றின் கண்ணசைவு கையசைவு உதட்டசைவின்படி எல்லாம்நடக்கும் அடிமைகளாகிறீர்கள். இவ்வாறு விதிகளுக்குக் கீழ்ப்படிந்து நடப்பது,இயற்கையோடு இணைந்து ஒன்றிவாழ்வது ஆகுமா? இவ்வாறு நடப்பது உண்மையான இயற்கைக்கு ஏற்பவும் நடப்பது ஆகுமா? எந்த உலோகக் கனிப்பொருளாவது எந்த விதியோடாவது சண்டையிட்டது உண்டா? விதியை மறுத்தது உண்டா? எந்த மரமாவது அல்லது செடியாவது எந்த விதியையாவது எதிர்த்தது உண்டா? இந்த மேசையானது இயற்கையோடும் விதியோடும் ஒன்றியிருக்கிறது. இந்த மேசை எப்பொழுதும் மேசையாகவே இருக்கிறது; இது இதைக்காட்டிலும் மேலானதாக இயலாது. மனிதன் போராடத் தொடங்குகிறான்; இயற்கையை எதிர்த்துப் போரிடுகிறான். அவன் பல தவறுகளைச் செய்கிறான்; துன்பமும் அனுபவிக்கிறான். இறுதியிலே அவன் இயற்கையை வென்று, தன் சுதந்திரத்தைப் பெறுகிறான். அவன் சுதந்திரம் அடைந்தவுடன், இயற்கை அவனுக்கு அடிமையாகிறது.

ஆன்மா தன் அடிமைத்தன்மை உணர்ந்து, எழுந்து நின்று, தன் சுதந்திர உரிமையை வலியுறுத்தவும் பெறவும் கொள்ளும் முயற்சியே வாழ்க்கை எனப்படுகிறது. இந்தப்

போராட்டத்தில் கிட்டும் வெற்றியே உள்ளது சிறத்தலாகும். இறுதியான வெற்றியை முக்தி, நிருவாணம், சுதந்திரம் என்றெல்லாம் குறிப்பிடுவர். இந்த இறுதி வெற்றி ஏற்பட்டதும், அடிமைத்தனம் முழுதும் நீங்கிவிடுகிறது. இந்தப் பிரபஞ்சத்திலுள்ள ஒவ்வொன்றும் சுதந்திரம் பெறுவதற்காகப் போராடிக் கொண்டிருகின்றன. நான் இயற்கையாலும், பெயராலும், வடிவத்தாலும், காலம் இடம் காரணவிதி என்பவற்றாலும் கட்டுண்டிருக்கையில், உண்மையில் நான்யார் என்பதை அறிவதே இல்லை. இந்த அடிமை நிலைமையிலுங்கூட நான் என் உண்மைத் தன்மையை அறவே இழந்து விடுவதில்லை. என்னைக் கட்டியிருக்கும் விலங்குகளை ஒடிக்க நான் முயல்கிறேன்; அவ்விலங்குகள் ஒவ்வொன்றாக ஒடிகின்றன; நானும் என்னுடன் பிறந்த சிறப்பினை உணர்கிறேன். பிறகு முழுவிடுதலையும் கிடைக்கிறது. என்னைப்பற்றி மிகுந்த தெளிவும், மிகுந்த நிறைவும் கொண்ட உணர்வை நான் பெறுகிறேன்; அதாவது, நான் எல்லையில்லா ஆன்மா என்றும், இயற்கையின் தலைவனே ஒழிய அடிமை அல்லேன் என்றும் நான் அறிகிறேன். வேறுபாடுகள், தொகுப்புகள் என்ற எல்லாவற்றிற்கும் அப்பால், காலம் இடம் காரண விதி என்ற எல்லாவற்றிற்கும் அப்பால், நான் உண்மையில் எதுவோ அதுவாகவே இருக்கிறேன்.

ஒன்றே பொருள்

[நியூயார்க்கு மாநகரத்தில், 1900-ஆம் ஆண்டு, ஜூன் மாதத்தில் ஆற்றிய சொற்பொழிவின் குறிப்புகள்.]

இந்தியாவிலுள்ள வெவ்வேருன சமய முறைகள் எல்லாம் அத்துவிதம் அல்லது துவிதம் என்ற நடுநாயகமான கருத்திலிருந்து பிறந்தவை ஆகும்.

அவை எல்லாம் வேதாந்தத்தின் கீழ் அடங்கியவை. வேதாந்தத்தால் விளக்கம் பெறுவன. ஒருமை கற்பிப்பதே அவற்றின் இறுதி நோக்கமாகும். இதுவே கடவுள்; இதனைத் தான் நாம் பலவாகக் காண்கிருேம். சடப்பொருளையும், உலகையும், பல்வேறு உணர்ச்சிகளையும் நாம் உணர்கிருேம். ஆனல் இருப்பது ஒன்றே.

அந்தப் பொருளின் வெளித்தோற்றத்தின் அளவிலே உள்ள வித்தியாசங்களையே இந்த வெவ்வேருன பெயர்கள் குறிக்கின்றன. இன்றைக்குப் புழுவாக இருப்பதே, நாளைக்குக் கடவுளாகிறது. நாம் அதிகமாக நேசிக்கிற வேறுபாடுகள் எல்லாம் எல்லையற்ற ஓர் உண்மையின் பாகங்கள், பகுதிகள், கூறுகள் ஆகும். இந்த வேறுபாடுகள் எல்லாம் அந்த ஓர் எல்லையற்ற உண்மையின் தோற்ற அளவிலே உள்ள வேறுபாடுகளே. சுதந்திரம் பெறுதலே அந்த எல்லையற்ற உண்மை ஆகும்.

முறையைப் பற்றி, வழியைப் பற்றி நாம் தவருன கருத்துடையோராயினும், நம் போராட்டங்கள் எல்லாம் உண்மையில் சுதந்திரத்திற்கானவே. நாம் பெறமுயல்வது துன்பமன்று; இன்பமன்று; சுதந்திரந்தான். மனிதனது தணிக்க முடியாத வேட்கையின் இரகசியம் இந்த ஒரு நோக்கந்தான். மனிதனது வேட்கை இருக்கிறதே, அது எரிகிற, இன்னும்வேண்டும் இன்னும்வேண்டும் என்று விரும்புகிற, தணியாத வேட்கையாகும் என இந்து இயம்புகிருன்; அவ்வாறே பௌத்தனும் சொல்கிருன். அமெரிக்கர்களாகிய நீங்கள் மேலும் மேலும் அதிக மகிழ்ச்சியையும் மேலும் மேலும் அதிக இன்ப நுகர்வையும் எப்பொழுதும் எதிர்

பார்த்து நிற்கிறீர்கள். நீங்கள் திருப்தி அடையமாட்டீர்கள் என்பது உண்மை; என்றாலும், நீங்கள் பெறமுயல்வதின் அடியில் இருப்பது சுதந்திரம்.

இந்தப் பெருவேட்கை இருக்கிறதே, இது உண்மையிலே மனிதனது எல்லையற்ற தன்மைக்கு ஓர் அடையாளமாகும். அவன் எல்லையற்ற தன்மையனாய் இருக்கும் காரணத்தினால் அவனது வேட்கையும் எல்லையற்ற வேட்கையாய் இருந்தால்தான் அவன் திருப்தி அடைய இயலும். அந்த எல்லையற்ற வேட்கையானது நிறைவேறும் போது தான், அவன் திருப்தி அடைய இயலும்.

அப்படியானால், மனிதனைத் திருப்தி செய்யக்கூடியது எது? அது பொன் அன்று; இன்ப நுகர்வு அன்று; அழகும் அன்று. எல்லையற்ற ஒன்றுதான் அவனுக்குத் திருப்தி அளிக்க இயலும். அந்த எல்லையற்ற ஒன்றே இறை. இது கைவரப் பெறும் நாள் என்றோ அன்றுதான் அவன் சுதந்திரம் அடைகிறான்.

"இந்தப் புல்லாங்குழல், ஐம்பொறிகளைத் தன் சுருதித் துளைகளாகக் கொண்டு, புலனுணர்ச்சிகளையும் உணர்ச்சியால் அறிந்தவற்றையும் பாடலாகக்கொண்டு, ஒரே ஒரு பொருளைத்தான் பாடிக்கொண்டு இருக்கிறது. இந்தப் புல்லாங்குழல் எம்மரத்திலிருந்து எடுக்கப்பட்டதோ, அந்த மரத்திற்கே போய்ச்சேரும் வேட்கையோடு இருக்கிறது."

"உன்னையே, நீயே தியாகம்செய்து கொடுத்துவிடு! இதோபார்! நீ உன்னையே தாழ்த்திக்கொள்ளாதே! நீயே உன்னுடைய மிகச் சிறந்த நண்பனாய் இருக்கிறாய். நீயே உன்னுடைய மிகத் தீய பகைவனாய் இருக்கிறாய்."

எல்லையற்ற பொருளுக்குத் துணை புரியக் கூடியவர் யார்? இருண்ட சோதனைக் காலத்திலே உதவியாக வருகிற துணை உங்களுடைய கையாகவே இருக்கவேண்டும்.

பயமும் ஆசையும் என்ற இரண்டுமே—இவை எல்லாம் ஏற்பாடு வாதத்திற்குரிய இரண்டு காரணங்கள். இவற்றை உண்டாக்குபவர் யார்? நாமே. நம் பிறவிகள் எல்லாம் கனவிலிருந்து கனவிற்குச் செல்லும் பிரயாணமே. கனுக்

களேயே காண்பவனய் இருக்கிற மனிதன் என்பவன் எல்லே யற்றவன். ஆனல் அவன் காணும் கனக்களோ, எல்லே யுடைய கனக்களாய் இருக்கின்றன!

இதில் ஒரு புண்ணியம் என்ன என்ருல், புறத்தோற்ற மாய் இருக்கிற எதுவும் நித்தியப்பொருளாய் இருக்க இயலாது ஒன்றை ஒன்று சார்ந்திருக்கிற இந்த உலகத்திலே, எந்தப் பொருளும் நித்தியப் பொருள் அன்று என்பதைக் கேட்டு நெஞ்சு துடிப்பு எய்துகிற மனிதர்கள் இருக்கிருர்களே, அவர்கள் கருதுவது என்ன என்பதையே அறியாதவர்கள் ஆவார்கள்.

எல்லேயற்ற நீல ஆகாயமே நான். பல நிறமுடைய இந்த மேகங்கள் என் மீது படிந்து செல்கின்றன; இவை ஒரு வினடி தங்கிநின்று, பிறகு மறைந்து போகின்றன. நித்தியமான நீல ஆகாயம் இருக்கிறதே, அதுவே நான். எல்லாவற்றையும் காணும் சாட்சி நான்; எல்லாவற்றையும் கண்டுகொண்டேயிருக்கிற அதே நித்தியசாட்சி நான். நான் பார்க்கிறேன்; ஆகவே, இயற்கையும் இருக்கிறது. நான் பார்க்கவில்லே; ஆகவே, இயற்கையும் இல்லே. எல்லேயற்ற ஒற்றுமையானது ஒரு நொடி நேரம் கலேந்து போனலுங்கூட, நம்மில் எவராலும் பார்க்கவோ, பேசவோ இயலாது.

தேவி வழிபாடு

[நியூயார்க்கு மாநகரிலே, 1900–ஆம் ஆண்டு, ஜூன் ஒரு ஞாயிறு பிற்பகலில் எடுத்த குறிப்புத் துணுக்குகள்]

ஒவ்வொரு சமயத்திலும் இனக் கடவுள் நிலையிலிருந்து படிப்படியாக உயர்ந்து உயர்ந்து இறுதியில் கடவுளர்களில் பெருங்கடவுளாகிறுன் மனிதன்.

ஒழுக்க நூலின் நித்தியக் கொள்கை ஒன்றை வெளியிட்டவர் **கன்பூசியஸ்** ஒருவரே. "மனுதேவர்" என்பதே "**அஹ்ரிமான்**" என மாற்றப்பட்டிருக்கிறது. இந்தியாவிலே புராண விளக்கமானது மறைத்து வைக்கப்பட்டது. என்ருலும், அதன் கருத்து மட்டில் நிலைத்திருந்தது. "உயிர்வாழ்கிற அணைத்திற்கும் மகாராணியாகவும், ஒவ்வொரு பொருளிலும் உள்ள சக்தியாகவும் நான் இருக்கிறேன்" என்ற மந்திரமானது ஒரு பழைய வேதத்திலே இருக்கிறது.

தாயை வழிபடுகிற முறையானது தத்துவங்களிலே தனித் தத்துவமாய் இருக்கிறது. நம் கருத்துகளிலே முதற் கருத்தாய் இருப்பது சக்தியைப் பற்றிய கருத்தாகும். அது ஒவ்வொரு படியிலும் மனிதனை மோதி நிற்கிறது. நமது உடலின் உள்ளே நாம் உணர்கிற சக்தியே நமது ஆன்மா. நமது உடலின் வெளியே நாம் உணர்கிற சக்தி இயற்கையாகும். இந்த இரண்டு சக்திகளுக்குமிடையே நிகழ்ந்து கொண்டிருக்கிற போரட்டமே மனிதனது வாழ்க்கை. நாம் அறிகிற அல்லது உணர்கிற எல்லாம் இந்த இரண்டு சக்திகளால் ஏற்படும் பயனுகும். சூரியன் தன் வெளிச்சத்தை நல்லோர் மேலும் தீயோர் மேலும் ஒரே விதமாகவே பரப்பி வருவதை மனிதன் கண்டான். கடவுளைப் பற்றிய ஒரு புதிய கருத்தானது—கடவுளே எல்லாவற்றையும் கடந்து நிற்கிற எங்கும் பரவியுள்ள ஒரு பெருஞ் சக்தி என்ற புதிய கருத்தானது—தாயே—கடவுள் என்ற கருத்து, அதாவது தேவி கொள்கை இதிலிருந்து தோன்றிற்று.

செயல், தொழில், வினை என்பது புருஷனுக்கு—ஆன்மாவுக்கு—உரியது அன்று; பிரகிருதியைச் சேர்ந்தது; இயற்

கையைச் சேர்ந்தது என்று சாங்கிய முறை கூறுகிறது. இந்தியாவிலே பெண்கள் பிரிவுகளில் எல்லாம் மிகச் சிறந்தவள் தாயே. குழந்தைக்கு எது நேர்ந்தாலும் அதைக் காப்பாற்றுபவள் தாயே. ஒருவனைத் துறந்து விட்டு அவனது மனைவியும் மக்களும் வெளியேறிவிடுவார்கள். ஆனால் அவன் தாயோ அவ்வாறு ஒரு பொழுதும் செய்யவே மாட்டாள்! மேலும், இந்தப் பிரபஞ்சத்தின் பாரபட்சமற்ற சக்தியாகத் தாய் விளங்குகிருள். ஏனெனில், எதையும் கேட்காத, எதையும் விரும்பாத, தனது குழந்தையிடம் காணும் குற்றங்குறையைப் பொருட்படுத்தாத, அக்குற்றங் குறை இருப்பினும் தன் குழந்தையை மேலும் மேலும் நேசிக்கிற, தூய அன்பு அவளுடைய அன்பாகும். இந்துக்களைச் சார்ந்த மேல் வகுப்புகள் எல்லாம் இன்று தாயையே தெய்வமாகத் தொழுதுவருகின்றன.

இந்தக் குறிக்கோளானது இன்னும் முழு வெற்றியைத் தாராத நிலையிலேதான் இருக்கிறது. இதிலே குறிக்கோள் ஒன்றுமே இல்லை. இந்த உலகத்தைத் தாயின் விளையாட்டு என்றே கூறலாம். ஆனால், நாம் இந்த உண்மையை மறந்திருக்கிறோம். நம் வாழ்க்கையில் தன்னலம் இல்லாத போதும், நம் வாழ்க்கையே கண்டு நிற்கும் காட்சியாக நாம் மாறிவிடுகிறபோதும், துன்பத்தையுங்கூட நாம் இன்பமாகவே அனுபவிக்க இயலும். இந்தத் தத்துவத்தைச் சிந்தித்து வகுத்துதவிய சிந்தனையாளர் எல்லாப் புறத்தோற்றங்களையும் ஒரு சக்தி ஊடுருவி நிற்கிறது என்ற உண்மையைக் கண்டு வியப்புற்றார். கடவுளைப் பற்றி நாம் கொண்டிருக்கிற கருத்திலே மனிதனது குறையைக் காணலாம்; மனிதனது உருவத் தோற்றத்தைக் காணலாம். ஆனால், சக்தி என்றதும், எல்லையற்று எங்கும் பரவியுள்ள ஓர் ஆற்றலின் கருத்தே விளக்க முறுகிறது. "உருத்திரன் கொல்ல விரும்புவானானால், அவனது வில்லை எடுத்து நீட்டுபவள் நான்" என்று சக்தி கூறுகிருள். உபநிஷதங்கள் இந்தக் கருத்தைப் பெரிதாக வளர்க்க வில்லை. ஏனெனில், வேதாந்தம் கடவுள்—கருத்து என்பதைப் பெரிதாகக் கருதவே இல்லை. ஆனால், "நானே உண்மைப் பொருளாய் இருக்கிறேன்; பொய்ப் பொருளாயும் இருக்கிறேன்; நானே நல்லதைக் கொண்டுவருகிறேன்; தீயதையும் கொண்டு வருகிறேன்"

என்று அர்ச்சுனனுக்குச் சொன்ன குறிப்பிடத்தக்க போதனை யானது கீதையிலே இருக்கிறது.

மீண்டும் இக்கருத்து உறங்கத் தொடங்கிற்று. பின்பு ஒரு புதிய தத்துவம் தோன்றி எழுந்தது. "நல்லதும் தீய தும் ஆன கலவைப் பொருளே இந்தப் பிரபஞ்சம்; இந்த இரண்டுமாய்த் தோற்ற முற்று நிற்பது ஒரே ஒரு சக்தி தான்" என்பது அப்புதிய தத்துவமாகும்." ஒரு காலு டைய நொண்டிப் பிரபஞ்சமானது ஒரு காலுடைய நொண் டிப் பிரபஞ்சத்தை உண்டுபண்ணும். இந்தக் கருத்தானது நம்மை இறுதியிலே அருளற்றவர்களாக்கி, விலங்காக்கிவிடும். அத்தகைய கருத்தினைக் கொண்டு வகுக்கப்படும் ஒழுக்க முறையானது விலங்குகளின் ஒழுக்க முறையாக இருக்கும். புண்ணியவான் பாவியை வெறுக்கிறான். பாவியோ புண் ணியவானை எதிர்த்துப் போராடுகிறான். இந்தப் போராட்ட மும் பாவியை மேல் நிலைக்கே கொண்டு செல்கிறது. தன் னலமே தனக்குப் போதும் என்று கருதுகிற தீய மனமும் தொடர்ந்து வரும் இடர்களால் தாக்குண்டு தாக்குண்டு நசுங் கிப் போய், இறுதியில் சாகும். அப்போது நாம் விழிப் படைந்து **தாயை** அறிவோம்.

தாயிடம் நாம் கொள்கிற நித்திய சரணாகதி ஒன்றே (இடையறாத தஞ்சம் ஒன்றே) ஐயம் முதலிய எதுவும் அற்ற முழுச் சரணாகதி ஒன்றே—நமக்கு அமைதியைத்தரும். அவளுக்கு அஞ்சாமலும், அவளிடமிருந்து எதையும் பெற விரும்பாமலும், அவளை அவள் பொருட்டே நேசிப்பீர்களாக. அவளுடைய பிள்ளைகள் நீங்கள் என்ற காரணத்தால், நீங் கள் அவளை நேசியுங்கள். நல்லது கெட்டது என்ற எல்லா வற்றிலும் நீங்கள் அவளைக் காண முயலுங்கள். அப்போது தான் "எல்லாம் ஒரே தன்மையன" என்ற தெளிவு பிறக்கும். தாயே நித்தியப் பேரின்பமாய் இருக்கி றாள் என்ற தெளிவினை நாம் பெறுகிற போது, அந்தப் பேரின்பம் நமக்குக்கிட்டும். அது கிட்டுகிற வரையில், நம் மைத் துன்பம் தொடர்ந்து பின்பற்றியே நிற்கும். தாயின் மடியில் படுத்து ஓய்வு கொண்ட போதுதான், நாம் நல்ல பாதுகாப்போடு இருப்போம்.

சமயசாரம்

[அமெரிக்காவில் நிகழ்த்திய சொற்பொழிவு.]

"மனித உரிமைகள்" என்பது சமுதாயத்தைத் தட்டி எழுப்பும் முன்னேற்றக் கருத்தாகப் பிரான்ஸ் நாட்டிலே நெடு நாள் நிலவிற்று. "பெண்கள் உரிமைகள்" என்ற ஓசை அமெரிக்காவில் இன்னும் பொதுமக்களது செவியில் விழுந்து கொண்டேயிருக்கிறது. இந்தியாவிலே நாங்கள் எப்பொழுதும் "கடவுள் உரிமைகள்" பற்றியே கருதுகிறோம்.

எல்லாச் சமயங்களையும் தன்னகத்தேகொண்டு நிற்பது வேதாந்தம், இந்தியாவிலே எமக்கே உரிய சிறப்புக் கருத்தொன்று உண்டு. எனக்கு ஒரு மைந்தன் இருக்கிறான் என்று வைத்துக்கொள்ளுங்கள். நான் அவனுக்கு எந்தச் சமயத்தையும் போதிக்கக் கூடாது. அவனது மனத்தை ஒருமுகப்படுத்திச் சிந்திக்கும் பயிற்சியை நான் அவனுக்குக் கற்பிக்கவேண்டும். மேலும், ஒருவரிப் பிரார்த்தனையை நான் அவனுக்குக் கற்பித்துத்தரவேண்டும். பிரார்த்தனை என்பது, உங்கள் கருத்துப்படி அன்று. "இந்தப் பிரபஞ்சத்தைப் படைத்த கடவுளை நான் தியானம் செய்கிறேன். அவன் என்னுடைய மனத்தை அறிவுடையதாகச் செய்வானாக," என்பதே அப்பிரார்த்தனை. பிறகு தக்க வயது அடைந்ததும், அவன் பல்வேறு தத்துவங்களையும் போதனைகளையும் கேட்டு அறியப் பலரை நாடுவதில் ஈடுபடுகிறான். எது உண்மை என்று புலப்படுகிற வரையில், அவன் அந்தக் கேள்வி ஞானத்தில் ஈடுபட்டு வருகிறான். பிறகு அந்த உண்மையைத் தனக்குப் போதித்த குருவுக்கு ஒரு சீடனாகிவிடுகிறான். ஏசுநாதரையோ, புத்தரையோ, அல்லது மகம்மது நபியையோ தன் தொழுகைக்கு ஏற்ற கடவுளாக அவன் தன் விருப்பப்படி தேர்ந்தெடுத்துக்கொள்ளலாம். இவருள் ஒவ்வொருவருக்கும் பிறர் தொழத்தகுந்த தகுதி உண்டு என்பதை நாங்கள் அறிந்திருக்கிறோம். ஆகவே, என் மகன் புத்தனாகவும், என் மனைவி கிறிஸ்தவ சமயத்தவளாகவும், நான் ஒரு மகம்மதியவனாகவும், ஒரே சமயத்தில் முழுச் சுதந்திரத்தோடும், ஒருவிதப் பிணக்குமின்றி எளிதில் இருந்துவரலாம்.

எல்லாப் பாதைகளும் போய்ச் சேரும் இடம் கடவுளே என்பதை எண்ண நமக்கு எல்லாம் மகிழ்ச்சியே. நாம் எல்லாம் கடவுளை நம் கண்களால் கண்டபோதுதான் உலகம் சீர்திருத்தம் அடையும் என்பதில்லை. உங்களுடைய கொள்கை என்னுடைய கொள்கையாகவும், என்னுடைய கொள்கை உங்களுடைய கொள்கையாகவும் இருக்க இயலாது என்பது எங்களுடைய அடிப்படைக் கொள்கையாகும். நானே எனது சமயம். இன்று நிலைத்திருக்கும் பகுத்தறிவு நிறைந்த சமயக்கொள்கையானது இந்தியாவில் நாங்கள் ஏற்படுத்திக்கொண்ட சமயக்கொள்கையே என நாங்கள் நம்பிவருகிறோம் என்பது உண்மைதான். கடவுளை நாடி நின்றவர்களை எல்லாம் தன்னகத்தே சேர்த்து நிற்பதாலும், எல்லாவிதமான தொழுகை முறைகளிடத்தும் முழு அருள் கொண்டிருப்பதாலும், இந்தப் பிரபஞ்சத்திலே உள்ளது சிறத்தல் என்ற விதிமுறைப்படி கடவுளானவர் நாளடைவில் படிப்படியாக விளக்கமுற்று முழுநிலை அடைவதற்கு உதவுகிற கருத்துகளை எப்பொழுதும் ஏற்றுக்கொள்ளும் தன்மையோடு இருப்பதாலும், எங்கள் சமயக்கொள்கையானது பகுத்தறிவு நிறைந்தது என்று நாங்கள் நம்புகிறோம். எங்கள் கொள்கை குறைபாடு உடையது என்பதை நாங்கள் ஒப்புக்கொள்கிறோம். ஏனெனில், உண்மைத் தன்மை என்பது எல்லாக் கொள்கைக்கும் அப்பாற்பட்டதாகும். இவ்வாறு நாங்கள் ஒப்புக்கொள்வதால், எங்கள் சமயக் கொள்கையானது எக்காலத்தும் அழியாது வளர்ந்து கொண்டே செல்லும் என்ற நம்பிக்கை ஏற்படுகிறது. சமயங்களும், சடங்குகளும், புத்தகங்களும், மனிதன் தன் தன்மையினை உணர்ந்துகொள்வதற்கு ஏற்ற கருவிகளாகப் பயன்படும் அளவிற்கு முழுதும் நல்லனவே. அவன் தன் தன்மையினை உணர்ந்துகொண்டதும், அவற்றை எல்லாம் அவன் துறந்துவிடுகிறான். "நான் வேதங்களை ஏற்க மறுக்கிறேன்" என்பது வேதாந்தத் தத்துவத்தின் கடைசி வாக்கியமாகும். சடங்குகளும், தோத்திரப் பாடல்களும், சமய நூல்களும் அவனைச் சுதந்திரத்திற்கு அழைத்துச் சென்ற பாதைகளாகும். என்றாலும் தன் உண்மைத் தன்மையை அறிந்துகொண்டதும், அவனுக்கு அவை தேவையற்றவை ஆகின்றன. "சோ—ஹம், சோ—ஹம்," "நானே

கடவுள்'' என்ற ஒலிகள் அவன் உதட்டிலிருந்து வெளிவரு கின்றன. அத்தகையவன் கடவுளைப் பார்த்து, ''நீ'' என்று அழைப்பது தெய்வநிந்தனை ஆகும்; ஏனெனில், அவன் ''கடவுளோடு ஒன்றிவிட்டான்.''

என் சம்பந்தப்பட்ட வரையில், அறிவோடு ஒத்திருக் கிற வேதங்கள் எவ்வளவோ அவ்வளவு மாத்திரம் நான் எடுத்துக்கொள்கிறேன். வேதங்களிலே சில பகுதிகள் முர ணுகத் தோன்றுகின்றன. மேல்நாட்டுக் கருத்துப்படி, வேதங்கள் தெய்வம் உணர்த்தியவை அல்ல என்று கருதப் படுகின்றன. கடவுளையும் அவரது நிறை ஞானத்தையும் பற்றி நாம் அறிந்தவற்றின் தொகுப்பே வேதங்கள். வேதங்கள் மட்டுமே கடவுள் ஞானத்தால் நிறைந்தவை என்று சொல்வது புரட்டு. பல்வேறு சமய நூல்களிலும் பல்வேறு அளவில் இந்த ஞானம் உளது. ''வேதங்களிலே அறிவோடு ஒத்திருக்கிற பகுதிகளே வேதங்கள்'' என்று **மனு** கூறுகிருர். எங்கள்தத்துவஞானிகளில் பலர் இக்கருத் தினை ஏற்றுக்கொண்டிருக்கின்றனர். உலகத்துச் சமயநூல் கள் எல்லாவற்றிலும் எங்கள் வேதங்களே வேதங்களை ஓது வது என்பது முதன்மையன்று என்று முழங்குகின்றன.

என்றும் மாருத ஒன்று இருக்கிறதே, அதை அறிவதற்கு உதவுவதே உண்மையான படிப்பாகும். அந்தப் படிப்பா னது உணர்வு நிலைக்கு அப்பாற்பட்ட நிலையிலிருந்தும் சமாதி நிலையிலிருந்தும் பெறுகிற ஒன்று. நம்பிக் கையாலும் அறிவாராய்ச்சியாலும் அந்த உண்மைக் கல்வியைப் பெறஇயலாது. அந்தக் குறையற்ற நிலையை ஒருவன் அடைகிறபோது, உருவக்கடவுளுக்கு என்ன தன்மை உண்டோ, அதே தன்மையனுய் அவனும் இருக்கி ருன். ''நானும் என் தந்தையும் ஒன்றே,'' என்று ஏசுநா தர் கூறுவது இந்த உண்மையைத்தான். அவன் பிரமத் தோடும், எல்லையற்ற பரம்பொருளோடும் தானும் ஒத்த நிலை அடைந்துவிட்டதை அவன் அறிகிருன்; உருவக் கட வுளாகவும் தோற்றம் பெறுகிருன். மாயைத் திரைமூலம் அதாவது அஞ்ஞானத்தால், எல்லையற்ற பரம்பொருளைப் பார்க்கும்போது புலப்படுவது உருவக்கடவுளே.

நம் ஐம்பொறி கொண்டு கடவுளை அறியமுயன்ருல், ஓர் உருவக் கடவுளாகத்தான் காண இயலும். உண்மை என்ன என்ருல், ஆன்மாவை நாம் ஐம்பொறி புலன்களால் அறியும் வண்ணம் நம் உண்மைத் தன்மையை (ஆன்மாவை) புறத்தே தோன்றுமாறு செய்யமுடியாது. காண்பவன் எப்படித் தன்னையே காண இயலும்? தனது நிழலைத்தான் வெளியே தோன்றும்படி செய்ய இயலும். தன் நிழலை மிகவும் தெளிவாகத் தோன்றச் செய்தால், கிடைப்பது எதுவோ அதுதான் உருவக் கடவுள். தான் அல்லது ஆன்மா என்பது ஒரு நித்தியப் பொருள். அந்த நித்தியப்பொருளே—அதாவது தன்னை—வெளித்தோற்றம் பெறுமாறு செய்ய நாம் போராடிக் கொண்டு இருக்கிரும். இந்தப் பிரபஞ்சத்தின் இந்தத் தோற்றமானது அந்தப் போராட்டத்தினுல் ஏற்பட்டது. அதனைத்தான் நாம் சடப்பொருள் என்கிரும். இவை எல்லாம் எளிய முயற்சிகள் ஆகும். அகத்தே இருக்கும் தன்னைத் தன்னுல் இயலும் வரையில் மிக உயர்ந்த புறக்காட்சியாகக் காட்டுவதே உருவக் கடவுளாகத் தோன்றுகிறது.

உங்கள் மேல் நாட்டு அறிஞர்களில் ஒருவர் "மனிதன் செய்கிற மிகச் சிறந்த வேலையே—சிருஷ்டியே—நாணயம் மிகமிக நிறைந்த கடவுளாகும்," என்று கூறியுள்ளார். எவ்வாறு மனிதன் இருக்கிருனே, அவ்வாறே கடவுள் இருக்கிருர். மனித உருவத்தோடு கடவுள் தோன்றினுல் அன்றி, மனிதன் கடவுளைக் காண இயலாது. நீங்கள் எவ்வாறு பேசினுலும் சரி; எவ்வாறு முயன்ருலும் சரி; கடவுளை மனித உருவத்தில் எண்ண இயலுமே ஒழிய, வேறு விதமாக எண்ணவே இயலாது. ஏனென்ருல், எவ்வாறு இருக்கிறீர்களோ, அவ்வாறே கடவுளும் இருக்கிருர். சிவன் என்ற கடவுளது உருவம் போல் ஒன்றைச் செய்யும்படி ஒரு மூடனைக் கேட்டனர். அவனும் பல நாள் முயன்று, பிறகு ஒரு குரங்கின் உருவத்தையே செய்து முடித்தான்! ஆகவே, கடவுளை அவரது எல்லையற்ற தூய்மை நிலையிலே நாம் சிந்திக்க முயன்ருல், நாம் படுதோல்வியே அடைவோம். ஏனென்ருல், நமக்கு இக்காலத்தில் ஏற்பட்டுள்ள தேகத்தினுல் நாம் கட்டுப்பட்டும், பல்வேறு குறைகளுக்கு ஆளாகியும் இருக்கிருேம்.

ஆதலால், மனிதராகத்தான் நாம் கடவுளைக் காணமுடியும். எருமைகள் கடவுளைத் தொழ விரும்பினால், அவை தம் இயற்கைக்கு ஏற்பக் கடவுளை ஒரு பெரிய எருமையாகவே காணும். அவ்வாறே ஒரு மீன் கடவுளைத் தொழ விரும்பினால், கடவுளை அது ஒரு பெரிய மீனாகவே, கருதுவது இயல்பு. அவ்வாறே மனிதனும் கடவுளைத் தன்னைப் போலவே கருதித்தான் தீரவேண்டும். மனிதனும் மீனும் எருமையும் பல்வேறு பாத்திரங்களைக் குறிப்பிடுவனவாக நினைத்துக்கொள்ளுங்கள். இப்பாத்திரங்கள் தத்தம் அளவிற்கும் உருவத்திற்கும் ஏற்பக் கடவுளாகிய கடல் நீரினால் நிரப்பப்படுவதற்கு அக்கடலுக்குச் செல்கின்றன எனவும் வைத்துக் கொள்ளுங்கள். மனிதப் பாத்திரத்தில் நிரம்பிய நீர் மனிதனது உருவம் போலவே அமையும். எருமை யாகிய பாத்திரத்தில் நிரம்பிய நீர் எருமையினது உருவம் போலவே அமையும்; அவ்வாறே மீனாகிய பாத்திரத்தில் மீனின் உருவம் போலவே அமையும். இந்தப் பாத்திரங்களுள் ஒவ்வொன்றிலும் இருக்கும் நீர் கடவுளாகிய கடலிலுள்ள அதே நீர்தான்.

சமயமே இல்லாத மனிதனாகிய விலங்கு, தனித்த மனித இயல்பின் எல்லைகளையும் தாண்டிநிற்கும். பரமஹம்ஸர் சித்தர், என்ற இந்த இரண்டு விதமான மனிதர்கள் கடவுளை மனிதனாகத் தொழுவதில்லை. எவன் ஒருவனுக்கு இயற்கை எல்லாம் அவனது தன்மையாகிவிடுகிறதோ, அவன் ஒருவனே கடவுளைக் கடவுளது உண்மை நிலையிலே தொழ இயலும். மனித விலங்கு தன் அறியாமையால், கடவுளைத் தொழுவதே இல்லை. சுதந்திர ஆன்மாவாகிய ஜீவன் முத்தர்கள் தங்கள் அகத்திலேயே கடவுளை அனுபவித்து வருகிற காரணத்தால், அவர்கள் தொழுவதே இல்லை. "சோ—ஹம், சோ—ஹம்"—"நானே கடவுள்"—என்று அவர்கள் மொழிகின்றார்கள். அவர்கள் எப்படித் தங்களையே தொழுதுகொள்வது?

நான் ஒரு சிறு கதை சொல்கிறேன் :- ஒரு காலத்தில் ஒரு சிங்கக்குட்டி இருந்தது. சாகும் நிலையில் இருந்த அதன் தாய் அதனைச் சில ஆடுகளுக்கு இடையே விட்டுச் செத்துவிட்டது. ஆடுகள் அந்தச் சிங்கக் குட்டிக்கு

உணவளித்துத் தங்க இடமும் அளித்தன. சிங்கக்குட்டி வளர்ந்தது. ஆடுகள் "பாஅஅ" என்று கத்தும்பொழுது, சிங்கக் குட்டியும் "பாஅஅ" என்றே கத்திற்று. அங்கு ஒரு நாள் வேறு ஒரு சிங்கம் வந்தது; மற்ற ஆடுகளுடன் அந்த ஆட்டுச் சிங்கமும் ஆடுகள் போலக் கத்தியதைக் கண்டது; அதனுல், நீ 'இங்கு என்ன செய்கிருய்'? என்று வியப்புடன் சிங்கக்குட்டியைக் கேட்டது. அந்த ஆட்டுச்சிங்கம் "பாஅஅ" என்று பதில் அளித்தது. "நான் ஒரு சிறிய ஆடு; நான் ஒரு சிறிய ஆடு. நான் பயந்துவிட்டேன்" என்று அது கூறிற்று. "முட்டாள்!" என்னேடு வா, உன்னைக் காட்டுகிறேன்" என்று சொல்லி. அதனை ஒரு தெளிந்த சிற்ருேடை அருகே அழைத்துச் சென்று, அந்த நீரிலே தெரிந்த அதன் நிழலை அதற்குக் காட்டிற்று. "நீ ஒரு சிங்கம்; என்னைப் பார்; ஆடுகளைப் பார். உன்னையும் நீயே பார்" என்று கூறிற்று. அவ்வாறே அந்த ஆட்டுச் சிங்கம் பார்த்த பிறகு, "பாஅஅ, நான் ஆடுபோலத் தோன்றவில்லை; நான் ஒரு சிங்கம் என்பது உண்மை" என்று கூறிற்று. அவ்வாறு கூறிக்கொண்டே அந்தக் குன்றுகள் எல்லாம் நடுங்கிக் குலையும் வண்ணம் ஒரு பெருமுழக்கம் செய்தது.

இதுவே உண்மை. பழக்க வழக்கம் என்ற ஆட்டுத் தோலைப் போர்த்துக்கொண்டிருக்கிற சிங்கங்கள் நாம். நம்மைச் சுற்றியுள்ள சூழ்நிலைகளால் நம் சுய உணர்வை இழந்து திகைத்துப் போய்ப் பலம் இழந்து நிற்கிருேம். இவ்வாறு சுய உணர்வை இழந்தும் திகைத்தும் இருக்கும் நிலையை நீக்கித் தெளிவினை வழங்குவதே வேதாந்தத்தின் நோக்கமாகும். அடையவேண்டிய குறிக்கோள் சுதந்திரம். இயற்கை விதிகளுக்குக் கீழ்படிந்து நடப்பதே சுதந்திரம் என்ற கருத்தை நான் ஒப்புக்கொள்ள இயலாது. அந்தக் கருத்தின் பொருள் என்ன என்பது எனக்கு விளங்கவில்லை. மனித முன்னேற்ற வரலாற்றின்படி, அந்த முன்னேற்றமானது இயற்கைக்குக் கீழ்ப்படியாமல் அதனை எதிர்த்துப் போராடியதால் ஏற்பட்டதாகும். கீழான விதிகளை வெல்ல வேண்டுமானுல், மேலான விதிகளைக் கொண்டுதான் அவ்வாறு வெல்ல இயலும் என்று விளக்கம் தந்தாலும் தருவர். இதிலும் வெல்லும் மனம் இருக்கிறதே, அது சுதந்திரத்தை

நாடிக்கொண்டேதான் இருக்கும். ஏற்படுகிற போராட்டங்கள் எல்லாம் விதிகள் வாயிலாகத்தான் ஏற்படுகின்றன என்று அந்த மனம் அறிந்ததும், அந்த விதிகளை அந்த மனம் வெல்லவிரும்பும். ஆகவே, குறிக்கோள் எப்பொழுதும் சுதந்திரமே. மரங்கள் விதிகளைப் புறக்கணிப்பதில்லை. ஒரு பசுவானது திருட நான் எப்பொழுதும் பார்த்தது இல்லை. ஒரு முத்துச்சிப்பி எப்பொழுதும் பொய் சொன்னது இல்லை. என்றாலும், இவை எல்லாம் மனிதனைக்காட்டிலும் உயர்ந்தவை அல்ல.

விதிகளுக்குக் கீழ்ப்படிதல் என்பது இருக்கிறதே, அது நம்மை, சமுதாயத்திலாயினும் சரி, அரசியலிலாயினும் சரி, சமயத்திலாயினும் சரி, வெறுஞ் சடப்பொருளாக்கிவிடும். சுதந்திரத்தை மிகவும் வலியுறுத்திக் கொண்டாடுவதே இந்த நம் வாழ்க்கையாகும். அளவு மீறிய விதிகள் என்பதற்கு மரணம் என்பதே பொருள். இந்துக்களைப் போலப் பலப்பல விதிகளைப் பெற்றிருக்கும் நாடு வேறு எதுவும் இல்லை. அதனால் இந்தியா செத்த நாடாகிவிட்டது. அதன் பயனாக இந்துக்கள் எல்லாம் ஒரு நாட்டின் செத்த குடிமக்கள் போல ஆகிவிட்டார்கள். ஆனால், அவர்கள் தங்களுக்கே உரிய ஒரு கருத்தோடு இருந்தார்கள். சமயத்திலே எந்த விதமான கொள்கைகளையோ, அல்லது கட்டாயக் கருத்துகளையோ அவர்கள் எப்பொழுதும் வகுத்துக்கொள்ளவே இல்லை. அதனாலேதான் அவர்களது சமயமானது மிகமிக வளமாக வளர்ந்து ஓங்கலாயிற்று. இந்த அளவிலே நாங்கள் எங்கள் சமயத்திலே அனுபவஞானம் பெற்றவர்களாய் இருக்கிறோம். இந்த அனுபவஞானம் உங்களுக்கு இல்லை.

அமெரிக்காவிலே ஒருசிலர் ஒன்று கூடி, "நாம் பங்குதாரர்களாகச் சேர்ந்து ஒரு கம்பெனியை ஆரம்பிக்கலாம்" என்று கூறுவர். ஐந்து நிமிட நேரத்தில் அதை ஆரம்பித்தே விடுவர். பங்குதாரர்களால் ஆன ஒரு கம்பெனியை ஆரம்பிக்க இந்தியாவிலே இருபதுபேர் பல வாரங்கள் கூடிப்பேசலாம். அது உண்டாகாது போகும். தன் கையை உயர்த்தித் தூக்கியபடியே நாற்பது ஆண்டுகள் வைத்திருந்தால் கட்டாயம் முத்தி அடையலாம் என்று

ஒருவன் நம்பினுல், அவ்வாறே செய்யப் பலரும் உடனே தொடங்கிவிடுவர்! ஆகவே, எங்கள் துறையிலே எங்களுக்கு அனுபவஞானம் உண்டு; உங்கள் துறையிலே உங்களுக்கு அனுபவஞானம் உண்டு.

கைவல்லியம் பெறுவதற்கு உரிய வழிகளில் மிக நல்ல வழி அன்புவழியாகும். ஒருவன் கடவுளை நேசிப்பானுனல், அவன் பிரபஞ்சம் முழுவதையுமே நேசிக்க ஆரம்பித்துவிடுகிருன். ஏனெனில், இந்தப் பிரபஞ்சம் முழுவதுமே கடவுளுடையதாகும். "ஒவ்வொரு பொருளும் கடவுளுடைய பொருளே. கடவுளே என் காதலர். நான் அவரைக் காதலிக்கிறேன்" என்று பக்தன் கூறுகிருன். இந்த முறையிலே ஒவ்வொரு பொருளும் பக்தனுக்குப் புண்ணியப் பொருளாகிவிடுகின்றன. ஏனெனில், பொருள்கள் எல்லாம் கடவுளின் உடைமைகளே. ஆகவே, நாம் எவ்வாறு, எந்த ஒருவனுக்காவது துன்பம் செய்ய இயலும்? வேறு ஒருவனை நம்மால் எவ்வாறு நேசிக்காமல் இருக்க இயலும்? கடவுள் மேல் நாம் அன்பு செலுத்துவதன் பயனுக நாளடைவிலே நாம் ஒவ்வொருவர் மேலும் அன்பு செலுத்துவோம். கடவுளை நாம் நெருங்கி அணுக அணுக, எல்லாப் பொருள்களும் அந்தக் கடவுளிலே தங்கியிருப்பதைக் காண்பதும் அதிகரிக்கத் தொடங்கும். அப்போது நம் இதயமானது வற்ருத அன்பு ஊற்ருகிவிடும். இந்த அன்பு ஒளியின் முன்பு மனிதன் மாற்றம் அடைந்து, காதல், காதலன், காதலி என்ற மூன்றும் உண்மையில் ஒன்றே என்ற அழகான உள்ளக் கிளர்ச்சி அடையச் செய்கிற உண்மையை இறுதியிலே தன் அனுபவஞானத்தால் உணர்வான்.

கான்ஸ்டான்டிநோபிலில் சுவாமி விவேகானந்தர்—1900

பத்திரிக்கைகளில் வெளிவந்தவை

கீழ் நாட்டுப் பெண்டிர்*

[சிக்காகோ நகரத்து "இன்டர் ஓஷன்" என்ற தினசரிப் பத்திரிக்கையில், 1893-ஆம் ஆண்டு, செப்டெம்பர் மாதம் 23-ஆம் தேதி வெளி வந்தது.]

சிறப்பாகக் கூட்டப்பட்டதொரு கூட்டத்திலே கீழை நாட்டுப் பெண்டிரின் இக் காலமும் எதிர்காலமும் என்பது பற்றிச் சுவாமி விவேகானந்தர் விரிவாகப் பேசினார். அவர் கூறியதாவது:

"ஒரு நாட்டின் முன்னேற்றத்தை அளந்து காட்டும் சீரிய கருவி அந்நாடு தன் பெண்மக்களை நடத்திவரும் முறையே ஆகும். பழங்காலத்தே கிரேக்க நாட்டிலே ஆடவர் நிலையும் பெண்டிர் நிலையும் வேற்றுமையின்றி இருந்தன. எல்லா வகையிலும் சரிநிகர் சமானம் என்ற கருத்து அங்கு நிலவிற்று. ஓர் இந்து மணம் புரிந்துகொண்டாலன்றிக் குருவாதல் இயலாது. தனிமனிதன் அரை மனிதனே; முழுமை அடையாதவனே என்பது கருத்து. நிறைந்த பெண்மை என்பதற்கு, சர்வ சுதந்திர நிறைவு பெற்றவள் என்பது கருத்து. இக்காலத்து இந்துப் பெண் ஒருத்தியின் வாழ்வைப் பற்றிய உயிர்நாடி போன்ற கருத்து அவளது கற்பொழுக்கத்தைப் பற்றியதாகும். ஒரு வட்டத்து மையப் புள்ளி போன்றவள் மனைவி. அந்த மையம் போன்ற நிலைத்த இடமானது அவளது கற்பொழுக்கத்தால் ஏற்படுகிறது. இக் கருத்தின் உச்ச நிலையே இந்து விதவைகளை உயிரோடு எரிப்பதற்குக் காரணமாய் இருந்தது. இந்துப் பெண்டிர் ஆன்மத் துறையிலும் சமயத் துறையிலும் அதிக ஈடுபாடு உடையவர். உலகிலுள்ள மற்ற எந்தப்

---

* உலக சமய மாநாட்டு நடவடிக்கை பற்றிய முதற் புத்தகத்தின் 156-ஆம் பக்கத்திலே 'கீழ்நாட்டுப் பெண்களது நிலைமை' என்பது குறித்துச் சுவாமி விவேகானந்தர் செய்த சொற்பொழிவு பற்றிய குறிப்பு ஒன்று இருக்கின்றது. சிக்காகோ நகரத்திலே, ஜாக்ஸன் தெருவிலே இருக்கிற பெண்களது கட்டடத்தில் அந்தச் சொற்பொழிவுக்கு ஏற்பாடு செய்தவர் அந்த மாநாட்டுப் பெண் மானேஜர்களின் சபைக்குத் தலைவியாராகிய மிசஸ் பாட்டர் பாமர் என்பவர் ஆவர்.

பெண்களைக் காட்டிலும் ஆன்மிகத் துறையிலும் சமயத் துறையிலும் அதிகப் பற்றுடையவர்கள் இவர்கள். இந்த அழகான பண்புகளை அழியாதவாறு காத்து, அதே சமயத்தில் நம் பெண்களது அறிவை வளர்க்க முயன்றால், எதிர் காலத்து இந்துப் பெண்டிர் உலகத்துக்கு எடுத்துக்காட்டுப் பெண்டிராய் விளங்குவர்''.

சிகாகோ நகரிலே நடந்த சமய மாநாட்டிலே சுவாமி விவேகானந்தர் பேசிய பேச்சுகளின் வெளியீடுகளிலே அவர் பேசிய எல்லாப் பேச்சுகளும் வெளியிடப் படவில்லை என் பதையும், சிறப்பாக அம்மாநாட்டின் விஞ்ஞானப் பகுதியில் அவர் செய்த சொற்பொழிவுகளைப் பற்றி எந்த அறிக்கையும் வெளியிடப்படவே இல்லை என்பதையும் வாசகர் அறிய விரும்புவர். பகிரங்க மாநாடு நடந்துகொண்டிருந்த அதே சமயத்தில், விஞ்ஞானக் கூட்டங்கள் "**கொலம்பஸ் ஹாலில்**" நடைபெற்றன. விஞ்ஞானப் பகுதியில் சுவாமி விவேகானந்தர் அடியிற்காணும் பொருள்களைப் பற்றிப் பேசினார்:—

1. "வைதீக இந்து சமயமும் வேதாந்தத் தத்துவமும்." —வெள்ளிக்கிழமை, செப்டெம்பர் 22, 1893, காலை 10-30 மணி.

2. "இந்தியாவின் இக்காலச் சமயங்கள்" —வெள்ளிக்கிழமை, செப்டெம்பர் 22, 1893, பிற்பகற் கூட்டம்.

3. "முன் பேசிய பேச்சுகளைப் பற்றி" —சனிக் கிழமை, செப்டெம்பர் 23, 1893.

4. "இந்து சமயத்தின் சாரம்" —திங்கட்கிழமை, செப்டெம்பர் 25, 1893.

"இன்டர் ஓஷன்" என்ற சிக்காகோ தினசரிப் பத்திரிகை செப்டெம்பர் 23, 1893-ல் முதற் சொற்பொழிவைப் பற்றி அடியிற் காணும் குறிப்பை வெளியிட்டது:—

"**வைதீக இந்து சமயம்**" என்பதைப்பற்றி விஞ்ஞானப் பகுதியிலே, நேற்றுக்காலை சுவாமி விவேகானந்தர் பேசினார். மூன்றாவது மண்டபம் கொள்ளும் அளவிற்கு மேல் மக்கள் நிறைந்திருந்தார்கள். அங்குக் கூடியிருந்து கேட்டோர் நூற்றுக்கணக்கான கேள்விகளைக் கேட்டனர். அந்தத்

துறவியர் மகான் வியக்கத்தக்குந்த திறமையுடனும் தெளிவுடனும் அவற்றிற்கு விடை கூறினர். கூட்டம் முடிந்ததும், ஆர்வத்துடன் கேள்விகேட்ட மக்கள் அவரைச் சூழ்ந்து கொண்டு, தமது சமயத்தைப் பற்றி எந்த இடத்திலாவது ஒரு நடுநிலையான பொதுக்கூட்டத்தில் சொற்பொழிவு ஆற்ற வேண்டும் என்று வேண்டிக் கொண்டார்கள். தாம் ஏற்கெனவே அத்தகைய திட்டம் ஒன்றை ஏற்படுத்த எண்ணி வருவதாக அவர் கூறினர்.

சமய ஒற்றுமை மாநாடு

[செப்டெம்பர் 24, 1893, "சிகாகோ சண்டே ஹெரால்டு" என்ற பத்திரிக்கையில் வெளிவந்தது.]

சுவாமி விவேகானந்தர் கூறினர் :—

"இந்த மாநாட்டில் கூறப்பட்ட கருத்துக்கள் எல்லாம் மனித சகோதரத்துவத்தையே பெரிதும் குறிப்பிட்டு நின்றன. நாம் எல்லாரும் ஒரே கடவுளின் குழந்தைகள். ஆகையால், இந்தச் சகோதரத்துவம் என்பது இயல்பான ஒரு நிலைமையே என்பது பெரிதும் எடுத்துக் காட்டப்பட்டது. கடவுளை—அதாவது சகுணக் கடவுளை—ஒப்புக் கொள்ளாத சமய வகுப்புகள் இருக்கின்றன. அந்தச் சமய வகுப்புகளைப் புறக்கணித்துவிட விரும்பினுல் நமது சகோதரத்துவம் சர்வ வியாபக சகோதரத்துவமாக இராது. நமது மேடையானது எல்லா மனித இனங்களையும் அணைத்துக் கொள்ளும் அளவிற்கு அகன்று இருக்கவேண்டும். கெட்ட அல்லது இழிந்த செயல் ஒவ்வொன்றும் செய்தவனுக்கே தீமை பயப்பதால், நம்மைப்போலப் படைக்கப்பட்ட சகோதரர்களுக்கு நாம் நலம் புரியவேண்டும் என இங்குப் பேசப்பட்டது. 'நமது நலமே முதல்; நம் சகோதரர் நலம் பின்னுல்' என்ற நோக்கமுடைய வியாபாரிகளது நோக்கம் போன்று தோன்றுகிறது இது. எல்லார்க்கும் பொதுவான ஒரு கடவுளை நாம் நம்பினுலும் சரி, நம்பாவிட்டாலும் சரி, நமது சகோதரனை நாம் நேசிக்கவேண்டும் என நான் கருதுகிறேன். ஏன் எனில், ஒவ்வொரு சமயமும், ஒவ்வொரு வகுப்பும், மனிதனைத் தெய்விகமானவன் என்று ஒப்புக்கொள்கின்றன. அவனிடத்தில் இருக்கும் அந்தத் தெய்வத் தன்மைக்குத் தீங்கு ஏற்படாது இருக்கவேண்டுமானுல் நீங்கள் அவனுக்குத் தீமை புரியாதிருக்கவேண்டும்".

கடவுள் அன்பு-1

['சிக்காக்கோ ஹெரால்டு' என்ற பத்திரிக்கையில் செப் டெம்பர் 25, 1893-ல் வெளிவந்தது]

வாப்லின் தெரு, மன்ரோ தெரு, இவற்றிலிருக்கும் மூன்றுவது யூனிட்டேரியன் மாதாகோவில் மண்டபத்தில் சொற்பொழிவைக் கேட்க நிறைந்து இருந்தவர்கள் நேற்றுக் காலையிலே சுவாமி விவேகானந்தர் செய்த சமயப் பிரசாரத் தைக் கேட்டார்கள். 'கடவுள் அன்பு' என்பது பற்றி அவர் பேசினர். அவரது பேச்சு, சொல்வன்மையுடையதாயிருந் தது; தனிச் சிறப்புடன் இருந்தது. உலகத்தின் எல்லாப் பகுதிகளிலும் கடவுளைப் பல பெயர்களிலே, பல விதங் களிலே, மக்கள் வழிபட்டு வருகிறுர்கள் என்று அவர் கூறி ஞர். மகத்தானதையும் அழகானதையும் வணங்குவது மக் களுக்கு இயல்பு என்றும், சமயமானது அவர்களது இயல் பிலே ஒரு பகுதி என்றும், அவர் மொழிந்தார். கடவுளது அவசியத்தை எல்லாரும் உணர்ந்திருக்கின்றனர். கடவுள் அன்பே அறம் அருள் நீதி என்பனவற்றை அடிப்படையா கக் கொண்ட செயல்களைப் புரியுமாறு அவர்களைத் தூண் டிற்று. அன்பே கடவுள். ஆதலால், எல்லா மக்களும் கடவுள் மேல் அன்பு கொண்டிருக்கின்றுர்கள். சிக்காகோ விற்கு வந்ததிலிருந்து மனிதரது சகோதரத்துவத்தைப் பற்றி அதிகமாகப் பேசப்படுவதைச் சொற்பொழிவாளர் கேட்டுள்ளார். அவர் அனைவரும் அதனினும் வலியதொரு தளையால் கட்டுண்டிருக்கின்றனர் என அவர் நம்புகிறுர். அதுவே எல்லாரும் கடவுளது அன்புக் குழந்தைகள் என்ற தளையாகும். எல்லார்க்கும் தந்தை கடவுளே என் பதிலிருந்து தருக்க முறையால் ஏற்படும் பயன் மக்கள் எல் லாரும் சகோதரர்கள் என்ற தத்துவமாகும். தாம் காடுகளிலே பிரயாணம் செய்து, குகைகளிலே தூங்கியிருப்பதாகவும், அவ்வாறு எல்லாம் செய்து இயற்கையைக் கூர்ந்து நோக்கி வந்ததன் பயனுக இயற்கைவிதியிலும் உயர்ந்த ஒன்று இருந்து மக்களைத் தவறு புரியாதபடி காத்துவருகிறது என்ற நம்பிக்கையானது தமக்கு ஏற்பட்டிருப்பதாகவும் அச்சொற் பொழிவாளர் கூறினர். ஏசுவிடமும், மகம்மதுவிடமும்,

வேத இருடிகளிடமும் கடவுள் பேசியிருப்பின், கடவுளது குழந்தைகளில் ஒருவரான நம்மிடத்திலும் ஏன் அவர் பேசாதிருக்கிறார் என்று சுவாமி அவர்கள் கேட்டார்.

"நம்மிடத்தில் உண்மையாகவே பேசுகிறார். அவர் தம் குழந்தைகள் எல்லாரிடத்தும் பேசுகிறார். அவர் நம்மைச் சூழ்ந்திருப்பதைப் பார்க்கிறோம். அவரது எல்லையற்ற அன்பானது நம்மேல் தொடர்ந்து படிந்துகொண்டேயிருக்கிறது. நலமாக வாழ்வதற்கும், நல்லதையே செய்து கொண்டிருப்பதற்கும் வேண்டிய ஊக்கத்தை நாம் அந்தக் கடவுளிடமிருந்து பெற்றுவருகிறோம்" என்று கூறினார்.

கடவுள் அன்பு-2

[டெட்ராயிட்டு யூனிட்டேரியன் சர்ச்சு என்ற மாதா கோவிலில், 1894-ஆம் ஆண்டு பிப்பிரவரித் திங்கள் 20-ஆம் நாள் செய்த சொற்பொழிவு; டெட்ராயிட்டு பிரீ பிரஸ் என்ற பத்திரிக்கையில் வெளிவந்தது.]

யூனிட்டேரியன் சர்ச்சு என்ற மாதா கோவிலிலே, இதுவரையில் பேசிய கூட்டத்தைக் காட்டிலும் பெரிய கூட்டத்திலே, கடவுள் அன்பு என்பது பற்றிச் சென்ற இரவு ஒரு சொற்பொழிவு ஆற்றினர். நாம் கடவுளை உண்மையாக விரும்புவதால் கடவுளை ஒப்புக்கொள்கிறோம் என்பது கருத்தன்று என்பதையும், நமது சுயநலக்காரியங்களுக்காக அவர் நமக்குத் தேவையாய் இருப்பதால், நாம் அவரை ஒப்புக்கொண்டிருக்கிறோம் என்பதையும் உணர்த்துவதாய் இருந்தது அவரது பேச்சின் போக்கு. அன்பு என்பது தன்னலம் சிறிதும் இல்லாதது என்றும், நாம் அன்பு செலுத்துகிற ஒன்றைப் புகழ்வதும் பாராட்டுவதும் தவிர்த்து வேறு ஓர் எண்ணமும் கொள்ளாது இருப்பதே அன்பு என்றும், சொற்பொழிவாளர் கூறினர். தலை வணங்கித் தொழுது, வேறு ஒன்றையும் பயனாகத்திருப்பிப் பெறவிரும்பாத பண்பு அது. அன்பு! அன்பு! தொடர்ந்த அன்பு. இதுவே உண்மை அன்பு வேண்டுகிற ஒன்று.

இந்துப் பெண்மணி ஒருத்தியைப் பற்றிய ஒரு கதை இது:- அவள் அரசர் ஒருவரைத் தன் கணவராகத் திருமணம் புரிந்துகொண்ட போது, தனக்கு முன்பே கலியாணம் ஆகிவிட்டது என்று அவள் தன் கணவரிடத்தில் மொழிந்தாள். "யாரை நீ மணந்துகொண்டாய்"? என்று அவர் கேட்டார். "கடவுளை" என்று மறுமொழி கூறினள். அவள் ஏழைகளிடத்தும் வறுமையுற்றவர்களிடத்தும் சென்று, 'கடவுளிடம் அளவுகடந்த அன்புகொண்டிருக்க வேண்டும்' என்ற கொள்கையினைப் போதித்தாள். அவளுடைய பிரார்த்தனைகளில் ஒன்று பொருளாழமுடையது. அது அவளது மனப்போக்கைக் காட்டுகிறது. "நான் செல்வத்தைக் கேட்கவில்லை; மோட்சத்தைக் கேட்கவில்லை;

என்னை நூறு நரகங்களில் கொண்டுபோய் வைக்கவேண்டும் என்று விரும்பினுல், அவ்வாறே செய்யலாம்; ஆனால், தொடர்ந்து உன்னை என் அன்பாகக் கருதி நிற்க அருள் புரிவாயாக!'' என்பது அந்த ஒரு பிரார்த்தனை. அவளது தொடக்க மொழியில் அழகான பிரார்த்தனைகள் நிரம்பியிருக்கின்றன. அவளுக்கு முடிவு வந்தபோது, ஓர் ஆற்றங்கரையிலே அவள் சமாதி நிலையில் அமர்ந்தாள். அப்போது அவள் ஓர் அழகான பாட்டிசைத்தாள். தான் தன் அன்பு நாயகனைச் சந்திக்கப்போவதாக அதில் அவள் கூறியிருக்கிருள்.

சமயத்தைத் தத்துவ முறையில் ஆராய்ந்து பார்க்கும் திறமை ஆடவர்களுக்கு உண்டு. பக்தியோடு இருப்பது என்பது ஒரு பெண்ணிற்கு இயல்பாய் அமைந்துள்ள பண்பாகும். அவள் தன் மனத்தால் மட்டுமன்றி ஆன்மாவாலும் கடவுள் மேல் அன்பு செலுத்துகிருள். சாலமன் என்பவருடைய பாடல்கள் விவிலிய வேதத்தின் மிகமிக அழகிய பகுதிகளில் ஒன்று. அப்பாடல்களின் மொழியானது மேலே குறிப்பிட்ட இந்து பக்தி மாதின் மொழிபோல் அன்பால் நிறைந்திருக்கின்றது. ஒப்பில்லாத இந்தப் பாடல்களைக் கிறிஸ்தவர்கள் நீக்கிவிடப் போவதாக நான் கேள்விப் பட்டேன். அந்தப் பாடல்களைப் பற்றி நான் ஒரு விளக்கத்தைக் கேள்விப்பட்டேன். சாலமன் ஓர் இளம் பெண்ணைக் காதலித்தார் என்றும், தம்மை அவளும் காதலிக்க வேண்டும் என்று அவர் விரும்பினுர் என்றும், அந்த விளக்கத்தில் கூறப்பட்டிருக்கிறது. அந்தப் பெண்ணே, ஓர் இளைஞனைக் காதலித்தாள்; சாலமனேடு எந்த விதமான தொடர்பும் கொள்ள அவள் விரும்பவில்லை. சிலர் இந்த விளக்கத்தை உயர்ந்ததாகக் கருதுகின்றனர். ஏனெனில், அந்தப் பாடல்களில் பொதிந்துள்ள கடவுள் அன்பை அவர்கள் உணர இயலாதவர்கள்.

வேறு இடங்களிலே கடவுளிடத்துச் செலுத்துகிற அன்பானது, இந்தியாவிலே செலுத்துகிற அன்பிற்கு மாறுபட்டது. உஷ்ணமானியிலே பூஜ்யத்திற்கும் கீழே 40 டிகிரியைக் காட்டுகிற ஒரு நாட்டிற்கு நீங்கள் சென்ருல், மக்களது மனப்போக்கு மாறியிருப்பது காண்பீர். விவிலிய வேதத்தின் பகுதிகள் எழுதப்பட்டதாகக் கூறும் நாட்டிலுள்ள தட்ப வெப்ப

நிலைமைக்குத் தக்கபடி அங்குள்ள மக்களின் ஆசாபாசங்கள் அமையும். அவை மிகக் குளிர்ந்த மேல் நாடுகளிலுள்ளவர்களது விருப்பு வெறுப்புகளுக்கு மாறு பட்டவை. அந்தப் பாடல்களில் நிறைந்துள்ள ஆர்வத்தோடு கடவுளைத் தொழுவதைக் காட்டிலும் அந்த மேல் நாட்டு மக்கள் சர்வ வல்லமை படைத்துள்ள டாலரை—செல்வத்தை—அந்த ஆர்வத்தோடு தொழுவதற்குப் பெரிதும் ஏற்றவர்களாய் இருக்கின்றார்கள். "பக்தியால் நான் என்ன கைம்மாறு பெறக் கூடும்?" என்ற அடிப்படையில் அவர்களது கடவுள் அன்பு இருப்பதாகப் புலனாகிறது. சுய நலத்திற்கான எல்லாவிதப் பொருள்களும் தங்களுக்கு வேண்டும் என அவர்கள் தங்கள் பிரார்த்தனைகளில் வேண்டுகின்றார்கள்.

கிறிஸ்தவர்கள் தங்களுக்கு எதையாவது தரவேண்டும் என்று எப்பொழுதும் கடவுளைக் கேட்கின்றனர்; சர்வ வல்லமையுள்ள ஆண்டவரது அரியாசனத்தின் முன் பிச்சைக்காரர்களைப்போல் தோன்றுகின்றனர். ஒரு பிச்சைக்காரன் தனக்குப் பிச்சை வேண்டும் என அரசன் ஒருவனிடம் கேட்டதாக ஒரு கதை உண்டு. அவன் அப்பிச்சையைப் பெறுவதற்காகக் காத்துக் கொண்டிருந்தபோது, கடவுளைத் தொழவேண்டிய சமயமாய் இருந்தது அரசனுக்கு. "கடவுளே எனக்கு இன்னும் அதிக செல்வத்தைத் தா; எனக்கு இன்னும் அதிக அதிகாரத்தைத் தா; எனக்கு இன்னும் பெரிய சாம்ராச்சியத்தைத் தா" என்று அரசன் பிரார்த்தனை செய்தான். அதைக் கேட்டுப் பிச்சைக்காரன் அவ்விடத்தை விட்டுச் செல்ல ஆரம்பித்தான். அப்போது அரசன் திரும்பிப் பார்த்து, "ஏன் நீ போகிறாய்?" என்று கேட்டான். "நான் பிச்சைக்காரர்களிடத்தில் பிச்சை கேட்பதில்லை" என்று பிச்சைக்காரன் பதில் கூறினான்.

மகம்மது நபியின் இருதயத்தைத் தூண்டிய சமய ஆர்வப் பித்தினை உணர்வதற்குச் சிலரால் முடிவதில்லை. அவர் புழுதியில் விழுந்து புரளுவார்; வேதனையால் நெளிவார். இத்தகைய அதிதீவிர உணர்ச்சிகளுக்கு ஆளான புண்ணிய சீலர்களைக் 'காக்கை வலிப்பு நோயாளிகள்'

என்று மக்கள் கூறினர்கள். தன்னைப் பற்றிய எண்ணம் சிறிதும் இல்லாமையே கடவுள் மேல் கொண்ட அன்பிற்கு உள்ள சிறந்த பண்பாகும். இக்காலத்தே சமயம் என்பது இனிய ஒரு பொழுது போக்காகவும் நாகரிகக் காட்சியாக வும் அமைந்துவிட்டது. மக்கள் செம்மறியாட்டு மந்தை போல் மாதாகோவிலுக்குப் போய்வருகிருர்கள். கடவுள் மிகவும் தேவையானவர் என அவர்கள் கடவுளை வணங்கு வதில்லை. பெரும்பாலார் தாம் நாத்திகராய் இருப்பதை உணராமலே இருக்கின்றர். தெய்வ நம்பிக்கையில் மிகுந்த வர்கள் தாங்கள் என்று அவர்கள் மனப்பால் குடித்து மகிழ்ந்து நிற்கின்ருர்கள்.

இந்தியா

[1894-ஆம் ஆண்டு பிப்ரவரித்திங்கள், 15-ஆம் நாள், வியாழக் கிழமை டெட்ராயிட்டு நகரில் நிகழ்த்திய சொற்பொழிவு பற்றி, 'டெட்ராயிட்டு பிரீ பிரஸ்' என்ற பத்திரிக்கையில் அதன் ஆசிரியர் குறிப்புடன் வெளிவந்தது]

புகழ்பெற்ற துறவியாகிய சுவாமி விவேகானந்தர் நேற்று இரவு தமது நாட்டு நடை உடைபாவனை பழக்க வழக்கங்கள் பற்றி ஆற்றிய சொற்பொழிவைக் கேட்டோர் கூட்டம் யூனிட்டேரியன் சர்ச்சு என்ற கிறிஸ்தவக் கோவிலை நிறைத்து நின்றது. அவரது சொல்வன்மையும் இனிய மரியாதை முறையும் கூட்டத்திலிருந்தவர்களுக்கு மகிழ்ச்சி ஊட்டின. தொடக்கத்திலிருந்து இறுதிவரை அவர்கள் அவர் சொல்வதை எல்லாம் மிகுந்த கவனத்தோடு தொடர்ந்து கேட்டார்கள்; அடிக்கடி ஆர்வத்தோடு கை தட்டித் தங்கள் உடன்பாட்டைத் தெரிவித்துக் கொண்டார்கள்; சிக்காகோச் சமயமாநாட்டிலே அவர் நிகழ்த்திய புகழ் மிகுந்த சொற்பொழிவினும் சிறந்ததாக இதனைப் பாராட்டினார்கள். இந்தப் பேச்சு அதிக மகிழ்ச்சி யளித்தது. போதனைப் பகுதியை விட்டு, தம் சொந்த மக்களின் ஆன்மநிலைகள் சிலவற்றைப் பற்றிச் சொல்வன்மையுடன் விளக்கிக் கூறும் வாய்ப்பினைப் பெற்றபோது, அத்தகைய மகிழ்ச்சியை அவர் சிறந்த முறையில் வழங்கினார். சமயம், தத்துவம் ஆன்மிகம் என்ற பொருள்களைப் பற்றிக் கீழை நாட்டுச் சகோதரர் பேசியவை கேட்டோர் மனத்திற் பசுமரத்தாணி போன்று அழுத்தமாகப் பதிந்தன. உயர்ந்த ஒழுக்கவிதியின் தன்மையைப் பற்றி மனச்சான்றுடன் ஆராயும் போது புலப்படும் கடமைகளை விளக்கம் செய்த சமயத்தில் ஏற்பட்ட அவரது பேச்சொலியில் விளங்கிய தாழ்ந்து உயர்ந்த ஓசை நயமும், அவர் நாட்டு மக்களுக்குச் சிறப்பாய் அமைந்துள்ள பண்பும், உடலைச் சிலிர்க்கச் செய்யும் அவரது தன்மையும் அவரைத் தேவ தூதர் எனக்காட்டின. கூட்டத்தில் இருந்தவர் முன்பு சில ஒழுக்க உண்மையை எடுத்துக் கூறிய சமயம் தவிர, மற்றச் சமயத்தில் அவர் சீர்தூக்கியே பேசினார். ஆனால்,

அவர் ஒழுக்க உண்மையை எடுத்துக் கூறியபோது; அவரது பேச்சின் தன்மையானது சொல்வன்மையால் மிக மிக உயர்ந்திருந்தது.

உலகிலேயே மிக மிக உயர்ந்த ஒழுக்கமானது இந்தியாவிலேதான் இருக்கிறது என அவர் வற்புறுத்திக் கூறினர். அந்த இந்தியாவிலே பாதிரிமார் செய்யும் சேவை பற்றித் தம் அருவருப்பை அவர் வெளிப்படையாகவே வெளியிட்டார். என்றுலும், வெளிநாட்டுக் கிறிஸ்தவ சேவைக் கழகங்களின் நலத்திற்காக, ஜூன் மாதத்திலே சீன நாட்டிற்குப் பிரயாணம் செய்யப்போகிற பிஷப் நிண்டே என்ற பாதிரியார் அந்தக் கீழ்நாட்டுத் துறவியாரைக் கூட்டத்திற்கு அறிமுகம் செய்துவைத்தது சற்று வியப்பாகவே இருந்தது. டிசம்பர் மாதம் முடியும் வரையில் வெளிநாட்டிலே தங்கியிருக்கப் போவதாக அப்பாதிரியார் எதிர்பார்க்கிருர். அதன் பிறகும் அவர் வெளிநாட்டில் தங்கியிருப்பது நீடிக்குமானுல், அவர் இந்தியாவுக்குப் போவார். இனிய முறையில் அவர் விவேகானந்தரை அறிமுகம் செய்துவைத்த போது, இந்தியாவிலுள்ள வியக்கத்தக்க பண்புகளைப் பற்றியும், அங்குள்ள கற்ற வகுப்பினரது அறிவைப் பற்றியும் அவர் குறிப்பிட்டார். தலைப்பாகை அணிந்து, சுத்தமான நீண்ட அங்கி தரித்து, அழகும் பொலிவும் நிறைந்த முகத்தோடும், அறிவு மிகுந்த கண்களோடும் அந்தக் கறுத்த பெரியார் எழுந்து நின்ற போது, கவர்ச்சி மிக்க உருவத்தினராய் விளங்கினர். பாதிரியார் கூறிய அறிமுகச் சொற்களுக்காக அவருக்கு நன்றி செலுத்திவிட்டு, தம் சொந்த நாட்டிலே உள்ள இன வேறுபாடுகள் குறித்தும், மக்களின் நடை உடை பாவனைகளைப் பற்றியும், பல்வேறு மொழிகளைப் பற்றியும் அவர் விளக்கத் தொடங்கினர். முக்கியமாக நான்கு வட இந்திய மொழிகளும், நான்கு தென்னிந்திய மொழிகளும், பொதுவான சமயம் ஒன்றும் அங்கு இருக்கின்றன. முப்பது கோடி மக்களில் ஐந்தில் நான்கு பங்கினர் இந்துக்கள். இந்து என்பவன் விசித்திரமான ஒரு மனிதனுவான். அவன் எதையும் சமய முறையிலே செய்வான்; சமய முறையிலே சாப்பிடுவான்; சமய முறையிலே தூங்குவான்; சமய முறையிலே காலையில் எழுந்திருப்பான்; சமய முறையிலே நல்ல காரியங்களைச் செய்வான்; தீய காரியங்களையும் சமய முறையிலேயே

செய்வான். 'எல்லாத் தன்னலமின்மையும் நல்லது; எல்லாத் தன்னலமும் தீயது' என்ற நம்பிக்கையினர் தம் மக்கள் என்று எடுத்துரைத்து, தம் பேச்சிலே அமைந்திருந்த ஒரு பெரிய ஒழுக்கக் குறிப்பினை வலியுறுத்திக் காட்டினார். அந்த மாலைப் பேச்சு முற்றிலும் இந்தக் குறிப்பானது வலியுறுத்திக் காட்டப்பட்டது. அதனையே பேச்சின் சாரம் என மொழியலாம். ஒரு வீட்டைக் கட்டுவது தன்னலம் என அந்த இந்து வாதித்தார். ஆகவே, இந்து ஒருவர் கடவுளைக் கும்பிடுவதற்காகவும் விருந்தினர்களை ஆதரிப்பதற்காகவும் அந்த வீட்டைக் கட்டுகிறார். உணவைச் சமைப்பது தன்னலம். ஆகவே, ஏழைகளுக்காகவே அவர் சமைக்கிறார். பசியோடு வருகிற அயலானுக்கு உணவளித்துவிட்டு, தாம் இறுதியில் உண்கிறார். அந்த நாடு முழுவதும் இந்த உணர்ச்சிபரவி நிற்கிறது. எவனும் தனக்கு உணவும் தங்குமிடமும் வேண்டும் எனக் கேட்கலாம். எந்த வீடும் அவனுக்காகத் திறக்கப்படும்.

சாதிமுறைக்கும் சமயத்திற்கும் எந்த விதமான சம்பந்தமும் இல்லை. ஒருவனது தொழிலானது பரம்பரையாக ஏற்பட்டிருக்கிறது. ஒரு தச்சன் தச்சனாகவே பிறக்கிறான். ஒரு தட்டான் தட்டானாகவே பிறக்கிறான். ஒரு வேலைக்காரன் வேலைக்காரனாகவே பிறக்கிறான். ஒரு பூசாரி பூசாரியாகவே பிறக்கிறான். இது வெகு அண்மையில் தோன்றிய இக்காலத் தீமையாகும். ஏனெனில், இது ஏறக்குறைய ஓராயிரம் ஆண்டு காலமாகத்தான் இருந்து வருகிறது. இந்த நாட்டிலும் மற்ற நாடுகளிலும் தோன்றுவதைப் போல இந்தக் கால எல்லையானது இந்தியாவிலே அவ்வளவு பெரிதாகத் தெரிவதில்லை. கல்விப்பேறு, வாழ்க்கைப் பேறு என்ற இந்த இரண்டு பேறுகளும் முக்கியமாகக் கருதப்படுகிற பேறுகளாகும். இவற்றில் கல்விப்பேறு தலைமையானது. ஒருவன் வேறு ஒருவனது உயிரைக் காப்பாற்றலாம். அது சிறந்ததே. ஒருவன் வேறு ஒருவனுக்குக் கல்வி கற்பிக்கலாம். இது முன்னைய செயலினும் உயர்ந்தது. பணத்திற்காகக் கல்வி கற்பிப்பது தீயது. கல்வியை ஒரு வியாபாரப் பொருள் எனக் கருதி, அதைப் பணத்திற்காகப் பரிவர்த்தனை செய்பவன் தலையிலே பழிவந்து சேரும். ஆசிரியர்களுக்கு அரசாங்கமானது அப்போதைக்கு அப்போது பண உதவி புரி

கிறது. நாகரிகம் உடையனவாகப் பேசப்படுகிற நாடுகளில் இருக்கிற நிலைமைகளே இந்தியாவிலும் இருக்குமானால், அப்போது இந்தியாவில் இருக்கும் ஒழுக்கத்தைவிடச் சிறந்த ஒழுக்கமானது இப்போது இந்தியாவில் இருக்கிறது. நாகரிகத்தின் இலக்கணம் என்ன என்று இந்த நாட்டில் எங்கும் சொற்பொழிவாளர் கேட்டுள்ளார். "நாம் எவ்வாறு இருக்கிறோமோ, அதுவே நாகரிகம்" என்ற விடையானது சில சமயங்களில் கூறப்பட்டது. இந்த இலக்கணம் தமக்கு உடன்பாடன்று என்று அவர் மரியாதையுடன் தெரிவித்துக் கொண்டார். இயற்கையினையே ஒரு நாடு கட்டுப்படுத்தலாம்; வாழ்க்கையை வளப்படுத்துவதற்கான காரியங்களை இயலும் வரையில் உச்ச அளவுக்குச் செய்துகொள்ளலாம். என்றாலும், தன்னைத்தான் வெல்வதற்கு அறிந்துகொண்டவனிடத்தே மிகமிக உயர்ந்த நாகரிகமானது இருக்கிறது என்பதை அந்த நாடு அறியாமலே இருக்கும். தன்னைத்தான் வெல்லும் அறிவே உயர்ந்த நாகரிகம் என்ற நிலைமையானது உலகிலே உள்ள வேறு எந்த நாட்டில் இருப்பதைக் காட்டிலும், இந்தியாவிலே பெரிய அளவில் இருக்கிறது. ஏனெனில், இந்தியாவிலே பொருளாதார நிலை ஆன்ம நிலைகளுக்குக் கீழ்ப்பட்டதெனக் கருதப்படுகிறது; உயிருடைய ஒவ்வொன்றையும் ஆன்மாவின் தோற்றமே என்ன ஒவ்வொருவனும் காண்கிறான்; இத்தகைய தோற்றங்களைக் காண வேண்டும் என்ற நோக்கத்தோடு இயற்கையை ஆராய்ந்து வருகிறான். வேறு எந்த நாட்டினரும் பெற்றிருப்பதைக் காட்டிலும் ஆன்ம பலமும் ஆன்ம ஞானமும் இந்தியாவிலே மிக அதிகம் என்ற உணர்வு அங்கு மிகுந்திருப்பதால், கருணையற்ற விதியின் கொடுமைகள் என்பனவற்றைச் சிறிதும் தளராத பொறுமையுடன் பொறுத்துக்கொள்ளும் அமைதியான மனநிலை அங்கு நிலைத்திருக்கிறது. ஆகவே, அருகிலும் தொலைவிலும் உள்ள சிந்தனையாளர்களது கருத்தை ஈர்த்து, தம்மை அடைந்து, அவர்கள் தங்கள் தோளின்மேல் சுமந்துகொண்டிருக்கும் தாங்கமுடியாத இம்மண்ணுலக வாழ்வுச் சுமையை விட்டு எறிவதற்கு உதவ வல்ல ஒரு நாடும் மக்களும்—இந்தியாவும் இந்தியமக்களும்—இருக்கின்றார்கள். அவர்களிடையேயிருந்து என்றும் வற்றாத ஒரு ஞான ஆன்ம நதியானது பொங்கி வழிந்தோடிக்கொண்டே

இருக்கிறது. 'இனிமேல் இரத்தம் சிந்துதல் என்ற செயலே இருத்தல் கூடாது; போர்களே ஏற்படக் கூடாது' என்று கி. மு. 260 லேயே கட்டளை பிறப்பித்த முன்னுளைய அரசர், தம் நாட்டில் வாழ்க்கைக்கு அவசியமான பொருள்கள் இன்மையால் தொல்லைகள் ஏற்பட்டு வந்தபோதிலும் போர் வீரர்களை வெளியே அனுப்புவதற்குப் பதிலாகப் போதனை செய்வதற்காகப் பிக்குகளைப் பட்டாளம் பட்டாளமாக அனுப்பி, அறிவோடு நடந்துகொண்டார். பலாத்காரத்தால் வெல்கிற மிருகத்தன்மை வாய்ந்த நாடுகளுக்கு அடிமைப்பட்டு உழன்ற போதிலும், இந்தியனது ஆன்மீகப் பண்பானது எப்பொழுதும் நிலைத்தே நிற்கிறது; அவனிடமிருந்து அதனை எதுவும் பறித்துக்கொள்ள இயலாது. ஒளி மிகுந்த குறிக்கோளை நாடி இந்தியர்களது ஆன்மாவானது முன்னேற்றம் அடைந்துகொண்டேயிருக்கிறது, ஆதலால், தங்களது செல்வ நிலைக்குப் பங்கம் ஏற்பட்டதால் விளையும் துன்பங்களையும் இடர்களையும் பொறுத்துக்கொள்கிற இந்திய மக்களது பொறுமையிலே கிறிஸ்துவின் பண்பு போன்ற ஒரு பண்பு இருக்கின்றது. அத்தகைய நாட்டிற்கு கிறிஸ்தவப் பாதிரிமார்கள் தேவை இல்லை. ஏனெனில், மக்களை அமைதியுடையவர்களாகவும், இனிய குணம் படைத்தவர்களாகவும், பிறரது நன்மையை விரும்புபவர்களாகவும், கடவுளால் படைக்கப்பட்ட உயிர்களிடத்தில் மனிதனுயினும் சரி, விலங்காயினும் சரி—எல்லாம் அன்புடையவர்களாகவும் இருக்கும்படி செய்யும் சமயம் அவர்களது சமய மாகும் என்று அச்சொற்பொழிவாளர் கூறினர். அமெரிக்க ஐக்கிய நாட்டைக் காட்டிலும், அல்லது பூகோளத்திலுள்ள வேறு எந்த நாட்டைக்காட்டிலும், இந்தியாவானது மிகச் சிறந்த நாடாகும். பாதிரிமார்களும் அங்கு வருவதும், அங்குள்ள தூய நீரைப் பருகுவதும், கணக்கற்ற சமயப் பெரியோர்களது வாழ்க்கையால் அந்தப் பரந்த சமுதாயத்திலே எத்தகைய அழகான சக்தி ஏற்பட்டுள்ளது என்பதைக் காண்பதும் அவர்களுக்கு நலமாகும்.

அதன் பிறகு அவர் மனத்தைப் பற்றிய விளக்கம் தந்தார். ஆணும் பெண்ணும் சேர்ந்து கல்வி பயிலும் முறை நிலவிய அந்தப் பழங்காலத்தில் பெண்களுக்குத் தந்த மரியாதையையும் உரிமையையும் எடுத்துக் கூறினர். இந்திய

சமயப் பெரியார்களைப் பற்றி எழுதிவைத்திருக்கும் எழுத்து களிலே, ஒப்புயர்வில்லாத ஒரு பெண் தீர்க்கதரிசியைப் பற்றிய குறிப்பு ஒன்று இருக்கின்றது. கிறிஸ்தவ சமயத்திலே எல்லாத் தீர்க்கதரிசிகளும் ஆடவர்களே. ஆனால், இந்தியா விலே சமயப் பெண்மணிகளும் சமய நூல்களிலே மிக உயர்ந்த இடம் பெற்றிருக்கின்றார்கள். இல்லறத்தான் ஒரு வன் ஐந்து பொருள்களைத் தொழவேண்டும். அவற்றுள் ஒன்று, கற்றலும் கற்பித்தலும். வாயில்லாப் பிராணிகளைத் தொழுவது மற்றொன்று. இரண்டாவது சொன்ன தொழு கையை அமெரிக்கர்கள் அறிவது கடினம். அத்தொழு கைக்கு உரிய மனோபாவத்தைப் பாராட்டுவது ஐரோப்பியர் களுக்குக் கடினம். மற்ற நாடுகள் விலங்குகளைப் பெரிய அளவில் கொல்கின்றன. மேலும் அந்நாடுகள் ஒன்றை ஒன்று கொலை புரிகின்றன; அவை இரத்தக் கடலில் வாழ் கின்றன. விலங்குகளின் உடலில் தம் முன்னோர்களது உயிர் தங்கியிருப்பதாகக் கருதுவதே இந்தியாவிலே விலங்குகளைக் கொல்வதில்லை என்பதற்குக் காரணம் என ஓர் ஐரோப்பியர் சொன்னார். விலங்கு நிலையிலிருந்து மிகமிக உயராத காட்டுமிராண்டிகள் வாழ்கிற நாட்டிற்கு இக்கார ணம் பொருந்தும். கொல்லாமை, ஆன்மாவின் பலபிறவிகள் என்ற வேதக்கருத்துகளைப் பற்றி வீணாகக் குறைகூறுகிற இந்தியாவிலுள்ள ஒரு நாத்திகக் கூட்டத்தினரே அந்த ஐரோப்பியர் எடுத்துக்காட்டிய காரணத்திற்கு ஆதாரமான கருத்துகளை மொழிந்துள்ளனர் என்பது உண்மை. எப் பொழுதும் அது ஒரு சமயக்கொள்கையாய் இருந்ததே இல்லை; அது உலகாயதக் கொள்கையின் கருத்தாகும். வாயில்லா விலங்குகளைத் தொழுவதைச் சொற்பொழிவாளர் மிகத் தெளிவாய் எடுத்துக் கூறினார். இந்தியரின் மிகச் சிறந்த விதியாகிய விருந்தோம்பும் ஆர்வம் ஒரு கதையால் விளக்கப்பட்டது. ஓர் அந்தணனும், அவன் மனைவியும் அவன் மகனும், அம்மகனுக்கு மனைவியும் சிலகாலம் பஞ்சம் காரணமாக உணவைச் சுவைத்தறியாமலே இருந்தனர். குடும்பத்தலைவன் வெளியே சென்று, நாடித்திரிந்து, சிறிது தானியத்தைப் பெற்றான்; அவன் வீட்டுக்குக் கொண்டு வந்து, நாலு பங்காக்கி, அச்சிறு குடும்பம் அதை உண்ணும் நிலையில் இருந்தது. அப்போது கதவைத் தட்டும் அரவம்

கேட்டது. தட்டியவன் ஒரு விருந்தினன். பங்குகளாகப் பிரிக்கப்பட்ட பகுதிகள் விருந்தினன் முன் வைக்கப்பட்டன. அவனும் பசிதீர்ந்து வெளியேறினன். ஆனல், அவனுக்கு விருந்தளித்த நால்வரும் மாண்டுபோயினர். விருந்தோம்பல் என்ற புனிதமான பெயரிலே என்ன எதிர்பார்க்கப்படுகிறது என்பதை விளக்க இந்தக் கதையானது இந்தியாவிலே எடுத்துக் கூறப்படுகின்றது.

சொல் திறமையோடு சொற்பொழிவாளர் தம் சொற்பொழிவை முடித்தார். அவரது பேச்சு முழுவதும் எளியது; ஆனல், அவர் கற்பனையுலகில் நுழைந்த போதெல்லாம் அப்பேச்சு இனிமையான செய்யுள் நடையில் இருந்தது; அந்தக் கீழ்நாட்டுச் சகோதரர் இயற்கையின் அழகுகளை மிகக் கூர்ந்து அறிந்தவர் என்பதை அது காட்டிற்று. அவரது அளவிற்கு அதிகமான ஆன்மிகப் பண்பானது அவரைக் கேட்டோர் எல்லாம் நன்கு உணருமாறு இருந்தது. அவரது அந்த ஆன்மிகப் பண்பானது உயிரற்ற பொருள் மேலும் உயிருள்ள பொருள் மேலும் அன்பாகத் தோற்றமளிக்கிறது. எல்லாவற்றையும் நன்கு இணையுமாறு இணைத்து நிற்கும் தெய்விக இணைப்பு விதி கண்ணிற்குத் தெரியாமல் தொழிற்பட்டு வரும் செயலையும், நல்லெண்ணங்கள் கண்ணுக்குத் தெரியாமல் தொழிற்பட்டுவரும் செயலையும் கண்டுணரும் கூர்த்தமதியாகவும் அவரது அந்த ஆன்மிகப் பண்பானது வெளிப்படுகின்றது.

இந்துக்களும் கிறிஸ்தவர்களும்

[பிப்ரவரி 21, 1894ல் டெட்ராயிட்டு நகரில் ஆற்றிய சொற்பொழிவு பற்றி, 'டெட்ராயிட்டு பிரீ பிரஸ்' என்ற பத்திரிக்கையில் வெளிவந்தது.]

பல்வேறு தத்துவங்களில் ஒன்றையும் அழிக்க விரும்பாது, அவற்றை எல்லாம் இணைத்துப் பார்ப்பதே இந்தியனுடைய இயல்பாகும். ஒரு புதிய கருத்து இந்தியாவிற்கு வந்தால், அதை நாங்கள் பகைப்பதில்லை; அதை ஏற்றுக் கொள்ளவும், எங்களது கருத்துடன் அதனை இணைத்துக் கொள்ளவும் முயல்வது எங்கள் இயல்பு. ஏனெனில், இந்த முறை எங்கள் தேவதூதரும், பூமியில் அவதரித்த கடவுளுமான கிருஷ்ண பரமாத்துமாவால் எங்களுக்கு முதலில் கற்பிக்கப்பட்டது. "நான் கடவுளது அவதாரம்; எல்லா நூல்களும் தோன்றுவதற்கு வேண்டிய ஊக்கத்தினை ஊட்டுபவன் நான்; எல்லா மதங்களும் தோன்றுவதற்கு உரிய ஊக்கம் ஊட்டுபவன் நான்" என்பதே இந்தக் கடவுள் அவதாரமானவர் முதலில் போதித்த போதனை ஆகும். ஆதலால், நாங்கள் எதையும் புறக்கணிப்பதில்லை.

எங்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் இடையே மாறுபட்ட கருத்தொன்று இருக்கிறது. அதை நாங்கள் எப்பொழுதும் போதித்தது இல்லை. 'ஏசுவின் இரத்தத்தின் மூலம் முக்தி பெறலாம், அல்லது மனிதனது இரத்தத்தால் தூய்மை அடையலாம்' என்பதே அக்கருத்து. யூதர்களிடம் இருந்தது போலவே, எங்களுக்கும் பலியிடும் பழக்கம் இருக்கிறது. எங்கள் பலியின் பொருள் இதுதான்: "இந்த உணவை நான் உண்ணப்போகிறேன். இதில் ஒரு பகுதியைக் கடவுளுக்குப் பலியிடாத வரையில் இது தீயது. ஆகவே, நான் இதைப் பலியிடுகிறேன்." இது ஓர் எளிய கருத்து. ஆனால், "என்னுடைய பாவம் இந்த ஆட்டுக் குட்டியின் மேல் சென்று படியட்டும். இந்த ஆட்டை நான் பலியிடுகிறேன். அதனால், என்னுடைய பாவத்திலிருந்து நான் விடுதலை பெற வேண்டும்" என்பது யூதர்களது கருத்து. இந்தக் கருத்தை இந்தியாவிலே நாங்கள்

எப்பொழுதும் உருவாக்கியதும் இல்லை; வளர்த்ததும் இல்லை. அவ்வாறு வளர்க்காததற்காக நான் மகிழ்கிறேன். இத்தகைய கொள்கையால் பாவத்திலிருந்து ஒரு பாதுகாப்பினைப் பெறுவதற்காக நான் முன்வரமாட்டேன். எவராவது என்னிடம் வந்து, "எனது இரத்தத்தால் பாவ விடுதலை பெறுவாயாக" என்று கூறினால், "சகோதரரே, போய் விடுக. நான் நரகத்திற்குப் போகிறேன். விண்ணுலகம் போவதற்காக ஒரு குற்றமும் இல்லாதவரது இரத்தத்தைச் சிந்துவதற்கு நான் ஒரு கோழை அல்லேன். நரகத்திற்குப் போவதற்கு நான் சித்தமாய் இருக்கிறேன்" என்று நான் அவருக்குக் கூறுவேன். ஆகவே, அந்தக் கருத்து எங்களிடையே எப்பொழுதும் முளைத்தெழவில்லை. "தீமையும் ஒழுக்கமின்மையும் எப்பொழுது தலைதூக்கி ஓங்குகின்றனவோ, அப்பொழுது நானே பூமியில் அவதரித்து, என் குழந்தைகளைக் காப்பாற்றுவேன்" என்று எங்கள் தேவதூதர் கூறுகிறார். இதன்படி அவர் அப்போதைக்கப் போதும், அங்கங்கும், அவதரித்திருக்கிறார். மனிதகுலத்தினை உயர்த்த முயலும் மிகவும் சிறந்த சமய மகானை பூவுலகத்தில் எங்காவது நீங்கள் பார்த்தால், கடவுள் அந்த மகானிடத்தில் இருக்கிறார் என்பதை நீங்கள் அறிய வேண்டும்.

எந்தச் சமயத்தோடும் நாங்கள் எப்போதும் போரிடுவதில்லை என்பதற்கு உரிய காரணத்தை நீங்கள் இப்பொழுது காணலாம். எங்களது வழியே மோட்சத்திற்கு உரிய ஒரே ஒரு வழி என்று நாங்கள் சொல்வதில்லை. நிறைந்த தூய்மையை எவரும் பெற இயலும். இதற்கு ஆதாரம் என்ன? எல்லா நாடுகளிலும் மிகமிக உயர்ந்த சமயப் பெரியார்களைப் பார்க்கிறோம். நமது சமுதாயத்தில் பிறந்தவராயினும் சரி, வேறு சமுதாயத்தில் பிறந்தவராயினும் சரி, நல்ல ஆடவர்களையும் நல்ல பெண்மணிகளையும் எவ்விடத்தும் பார்க்கிறோம். ஆகவே, "முக்திக்கு உரிய ஒரே ஒரு வழி எங்களது வழிதான்" என்று சொல்ல இயலாது. பல்வேறு மலைகளிலிருந்து பல நதிகள் ஓடி வந்து, தமது நீரைக் கடலிலே கலப்பது போல, வெவ்வேறு நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு பிறந்த, ஒன்றுக்கு ஒன்று

மாறுபடுகிற எல்லாச் சமயங்களும் கடவுளாகிய உன்னிடத்தில் வந்து சேர்கின்றன" என்பது இந்தியாவிலே குழந்தைக்கு உரிய நித்திய பிரார்த்தனையிலே ஒரு பகுதியாகும். இத்தகைய நித்திய பிரார்த்தனை இருப்பதால், மாறுபட்ட சமயங்கள் என்ற காரணத்திற்காகப் போரிடுவது என்ற கருத்துக்குச் சிறிதும் இடமில்லை. இந்திய தத்துவ ஞானிகளைப் பற்றிய செய்தி இவ்வளவு. முன்பு தோன்றிய சுருதிகள் ஆப்தவாக்கியங்கள் எல்லாம் ஒன்றோடு ஒன்று இணைந்து ஒற்றுமைப்பட்டு விளங்குமாறு செய்யும் வியக்கத்தக்க பரந்த குணமுடைய தீர்க்கதரிசியான கிருஷ்ணபரமாத்மாவிடம் சிறப்பாக நாங்கள் பெருமதிப்புக் கொண்டிருக்கிறோம்.

பிறகு விக்கிரகத்தின் முன் வணங்கித் தொழுது நிற்கும் மனிதனைப் பார்ப்போம். இந்த விக்கிரக ஆராதனைக் கருத்தானது நீங்கள் கேள்விப்பட்டிருக்கிற பாபிலோனியரது விக்கிரக ஆராதனை, ரோமரது விக்கிரக ஆராதனை போன்றவற்றின் கருத்துப்போன்றது அன்று. இந்துக்களிடத்திலே இருக்கும் இந்த விக்கிரக வணக்கமானது ஒரு தனித்த சிறப்பு முறையாகும். விக்கிரகத்தின் முன் ஒருவன் நின்று, தன் கண்ணை மூடிக்கொண்டு, "நானே கடவுள்; எனக்குப் பிறப்பு இல்லை; இறப்பும் இல்லை; எனக்குத் தந்தையும் இல்லை; தாயும் இல்லை; காலத்தாலோ அல்லது இடத்தாலோ நான் கட்டுப்படாதவன்; காலவரையறையின்றி எப்பொழுதும் இருப்பவன்; எல்லையற்ற இன்பம் நான்; எல்லையற்ற ஞானம் நான்; நானே கடவுள்; நானே கடவுள்; புத்தகங்களாலோ, புண்ணியத் தலங்களாலோ, புண்ணியத்தல யாத்திரைகளாலோ, அல்லது வேறு எதனாலோ கட்டுப்படாதவன் நான்; எல்லா ஆற்றலோடும் நிலையாய் இருப்பவன் நான்; நிறைந்த பேரின்பம் நான்; நானே கடவுள்; நானே கடவுள்" என்று எண்ண முயல்கிறான். இதைப் பலதரம் சொல்லிய பிறகு, "ஆண்டவனே, உன்னை, என் அகத்தே காண என்னால் இயலவில்லை; நான் ஓர் ஏழை" என்று சொல்கிறான். சமயம் என்பது அறிவை ஆதாரமாகக் கொண்டில்லை. சமயமே ஆன்மா; சமயமே கடவுள். வெறும் புத்தக ஞானத்தாலோ, அல்லது சொல் வன்மையாலோ இதைப் பெற இயலாது. கல்வியில் மிக

உயர்ந்த ஒருவனை நீங்கள் அணுகி, ஆன்மாவை ஆன்மாவாகச் சிந்தித்துப் பார்க்கும்படி கேளுங்கள். அவனால் அவ்வாறு சிந்திக்கவே இயலாது. நீங்கள் ஆன்மாவைப் பற்றி எண்ணிப்பார்க்கலாம்; அந்தக் கல்வியாளனும் அதைப் பற்றி எண்ணிப் பார்க்கலாம். ஆனால், பயிற்சியின்றி ஆன்மாவைப் பற்றிச் சிந்திக்க இயலாது. ஆகவே, சமயத்தைப் பற்றி நீங்கள் எவ்வளவு அதிகம் படித்திருந்தாலும் சரி; நீங்கள் ஒரு பெரிய தத்துவ ஞானியாகவும் மிகப் பெரிய சமய ஞானியாகவும் இருந்தாலும் சரி, இவை எல்லாம் சமயத்தோடு எத்தொடர்பும் இல்லாதவை என்று இந்து சிறுவன் ஒருவன் சொல்லிவிடுவான். ஆன்மாவை ஆன்மாவாக நீங்கள் சிந்திக்க இயலுமா? அப்போதுதான் எல்லாச் சந்தேகங்களும் ஒழியும்; எல்லா மனக்கோணல்களும் நிமிர்த்தப்படும். அப்போதுதான் எல்லா அச்சங்களும் மறைந்து ஒழியும். மனிதனும் கடவுளும் நேருக்கு நேராக வந்து சேர்கிறபோது, எல்லா ஐயப்பாடுகளும் எப்பொழுதும் வாய்மூடி மௌனமுற்று நிற்கும்.

மேலைநாட்டினர் கருத்துப்படி ஆச்சரியப்படும் அளவிற்கு ஒருவர் கல்வி கற்றிருக்கலாம். என்றாலும், அவர் சமயத்தின் முதற்படியையும் அறியாதிருக்கலாம். "ஆன்மாவை ஆன்மாவாக உம்மால் நினைத்துப்பார்க்க இயலுமா?" என்று கேட்பேன். ஆன்ம விஞ்ஞானத்தில் நீர் முன்னேறியிருக்கிறீரா? சடப்பொருளுக்கு மிக உயர்ந்த நிலையிலே உமது சொந்த ஆன்மா விளங்கும்படி செய்திருக்கிறீரா?" என்று நான் அவரைக் கேட்க விரும்புகிறேன். அவர், 'அவ்வாறெல்லாம் ஆகவில்லை' என்றால், "உமக்குச் சமய நிலை என்பது ஏற்படவில்லை. உம்மிடம் இருப்பன எல்லாம் பேச்சும், புத்தகமும், வீண்பெருமையுமே" என்று நான் அவருக்குச் சொல்வேன். ஆனால், எளிய இந்து ஒருவன் விக்கிரகத்தின் முன் உட்கார்ந்து, தானே **அது** என்று நினைக்க முயல்கிறான். அதன் பிறகு "ஆண்டவனே! உன்னை ஆன்மாகச் சிந்திக்க இயலவில்லை. ஆகவே உன்னை இந்த வடிவத்திலே சிந்தித்துப்பார்க்க அருள்புரிவாயாக!" என்று வேண்டுகிறான்; இவ்வாறு கூறி, கண்களைத் திறந்து, அந்த உருவத்தைப் பார்க்கிறான். அதன் முன்னர்க் குப்புற விழுந்து, தன் பிரார்த்தனைகளைப் பலமுறை செய்கிறான்;

பிரார்த்தனை முடிந்த பிறகு, "கடவுளே, உன்னை இக்குறை பாடுடைய முறையால் தொழுதற்கு என்னை மன்னிக்க வேண்டும்" என்று வேண்டிக்கொள்கிறான்.

இந்து ஒருவன் கருங்கல் துண்டுகளைத் தொழுகிறான் என்று உங்களிடம் அடிக்கடி சொல்லி வருகிறார்கள். இத்தகைய மக்களது ஆன்மாவின் இந்த ஆர்வத்தைப் பற்றி நீங்கள் இப்போது என்ன நினைக்கிறீர்கள்? இந்த மேல் நாடுகளுக்கு வந்த முதல் துறவி நான். உலக வரலாற்றிலே இந்து துறவி ஒருவன் கடல் கடந்து சென்ற முதல் நிகழ்ச்சி இதுவே. கருங்கல்லைக் கும்பிடுகிறவர்கள் என்ற இத்தகைய குற்றச்சாட்டுகளை நாங்கள் கேள்விப்படுகிறோம்; இத்தகைய பேச்சுகளையும் கேட்கிறோம். என்றாலும், என்னுடைய நாடு பொதுவாக உங்களிடம் எவ்வாறு நடந்துகொண்டிருக்கிறது? "குழந்தைகள் அவர்கள். பௌதிக விஞ்ஞானத்தில் அவர்கள் பெரியவர்களாய் இருக்கலாம். அவர்கள் பெரிய கட்டிடங்கள் முதலியவற்றைக் கட்டலாம். என்றாலும், அவர்கள் சமயத்துறையிலே சிறு குழந்தைகளே" என்று எங்கள் நாட்டவர்கள் புன்முறுவலுடனே சொல்வார்கள். இது எங்கள் மக்களது மனப்போக்கு.

நான் உங்களுக்கு ஒன்று கூற விரும்புகிறேன்: இரக்கமின்றிக் குறைகூறல் என் கருத்தன்று. என்ன செய்வதற்காக நீங்கள் மக்களுக்குப் பயிற்சி அளித்து, கல்வி கற்பித்து, உடுக்க ஆடை தந்து, அவர்களுக்குச் சம்பளமும் கொடுத்து வருகிறீர்கள்? எங்கள் நாட்டுக்கு வந்து, என்னுடைய முன்னோர்களையும், என் சமயத்தையும், என்னைப் பற்றிய ஒவ்வொன்றையும் அவர்கள் பழிக்கும்படியும் ஏசும்படியும் செய்கிறீர்கள். அவர்கள் ஒரு கோயிலை அணுகி, 'நீங்கள் விக்கிரகங்களைத் தொழுகிறீர்கள். ஆகவே நீங்கள் நரகத்திற்குப் போவீர்கள்' என்று சொல்கிறார்கள். இந்தியாவிலுள்ள மகம்மதியர்களிடத்தில் சென்று, அவ்வாறு சொல்ல அவர்களுக்குத் தைரியம் இல்லை. அவ்வாறு சொன்னால், அவர் வாளை உருவிக்கொள்வார்கள். ஆனல், இந்து ஒருவன் மிகவும் சாந்தமானவன். "இந்த மூடர்கள் பேசட்டும்" என்று சொல்லி, புன்முறுவலோடு அப்பாற்சென்று விடுவான். இது அவனுடைய மனப்போக்கு. ஏசுவதற்கும்

குறை கூறுவதற்கும் நீங்கள் மக்களுக்குப் பயிற்சி அளிக்கிறீர்கள். ஆனால், உங்கள் நலத்தின் பொருட்டு, உங்களைப் பற்றி மிகச் சிறியதொரு குறை கூறினாலுங் கூட, நீங்கள் அதைப் பொறுது பின்வாங்கி, "எங்களைப் பற்றி ஒன்றும் சொல்லாதீர்கள்; நாங்கள் அமெரிக்கர்கள்; உலகத்திலுள்ள எல்லா மக்களையும் நாங்கள் பழிப்போம்; இகழ்ந்து பேசுவோம்; ஆனால், நீங்கள் எங்களைத் தொடாதீர்கள்; நாங்கள் தொட்டாற் சிணுங்கிகள்" என்று ஓலமிடுகிறீர்கள். நீங்கள் விரும்புகிறபடி நீங்கள் எதையும் செய்து கொள்ளலாம். நாங்கள் இருக்கிறபடியே நாங்கள் வாழ்வது எங்களுக்குத் திருப்தி என்று நான் உங்களுக்கு அதே சமயத்தில் சொல்லிவிடுகிறேன். ஒரு காரியத்தில் நாங்கள் உங்களைக் காட்டிலும் மேலானவர்கள்—அத்தகைய பயங்கரமான பொய்களைக் கண்மூடியபடி விழுங்கும்படி, நம்பும்படி, நாங்கள் எங்கள் குழந்தைகளுக்குக் கற்பிப்பது இல்லை. ஒவ்வொரு தோற்றமும்—ஒவ்வொரு காட்சியும்—இனிமை தந்து நிற்கின்றன. ஆனால், மனிதன் என்ற ஒரே ஒரு தோற்றம்—ஒரே ஒரு காட்சி—அற்பத்தனத்தோடு இருக்கின்றது. உங்கள் பாதிரிமார்கள் எப்பொழுது குறை கூறினாலும், எல்லா இந்தியரும் எழுந்து நின்று, இந்து மகா சமுத்திரத்தின் அடியிலுள்ள எல்லா மண்ணையும் எடுத்து, மேற்கே உள்ள நாடுகளின் மீது வீசி எறிவார்களானால், அவ்வாறு எறிவதால் ஏற்படும் தீமையானது நீங்கள் எங்களுக்குச் செய்துகொண்டு வரும் தீமையில் ஒரு சிறு அணு அளவுகூட இராது. எதற்காக நீங்கள் அவ்வாறு செய்கிறீர்கள்? உலகத்திலுள்ள எவரையாவது எங்கள் மதத்தில் சேர்த்துக்கொள்ள ஒரு பாதிரியை நாங்கள் எப்பொழுதாவது அனுப்பினோமா? "உங்கள் சமயத்திற்கு நல்வரவு; ஆனால் என்னுடைய சமயத்தை நான் மேற்கொள்வதற்கு என்னை அனுமதியுங்கள்" என நாங்கள் உங்களுக்குச் சொல்கிறோம். உங்களது சமயத்தை வலுவில் மேல்விழுந்து தாக்கும் மதம் எனச் சொல்கிறீர்கள். நீங்கள் வலுவில் மேல்விழுந்து தாக்கும் இயல்பினர். அப்படி இருந்தும், எத்தனை பேர்களை உங்கள் மதத்தில் சேர்த்துக் கொண்டீர்கள். உலகிலே ஆறு பேர்களில் ஒருவன் சீன நாட்டினனாகவும் புத்த சமயத்தனாகவும் இருக்கிறான். ஜப்பான், திபெத்து, உருஷியா, சைபீரியா, பர்மா, சையாம்

என்ற நாடுகளிலும் புத்தர்கள் இருக்கிருர்கள். உங்கள் கிறிஸ்தவ ஒழுக்கமும் கத்தோலிக்கக் கோவிலும் என்ற எல்லாம் அவர்களைப் பார்த்துக் கற்றுக் கொண்டவையே ஆகும். இது உங்களுக்கு அருவருப்பான செய்தியாய் இருக்கலாம். சரி இவை எவ்வாறு பரவின? ஒரு துளி இரத்தம்கூடச் சிந்தாமல்! வீண் பெருமை பேசுகிறீர்களே. கத்தி இல்லாமல் உங்கள் கிறிஸ்தவ மதம் எவ்விடத்தில் வெற்றி அடைந்தது? உலக முழுவதிலும் ஓர் இடத்தைக் காட்டுங்கள். கிறிஸ்தவ சமய வரலாறு முழுவதிலும் ஓர் இடத்தைக் காட்டுங்கள் என்கிறேன். ஒரே ஓர் இடம்; இரண்டு இடத்தைக் கேட்கவில்லை. உங்கள் முன்னோர் கள் எவ்வாறு மதம் மாற்றப்பட்டார்கள் என்பதை நான் அறிவேன். அவர்களை மதம் மாற்ற வேண்டும்; இல்லை என்ருல் அவர்களைக் கொன்றுவிட வேண்டும். இதுவே எல்லாம். நீங்கள் எவ்வளவு வீண் பெருமை பேசிக்கொண் டாலும், மகம்மதிய மதத்தைவிட எந்த நல்லதை நீங்கள் செய்யக் கூடும்? "நாங்களே மேலானவர்கள். ஏன் தெரி யுமா? ஏன் எனில், நாங்கள் மற்றவர்களைக் கொல்லும் திறம் பெற்றவர்கள்" என்று அரேபியர்கள் கூறினுர்கள்; வீண் பெருமை பேசினுர்கள். அந்த அரேபியர்கள் இப்போது எங்கே இருக்கிருர்கள்? அவர்கள் நிலையான தங்கும் வீடு இல்லாமல், எப்பொழுதும் நாடோடிகளாய் அலைந்து திரியும் பெதுாயின்களாய் விட்டார்கள். உரோம நாட்டினரும் அவ்வாறே கூறிக்கொண்டிருந்தனர். இப்பொழுது அவர் கள் எங்கே இருக்கிருர்கள்? "சமாதானம் செய்கிறவர்கள் புண்ணியவான்கள்; அவர்கள் இம்மண்ணுலகத்தில் இன் புற்று வாழ்வார்கள்" என்பன போன்ற விவிலிய வேதக் கருத்துகள் தவிடுபொடியாகி விட்டன. அக்கருத்துகள் எல்லாம் மணலின்மேல் கட்டிய கோட்டைகள். அவை நெடுநாள் நிலைத்திரா.

தன்னலத்தை அடிப்படையாகவும், போட்டி மனப் பான்மையை வலக்கையாகவும், இன்பத்தை நோக்கமாக வும் கொண்டிருக்கிற ஒவ்வொன்றும் சீக்கிரத்திலோ அல்லது காலம் தாழ்த்தியோ மாண்டு போவது நிச்சயம். அத்தகையவை சாதல் வேண்டும். சகோதரர்களே நான் சொல்வதைக் கேளுங்கள். நீங்கள் வாழ விரும்பினுல்,

உங்கள் நாடு வாழ வேண்டும் என்று நீங்கள் உண்மையாக விரும்பினால், நீங்கள் திரும்பவும் ஏசுவிடம் செல்ல வேண்டும். நீங்கள் கிறிஸ்தவர்கள் அல்லீர். உங்கள் நாட்டிலுள்ள எவருமே கிறிஸ்தவர் அல்லர். நீங்கள் கிறிஸ்துவிடம் செல்ல வேண்டும். தலையை வைத்துப் படுப்பதற்கு இடமே பெற்றிராத அவரிடம் நீங்கள் செல்ல வேண்டும். "பறவைகளுக்குக் கூடுகள் உண்டு. விலங்குகளுக்குக் குகை உண்டு. ஆனால் மனிதகுமாரனுக்கோ உறங்க இடமே இல்லை." சுகவாழ்வின் பெயரால் பிரசாரம் செய்யப்படுகிற மதம் உங்கள் மதம். ஆனால், விதியின் சதியோ வேறுவிதமாய் இருக்கிறதே! இந்தப் பெருமித வாழ்வை மாற்றியே தீர வேண்டும்—நீங்கள் வாழவிரும்பினால். இந்த நாட்டில் நான் கேள்விப்பட்டது எல்லாம் முழுக் கபடம், முழுக் கள்ள வேடம். இந்த நாடு வாழவேண்டுமானால், இது கிறிஸ்துவிடம் திரும்பவும் செல்ல வேண்டும். ஒரே காலத்தில் நீங்கள் கடவுளையும் செல்வத்தையும் வழிபட இயலாது. இந்தச் செல்வ வளம் எல்லாம் ஏசு தந்ததையாம்! இத்தகைய தெய்வ நிந்தனையான சொற்களை எல்லாம் ஏசு மறுத்திருப்பார். செல்வம் கடவுளிடமிருந்து வருகிற எல்லாம் நிலையற்றவை; அற்ப வாழ்வுடையவை. கடவுள் ஒருவரே என்றும் உண்மையாக நிலைத்து நிற்பவர். இவ்விரண்டையும் ஒன்றாகச் சேர்க்க உங்களால் இயலுமானால், அதாவது இந்த வியத்தற்கு உரிய செல்வ வளத்தைக் கிறிஸ்துவின் குறிக்கோளுடன் சேர்க்க இயலுமானால், அது நல்லது. அவ்வாறு சேர்க்க உங்களால் இயலாது என்றால், செல்வ வளத்தைத் துறந்துவிட்டு, ஏசுவிடம் மீண்டும் போய்ச் சேருங்கள். ஏசுவைப் புறக்கணித்துவிட்டு, அரண்மனைகளில் வாழ்வதைக் காட்டிலும், ஏசுவுடன் கந்தையோடு வாழச் சித்தமாய் இருப்பது மிக நல்லது.

இந்தியாவில் கிறிஸ்தவ மதம்

[டெட்ராயிட்டு நகரத்திலே, மார்ச்சு 11, 1894-ல் ஆற்றிய சொற்பொழிவு. 'டெட்ராயிட்டு பிரீ பிரஸ்' என்ற பத்திரிகையில் வெளியிடப்பட்டது.]

நேற்று இரவு டெட்ராயிட்டு நகரிலுள்ள 'ஆப்பரா ஹவுஸ்' என்ற கட்டிடத்தில், நெருக்கமாய் நிறைந்திருந்த கூட்டத்தில் விவேகானந்தர் பேசினுர். அவருக்கு மிகமிக இனிய வரவேற்பு அளித்தனர். சிறந்ததொரு சொற்பொழிவாற்றினுர் அவர். இரண்டரை மணி நேரம் பேசினுர்.

இந்த நாட்டிற்கு வந்துள்ள இந்தப் புகழ் பெற்ற பெரியாரை மதிப்புக்குரிய பாமர் என்பார் அறிமுகம் செய்து வைத்துப் பேசியபோது, ஒரு பக்கம் செம்பாகவும் மற்ருெரு பக்கம் வெள்ளியாகவும் இருந்த ஒரு கேடயத்தையும் அதனுல் ஏற்பட்ட சண்டையைப் பற்றியுமுள்ள ஒரு பழங் கதையை அவர் குறிப்பிட்டார். 'ஒரு பிரச்சினைக்குரிய இரண்டு பக்கங்களையும் நாம் பார்த்தால், வாதங்கள் குறைந்து போம். சம்மதிப்பது என்பது எல்லார்க்கும் எளியதொரு செயலே. அயல் நாடுகளுக்குச் சென்றுள்ள பாதிரிமார் இயக்கங்கள் சமய மனத்திற்கு மிக இனியன ஆகும். கிறிஸ்தவரது நிலையிலிருந்து பார்த்தால், விவேகானந்தர் ஒரு விக்கிரக ஆராதனைக்காரர் ஆவர்' எனப் பாமர் கூறினுர். கேடயத்தின் செம்புப் பக்கத்தைப் பற்றிப் பேசி வருகிற ஒருவர் பேசுவதைக் கேட்பது நல்லது.

ஆர்வத்துடன் கை தட்டி விவேகானந்தர் வரவேற்கப் பட்டார்.

ஜப்பானிலும் சைனுவிலுமுள்ள பாதிரிமார்களைப் பற்றி எனக்கு அதிகம் தெரியாது; ஆனுல், இந்தியாவிலுள்ள பாதிரிமார்களைப் பற்றி நான் நன்கு அறிவேன். பல காடுகளும் சில நாகரிக ஆங்கிலேயர்களும் இருக்கிற ஒரு பெரிய பாழ் நிலம் இந்தியா என இந்நாட்டு மக்கள் இந்தியாவைப் பற்றிக் கருதுகின்றனர். அமெரிக்க ஐக்கிய நாட்டின்

பரப்பில் பாதி இந்தியாவின் பரப்பு. அங்கு முப்பது கோடி மக்கள் இருக்கின்றார்கள். இந்தியாவைப் பற்றிப் பல கதைகள் இங்கு வழங்கி வருகின்றன. அவைகளை மறுத்து மறுத்துச் சலிப்படைந்துவிட்டேன். கிறிஸ்தவர்கள் ஒரு புதிய நாட்டிற்குப் போனபோது அங்குள்ள குடிமக்களை அவர்கள் அழித்ததைப்போல், இந்தியாவின்மேல் முதல் முதல் படையெடுத்துவந்தவர்களாகிய ஆரியர்கள் இந்திய மக்களை அழிக்க முயலவில்லை; ஆனால், கொடுமையான செயல்களைச் செய்யும் மக்களைப் பண்படுத்த முயன்றார்கள். கிறிஸ்தவ சமயத்தோடு ஸ்பானிஷ் தேசத்தார் இலங்கைக்கு வந்தனர். அங்குள்ள மக்களைக் கொன்று அழித்து, அவர்களுடைய தெய்வ உருவங்கள் நிறைந்த கோயில்களை அழித்துவிடுமாறு தங்கள் கடவுளானவர் கட்டளை இட்டதாக அந்த ஸ்பானிஷ் தேசத்தார் நினைத்தார்கள். அங்குள்ள புத்தர்கள் தங்கள் சமயத்தலைவரான புத்தபிரானது ஒரு அடி நீளமுள்ள பல் ஒன்றை வைத்திருந்தனர். ஸ்பானிஷ் மக்கள் அதைக் கடலில் எறிந்துவிட்டு, ஆயிரக்கணக்கான மக்களைக் கொன்று, ஒரு சில மக்களை மதம் மாற்றினார்கள். மேற்கு இந்தியாவுக்குப் போர்ச்சுக்கீசியர் வந்தனர். இந்துக்கள் மும்மூர்த்திகளை நம்புகின்றனர். அந்தப் புனித நம்பிக்கைக்கு ஏற்ப ஒரு கோயிலும் கட்டி வைத்திருந்தனர். படை எடுத்து வந்த அந்தப் போர்ச்சுகீசியர்கள் அக்கோயிலைக் கண்டு, அது சைத்தானுடைய வேலை என்று கூறினர்; வியக்கத்தக்க அந்தக் கட்டிடத்தைப் பீரங்கிகொண்டு தாக்கி, அதன் ஒரு பகுதியை அழித்தனர். சினம் கொண்டு எழுந்த குடிமக்கள் படை எடுத்து வந்தவர்களை நாட்டைவிட்டுத் துரத்திவிட்டார்கள். ஆரம்பத்திலேயே வந்திருந்த பாதிரிமார் நாட்டைக் கைப்பற்ற முயன்றனர். தமக்கு என ஒரு நிலையான ஆதார இடத்தை வற்புறுத்திப் பெற அவர்கள் முயன்ற போது, பலரைக் கொன்றார்கள்; ஒரு சிலரை மதம் மாற்றினார்கள். தம் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக மக்களுள் சிலர் கிறிஸ்தவராயினர். போர்ச்சுகீசியருக்கு அஞ்சிக் கிறிஸ்தவர்கள் ஆனவர்களில் நூற்றுக்குத் தொண்ணூற்றென்பது பேர் அவ்வாறு உயிருக்கு அஞ்சி ஆனவர்களே. “நாங்கள் கிறிஸ்தவ மதத்தை நம்பவில்லை. நாங்கள் கிறிஸ்தவர்களே என்று சொல்லும்படி வற்புறுத்திய

வர்களுடைய வற்புறுத்தலுக்கு ஆளாகிவிட்டோம்" என்று அவர்கள் கூறுகின்றார்கள். அந்தக் கத்தோலிக்கக் கிறிஸ்தவ மதம் சீக்கிரமே மறைந்தது.

'காற்றுள்ள போதே தூற்றிக்கொள்ளவேண்டும்' என்ற நோக்குடன் கிழக்கிந்தியக் கம்பெனியார் இந்தியாவின் ஒரு பகுதியைக் கைப்பற்றினர். அவர்கள் பாதிரிமார்களை நெருங்க விடவில்லை. பாதிரிமார்களை முதலில் வரவேற்றவர்கள் இந்துக்களே; வாணிபத்தில் ஈடுபட்டிருந்த ஆங்கிலேயர்கள் அல்லர். பிற்காலத்திலே வந்த பாதிரிமார்களைப் பெரிதும் மதித்துப் பாராட்டுவேன் நான். அவர்கள் ஏசுவின் உண்மையான தொண்டர்கள். அவர்கள் மக்களை ஏசிப் பழிக்கவில்லை. அவர்கள் எங்களைப் பற்றிக் கொடுமையான பொய்களைப் பரப்பவுமில்லை. அவர்கள் சாந்தமானவர்கள்; அன்புடையவர்கள். ஆங்கிலேயர்கள் இந்தியாவின் தலைவர்கள் ஆனதும், பாதிரிமார் இயக்கமானது வளர்ச்சியில் தளர்ச்சியுறத் தொடங்கிற்று. பாதிரிமார்களது முயற்சிகள் தளர்ச்சியுற்று இருக்கும் தன்மையை இன்று இந்தியாவில் காணலாம். தொடக்கத்தில் வந்த பாதிரியான டாக்டர் லாங் என்பவர் மக்களுக்குத் துணையாய் இருந்தார். அவுரிப்பண்ணை முதலாளிகள் இந்தியாவிலே செய்த கொடுமைகளை விளக்கிக் கூறிய ஒரு நாடகத்தை அவர் மொழிபெயர்த்தார். அதன் பயன் என்ன? ஆங்கிலேயர் அவரைச் சிறையில் அடைந்தனர். அத்தகைய பாதிரிமார் இந்தியநாட்டுக்கு உதவி புரிந்தனர்; ஆனால், அவர்கள் இறந்து போனார்கள். சூயஸ் கால்வாயானது சில தீமைகள் ஏற்படுவதற்குக் காரணமாயிற்று.

இப்பொழுது பாதிரியார் மணம் புரிந்துகொண்டு இந்தியாவிற்குச் செல்கிறார். மணம்புரிந்துகொண்டிருப்பதால், அவருக்குப் பல இடையூறுகள் ஏற்படுகின்றன. அந்தப் பாதிரியாருக்கு இந்திய மக்களைப் பற்றி ஒன்றுமே தெரியாது. அவர்களது மொழியும் அவருக்குப் பேசத்தெரியாது. ஆகவே, பெரும்பாலும் வெள்ளையர் குடியேறித் தங்கியிருக்கும் சிறிய குடியிருப்பு வட்டத்திலே அவர் தங்கிவிடுகிறார். கலியாணம் செய்துகொண்டிருப்பதால், அவருக்கு இந்த அவதி ஏற்படுகிறது. திருமணமாகாதிருந்தால், மக்களி

டையே அவர் தாராளமாய்ப் போய்வரலாம்; அவசியமானல் மண்தரையிலும் அவர் படுத்துறங்கலாம். ஆகவே, மனைவிக்கும் மக்களுக்கும் வேண்டிய துணைவர்களை நாடியே அவர் இந்தியாவுக்குச் செல்கிருர். அவர் ஆங்கிலம் பேசும் மக்களிடையே குடியிருக்கிருர். இந்தியாவின் பெரும்பகுதியானதுபாதிரிமார் சேவைக்குச் சிறிதும் இலக்காகாமலே இருக்கிறது. பாதிரிகளுள் பெரும்பாலோர் திறமைஇல்லாதவர். வடமொழியை அறிந்துகொள்ளுகிற ஒருபாதிரியாரைக்கூட நான் பார்த்ததே இல்லை. ஒரு நாட்டு மக்களையும் அவர்கள் பழக்க வழக்கங்களையும் சிறிதும் அறியாத ஒருவர், அவர்களது அனுதாபத்தை எப்படிப் பெற இயலும்? நான் குற்றம் சாட்ட விரும்பவில்லை. திறமையற்றவர்களைப் பாதிரிமார்களாக இங்குள்ள கிறிஸ்தவர்கள் அனுப்பிவைக்கிருர்கள். மத மாற்றத்திற்காகப் பணம் செலவிட்டும், திருப்தி அளிக்கக் கூடிய உண்மையான பலன்கள் ஏற்படவில்லை என்பதைக் காண வருத்தமாய் இருக்கிறது!

பாதிரிமார்களது ஆதரவை நாடி, அவர்களால் ஒருவாறு வாழ்க்கை நடத்திவருகிற ஒரு சிலரே மதமாற்றம் அடைந்தவர். மதம் மாறியவர்களிலே பாதிரிமார்களால் இந்தியாவிலே வேலைக்கு வைத்துக் கொள்ளப்படாதவர்கள் மீண்டும் தங்கள் சொந்த மதத்திற்கே போய்விடுகின்ருர்கள். இதுவே மதமாற்றத்தைப் பற்றிய முழு உண்மையின் சாரமாகும். மதமாற்றம் செய்யும் முறையிருக்கிறதே, அது அறிவுக்கு முரணுன முறையாகும். பாதிரிமார்கள் தருகிற பணத்தை மக்கள் பெற்றுக் கொள்கின்ருர்கள். கல்வி சம்பந்தப்பட்ட மட்டில், பாதிரிமார்கள் ஆரம்பித்து நடத்தி வருகிற கல்லூரிகள் செம்மையாகவே நடந்து வருகின்றன. ஆனல், சமயம் என்ருலோ, அது வேறு விதமாகவே நடக்கிறது. இந்து மதத்தினன் மதி நுட்பம் வாய்ந்தவன். அவன் பணத்தைப் பெற்றுக்கொள்கிருன்; ஆனல், மதம் மாறுவதில்லையே! இந்தியர்கள் எவ்வளவு பொறுமையானவர்கள் என்பது ஆச்சரியப்படத்தக்க உண்மையாகும். "இந்தியர் போதும் என்ற மனத்தினர். அவர்களை மத மாற்றம் செய்ய ஒரு போதும் இயலாது. அவர்களது போதும் என்ற மனமே பாதிரிமார்களது செயலுக்குப் பேரிடராய்

இருக்கிறது" என்று ஒரு பாதிரியார் ஒரு சமயம் கூறியிருக்கிறார்.

பெண் பாதிரிமார்கள் குறிப்பிட்ட சிலர் போகிறார்கள்; நான்கு ஷில்லிங்கு பணம் பெற்றுக்கொண்டு விவிலியத்தைச் சிறிது சொல்லிக் கொடுப்பதோடு பின்னல் வேலையையும் கற்றுக் கொடுக்கிறார்கள். இந்தியச் சிறுமிகள் ஒரு போதும் மதம் மாறமாட்டார்கள். தங்கள் நாட்டிலுள்ள நாத்திகமும் சமய நம்பிக்கையின்மையுமே பாதிரிமார்களை அயல் நாடுகளுக்கு ஓடும்படி செய்கின்றன. நான் இந்த நாட்டிற்கு வந்தபோது, பரந்த நோக்கமுடைய ஆடவர் பலரையும் பெண்டிரையும் சந்தித்து வியப்படைந்தேன். ஆனால், சர்வ சமய மாநாட்டிற்குப் பிறகு, என்னைப் பற்றிக் கோபமும் வசையும் நிறைந்த கட்டுரை ஒன்றை பெரிய பிரஸ்பிடேரியன் பத்திரிகை ஒன்று வெளியிட்டது. அப்பத்திரிகையின் ஆசிரியர் அதனை 'ஆர்வம்' என்று குறிப்பிட்டார். பாதிரிமார்கள் தங்கள் நாட்டுப் பற்றை விடுவதில்லை; அவர்களால் அதை விடவும் இயலாது. ஆகவே, மதமாற்றத் துறையிலே அவர்களால் ஒன்றும் செய்ய முடிவதில்லை. ஆனால், அவர்கள் தங்களுக்குள் கூடிக் கலந்து இனிதாகக் காலம் போக்கி வருகின்றார்கள். இந்தியா கிறிஸ்துவின் உதவியை நாடி நிற்கின்றது; ஆனால், கிறிஸ்துவின் பகைவர்களிடமிருநது அன்று. பாதிரிமார்கள் கிறிஸ்துவின் தன்மையைப் பெறாதவர்கள். அவர்கள் கிறிஸ்துவைப் போல் நடந்து கொள்வதில்லை. அவர்கள் திருமணம் புரிந்துகொண்டவர்கள். அவர்கள் இந்தியாவுக்கு வந்து, அங்கு இன்பமாய் தங்கி வாழ்ந்து, நன்றாக வயிறு வளர்த்து வருகிறார்கள். பல இந்து மகான்கள் புரிந்து வருவதைப் போன்று, கிறிஸ்துவின் சீடர்களும் இந்தியாவிலே அதிக நன்மை புரியக்கூடும். ஆனால், இந்தப் பாதிரிமார்களுக்கு அந்தப் புனிதப் பண்பு இல்லை. கிறிஸ்துவை இந்துக்கள் மகிழ்ச்சியோடு வரவேற்பார்கள். ஏனெனில், அவரது வாழ்வு புனிதமாகவும் அழகாகவும் இருந்தது. ஆனால், தம்மைத்தாமே ஏமாற்றிக்கொள்கிற, அறியாமை மிகுந்த, கபடர்களது பரந்த நோக்கமில்லாத பேச்சுகளை இந்துக்கள் ஏற்கமாட்டார்கள்; அவர்களால் ஏற்கவும் இயலாது.

மாந்தர் பல்வேறு வகையினர். அவ்வாறு அவர்கள் இல்லை என்றால், உலக மக்களது மனப்போக்கானது சீர்கேடு அடைந்துவிடும். மாறுபட்ட சமயங்கள் இல்லை என்றால், ஒரு சமயமும் உயிர் வாழாது. கிறிஸ்தவனுக்கு அவனுடைய சமயம் தேவை. அவ்வாறே இந்துவுக்கும் அவனுடைய சமயம் தேவை. எல்லாச் சமயங்களும் ஒன்றோடு ஒன்று பல ஆண்டுகளாகப் போரிட்டு வந்திருக்கின்றன. தத்தமக்குரிய வேத நூலை ஆதாரமாகக்கொண்டு பிறந்த சமயங்கள் இன்னும் நிலைத்திருக்கின்றன. கிறிஸ்தவர்களால் ஏன் யூதர்களை மதமாற்றம் செய்ய இயலவில்லை? அவர்கள் ஏன் பார்சி மதத்தினரை மதமாற்றம் செய்ய இயலவில்லை? சைனாவிலும் ஜப்பானிலும் ஏன் தெரியக்கூடிய அளவுக்கு வெற்றி பெற இயலவில்லை? மதமாற்றம் செய்வதற்கெனப் பிறந்த முதல் மதமாகிய புத்தமதத்தைச் சார்ந்தோர் தொகை வேறு எந்த மதத்தைச் சார்ந்தோர்களது எண்ணிக்கையைப் போல இருமடங்கு ஆகும். அவர்கள் கத்தியை உபயோகிக்கவில்லை. மகம்மதியர்கள் மிகமிகக் கொடிய முறைகளைக் கையாண்டார்கள். மதமாற்றம் செய்கிற மூன்று பெரிய மதங்களிலே, மகம்மதியர் எண்ணிக்கையே மிகமிகக் குறைந்த எண்ணிக்கை ஆகும். மகம்மதியர் காலம் மலை ஏறிவிட்டது. கிறிஸ்தவ நாடுகள் கொலை செய்து புதிய இடங்களைக் கைப்பற்றுவதாக நீங்கள் தினந்தோறும் பத்திரிக்கைகளில் படிக்கிறீர்கள். இதைக் கண்டித்து எந்தப் பாதிரிமார் பிரசாரம் செய்கிறார்? ஏன் இந்த இரத்த வெறி அதிகம் படைத்த நாடுகள் கிறிஸ்துவின் மதம் அல்லாத ஒரு மதத்தைக் கிறிஸ்துவின் மதம் எனப்பெருமை பாராட்டிக்கொள்ளவேண்டும்? கிறிஸ்தவர்களுக்குத் தந்தைமார்களாய் விளங்குபவர்கள் யூதர்களும் அரேபியர்களுமாவார்கள். அவர்களைக் கிறிஸ்தவர்கள் எவ்வளவு கொடுமைப்படுத்தினார்கள்! இந்தியாவிலே கிறிஸ்தவர்களைத் தராசில் போட்டு நிறுத்துப் பார்த்தாகிவிட்டது. அவர்கள் வெறும் பதர்களே. அன்பின்றிப் பேச நான் விரும்பவில்லை. அவர்கள் மற்றவர்கள் கண்களுக்கு எவ்வாறு காட்சி அளிக்கின்றார்கள் என்பதை நான் கிறிஸ்தவர்களுக்கு உணர்த்த விரும்புகிறேன். நெருப்புக் குழியைப் பற்றிப் பிரசாரம் செய்கிற பாதிரிமார்களைக் காண

மக்கள் அஞ்சுகின்றனர்கள். கத்திகளைச் சுழற்றிக்கொண்டு, மகம்மதியர்கள் அலைகள் போலப் பல முறை இந்தியாவின் மேல் படை எடுத்து வந்தார்கள். அவர்கள் இன்று எங்கே?

எல்லாச் சமயங்களின் செய்மை நோக்கமும் ஆன்மிகப் பொருளின் நிலையே. எந்த மதமும் அந்த நிலைக்கு அப்பால் எதையும் கற்பிக்க இயலாது. ஒவ்வொரு மதத்திலும் சத்தான ஓர் உண்மையும் உண்டு; இந்த உண்மையான இரத்தினத்தைத் தாங்கி நிற்கிற அசத்தான பெட்டியும் உண்டு. யூதர்களது வேத நூலையோ, அல்லது இந்துக்களது வேத நூலையோ நம்புகிற நம்பிக்கை தேவையில்லாதது: சந்தர்ப்பங்கள் மாறலாம்; பெட்டி வேருக இருக்கலாம். ஆனால், மையமாய் விளங்கும் உண்மையே சத்து. அடிப்படைகள் எல்லாம் ஒன்றே. ஆதலால் ஒவ்வொரு சமுதாயத்திலும் உள்ள கல்வி நலம் பெற்ற மக்கள், அந்த அடிப்படைகளை விடாமல் பிடித்துவைத்துக் கொண்டிருக்கிறர்கள். "உனக்கு முக்கியமானவை எவை?" என்று நீங்கள் ஒரு கிறிஸ்தவனைக் கேட்டால், "ஆண்டவர் ஏசு கற்பித்தவையே" என்று பதில் கூறுவான். மற்றவற்றில் பெரும் பகுதி பொருளற்றவை. அந்தப் பொருளற்ற பகுதியும் வேண்டுவதுதான். அதுவே முன்பு குறிப்பிட்ட பெட்டியாகும். முத்துச் சிப்பியின் ஓடு இருக்கிறதே, அது அழகாய் இராது. ஆனால், அதனுள் இருக்கும் முத்தோ அழகானது. ஏசுவின் வாழ்க்கை வரலாற்றை இந்து ஒருவன் எப்பொழுதும் குறை கூறமாட்டான்; மலைப் பிரசங்கத்தை அவன் பயபக்தியோடு பாராட்டுகிறன். ஆனால், எத்தனை கிறிஸ்தவர்கள் இந்து மத மகான்களது போதனைகளை அறிவார்கள்? அல்லது கேள்விப்பட்டிருக்கிறர்கள்? அவர்கள் அறியாமையால் விழுங்கப்பட்டிருக்கிறர்கள். உலகத்தில் ஒரு சிறு பகுதியை மதமாற்றம் செய்வதற்குள்ளே கிறிஸ்தவ மதமானது பல பிரிவுகளாய்ப் பிரிந்து போயிற்று. இதுவே இயற்கை விதியாகும். உலகத்துச் சமயங்கள் என்ற இசைக் கருவிகளது தொகுப்பால் ஏற்பட்டிருக்கும் ஓர் இணக்கத்திலிருந்து, ஏன் ஓர் இசைக் கருவியை மாத்திரம் எடுத்துக்கொள்கிறீர்கள்? அந்த இசைக்கருவிகளது இணக்க ஒலி ஒலித்துக் கொண்டே இருக்கட்டும். தூய்மையாக இருங்கள். மூடக் கொள்கைகளை விட்டு, ஆச்சரியப்படத்தக்க முறையில்

அமைந்துள்ள இயற்கையின் கூட்டு ஒற்றுமையைப் பாருங்கள். அப்படிப் பார்க்கும் போது, மதத்தின் பெரும்பகுதி மூடக்கொள்கையாய் விளங்கி நிற்பது தெரியும். எல்லாச் சமயங்களும் நல்லவைகளே; ஏனெனில், அடிப்படைகள் ஒத்திருக்கின்றன. ஒவ்வொருவனும் தன் தனிப்பண்பை நல்லபடி வளர்த்துப் பழகவேண்டும். இந்தத் தனிப் பண்புகள் சேர்ந்ததே ஒரு குறையும் இல்லாத ஒரு முழுமை ஆகின்றது. வியத்தற்குரிய இந்த நிலைமையானது முன்னமே இருக்கிறது. இந்த வியத்தற்குரிய நிலைக்கு ஒவ்வொரு மதமும் தன்னால் ஆனதைத் தந்துதவவேண்டும்.

ஏசுவின் குணப்பண்பின் அழகைக் காணாத இந்துவைப் பற்றி எனக்கு வருத்தம் உண்டு. இந்து—கிறிஸ்துவினிடம் பயபக்திகொள்ளாத கிறிஸ்தவனைப் பற்றி எனக்கு வருத்தம் உண்டு. ஒருவன் தன்னைத்தானே எவ்வளவுக்கு எவ்வளவு அதிகம் பார்த்து நிற்கிறானோ, அவன் அயலார்களைப் பார்ப்பது அவ்வளவுக்கு அவ்வளவு குறைவாய் இருக்கும். இங்கும் அங்கும் சென்று, பிறரை மதம் மாறச் செய்து, பிறருடைய ஆன்மாவைக் காப்பாற்ற முனைந்திருப்பவர்களுள் பெரும்பாலார் தம் ஆன்மாவையே மறந்துவிடுகின்றனர். இந்தியமாதர் ஏன் மிக உயர்ந்த நிலை பெறாது இருக்கின்றனர் என ஒருத்தி என்னைக் கேட்டாள். பல்வேறு காலங்களில் படைஎடுத்து வந்த காட்டுமிராண்டிகளே அதற்குப் பெருங் காரணர்; இந்திய மக்களும் அதற்கு ஓர் அளவில் காரணராவார்கள். நவீனங்களையும் நடனங்களையும் தெய்வமாகப் போற்றிவருகிற இந்த நாட்டு மாதர்களைக் காட்டிலும், எங்கள் மாதர்கள் எக்காலத்தும் மேலானவர்களே. தனது நாகரிகத்தினைப் பற்றிப் பெருமையாகப் பேசி நிற்கும் நாட்டிலே, நாம் காண விரும்புகிற ஆன்மிகப் பண்பு எங்கே இருக்கிறது? அதை நான் காணவே இல்லை. "இந்த உலகத்திலே" "மறு உலகத்திலே" என்ற சொற்கள் குழந்தைகளுக்கு அச்சமூட்ட எழுந்தவை. எல்லாம் "இங்கேதான்" —இந்த உலகத்திலேதான். கடவுள் உடலிலே நாம் தங்கி வாழ்வதும் நடமாடுவதும் இங்கேதான், இந்த உடலிலேதான்! 'தான்' என்பது அறவே நீங்கவேண்டும்; மூடக்கொள்கையை அறவே துறக்கவேண்டும். இந்தியாவில் அத்தகையோர் வாழ்கின்றனர். அத்தகையோர் இந்நாட்டில்

எங்கு இருக்கின்றனர்? உங்கள் பிரசாரகர்கள் "கனவுக்காரர்களை" நிந்திக்கின்றார்கள். அத்தகைய "கனவுக்காரர்கள்" இன்னும் அதிகமாய் இருப்பார்களானால், இந்நாட்டு மக்கள் இன்னும் மிக நல்ல நிலையில் இருப்பார்கள். ஆண்டவன் கற்பித்த பாடத்தை அப்படியே இங்கு ஒருவன் மேற்கொள்வானானால், அவனை ஒரு பைத்தியக்காரன் என்பார்கள். கனவுக்கும், பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோன்றியுள்ள வீண் பெருமைக்கும் பெரும் வேறுபாடு உண்டு. தேனீக்கள் மலரை நாடி வருகின்றன. தாமரை மலரைத் திறந்து வைப்பீர். உலகம் முழுவதிலும் நிறைந்து இருப்பவர் கடவுளே; பாவம் அன்று. நாம் ஒருவருக்கு ஒருவர் உதவி புரிந்துகொள்வோமாக. நாம் ஒருவரோடு ஒருவர் அன்போடு இருப்போமாக. "எல்லா மகான்களையும் வணங்குகிறேன்; எல்லாத் தேவதூதர்களையும் வணங்குகிறேன்; உலகம் முழுவதிலுமுள்ள எல்லாச் சமயப் பெரியார்களையும் சமயப் பெண்மணிகளையும் வணங்குகிறேன்" என்பது பௌத்த மதத்தினரின் சீரிய பிரார்த்தனையாகும்.

இக்கால உலகமும் வேதாந்தத்தின் உரிமையும்

[1900 ஆம் ஆண்டு, பிப்பிரவரித் திங்கள், 25-ஆம் நாள் ஒக்லண்டு என்ற இடத்திலே செய்த சொற்பொழிவு பற்றி, "ஒக்லண்டு என்குயரர்" என்ற பத்திரிகையில் ஆசிரியர் குறிப்புடன் வெளிவந்தது.]

"யூனிட்டேரியன் சர்ச்சு என்ற கிறிஸ்தவக் கோவிலில் நடக்கும் உலக சமயங்களின் மாநாட்டிலே, கீழ் நாட்டைச் சார்ந்த புகழ்வாய்ந்த ஞானியாராகிய சுவாமி விவேகானந்தர் வேதாந்த தத்துவம் என்பது பற்றிப் பேசுவார்" என்ற அறிக்கை பெருந்திரளான மக்களை ஈர்த்தது. பெரிய பேச்சு மண்டபத்திலும், அதற்கு முன்னுள்ள அறைகளிலும் மக்கள் நெருக்கமாய் நிறைந்திருந்தார்கள். வெண்ட் ஹாலைச் சார்ந்த துணைப்பேச்சு மண்டபமும் திறந்துவிடப்பட்டது. அதுவும் நிறைந்திருந்தது. உட்கார நாற்காலிகளோ, நின்று கேட்பதற்கு உரிய இடங்களோ இல்லாமையால் வெளியேறினோர் எண்ணிக்கை ஐந்நூறுக்குக் குறையாது. சுவாமி அவர்கள் மக்களின் உள்ளங் கவர்ந்தார். சொற்பொழிவின் இடையிடையே அடிக்கடி கைதட்டி, மக்கள் அவரை ஆதரித்தார்கள். சொற்பொழிவு முடிந்ததும், தம்மை ஆர்வத்தோடு பாராட்டியவர்களுடன் அவர் தனித்துப் பேசினார்; "இக்கால உலகமும் வேதாந்தத்தின் உரிமையும்" என்ற தலைப்பில் பேசினார்.

இக்கால உலகம் வேதாந்தம் பற்றிச் சிந்திக்க வேண்டும் என்று வேதாந்தம் வேண்டுகிறது. மனித குலத்தின் மிகப் பெருந்தொகையினர் அதன் ஆதிக்கத்திலே இருக்கின்றனர். இந்தியாவிலே அதைப் பின்பற்றி வாழ்வோர்களை அயல்நாட்டினர் இலட்ச இலட்சமாக அடிக்கடி படை எடுத்துவந்து தாக்கி, தமது பெரும்படைபலத்தால் அழித்தனர். என்றாலும், அவர்களது இந்து சமயம் உயிர்வாழ்ந்து கொண்டே இருக்கிறது.

உலகத்திலுள்ள எல்லா நாடுகளிலும் அதைப் போன்ற ஒரு கோட்பாட்டைக் காண இயலுமா? அதன் நிழலின்

கீழ் ஒண்டி வாழ்வதற்கு வேறு சில கோட்பாடுகள் அதனை நாடி வந்து சேர்ந்தன. அவை இன்று வாழ்ந்தும் வளமுற்றும் இருக்கின்றன என்றாலும், அவை எவ்வாறு காளான்கள் போலத் தோன்றினவோ, அவ்வாறே நாளையதினம் மறைந்து ஒழிந்துபோம். தகுதி மிக்க ஒன்றே நிலைத்து நிற்கும் என்பதை இது உணர்த்தவில்லையா?

வேதாந்தம் என்ற இந்தக் கோட்பாடு, இன்னும் முழு வளர்ச்சி பெறவில்லை. இது ஆயிரக்கணக்கான ஆண்டுகளாய் வளர்ந்துவந்திருக்கிறது; இன்னும் வளர்ந்து கொண்டேயிருக்கிறது. இதைப் பற்றி நான் ஒரு மணி நேரத்தில் எவ்வளவு சொல்லக்கூடுமோ அவ்வளவு சொல்கிறேன்.

வேதாந்தம் தோன்றிய வரலாற்றை முதலிலே உங்களுக்குச் சொல்கிறேன். அது தோன்றிய காலத்திலே, நன்கு வளர்ந்து பண்பட்ட சமயத்தை இந்தியா பெற்றிருந்தது. அவ்வாறு அது வளர்ந்து பண்படுவதற்குப் பல ஆண்டுகள் சென்றன. அப்போதே விரிவான சடங்குகள் இருந்தன. வாழ்வின் பல்வேறு படிகளுக்கு ஏற்ற ஒழுக்க முறைகளும் அப்போதே இருந்தன. பொருளற்ற சடங்குகளும் பரிகசிக்கத்தக்க முணுமுணுக்கிற மந்திரங்களும் ஏற்படவே, வேதங்கள் வாயிலாக உண்மையான மதத்தை விளக்கி நிலைநாட்டுவதற்குப் பெரிய மகான்கள் முன் வந்தார்கள். கடவுளால் உணர்த்தப்பட்ட வேதங்களிலிருந்து இந்துக்கள் தங்கள் சமயத்தைப் பெற்றார்கள். வேதங்களுக்கு ஆரம்பமும் இல்லை, முடிவும் இல்லை என்பது அவர்களது நம்பிக்கை. எவ்வாறு ஆரம்பமும் முடிவும் இல்லாமல் ஒரு நூல் இருக்க இயலும் என்பது இந்தக் கூட்டத்திற்கு நகைக்கத் தக்கதாய் இருக்கலாம். வேதங்கள் என்றால் புத்தகங்கள் என்பது பொருள் அன்று. பல்வேறு காலங்களிலே, பல்வேறு மக்களாலே கண்டுபிடிக்கப்பட்ட ஆன்ம விதிகளைச் சேமித்துத் திரட்டி வைத்திருக்கும் கருவூலமே அவ்வேதங்கள்.

இவ்வாறு தொகுத்துவைத்த மகான்கள் தோன்றுவதற்கு முன்பே, 'ஒருகடவுள் இந்த உலகை ஆண்டு வருகிறார்; மனிதன் மரணம் இல்லாதவன்' என்ற கருத்துகள்

பொதுமக்களிடையே வழங்கி வந்தனவாகும். அவர்கள் அறிந்திருந்தது இம்மட்டே. இவற்றிற்கு மேல் அறிவதற்கு வேறு ஒன்றுமே இல்லை என அவர்கள் எண்ணினார்கள். அப்போதுதான் வேதங்களை விளக்கவல்ல துணிவுடையோர் தோன்றினர். குழந்தைகளுக்கு உதவக் கூடிய சமயமானது, சிந்திக்கும் சிந்தனை பெற்ற மக்களுக்கு ஏற்றதன்று என்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள். மனிதனைப் பற்றியும் கடவுளைப் பற்றியும் பொது மக்கள் உணர்ந்திருந்ததைக் காட்டிலும் இன்னும் அதிக உண்மைகள் இருக்கின்றன என்பதையும் அவர்கள் அறிந்திருந்தார்கள்.

ஒழுக்கமே பெரிது என்று சொல்கிற, கடவுள் உண்டா இல்லையா என்ற தெளிவில்லாதவன் புறத்தே தெரிகிற உயிரற்ற இயற்கை ஒன்றையே அறிவான். அதைக்கொண்டு அவன் இந்த உலகத்தைப் பற்றி ஒருவிதியை வகுத்துக் கொள்வான். அவன் என் மூக்கை மட்டும் வெட்டிவிட்டு, என் உடல் முழுவதையும் பற்றிய உண்மைகளை எல்லாம் எடுத்துக்கூறும் தகுதி தனக்கு ஏற்பட்டுவிட்டதாகத் துணிந்து கூறுவான்.

அவன் தன் பார்வையை அகத்தே திருப்பிப் பார்க்க வேண்டும். ஆகாயத்தில் மிதந்து செல்கிற விண்மீன்களும், —ஏன்?—இந்த உலகமுங்கூட, ஒரு வாளி நீரில் ஒரு துளி நீரே. கடவுளைப் பற்றி ஐயுறுகின்ற உங்களைச் சேர்ந்தோர் மிகமிகப் பெரியதைப் பார்ப்பதில்லை. அவர்கள் இந்த உலகத்தைக் கண்டு அச்சமே கொள்கிறார்கள்.

ஆன்ம உலகம் எல்லா உலகினும் பெரியது. இந்தப் பிரபஞ்சத்தை ஆளும் கடவுளே தாயும் தந்தையும். நாம் உலகம் என்று சொல்வதைப் பற்றி இந்த விக்கிரக வணக்கத்தினர் கொண்டுள்ள பரிகசிக்கத்தக்க கருத்துதான் என்ன? அழுகையோடே குழந்தை பிறக்கிறது; அதுவே அதன் முதல் பேச்சும் சொல்லும். அக்குழந்தை மனிதனாகிறது. அம்மனிதன் துன்பத்தினை நன்றாக அனுபவிக்கிறான். அவன் தன் மனவேதனையைத் தன் புன்முறுவலால் மறைத்துக் கொள்கிறான்.

இந்த உலகத் துன்பத்தைத் துடைக்கும் வழி எங்கு இருக்கிறது? புறத்தே பார்ப்பவர்கள் அதனை எப்பொழு

தும் கண்டுபிடித்தல் இயலாது. அவர்கள் தங்கள் அகத்தே பார்வையைச் செலுத்தி, உண்மையைக் காணவேண்டும். உடலின் உள்ளே சமயம் வாழ்ந்துகொண்டிருக்கிறது.

உன் தலையை வெட்டி வீழ்த்திக்கொண்டால், நீ முக்தி அடைவாய் என்று ஒருவன் பிரசாரம் செய்கிறான். அவன் சொற்படி நடக்க ஒருவன் முன் வருகிறானா? "நீ வைத்திருப்பதை எல்லாம் ஏழைகளுக்குக் கொடுத்துவிட்டு, என் பின்னே வருவாயாக" என்று உங்கள் ஏசுநாதரே மொழிகிறார். உங்களில் எத்தனை பேர் அவ்வாறு செய்திருக்கிறீர்கள்? இந்தக் கட்டளையின்படி நீங்கள் நடக்கவில்லை. என்றாலும், உங்கள் மதத்தின் பெரும்போதகர் ஏசுநாதரே. உங்களில் ஒவ்வொருவருக்கும் தன் வாழ்க்கையில் நல்ல அனுபவ ஞானம் உண்டு. ஆதலால், ஏசுநாதரின் கட்டளையின்படி நடப்பது அனுபவசாத்தியம் அன்று என்பது உங்களுக்குத் தெரியும்.

செய்வதற்கு முடியாத ஏதொன்றையும் வேதாந்தம் உங்களுக்குச் சொல்லவில்லை. ஒவ்வொரு விஞ்ஞானத்திற்கும் அதன் விதிகளுக்குக் கட்டுப்பட்டு நடக்கிற சடப்பொருள்கள் இருக்கவேண்டும். ஒவ்வொருவனுக்கும் குறிப்பிட்ட வசதிகளும் நல்ல பயிற்சியும் அறிவும் தேவை. ஆனால், எந்த வழிப்போக்கனும் சமயத்தைப் பற்றி எல்லாம் தெரிந்தவனாக உங்களுக்குச் சொல்ல முன்வருகிறான். நீங்கள் சமயத்தின்படி நடக்கவேண்டும் என்று விரும்பினால், சமயத்தை நன்கு அறிந்த ஒரு நிபுணன் சொற்படி நடக்கவேண்டும். அந்த வழிப்போக்கனுக்குச் சமயத்தைப் பற்றிப் பேசும் துணிவு இருப்பதால், அவனோடு உரையாடுவதற்கு மட்டும் நீங்கள் விருப்பம் கொள்ளலாம்.

விஞ்ஞானத்தை நீங்கள் எவ்வாறு சோதித்து அறிகிறீர்களோ, அவ்வாறே சமயத்தையும் சோதித்து அறியவேண்டும்; உண்மைகளை நேருக்குநேர் அறியவேண்டும். அவ்வுண்மைகளை அடிப்படையாகக்கொண்டு வியக்கத்தக்க ஒரு ஞானக்கட்டடத்தைக் கட்டவேண்டும்.

உங்களுக்கு ஓர் உண்மையான மதம் வேண்டும் என்றால், அதற்கு உரிய கருவிகள் உங்களிடம் இருக்கவேண்டும். நம்பிக்கை என்பது ஒரு கருவியே அன்று. அதனால் நீங்கள்

எந்த நன்மையையும் பெறஇயலாது. ஏனெனில், நீங்கள் எதையும் நம்பக்கூடுமாகையால்.

வேகம் அதிகரித்துக்கொண்டே சென்ருல், அவ்வாறு வேகமாகச் செல்லும் பொருளின் கனமும் குறைந்து கொண்டே செல்லும் என்பதும், அப்பொருளின் கனத்தை அதிகரித்துக்கொண்டே சென்ருல், வேகம் குறைந்துகொண்டே செல்லும் என்பதும் நாம் விஞ்ஞானத்தில் அறிந்த உண்மைகளாகும். இத்தகைய விதிகளுக்கு அடங்கிய சடப்பொருளும் சக்தியும் இருக்கின்றன. 'எவ்வாறு சடப்பொருள் மறைந்து சக்தியாக மாறிவிடுகிறது? எவ்வாறு சக்தி மறைந்து சடப் பொருளாக மாறிவிடுகிறது?' என்பதை நாம் அறியமாட்டோம். ஆகவே, இவ்வாறு ஒன்று மற்ருென்ருவதைக் கொண்டு, சக்தியாகவும் இராமல் சடப்பொருளாகவும் இராமல் இருக்கிற ஏதோ ஒரு பொருள் இருக்கிறது என்பதை அறிகிருேம். அதையே நாம் மனம் என்கிருேம்—எங்கும் பரவி நிற்கும் மனம் என்கிருேம்.

உங்களுடைய உடல் தனி, என்னுடைய உடல் தனி என்று நீங்கள் சொல்கிறீர்கள். எங்கும் பரவியுள்ள மனித குலம் என்ற கடலிலே நான் ஒரு நீர்ச் சுழல். ஒரு நீர்ச் சுழலானது பெருங் கடலின் ஒரு பகுதி என்பது உண்மை அல்லவா?

ஓடிக்கொண்டிருக்கும் நீர் அருகே நீங்கள் நிற்கிறீர்கள். அந்நீரின் ஒவ்வொரு சிறு துளியும் மாறிக்கொண்டேயிருக்கிறது. என்ருலும், நீங்கள் அதை ஒரு சிறு ஆறு என்கிறீர்கள். நீர் மாறிக்கொண்டே இருக்கிறது என்பது உண்மை தான். என்ருலும், இருகரைகளும் மாருமல் அப்படியே இருக்கின்றன. மனம் மாறுவதே இல்லை; உடலேதான் மாறுகிறது; உடல் அவ்வளவு வேகமாக வளர்கிறது. நான் ஒரு கைக்குழந்தையாய் இருந்தேன்; சிறுவன் ஆனேன்; மனிதன் ஆனேன்; வெகுவிரைவிலே முதுகு கூனி, வயதில் முதிர்ந்த கிழவன் ஆகிவிடுவேன். "உடல் மாறுகிறது; சரி. அதோடு மனமானது மாறவில்லை என்று சொல்கிறீர்களே!" என்று நீங்கள் கேட்கலாம். நான் குழந்தையாய் இருந்த போதும் சிந்தித்துக்கொண்டிருந்தேன். இப்பொழுது அவ்வாறு சிந்திப்பதில் மிகப் பெரியவன் ஆகிவிட்

டேன். ஏனெனில், என் மனமே எண்ணங்களால் ஆன கடலாய் இருக்கிறது.

இயற்கைக்கு அப்பால், எங்கும் பரந்துள்ள மனம் என்பது ஒன்று இருக்கிறது. ஆன்மா என்பது ஓர் அளவை. அது ஒரு சடப்பொருள் அன்று. மனிதன் ஓர் ஆன்மா. 'பூமி ஏன் கீழே விழாமல் அப்படியே நிலைத்து நிற்கிறது?' என்று ஒரு பையன் கேட்டால், எவ்வாறு நாம் பதில் கூறுவோமோ அவ்வாறே, "மரணத்தின் பின் ஆன்மா எங்கே போகிறது?" என்ற கேள்விக்குப் பதில் கூறவேண்டும். இந்த இரண்டு கேள்விகளும் ஒரே தன்மையன. ஏனெனில் ஆன்மா எங்கே போகக்கூடும்?

'சாவே இல்லை' என்று கூறுகிற உங்களை நான் கேட்டுக் கொள்கிறேன், வீட்டுக்குப் போனதும், 'நீங்கள் இறந்து விட்டதாக நீங்கள் எண்ணிப்பார்க்க முயலுங்கள்' என்று. நீங்கள் தனியே பிரிந்து நின்று, செத்துப்போன உங்கள் உடலைத் தொட்டுப்பாருங்கள். அவ்வாறு செய்ய உங்களால் இயலாது. ஏனெனில், உங்கள் உடம்பிலிருந்து நீங்கள் தனியே பிரிந்து நிற்க இயலாது. சாவின்மை என்பது பிரச்சினை அன்று; இறந்த பிறகு ஒருவன் தான் காதலித்து வருகிற பெண்ணைச் சந்திப்பானா என்பதுதான் பிரச்சினை.

நீங்கள் ஆன்மா என்பதை நீங்களே அறிந்துகொள்ள வேண்டும் என்பது சமயத்தின் பெரிய இரகசியமாகும். "நான் ஒரு புழு; நான் ஒரு சூனியன்" என்று அழுது கொண்டு இராதே. ஒரு கவிஞன் சொல்வதுபோல, "நிலையாய் இருக்கும் நிலையும், அறிவும், உண்மையும் நானே" என்பதை நீங்கள் உணர்ந்துகொள்ளுங்கள். "இந்த உலகத்திலுள்ள தீமைகளில் நானும் ஒரு தீமை" என்று அழுது புலம்புவதால் எவனும் எந்த நன்மையையும் செய்ய இயலாது. உங்களுடைய குற்றங்களை நீங்கள் எவ்வளவுக்கு எவ்வளவு குறைத்துக்கொள்கிறீர்களோ, அவ்வளவுக்கு அவ்வளவு குற்றங்குறைகள் குறைந்தவற்றை நீங்கள் புறத்தே காண்பீர்கள்.

ஜனன மரண நியதி

[1900-ஆம் ஆண்டு, மார்ச்சுத் திங்கள், 7-ஆம் நாள் ஓக்லண்டு நகரத்தில் ஆற்றிய சொற்பொழிவைப் பற்றி, **'ஓக்லண்டு டிரிபியூன்'** என்ற பத்திரிகையில் ஆசிரியரது குறிப்புடன் வெளிவந்தது.]

'ஜனன மரண நியதி' என்ற பொருள் பற்றி நேற்று மாலை சுவாமி விவேகானந்தர் ஒரு சொற்பொழிவு ஆற்றினார். "இந்தப் பிறவியையும் மரணத்தையும் ஒழிப்பது எவ்வாறு? —வானுலகத்திற்குப் போவது எவ்வாறு என்பதல்ல, வானுலகத்திற்குப் போய்க்கொண்டிருப்பதைத் தடுப்பது எவ்வாறு? —என்பதே இந்து ஒருவன் தேடிநிற்கிற பொருளாகும்" என்று சுவாமி விவேகானந்தர் மொழிந்தார்.

ஏதொன்றும் தனித்திருக்கவில்லை என்றும் ஒவ்வொரு பொருளும் எக்காலத்தும் முடிவுருது தொடர்ந்து நடந்து கொண்டேயிருக்கும் காரணகாரிய நிகழ்ச்சியின் ஒரு பகுதியாகும் என்றும் அவர் தொடர்ந்து கூறினார். மனிதனைக் காட்டிலும் உயர்ந்த உயிர்கள் இருக்குமானால், அவையும் சட்டதிட்டங்களுக்கு அடங்கியே நடக்கவேண்டும். உயிரிலிருந்து தான் உயிர் தோன்றும்; எண்ணத்திலிருந்து தான் எண்ணம் தோன்றும்; சடப்பொருளிலிருந்து தான் சடப்பொருள் தோன்றும். சடப்பொருளைக் கொண்டு ஒரு பிரபஞ்சத்தைப் படைத்துவிட இயலாது. அது எப்பொழுதும் இருந்துகொண்டேயிருக்கிறது. மனிதர்கள் இயற்கையால் புதியவர்களாகப் படைக்கப்பட்டு, இந்த உலகத்திற்கு வருவார்களானால், எந்தவிதமான எண்ணங்களும் இல்லாமலே அவர்கள் வருவார்கள். நாம் அவ்வாறு ஒருவித எண்ணமும் இல்லாமல் வருவதில்லை. ஆகவே, நாம் புதியவர்களாகப் படைக்கப்பட்டவர்கள் அல்லர் என்பதை அறியலாம். ஒரு சூனியப் பொருளைக் கொண்டு மனித ஆன்மாக்கள் படைக்கப்படுமானால், மீண்டும் அவை சூனியத்திற்கே செல்வதை எவரால் தடுக்க இயலும்? எதிர்காலத்திலே நாம் எப்பொழுதும் வாழ்ந்து கொண்டே இருக்கவேண்டும் என்றால், இறந்த காலத்தி

லும் நாம் எப்பொழுதும் வாழ்ந்து வந்தவர்களாகவே இருக்க வேண்டும்.

ஆன்மாவானது மனமும் அன்று; உடலும் அன்று; இஃது இந்து ஒருவனுடைய நம்பிக்கையாகும். "நானே நான்" என்று சொல்கிற, அழிவில்லாது நிலைத்து நிற்கிற பொருள் எது? அஃது உடல் அன்று; உடல் மாறுவது; மனமும் அன்று; ஏனெனில், அம்மனம் உடலைக்காட்டிலும் மிக வேகமாக மாற்றம் அடைந்துகொண்டே இருக்கிறது; மேலும், அம்மனதிலே சில நிமிடங்கள் கூட எண்ணங்கள் மாருமல் அப்படியே இருப்பதில்லை. நதிக்குக் கரைகள் இருப்பது போல, மாருத ஓர் ஒற்றுமை மனிதனுக்கும் இருக்கவேண்டும். அக் கரைகள் மாறுவதே இல்லை. அவை மாருமல் இருக்கவில்லை என்ருல், தொடர்ந்து மாறிக்கொண்டேயிருக்கும் நதியை நாம் அறியவே இயலாது. உடலுக்கு அப்பால், மனத்திற்கு அப்பால், ஒன்று இருக்கவேண்டும். அதுவே ஆன்மா. அதுவே மனிதர்களை எல்லாம் ஒன்ருகச் செய்கிறது. தலைவனாய் இருக்கிற ஆன்மாவானது மனம் என்ற நுண்ணிய கருவி வாயிலாகவே உடலை இயக்கிக்கொண்டிருக்கிறது. 'ஒருவன் தன் உடலைத் துறந்துவிட்டான்' என்று நாங்கள் இந்தியாவில் சொல்வது வழக்கம்; ஆனுல், 'ஒருவன் தன் உயிரைத் துறந்துவிட்டான்' என்று நீங்கள் சொல்கிறீர்கள். மனிதன் ஓர் ஆன்மா என்றும், அவனுக்கு ஓர் உடல் உண்டு என்றும் இந்துக்கள் நம்புகிருர்கள்; ஆனுல், மேல் நாடுகளில் வசிப்போரே, மனிதன் ஓர் உடல் என்றும், அவனுக்கு ஓர் ஆன்மா உண்டு என்றும் நம்புகின்றனர்.

பலவற்ருல் ஆன எப்பொருளும் அழியும். வேறு எப்பொருளாலும் ஆக்கப்படாத ஒரு தனித்த மூலப்பொருள் ஆன்மா. ஆகவே, அதற்குச் சாவே இல்லை. தன் இயல்பினுலேயே ஆன்மாவானது அழியாது இருக்கவேண்டும். உடல், மனம், ஆன்மா என்ற மூன்றும் நியதி அல்லது விதி என்ற ஒரு சக்கரத்தைச் சுற்றி இயங்கிக்கொண்டேயிருக்கின்றன. அவ்விதியைவிட்டு அவற்றில் எதுவும் விலகிவிட இயலாது. எவ்வாறு விண்மீன்களும் சூரியனும் அவற்றிற்கு உரிய விதிகளை மீறிச்செல்ல இயலாதோ, அவ்வாறே நாமும் இந்த நியதியைவிட்டு மீறிச் செல்ல இயலாது. இவை

எல்லாம் எங்கும் பரவியுள்ள ஒரு விதியாகும். ஒவ்வொரு செயலையும் தொடர்ந்து அப்பொழுதோ, அல்லது காலம் கடந்த பிறகோ ஒரு பயன் ஏற்பட்டே தீரவேண்டும் என்பது கரும விதியாகும்; ஊழ்விதியாகும். எகிப்து நாட்டிலே இறந்துபோன உடல் அழிந்துபோகாது இருக்க அதைப் பதம் செய்து வைத்திருக்கின்றனர். பதம் செய்யப்பட்ட அந்த உடலின் கையில் வைத்திருந்த ஓர் எகிப்திய விதையை ஐயாயிரம் ஆண்டு கழிந்த பிறகு எடுத்து, பூமியில், நட்டதும் அது முளைவிட்டு வளர்ந்தது என்ற உண்மையானது மனிதச் செயல்கள் அழியாது தொடர்ந்துகொண்டே இருக்கும் தன்மையன என்பதற்கு ஓர் உதாரணம் ஆகும். ஒரு செயலானது வேறு செயலை உண்டுபண்ணாமல் ஒரு போதும் அழியாது. நம் செயல்களுக்கு உரிய பயன்கள் நாம் வசிக்கிற இந்த உலகத்திலேயே ஏற்படும் என்றால், காரணகாரியங்களால் ஆன ஒரு வட்டத்தைச் சுற்றி நாம் திரும்பத் திரும்ப வந்துகொண்டே இருக்கவேண்டும் என்பது ஏற்படுகிறது. இதுவே மறுபிறப்பு என்ற கொள்கையாகும். நாம் சட்டத்தின்—விதியின்—அடிமைகள்; வேட்கையின் அடிமைகள்; ஆசையின் அடிமைகள்; வேறு ஆயிரக் கணக்கான பொருள்களுக்கும் அடிமைகள். பிறவியைத் துறந்தால்தான், நாம் அடிமைத் தனத்தைத் துறந்து, சுதந்திரம் பெற முடியும். கடவுள் ஒருவரே சுதந்திரத்தோடு இருப்பவர். கடவுளும் சுதந்திரமும் ஒன்றே.

உண்மையும் நிழலும்

[1900-ஆம் ஆண்டு, மார்ச்சுத் திங்கள், 8-ஆம் நாள் ஒக்லண்டு நகரத்தில் ஆற்றிய சொற்பொழிவு பற்றி 'ஒக்லண்டு டிரிபியூன்' என்ற பத்திரிகையில் அதன் ஆசிரியரது குறிப்புடன் வெளி வந்தது.]

நேற்று மாலை வெண்டிட்டு ஹாலில் இந்து தத்துவ ஞானியாரான சுவாமி விவேகானந்தர் மற்றுமொரு சொற்பொழிவு ஆற்றினர். "உண்மைத் தன்மையும் நிழலும்" என்னும் பொருள் பற்றி அவர் பேசினர். அவர் சொன்னதாவது :

"ஒரு நிலையான தன்மையைப் பெறுவதற்கு—மாருத ஒன்றை அடைவதற்கு—ஆன்மாவானது எப்பொழுதும் முயன்றுகொண்டே இருக்கிறது. அது எப்பொழுதும் திருப்தி அடைவதில்லை. செல்வம், ஆசை விருப்பத்தைப் பூர்த்தி செய்கிற செயல் இவையாவும் மாறிக்கொண்டே இருக்கும். இவற்றை அடைந்த பிறகும் மனிதன் திருப்தி அடைவதில்லை. மாருத ஒன்றன் மீது கொண்டிருக்கும் பெருவேட்கையை எவ்வாறு பூர்த்தி செய்வது என்பதைச் சமயம் என்ற விஞ்ஞானம் நமக்குக் கற்பிக்கிறது. இடம் பொருள் ஏவலால் சமயங்கள் வேறுபட்டிருப்பினும், ஒரு பொருளையே—அதாவது மனிதனது ஆன்மாவிலேதான் உண்மைத் தன்மை இருக்கிறது என்பதையே—அவை போதிக்கின்றன.

"இரண்டு உலகங்கள் இருக்கின்றன என்று வேதாந்தம் போதிக்கின்றது. பொறி புலன்களால் அறிகிற புறஉலகம் ஒன்று; உடலுக்குள்ளே இருக்கிற அகஉலகம் மற்றொன்று. பின்னதை எண்ண உலகம் என்றும் கூறுவர்.

"இந்த வேதாந்தத் தத்துவம் மூன்று அடிப்படையான கருத்துகளைக் கூறுகிறது. அவையே காலம் இடம் காரணம் என்பவை. அவற்றால் ஆனது மாயை. இந்த மாயையே மனித எண்ணம் தோன்றுவதற்கு உரிய அடிப்படையாகும்; மனித எண்ணத்தால் ஆன பொருளன்று இந்த மாயை.

ஜெர்மானியத் தத்துவ ஞானியராகிய **காண்டு** என்பவரும் பிற்காலத்தில் இந்த முடிவினைத் தெரிவித்துள்ளார்.

"எனது உண்மைத் தன்மையும், இயற்கையின் உண்மைத் தன்மையும், கடவுளின் உண்மைத் தன்மையும் ஒன்றே. இவற்றின் இடையே தோன்றும் வேற்றுமை தோற்ற அளவில் மட்டுந்தான் உள்ளது. இந்த வேறுபாட்டை உண்டாக்குவது மாயை. கரையினது அமைப்பானது கடலை ஒரு விரிகுடாவாகவோ, ஜலசந்தியாகவோ வளைகுடாவாகவோ செய்துவிடலாம். ஆனால், உருவத்தை உண்டாக்கும் மாயை நீங்கிவிட்டால், விரிகுடா, ஜலசந்தி, வளைகுடா என்ற வெவ்வேறான உருவங்கள் மறைந்து போகும்; வேறுபாடுகள் நீங்கிவிடும்; எல்லாம் மீண்டும் சமுத்திரமே ஆகிவிடும்."

பிறகு வேதாந்தத் தத்துவத்திலே காணப்படும். உள்ளது சிறத்தல் கொள்கையின் ஆதாரங்களைப் பற்றிச் சுவாமி அவர்கள் பேசினார்கள்.

"மனிதன் ஒரு காலத்தில் தூயவனாய் இருந்தான்; தவறி வீழ்ந்தான்; மீண்டும் தூயவனாவான்" என்ற கருத்துடனே இக்காலச் சமயங்கள் எல்லாம் தொடங்குகின்றன. அவை எங்கிருந்து இக்கருத்தைப் பெறுகின்றன என்பது எனக்குத் தெரியவில்லை. அறிவின் பீடம் ஆன்மா. புறச் சூழ்நிலை ஆன்மாவைத் தூண்டுகிறது. அறிவே, ஆன்மாவின் சக்தியாகும். கோடிக்கணக்கான ஆண்டுகளாக அது உடலை உற்பத்தி செய்துகொண்டேயிருக்கிறது. பிறவி தோறும் ஆன்மா பெறுகிற வெவ்வேறு விதமான உருவங்கள், ஆன்மாவின் வாழ்க்கை வரலாறு என்னும் நூலிலே தொடர்ந்து காணப்படும் அதிகாரங்களாகும். நாம் தொடர்ச்சியாக உடல்களை உண்டாக்கிக்கொண்டேயிருக்கிறோம். இந்தப் பிரபஞ்சமானது விரிந்துகொண்டும் சுருங்கிக்கொண்டும் இருக்கிற நிலையில்—மாறிக்கொண்டிருக்கிற நிலையில்—இருக்கிறது. அடிப்படையிலே ஆன்மா எப்பொழுதும் மாறுவதில்லை என்பதும், மாயை அதனை மாற்றி அமைக்கிறது என்பதும் வேதாந்தத்தின் துணிவாகும். மன எல்லைக்குள் அடங்கிய கடவுளே இயற்கை. இயற்கையின் உள்ளது சிறத்தலே ஆன்மாவின் மாற்றம் ஆகும்.

எல்லாவிதமான உருவங்களையும் கொண்டிருக்கிற உயிர்கள் பெற்றிருக்கிற ஆன்மாவானது அடிப்படையில் ஒரே தன்மையானது. அதன் வெளித்தோற்றத்தை மாற்றி அமைப்பது உடல். மனித குலத்திற்குப் பொதுவாய் இருக்கும் இந்த ஆன்ம ஒற்றுமை ஒழுக்கத்திற்கும் நீதிக்கும் அடிப்படையாய் அமைகிறது. இந்தக் கருத்துப்படி எல்லாரும் ஒருவரே; ஆகவே, ஒரு சகோதரருக்குத் தீங்கு புரிவது தன் ஆன்மாவுக்கே தீங்கு புரிவதாகும்.

"இந்த எல்லையற்ற ஒற்றுமையின் வெளித் தோற்றமே அன்பு. நீங்கள் எந்தத் துவிதக் கொள்கையினால் அன்பினை விளக்க முடியும்? முத்தமிடுவது மனிதனை மனிதன் கொன்று தின்னும் பழக்கத்தினை நினைவூட்டும் அடையாளமாகும் என்று ஐரோப்பியத் தத்துவ ஞானிகளுள் ஒருவர் கூறுகிறார். இவ்வாறு அவர் கூறுவது அவரது விருப்பத்தின் போக்கு எத்தன்மையது என்பதையே காட்டுகிறது. அவரது கருத்து எனக்கு உடன்பாடன்று.

"நாம் எல்லாரும் தேடுவது எது? சுதந்திரம். வாழ்வில் நாம் கொள்ளும் முயற்சியும், மேற்கொள்ளும் போராட்டங்களும் சுதந்திரம் பெறுவதற்கேயாம். எல்லா மனித இனங்களுக்கும், எல்லா உலகங்களுக்கும், எல்லாச் சமயங்களுக்கும் இத்தகைய முயற்சியும் போராட்டமும் பொதுவானவை.

"நாம் கட்டுண்டிருந்தால், நம்மைக் கட்டியவர் யார்? எல்லையற்ற ஒரு பரம்பொருளானது தன்னைத்தானே கட்டிக் கொள்ளுமே தவிர, அதனைக் கட்டிவைக்கும் சக்தி வேறு எதுவுமே இல்லை."

சொற்பொழிவு முடிந்ததும், கேள்வி கேட்கும் வாய்ப்பு அளிக்கப்பட்டது. அக்கேள்விகளுக்குப் பதில் கூறுவதில் சுவாமி விவேகானந்தர் அரைமணி நேரம் செலவிட்டார்.

முக்தி வழி

[1900-ஆம் ஆண்டு, மார்ச்சுத் திங்கள், 12-ஆம் நாள், திங்கட்கிழமையன்று ஒக்லண்டு நகரத்தில் செய்த சொற்பொழிவு பற்றி, '**ஓக்லண்டு என்குய்ரர்**' என்ற பத்திரிகையின் ஆசிரியர் குறிப்புடன் வெளியானது.]

இந்து சமய பிரசாரகராகிய சுவாமி விவேகானந்தர் கருத்துப்படி "முக்தி நெறி" எது என்பது பற்றிக் கேட்பதற்குப் பெருந்திரளான மக்கள் நேற்று மாலை வெண்டிட்டு ஹாலில் நிரம்பி இருந்தார்கள். சுவாமி அவர்கள் தொடர்ந்து ஆற்றிய மூன்று சொற்பொழிவுகளுள் இது கடைசியாகும். அவர் சொன்னதாவது:

'கடவுள் வானுலகத்தில் இருக்கிறார்' என்று ஒருவர் சொல்கிறார். 'அவர் இயற்கையில் வதிகிறார்; எங்கும் இருக்கிறார்' என்று வேறு ஒருவர் உரைக்கின்றார். பெருந்தீங்கு ஏற்படும் சூழ்நிலை ஏற்படுகிற போது, நாம் நோக்கியிருக்கிற புகலிடம் ஒன்றே; வேறு அன்று. வேறு வேறு திட்டங்களை நாம் எல்லாரும் மேற்கொண்டு பணியாற்றி வருகிறோம்; என்றாலும், நம் இறுதி நோக்கம் வெவ்வேறு அன்று.

ஒவ்வொரு பெரிய சமயமும் வழி வகுத்துள்ள சீலங்கள் துறவு, தன்னலமறுத்தல் இவை இரண்டே. நாம் எல்லாரும் உண்மையின் அவசியத்தை ஒப்புக்கொள்கிறோம். அதை நாம் விரும்புகிறோமோ இல்லையோ, உண்மையானது வெளிப்பட்டே தீரவேண்டும் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். ஒருவகையில் நாம் எல்லாரும் அந்த நன்மைக்காக முயன்று வருகிறோம். தடுப்பது எது? அத்தடையை ஏற்படுத்துபவர் நாமே. உங்கள் முன்னோர்கள் அதைப் பேய் என்று வழங்கினார்கள்; ஆனால் நமது பொய்யான தன்மையே அது.

நாம் அடிமை வாழ்வு வாழ்கிறோம்; நாம் அதைவிட்டு வெளியேறினால் சாவோம். ஒருவன் முழு இருட்டில் தொண்ணூறு ஆண்டுகள் வாழ்ந்தான். அதனைவிட்டு

அவனை வெளியேற்றி, சூரிய ஒளி பரவிய இயற்கை வெளிக்குக் கொண்டுவந்த போது, மீண்டும் தன்னைத் தனது இருட்டறைக்குக் கொண்டுபோய் விடுமாறு அவன் வேண்டிக் கொண்டான். நாம் மனிதனைப் போன்று இருக்கிறோம். இந்த வாழ்வைக்காட்டிலும் புதியதும் சுதந்திரம் மிக்கதுமான ஒன்று இருக்கிறது. அத்தகைய வாழ்வின் பொருட்டு நீங்கள் இந்தப் பழைய வாழ்வை விட மறுக்கிறீர்கள்.

உயிர்நாடி போன்ற சமயத்தை அடைவது என்பது மிகவும் அருமையான காரியமாகும். ஒருவன் தனது வேறுபட்ட சமயத்தில் எவ்வளவு சிறியவனாய் இருப்பினும், தான் ஒரு முடிவில்லாத, அழிவில்லாத ஆன்மாவைப் பெற்றிருப்பதாக நினைக்கிறான். என்றாலும் அற்பத்தனமான, தாழ்ந்த, ஏமாற்றுக் கருத்துகளோடு இருக்கிறான். ஒரு நாட்டிலே, சமய பழக்கவழக்கத்தை முழுதும் ஆதாரமாகக்கொண்டே, ஒருவன் பல மனைவியரோடு வாழ்கிறான். இன்னொரு நாட்டிலே, ஒருத்தி பல கணவர்களோடு இருக்கிறாள். அஃதே போன்று சிலர் இரண்டு கடவுளரை வைத்திருக்கின்றனர். மற்றும் சிலர் ஒரே ஒரு கடவுளை வைத்திருக்கின்றனர். வேறு சிலர் ஒரு கடவுளையும் வைத்துக்கொள்ளாதிருக்கின்றனர்.

முக்தியைப் பெறுவதற்குச் சேவையும் அன்பும் தேவை. நீங்கள் ஒரு பொருளை மிகமிக நன்றாகக் கற்றுக்கொள்ளலாம். ஆனால், வேண்டும்சமயத்தில் அதை நினைவுக்குக் கொண்டுவர உங்களால் இயலாது போகிறது. என்றாலும், அது உங்கள் அடிமனத்திலே ஆழ்ந்திருக்கிறது. ஆகவே, நீங்கள் வேலை செய்துகொண்டிருக்கையில்—அவ்வேலை நல்ல வேலையாயினும் சரி, தீய வேலையாயினும் சரி—அதனுடன் உங்கள் எதிர்கால வாழ்வின் போக்கையும் அமைத்துக் கொள்கிறீர்கள். வேலை செய்யவேண்டும் என்ற கருத்துடனே—வேலையை வேலைக்காகவே செய்யவேண்டும் என்ற கருத்துடனே—நீங்கள் உங்கள் வேலையைச் செய்தால், கற்பனை செய்துகொண்ட வானுலகத்திற்கு நீங்கள் போவீர்கள்; அந்த வானுலகத்தைப் பற்றி எப்பொழுதும் நினைத்துக்கொண்டே இருப்பீர்கள்.

உலக வரலாறு என்பது அதனுடைய பெரிய மனிதர்களது வரலாறு அன்று; அதனை ஆட்டிப் படைக்கிற சிறு தெய்வங்களது—தலைவர்களது—வரலாறே ஆகும். சமுத்திர நீரோட்டத்தால் வந்து சேர்கிற துகள்களைக் கொண்டு, சமுத்திரத்திலுள்ள சிறுசிறு தீவுகள் தாமே பெரியனவாகி ஒன்று சேர்ந்து, பெருங்கண்டங்களாவது போன்றது உலக வரலாறு என்பது. ஆகவே, ஒவ்வொரு வீட்டிலும் செய்யப் படுகிற சிறுசிறு தியாகச் செயல்களே உலக வரலாருகின்றன. மனிதன் சமயத்தை ஒப்புக்கொள்கிருன். ஏனெனில், தன்னுடைய முடிவும் தீர்ப்புமே சரி என எண்ணித் தனித்து நிற்க அவன் விரும்பவில்லை. கெட்டதாய் இருப்பதிலிருந்து வெளியேறுவதற்கு அவ்வாறு செய்வதே மிகமிக நல்ல வழியாகும் என்று கருதியே அவன் அச்சமயத்தை ஒப்புக்கொள்கிருன்.

தனது கடவுளை நேசிக்கும் அன்பினைப் பெரியதாகச் செய்துகொள்வதே முக்திக்கு உரிய வழியாகும். “ஜான், உன்னைவிட்டு என்னுல் வாழ முடியாது” என்று உங்கள் மனைவி மொழிகிருள். சிலர் தம் பணத்தை இழப்பதால் அவர்களைப் பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்கு அனுப்ப வேண்டி இருக்கிறது. அவர்கள் பணம் இன்றி வாழ முடியாது என்ற எண்ணமுடையவர்கள். நீங்கள் அவ்வாறு உங்கள் கடவுளை எண்ணுகிறீர்கள்? பணத்தை, நண்பர்களை, தாய் தந்தையர்களை, சகோதரர்களை, சகோதரிகளை, இந்த உலகத்திலுள்ள எல்லாப் பொருள்களையும் நீங்கள் துறந்துவிட்டு, தமது அன்பில்—அருளில்—சிறிது தரும்படி கடவுளை வேண்டிக் கொண்டால், முக்திக்கு உரிய வழியைக் கண்டுபிடித்தவர்கள் ஆவீர்கள்.

இந்திய மக்கள்

[1900-ஆம் ஆண்டு, மார்ச்சுத் திங்கள் 19-ஆம் தேதி திங்கட்கிழமையன்று ஓக்லண்டு நகரில் ஆற்றிய சொற்பொழிவு பற்றி, 'ஓக்லண்டு என்குய்ரர்' என்ற பத்திரிகையில் அதன் ஆசிரியரது குறிப்புடன் வெளிவந்தது.]

புதிய சொற்பொழிவுத் தொடரிலே, இந்திய மக்கள் என்ற பொருள் பற்றி, திங்கட்கிழமை இரவு சுவாமி விவேகானந்தர் ஆற்றிய சொற்பொழிவு மிகவும் கவர்ச்சிமிக்கதாய் இருந்தது. அந்த நாட்டு மக்களைப் பற்றி அவர் சொல்லியவற்றில் அக்கவர்ச்சி இருந்ததோடு, அவர்களது மனப்போக்கு, தவறான கருத்துகள் என்பனவற்றை அவர் கூர்ந்து கவனித்து அவற்றைப் பற்றித் தம் கருத்தையே பெரிதும் வலியுறுத்தாமல் பேசியதிலும் அக்கவர்ச்சி இருந்தது. சுவாமி அவர்கள் கற்றவராயும் புத்திக் கூர்மையுள்ளவராயும் இருந்த போதிலும், அவர் மேல் நாட்டு நாகரிகமே பெரிதெனக் கருதியவர் அல்லர் என்பது நன்கு விளங்கிற்று. குழந்தை விதவைகள், பெண்களைக் கொடுமையாக நடத்துதல், காட்டுமிராண்டித் தனமான வேறு செயல்கள் என்ற முறையில் இந்திய மக்கள் மேல் குற்றஞ்சாட்டி இங்குள்ளவர் பேசிவரும் பேச்சைக் கேட்டு, அவர் மிகவும் மனம் வருந்தினர் என்பது தெரிகிறது. ஆகவே, அப்பேச்சிற்கு எதிராகப் பதில் கூறவேண்டும் என்ற முறையில் அவர் பதில் கூறியுள்ளார் என்பதும் தெரிகிறது.

அவர் தம் பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்தவர்களுக்குத் தம் நாட்டு மக்களின் இனப் பண்புகளைப் பற்றிய கருத்தை வெளியிட்டே தம் பேச்சைத் தொடங்கினர்.

மற்ற ஆசிய நாடுகளைப் போலவே இந்தியாவிலும் அதன் ஒற்றுமைக்குக் காரணமாய் இருப்பது மொழி அன்று; இனம் அன்று; சமயமே. ஐரோப்பாவிலே இனத்தை அடிப்படையாகக் கொண்டே நாடுகள் அமைகின்றன.

ஆனுல், ஆசியாவில், பல்வேறு வகையில் தோன்றியவர்களும், பல்வேறு மொழிகளைப் பேசுபவர்களும், ஒரு சமயத்தைச் சார்ந்தவர்களாய் இருப்பின், அவர்கள் எல்லாரும் ஒன்று சேர்ந்து, தமக்கென ஒரு நாட்டை ஏற்படுத்திக் கொள்கிருர்கள். வட இந்திய மக்கள் நான்கு பெரும்பிரிவுகளாகப் பிரிந்திருக்கின்ருர்கள். தென்னிந்தியாவிலுள்ள மொழிகளோ வட இந்திய மொழிகளுக்கு முழுதும் மாறுபட்டு இருக்கின்றன. ஆகவே, தென்னிந்திய மக்களுக்கும் வட இந்திய மக்களுக்குமிடையே எந்த விதமான இனஒற்றுமையோ உறவுமுறையோ இல்லவே இல்லை. வட இந்திய மக்கள் மிகப் பெரிதாய் விளங்குகிற ஆரிய இனத்தைச் சார்ந்தவர்கள். பின்லண்டு மக்களும், பைரென்னிஸ் நாட்டிலுள்ள பாஸ்கு என்பவர்களும் தவிர மற்ற ஐரோப்பிய மக்கள் எல்லோருமே அந்த ஆரிய இனத்தைச் சார்ந்தவர்கள். செமிட்டியர்களும், பழங்காலத்து எகிப்தியர்களும் எந்த இனத்தைச் சார்ந்தவர்களோ, அந்த இனத்தைச் சார்ந்தவர்களே தென்னிந்திய மக்கள். பிறருடைய மொழிகளைக் கற்றுக்கொள்வதிலுள்ள துன்பத்தை ஓர் உதாரணத்தால் விளக்குவதற்காக, தென்னிந்தியாவிற்குப் போகும் வாய்ப்புத் தமக்கு ஏற்பட்ட போது, அங்குள்ள மக்களில் வடமொழி பேசக்கூடிய சிலரிடம் மட்டும் தவிர, மற்றவர்களோடு அவர் ஆங்கிலத்திலேயே பேசியதாகச் சுவாமி அவர்கள் கூறினுர்கள்.

சொற்பொழிவின் பெரும்பகுதி சாதிமுறை பற்றிய விளக்கத்திற்காகச் செலவிடப்பட்டது. அந்தச் சாதிமுறையிலே தீமை உண்டு என்றும், ஆனுல் அதிலுள்ள நன்மைகளே தீமையைக் காட்டிலும் அதிகம் என்றும் அவர் கூறினுர். சுருங்கக் கூறின், தந்தையின் வேலையை மகனும் தவருது மேற்கொண்டு வந்த பழக்கத்தால், இச்சாதிமுறை ஆதியில் ஏற்பட்டது. நாளடைவில், சமுதாயமானது, மீறிச் செல்ல முடியாத வரம்புகளுள் ஒவ்வொன்றிற்கும் உள்ள பல்வேறு சாதிகளாக—வகுப்புகளாக—பிரிந்து போயிற்று. இச்சாதி முறையானது மக்களைப் பிரித்தது என்ருலும், ஒன்ருகவும் செய்தது; ஏனெனில், ஒரு சாதியைச் சேர்ந்தவர்களில் எவருக்காகவது உதவவேண்டிய அவசியம் ஏற்படும்போது, அச்சாதியைச் சேர்ந்தோர் அனை

வரும் அச்சாதி ஒற்றுமை காரணமாக ஒன்றுபட்டு உதவும் கடமையோடு இருந்தனர். மற்ற நாடுகளில் வசிவோர்கள் சமுதாய முன்னேற்றத்திற்காகவோ, தம் சொந்தப் பதவியின் உயர்வுக்காகவோ கொள்ளும் போராட்டங்களால் வேதனைக்கும் பகைமைக்கும் உள்ளாகின்றனர்கள். அத்தகைய போராட்டங்கள் இந்துக்களுக்கு இல்லை. எவனும் தன் சாதியினைக் கடந்து செல்ல முடியாத நிலையில் இருந்ததால்.

சாதிமுறையிலுள்ள ஒரு பெருங்குறை என்ன என்றால், அது போட்டி மனப்பான்மையை அழித்து விடுகிறது. அரசியல் துறையில் இந்தியா வீழ்ச்சி அடைந்ததற்கும், அயல் இனத்தவர்களால் அது அடிமைப்படுத்தப் பட்டதற்கும் அந்தப் போட்டி மனப்பான்மை இல்லாமையே உண்மைக் காரணம் ஆகும்.

பெரிதும் விவாதிக்கப்பட்ட பொருளாகிய கல்யாணத்தைப்பற்றிப் பேசுகையில், இந்துக்கள் சமுதாய நோக்கம் படைத்தவர்கள் என்றும், எதையும் சமுதாய முறையிலேயே செய்பவர்கள் என்றும், அவர் மொழிந்தார். சமுதாய நன்மையைக் கவனிக்காமல், ஒருவரை ஒருவர் காதலித்துக்கொள்கிற இருவர் செய்துகொள்ளும் திருமண ஏற்பாட்டால் நன்மை எதுவும் இல்லை என்ற கருத்தினர் இந்துக்கள் என்றும், இருவரது நன்மையைக்காட்டிலும் சமுதாயத்தின் நன்மையே பெரிது என்றும் அவர் மொழிந்தார். “நான் ஜென்னி என்ற பெண்ணைக் காதலிக்கிறேன் என்பதும், ஜென்னியும் என்னைக் காதலிக்கிறாள் என்பதும் நாங்கள் இருவரும் திருமணம் புரிந்து கொள்வதற்குச் சரியான காரணம் ஆகாது” என்று சுவாமி அவர்கள் கூறினார்கள்.

இளங் கைம் பெண்களின் நிலைமையானது இங்குக் கூறப்பட்டிருப்பது போல அவ்வளவு மோசமானதன்று என்று அவர் மறுத்தார். பொதுவாக விதவைகளின் நிலைமையானது மிகவும் செல்வாக்குள்ள நிலைமை என்றும், அதற்குக் காரணம் அந்நாட்டுச் சொத்துகளில் ஒரு பெரும் பகுதி விதவைகளிடம் இருப்பதே என்றும் அவர் மொழிந்தார். ஒருவனோ அல்லது ஒருத்தியோ தன்னை ஆண்டவன்

மனைவியை இழந்தவனாகவோ விதவையாகவோ செய்துவிட வேண்டும் என்று பிரார்த்தனை செய்யத் தூண்டும் அளவுக்கு அவர்கள் நிலையானது பொறுமைப் படக்கூடிய வகையில் இருக்கிறது என்ற உண்மையை அவர் எடுத்துக் காட்டினார்.

வாழ்க்கையின் உண்மை நோக்கம் திருமணம் ஒன்றே என்று இருந்தால், இளம் விதவைகளைப் பற்றியும், நிச்சிதார்த்தம் செய்யப்பட்ட சிறுவர்கள் இறந்து போதனதால் விதவைகளானவர்களைப் பற்றியும் வருத்தமுறலாம். ஆனால், கல்யாணம் என்பது உரிமை என்பதைக்காட்டிலும் கடமையாய் இருக்கிறது என்பதும், குழந்தை விதவைகளுக்கு மறுமணம் செய்துகொள்ள உரிமை வழங்க மறுப்பது அவ்வளவு இடர் அன்று என்பதும் இந்து மக்களின் கருத்தாகும்.

மாலைச் சொற்பொழிவு*

[1894-ஆம் ஆண்டு மே மாதம் 15-ஆம் தேதி அமெரிக்க ஐக்கிய நாட்டில் மெஸ்ஸாசுஸெட்ஸ் பகுதியிலுள்ள லாரென்ஸ் நகரத்தில் சுவாமி விவேகானந்தர் நிகழ்த்திய சொற்பொழிவு. "தி ஈவினிங் டிரிப்யூன்" என்ற பத்திரிக்கையில் வெளிவந்தது.]

புகழ்பெற்ற பிராம்மண சந்நியாசியான ஸ்வாமி விவேகானந்தருடைய சொற்பொழிவைக் கேட்க நேற்று மாலை நூல் நிலைய மண்டபத்தில் மக்கள் திரளாகக் குழுமியிருந்தனர். சிகாகோ நகரத்தில் சென்ற கோடையில் நடந்த சர்வமத மகாநாட்டில் ஒரு முக்கிய புருஷராக விளங்கிய விவேகானந்தர் இந்த நாட்டில் சிறிது காலம் தங்கி மக்களின் பழக்கவழக்கங்களை ஆராய்ந்து வருகிறார். சொற்பொழிவு மாதர் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்றது. அது சுவை மிகுந்த புதிய அனுபவமாக இருந்தது. மாதர் சங்கத்தின் தலைவியாகிய மிஸ் வெதர்ப்பீ என்பவர் இந்துமகானைச் சபையோர்க்கு உவகையுடன் அறிமுகப்படுத்துகையில், இந்தியாவின் பழமை பற்றியும், அதன் அதிசயமான சரித்திரம் பற்றியும் இந்து சமூகத்தின் புத்திவன்மை பற்றியும் குறிப்பிட்டார்.

சொற்பெருக்கு நிகழ்த்தியவர் தமது நாட்டிற்கியல்பான ஆடையணிந்திருந்தார்; நல்ல சிவப்பு நிற அங்கி; அதே நிறத்தில் இடுப்பில் கட்டப்பட்ட நீண்ட கச்சை; தலையைச் சுற்றியமைந்த வெண்பட்டுருமாலை; பழுப்பு நிற முகம்; உயர்குலப் பிராமணர்க்குரிய ஆழ்ந்த சிந்தனையைக் காட்டுவதும் கற்பனையுலகில் உலவுவதுமான கரிய கண்கள்; இவ்வாறு அவர் காணப்பட்டார். அவர் தமது வாழ்க்கையை மதத்திற்கே அர்ப்பணம் செய்து பிரம்மசரிய விரதம் பூண்டவர். அவர் தம் ஆங்கிலத் திறமையும், தர்க்க வன்மையும் அவர் சிறந்த கல்விமான் என்பதை தெளிவாக எடுத்துக்காட்டின. மில்டன், டிக்கன்ஸ் போன்ற ஆங்கிலப்

* லாரென்ஸ் நகரில் உள்ள லாரென்ஸ் பொதுமக்கள் நூல் நிலையத்தில் காணப்பெற்றது.

பேராசிரியர்களின் மேற்கோள்களை அவ்வப்போது கையாண்டதிலிருந்து அவருக்கு ஆங்கில இலக்கியத்திலிருந்த மதிப்பு காணப்பட்டது.

அவர் முதலில் இந்து சமூகத்திலுள்ள ஜாதி முறைமையின் பண்புகளைப் பற்றிப் பேசுகையில், அதிலுள்ள கட்டுப்பாடுகள் பண்டைக் காலத்திலிருந்தாற்போல் அவ்வளவு கண்டிப்பாயில்லை யென்றாலும், இப்போதும் எல்லாம் பிறவிப் பரம்பரையை யொட்டியே நடைபெறுவதாய்க் குறிப்பிட்டார். ஜாதிக்கலப்பு முற்றும் தடுக்கப்படா விட்டாலும், கலப்பு மணத்தில் பிறக்கும் குழந்தைகளுக்கு அதனால் சமூகத்தில் இன்னல்கள் ஏற்படுகின்றன. உயர் குலத்தோனாகிய பிராம்மணன் வாழ்க்கையின் முதல் பகுதியை மத நூல்களாகிய வேதங்களைப் பயில்வதிலும், பிற்பகுதியை இறைவனைத் தியானிப்பதிலும் கழிக்கிறான். அவனுடைய குறிக்கோள் தன்னிடமுள்ள மனிதத்தன்மைக்கும் அப்பால் சென்று ஆத்மாவாகவே விளங்க வேண்டும் என்பதாம்.

மேனாட்டுப் பழக்க வழக்கங்களை, அதிலும் முக்கியமாகப் பெண்டிரின் நிலைமையில், தாம் கண்ட குறைகளை, அவர் எடுத்துக்கூறத் தயங்கவில்லை. நாம் பெண்டிரை மனைவியாகச் சிறப்பித்துப் போற்றுகையில், இந்துக்கள் எல்லாப் பெண்டிரையும் தாய்மாராகவே கருதுகின்றனர் என்று கூறினார். அமெரிக்காவில் ஒரு பெண்மணி யௌவனம் கடந்து வனப்பையிழந்து விட்டால், அவள் மதிப்பை யிழந்து விடுகிறாள்; ஆனால் இந்தியாவிலோ, வயதான மாதருக்கு அரசர்களும் விலகி வழிவிடுகின்றனர். அங்கு அவ்வளவு மரியாதை அவர்களுக்குக் காட்டப்படுகிறது. இந்துக்களின் வேதத்தில் மிகவும் அழகிய சில பகுதிகள் பெண்களால் ஆக்கப்பட்டவை என்றும் உலகில் வேறு எந்த வேதத்திலும் பெண்கள் அவ்வாறு இடம் பெறவில்லை யென்றும் அவர் அழுத்தமாகக் கூறினார்.

இந்தியாவில் விதவைகளைக் கொடுமைக்குள்ளாக்குகின்றனர் என்ற பிரசாரம் பொய்யானதென்றும், ஆதாரமற்றதென்றும் காட்ட அவர் வெகுநேரம் பேசினார். பிறநாடுகளி களிலிருந்து செல்லும் கிறிஸ்தவபாதிரிகளின் வசைக்கு

இலக்காகும் ஜனனு விதவைகளைப் பற்றியும் இடையில் குறிப்பிட்டார். விவாகக் கட்டுப்பாடு மிகுந்த கவனத்துடன் காக்கப்பட்டு வருகிறதென்றும், ஒரு பிராம்மணன் தன் உறவில் கலியாணம் செய்துகொள்ளக் கூடாது என்பது சாத்திரம் என்றும் கூறினுர். க்ஷய ரோகத்திற்கோ தீராத வியாதிக்கோ உள்ளானவர்கள் கலியாணம் செய்துகொள்ள அனுமதிக்கப்படுவதில்லை. ஜாதிக்கட்டுப்பாட்டால், ஒருவன் நீரருந்தும் பாத்திரத்தில் மற்றெருவன் நீரருந்தக் கூடாது. இது போன்ற ஒழுக்கங்கள் மத வாழ்க்கையில் இணைந்துவிட்ட போதிலும் இருபத்தெட்டரைக் கோடி மக்கள் வாழும் நாட்டில் தொத்து வியாதிகளைத் தடுப்பதற்கும் உடல் நலத்தைக் காப்பதற்கும் பெரிதும் பயன்படுகின்றன. இந்த நாட்டில் புகைவண்டிகளிலும், வண்டி நிலையங்களிலும் மக்கள் எல்லாரும் கலப்பாக நீரருந்துவதை அவர் வெறுத்தார். இந்தியாவில் ஆதியிலிருந்தே குழந்தைகளுக்கு எல்லா உயிர்களிடத்தும் அன்பு புகட்டப்படுகிறது. இந்தப் பழக்கத்தின் பலம் எவ்வளவென்ருல், ஒரு சிறு குழந்தையும் ஒரு புழுவைக்கூட மிதிக்க அஞ்சி விலகிச் செல்லும். மதவாழ்க்கைக்குப் புறம்பானவர்களென்று கிறிஸ்தவர்களால் கருதப்படும் இம்மக்களிடை பெரிய பெயர் கொண்டதும், கிறிஸ்தவ நாடுகளில் தனது நோக்கம் நிறைவேறப் பெருமல் போவதுமான ஒரு (ஜீவ காருண்ய) சங்கத்திற்கு அவசியமில்லாமலிருப்பதும் எண்ணிப்பார்க்க வேண்டிய அதிசயம். ஒரு வீட்டு வாயிலில் ஒருவன் அதிதியாக வந்து 'நான் பசித்திருக்கிறேன்' என்ருல் அவன் தெய்வமாகவே இந்துவால் போற்றப்படுவான். அன்புடனும் ஆதரவுடனும் வரவேற்கப்பட்டு வீட்டுக்காரனுக்கும் வீட்டுக்காரிக்கும் முன்பே உணவளிக்கப்படுவான்.

தமது நாட்டின் ஏழ்மை நிலையைக் குறித்துப் பேச்சாளர் மிகவும் வருந்தினுர். உயர்குலத்தோர். சௌக்கியமாய் வாழ்ந்தபோதிலும், கோடானகோடி மக்களுக்கு உலர்ந்த இலைகளும் பூக்களுமே உணவாகின்றன. அவர்கள் மானிடர் எனவும் கூறிக்கொள்ளத் தகுதியில்லாதபடி வாழ்க்கைத் தரம் அவ்வளவு தாழ்ந்து, உலகம் கண்டு இரங்கும்படியிருக்கின்றனர். சென்ற நூறு வருஷங்களாகக் கிறிஸ்தவர்களும் முகம்மதியர்களும் அவர்கள் மேல் பொழியும் மத

உபதேசங்களைக் காட்டிலும் அவர்களுக்கு உணவும் கல்வியும் கொடுப்பது சிறப்பாயிருக்கும் என்று அவர் வற்புறுத்திக் கூறினார். எண்ணங்களை மறைப்பதற்குச் சொற்களைப் பயன்படுத்தும் இக்காலத்தில் அதிசயமான இந்து சமூகத்தின் எளிய வாழ்க்கை பற்றியும் புராதனப்பழக்கங்கள் பற்றியும் ஒளிக்காமல் மறைக்காமல் அவர் பேசியதில் புதுமையின் பொலிவிருந்தது. பொதுவாக அந்நாட்டு வாலிபர்களும் யுவதிகளும் காதல் விளையாட்டுகளைப் புரிவது வழக்கமில்லையென்றும், யுவதிகள் பொதுஸ்தலங்களில் வெட்கமின்றித் தைரியமாய்ச் சென்று கணவன் வேட்டை யாடுவதில்லையென்றும் கூறினார். இதையெல்லாம் கேட்ட போது இந்தப் புகழ்பெற்ற சுதந்திர நாட்டில் வாழ்பவனுக்கு எதுவோ தன்னகத்தில் சற்று அழுகியிருப்பதுபோல் தோன்றியது. ஒரு கேடயத்தின் இருபக்கங்களையும் பார்த்தால்தான் பட்சபாதமில்லாத முடிவுக்குவர இயலுமாதலால் பிரசங்கத்தைக் கேட்டவர்களில் பலர் தங்களுக்குப் பிரியமான அமெரிக்கப் பழக்கங்களைத் தங்கள் மதத்திற்குப் புறம்பான ஒரு இந்து குறை கூறுவதை நினைந்து மனதில் போராட்டத்துடன் சென்றனர்.

சொற்பொழிவு மிகவும் கவர்ச்சியுடையதாயிருந்ததால், வந்திருந்தவர் எல்லாரும் அதை ஆழ்ந்த கவனத்துடன் கேட்டார்கள். முடிவில் பலர் சிந்தனையாளரான சுவாமிக்கு அறிமுகப்படுத்தப் பெற்றனர். அவர் சமூக வழக்கங்களையொட்டி உபசாரத்திலோ, அர்த்தமில்லாத பேச்சிலோ, வார்த்தைகளை வீணாக்கவில்லை. டாக்டர் பௌகர் என்பவரிடம் மட்டும் அவர் மிகுந்த கவனம் செலுத்தினார். இந்த அமெரிக்க குடியரசு தோன்றுவதற்கு முன்பு பல நூற்றாண்டுகளைக் கண்டிருந்த அதிசய நாட்டை அங்கு கூடியிருந்தவர்களுள் நேரில் பார்த்திருந்தவர் அவர் ஒருவர்தான்.

வினாவும் விடையும்

1

விவாதம்

[1896-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 25-ஆம் தேதி ஹார்வர்ட் பல்கலைக் கழக பட்டதாரிகள் தத்துவ ஞான சங்கத்தில் சுவாமியவர்கள் நிகழ்த்தியதொரு சொற்பொழிவின் பின் நடைபெற்ற விவாதம்.]

விஞ: இப்போது இந்தியாவில் எந்த அளவில் தத்துவ ஞான ஆராய்ச்சி நடைபெற்று வருகிறது என்பது பற்றிச் சிறிது அறிய விரும்புகிறேன். எந்த அளவில் இந்தப் பிரச்னைகள் ஆராயப்படுகின்றன?

விடை: நான் முன்னே சொல்லியதுபோல் இந்திய மக்களில் பெரும்பாலோர் த்வைதிகளாவர். சிறுபான்மையரே அத்வைதிகளாவர். ஆராய்ச்சியின் முக்கியப் பிரச்னைகள் ஆன்மாவையும் மாயையையும் பற்றியனவே. உங்கள் நாட்டுக்கு நான் வந்தபோது, ஒரு விஷயம் தெரிந்துகொண்டேன். இன்று நடை முறையிலிருக்கும் அரசியலைப் பற்றித் தொழிலாளிகள் நன்கு அறிந்துகொண்டிருந்தனர் என்பதுதான் அது. ஆனல் அவர்களை, 'மதம் என்றுலென்ன? ஒவ்வொரு சமய வகுப்பினுடைய கொள்கைகள் என்ன?' என்று கேட்டதும் அவர்கள், 'எங்களுக்குத் தெரியாது, நாங்கள் கோவிலுக்கு மட்டும்தான் போவோம்' என்றனர். இந்தியாவில் ஒரு குடியானவனை நோக்கி 'உன்னை ஆண்டு வருபவன் யார்?' என்று கேட்டால், 'எனக்குத் தெரியாது. நான் வரி மட்டும் கட்டி வருகிறேன்!' என்பான். ஆனல், 'உன் மதம் என்ன?' என்று கேட்டால், உடனே, 'நான் ஒரு த்வைதி' என்று சொல்லி, மாயை பற்றியும் ஆன்மா பற்றியும் விரிவாகச் சொல்வான். அவனுக்கு எழுதப் படிக்கத் தெரியாது. ஆனல் இத் தத்துவங்களைச் சந்நியாசிகளிடமிருந்து தெரிந்துகொண்டிருக்கிறன். இது பற்றி விவாதிப்பதில் ஆர்வமுடையவன். அன்றுட

வேலை முடிந்ததும் விவசாயிகள் மரத்தடியில் உட்கார்ந்து இப்பிரச்னைகளை விவாதிப்பார்கள்.

விஞ: ஹிந்துக்களிடையே வைதிகம் என்பதன் கருத்து என்ன ?

விடை: நவீனமான இந்த நாளில் ஜாதிவிதிகளையனுசரிப்பதே வைதிகம் என்று கருதப்படுகிறது. அதாவது சாப்பிடுவது, பானம் அருந்துவது, விவாகம் செய்வது ஆகியவை பற்றிய விதிகளை அனுசரிப்பதேயாகும். இதைத் தவிர, வேறு வகையில் அவன் இஷ்டப்படி ஒருவன் எந்தக் கொள்கையையும் நம்பலாம். இந்தியாவில் எந்தக் காலத்திலும் ஒரே மாதிரியான மதசாகை வகுக்கப்படவில்லை. ஆகவே வைதிக முறை இது என்று வகுத்துச் சொல்ல எவ்வித ஸ்தாபனமும் இருக்கவில்லை. பொதுவில் வேதங்களை ஆதாரமாய்க் கொண்டவர்கள் வைதிகர்கள் என்று சொல்லப்பட்டது. உண்மையில் த்வைதத்தை நம்புகிறவர் அநேகர் வேதங்களைக் காட்டிலும் புராணங்களையே பெரிதும் நம்புகிறவர்களாவர்.

விஞ: உள்ளங் கலங்காதிருத்தல் என்னும் கிரேக்க ச்டாயிக் தத்துவத்தை ஆக்குவதில் ஹிந்து தத்துவ சாஸ்திரம் எடுத்துக் கொண்ட பங்கு எவ்வளவு ?

விடை: அலெக்ஸாண்டிரியர் மூலமாய்ச் ச்டாயிக் முறை இந்து தத்துவ சாஸ்திரத்தினுல் ஓரளவு இயக்கப் பெற்றிருக்கலாம். பிதகோரஸ் வகுத்த தத்துவ சாஸ்திரம் சாங்கிய தத்துவத்தால் இயக்கப்பட்டதாக ஓரளவு சந்தேகிக்கப் படுகிறது. இது எப்படி இருந்தாலும் சரி. முதல் தடவை வேதங்களை விவேக முறையில் பொருந்தும்படி செய்தது சாங்கிய தத்துவ சாஸ்திரமாகும். வேதங்களிலேயே கபிலரைப் பற்றிச் சொல்லியிருக்கிறது:—

ऋषिं कपिलं प्रसूतं यस्तमग्रे

"ஞானத்தாலே முதலாவதாகப் பிறந்த மகரிஷி கபிலரைத் தாங்குகிற" — என்று.

வினா: மேலை நாட்டு விஞ்ஞானத்திற்கும் இதற்கும் உள்ள முரண் யாது?

விடை: முரண் எதுவுமில்லை. அதனோடு ஒத்தபடியேதானிருக்கிறோம். பரிணாமம், ஆகாயம், பிராணன் ஆகியவற்றைப் பற்றிய கோட்பாடு உங்களுடைய நவீன தத்துவ சாஸ்திரங்களிலிருப்பது போலேதான் இருக்கிறது. நீங்கள் ஒப்புக்கொண்டிருக்கும் பரிணாமம் எங்களுடைய யோகிகளிடமும் சாங்கிய தத்துவ முறையிலும் இருக்கிறது. உதாரணமாக ஓர் உயிரினம் மற்றோர் இனமாக மாறுதலை இயற்கையின் உள் நிறைவு என்றார் பதஞ்சலி.

जात्यन्तरपरिणामः प्रकृत्योपुरात्

வேறுபாடு எங்கே என்றால் அவருடைய வியாக்கியானத்தில்தான். குடியானவன் அருகிலுள்ள கால்வாய்களிலிருந்து வயலுக்குத் தண்ணீர் பாய்ச்ச வேண்டுமானால் வயலுக்கு வரும் ஓடையைத் திறந்து விட்டால் போதுமானது. அதுபோலவே ஒவ்வொரு மனிதனும் ஈச்வரனாகவே இருக்கிறான். அவனை அடைத்திருப்பது கதவிலிருக்கும் கம்பிகளும் தாழ்பாள்களும் பல்வகைச் சூழ்நிலைகளுமே.

निमित्तमप्रयोजकं प्रकृतीनां वरणभेदस्तु ततः क्षेत्रिकवत्

இவற்றை அகற்றியதும் அவன் வெளியே வந்து தன் இயல்பை விளக்கிக் கொள்கிறான். பிராணியில் மனித ஆன்மா தடைபட்டிருக்கிறது. நல்ல வாய்ப்பு ஏற்பட்டவுடன் மனித ஆத்மா மனிதனைப் பிரகாசிக்கிறது. இதற்கு மேலும் தக்க வாய்ப்பு ஏற்பட்டதும் மனிதனிலிருக்கும் பரமான்மா விளங்குகிறார். ஆகவே இந்தப் புதிய கோட்பாடுகளில் வாதிப்பதற்கு எதுவுமில்லை. உதாரணமாக சாங்கிய முறையிலுள்ள தோற்றக் கோட்பாடு நவீன உடலியலிலிருந்து அதிகம் வேறுபட்டதன்று.

வினா: ஆனால் உங்கள் வழியே வேறாக விருக்கிறதே?

விடை: ஆமாம். ஞானத்தை அடையும் வழி உள்ளத்தின் சக்திகளையெல்லாம் ஒரு முனைப் படுத்துவதே

என்று நாங்கள் கருதுகிறேம். புற விஞ்ஞானத்தில் உள்ளத்தை ஒரு முனைப் படுத்துவது வெளியிலுள்ள ஏதோபொருளில் அதைப் போடுவது போலாகும். அக விஞ்ஞானத்தில் ஒருவனுடைய ஆன்மாவோடு அதை இழுத்துக் கொள்வதாகும். இவ்வகை உள நிலையை யோகமென்று சொல்வோம்.

வினா: இந்த யோக நிலையில் (உள்ளத்தை அடக்கிய நிலையில்) இந்த அடிப்படை விதிகளின் உண்மை தெளிவாகிறதா?

விடை: யோகிகள் எவ்வளவோ சக்திகளைப் பெறுவதாய்ச் சொல்கின்றனர். உள்ளத்தை நிலையாக்கிக் கொள்வதால் பிரபஞ்ச உண்மைகள் அனைத்தும் (வெளி உண்மைகளும் உள் உண்மைகளும்) மனதிற்கு விளக்கமாகின்றன.

வினா: அத்வைதிகள் பிரபஞ்ச அமைப்பைப் பற்றி என்ன சொல்லுகிறார்கள்?

விடை: தோற்றமளிக்கும் இந்த உலகில் இந்தப் பிரபஞ்ச அமைப்பும் பிறவும் மாயை என்றே அத்வைதி கூறுவான் உண்மையில் இவை இல்லை. நாம் சுதந்திரமில்லாமல் கட்டுப்பட்டிருக்கும் காலமெல்லாம் இந்தத் தோற்றங்கள் ஏற்பட்டவாறேயிருக்கும். இந்தத் தோற்றங்களுக்கிடையே காணப்படுவன எல்லாம் ஒரு தனிப்பட்ட ஒழுங்கு முறையில் காணப்படும். இதைத் தாண்டியதும் விதியும் முறையும் கிடையா. அங்கு சுதந்திரம் தான்.

வினா: அத்வைதம் த்வைதத்திற்கு எதிரானதா?

விடை: உபநிஷத்துக்கள் ஒழுங்கு படுத்தப்படாததால் தத்துவ ஞானிகள் அதிலிருந்து வாக்கியங்களை விருப்பப்படி எடுத்துக் கொண்டு ஒரு தனி தத்துவ முறையாக்கிக் கொண்டார்கள். உபநிஷத்துக்களை ஒன்ருகவே எடுத்துக் கொள்ள வேண்டும். இல்லாவிடில் அவை ஆதாரமற்றவையாகும். எனினும் உபநிஷத்துக்களில் எல்லா வித தத்துவ முறை

களையும் காண்கிறோம். அத்வைதம் த்வைதத்துக்கு எதிரானதன்று என்பதே எங்கள் பதில். த்வைதம் என்பது மூன்றுபடிகளில் ஒன்றாகும். சமயப் பயிற்சி மூன்று படிகளையுடையது. முதல் படி த்வைதம். பிறகு மனிதன் அதற்கு மேலுள்ள படியை அடைகிறான். அதாவது பகுதி அத்வைதம். கடைசியாக அவன் பிரபஞ்சத்தோடொன்று என்று உணர்கிறான். ஆகவே இம்மூன்றும் ஒன்றோடொன்று எதிரானவையன்று. ஒன்றை யொன்று நிறை வேற்றுகிறவையாகும்.

வினா: மாயை அல்லது அஞ்ஞானம் இருக்கக்காரணம் என்ன?

விடை: காரண நிலைக்கு அப்பால் 'ஏன்' என்ற கேள்வி எழாது. மாய நிலையில்தான் அதைக்கேட்க முடியும். இந்தக் கேள்வியைத் தர்க்க முறையில் நியமனம் பண்ணிய பிறகுதான் விடைகூற முடியும். அதற்கு முன் விடைகூற உரிமையில்லை.

வினா: ஸகுண பிரம்மம் மாயையைச் சேர்ந்ததா?

விடை: ஆமாம்; ஆனால் நிர்குணப் பிரம்மத்தை மாயை மூலம் பார்ப்பதுதான் ஸகுணப் பிரம்மம். இயற்கையின் ஆதிக்கத்திலிருக்கும் பரமான்மா ஜீவாத்மா என்று சொல்லப்படும். இயற்கையை ஆண்டு வரும் ஆன்மாவே பரமான்மாவாகும். அல்லது ஸகுணப் பிரம்மம். ஒருவன் இங்கிருந்து சூரியனைக் காணச் செல்லுகிறான் என்று எண்ணிக் கொள்வோம். முதலில் அவனுக்கு சூரியன் ஒரு சிறு சூரியனாகவே தோன்றும். மேலும் செல்லும்போது சூரியன் பெரிதாகிக்கொண்டே போகும். கடைசியில் உண்மையான சூரிய உருவம் காணப்படும். சூரியனைக் காணும் முயற்சியில் முன்னேற்றம் படிப்படியாக ஏற்படும் போது வேறு வேறு சூரியனைக் காண்பான். ஆனால் ஒரே ஒரு சூரியனைத்தான் அவன் காண்கிறான் என்பதை நாம் அறிவோம். அது போலவே பரிபூரணப் பொருளின் தோற்றங்களே இவை. அதன்படி இந்தத் தோற்றங்களும்

உண்மையே. போலித் தோற்றமல்ல. அவை கீழ் நிலைகள் என்று மட்டும்தான் சொல்லப்படும்.

வினா : பரிபூரணமான பொருளை அறிய எந்தத் தனிப்பட்ட முறைகளைக் கையாள வேண்டும்? கையாளப் படும் முறைகள் எவை?

விடை : இரு முறைகள் உள்ளன. ஒன்று பிரத்தியக்ஷ வழி. மற்றொன்று எதிர்மறை வழி. பிரத்தியக்ஷ முறைப்படி பிரபஞ்சம் முழுதும் ஒழுகுவது — அதாவது அன்பேயாகும். இந்த அன்பு வட்டத்தை எல்லையற்ற அளவு பெரிதாக்கிக் கொண்டே போனால் அகிலத்தையும் ஒன்றுக்கும் அன்பை அடையலாம். இரண்டாவது முறை, "இதில்லை", "இதில்லை" என்பதாகும். (நேதி, நேதி) உள்ளம் வெளியாக்க முயலும் ஒவ்வொரு அலையையும் தடுத்துத் தடுத்துக் கடைசியாக உள்ளமே அழிந்தது போலாகும். அப்பொழுது சத்து விளங்கும். அதைத்தான் நாம் சமாதி அல்லது உயர் நனவு என்கிறோம்.

வினா : அது அகப்பொருளைப் புறப்பொருளோடு ஐக்கியமாக்குவதாகுமல்லவா?

விடை : அகப்பொருளைப் புறப்பொருளோடு ஐக்கியமாக்குவதன்று. புறப்பொருளை அகப்பொருளோடு ஐக்கியமாக்குவதாகும். உண்மையில் இந்த உலகம் அழிகிறது. நான் இருக்கிறேன். நான் மட்டுமே இருக்கிறேன்.

வினா : எங்களுள் (ஜெர்மெனியில்) தத்துவஞானியர் சிலர் இந்திய பக்தி மார்க்க முறை மேற்கத்தியருடைய தொடர்பால் ஏற்பட்டு இருக்கலாம் என்று நினைக்கின்றனர்.

விடை : நான் அதிலொருபங்கும் எடுத்துக்கொள்ளவில்லை. அந்த அபிப்ராயம் நிலைத்திருக்கக் கூடியதன்று. இந்திய பக்தி என்பது மேற்கத்திய பக்தியைப் போன்றதல்ல. எங்களுடைய கொள்கைப்படி

முக்கியக் கருத்து பயம் என்ற சிந்தனையே கிடையாது என்பதுதான். எப்பொழுதும் அன்பே தெய்வம் என்பதைத்தான் ஏற்கிறோம். பயத்தினால் வழிபட முடியாது, அன்பாலே தான். தொடக்கம் முதல் முடிவு வரை அன்பேதான். இரண்டாவதாக, இந்த நினைப்பிற்கு அவசியமில்லை. உபநிஷத்துக்களில் மிகப் பழமையான பக்தியைப் பற்றிச் சொல்லியிருக்கிறது. உபநிஷத்துக்கள் கிறிஸ்தவ விவிலியத்திற்கும் முன்னேயே இயற்றப் பெற்றவை. பக்தியின் ஆரம்பத்தை வேத கீதங்களிலே (ஸமஹிதி) காணலாம். பக்தி என்ற சொல் மேற்கத்திய சொல் அல்ல. சிரத்தையிலிருந்து உற்பத்தியானது.

வினா: கிறிஸ்தவ மதத்தைப் பற்றி இந்திய அபிப்பிராயம் என்ன ?

விடை: கிறிஸ்தவ மதம் சிறந்ததொன்றேயாகும். வேதாந்தம் எல்லா மதங்களையும் ஒப்புக்கொள்ளக் கூடியது. எங்களுக்கு ஒரு தனி வழி இருக்கிறது. எனக்கு ஒரு குழந்தை இருப்பதாய் வைத்துக்கொள்வோம். அவனுக்கு ஒரு மதத்தையும் கற்றுக் கொடுக்கக் கூடாது. அவனுக்கு பிராணாயாமம் கற்றுக் கொடுக்கவேண்டும்—அதாவது மனதைக் கட்டுப் படுத்தும் முறை — ஒரு பிரார்த்தனை மந்திரம், உங்களுடைய பிரார்த்தனை மாதிரியல்ல; இவ்வாறு கும். ‘இந்தப் பிரபஞ்சத்தையெல்லாம் உண்டு பண்ணின பகவானைத் தியானிக்கிறேன்; அவர் என் மனத்தைத் தூய்மை செய்யட்டும்’ (மனத்தைத் தெளியச் செய்யட்டும்.) இந்த வழியில் அவனுக்கு போதனை கொடுக்கப்படும். பிறகு அவன் பல்வகைத் தத்துவ ஞானிகளிடமும் உபாத்தியாயர்களிடமும் பாடங்கள் கற்றுக்கொள்வான். தனக்குத் தகுதியான ஒரு உபாத்தியாயரைப் பொறுக்கிக்கொள்வான். இவர் அவனுக்குக் குருவாய் விடுவார். அவன் சிஷ்யனுவான். அவன் குருவிடம் சொல்லுவான்: ‘நீங்கள் விளக்கும்

இவ்வகைத் தத்துவம்தான் உயர்ந்தது. அதை எனக்குக் கற்றுக்கொடுங்கள்.' எங்களுடைய அடிப்படை அபிப்ராயப்படி ஒருவனுடைய சமய முறையும் மற்றொருவனுடைய சமய முறையும் ஒன்ருகா. ஒவ்வொருவனுக்கும் தனி வழி உண்டு. என் பெண்ணுக்கு ஒரு வழி, பிள்ளைக்கு ஒரு வழி, எனக்கு ஒரு வழி என்று ஒவ்வொருவனுக்கும் இஷ்டமான வழி உண்டு. அதை நாம் அனுசரித்து வருகிருேம். அது எனக்கும் என்னுடைய உபாத்தியாயருக்கும் தனியானது. இதைப் பற்றி ஒருவருக்கொருவர் சண்டைபோட முடியாது. இதை நான் பிறருக்குச் சொல்வதில் பயனில்லை, ஒவ்வொருவனும் அவனுக்குப் பொருத்தமான வழியைத் தேடிச் செல்லவேண்டும். பொதுவாய் ஏற்படக் கூடிய தத்துவ சாஸ்திரமும் பொதுவிலே ஏற்படக் கூடிய சமய முறையும்தான் எல்லாருக்கும் கற்றுக்கொடுக்கப்படும். ஒரு வேடிக்கையான உதாரணம் சொல்லலாம். ஒற்றைக்காலில் நிற்பது எனக்கு நலம் செய்யும். இதைத்தான் எல்லாரும் செய்யவேண்டுமென்று சொன்னுல் அது எவ்வளவு வேடிக்கையாயிருக்கும்! ஆனுல் எனக்கு மட்டும் அது சரியாயிருக்கலாம். நான் ஒரு த்வைதியாயிருக்கலாம்; என் மனைவி அத்வைதியாயிருக்கலாம்; எனக்கு, ஒரு பிள்ளை கிறிஸ்துவைத் தொழலாம்; வேருெருவன் புத்தபிரானைத் தொழலாம்; ஒருவன் முகமதைத் தொழலாம். ஆனுல், ஜாதி விதிகளை மட்டும் இவர்கள் அனுசரித்தாக வேண்டும். சமய விஷயம் அவனிஷ்டமே.

வினு : ஹிந்துக்கள் அனைவரும் ஜாதிவகுப்பை நம்புகிருர்களா?

விடை : கட்டாயமாக அனுசரித்தாக வேண்டும். அவர்கள் நம்பாமலிருக்கலாம். ஆனுல் அனுசரித்தே தீர வேண்டும்.

வினு : இந்தப் பிராணுயாமமும் தியானப் பழக்கமும் எல்லோராலும் பழக்கிக் கொள்ளப் படுகின்றனவா?

விடை : ஆமாம்; சிலர் மட்டும் ஓரளவு கொஞ்சமாகப் பழகிக்கொள்கின்றனர். மத சம்பந்தமாக எவ்வளவு அனுசரித்தாக வேண்டுமோ அவ்வளவு அனுசரிக்கின்றனர். இந்தியாவிலுள்ள கோவில்கள் இங்குள்ள கிறிஸ்துவ ஆலயங்கள் போலல்ல. இவையாவும் நாளை மறைந்து போகலாம்; ஒருவரும் அதைப்பற்றிக் கவலைப்படமாட்டார்கள். சுவர்க்கத்திற்குச் செல்ல வேண்டுமென்று விரும்புகிறவன் கோவிலைக் கட்டுவான்; அல்லது பிள்ளை கிடைக்க வேண்டுமென்று கட்டுவான்; இம்மாதிரி ஏதாவது ஒரு எண்ணத்தைக் கொண்டு ஒரு பெரிய கோவிலைக் கட்டி அதில் பூசாரிகளையும் நியமிப்பான். நான் கோவிலுக்குச் செல்ல வேண்டியதில்லை. என் வழிபாடெல்லாம் வீட்டிலேயே நடைபெறும். ஒவ்வொரு வீட்டிலும் பூஜைக்கென்று அறை ஏற்பட்டிருக்கும். அதற்கு பூஜையறை என்று பெயர். பிரம்மோபதேசமான பிறகு குழந்தையின் முதல் கடமை ஸ்னனம் செய்து வழிபடுவதேயாகும். அந்த வழிபாட்டின் முக்கிய அமிசம் பிராணுயாமமும், தியானமும், பகவந் நாமத்தை உச்சரிப்பதுமாகும். வேருென்று உடலை நேர்மையாக வைத்துக் கொள்வதாகும். உடலை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ளும் சக்தி மனதுக்கு உண்டு என்று நாங்கள் நம்புகிருேம். இதைச் செய்த பிறகு வேருெருவன் அந்த இடத்திற்கு வந்து உட்காருவான். ஒவ்வொருவரும் இந்த பிராணுயாமத்தையும் தியானத்தையும் மௌனமாகவே செய்வர். சிலவேளை தியான அறையில் மூன்று அல்லது நான்கு பேர்கள் இருப்பார்கள். ஆனுல் ஒவ்வொருவரும் தனி முறையைக் கைப்பற்றியவராவர். இந்த வழிபாடு தினமும் இரண்டு முறையாவது நடைபெற வேண்டும்.

வினு : இந்த ஐக்கியபாவம் உண்மையில் அடையக் கூடியதா? அல்லது லக்ஷியந்தானு?

விடை : அடைவது சாத்தியமென்று நாங்கள் சொல்லுகிருேம். அந்த நிலையை நாங்கள் அடைகிருேம்

என்றும் சொல்வோம். அது வெறும் பேச்சாயிருந்தால் அதற்கு மதிப்பில்லை. வேதங்கள் இதையே கூறுகின்றன. இந்த பரமான்மாவை முதலில் செவி கொண்டு கேட்க வேண்டும்; பிறகு வாதித்துத் தெரிந்துகொள்ளவேண்டும்; கடைசியாகத் தியானம் செய்ய வேண்டும். செவி கொண்டு கேட்டதும், அதைப் பற்றி சர்ச்சை செய்துதான் கண்மூடித் தனமாயில்லாமல் அறிவோடு நம்ப முடியும், சர்ச்சை செய்த பிறகு தியானம் செய்தால் பரமான்மாவை நன்கு அறிந்துகொள்ள முடியும். அதுதான் சமயக் கொள்கையாகும். வெறும் நம்பிக்கை மட்டும் சமய உணர்ச்சியாகாது. சமாதிநிலையைத் தான் ஞானம் (சமய உணர்ச்சி) என்போம் நாங்கள்.

வினா : இந்த சமாதி நிலையை அடைந்தவனால் அதைப் பற்றி விளக்க முடியுமா ?

விடை : முடியாது ; ஆனால் அது தரும் பயனை ஆராய்ந்து சொல்ல முடியும். மூடன் உறங்கி எழுந்த பிறகு மூடனாகவேயிருப்பான். முன்னிலும் அதிக மூடனாகவுங்கூடும். வேறொருவன் தியானத்திலிருந்து விட்டு எழும்போது தத்துவ ஞானியாகி விடுகிறான் ; ரிஷியாய் விடுகிறான். மகாத்மாவாகி விடுகிறான். இந்த இரண்டு நிலைக்குமுள்ள வித்தியாசத்தை இது விளக்கும்.

வினா : அந்தப் பேராசிரியர் கேட்ட கேள்வியின் தொடர்பிலே நான் ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன். அதாவது தன்னையே மோக நிலையில் கொண்டு வரும் முறைகள் பற்றி ஆராய்ந்து விளங்கிக் கொண்டவர்களை அறிவீரா ? இந்த முறையை சாதகம் பண்ணியவர் அனேகர் பண்டைய இந்தியாவில் இருந்திருக்கின்றனர். சமீபகாலத்தில் அது பற்றி சொல்லப்பட்டதும் சாதகம் செய்யப்பட்டதும் யாவை? முன்னிருந்த அளவு இக்கால இந்தியாவில் இல்லையென்பது திண்ணம்.

விடை : மேற்கத்திய மக்களாகிய நீங்கள் மோகநிலை என்று சொல்வது உண்மை நிலையில் ஒரு பகுதியேயாகும். நாங்கள் அதைச் சுய மோகஞ் செய்தல் என்போம். 'நீங்கள் இயல்பாக இருப்பதே ஒரு மோகநிலை அதிலிருந்து விடுதலை பெற வேண்டும்' என்பார்கள் ஹிந்துக்கள். "அங்கு சூரியன் பிரகாசிக்க மாட்டான்; சந்திரனும் இல்லை; நட்சத்திரங்களும் இல்லை; மின்னொளியும் விளக்காது, இந்த மனித அக்கினி யின் சக்தியை என்னென்று சொல்வது? அது பிரகாசிக்கவே எல்லாம் பிரகாசிக்கிறது"* அது மோகமாக்குவதல்ல. மோகத்திலிருந்து விடுதலை பெறுவதாகும். இத்தகைய தோற்றங்களை யெல் லாம் உண்மையென்று கருதும் மதங்கள் ஒரு வகை மோகத்தையே பழகிக் கொள்கின்றன. அத்வைதிகள் மட்டுமே இப்படி மோகத்திற்கு வசப்படாமலிருக்கின்றனர். எத்தகைய த்வைதத் திலும் இந்த மோகம் ஏற்படுமென்று ஓரளவு அறி வது அத்வைத வாதியே யாகும். அத்வைதி சொல்லுகிறான்: "வேதங்களையும், சகுணப் பிரம் மத்தையும் பிரபஞ்சத்தையும், உன் உடலையும் உன் மனதையுமே தள்ளி விடு. ஒன்றுமே இல்லாமற் போகட்டும். அப்பொழுதுதான் இந்த மோகத்தை ஒழிக்க முடியும். பேச்சு எட்டாமல் எங்கே உளம் திரும்பிவிடுகிறதோ, அங்கே அந்த சச்சிதானந் தத்தை அறிந்ததும் பயமே போய்விடுகிறது." அது தான் மோகத்திலிருந்து விடுதலை. "எனக்கு பாவம் புண்ணியம் என்பன இல்லை; துயரம், சந்தோஷம் என்பன இல்லை. வேதம், கிரியை முதலியனபற்றிக் கவலையில்லை. நான் அன்னமல்ல; உண்பது மல்ல; உண்பவனுமல்ல; நான் சத்; சித்; ஆனந்தம். பிரம்மமே நான்; பிரம்மமே நான்" எங்களுக்கு மோகத்தைப்பற்றி நன்றாகத் தெரியும். எங்களு டைய உளவியலறிவு தனி. அதை இப்பொழுது தான் மேற்கு நாடுகள் கற்றுக் கொள்ளத் தொடங்கி யிருக்கின்றன. இன்னமும் நன்றாகப் படித்தாக

* கதா உபநிஷத் II ii 15

வில்லை. அப்படிச் சொல்வது எனக்கு வருத்தம் தான். ஆனால் அப்படிச் சொல்லவேண்டியிருக் கிறது.

வினா: சூட்சும சரீரமென்று எதைச் சொல்லுகிறீர்கள்?

விடை: லிங்க சரீரமென்று சொல்வதுதான் சூட்சும சரீரம். இந்த உடல் இறக்கும்போது அது எப்படி வேறொரு சரீரம் எடுத்துக் கொள்ள முடியும்? சக்தி, சடமில் லாமல் இருக்க முடியாது. ஆகவே மெல்லிய பொருளின் ஒரு சிறு பகுதி இருந்து வருகிறது. இதன் உதவியால் உறுப்புக்கள் புதிய உடலை ஆக் கிக் கொள்கின்றன — ஒவ்வொருவனும் அவனு டைய உடலை ஆக்கிக் கொள்கிறான்; உளமே உடலையாக்கிக் கொள்கிறது. நான் ஒரு ரிஷியா னால் என்னுடைய மூளை ரிஷியினுடைய மூளையா கிறது. இந்த ஜன்மாவிலேயே தன் உடலை யோகியு டைய உடலாக்கிக் கொள்ளலாமென்று யோகி கள் கூறுகின்றனர்.

யோகிகள் பல அதிசயமான சக்திகளைக் காண் பிக்கிறார்கள். ஆயிரம் அவுன்சு கோட்பாடும் சரி, ஒரு அவுன்சு செயலாற்றுதலும் சரி. ஆகவே, நான் இத்தகைய அதிசங்கள் செய்யப் பெற்றதைக் காணவில்லை. அதனாலே அவை பொய்யாகத் தான் இருக்குமென்று சொல்ல எனக்கு உரிமை யில்லை. அவர்கள் இயற்றியிருக்கும் நூல்களில் இன்ன இன்ன அப்பியாசங்களைச் செய்தால் மிகவும் அதிசயமான சாதனைகளைச் செய்து முடிக்கலா மென்று சொல்லப்பட்டிருக்கிறது. விடா முயற்சி யால் சில சிறு சோதனைகளைக் குறுகிய காலத்தில் செய்து முடிக்கலாம். இதிலிருந்து இவை பித்த லாட்டமல்லவென்று தெரிந்து கொள்ளலாம். சமய நூல்களில் சொல்லப்பட்டிருக்கும் மிக மிக அதிசய சாதனைகளை விஞ்ஞான முறையில் இந்த யோகியர் விளக்குகின்றனர். ஒவ்வொரு நாட்டு மக்களிடை யேயும் இந்த அதிசய சாதனைகள் குறிக்கப் பெற்று வந்திருக்கின்றன. அவை எவ்வாறு நாடுதோறும்

புகுந்தன. என்பது முக்கிய கேள்வி. இவை யாவும் பொய்யென்றும் அவைகட்குத் தக்க விளக்கம் வேண்டாமென்றும் சொல்கிறவர் பகுத்தறிவுடையவரல்ல; அவை யாவும் பொய்யென்று விளக்க வேண்டும். அவ்வாறு விளக்கிய பிறகு தான் அதைப் பொய்யென்று சொல்ல உரிமை யுண்டு. இதைச் செய்ய வில்லை. யோகிகளைக் கேட்டால் இவை மாய அற்புதச் செயல்களல்ல என்பார்கள்; இன்று கூட அவைகளைச் செய்து முடிக்கலாம் என்பார்கள். இந்தியாவில் பல அதிசயச் செயல்கள் இன்றுகூட நடைபெற்று வருகின்றன. ஆனால் இவைகளில் ஒன்ருவது மாய அற்புதச் செயலல்ல. இவைகளைப் பற்றிய நூல்கள் இருக்கின்றன. மேலும் அந்த ஆராய்ச்சியில் உளவியலுக்கு ஒரு விஞ்ஞான முறை வகுக்கப் பெற்றது என்று மட்டும் ஒப்புக் கொண்டாலும் அதுவே யோகிகளுடைய மதிப்புக்குக் காரணமாகிறது.

வினு: யோகியால் விளக்கக் கூடிய தோற்றங்களை உருவாக்கிக் காண்பிக்க முடியுமா?

விடை: யோகியின் சாஸ்திரத்தில் ஓரளவிற்கு மேல் நம்பிக்கை வேண்டாம். பண்புடைய ஒருவன் சாஸ்திரத்தை ஆராய்ந்து பார்ப்பதில் எவ்வளவு நம்பிக்கை வைப்பானே அவ்வளவு தான் இதில் தேவை. யோகியினுடைய லக்ஷியம் பிரமாதமானது. உளச்சக்தியின் சில கீழ்த்தரமான அதிசயங்களை நான் கண்டிருக்கிறேன். ஆகவே உயர்தர அதிசயச் செயல்கள் சாத்தியமில்லையென்று அவ நம்பிக்கை கொள்வதற்கு எனக்கு உரிமையில்லை. யோகியின் குறிக்கோள் நிரந்தர அமைதி; அன்பு இவற்றை அடைவதற்கு ஸர்வ ஞானமும் சர்வ சக்தியும் வேண்டும். சர்ப்பம் தீண்டப்பெற்ற யோகியை நான் பார்த்திருக்கிறேன். அவர் மயங்கிக் கீழே விழுந்தார். அன்று மாலை மயக்கம் தெளிந்தார். அவரைக் கேட்ட பொழுது, “என்னுடைய அன்பனிட

மிருந்து ஒரு தூதன் வந்தான்.'' என்று தான் சொன்னர். இந்த யோகியிடமிருந்து எல்லா வெறுப்பும், கோபமும், பொருமையும் எரிக்கப்பட்டிருந்தன. ஒன்றுமே அவரை எதிர்மறையாக இயக்க முடியவில்லே. அவர் அனுதியான அன்பின் உருவே. அன்பு செலுத்துவதில் சர்வ சக்தி வாய்ந்தவர். அவர்தான் உண்மையான யோகி. வாழ்க்கையில் இந்த வேற்றுமைத் தோற்றங்கள் இயல்பான நிகழ்ச்சிகளேயாகும். யோகி அடைய விரும்புவது அஃதன்று. ஒவ்வொரு மனிதனும் அடிமை; யோகியைத் தவிர, என்ருர் யோகி. உணவுக்கு அடிமை; காற்றுக்கு, மனேவிக்கு, குழந்தைகட்கு, டாலருக்கு (வெள்ளிக்கு), நாட்டுக்கு, புகழுக்கு அடிமை. இதுபோல ஆயிரம் விஷயங்களில் அடிமையாவான். இந்த பந்தங்களுக்கு வசமாகாதவன்தான் உண்மையான யோகியாவான். "ஒன்றுபட்ட உணர்ச்சியில் உறுதியானவர்களே மாய வாழ்க்கையில் வெற்றி பெற்றவர்கள். கடவுள் நிர்மலமானவர். ஆகவே இவர்கள் பகவானிடமே வசிப்பவர்கள்." (கீதை V 19)

வினு : யோகிகள் ஜாதிக்கு ஏதாவது முக்கியத்துவம் அளித்திருக்கிருர்களா ?

விடை : இல்லே. பரி பக்குவமடையாதவர் தம் பயிற்சிக் கூடமே ஜாதி உணர்ச்சி.

வினு : இந்த சமாதி நிலேக்கும் இந்தியாவின் உஷ்ண நிலேக்கும் ஏதாவது உறவு உண்டா ?

விடை : இல்லே என்றுதான் கருதுகிறேன். இந்தத் தத்துவங்களெல்லாம் கடற்கரை மட்டத்திலிருந்து பதினுயிரம் அடிகளுக்கு உயரே துருவத் தட்ப நிலேயுடைய இமயமலேச் சிகரங்களிலே இருக்கும் பொழுது எழுந்த எண்ணங்களே.

வினு : தட்பமுள்ள நாட்டில் இந்த விஷயமாக வெற்றி பெற முடியுமா ?

விடை : முடியும். இதுதான் உலகில் சாத்தியமானது. நீங்கள் ஒவ்வொருவருமே பிறப்பினுல் வேதாந்திகள். வாழும் ஒவ்வொரு நாளுமே எல்லாவற்றேடும் ஒன்றுபடும் தன்மையை ஒவ்வொரு கணமும் விளக்குகிறீர்கள். ஒவ்வொரு தடவையும் உங்களுடைய உள்ளம் உலக நன்மைக்காக இயங்கும் போது நீங்கள் வேதாந்தியாகிறீர்கள். அது உங்களுக்குத் தெரிவதில்லை. அதுதான் வித்தியாசம். ஒழுக்க முறை அனுசரித்துவருகிறீர்கள். ஆனுல் காரணம் தெரியாது. அறிவுடன் ஒழுக்க முறையை அனுசரிக்கச் செய்வது வேதாந்த தத்துவம். எல்லா மதங்களின் சாரமும் அதுதான்.

வினு : மேற்கத்திய மக்களாகிய எங்களிடையே சமூக உணர்ச்சி குறைவாயிருப்பதால் எங்களை பன்மையுணர்வினர் ஆக்குகிறது என்றும்; கிழக்கு நாடுகளிலுள்ள மக்கள் எங்களைக் காட்டிலும் கருணையுணர்ச்சிக்கு இயங்கக் கூடியவர்கள் என்றும் சொல்ல முடியுமா?

விடை : மேற்கத்திய மக்கள் பெரிதும் கருணையற்றவர்களென்று நான் கருதுகிறேன். கிழக்கத்திய மக்கள் எல்லா உயிர்களிடத்தும் இரக்கமுடையவர். அதற்குக் காரணம் உங்களுடைய நாகரிகம் சமீப காலத்தியது என்பதேயாம். ஒன்றைக் கருணையின் குடைக்கீழ் கொண்டுவருதற்கு நீண்ட காலமாகும். உங்களுக்கு எவ்வளவோ சக்தியிருக்கிறது. உள்ளத்தை அடக்கியாள நீங்கள் போதிய அளவு பழகிக்கொள்ளவில்லை. நீங்கள் சாதுக்களாகவும் குணமுடையவர்களாகவும் மாறுதற்கு வெகுகாலமாகும். கருணையுணர்ச்சியானது இந்தியாவில் ஒருவனுடைய ஒவ்வொரு சொட்டு ரத்தத்திலும் இயங்குகிறது. அரசியல் கற்றுக்கொடுக்க கிராமங்களுக்கு சென்ருல் கிராமமக்கள் அரசியலைப் புரிந்து கொள்ளமாட்டார்கள்; ஆனுல், நான் வேதாந்தத்தைப் பற்றிச் சொல்லப்போனுல், "ஆ! அது நன்ருயிருக்கிறது" என்பார்கள். இன்று கூட

வைராக்கியமும் நிஷ்காம்ய நிலையும் இந்தியாவில் எங்கு பார்த்தாலும் பரவியிருக்கிறது. நாங்கள் மிகவும் சீர் குலைந்திருக்கிறோம் இப்பொழுது; எனினும் அரசர்கள் ராஜ்ஜியங்களைத் துறப்பார்கள். கையில் ஒன்றுமில்லாமல் ஊர் சுற்றுவார்கள்.

ஒரு சில இடங்களில் கையில் ராட்டை ஏந்திய கிராமப் பெண்கள் சொல்வார்கள்: "என்னிடம் துவைதம் பற்றிச் சொல்லவேண்டாம். என்னுடைய சர்க்கா 'சோஹம்' 'சோஹம்' 'நானே அவன் நானே அவன்' என்று சொல்லிக் கொண்டிருக்கிறது. இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கும் போதே கல்சிலை முன் ஏன் வணங்குகிறீர்களென்று இவர்களைக் கேட்டால், உங்கள் விஷயத்தில் மதம் என்றால் கொள்கைதான்; எங்கள் விஷயத்தில் சாதனமாகும் என்பார்கள். இதெல்லாம் மறைந்த பிறகு, நான் உண்மையை மட்டும் பார்த்து நான் வேதாந்தியாவேன் என்பான் ஒருவன். அதுவரை எனக்கும் அறிவில்லாதவனுக்கும் வித்தியாசமில்லை. அதனாலேதான் நான் கோவிலுக்குச் செல்லுகிறேன். மற்றும் சில வகையிலும் வழிபடுகிறேன். ஞானம் வருவதற்காக நான் கேட்டுவிட்டேன். ஆனால் எனக்குத் தெரியவேண்டும். ஞானம் உண்டாகவேண்டும்! "பல்வகை விளக்க முறைகள், பல்வகை வியாக்கியானங்கள்—இவை பண்டிதர்க்கே, விடுதலை தேடுபவர்க்கல்ல." (என்றார் சங்கரர்) இந்த விடுதலை நோக்கி நம்மைக் கொண்டுசெல்வது ஞானமேயாகும்.

வினா : ஆன்மிக சுதந்திரமும் ஜாதி அனுசரிப்பும் மக்களிடையே எப்படி முரணின்றியிருக்கும்?

விடை : இராது. ஜாதி வேற்றுமை ஒழியவேண்டும் என்று அவர்கள் சொல்கிறார்கள். அது நிரந்தரமான நல்ல முறையென்று சொல்லுவதில்லை; ஆனால், நீங்கள் வேறொரு முறை, இதைவிட நல்லதாக வகுத்துக் கொடுத்த பிற்பாடு நாங்கள் . இதை

விட்டு விடுகிறோம். இதற்கு பதில் என்ன கொடுக்கப் போகிறீர்கள்? என்று கேட்கிறார்கள். எங்கு தான் ஜாதியில்லை? உங்கள் கூட்டத்தில் நீங்கள் ஜாதியை உண்டுபண்ண முயன்றுகொண்டிருக்கிறீர்கள். யாராவதொருவன் ஒரு பை டாலர் சம்பாதித்துவிட்டால், உடனே அவன், 'நான் நானூறு பேர்களில் ஒருவன் என்று மார்தட்டிக் கொள்வான். நாங்கள் மட்டும்தான் நிரந்தர ஜாதி வகுப்பைச் செய்துகொண்டோம். மற்றவர்கள் முயலுகிறார்கள், ஆனால் வெற்றி பெறவில்லை. எங்களிடம் அஞ்ஞானமும் வேறு கேடுகளும் எவ்வளவோ இருக்கின்றன. இதோடு உங்களுடைய நாட்டிலிருந்து அஞ்ஞானத்தையும் கெட்ட பழக்கங்களையும் வாங்கிக்கொண்டால் அது பரிகாரமாகுமா? இந்த ஜாதிக் கட்டினாலேயே எங்கள் நாட்டில் முப்பது கோடி மக்களுடைய வயிற்றுக்குச் சோறு கிடைக்கிறது. அது குறையுள்ள நடைமுறைதான்; ஐயமில்லை. ஆனால் இந்த ஜாதி வகுப்பில்லையானால் இன்று ஸம்ஸ்கிருத நூல்களைக் காண முடியாது. ஜாதி முறை அனுசரணையாலேயே சுவர்கள் கட்டப்பட்டன; அவற்றைச் சுற்றி எத்தனையோ ஆக்ரமிப்புகள் பொங்கிவந்து மோதின. ஆனால் சுவர்களைத் தகர்க்க முடியவில்லை. ஜாதியின் உபயோகம் இன்னும் தீரவில்லை. அதனாலே இருந்து வருகிறது. எழுநூறு ஆண்டுகளுக்கு முன்னே இருந்த ஜாதி வகுப்பே இன்று இருந்து வரவில்லை. அதன் மீது ஏற்பட்ட ஒவ்வொரு மோதலும் அதை மேலும் உறுதிப்படுத்தி விட்டன. இந்தியா ஒன்றுதான் வெளியேறி வேறு நாடுகளை ஆக்கிரமிக்கவில்லை என்பதை நீங்கள் அறிவீர்களா? அசோகச் சக்ரவர்த்தி அவருடைய சந்ததிகள் ஒரு ராஜ்யத்தின் மீதும் படையெடுக்க கூடாதென நிபந்தனை இட்டார். எங்கள் நாட்டுக்குப் புதிய விஷயங்களைக் கற்றுக் கொடுக்கவேண்டுமென்று வருகிறவர்கள் எங்களுக்கு உதவி புரியட்டும். எங்களைக் கெடுக்கவேண்டாம். ஏனிந்தப் பல நாடுகள்

ஹிந்துக்கள் மீது படையெடுத்து ஆக்ரமிக்க வேண்டும்? எந்த நாட்டு மக்களுக்காவது கேடு செய்ததுண்டா? அவர்களால் இயன்ற மட்டும் உலகிற்கு நன்மை செய்திருக்கின்றனர். சாஸ்திரங்களையும் சமய முறைகளையும் கொடுத்திருக்கின்றனர். காட்டுமிராண்டி ஜனங்களை நாகரிகமடையச் செய்திருக்கின்றனர். அதற்கு இதுதான் உபகாரமா? கொலையும் கொடுங்கோலுமா? அஞ்ஞானப் போக்கிரிகள் என்று அழைக்கப்படுவதா? மேற்கத்திய மக்கள் இந்தியாவைப்பற்றி எழுதியுள்ள நூல்களையும், யாத்ரிகர் இங்கு(இந்தியாவில்) சென்று எழுதும் கதைகளையும் பாருங்கள்! எந்தக் கேடுகளைச் செய்தற்காக இவை தரப்படுகின்றன?

வினா: நாகரிகம் பற்றி வேதாந்தம் என்ன சொல்லுகிறது?

விடை: நீங்கள் தத்துவ சாஸ்திரிகள். ஒரு பை தங்கம் ஒருவனுக்கும் மற்றொருவனுக்கும் இடையே வித்தியாசம் உண்டுபண்ணுமென்று நீங்கள் நினைக்கவில்லை. இந்த இயந்திரங்களுக்கும் விஞ்ஞானத்துக்கும் என்ன மதிப்பு? ஒரே ஒரு பயன்தான்; அறிவைப் பரப்புகின்றன. வறுமையை ஒழிக்கவில்லை; அதை மேலும் கடுமையாக்கிவிட்டது. இயற்கையில்தான் என்ன மதிப்பு இருக்கிறது? கம்பி வழியாய் மின் சக்தியை அனுப்புகிறவனுக்கு நீங்கள் ஏன் ஞாபகச் சிலை அமைக்கிறீர்கள்? பல் கோடிக் கணக்கிலே மின்சாரத்தை இயற்கை உற்பத்தி செய்யவில்லையா? இயற்கையில் எல்லாமே இருக்கின்றன அல்லவா? இயற்கைச் சக்தி வெளியாகிறது என்பதுதான் இதன் மதிப்பு. இந்தப் பிரபஞ்சம் ஜீவாத்மா வியாயாமஞ் செய்வதற்கான இடமாகும். இந்த வியாயாமங்களைச் செய்த பிறகு நாம் தெய்வங்களாய் விடுகிறோம். ஆகவே பொருளின் மதிப்பு அது எவ்வளவு தூரம் தெய்வத்தை அறிய உதவுகிறதோ அவ்வளவேயாகும். மனிதனிடமிருக்கும் அந்த திவ்ய சக்தி பிரகாசிக்கச் செய்வதே நாகரிகமாகும்.

வினா: பௌத்தர்களிடையே ஜாதி வகுப்புச் சட்டங்கள் உண்டா?

விடை: பௌத்தர்களிடையே ஜாதி வகுப்பை அதிகம் காணவில்லை. இந்தியாவில் பௌத்தர்கள் மிகச் சிலரே இருக்கின்றனர். புத்தபிரான் சமுதாய சீர்திருத்த நோக்கமுடையவர் எனினும் பௌத்த மதம் பரவியிருக்கும் நாடுகளில் ஜாதி வகுப்பைச் செய்ய முயற்சிகள் நடைபெற்று வந்தன. ஆனால் அவை வெற்றி பெறவில்லை. பௌத்தர்களிடையே ஜாதி வகுப்பு இருப்பதாய்த் தெரியவில்லை. ஆனால் அது இருப்பதாய் அவர்கள் உள்ளத்தில் பெருமை கொள்கின்றனர்.

புத்த பிரான் வேதாந்த சன்னியாசியருள் ஒருவர். புதியதொரு வகுப்பை உண்டுபண்ணினர். இதற்குப்பிறகு இன்னும் பலர் செய்து வரும் வகுப்புக்கள் போல புத்தபிரான் கூறிய கருத்துக்கள் அவருடைய சொந்தமல்ல; அவை புராதனமானவை. அவர் ஒரு மகா புருஷராகையால் இந்த எண்ணங்களுக்குத் தனி வேகம் கொடுத்தார். பௌத்த மதத்தின் சிறப்பு யாதெனில் அதன் சமுதாய நோக்கமாகும். பிராமணர்களும், க்ஷத்திரியர்களும் எங்கள் குருக்களாக இருந்திருக்கின்றனர். உபநிஷத்துக்கள் பெரும்பாலும் க்ஷத்திரியர்களால் இயற்றப் பெற்றவை. வேதங்களில் சொல்லப்படும் வழிபாட்டு விதிகள் பிராமணர்களால் இயற்றப் பெற்றவை. இந்தியா முழுதிலும் க்ஷத்திரியர்களே பேராசிரியர்களாய் இருந்தனர். அவர்கள் கற்பித்தன எல்லாம் எப்பொழுதும் பரந்த கருத்துகளாயிருந்தன. பிராம்மண ஆச்சாரியர்களில் இரண்டு பேர் தவிர எல்லாரும் குறுகிய அளவுதான் பொருந்தி யிருந்தனர். இராமன், கிருஷ்ணன், புத்தர் (அவதாரங்களாக வணங்கப் பட்டு வருகின்றவர்கள்) க்ஷத்திரியர்களே.

வினா: சமய வகுப்புக்கள், சமயாச்சாரங்கள், சமய நூல்கள் ஆகியவை மோக்ஷ சாதனைக்கு உகந்தவைகளா?

விடை : ஒருவன் பேரின்ப நிலையை அடைந்ததும் எல்லாவற்றையும் கைவிடுவான். இந்த நிலையை அடைவதற்கு உதவுகின்ற சமயச் சங்கங்களும், சமயாச்சாரங்களும், சமய நூல்களும் அந்த அளவிற்கு சரிதான். ஆனால் இதைச் சாதிக்க இவை உதவாவிடில் அவை மாற்றப்பட வேண்டும். “அறிஞர்கள் அறியாதார் நிலையைப் பழித்தலாகாது. அறியாதவர் கைப்பற்றி நம்பியிருக்கும் முறையைத் தகர்த்துவிடலாகாது. ஆனால் தக்க செயலாற்றி அவர்களிருக்கும் நிலையிலிருந்து நல்வழியில் திருப்பிவிடலாம். (கீதை III 26)

வினா : தனித்தன்மைக்கும் நீதிமுறைக்கும் உள்ள உறவை வேதாந்தம் எப்படி விளக்குகிறது?

விடை : உண்மையான தனிப் பொருள் பிரம்மமே. சகுணம் மாயை. இது ஒரு தோற்றந்தான். உண்மையில் அது பரப்பிரம்மமே. உண்மையாக இருப்பது அஃது ஒன்றே. ஆனால் மாயையில் பல்வகைத் தோற்ற மளிக்கிறது. மாயையில் இந்த மாறுதலைக் காணலாம், எனினும் இந்த மாயையில் ஒருமைக்குத் திரும்பும் குணமும் உண்டு. இது ஒவ்வொரு நாட்டிலும் வழங்கிவரும் நீதிமுறைகளிலும் ஒழுக்க முறைகளிலும் விளக்கப்பட்டிருக்கிறது. ஏனெனில் இது ஆன்மாவின் அமைப்புத் தேவையாகிறது. ஆகவே ஒரு நன்மையை அடைகிறது. இந்த ஒருமையைத் தேடுவதே நீதியொழுக்கமென்போம். ஆகவே இதை நாம் எப்பொழுதும் பழக்கிக்கொள்ள வேண்டும்.

வினா : நீதியொழுக்கத்தின் பெரும் பகுதி ஒவ்வொருவரோடும் நடந்துகொள்வதைப் பற்றியல்லவோ விளக்குகிறது?

விடை : அது அப்படித்தான். ஆனால் பிரம்மம் மாயையில் வருவதில்லை.

வினா : தனி மனிதனே சத்தென்பது, என்று சொல்கிறீர்கள், தனி மனிதனுக்கு ஞானமிருக்கிறதா என்று கேட்க விரும்புகிறேன்.

விடை : பரிணமிக்கும் நிலைதான் தனிப்பட்ட நிலை. இந்த நிலையில் காணும் ஒளியே ஞானமாகும். ஆகவே ஞானம் என்ற சொல்லை சத்தியத்தின் ஒளிக்கு உபயோகிப்பது சரியாகாது. சத்தென்பது ஞானத்தைத் தாண்டியதாகும்.

வினா : அது ஞானத்தை சேர்த்துக்கொள்ளுமா ?

விடை : ஆமாம். இந்தக் கருத்தின்படி தங்கத்தைப் பல நாணயங்களாக்கலாம். அது போலவேயாகும். இந்த நிலையைப் பல்வகை அறிவுகளாக்கலாம். உயர் நனவு நிலையே அது. நனவு நிலையும் நனவிழந்த நிலையும் சேர்ந்தது அது. இந்த நிலையை அடைகிறவனுக்கு நாம் ஞானமென்று சொல்லும் குணங்களிருக்கும். ஞான நிலையை அடைய வேண்டுமென்று விரும்பும்போது ஒருபடி கீழே இறங்கியாக வேண்டும். மாயா நிலையில்தான் ஞானமுண்டு.

2

[அமெரிக்க நாட்டு போஸ்டன் நகரத்து இருபதாம் நூற்றாண்டுச் சங்கத்தில் நடைபெற்றது.]

வினா : இஸ்லாமிய மதத்தை வேதாந்தம் எவ்விதத்திலாவது இயக்கியதா?

விடை : இந்தப் பரந்த சமயக் கொள்கை இஸ்லாமிய மதத்தைப் பெருமளவில் இயக்கியுள்ளது. இந்தியாவிலுள்ள இஸ்லாமிய மதம் பிற நாடுகளிலுள்ள இஸ்லாமிய மதத்திலிருந்து வேறுபட்டதாயுள்ளது. வேறு நாட்டிலிருந்து இஸ்லாமியர் வந்து, இவர்கள் வேறு மதத்தினர் கூட வாழ்வது பாவமெனச் சொல்லி, இவர்களைக் கிளறிவிடும் போதுதான் இஸ்லாமியர் கூட்டம் ஆவேசம் பெற்றுச் சண்டைக்குக் கிளம்புகின்றது.

வினா : வேதாந்தம் ஜாதியை ஏற்கிறதா?

விடை : ஜாதி வகுப்பு வேதாந்தத்திற்கு முரணானது. ஜாதி என்பது சமுதாயப் பழக்கம். எங்களுடைய பெரும் போதகர் பலரும் ஜாதி பேதத்தை ஒழிக்க எவ்வளவோ முயன்றிருக்கிறனர். பௌத்த மதம் முதலாக அதற்குப் பிறகு தோன்றிய ஒவ்வொரு சமய வகுப்பும் ஜாதி வேற்றுமையை எதிர்த்தே வாதித்திருக்கின்றன; இந்த முயற்சிகள் ஒவ்வொரு தடவையும் விபரீதமாக அதை உறுதிப்படுத்திவிட்டன. ஜாதி என்பது அரசியல் சங்கங்களுடைய விளைவு; பரம்பரைத் தொழிற் சங்கம். ஐரோப்பாவோடு ஏற்பட்ட வியாபாரப் போட்டி சமய போதனைகளைக் காட்டிலும் எளிதில் ஜாதி பேதத்தை முறித்து விட்டது.

வினா : வேதங்களின் சிறப்பு என்ன?

விடை : வேதங்களின் சிறப்பு யாதெனில் வேதம் சொல்வதையும் தாண்டிச் செல்ல வேண்டும் என்று மீண்டும் மீண்டும் வற்புறுத்துகிற ஒரே ஒரு புனிதமான கிரந்தம் அது. வேதங்கள் கூறுவன எல்லாம் குழந்தையுள்ளத்திற்கே என்று சொல்லுகின்றன.

ஆகவே குழந்தை நிலையைத் தாண்டி வளர்ந்ததும் வேதம் கூறுவதையும் தாண்டிச் செல்ல வேண்டும்.

வினா: ஒருவரின் ஜீவ ஆன்மா நிரந்தரமான உண்மையா?

விடை: ஒருவரது ஆன்மா (ஜீவாத்மா) என்பது அவர் தம் எண்ணங்களால் ஆனது; எண்ணங்கள் ஒவ்வொரு கணமும் மாறுபட்டுக்கொண்டேயிருக்கும். ஆகவே அது நிரந்தரமான உண்மையாயிருக்க முடியாது. அது தோற்ற நிலையில்தான் உண்மையாயிருக்கும். ஜீவான்மா ஞாபகத்தாலும் எண்ணத்தாலும் ஆனது. இது எப்படி உண்மையாகும்?

வினா: பௌத்த மதம் இந்தியாவில் மங்கியது ஏன்?

விடை: பௌத்த மதம் இந்தியாவில் மங்கிப்போகவில்லை. உண்மையில் அஃது ஒரு பெரும் சமுதாயக் கிளர்ச்சியே. புத்தபிரான் தோன்றியதற்கு முன்னே யாகத்தின் பொருட்டும் வேறு பிறவற்றிற்கும் பெருமளவில் பிராணிகள் கொல்லப்பட்டன. மக்கள் மதுவருந்தினார்கள்; மாமிசம் புசித்தார்கள். புத்தபிரான் செய்த போதனைகளின் பயனாக மதுபானம் பெரிதும் குறைந்தது; மிருகங்களைக் கொல்லும் பழக்கமும் குறைந்து போயிற்று.

3

[ப்ரூக்லின் ஒழுக்க முறைச் சங்கத்தில் நடந்தது.]

வினா: தீமை, துக்கவேதனை முதலியன உலகில் நிரம்பியிருப்பதை எதுவும் நன்மைக்கே எனும் உங்கள் மதம் எப்படி ஒப்புக்கொள்கிறது?

விடை: இதற்கு விடை சொல்லுமுன் முதலில் தீமையிருப்பதை விளக்கியாக வேண்டும். இதை வேதாந்தம் ஒப்புக் கொள்ளவில்லை. ஆனால், ஓரளவு குறுகிய காலம் வேதனையும் துக்கமும் இருந்து அதனால் கருணையும் பெருந்தன்மையும் விளையுமானால் அவை தீமையாகா. தலை சிறந்த நன்மைகளேயாகும். ஒரு நிகழ்ச்சியின் விளைவுகளை அனந்த காலம் வரை தொடர்ந்த பிறகுதான் அது நன்மை, தீமை என்று உறுதி கூறல் இயலும்.

பேய், பிசாசுகளை வழிபடுவது இந்து மதத்தின் அம்சமன்று. மனித சமூகம் முன்னேறிக் கொண்டிருக்கிறது. எல்லாரும் ஒரே மாதிரி உச்சியை அடையவில்லை. சிலர் மற்றவர்களைவிட அதிகம் பெருந்தன்மையுடையோராயும் சத்துக்களாயும் இருக்கின்றனர். ஒவ்வொருவனுக்கும் அவனவன் சூழ்நிலைக்குள் திருந்திக் கொள்ள வசதியிருக்கிறது. நம்முடைய உள்ளமைப்பை மாற்றிக் கொள்ள இயலாது. நம்முள்ளேயிருக்கும் ஆத்ம சக்தியை நாசம் செய்யவோ கெடுக்கவோ முடியாது. ஆனால் அதற்குத் தக்க வழிகளை வகுத்துக் கொடுக்கலாம்.

வினா: பிரபஞ்சத்தின் அடிப்படைப் பொருள் என்று சொல்வது நமது உள்ளத்தின் கற்பனையல்லவா?

விடை: என்னுடைய கருத்துப்படி நம்மைச் சூழ்ந்திருக்கும் புற உலகம் ஒரு தனிப்பட்ட உருவுடையது. நம்முடைய உள்ளத்தின் கற்பனைகளுக்கு வெளியேயுள்ளது. சடப்பொருள்களின் பரிணமத்திலிருந்து வேறுபட்டதும் ஆன்மீகப் பரிணமத்தை ஒட்டியது

மான பெருவிதியை அனுசரித்து எல்லாப் படைப்புக்களும் முன்னேக்கியும் மேல் நோக்கியும் செல்கின்றன. பின்னே சொல்லப் பெற்றது முன்னே சொல்லியதின் அடையாளமேயன்றி விளக்கமாகாது. இந்த பூ மண்டலத்து வாழ்வில் நாம் எல்லாரும் தனித்தன்மையினரல்லர். உயர் பதவியை அடையாமல் நம்முடைய தனித்தன்மை அடைதல் முடியாது; அந்த உயர் நிலையில் நம்முடைய தெய்விக ஆன்மாவுக்கு அதன் இயல்பை விளக்குவதற்குத் தக்க சாதனம் ஏற்படும்.

வினா: பிள்ளை குருடாகப் பிறந்ததற்குக் காரணம் பெற்றோருடைய பாவமா, பிள்ளையுடைய பாவமா என்னும் பிரச்னை ஏசுகிறிஸ்து முன் எழுந்ததற்கு உங்களுடைய வியாக்கியானம் என்ன?

விடை: பாவம் என்பது இந்தப் பிரச்னையில் எழுவதில்லை என்ற போதிலும் பூர்வ ஜன்மத்தில் குழந்தையின் ஆன்மாவுக்கு ஏற்பட்ட தோஷத்தால் விளைந்தது இது என்பதே என் கருத்து. இத்தகைய பிரச்னைகளுக்கு விளக்கம் காணவேண்டுமாயின் முன் ஜன்மம் உண்டென்ற கொள்கையை அனுசரித்தாக வேண்டும்.

வினா: நம்முடைய ஆன்மாக்கள் நாம் இறக்கும் காலத்தில் ஒரு சந்தோஷமான நிலையை அடைகிறதா?

விடை: இறப்பு என்பது ஒரு நிலைமாற்றமே. காலமும் இடமும் நம்மிடையே உள்ளவை. காலத்திலும் இடத்திலும் நாம் இருக்கவில்லை. கட் புலனாகும் உலகிலாகட்டும், கட்புலனாகாத உலகிலாகட்டும் நம்முடைய வாழ்க்கையை மேலும் தூய்மை செய்து கொள்வதாலும் உயர்த்திக் கொள்வதாலும், ஆன்மீக அழகிற்கும் பேரின்பத்திற்கும் நடு நாயகமான இறைவனை நாம் நெருங்கிக் கொண்டிருக்கிறோம் என்பதை மட்டும் அறிந்து கொண்டால் போதுமானது.

வினு : புனர் ஜன்மம் பற்றி ஹிந்து மதத்தின் கோட்பாடு என்ன ?

விடை : சக்தியை ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலைக்கு மாற்றும் பௌதிகக் கோட்பாடு போன்றதே இது வும். இந்தக் கோட்பாட்டை முதன் முதல் வகுத்தவர் எங்களது நாட்டுத் தத்துவ ஞானி யொருவர். ஆதிகாலத்து ரிஷிகள் சிருஷ்டிதத்து வத்தை நம்பவில்லை. சிருஷ்டிதத்துவம் ஏற்கப்பட் டால் ஒன்று மில்லாத சூனியத்திலிருந்தே படைப் புத் தோன்றியது என்று பெறப்படுகிறது. இது சாத் திய மில்லாத காரியம். காலத்திற்கு ஆதியில்லா தது போல் சிருஷ்டிக்கும் ஆதியில்லை. பகவா னும் சிருஷ்டியும் இரட்டையாகவே செல்லும் எல்லையற்ற நேர் கோடு போன்றவை. இவற்றிற்கு ஆதியுமில்லை; அந்தமுமில்லை. எங்களுடைய கோட்பாடு "அது இருக்கிறது; அது இருந்தது; அது இருக்கப் போகிறது" என்பதாகும். தண் டனைகள் யாவும் முன்னை வினைவே. மேற்கத்தியர் இந்தியாவிலிருந்து ஒரு விஷயம் அறிந்து கொள்ள வேண்டும், அதுதான் சகிப்புத்தன்மை. எல்லா மதங்களும் நல்ல மதங்களே. எல்லாவற்றின் அடிப்படைக் கருத்துக்களும் ஒன்றே.

வினு : இந்தியாவில் பெண்கள் அதிகம் முன்னேற வில்லையே ஏன் ?

விடை : இதற்குப் பெருமளவு காரணம் நாகரிகமற்ற அயல்நாட்டார் அடிக்கடி படையெடுத்ததேயாகும். ஓரளவு இந்திய மக்களும் காரணமாவர்.

[ஹிந்து மதம் பிறரைச் சேர்த்துக் கொள்ள முயலவில்லை. ஏன் என்று அமெரிக்காவில் கேட்ட பொழுது ஸ்வாமிஜி பின்வரும் விடையளித்தார்: "புத்த பிரான் கிழக்கு நாடுகளுக்கு போதனை யளித்தது போல் நானும் மேற்கு நாடுகளுக்கு அளிக்கவேண்டிய போதனை யொன்றுளது."]

வினா : ஹிந்து மதப் பழக்கங்களையும் ஆராதனைகளையும் இந்த நாட்டில் (அமெரிக்காவில்) புகுத்தப் போகிறீர்களா?

விடை : நான் தத்துவத்தைத்தான் பிரகடனஞ் செய்கிறேன்.

வினா : நரகத்து நெருப்பைப் பற்றிய பயம் விலகினால் மனிதர்கள் கட்டுப்பாடில்லாதவர்களாய் விடுவார்களல்லவா?

விடை : அப்படியாகமாட்டார்கள். அன்பினாலும் நம்பிக்கையினாலும் மனிதன் நல்லவனாவது போல் பயத்தாலாக மாட்டான்.

4

[மடத்துத் தினசரிக் குறிப்புகளிலிருந்து திரட்டியது]

வினா : எவரைக் குருவென்று கூறலாம்?

விடை : உன்னுடைய சென்ற காலத்தையும் வரப்போகும் காலத்தையும் சொல்லக் கூடியவராயிருப்பவர் எவரோ அவரே குரு ஆவார்.

வினா : ஒருவனுக்கு எப்படி பக்தி உண்டாகிறது?

விடை. : உன்னிடம் இயல்பாகவே பக்தி இருந்து வருகிறது. காமமும், செல்வச் செருக்கும் அதை மூடி வைத்திருக்கின்றன. அவற்றை நீக்கியதும் பக்தி வெளித்தோன்றும்.

வினா : நாம் நம்மையே நம்பியிருக்க வேண்டுமென்று சொல்வதன் உண்மைக் கருத்து என்ன?

விடை : நம்மையென்று சொல்லும் போது இங்கு பரமான்மாவைக் குறிக்கிறது. ஜீவாத்மாவை நம்பியிருப்பதாலும் சரியான லட்சியத்தைப் படிப்படியாக அடையலாம். காரணம் ஜீவாத்மா என்பது மாயையால் மூடப்பட்டிருக்கும் பரமான்மாவே.

வினா : அத்வைதம் ஒன்றே உண்மையென்றால், ஒவ்வொரு கணமும் எல்லாராலும் அறியப்படும் த்வைதம் எப்படி எழக்கூடும்?

விடை : அறிவது ஒரு பொழுதும் த்வைதமாகாது. அறியப்படுவதை விளக்க முயலும் போது த்வைதக் கோட்பாடு உண்டாகிறது. அறிவது த்வைதமானால் அறிவுக்கு எட்டியது அறிகிறவன் இல்லாமலே தனியாக இருக்கக்கூடும்; அது போலவே அறிவுக்கு எட்டியது இல்லாமலே அறிகிறவன் இருக்கக் கூடும்.

வினா : ஒருவனுடைய ஒழுக்கம் சீராக வளரச் செய்வது எப்படி?

விடை : சீர்பெற்று வளர்ந்திருக்கும் ஒழுக்கமுடையவர் தொடர்பினால் இதைச் செய்யலாம்.

வினு : வேதங்களிடத்தில் நம்முடைய மனப்பான்மை எப்படி இருக்கவேண்டும் ?

விடை : வேதங்களில் பகுத்தறிவுக்கு ஏற்ற பகுதிகளை மட்டும் எடுத்துக் கொள்ளவேண்டும். புராணங்களில் வேதங்களுக்கு முரணுக இல்லாதவைகளை மட்டுமே ஒப்புக்கொள்ளவேண்டும். வேதங்களுக்குப் பின்னுலே வந்த சமயச் சிந்தனைகள், இவை உலகில் எந்தப் பகுதியிலிருந்து உற்பத்தியானுலும் சரி, அவை வேதங்களிலிருந்து உற்பத்தியானவை என்றே கருதுக.

வினு : காலத்தை நான்கு யுகங்களாகப் பிரித்திருப்பது வான சாஸ்திரத்தை அனுசரித்தா அல்லது குறிப்பில்லாத நிதான வகுப்புக்களா ?

விடை : வேதங்களில் யுகங்களைப் பற்றிச் சொல்லவில்லை. இவை புராணகாலத்தியவை; ஆதாரமற்றவை.

வினு : பொருள்களுடைய பொது ஆற்றல்கள் பற்றிய சிந்தனைகட்கும் சொற்களுக்கும் உள்ள உறவு அவசியமானதா, மாற்றக் கூடாததா, அல்லது ஏதேச்சையாய் ஏற்பட்டதா, அல்லது பொது சம்மதத்திற்கு இசைந்து ஏற்பட்டதா ?

விடை : இந்த விஷயம் விவாதத்திற்குரியது. ஏதோ ஒரு வகை அவசியமான உறவு, ஆனுல் நிரந்தர உறவல்ல, இருக்கிறது. பாஷைகளின் வேற்றுமையிலிருந்து இது தெரியவருகிறது. ஏதோ ஒரு நுட்பமான உறவு இருக்கலாம். அதை நமக்கு இதுவரை தெரிந்துகொள்ள இயலவில்லை.

வினு : இந்தியாவிற்குள் வேலை செய்வதற்கு எத்தகைய விதியை அனுசரித்தாகவேண்டும் ?

விடை : முதன் முதலாக மக்களைக் கிரியாம்சையில் கருத்துடையவர்களாக்க வேண்டும். பலசாலிகளாக்க வேண்டும். இம்மாதிரிச் சிங்கங்கள் ஒரு டஜன் இருந்தால் போதும். உலகையே ஜெயித்துவிடலாம்; பல கோடி ஆடுகள் அவ்விதம் செய்ய

இயலா. இரண்டாவதாக, உயர்ந்த லக்ஷிய முடையவர் எவ்வளவு பெரியவராயிருந்தாலும், அவரைக் கண் மூடித்தனமாய்ப் பின்பற்றுமாறு மக்களுக்குக் கூறலாகாது.

[இதற்குப் பிறகு ஹிந்து மத ஆசரணைப் பிர தமைகளில் பழுதாக்கப் பெற்றிருந்த சிலவற்றை ஸ்வாமிஜி எடுத்துச் சொன்னர். ஞான மார்க்கத் திற்கும் பக்தி மார்க்கத்திற்கும் உள்ள வித்தியா சத்தை எடுத்துச் சொன்னர். ஞான மார்க்கம் ஆர்யர்களைச் சேர்ந்ததாயிருக்கலாம். அதனலே அதற்கு அதிகாரிகளைப் பொறுக்குவதில் பலமான கட்டுப்பாடுகள் இருந்தன. பக்தி மார்க்கம் தெற்கேயிருந்து (ஆர்யர் அல்லாதவர்களிட மிருந்து) வந்ததால் அதிகக் கட்டுப்பாடு செய்யப் படவில்லை.]

வினு: இந்தியாவின் புனருத்தாரணத்தில் ஸ்ரீ. ராமகிருஷ்ண மடம் என்ன பங்கெடுத்துக் கொள்ளப்போகிறது?

விடை: இந்த மடத்திலிருந்து யோக்கியதையுடையவர்கள் புறப்படுவார்கள்; உலகை ஆன்மிகப் பெரு வெள்ளத்தில் ஆழ்த்திவிடுவார்கள். இதன் பயனக வேறு வகையில் புனருத் தாரணங்கள் ஏற்படும். அப்படி பிரம்ம க்ஷத்திரிய வைசியர்கள் ஏற்படுவார் கள். சூத்திர ஜாதியே இராது. அவர்களுடைய வேலையை இயந்திரங்கள் செய்யும். இந்தியாவின் இன்றைய தேவை க்ஷத்திரிய பலம்.

வினு: மனித ஜன்மம் பின்னேக்கிப் பரிணமிக்குமா?

விடை: ஆமாம். ஜன்மம் கர்மாவை ஒட்டியது. ஒருவனு டைய செய்கைகள் மிருகப் பிராயமாகவே இருந்து வந்தால் மிருகத்தை நோக்கியே அவன் இழுக்கப்படுவான்.

[கேள்வி சமயத்தில்(1898)விக்கிரக ஆராதனை பௌத்தமதத்தின் விளைவு என்று சுவாமி விளக்கி னர். முதன் முதலில் சைத்தியம்; பிறகு ஸ்தூபம்;

அதன் பிறகு புத்தர் கோவில் இவ்வாறு உண்டா யிற்று. இதே சமயத்தில் ஹிந்து மதக் கோயில் களும் உண்டாயின.]

வினா: குண்டலினி நம்முடைய சேதனப் பகுதியாகிய உடலிலிருக்கிறதா?

விடை: மனித உடலில் கமலங்கள் எனப்படும் யோக நிலை கள் உண்மையாக இல்லையென்று ஸ்ரீ ராமகிருஷ்ண பரம ஹம்ஸர் சொன்னதுண்டு. ஆனால் யோக சித்தியாலே உற்பத்தியாகக் கூடியவை என்றும் சொன்னார்.

வினா: விக்கிரக ஆராதனையின் பயனாக ஒருவன் முக்தி அடையலாமா?

விடை: விக்கிரக ஆராதனை நேரடியாக முக்தி தராது. மறைமுகமாக முக்திக்கு உதவும். பிம்ப ஆராதனை யைக் கண்டித்தல் கூடாது. பரிபூரண அத்வைத நிலையை அடையப் பலர் தம் உள்ளத்தைப் பண் படுத்துகிறது.

வினா: ஒழுக்கத்தின் சிறந்த லக்ஷியம் என்னவாயிருக்க வேண்டும்?

விடை: துறவு.

வினா: பௌத்த மதம் எப்படி இந்தியாவில் பழுது வழிகளை விட்டுவிட்டுப் போயிற்று?

விடை: பௌத்தர்கள் இந்தியாவில் உள்ள ஒவ்வொருவரை யும் துறவியாக்க முயன்றனர். இந்த நிலையை ஒவ்வொருவரிடமிருந்தும் எதிர்பார்த்தலாகாது. இதனால் துறவியர் தம் நெறி வழுவத்தொடங்கினர். திபெத்தியர் காட்டுமிராண்டியர் ஆகியோர் தம் பழக்கங்களையும் பௌத்த மத முறைகளாக ஏற்றுக் கொண்டதும் ஒரு முக்கிய காரணமாகிறது. மதப் பிரசாரத்திற்காக அயல் நாடுகளுக்குச் செல்லும் போது அயல்நாட்டுப் பழக்கங்களையும் ஏற்க

நேர்ந்தது. அவற்றை இந்தியாவிலும் கொணர்ந்து விட்டார்கள்.

வினு: மாயைக்கு ஆதியும் அந்தமுமில்லையா?

விடை: இருவகையிலும் மாயை எல்லையற்றது, பிரபஞ்சம் முழுவதையும் பொருத்தமட்டிலும் தான். தனியார் விஷயத்தில் எல்லையற்றதல்ல.

வினு: பிரம்மத்தையும் மாயையும் ஒரே சமயத்தில் தெரிந்துகொள்ள முடியாதே, அப்பொழுது இவைகளின் நிரந்தர உண்மையை எப்படித் தெரிந்து கொள்வது?

விடை: ஞானம் ஏற்படுவதாலே அது விளக்கப்படும். பிரம்ம ஞானம் ஏற்பட்டதும் மாயை மறைந்து விடும். கயிறு என்பதை அறிந்ததும் பாம்புத் தோற்றம் மறைவது போலாகும்.

வினு: மாயை என்பது யாது?

விடை: ஒரே ஒரு வஸ்துதான் இருக்கிறது. அதை ஜடம் என்று சொன்னுலென்ன? ஆவியென்று சொன்னுலென்ன? ஒன்றை விட்டுவிட்டு மற்ருென்றைத் தனித்துச் சிந்திப்பது மிக்கக் கடினம்; இயலாது என்று கூடச் சொல்லலாம். இதுதான் மாயை அல்லது அவித்தியை என்பது.

வினு: முக்தி என்ருல் என்ன?

விடை: முக்தி என்ருல் முழு விடுதலை. பாவம் புண்ணியம் என்ற பந்தங்களிலிலிருந்து விடுதலை. தங்க விலங்கும் இரும்பு விலங்கும் ஒன்றே. ஒரு முள்ளுத்தைத்தால் வேருெரு முள்ளைக் கொண்டு முதல் முள்ளை எடுத்துவிட்டு இரண்டையும் எறிந்துவிட வேண்டுமென்று பரம ஹம்ஸர் சொல்லுவார். ஆகவே கெட்ட பழக்கங்களை ஒழிக்க நல்ல பழக்கங்களைக் கையாளவேண்டும். பிறகு நல்ல பழக்கங்களும் கைவிடப்படவேண்டும்.

வினு: முக்தி என்பது பகவானுடைய அருளில்லாமல் கிடைக்குமா?

விடை : முக்திக்கும் பகவானுக்கும் சம்பந்தமில்லை. முக்தி நம்மிடம்தான் இருக்கிறது.

வினா : ஆன்மா உடலின் விளைவில்லை என்றெல்லாம் சொல்வதற்கு என்ன அத்தாட்சி இருக்கிறது ?

விடை : அகமின்மையோடு உறவாடியிருக்கும் அகந்தையானது உடல், உள்ளம் முதலியவற்றின் விளைவு. உண்மையான்மா இருப்பதன் ஆதாரம் அதை உணர்வதே.

வினா : உண்மையான ஞானி யார் ? பக்தன் யார் ?

விடை : உள்ளத்தில் ஆழ்ந்த அன்பு இருப்பவன் உண்மையான ஞானி. அதே சமயத்தில் வெளி உறவுகளில் அத்வைதத்தை நடைமுறையில் காண்கிறவனுமாவான். உண்மை பக்தனென்றாலோ அவன் தன்னுடைய ஆன்மாவே பரமாத்மாதான் என்று உணர்ந்து அதனாலே உண்மை ஞானியாகி பிறரிடம் கருணை தோன்றி அன்பு கொள்கிறான். எவனொருவன் ஞானத்தை எடுத்துச் சொல்லி அல்லது பக்தியை எடுத்துச் சொல்லி மற்றொன்றை இழிவாகச் சொல்லுகிறானோ அவன் ஞானியுமில்லை; பக்தனுமில்லை ; அவன் ஒரு பொய்யன்; ஏமாற்றுகிறவன்.

வினா : ஈச்வரனை மனிதன் ஏன் ஆராதிக்கவேண்டும்?

விடை : ஈச்வரன் இருப்பதை ஒருமுறை உணர்ந்துவிட்டால் அவரை வழிபடுதற்குக் கணக்கற்ற சந்தர்ப்பங்கள் கிடைத்துவிடும். பகவத் சேவையென்பது சமய நூல்களில் சொல்லியபடி, ஸ்மரணம் என்பது. பகவான் இருப்பதாய் ஒப்புக்கொண்டுவிட்டால், உங்கள் வாழ்வில் ஒவ்வொரு கணமும் பகவானை நினைவு கொள்வீர்.

வினா : மாயாவாதம் அத்வைத வாதத்திலிருந்து வேறானதா ?

விடை : இரண்டும் ஒன்றுதான். மாயா வாதமில்லாமல் அத்வைத வாதம் கிடையாது.

வினு: எல்லையற்ற பரம்பொருளான கடவுள் எப்படிக் குறுகிய அளவிலிருக்கும் மனிதனில் அவதரிக்க முடியும்?

விடை: கடவுள் எல்லையற்றவர் என்பது உண்மைதான். ஆனுல் நீ சொல்லும் முறையிலன்று. உலகாய தப் பொருளைப் போல் பரந்திருப்பதாய்க் குழப்பஞ் செய்துகொண்டு எல்லையற்றது என்பதற்குக் கருத்து விளக்கிக் கொள்கிருய். கடவுள் மனித உருவில் அவதரித்தல் இயலாது என்று சொல்லும் போது நீ என்ன நினைக்கிருய்? பரந்த எல்லை யற்ற ஸ்தூலப் பொருளாகக் கடவுளை நினைக்கிருய். அவ்வளவு பெரிய பரந்த ஒன்று இவ்வளவு சிறிய உடலில் எவ்வாறு அடங்கும் என்று கருதுகிருய். எல்லையற்ற பரம்பொருள் என்கிறபோது. ஆன்மா என்ற தூய ஆவியையே கருதுகிருேம். அந்த ஆன்மா மனித உருவத்தில் தோன்றுவதால் குறை படுவதில்லை.

வினு: "முதலில் சித்தனுய்விடு (உண்மையைத் தெரிந்து கொண்டவன்) அப்பொழுதுதான் உனக்குக் கர்மா வைச் செய்ய உரிமையுண்டு, பிறருடைய நலத்திற் காக உழைக்கலாம்" என்று சிலர் கூறுகின்றனர். வேறு சிலர் ஆரம்பத்திலிருந்தே பிறருக்காக உழைக்க வேண்டுமென்பர். இந்த இரு கொள்கை களுக்குமிடையே அநுசரணை உண்டாக்குவது எப்படி?

விடை: ஒன்றை நீ மற்ருென்ருேடு குழப்பஞ் செய்கிருய். கர்மா என்ருல் பிறருக்குத் தொண்டு செய்தல் அல் லது பிறருக்கு ஞானேபதேசஞ்செய்வது என்பது கருத்தாகும். ஸித்த புருஷன் ஒருவனுக்கே ஞான உபதேசம் செய்யும் உரிமையுண்டு. (அதாவது, உண்மையைத் தெரிந்து கொண்டவன்) ஆனுல் பிறருக்கு உதவ ஒவ்வொருவனுக்கும் உரிமை யுண்டு. பிறரிடமிருந்து உதவியைப் பெறுபவன் பிறருக்கு உதவுவது கடமையாகும்.

5

[யோகம், வைராக்கியம், தவம், அன்பு.]

வினா : உடல் ஆரோக்கியமாயும் சக்தியுடையதாயும் இருப்பதற்கு யோகம் உதவுமா?

விடை : ஆமாம் ; சாத்தியமாகும் வியாதிகளைத் தவிர்க்கும். தன் உடலையே நினைத்துக்கொண்டிருப்பது கடினம். பிறருடைய விஷயத்தில் உடலை நினைப்பது சாத்தியமாயிருக்கும். பாலும் பழமுமே யோகியருக்குச் சிறந்த உணவாகும்.

வினா : வைராக்கியம் அடைந்ததுமே ஆனந்த நிலையையும் அடையலாமா ?

விடை : வைராக்கியத்தின் முதற்படி மிகவும் கடினமாகும்; வேதனை தருவதாகும். அது பூர்த்தியாகுமானால் ஆனந்த நிலையையும் அதுவே தரும்.

வினா : தவம் என்றாலென்ன ?

விடை : தவம் மூன்று வகை. ஒன்று உடலைப் பற்றியது; மற்றொன்று சொல் பற்றியது; இன்னொன்று உள்ளம் பற்றியது. முதலாவது பிறருக்கு உதவுவதாகும். இரண்டாவது ஸத்யம்; மூன்றாவது மன அடக்கம்; மனங்குவிதல் இவையாம்.

வினா : எறும்பிடமும் சித்தியடைந்த ரிஷியிடமும் நாம் ஏன் ஒரே ஆன்மாவைக் காண்பதில்லை.

விடை : இந்த இரு ஆன்மாக்களையும் ஒன்றுபட்டதாக நோக்குவதற்குப் போதிய காலமாகவேண்டும்.

வினா : பரிபூர்ணமடையுமுன் ஞானோபதேசம் செய்வது சாத்தியமா ?

விடை : இல்லை. குருமகராஜினுடையவும் என்னுடையவும் சீடர்கள் பரிபூரண நிலை பெறுக. தெய்விக சமயத் தொண்டு செய்யும் தகுதி பெற இறை அருள்க.

வினா : கீதையில் காணும் கிருஷ்ணனுடைய திவ்ய விச்வ ரூப கம்பீரம் கோபிகளிடையே காணும் கிஷ்ணனுடைய தனிக் காதலைவிட உயர்ந்ததா?

விடை : தெய்விக காதலே சிறந்தது. தெய்விக மில்லாத தனி நபர் காதல் உயர்ந்ததாகாது. அவ்விதம் உயர்ந்ததாயிருப்பின் மாமிசப் பிண்டத்தை விரும்பும் எல்லா மக்களும் மோக்ஷ மடைந்திருப்பார்களே!

6

[நிவேதிதாவுக்கு அளித்த விடை*]

வினு : கன்னேஜில் நடத்த ஸ்வயம் வரத்திற்குச் சென்ற போது பிருத்விராயும், சந்தும் என்ன வேஷம் பூண்டிருந்தார்கள் என்று எனக்கு ஞாபகமில்லை.

விடை : இருவரும் தெருப் பாடகராகச் சென்றனர்.

வினு : பிருதிவிராய் சம்யுக்தையை மணஞ்செய்து கொள்ள வேண்டுமென்று உறுதி பூண்டது எதனுல்? எதிரியுடைய பெண் என்பதாலும், பேரழகி என்பதாலுமா? தன் வேலைக்காரி ஒருத்தியை அனுப்பி சம்யுக்தையுடைய வேலைக்காரியாக இருக்கச் செய்தானு? இந்தத் தாய்க் கிழவி, பிருதிவிராய் மீது சம்யுக்தை காதல் கொள்ளச் செய்தாளா?

விடை : அவனுடைய தீரச் செயல்களைக் கேட்டும், அவளுடைய அழகைக் கேட்டும் இருவர் தம் பிரதிமைகளைக் கண்டும் அவர்கள் இருவரும் காதல் கொண்டனர். பிரதிமைகளைக் கண்டு காதல் கொள்வது பண்டை நாள் இந்தியப் பழக்கம்.

வினு : கோபாலர்களுக்கிடையே எவ்வாறு கிருஷ்ணன் கொண்டுவரப் பட்டான்?

விடை : கம்சனிடமிருந்து குழந்தையைக் காப்பாற்ற வேண்டி அதைத் தூக்கிக் கொண்டு அதன் தந்தை ஊரைவிட்டு ஓட வேண்டியவரானுர். பிறக்கும் குழந்தைகளிலொருவன் இந்தக் கிருஷ்ணனுயிருந்து தன்னைச் சிங்காதனத்திலிருந்து அகற்றி விடுவான் என்று அசரீரி வாக்கு சொல்லக் கேட்டு அச்சமுற்ற கொடுங்கோல் மன்னனுகிய கம்சன் அந்த ஆண்டு தொடங்கி எல்லா ஆண் குழந்தைகளையும் கொன்றுவிட வேண்டுமென்று கட்டளையிட்டிருந்தான். கிருஷ்ணனுடைய தந்தையையும் தாயையும் சிறை வைத்திருந்தான்.

* 1900-ம் ஆண்டு மே மாதம் 24-ந் தேதி சான்பிரான்ஸிஸ்கோ நகரில் சகோதரி நிவேதிதையார் சில கேள்விகளை எழுதியனுப்பினுர். அவற்றிற்கு சுவாமியவர்கள் குறித்தனுப்பிய பதில்.

வினா : அவனுடைய வாழ்வில் இந்தப் பகுதி எப்படி முடிந்தது ?

விடை : கம்சனுல் ஒரு விழாவிற்கு அழைக்கப் பெற்றுத் தன் தமயனுகிய பல தேவனையும் வளர்ப்புத் தந்தையாகிய நந்தாவையும் அழைத்துக் கொண்டு கிருஷ்ணன் வந்தான். கம்சன் அவனைக் கொல்வதற்கு ஏற்பாடு செய்திருந்தான். அவன் கம்சனையே கொன்றுவிட்டான். ராஜ்யத்தைத் தான் எடுத்துக் கொள்ளாமல் கம்சனுடைய வம்சத்திலுள்ள ஒருவனைச் சிங்காதனத்தில் அமரச்செய்தான். இந்தச் செயலினுல் கிடைக்கக்கூடிய பலனைத் தான் ஏற்கவில்லை.

வினா : இந்த வாழ்க்கைப் பகுதியில் ஏதாவதொரு விசித்திரமான நிகழ்ச்சியைச் சொல்ல முடியுமா ?

விடை : இந்தப்பகுதியில் பலஅதிசய நிகழ்ச்சிகள் நடைபெற்றுள்ளன. குறும்புக்காரப்பிள்ளையாயிருந்த பொழுது மாற்றுந் தாயாகிய யசோதை தயிர் கடையும் கயிற்றைக் கொண்டு அவனைக் கட்ட எவ்வளவோ முயன்றும் முடியவில்லை. அப்பொழுது அவள் கண் திறந்தது. பிரபஞ்சம் முழுவதுமே அடங்கியிருக்கும் கிருஷ்ணனுடைய உடம்பைக் கட்டுவது சாத்தியமில்லையென்று உணர்ந்தாள். உடனே அவள் உடம்பு நடுங்கிற்று ; அவனை நோக்கித் துதி செய்தாள். உடனடியாகவே அவன் தன் மாயையைக் கொண்டு தொட்டதும் கிருஷ்ணன் அவளுக்கு சாதாரணக் குழந்தையாகவே தோன்றினுன்.

தேவர்களில் முதல்வரான பிரம்மாவானவர் பகவானே (விஷ்ணுவே) கோபாலனுய் அவதரித்திருக்கிருர் என்று நம்பாமல் கிருஷ்ணனுடைய பசுக்களையும், கோபாலர்களையும் திருடிக் கொண்டு போய் குகைக்குள் தூங்கச்செய்துவிட்டார். மீண்டும் அவர் கிருஷ்ணனிடம் வந்த போது கிருஷ்ணனைச் சுற்றிஎப்பொழுதும் போல் பசுக்களும் கோபாலர்களுமிருந்தார்கள். திரும்பவும் இப் பசுக்களையும் கோபாலர்களையும் திருடிக் கொண்டு போனுர். திரும்பவும் வந்து பார்த்தார். முன்போலவே

அவர்கள் கிருஷ்ணனிடம் காணப்பட்டனர். அப்பொழுதுதான் அவருக்கு விழிப்பு ஏற்பட்டது. பல்லாயிரம் உலகங்களையும், ஆகாயங்களையும் பிரும்மாக்களையும் பகவானுடைய உடலில் கண்டார். காளிங்கன் என்ற சர்ப்பம் யமுனை நதியில் விஷத்தைக் கக்கிப் பாழ் பண்ணிக் கொண்டிருந்தது. கிருஷ்ணன் அதன் தலையில் நின்று அதை மிதித்து நர்த்தனஞ் செய்தார். இந்திரனை வழிபடக் கூடாதென்று கிருஷ்ணன் சொல்ல அதனால் இந்திரனுக்குக் கோபம் உண்டாகிப், பேய் மழையை எழுப்பி விட்டான். இந்த மழையினால் விரஜாவிலுள்ள ஜனங்களைக் கொன்று விடலாமென்று எண்ணினான். ஆனால் கண்ணன் கோவர்த்தன மலையைத் தனது சிறிய விரலால் தூக்கி அந்த ஜனங்களைக் காப்பாற்றக் குடையாகப் பிடித்தான். சிறு வயதிலிருந்தே ஸர்ப்ப வழிபாடு இந்திர வழிபாடு இரண்டையும் கிருஷ்ணன் மறுப்பான். இந்திர வழிபாடு வேத முறையாகிறது. கீதை முழுவதும் வேத முறைகள் பாராட்டப்பட வில்லை. இந்தக் காலம் கோபிகளோடு லீலை செய்த காலம். கண்ணனுக்கு அப்பொழுது வயது பதினொன்று.

7

[குரு, அவதாரம், யோகம், ஜபம், சேவை.]

வினா : வேதாந்தத்தை எப்படித் தெரிந்து கொள்கிறது?

விடை : "சிரவணம், மனனம், தியானம்" ஆகிய முறைகளால். ஸத்குருவிடமிருந்து சிரவணம் செய்ய வேண்டும். குருவினுடைய சாக்ஷாத் சிஷ்யனாக இல்லாது போனாலும், தக்க அளவு பக்தியுடையவனாயிருந்து குருவின் உபதேசங்களைச் செவி சாய்த்துக் கேட்பானாகில் முக்தியடைவான்.

வினா : ஸத்குரு யார்?

விடை : குரு, பரம்பரையில் ஆன்மீக சக்தி பெற்றிருந்தால், அல்லது இடைவிடாது பரம்பரை முறையில் சீடர்களைப் பெற்றிருந்தால் அவரை ஸத்குருவென்று சொல்லலாம்.

ஆன்மீக உபதேசம் செய்யத் துணிவது மிகவும் கடினமான காரியம். பிறருடைய பாவங்களைத்தான் ஏற்றுக் கொள்ள நேரும். நல்ல தேர்ச்சி அடையாத குருவாக இருந்தால் கீழே நழுவி விழக்கூடும். அதனால் உடலுக்கு மட்டும் வேதனை ஏற்படுவதோடு நின்று விட்டால் தன்னை அதிருஷ்டக்காரன் என்று மதித்துக் கொள்ள வேண்டும்.

வினா : ஆன்மீகக் குருவாலே உபாசகனைத் தகுதியானவனாக்க இயலாதா?

விடை : அவதார புருஷனுக்குத் தான் அது இயலும். சாதாரண புருஷனுக்கு இயலாது.

வினா : முக்திக்கு எளிதான வழிகிடையாதா?

விடை : "ஜியோமிதிக்கு ராஜ பாதை கிடையாது" அவதார புருஷனை அணுகும் அதிருஷ்டமிருந்தால்தான் இயலும். பரமஹம்ஸ தேவர் கூறுகிறார்: "கடைசி ஜன்மாவையுடையவன் எப்படியாவது என்னைப் பார்ப்பான்" என்று.

வினா: யோகம் அதற்கு இலகுவான உபாயமல்லவா?

விடை: (ஹாஸ்யமாக) நன்றாகச் சொன்னாய்! அப்படியா! யோகம் இலகுவான வழியா! உள்ளம் தூய்மை யில்லாமலிருந்து யோகாப்பியாசம் செய்தால் ஒரு கால் சில சக்திகளைப் பெறலாம். ஆனால் அதுவே ஒரு தடையாய் விடும். ஆகவே தூய்மை உள்ளமே முதன் முதல் தேவை.

வினா: அதை அடைவது எப்படி?

விடை: சத் கருமங்களைச் செய்தல். சத் கருமங்கள் இருவகை யாவன. ஒன்று முன்நோக்கியது. மற்றொன்று பின் நோக்கியது. "திருடாதே" என்பது பின் நோக்கியது, "பிறருக்கு நலத்தைச் செய்" என்பது முன் நோக்கியது.

வினா: பிறருக்கு நலம் செய்வது மேல்படியிலல்லவோ செய்ய வேண்டும்? கீழ்படியில் செய்தால் அது ஒருவனுக்கு உலக பந்தத்தை உண்டு பண்ணுமல்லவா?

விடை: அதை முதல் படியிலேயே செய்ய வேண்டும். ஆசையிருப்பவனைத்தான் மாயை மயக்கி விடும். அப்பொழுது பந்தத்தில் அகப்பட்டுக் கொள்வான்; ஆசையில்லாதவர்கள் கட்டுப்பட மாட்டார்கள். பழக்கத்தில் அது இயல்பாய் விடும்.

வினா: "நேற்று இரவு நீங்கள் சொன்னீர்கள் எல்லாம் உன்னிடமே உள்ளன" என்று. இப்பொழுது நான் விஷ்ணுவாக விரும்புகிறேன். நான் அந்த உருவத்தை நினைக்க வேண்டுமா?

விடை: அவரவர் தம் சக்திக் கேற்றவாறு இரண்டில் ஒன்றை உபாசிக்கலாம்.

வினா: ஞானம் பெறும் உபாயங்கள் எவை?

விடை: குருதான் உபாயம்; குருவில்லாமல் ஞானம் ஏற்படாது.

வினு : தியான அறையிலிருந்து தியானம் பழக வேண்டுவ தில்லே யென்று சிலர் கூறுகின்றனர். இது எவ்வ ளவு தூரம் உண்மை ?

விடை : இறையை அறிந்தவர்களுக்கு இது வேண்டிய தில்லே. மற்றவர்களுக்கு அவசியமாகும். ஆனுல், ஸகுணப் பிரம்மத்தைத் தாண்டி நிர்குணப் பிரம் மத்தை தியானஞ் செய்ய வேண்டும். ஸகுணப் பிரம்ம உபாசனே மோக்ஷத்தைத் தராது. (ஸகு ணப் பிரம்மத்தை) உருவத்தைத் தியானித்து உல கில் ஐசுவரியங்களேப் பெறலாம். தாயை உப சரித்து ஐசுவரியம் பெறலாம்; தந்தையை வழிபட்டு உபாசனே செய்பவன் ஸ்வர்க்கத்தை அடைவான். ஆனுல் சாதுவை வழிபடுகிறவன் ஞானத்தையும் பக்தியையும் பெறுவான்.

வினு : क्षणमिह सज्जनसगतिरेका —'ஒரு கண நேர ஸத் ஸங்கம் இந்த ஸம்ஸாரத்திலிருந்து விலக்கி விடும்' என்கிருர்களே, அதன் கருத்து என்ன ?

விடை : யோக்கிதையுள்ள ஒருவன் உண்மையான ஸாது வையடையும் போது விடுதலே பெறுவான். உண் மையான ஸாதுக்கள் கிடைப்பது அருமை. ஆனுல் அவர்களுடைய குண விசேஷம் எவ்வளவு என் பதை ஒரு பேராசிரியர் சொல்லியிருக்கிருர். "ஆன் மார்த்த மற்ற பேச்சு துர்குணம் நற்குணத்திற்கு வழங்கும் புகழுரையாகும்" என்று. ஆனுல் அவ தாரங்கள் கபால மோசனர்கள். அதாவது, மனிதர்க ளுடைய விதியையே மாற்றும் இயல்புடையவர்கள். உலகையே ஒரு கலக்குக் கலக்கக் கூடியவர்கள். மிகக் குறைந்த அளவு அபாயமுடையது மனிதனே வழிபடுவதாகும். மனிதனில் பிரம்மத்தைக் காண் பவன் பிரபஞ்சத்திலே வியாபித்திருக்கிற பிரம் மத்தை அறிவான். சன்னியாசம், குடும்ப வாழ்க்கை இரண்டும் நல்லதுதான். ஞானம் தான் அவசியமானது.

வினா : எங்கு ஒருவன் தியானம் செய்ய வேண்டும்? மனதுக்குள்ளேயா? வெளியேயா? மனது உள்ளே இருக்க வேண்டுமா? அல்லது வெளியே இருக்கலாமா?

விடை : உள்ளேயே தியானம் செய்ய வேண்டும். உள்ளம் இங்கேயா அங்கேயா இருப்பது என்ற பிரச்னையில் அந்த உள நிலையை யடைய வெகு காலமாகும். இப்பொழுது நமது முயற்சி உடம்பைப் பொறுத்தது. தொடர்ந்து அசைவற்று அமரும் நிலைபெற்றால் தான் உள்ளத்தைக் கட்டுப்படுத்தும் முயற்சி தொடங்கலாம். ஆசனம் பழக்கமாய்விட்டால் உபாசகனுடைய அவயவங்கள் அசைவற்றிருக்கும். அப்பொழுது அவன் இஷ்டப்படி வெகுநேரம் உட்கார்ந்து இருக்கலாம்.

வினா : ஒரே மந்திரத்தைத் திரும்பித் திரும்பி ஜபம் செய்வதால் ஒருவன் எளிதில் அயர்தல் கூடும். அப்பொழுது ஜபத்தை நீடிப்பதா, அல்லது நல்ல நூலை வாசிக்கலாமா?

விடை : ஜபத்தில் அயர்வு இருவகையாக ஏற்படலாம். மூளைக்கு அயர்வு உண்டாகலாம், சோம்பலினால் அயர்வு உண்டாகலாம். முதல் காரணமாயிருந்தால் ஜபத்தைச் சற்று நிறுத்திக்கொள்ளலாம். இந்த சமயத்தில் ஜபத்தைச் செய்துகொண்டிருந்தால் போலித் தோற்றங்கள் காணும், உளக்கலக்கத்திலேயே கொண்டுவிடக் கூடும். சோம்பலினால் ஏற்பட்ட அயர்வுக்குப் பரிகாரம் ஜபத்தை மேலும் செய்வதேயாகும்.

வினா : ஜபம் செய்யும்போது ஆனந்தம் உண்டாகலாம். இந்த ஆனந்தத்தால் ஜபத்தை மேலும் செய்யத் தோன்றாமல் போகலாம். அப்பொழுது மேலும் ஜபம் செய்வதா?

விடை : ஆமாம், இந்த ஆனந்தம் ஆன்மிக முயற்சிக்கு எதிராக இருக்கக் கூடியது. அதற்குப் பெயர் ரசாவாதனம் (இன்பத்தை ருசிப்பது.) இந்த நிலையில்

இருந்து விடாமல் அதைத் தாண்டிக் செல்ல வேண்டும்.

வினு : மனம் எங்கேயோ திரிந்துகொண்டிருக்கும் போது வெகு நேரம் ஜபம் செய்வது நல்லதா ?

விடை : ஆமாம், முரட்டுக் குதிரையை அடக்க அதன் முதுகில் எப்போதும் உட்கார்ந்து பழக்குவது போன்றது இது.

வினு : பக்தி யோகம் என்னும் நூலில் பலவீனமாயுள்ள ஒருவன் யோகாப்பியாசம் செய்தால் கடுமையான எதிர்ப்புச் செயல் உண்டாகலாம் என்று சொல்லியிருக்கிறீர்கள் அப்பொழுது என்ன செய்ய வேண்டும் ?

விடை : ஆன்ம ஞானமறிய முயலும்போது பிராணனையே இழந்தால் என்ன ? அறிவு பெறுவதற்காகவும் மற்றும் பல விஷயங்களுக்காகவும் மனிதன் உயிரிழக்கத் தயாராய் இருக்கும் போது ஞானம் பெறும் பொருட்டு உயிரிழந்தால் என்ன ?

வினு : ஜீவ சேவை மட்டும் முக்தி தருமா ?

விடை : ஜீவ சேவை நேரடியாக முக்தி தராது; வேறு வழியில் தரும். அதாவது உள்ளத்தைத் தூய்மை செய்து தரும். ஒரு காரியத்தைச் சீராகச் செய்ய வேண்டுமானுல், நீ அந்த சமயத்தில் அந்த வேலை மட்டும் போதுமென்று கருதிக்கொள்ளவேண்டும். ஒரு சமய வகுப்பிலுள்ள அபாயம் அதில் தக்க அளவு ஆர்வமில்லாததேயாம். அதில் முழு சிரத்தை இருக்கவேண்டும். (நிஷ்டை) இல்லாவிடில் அது வளராது. இப்பொழுது கருமாவில் கருத்துச் செலுத்தவேண்டுவது அவசியம்.

வினு : கருமாவில் நமது நோக்கு கருணையா அல்லது வேறெதாவதா ?

விடை : கருணையால் செய்யும் சேவை நல்லதுதான்; ஆனுல் பகவானை நினைத்துச் சேவை செய்வது அதனினும் உயரியது.

வினு : பிரார்த்தனையால் என்ன பயன்?

விடை : பிரார்த்தனையால் நுட்பமான குணங்கள் வெளியாகும்; அறிந்து செய்யப் பெற்ருல் எல்லா இச்சைகளும் நிறைவேறும்; அறிவுக்கு எட்டாமல் இயல்பாகவே செய்யப் பெற்ருல் பத்திலொன்றுதான் நிறைவேறும். அத்தகைய பிரார்த்தனை காம்யப் பிரார்த்தனையாகும். ஆகையால் அவை கைவிடப் படவேண்டும்.

வினு : மனித உருவம் பெற்றிருக்கும்போது பகவானை எப்படி அறிந்துகொள்வது?

விடை : ஜனங்களுடைய விதியை மாற்றும் வல்லமை பெற்றிருந்தால் அவர் பகவானுவார். எந்தச் சாதுவும் எவ்வளவு வேண்டுமோ அவ்வளவு உபாசனையில் முன்னேறி இருந்தாலும், இந்த (அபூர்வமான) அதிசயமான நிலையை அடைய முடியாது. ஸ்ரீ ராமகிருஷ்ணரைப் பகவானைக் கருதுபவரை நான் காணவில்லை. நாம் ஏதோ சூசகமாகத்தான் உணர்கிருேம்; அவ்வளவுதான். பகவானென்று அறிந்தும் உலக வாழ்க்கையில் பற்றுடனிருப்பது மூரணனது.

கேத்ரி மன்னர் பாராட்டுக்குப் பதில்

இந்தியா—சமய பூமி

[அமெரிக்காவில் சுவாமிஜி இருந்த காலத்தில் இராஜ புதனத்தைச் சேர்ந்த கேத்ரி மகாராஜா கீழ்க்கண்ட பாராட்டுரையை அவருக்கு அனுப்பியிருந்தார். இந்தப் பாராட்டுரை 1895 மார்ச் 4-ஆம் தேதியன்று தர்பாரில் நிறைவேற்றப் பட்டது.]

அன்பு நிறைந்த சுவாமிஜி,

இன்று இங்கு இந்த விசேஷ காரியத்துக்காகக் கூட்டப் பெற்ற தர்பாரின் தலைவன் என்ற முறையில், அமெரிக்காவில் சிக்காகோ நகரில் நடைபெற்ற சர்வ மத மகாநாட்டில் இந்து மதத்தைப் பற்றிச் சிறந்த முறையில் தாங்கள் எடுத்துக் கூறியதற்காக, என்னுடைய ராஜ்யத்தின் இதய பூர்வமான நன்றியை எனது சார்பாகவும் எனது பிரஜைகளின் சார்பாகவும் நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆங்கில மொழியில் உள்ள குறைபாடுகளைக் கவனிக்கும் போது, தாங்கள் விளக்கியிருப்பதைக் காட்டிலும் சரியாகவோ தெளிவாகவோ இந்து மதக் கோட்பாடுகளை வேறு யாரும் விளக்கியிருக்கமுடியும் என்று நான் கருதவில்லை.

தங்களுடைய சொற்பொழிவாலும் தாங்கள் நடந்து கொண்ட முறையாலும் வெளிநாடுகளில் தங்களுக்குப் பெரும் செல்வாக்கும் பெருமதிப்பும் ஏற்பட்டுள்ளது; இது, பல்வேறு நாட்டு மக்களிடையேயும் பல்வேறு மதங்களைச் சேர்ந்தவர்களிடையேயும் பெரும் பாராட்டுதலை அளித்திருக்கிறது. அது மட்டுமல்லாமல் தங்களுடைய தன்னலமற்ற சேவை மேலும் மேலும் வளருவதற்கு உதவியாக, தங்களை அவர்கள் நன்கு அறிந்துகொள்ளவும் உதவியுள்ளது. இதை, நாங்கள் எல்லாரும், வார்த்தைகளால் விவரிக்க முடியாத அருஞ் செயலெனப் பாராட்டுகிறோம். வெளி நாடுகளுக்குச் செல்வதிலும், நாம் எல்லாரும் உயிரெனப் போற்றும் நமது புராதன மதத்தின் உண்மைகளை அமெரிக்க மத

மகா நாட்டில் விளக்குவதிலும். தாங்கள் எடுத்துக்கொண்ட சிரமத்துக்கு, எங்களுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளும் முறையில் இச்சில வரிகளையாவது சம்பிரதாயமான முறையில் தங்களுக்கு எழுதாவிட்டால், எங்களுடைய கடமையிலிருந்து தவறியவர்களாவோம் என்பதை நாங்கள் உணருகிறோம். தங்களைப் போன்ற சிறந்த தகுதி வாய்ந்த ஒரு பிரதிநிதி கிடைத்தது இந்தியாவின் புகழுக்கு முற்றிலும் பொருத்தமேயாகும்.

சர்வ மத மகாநாட்டைக் கூட்டும் முயற்சியில் வெற்றி பெற்ற தங்களுக்கு உற்சாகமான வரவேற்பளித்த பெருமக்களுக்கும் எங்களுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். அந்தக் கண்டத்திற்குத் தாங்கள் முற்றிலும் புதியவராயிருந்தும் அவர்கள் தங்களை அன்புடன் நடத்தியது, தங்களுடைய பல்வேறு தகுதிகளில் அவர்கள் செலுத்திய அன்பைக் காட்டுவதுடன், அவர்களுடைய உயரிய தன்மையையும் எடுத்துரைக்கிறது.

இந்தக் கடிதத்தின் அச்சடித்த இருபது நகல்களை நான் இத்துடன் அனுப்பியுள்ளேன். இவைகளில் ஒன்றைத் தாங்கள் வைத்துக்கொண்டு, மற்றவைகளைத் தங்களுடைய நண்பர்களுக்கு விநியோகிக்கும்படி அன்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.

வணக்கம்.

தங்கள் மெய்யன்பன்,
ராஜா அஜித்சிங் பகதூர்,
கேத்ரி,

இதற்கு சுவாமிஜி கீழ்க்கண்டவாறு பதில் எழுதினார் :—

பெருமை மிகு மன்னரே,

"தர்மம் குன்றி அதர்மம் தலை தூக்கும்போது, மதத்தின் மாண்பை மீண்டும் நிலை நாட்டுவதற்காக நான் தோன்றுகிறேன்" என்பது புனித கீதையில் நித்திய சொரூபியாகிய இறைவன் கூறியதாகும். பிரபஞ்சத்தில் ஆன்மிக சக்தி சில காலம் உயர்ந்திருப்பதற்கும் மற்றும் சில காலம் தாழ்ந்து நிற்பதற்கும் மூலகாரணத்தை இவ்வாசகம் விளக்குகிறது.

மீண்டும் மீண்டும் இந்த மாறுதல்கள் தங்களுக்கே உரித்தான பொருத்த லயத்துடன் ஏற்பட்டுக்கொண்டே இருக்கின்றன. மற்ற ஒவ்வொரு பிரம்மாண்டமான மாறுதல் போல இவைகள் தங்களது வரம்புக்குட்பட்ட ஒவ்வொரு சிறு பொருளையும் பாதிக்கின்றன என்றாலும், தானே உள்ளாகிவிடும் தன்மை கொண்டுள்ள பொருள்களின் மீது தான் அவை விளைவிக்கும் மாறுதல்கள் அதிகமாய் இருக்கின்றன.

பொதுவாக உலகத்தில் மற்றெதிலும் உள்ளது போலவே, முதன் முதலாக இருந்தது குறைவற்ற ஒரு நடு நிலையாம். இந்த சம நிலை கெட்டபின், அதை மீண்டும் ஏற்படுத்துவதற்காகத் தொடர்ந்து பல போராட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருப்பதைத்தான் நாம் இயற்கையின் விளையாட்டு என்று கூறுகிறோம். முற்காலத்திலிருந்தது போன்ற தனி நிலை ஏற்படாத வரை இந்த மாறுதல்கள் நிகழ்ந்துதானாகவேண்டும். அதே போல, ஒரு குறுகிய அளவில் இந்தப் பூமியின் விஷயத்திலும் இது உண்மையே. உலகில் மனித இனம் தற்போதுள்ள நிலைமையில் இருக்கும் வரை பல்வேறு இனப் பிரிவுகளுக்கிடையேயும் தனிப்பட்ட மனிதர்களுக்கிடையிலும் கூட இவ்வளவு ஆழ்ந்த வேறுபாடுகளை அவர்கள் உண்டாக்கிக்கொண்டிருக்கும் வரை, வித்தியாசங்களும், இயற்கையான சகாவாகவிருக்கும் ஒன்றுபடுத்தும் போராட்டமும், இருந்துதானாகவேண்டும்.

ஆகவே, "பாரபட்சமற்ற" பிரிவினையும் சம நிலையும் உள்ள இந்த உலகத்தில், ஒவ்வொரு நாடும், ஒரு குறிப்பிட்ட சக்தியைத் தேக்கிவைத்து விநியோகிக்கும் மின்சார உற்பத்திக் கருவி போல் தோன்றுகிறது. ஒரு நாட்டிடம் எத்தனையோ உடைமைகள் இருக்கலாமென்றாலும், அந்தக் குறிப்பிட்ட சக்திதான், அதன் விசேஷ அம்சமாகப் பிரகாசிக்கிறது. உலகின் ஏதாவது ஒரு பகுதியில் ஒரு எழுச்சி ஏற்பட்டால், அது ஓரளவு எல்லாரையும் பாதிக்கலாமென்றாலும், அது எந்த இனத்தின் தனிச் சிறப்பான அம்சமாக விருக்கிறதோ அந்த இனத்தில்தான் ஆழமாக ஊடுருவிப்பாய்கிறது. அந்த இனத்தை மத்தியமாகக் கொண்டுதான் தனது பிரதி பலன்களை விளைவிக்கிறது.

இவைகளின் அடிப்படையில் கவனித்தால், மத உலகில் ஏதாவது எழுச்சி ஏற்படும்பொழுது அது இந்தியாவில் மகத்தான விளைவுகளை ஏற்படுத்துமென்பது உறுதி. ஏனெனில், உலக மத எழுச்சிகளுக்கெல்லாம் விளை நிலமாக இந்த பூமி தானே மீண்டும் மீண்டும் விளங்கிவந்திருக்கிறது? மற்ற எல்லாச் சிறப்புகளையும்விட நம் நாட்டுக்குள்ள தனிச் சிறப்பு, இந்தியா ஒரு சமய பூமி என்பதல்லவா?

தன்னுடைய லட்சியத்தை அடைய எது உதவுகிறதோ அதுதான் உண்மையென்று ஒவ்வொரு மனிதனும் கூறுகிறான். லோகாயத மனோபாவம் படைத்தவனுக்கு, பணமாக மாற்றக் கூடிய எல்லாம் உண்மை; மற்றவை உண்மையல்ல. ஆதிக்க மனோபாவம் படைத்தவனுக்கு, பிறர் மீது ஆட்சி செலுத்த வேண்டுமென்ற தன் கருத்து நிறைவேற்றுதற்கு உதவக் கூடிய எல்லாம் உண்மை; மற்றவை உண்மையல்ல. வாழ்க்கையில் தான் வைத்திருக்கும் விசேஷ ஆசையை எதிரொலிக்கக் கூடியவற்றை அன்றி வேறு எதையும் பயனுள்ளதாக மனிதன் காண்பதில்லை.

பணம், புகழ், அல்லது ஏதாவதொரு இன்பத்துக்காகத் தங்கள் வாழ்வின் சக்திகளையெல்லாம் பணயம் வைக்க விரும்புகிறவர்களுக்கு, போர்க்கவசம் பூண்ட துருப்புகளின் அணிவகுப்பையே பலத்தின் சின்னமாகக் கருதுகிறவர்களுக்கு, புலன்கள் அளிக்கும் இன்பந்தான் வாழ்க்கையளிக்கக் கூடிய ஒரே ஆனந்தம் என்று கருதுகிறவர்களுக்கு இந்தியா ஒரு பெரும் பாலைவனமாகத் தோன்றும். அதில் வீசும் ஒவ்வொரு கடுங்காற்றும், தாங்கள் அறிந்த வாழ்வின் வளத்துக்கு எமனாக இருப்பதையே அவர்கள் காண்பார்கள்.

ஆனால், புலன் உலகுக்கு அப்பாலிருந்து சொரியும் சிரஞ்சீவித்துவம் என்னும் ஊற்றை அள்ளிப் பருகித் தங்கள் தாகத்தைத் தணித்துக்கொண்டோருக்கு, பாம்பு தனது சட்டையைக் கழற்றிவைப்பது போன்று, பெண், பொன், புகழ் ஆகிய மூன்று பந்தபாசங்களையும் கழற்றிவிட்டோருக்கு, புலன்களால் கட்டுண்டவர்கள் இன்பம் எனக் கருதி, மேலே தங்க முலாம் பூசப்பட்ட, தூசி நிறைந்த, பலூன்களுக்காகப் பொறுமையுடன் சண்டை சச்சரவிட்டுக்கொள்வதை,

அமைதியான மனோநிலையின் உச்சத்திலிருந்து பச்சாதாபத்துடனும் தன்னிறைவுடனும் காண்பவர்களுக்கு, தங்களுடைய கடந்த கால நற்செயல்களால் அறியாமை என்னுந் தோல் உரிந்து, பேருக்காகவும் புகழுக்காகவும் வீண் ஆசை கொள்ளாது, அவைகளைக் கடந்து ஒரு பொருளைக் காணும் சக்தியுள்ளோருக்கு, அவர்கள் எங்கிருந்தாலும் சரி, ஆன்மிகத்தின் தாயகமும் கற்பகச் சுரங்கமுமான இந்தியா கம்பீரமாகத் தோற்றமளிக்கிறது. மறையும் நிழல்களைப் போன்ற பிரபஞ்சத்தில் ஒரு மெய்ப்பொருளான இறைவனை நாடிச்செல்லும் ஒவ்வொருவருக்கும் நம்பிக்கையின் சின்னமாக விளங்குகிறது.

புலன்களால் உணரக் கூடிய ஒரு நிதரிசனமான உருவத்தில் அளித்தால்தான் அதிகாரத்தையும் சக்தியையும் பெரும்பாலான மனிதர்கள் புரிந்துகொள்ள முடிகிறது. அவர்களுக்குப் போரின் வேகமும் கொந்தளிப்பும்தான்—அதனுடைய ஆற்றலுடனும் கவர்ச்சியுடனும்—உருப்படியான காரியமாகத் தோன்றுகிறது. தன் முன் வரும் எல்லாவற்றையும் சாய்த்துவிடும் சுழல்காற்றைப் போன்று வாழ்வில்வராத எந்த நிகழ்ச்சியும் அவர்களுக்கு உயிரற்றதுதான். வெளிநாட்டிலிருந்து வந்து நாட்டைப் பிடித்துக் கொண்டவர்களின் காலடியில் நூற்றுக்கணக்கான ஆண்டுகளாகக் கிடக்கும் இந்தியா, எதிர்க்கும் எண்ணமோ நம்பிக்கையோ இல்லாத இந்தியா, மக்கள் மத்தியிலே கொஞ்சமும் ஒற்றுமை இல்லாத இந்தியா, தேசபக்தி என்னும் உணர்ச்சியில்லாத மக்களைக்கொண்ட இந்தியா, அப்படிப்பட்டவர்களுக்கு, ஒரு குப்பை மேடாக, உயிரற்ற அழுகிப்போன பொருள்கள் நிறைந்ததாகத்தான் தோன்றும்.

யார் தகுதிவாய்ந்தவர்களோ அவர்கள்தான் நிலைப்பார்கள் என்று கூறப்படுகிறது. அப்படியாயின், சாதாரணமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கோட்பாடுகளின் அடிப்படையில் கொஞ்சமுந் தகுதியற்றதாகக் கருதப்படும் இந்த இனம், வேறு எந்த இனத்திற்கும் ஏற்பட்டிராத அளவு பயங்கரமான துரதிருஷ்டங்களைத் தாங்கியும் கூட சீர்குலைந்து போகும் அறிகுறி எதுவும் காணப்படாதது ஏன்? ஆக்கமும் தீவிரமும் படைத்ததாகக் கூறப்படும் இனங்கள் பெருகி

வந்த சக்தியெல்லாம் நாளுக்கு நாள் மங்கிக்கொண்டிருக்க, ஒழுக்கமில்லாதவனெனக் கூறப்படும் இந்துவின் சக்தி, அவர்களுடைய சக்தியைக் காட்டிலும் உயர்ந்துகொண்டு போவதேன்? ஒரு க்ஷண நேர முன்னறிவிப்பில் உலகத்தை இரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்கக் கூடியவர்கள் மிகவும் பாராட்ட வேண்டியவர்கள் என்பதில் ஐயமில்லை. சில இலட்சம் பேர்களைச் செல்வச் செழிப்பில் திளைக்கவைக்க வேண்டுமென்பதற்காக, உலக மக்களில் பாதிப்பேரைப் பட்டினி போடுபவர்களுடைய புகழ் மகத்தானதுதான். ஆனால், மற்றவன் வாய்க்குச் செல்லும் ஒரு கவள உணவைக் கூடப் பறிக்காமல், கோடிக்கணக்கான மக்களுக்கு அமைதியும் வாழ்வும் அளிக்கக் கூடியவர்களுக்கு ஒரு பாராட்டுதலும் இல்லையா? மற்றவர்களைச் சிறிதும் துன்புறுத்தாமல், எத்தனையோ நூற்றுண்டுகளாக எண்ணற்ற மக்களின் விதியை வழிநடத்திச் செல்வதில் ஒரு சக்தியும் காணக் கிடைக்கவில்லையா?

பழங்கால இனங்கள் எல்லாவற்றையும் பற்றிய புராணங்கள் சில வீரர்களைப் பற்றிய கதைகளை நமக்குக் கூறுகின்றன. இவ் வீரர்களுடைய உயிர் அவர்கள் உடலின் ஒரு சிறு பகுதியில் இருந்ததாகவும், அப்பகுதியைத் தாக்கும் வரை அவர்களுடைய உயிருக்கு எவ்வித ஊறும் செய்துவிட முடியாதென்றும் அவை கூறுகின்றன. நாடுகளின் விஷயத்திலும் இது உண்மையாகவே தோன்றுகிறது. இப்படிப் பட்ட கேந்திரம் ஒவ்வொரு தேசத்துக்கும் இருப்பது போலவே தோன்றுகிறது. இக்கேந்திரத்திற்கு ஊறு விளைவிக்கும்வரை, எந்தத் துர்ப்பாக்கியமும் அந்த நாட்டை அழித்துவிட முடியாது.

மதத்தில்தான் இந்தியாவின் ஜீவன் இருக்கிறது. தங்களுடைய முன்னேர்களின் இப்பெருஞ் சொத்தை இந்து இனத்தவர் மறக்காதவரை, அவர்களை அழிக்கக்கூடிய சக்தி எதுவும் கிடையாது.

ஓயாது கடந்த காலத்தைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருப்பவர்களை, இக்காலத்தில் ஒவ்வொருவரும் குறை கூறுகிருர்கள். இவ்வாறு கடந்த காலத்தைப் பற்றி

ஓயாது சிந்தித்துக் கொண்டிருப்பதுதான், இந்தியாவின் துயரங்களுக் கெல்லாம் காரணம் என்றும் கூறப்படுகிறது. ஆனுல் எனக்கோ இதற்கு நேர் மாருனதுதான் உண்மை என்று படுகிறது. பழங்காலத்தை மறந்திருந்தவரை, ஹிந்து தேசம் உணர்ச்சியற்ற நிலேயில் மயங்கிக் கிடந்தது; கடந்த காலத்தைப் பற்றி அறிய ஆரம்பித்தார்களோ இல்லேயோ! ஒவ்வொரு திக்கிலும் ஒரு புது ஜீவன் தோன்ற ஆரம்பித்து விட்டது. இந்தக் கடந்த காலத்திலிருந்துதான் எதிர் காலத்தை உருவாக்க வேண்டும்; கடந்த காலம்தான் எதிர் காலமாக மாறுகிறது.

ஆகையால், எந்த அளவு ஹிந்துக்கள் தங்களுடைய பழங் காலத்தைப்பற்றி அறிந்திருக்கிருர்களோ, அந்த அளவு அவர்களுடைய எதிர் காலம் பிரகாசிக்கும். ஒவ்வொருவர் கவனத்திற்கும் கடந்த காலத்தை யார் கொண்டு வருகிருரோ அவர் இந்த நாட்டிற்குச் சிறந்த நன்மை புரிந்தவராவார். நம்முடைய புராதன மக்களின் சட்டங்களும், பழக்க வழக்கங்களும் தப்பானவையாக இருந்து வீழ்ச்சி ஏற்பட வில்லே. நாம் சரியான முறையில் புரிந்து கொண்டு தொடர்ந்து அவற்றை ஒழுங்காக முடிவு வரை நடத்தி வராததினுல்தான் ஏற்பட்டது இவ் வீழ்ச்சி.

விமர்சனக் கண்ணேட்டத்துடன் நமது பழங்காலத்தை அறியும் மாணவர்கள் இந்தியாவின் சமூக நியதிகளெல்லாம் அவ்வப்போது பெரிய மாறுதல்களடைந்து வந்தன் வென்பதை அறிவார்கள். சமுதாயச் சட்டங்கள் முதன் முதலாகக் கொண்டு வரப்பட்ட காலத்தில், ஒரு மகத்தான திட்டத்தின் திருவுருவமாக அவை விளங்கின. இத்திட்டம் காலப் போக்கில் சிறிது சிறிதாக வெளிப்படுவதாக இருந்தது. புராதன இந்தியாவில் வாழ்ந்த மா முனிவர்கள் மிகுந்த தூர திருஷ்டியுடன் நீண்ட எதிர் காலத்தைக் கண்டார்கள். ஆனுல் அவர்களுடைய அறிவுத்திறனே அறிந்து பாராட்ட, உலகம் பல நூற்ருண்டுகள் காத்திருக்க வேண்டியிருந்தது. அவர்களுடைய வம்ச பரம்பரையினரும் இவ்வாறே காத்திருக்க வேண்டியிருந்தது; ஆகையால் இந்த வியக்கத் தக்க திட்டத்தின் முழுப் பொருளேயும் அறிந்து பாராட்ட அவர்

களால் இயலவில்லை. இந்தியாவின் வீழ்ச்சிக்கு அதுதான் ஒரே காரணம்.

புராதன இந்தியாவானது, பல நூற்றுண்டுகளாக பிராமணர்களுக்கும் க்ஷத்திரியர்களுக்குமிடையே, ஒரு போர்க்களமாக விளங்கி வந்தது. முன்னணியில் இருந்த இந்த இரண்டு வகுப்பினரும் தாங்கள் ஆசைப்பட்ட திட்டங்களுக்காக இந்தியாவைப் போர்க்களமாக்கினர்.

ஒரு புறம், மக்கள் மீது அரசர்கள் சட்டவிரோதமான கொடுங் கோன்மை ஆட்சி நடத்துவதற்கு மத குருக்கள் முட்டுக்கட்டையாக நின்றார்கள். பொதுமக்கள்தான் தங்களுடைய சட்டபூர்வமான இரையென்று க்ஷத்திரியர்கள் கருதி வந்தார்கள். மற்றொருபுறம் மக்களைத் தங்களுக்குக் கீழ் கட்டுப் படுத்த மத குருக்கள் நாளுக்கு நாள் சடங்கு முறைகளை அதிகரித்துக் கொண்டே வந்தனர். வெற்றிகரமாக எதிர்த்துப் போராடிய ஒரே சக்தி, க்ஷத்திரியர்களின் சக்திதான்.

இந்தப் போராட்டம் நம்முடைய வரலாற்றின் ஆரம்ப காலத்திலேயே தொடங்கி விட்டது. சுருதிகள் முழுவதிலும் இதைத் தெளிவாகக் காணலாம். க்ஷத்திரியர்களின் தலைவனாகவும் ஞானத்தைப் பரப்பியவர்களின் தலைவனாகவும் ஸ்ரீ கிருஷ்ணர் வந்து ஒத்துப்போகும் வழியைக் காட்டிய போதுதான் தற்காலிகமாக ஓய்வு ஏற்பட்டது. இதன் விளைவுதான் கீதாபோதனை—தத்துவ, சாஸ்திரம், தயாளம், மதம் ஆகியவற்றின் சாரம். ஆயினும் பழைய பிணக்கின் காரணங்கள் இருந்துகொண்டேயிருந்தன. காரணங்கள் இருக்கையில் விளைவு ஏற்படாமல் இருக்க முடியுமா?

ஏழைகள் பாமரர்கள் ஆகியோர் மீது ஆதிக்கம் செலுத்த வேண்டுமென்று இந்த இரண்டு வகுப்பினருக்கும் அளவுக்கு மீறிய ஆசை இருந்தது. ஆகையால் மறுபடியும் போராட்டம் கடுமையாயிற்று. அந்தக் காலத்தைப் பற்றி நமக்குக் கிடைக்கும் இலக்கியங்கள் சொற்பமே. அவை அக்காலத்திலிருந்த பெரும் போராட்டத்தை ஒரு சிறிது எடுத்துக் கூறுகின்றன. கடைசியில் இந்தப் போராட்டம் க்ஷத்திரியர்களுக்கு வெற்றியாக முடிந்தது. ஞானத்திற்கு,

ருயாள மனோபாவத்துக்கு வெற்றியாக முடிந்தது. சடங்கு முறைகள் ஒழிந்தன. இவைகளில் பெரும்பாலானவை பின்னால் தலை தூக்கவேயில்லை. இந்தப் பெரிய எழுச்சியைத் தான் புத்த மத சீர்திருத்தம் என அழைக்கிறோம். மத அடிப்படையில் கவனித்தால் இச்சீர்திருத்தம், சடங்கு முறைகளிலிருந்து விடுதலையளிக்கும் சின்னமாக விளங்கியது. அரசியல் அம்சத்தில் பார்த்தால், மதகுருக்களை க்ஷத்திரியர்கள் வெற்றி கண்டதன் அடையாளமாக இருந்தது.

புராதனகால இந்தியாவில் தோன்றிய இரு மாபெரும் மனிதர்களும்—கிருஷ்ணனும் புத்தரும்—க்ஷத்திரியர்களே என்பது குறிப்பிடத்தக்க உண்மையாகும். இதைக் காட்டிலும் குறிப்பிடத்தக்கது என்னவென்றால் இந்த இரண்டு தெய்வீக மனிதர்களும், உயர் சாதி, கீழ் சாதி, ஆண், பெண் என்ற வேற்றுமை பாராட்டாது ஒவ்வொருவருக்கும் ஞான வாசல் திறந்துவிட்டார்கள் என்பதுதான்.

புத்த மதமானது அற்புதமான தார்மீக பலத்தை அளிக்கக் கூடியதாக இருந்ததென்றாலும், ஏற்கெனவே ஸ்தாபிதமாயிருந்த நம்பிக்கைகளைக் கடுமையாக எதிர்ப்பதாய் இருந்தது. அதனுடைய சக்தியில் பெரும் பகுதி, "இது கூடாது, அது கூடாது" என்று தடுப்பதிலேயே செலவிடப்பட்டதால், அது, தான் பிறந்த பூமியிலேயே மடிய நேர்ந்தது. அதில் எது மீதமிருந்ததோ அது மூடப்பழக்க வழக்கங்களும் சடங்குகளும் நிறைந்திருந்தது. எந்த மூடப்பழக்கவழக்கங்களையும் சடங்குகளையும் அது ஒழிக்க வந்ததோ அதைப்போன்று நூறு மடங்கு சடங்குகளும் மூடப் பழக்கவழக்கங்களும் உடையதாக இருந்தது. வேதங்களில் கூறப்பட்ட மிருக பலியை ஒழித்துக் கட்டுவதில் இது ஓரளவு வெற்றி பெற்றது என்றாலும், நாட்டைக் கோவில்கள், விக்கிரகங்கள், மதச் சின்னங்கள், ஞானிகளின் எலும்புகள்! ஆகியவைகளால் நிறைத்தது.

இவைகளுக்கெல்லாம் மேலாக, ஆரியர்கள், மங்கோலியர்கள், பழங்குடிமக்கள் ஆகியோரின் கதம்பத்தை அது சிருஷ்டி செய்ததில், சில கோரமான வாமாச்சாருக்கு (அச்சமும் அருவருப்பும் தரும் சடங்குமுறை நடத்தும் இடதுசாரி

யினர்) அது தன்னையறியாமலே இடமளித்துவிட்டது. அந்தப் பெரிய ஆசானுடைய போதனைகளின் நகைப்பிற்கிடமான போலியை, ஸ்ரீ சங்கரரும் அவரைப் பின் பற்றிய சந்நியாசிகளும் வெளியே துரத்த நேர்ந்ததன் முக்கிய காரணம் இதுவே.

இவ்வாறாக, மனித உருவில் வந்த ஒரு மாபெரும் ஆன்மாவினாலேயே, பகவான் புத்தராலேயே தொடங்கிவைக்கப்பட்ட ஒரு ஜீவ நதி நச்சுக் குளமாகியது. இதைச் சீர்திருத்துவதற்குச் சங்கரர் பிறக்கும் வரை, அடுத்தாற்போல் வெகு வேகமாக இராமாநுஜரும் மத்வரும் தொடர்ந்து பிறக்கும் வரை, பல நூற்றாண்டுகள் இந்தியா காத்துக்கிடக்க நேரிட்டது.

இந்த சந்தர்ப்பத்தில் இந்திய வரலாற்றில் முற்றிலும் புதிய ஒரு அத்தியாயம் தொடங்கிற்று. புராதன கால க்ஷத்திரியர்களும் பிராம்மணர்களும் மறைந்தார்கள். ஹிமாலயத்துக்கும் விந்தியத்துக்கும் இடையே உள்ள பூமி, ஆரியர்களின் பிறப்பிடம், கிருஷ்ணனையும் புத்தரையும் ஈன்று தந்த தேசம், இராஜ ரிஷிகளையும் பிரம்மரிஷிகளையும் தாலாட்டி வளர்த்த தொட்டில் மௌனமாகியது. இந்திய தீபகற்பத்தின் தென்கோடியிலிருந்து, பேச்சிலும் உருவத்திலும் வேறுபட்டவராக இருந்த இனத்திலிருந்து, புராதன பிராமணர்களின் வழித் தோன்றல்கள் நாங்கள் தான் என்று கூறிக்கொண்டவர்களிலிருந்து, சீர்கெட்டுப்போன புத்த மதத்துக்கு எதிர்ப்புத் தோன்றியது.

ஆர்யவர்த்தத்தைச் சேர்ந்த பிராமணர்கள், க்ஷத்திரியர்கள் ஆகியோரின் கதி என்னவாயிற்று? தாங்கள்தான் பிராமணர்கள் அல்லது க்ஷத்திரியர்கள் என்று கூறிக்கொண்டிருந்த சில கலப்பு வகுப்பினரைத் தவிர அவர்கள் முற்றிலும் மறைந்து போனார்கள். இந்த உலகம் முழுவதுமே

पृटद्देशप्रसूतस्य सकाशाग्रजयन्मन

இத்தேசத்திலே பிறந்த சிறந்த குடியினரிடமிருந்து பாடம் படித்துக்கொள்ள வேண்டுமென அவர்கள் தற்பெருமையுடன் கூறிக்கொண்டது வீணாயிற்று. சாம்பல் பூசி,

சாக்கை அணிந்து, அடக்கஒடுக்கத்துடன், தென்னிந்தியர்கள் காலடியில் உட்கார்ந்து அவர்கள் பாடம் படித்துக்கொள்ள வேண்டியதாயிற்று; இதன் விளைவாகத் தான் மீண்டும் இந்தியாவுக்கு வேதம் கிடைத்தது. முன்பு எக்காலத்திலும் கண்டிராதவாறு வேதாந்தம் புத்துயிர் பெற்றது. கிரகஸ்தர்கள் கூட ஆரண்யகத்தைப் படிக்க ஆரம்பித்தார்கள்.

புத்தமத இயக்கத்தில் க்ஷத்திரியர்கள்தான் உண்மையான தலைவர்களாக இருந்தார்கள். அவர்கள் கூட்டங் கூட்டமாகப் புத்தமதத்தில் சேர்ந்தார்கள். சீர்திருத்தம் செய்யவேண்டும் என்பதிலும் மதமாற்றம் செய்யவேண்டுமென்பதிலும் அவர்களுக்கிருந்த ஆர்வத்தில், சம்ஸ்கிருதத்தைப் புறக்கணித்துவிட்டு மக்களுக்குப் புரியும் மொழி வகையை உருவாக்கினார்கள். இதனால் க்ஷத்திரியர்களில் பெரும்பாலோருக்கு சம்ஸ்கிருதப்படிப்போ வேத ஞானமோ இல்லாமற் போய்விட்டது. இவ்வாறு தென்னிந்தியாவிலிருந்து வந்த இந்தச் சீர்திருத்த அலை, ஓரளவு மத குருக்களுக்கும் புரோகிதர்களுக்கும் மட்டும் பலன் அளித்தது. இந்தியாவில் வாழ்ந்த மற்ற கோடிக்கணக்கான மக்களைப் பொருத்தவரை, அவர்கள் அதற்கு முன்பு அறிந்திராதவாறு அதிக விலங்குகளை மாட்டியது.

க்ஷத்திரியர்கள் எப்போதுமே இந்தியாவின் முதுகெலும்பாகவும், விஞ்ஞானம், சுதந்திரம் ஆகியவற்றின் ஆதரவாளர்களாகவும் இருந்து வந்திருக்கிறார்கள். இந்தியாவில் மூட நம்பிக்கைகளை அகற்ற மீண்டும் மீண்டும் அவர்கள் குரல் எழுப்பியிருக்கின்றனர். இந்தியாவின் வரலாறு முழுவதிலும், ஆக்கிரமிப்பு மனோபாவத்துடன் மத குருக்களின் கொடுங்கோன்மை ஏற்பட்ட போது, அதை வெற்றிகரமாகத் தடுக்கும் அரணாக விளங்கி வந்திருக்கிறார்கள்.

க்ஷத்திரியர்களில் ஒரு பெரும் பகுதியினர் அறியாமையில் மூழ்கி, அவர்களில் மற்றொரு பகுதியினர் மத்திய ஆசியாவிலிருந்து வந்த அநாகரீக மக்களுடன் கலந்து, மதகுருக்களின் ஆட்சியை நிலை நிறுத்தத் தங்கள் வாள் பலத்தை அளித்த போது இந்தியத் தாயின் கையிலிருந்த விஷக்

கோப்பை நிரம்பிவிட்டது. இப்பாரத பூமியும் கீழே சாய்ந்தது. இம்மயக்கத்திலிருந்து க்ஷத்திரியர்கள் தெளிந்து எழுந்து, தம்மைத்தாமே விடுவித்துக்கொண்டு, மற்றவர்களின் காலைப் பிணைத்திருந்த சங்கிலிகளையும் அறுத்து எடுக்கும் வரை, இந்தியா சாய்ந்தது சாய்ந்தது தான்! புரோகிதத் தொழில் இந்தியாவைப் பிடித்த ஒரு சனியனாகும். தன்னுடைய சகோதரனை மனிதன் தாழ்த்திவிட்டு, தான் தாழ்வு அடையாமல் தவிர்க்க முடியுமா?

மன்னரே! தெரிந்துகொள்ளுங்கள். உங்களுடைய முன்னோர்கள் கண்டுபிடித்துக் கொடுத்த உண்மைகளிலெல்லாம் மகத்தான உண்மை, இப்பிரபஞ்சமெல்லாம் ஒன்றே என்பதுதான். ஒருவன் தனக்குத்தானே தீங்கு விளைவித்துக் கொள்ளாமல் மற்றொருவனுக்குத் தீங்கு விளைவிக்க முடியுமா? பிராம்மணர்களும் க்ஷத்திரியர்களும் செய்த கொடுங்கோன்மை வட்டிபோட்டு அவர்கள் தலையிலே மறுபடியும் விழுந்திருக்கிறது. ஆயிரம் ஆண்டுகள் அடிமைத்தனமும் இழிவும் தான் அவர்கள் கர்மவினையின் பலன்.

"மனதை ஒருமையில் நிறுத்தியவர்கள், இந்தப் பிறப்பிலேயே காலத்தையும் இடத்தையும் கடந்திருக்கிறார்கள்" என்று உங்கள் முன்னோர்களில் ஒருவரே கூறியிருக்கிறார். கடவுளே அவதாரமெடுத்து வந்ததாகக் கருதப்படும் ஒருவரே இவ்வாறு கூறியுள்ளார். நாமெல்லாரும் அதை நம்புகிறோம். அவருடைய சொற்கள் வீணானவையா? அர்த்தமற்றவையா? இல்லையேல்—அவைகள் அர்த்தமற்றவையல்ல என்பது நாமெல்லோருக்கும் தெரியும்—பிறப்பு, சாதி, ஏன், தகுதிகளையும் மீறிய, படைப்பில் உள்ள பரிபூரண சமத்துவத்தை மறுக்க முயலுவது பெருந்தவறாகும். ஒன்று என்ற நிலையை அடையும் வரை, யாரையும் காப்பாற்ற முடியாது.

ஆகையால், பெருமை மிகு அரசே! வேதாந்த போதனைகளைக் கடைப்பிடியுங்கள். எந்த உரையாசிரியர் அல்லது விமர்சகர் கூறும் பொருளையும் அடிப்படையாக வைத்து நீங்கள் அதைப் பின்பற்றவேண்டாம். உங்களுக்குள் இருக்கிறானே இறைவன் அவன் புரிந்துகொள்ளும் முறையில் அதைப் பின்பற்றுங்கள். அவைகளுக்கெல்லாம்

மேலாக, எல்லாப் பொருள்களிலும் எல்லா உயிர்களிலும் ஒன்றேயிருக்கிறது என்ற இந்தத் தத்துவத்தை, அதாவது எல்லாவற்றிலும் இறைவனைக் காணவேண்டும் என்ற இந்தத் தத்துவத்தைக் கடைப்பிடியுங்கள்.

இதுதான் முக்திக்கு வழி; பலவாகக் காண்பது தான் பந்த பாசத்துக்கு வழி. லோகாயத சமத்துவம் இல்லாமல் லோகாயத சுதந்திரம் அடைய எந்த மனிதனே அல்லது நாடோ முயற்சி செய்ய முடியாது. அது போன்றே மனதில் சமத்துவ நிலை அடையாமல் மன விடுதலையை அடைய முடியாது.

அஞ்ஞானம், வேற்றுமை பாராட்டல், ஆசை ஆகிய மூன்றும்தான் மனிதனின் துயரங்களுக்கு அடிப்படையான மூன்று காரணங்கள். இதில் ஒன்று வந்தால், மற்ற இரண்டும் பிரிக்க முடியாது, சேர்ந்தே வந்துவிடும். ஒரு மனிதன், மற்றொரு மனிதனைக் காட்டிலும் ஏன், மற்றொரு மிருகத்தைக் காட்டிலும் கூடத் தன்னை எவ்வாறு உயர்ந்தவனாகக் கருதலாம்? எல்லாம் ஒன்றே:

त्वं स्त्री त्वं पुमानसि त्वं कुमार उत वा कुमारी

"நீதான் ஆண், நீதான் பெண், நீதான் குமாரன், நீதான் குமாரி"

"இவைகளெல்லாம் சந்நியாசிகளுக்குத்தான் சரி; ஆனால், நாங்கள் இல்லற வாசிகளாயிற்றே" என்று சிலர் கூறுவார்கள். மற்றும் பல கடமைகளை ஆற்ற வேண்டியுள்ள ஒரு இல்லறவாசி இந்த உயர்ந்த நிலையை அடைய முடியாது என்பது உண்மையே. ஆயினும் இதுவும் அவனது இலட்சியமாயிருக்க வேண்டும். ஏனெனில், ஒன்றென உணரும் நிலையை அடைவதுதான் சமூகம், மனிதவர்க்கம், மிருகங்கள், இயற்கை ஆகிய எல்லாவற்றின் இலட்சியமும். ஆனால் அந்தோ! ஒன்று என்ற நிலையை அடைய வேற்றுமை பாரட்டுவதுதான் வழி என்று எண்ணுகின்றனர். கெட்டது செய்வதன் மூலம் நல்லதை அடையலாம் என்பது அவர்கள் கருத்துப் போலும்!

இதுதான் மனித இயற்கையின் விபரீதம், மனிதவர்க்கத்துக்கு வந்தபடி, எல்லாத் துன்பங்களுக்கும் மூலகாரணம்

இந்த சமத்துவமின்மை உடல், மன, ஆன்மீக பந்தங்களுக்கெல்லாம் இது தான் பிறப்பிடம்.

समं पश्यन् हि सर्वत्र समस्थितमीश्वरम् ।

न हिनस्त्यात्मनात्मानं ततो याति परां गतिम् ॥

"எங்கும் சமத்துவமாக இறைவன் இருக்கிறதை அறிவாணுதலால் அவன் ஆன்மாவை ஆன்மாவால் துன்புறுத்துவதில்லை. ஆகையால் மிக உயர்ந்த இலட்சியத்தை அடைகிறுன்" இந்த ஒரே வாசகம், ஒருசில சொற்களில், எல்லாரும் உய்வதற்கான பொதுவழியைக் காட்டி விடுகிறது.

இராசபுதன வீரர்களாகிய நீங்கள், புராதன இந்தியாவின் பெருமையாக விளங்கினீர்கள். உங்களுடைய வீழ்ச்சிக்குப்பின் இந்த தேசம் சீர்கேடடைந்தது. க்ஷத்திரிய பரம்பரையைச் சேர்ந்தவர்கள், பிராமண பரம்பரையைச் சேர்ந்தவர்களுடன் ஒத்துழைத்தால்தான் இனி இந்தியாவை உயர்த்த முடியும். கிடைக்கும் பணத்தையும் அதிகாரத்தையும் பங்குபோட்டுக் கொள்வதற்காக இவர்கள் ஒத்துழைக்க வேண்டுமென்று நான் கூறவில்லை. ஆனுல் பலவீனமானவர்களுக்கு உதவவும், அறியா மக்களுக்கு எழுத்தறிவைப் புகட்டவும், தங்களுடைய முன்ஞேர்களின் புனிதபூமி இழந்த பெருமை மீண்டும் பெறவும் இவர்கள் ஒத்துழைக்க வேண்டும்.

இதுதான் பொருத்தமான சமயம் என்பதை யார் மறுக்க முடியும்? மறுபடியும் சக்கரம் சுழன்று விட்டது. மறுபடியும் இந்தியாவிலிருந்து குரல் எழும்பி விட்டது. இந்தக் குரல் விரைவில் உலகின் எல்லாப் பகுதிகளிலும் கேட்டுத் தானுக வேண்டும். ஒரு குரல் எழும்பிவிட்டது. அதிலிருந்து எதிரொலிகள் கிளம்பி நாளுக்கு நாள் அது பலமடைந்து வருகிறது. இதற்கு முந்திய குரல்களையெல்லாம் விட இக்குரல் பலம் வாய்ந்தது, ஏனெனில் அவையெல்லாம் சேர்ந்ததல்லவா இது? சரசுவதி நதியின் கரையில் முனிவர்களிடம் பேசிய குரல், மலைகளின் பிதா என்று அழைக்கப்படும் இமயத்தின் ஒவ்வொரு குன்றிலும் எதிரொலித்த குரல், கிருஷ்ணர், புத்தர், சைதன்யர் ஆகியவர்களின் மூலம் வெள்ளத்

தைப்போல் சமவெளியில் இறங்கிய குரல், மீண்டும் பேசிவிட்டது. மீண்டும் கதவுகள் திறந்து விட்டன. வாசற்கதவு மிகவும் விசாலமாகத் திறக்கப்பட்டிருப்பதால், ஜோதி நிறைந்த அந்த சாம்ராஜ்யத்துக்குள் நுழையுங்கள்.

எனது அன்புள்ள அரசே, நீங்கள் இதிலிருந்து ஒதுங்கியிருப்பீர்களா? நிலையான, நிரந்தரமான மதத்தைத் தாங்கி, அதன் உறுதிமிக்க பாதுகாவலர்களாகவும் துணைவர்களாகவும் விளங்கும் ஒரு இனத்தின் வழித்தோன்றலாகிய நீங்கள் ஒதுங்கியிருப்பீர்களா? நிச்சயமாக இருக்க மாட்டீர்கள் என்பதை நான் அறிவேன். மதத்திற்கு உதவ முன்வரும் முதற்கை உங்களுடைய தாகத்தான் இருக்கும் என்பதையும் நான் அறிவேன். இராஜா அஜித்சிங் அவர்களே, உங்களுடைய குடும்பத்தின் விஞ்ஞான சாதனைகள் பிரபலமானவை. அவைகளுடன், ஒரு துறவியே பெருமைப் படக்கூடிய பரிசுத்தமான ஒழுக்கமும் மனித வர்க்கத்தின் மீது எல்லையற்ற அன்பும் நிறைந்த உங்களைப்பற்றி நான் நினைக்கும் போது இந்த இறவா மதத்தில் மகத்தான மறுமலர்ச்சி ஏற்படும் என்ற உறுதியான நம்பிக்கை ஏற்படுகிறது. உங்களைப் போன்றவர்களெல்லாம் அதைப்புனரமைக்கச் சித்தமாக இருக்கும்போது, அது ஏன் புத்துணர்வு பெருது?

உங்களுக்கும் உங்களைச் சார்ந்தவர்களுக்கும் என்றென்றும் இராமகிருஷ்ணரின் ஆசீர்வாதங்கள் கிடைக்க வேண்டும். பலருடைய நல் வாழ்வுக்காகவும் சத்தியத்தைப்பரப்புவதற்காகவும் நீங்கள் நீடுவாழ வேண்டும் என்பதே எனது ஓயாத பிரார்த்தனை.

விவேகானந்தா.

என் வீர மைந்தர்க்கு

[1894-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19-ந் தேதி நியூ யார்க் நகரிலிருந்து அளசிங்கப் பெருமாளுக்கு எழுதியது.]

இயக்கத்தில் நெருங்கிச் சேருங்கள். அன்பு நேர்மை, பொறுமை இவை தவிர வேறென்றும் தேவையில்லை. வாழ்வு என்பது வளர்ச்சியே; அதாவது விரிவடைதலே; அதுவே அன்பாகும். ஆகவே அன்பே வழ்க்கை எனப் படும்; அன்புதான் வாழ்விற்குரிய ஒரே நியதியாகும். தன்னலம் யாவும் இறப்பாகும். இன்றும் இனி என்றும் இருக்கும் உண்மைக் கருத்து இதுவே. நலம்புரிதலே வாழ்வு; அயலார்க்கு நன்மை புரியாதிருத்தலே சாவு. மனிதர்களில் தொண்ணூறு சதவிகிதம் இறந்தவர்களே; பேயர்களே. ஏனென்றால், என் அருமை மைந்தர்காள்! நேசிக்கின்றவர் தவிர வேறு யாரும் வாழ்வதாகக் கருதப்பட மாட்டார்கள். சிந்தியுங்கள்! என் குழந்தைகளே! சிந்தியுங்கள்; ஏழைகள் அறிவற்றவர்கள் தாழ்த்தப் பட்டவர்கள் பற்றிச் சிந்தியுங்கள்! பின் ஆன்மாவை இறைவனது திருவடியில் அர்ப்பணியுங்கள். பிறகு சக்தி, உதவி, எல்லைக்கடங்காத் திறமை ஆகியன உண்டாகும். போராடு, போராடு என் பதே பத்து ஆண்டுகளாக என் வாழ்வின் குறிக்கோளாக இருந்தது. போராடு என்றே இன்றும் கூறுகின்றேன். எங்கும் இருள் நிறைந்திருந்தபொழுது, போராடு என்று கூறுவது வழக்கம். ஒளி தோன்றத் தொடங்கிய பிறகும் நான் போராடு என்றே பகர்கின்றேன். என் குழந்தைகளே! அஞ்சாதீர்கள். எண்ணற்ற தாரகைகள் நிரம்பிய ஆகாயமானது உங்களை நசுக்கிவிடுமோ என்ற அச்ச நோக்கத்துடன் மேலே பார்க்காதீர்கள். காத்திருங்கள்! இன்னும் சில மணி நேரங்களில் அது முழுவதும் உங்கள் காலடியில் கிடக்கும். காத்திருங்கள்! பயன் தரவல்லது செல்வம் அன்று; பெயர் அன்று; புகழ் அன்று; கல்வி அன்று; அன்பு ஒன்றே. நற்பண்பே துன்பங்களாகிய திண்மைமிக்க சுவரைப் பிளந்து அதற்கு வழி செய்கிறது.

இப்பொழுது நம்முன் உள்ள விஷயம் இதுவே. சுதந்திரமின்றி வளர்ச்சி இராது என்பதே. நம் முன்னோர்கள்

சமயக் கொள்கைகளுக்குச் சுதந்திரம் அளித்தார்கள். நாமும் அபூர்வமான சமயத்தைப் பெற்றுள்ளோம். ஆனால், அவர்கள் சமூகத்தின் காலில் கடின விலங்கை மாட்டிவிட்டார்கள். நம் சமூகம் பயங்கரமானது அல்லது பேயாட்டமானது என்று ஒரே வார்த்தையில் கூறலாம். மேலை நாடுகளில், சமூகத்திற்கு என்றும் சுதந்திரம் இருந்திருக்கின்றது. அவர்களைப் பாருங்கள். அதே நேரத்தில் அவர்களது சமயத்தையும் நோக்குங்கள்.

சுதந்திரமே வளர்ச்சியின் முதல் தேவையாகும். எண்ணவும் பேசவும் மனிதனுக்கு எவ்வாறு சுதந்திரம் இருக்கின்றதோ, அவ்வாறே மற்றவர்க்குத் தீங்கு விளைவியாத வரையில் உணவு, உடை, திருமணம், மற்றும் எல்லாவற்றிலும் அவனுக்குச் சுதந்திரம் வேண்டும்.

நாம் உலகாயத நாகரிகத்தை எதிர்த்து முட்டாள்தனமாகப் பேசுகின்றோம். அந்த அறியாமையை ஒப்புக்கொண்டாலும், இந்தியாவில் ஆன்மிக வளர்ச்சி பெற்ற ஆண்களும் பெண்களும் நூறுயிரவர் உள்ளனர். இப்பொழுது, இவர்களது ஆன்மிக வளர்ச்சிக்காக, முப்பது கோடி மக்கள் காட்டுத்தனத்திலும் (நாகரிகமின்மையிலும்) பட்டினியிலும் மூழ்கிக் கிடக்க வேண்டுமா? எதற்காக ஒருவன் பட்டினிகிடக்க வேண்டும்? எப்படி முகம்மதியர்களால் இந்துக்களைத் தோற்கடிக்க முடிந்தது? இந்துக்கள் உலகாயத நாகரிகம் அறியாமையே காரணமாகும். தையற்காரனால் தைக்கப்பெற்ற உடை உடுக்க முகமதியர்கள் இந்துக்களுக்குக் கற்றுத் தந்தார்கள். உணவில் தெருப்புழுதி கலவாதவாறு எப்படித் தூய்மையாக உண்பது என்பதை இந்துக்கள் முகம்மதியரிடமிருந்து கற்றார்கள்! பொருளியல் நாகரிகம் மட்டுமின்றி, ஆடம்பர வாழ்க்கைகூட, ஏழைகளுக்கு வேலை தருவதற்காகத் தேவைப்படுகின்றது. உணவு! உணவு! இங்கு எனக்கு உணவு தரமுடியாமல், விண்ணில் நிலைத்த இன்பம் தருவதாகக் கூறப்படும் கடவுளை நான் நம்பவில்லை. இந்தியா உயரவேண்டும்; ஏழைகள் உண்ணவேண்டும்; கல்வி பரவவேண்டும்; புரோகிதராதிக்கம் எனும் தீமை நீக்கப்பட வேண்டும். புரோகிதராதிக்கம் இருக்கக்கூடாது; சமூகக் கொடுமை இருக்கக்கூடாது!

உணவுப் பெருக்கமும், எல்லாருக்கும் சிறந்த வாய்ப்பும் இருக்கவேண்டும்! நமது இளம் மூடர்கள் ஆங்கிலேயரிடமிருந்து மேலும் அதிகாரத்தைப் பெறுவதற்காகக் கூட்டங்கள் நடத்துகின்றார்கள். அவர்கள் சிரிக்கிறார்கள். சுதந்திரம் கொடுக்கத் தயாராகாத எவரும் சுதந்திரம் பெறத்தகுதி வாய்ந்தவர் அல்லர். ஆங்கிலேயர்கள் எல்லா அதிகாரங்களையும் உங்களுக்குத் தருவதாக வைப்போம். அதிகாரம் பெற்றவர்கள் மக்களை அது பெறமுடியாதவாறு கீழ் நிலையிலேயே வைத்திருப்பார்கள். அடிமைகள் அடிமைகளை ஆக்குவதற்காக அதிகாரத்தை வேண்டுகின்றார்கள்.

இப்பொழுது, நமது சமயத்தை வற்புறுத்துவதன் மூலமும், சமூகத்திற்குச் சுதந்திரம் அளிப்பதன் மூலமும் மெதுவாகவே இதை அடைய இயலும். பழைய சமயத்திலிருந்து புரோகிதராதிக்கம் எனும் தீமையை விலக்குங்கள்; உலகத்திலேயே மிகச் சிறந்த சமயத்தைப் பெறுவீர்கள். உங்களால் என்னைப் புரிந்துகொள்ள முடிகின்றதா? இந்தியச் சமயத்தைப் பின்பற்றும் ஐரோப்பிய சமுதாயத்தை உங்களால் உருவாக்க முடியுமா? முடியும் என்றே நான் நம்புகிறேன்; அது அமைந்தே ஆகவேண்டும்.

இப்பொழுதுள்ள பெரும் திட்டமானது மத்திய இந்தியாவில் ஒரு காலனியைத் தொடங்கவேண்டும் என்பதே. அங்கே நீங்கள் சுதந்திரத்துடன் உங்கள் கொள்கைகளைப் பின்பற்றலாம். பின்னர் எதையும் ஆன்மிக சக்தியுள்ளதாக மாற்றவல்ல ஒன்று எல்லாரையும் மாற்றும். அதற்குள் மத்திய சங்கம் ஒன்றைத் தொடங்கி, இந்தியா எங்கும் அதற்குப் பல கிளைகளை ஏற்படுத்துங்கள். இப்பொழுது சமய அடிப்படையிலே அதைத் தொடங்குக. கடினமான சமுதாயச் சீர்திருத்தம் எதையும் இப்பொழுது போதிக்கவேண்டாம்; மூட நம்பிக்கைகளைத் தூண்டிவிடாமல் இருந்தால் போதுமானது. பழம்பெரும் ஆசாரியர்களான சங்கரர், இராமானுஜர், சைதன்யர் ஆகியவர்கள் அருளிச்செய்த சர்வ ஜன முக்தி, சமத்துவம் என்ற பழைய கொள்கைகளின் அடிப்படையில் சமுதாயத்தைச் சீர்திருத்த முயலுக.

கனன்று எழுக; கனல் பரப்புக. உழைத்திடு! உழைத்திடு. மற்றவர்க்கு வழி காட்டும்போது வேலைக்காரனைப் போன்று

நடந்துகொள். தன்னலமற்றிரு; தனிமையில் மற்றவரைப் பழிதூற்றும் நண்பனின் சொற்களை ஒருபோதும் கேளாதே. எல்லையற்ற பொறுமை கொள்; வெற்றி உன்னுடையதே.

இப்பொழுது இதை நினைவில் வைத்துக்கொள் :- யாங்கியர் (அமெரிக்கர்) சொல்வது போன்று மற்றவர்களை அடக்கியாள முயலாதே. ஏனென்றால், நான் எனது கடிதங்களை உனக்கே அனுப்புகின்றேன். அதனால் உன் மனத்துள் தோன்றும் விளைவை என்னுடைய மற்ற நண்பர் மீது காட்ட முயலாதே. ஒருபோதும் நீ அத்தகைய முட்டாளாக இருக்க மாட்டாய் என்பதை நான் அறிவேன்; எனினும், உன்னை எச்சரிப்பது எனது கடமை என்று எண்ணுகின்றேன். இது தான் எல்லா இயக்கங்களையும் அழிக்கின்றது. உழைத்திடு; உழைத்திடு; மற்றவர் நலனுக்காக உழைப்பதே வாழ்வாகும்.

எந்த விதமான பாசாங்கோ, தந்திரமோ, கள்ளத்தனமோ இருக்கக்கூடாது என நான் விழைகின்றேன் நான் எப்போதும் பரம்பொருளை, பகல்வெளிச்சத்தைப் போன்று பரந்துள்ள உண்மையையே நம்பியிருக்கின்றேன். பெயருக்கோ புகழுக்கோ அன்றி நன்றாற்றுவதற்கோ, வஞ்சித்தேன் என்று என் மனச்சாட்சியில் தோன்றும் களங்கத்துடன் நான் இறத்தலை வேண்டேன். தீயொழுக்கத்தின் மூச்சோ அன்றி தீய கொள்கையின் கறையோ அங்கே படிதல் கூடாது.

மனம் அலைபாயவேண்டாம்; திரை மறைவில் வஞ்சனை புரியவேண்டாம்; பகட்டிக் கொள்ளவேண்டாம்; மூலையில் (மறைவாக) ஒன்றுமே செய்யக் கூடாது. குருவினிட மிருந்து தனிச் சலுகை எதிர்பாராதே. முன்னேறுங்கள், என் வீர மைந்தர்களே—பணம் இருந்தாலும் இல்லாவிடினும்—பின்பற்றுவோர் இருந்தாலும் இல்லாவிடினும்! உங்களுக்குக் கடவுள் பக்தி இருக்கிறதா? முன்னேறுங்கள், எதிர்ப்புச் சக்தியை நோக்கிச் செல்லுங்கள். நீங்கள் தடுத்தற்கு அரியவர்கள்.

எப்படிப்பட்ட முட்டாள்தனமானது! பிரம்ம ஞான வாதிகள் என்னுடைய வெற்றிக்கு வழி வகுத்ததாக அவர்

தம் இதழ்கள் கூறுகின்றன. ஆம்! முற்றும் அறியாமையே! பிரம்மஞான வாதிகளா வழி வகுத்தார்கள்!

எச்சரிக்கையாய் இருங்கள்! உண்மையற்ற எல்லாவற்றிடமும் எச்சரிக்கையுடன் இருங்கள்; உண்மையில் விடாப்பிடியுடன் இருந்தால், நாம் ஒருவேளை மெதுவாக, ஆனால் நிச்சயமாக வெற்றி பெறுவோம். நான் இருந்ததில்லை என்ற நினைவுடன் உழைத்திடுக. கடமை முழுவதும் உங்களையே நம்பியிருப்பது போல் உழைத்திடுக. ஐம்பது நூற்றாண்டுகள் உங்களையே எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றன; இந்தியாவின் எதிர்காலம் உங்களை நாடியிருக்கின்றது. உழைத்திடுக. நான் எப்பொழுது திரும்பிவர இயலும் என்பதை நான் அறியேன். இங்கே பெரும் பணி செய்தற்குப் பேரிடமுளது. இந்தியாவில் நன்றாகப் புகழ்வார்களேயன்றி, ஒரு பைசாவும் தரமாட்டார்கள். தாங்களே பிச்சைக்காரர்களாகிய அவர்கள் அவர்களை எங்கிருந்து பெறுவார்கள்? அவர்கள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாகச் சமூகத்திற்கு நன்மை செய்யும் தன்மை இழந்துவிட்டார்கள். அவர்கள் இப்பொழுதுதான் தேசம், பொதுவாழ்வு முதலியன பற்றிய கருத்துக்களைக் கற்கத் தொடங்கியுள்ளார்கள். எனவே நான் அவர்களைக் குறை கூறேன்.

உங்கள் அனைவர்க்கும் என் ஆசிகள்.

கல்கத்தா மக்களின் பாராட்டுக்குப் பதில்

[சுவாமி விவேகானந்தர் மேலை நாடுகளில் ஆற்றிய தொண்டைப் பாராட்டி 1894-ஆம் ஆண்டு செப்டெம்பர் 5-ஆந் தேதி கல்கத்தா நகர மண்டபத்தில் நடந்த பொதுக் கூட்டத்தின் தலைவராகிய ராஜப் பியாரி மோஹன் முகர்ஜிக்கு 1894-ஆம் ஆண்டு நவம்பர் 18-ஆந் தேதி நியூயார்க்கிலிருந்து, சுவாமிஜியால் எழுதப்பட்டது.]

சமீபத்தில் கல்கத்தா நகர மண்டபத்தில் நடந்த கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களையும் என் நாட்டு மக்கள் எனக்கு அனுப்பிய அன்புமிக்க பாராட்டுதல் களையும் பெற்றுக் கொண்டேன்.

என் சிறு தொண்டுகளை நீங்கள் புகழ்ந்ததற்கு என் உளம் கனிந்த நன்றி.

ஒருவரோ அன்றி ஒரு நாடோ, மற்ற சமுதாயத்தின ரிடமிருந்து விலகி நின்றால், வாழ முடியாது என்பதை நன்கு உணர்ந்தேன். பெருமை, கொள்கை, புனிதத் தன்மை பற்றிய தவறான கருத்தால் எப்போதாவது அவ்வாறு விலகி நிற்க முயன்றால், அதன் பயன் அவ்வாறு விலகி நிற்பவருக்கு அழிவே தரும்.

இந்தியாவின் இழிந்த நிலைக்கும், சீரழிவுக்கும் காரண மானவற்றுள் முக்கியமான ஒன்று தேசாசாரம் எனும் சுவரை எழுப்பியதுதான் என்று எனக்குத் தோன்றுகிறது. அச் சுவர் எழுப்பியதன் அடிப்படை நோக்கம் மற்றவரை வெறுப்பதே. உண்மையில், புத்த மதம் பரவியுள்ள பக்கத்து நாடுகளுடன் இந்துக்கள் தொடர்பு கொள்ளாமல் தடுப்பதே பழங் காலத்திய குறிக்கோளாக இருந்தது.

அது குறித்து முற்கால அல்லது பிற்காலப் போலி நியாயங்கள் எத்தகைய பொய்க் காரணங்கள் கூறினாலும், அதன் தவிர்க்க முடியாத முடிவு ஒன்றே. அதாவது யாரும் தன்னைச் சீரழித்துக் கொள்ளாமல் மற்றவரை வெறுக்க முடியாது என்ற நியாய விதியை எடுத்துக் காட்டுதல். புராதன மக்களின் முன்னணியில் இருந்த இனம் இன்று

பழிச் சொல்லிற்கும், இழிவுக்கும் ஆளாகியிருக்கிறது. நம் முன்னோர்கள் கண்டுபிடித்து வேறுபடுத்திய விதியின் பங்கத்திற்கு நாமே சான்று.

கொடுத்து வாங்குவதே முறையாகும். இந்தியா மறு படியும் உயர்நிலைக்கு வர விரும்பினால், தன்னிடத்துள்ள உயர்ந்த பொக்கிஷங்களை எடுத்து உலக நாடுகளிடையே பரப்புதல் இன்றியமையாதது. அதற்குப் பதிலாக மற்ற நாடுகள் தர வேண்டியதையும் பெற்றுக் கொள்ளத் தயாரா யிருக்க வேண்டும். விரிதலே வாழ்வு; குறுகல் சாவு. அன்பே வாழ்வு; வெறுப்பே சாவு. என்று நாம் பிறரை வெறுக்கத் தொடங்கினோமோ, அன்றே இறக்கத் தொடங்கி விட்டோம். வாழ்வாகிய விரிவுக்கு நாம் திரும்பினாலன்றி, நமது சாவைத் தடுக்க எதனாலும் இயலாது.

எனவே, பூமியில் உள்ள எல்லா இனத்தவருடனும் நாம் கலக்க வேண்டும். குப்பைத் தொட்டியில் இருக்கும் நாயைப் போன்று வாழ்கின்ற, மூட நம்பிக்கை தன்னலம் ஆகியவற்றின் பிண்டங்களாக உள்ள நூற்றுக் கணக்கான மனிதர்களைவிட, வெளி நாடுகளில் யாத்திரை செய்யும் ஒவ்வொரு இந்தியனும் நாட்டிற்கு அதிக சேவை செய்கின் றான். மேலை நாடுகள் எழுப்பியுள்ள தேசீய வாழ்வின் அபூர்வ வேலைப்பாடுகள், வலிமை வாய்ந்த பண்பெனும் தூண்களினால் தாங்கப்படுகின்றன. நாமும் அத்தகைய தூண்களை நிர்மாணிக்காத வரையில், வல்லரசுகளுக்கு எதி ராகச் சீறுவதும் சிலிர்ப்பதும் பயனற்றனவே.

பிறருக்குச் சுதந்திரமளிக்கச் சித்தமாயிராத எவரும், தாம் சுதந்திரம் பெறத் தகுதியுள்ளவர் ஆவாரா? தேவை யற்ற விஷயங்களைப் பற்றி அலட்டிக் கொள்வதில் நமது சக்தியைச் சிதற விடாமல், அமைதியாக மனிதத்தன்மை யுடன் பணியில் ஈடுபடுவோம். யார் எதைப் பெறத் தகுதி யானவரோ, அவர் அதைப் பெறுது தடுத்தல் இந்த பிரபஞ் சத்திலுள்ள எந்தச் சக்தியாலும் இயலாது. முற்காலம் மிகச் சிறந்திருந்தது என்பதில் ஐயமில்லை; ஆனால் எதிர்காலம் மேலும் சிறந்திருக்கும் என்று முழு மனதுடன் நம்புகின்றேன்.

தூய்மை, பொறுமை, ஊக்கம் ஆகியவற்றில் நாம் நிலைத் திருக்குமாறு ஸ்ரீ சங்கரர் அருள்வாராக.

சிக்காகோ நகர் கொலம்பியா அரங்கில் சுவாமி விவேகானந்தர்
அக்டோபர் 1893

கவிதைகள்

1

சந்நியாசி கீதம்

[1895-ம் ஆண்டு ஜூலை மாதம் நியூயார்க்கு நகரில் உள்ள ஆயிரந்தீவுப் பூங்காவில் இயற்றியது.]

1

மனவலி படைத்த மாசிலாத் துறவீ!
சுவைமலி இன்பச் சுரந்தனை எழுப்புதி!
மகிதலக் கறைஉரு வெகுதொலைக்கப்பால்,
புலப்பகை வெறுக்கை புகழிவை அமைதியைக்
கலைப்பதற் கென்றும் தலைப்படாத் தலத்தை
அறிவுமெய் என்னும் அருவிகளுடனே
பரமானந்தத் திருமா நதிபாய்
வெற்புறு குகையைப் பொற்புறு வனத்தைப்
பிறப்பிட மாக்கொடு சிறப்புமிக் கார்ந்தே—
எழும் கீதத்தை முழங்குதி நன்கு!
ஓதுக நீ 'ஓம் தத் ஸத் ஓம்' என.

2

திடன்உறு நெஞ்சத் தடல் மிகு துறவீ!
இறுக்கிடு தளைகளை நொறுக்குதி அவைதாம்
ஒள்ளிய அரும்பொற் றளையா யினும்சரி,
எள்ளிய கரும்பொற் றளையாயினும் சரி,
சுகமுறு விருப்பும் அகம் வெறு வெறுப்பும்,
நன்மையும் நன்மை இன்மையு மாதித்
தொந்தம் தாம் இப் பந்தத் தொகுதி.
பசையொடு தழீஇயினும் கசையடி தரினும்
அடிமை அடிமை ஆகுவ னேயலால்,
சற்றும் சுயேச்சை உற்றவன் அலன்அறி.
பொற்றளை ஆயினும் பற்றிப் பிணிப்புழிக்
குன்று வலிஉடைத் தன்றோ? ஆதலின்
ஆங்கவை களைந்து நீங்குதல் நெறியே.
ஓதுக நீ 'ஓம் தத் ஸத் ஓம்' என.

3

ஏதற்கும் அஞ்சா இயல்புடைத் துறவீ!
இடுக்கண் மேன்மேல் அடுக்கும் பொருட்டுச்
சிமிட்டிச் சிமிட்டிச் சிற்றெளி காட்டி
இட்டுச் செல்லும் துட்டத் தீப்பேய்
அந்த காரம் அடியோடு தொலைத்தி!
வாணாள் ஆசையைப் பேணு தொழிதி.
ஆ! ஆ!! அதுவே ஜீவாத் மாவைப்
'புநரபி ஜநநம் புநரபி மரணம்'
என்னும் இவற்றிற் கீர்த்துச் செல்லும்.
தான் அடங் கொருவன் தான் அடக்குவன் எலாம்.
ஈதறிந் தென்றும் இடங்கொடா திருத்தி!
ஓதுக நீ 'ஓம் தத் ஸத் ஓம்' என.

4

அஞ்சுதல் அறியா நெஞ்சநற் றுறவீ!
எவன் விதைப்பவனோ அவன் அறுப்பவனே!
காரணம் உளவேல் காரியமும் உள.
நன்மை விதைத்தவன் நன்மை அறுப்பன்.
தீமை விதைத்தவன் தீமை அறுப்பன். இவ்
விதியி னின்றும் விலக்கா வார் இலர்.
உருப்பெற் றோர்க்கெலாம் உறுதளை உண்டெனப்
புகல்வர்—இதனிற் பொய்இலை. ஆயினும்,
நாம ரூபம் ஆம் இவற் றப்பால்
என்றும் தடையற நின்றுள தான்மா.
அதுதான் நீஎன் றறிய க்கடவை.
ஓதுக நீ 'ஓம் தத் ஸத் ஓம்' என.

5

ஒன்றினும் திரியா உளம் உடைத் துறவீ!
பெற்றோர் மக்கள் உற்றோர் பெண்டிர்
இத்தகை யாவும் மித்தையே என்னக்
காணு தார்மெய் காணுதாரே.
ஆண், பெண் இல்லா ஆன்மா வானது
எவர்க்கே தந்தை? எவர்க்கே மைந்தன்?
எவர்க்கே பகை அது? எவர்க்கே உறவது?

யாவற் றுள்ளும் யாவு மாய்அவ்
ஒன்றே உளதஃ தன்றிமற் றிலையால்.
அது தான் நீ என்றறியக் கடவை
ஓதுக நீ 'ஓம் தத் ஸத் ஓம்' என.

6

சலியா மனத்து வலியார் துறவி!

ஒன்றே உளதவ் ஒன்றும் என்றும்
தன் வயத்துவமாய்த் தான் இருப்பதுவே.
யாவையும் உணர்ந்த தாவிலாத் தனிமை
நாம ரூபம் ஆம் இவை இல்லது.
களங்கம் இன்றி விளங்கும் பொருள் அது.
இவ்வெளி மயக்கெலாம் அவ்வொரு பொருட்கண்
உளதே ஆகும். பளகறு லோகக்
காட்சி யாகவும், சாட்சி யாகவும்
ஆன்மா ஆகவும், அப்பொருள் தோன்றும்.
அதுதான் நீ என் றறியக் கடவை.
ஓதுக நீ 'ஓம் தத் ஸத் ஓம்' என.

7

ஸாகஸம் மிகுந்த யூகசந் யாஸி!

இவ்வுல கேனும் அவ்வுல கேனும்
ஈயாச் சுயேச்சை எங்கே தேடுவை?
ஏடு கோயிலிற் றேடுதல் வீணே.
...ரமே தான் நின்னை மேன்மேல்
...ச் செல்லும். இரும் பாசத்தைப்
...தால்அப் பற்றினை உதறுக.
...மயங்கிச் சிந்தை மாழ்கலை.
... 'ஓம் தத் ஸத் ஓம்' என.

8

...ற் கருமன ஆற்றல்சால் துறவீ!

...ங்கும் மங்களம் எங்கும் தங்குக.
...) வேண்டாம் என்றால் உயிர்க்கே.
உயர்ந்தோர் மாட்டும் இழிந்தோர் மாட்டும்
யாவற் றுள்ளும் மேவியோன் யானே.
இம்மையும் அம்மையும் வெம்மைகூர் நரகும்

மண்ணும் விண்ணும் எண்ணும் நலமும்
தீதும்வேண் டிலன்'' என ஓதி, அவ்வணமே
உறுதலை அனைத்தும் அறவொழித் திடுக.
ஓதுக நீ 'ஓம் தத் ஸத் ஓம்' என.

9

உறுதிகொள் உள்ளத் தொருபெருந் துறவீ!
இந்தச் சடலம் இங் கெவ் வாறுக
ஆம் போம் என்று ஆய்ந்திடல் ஒழிக.
அதற்குள வேலையை அது முடித்திடுக.
கர்மவெள் ளத்தின் கதி அது செல்க.
ஏயநன் மாலை வேயினும் அதன்மேல்
மன விருப்பெய்தி மகிழவும் வேண்டாம்.
யாக்கையை ஒருவன் தாக்கி உதைப்பினும்
கோப தாபம் கொள்ளவும் வேண்டாம்.
புகழ்கின் றோனும், புகழ் உறு வோனும்
இகழ்கின்றோனும் இகழ் உறுவோனும்
ஏகனே அன்றி அநேகரோ? அலரால்
இகழ்ச்சி புகழ்ச்சிகள் எண்ணில் ஒன்றே எனத்
தேறி உணர்ந்தே ஆறுதல் அடைக.
ஓதுக நீ 'ஓம் தத் ஸத் ஓம்' என.

10

தைரியம் மிகுந்த செயிரறு துறவீ!
காமம் புகழ் பொருள் தாமுள இடத்து
வாய்மை எந் நாளும் வரமாட்டாது.
மாதரை மனைவியாய் மதிப்பவன் எவனும்
பூரணத் துவம்உறக்காரணமே இலை.
தினை அளவேனும் தனதெனக் கொள்வோன்.
சினமெனும் தளையிற் சிக்குவோன், இவர்கள்
மாயை என்னும் வாயிற் கடவார்.
ஆதலின் இவற்றை அறவொழித் திடுக.
ஓதுக நீ 'ஓம் தத் ஸத் ஓம்' என.

11

திறம்பெறு நெஞ்சத் தறம்பெறு துறவீ!
உறைவிடம் எதுவும் உனக்கென வேண்டாம்

நின்னைக்கொள்ளும் வீடெது? நேய!
விசும்பே கூரை, பசும்புல் படுக்கை.
தற்செய லாகத் தான் கிடைப்பதுவே
உண்டி ஆகும். அவ்வுண்டி நன்ருக
அட்டிருப் பினும், அது கெட்டிருப் பினும் எணேல்.
அன்ன பானியமெதும் தன் இயல் புணர்ந்த
மன்னிய தூயனை மாசுறுத் தாதே.
ஓடிப் புரளும் ஒரு நதிபோல
என்றும் சுயேச்சை ஒன்றி இருத்தி.
ஓதுக நீ 'ஓம் தத் ஸத் ஓம்' என.

12

ஓரனுடை உள்ளத் தொருபெருந் துறவி!
ஆனமெய்ப் பொருளை அறிபவர் சிலரே.
ஏனையோர் நின்னை இழிப்பர் வெறுப்பர்.
மேலோய்! அதை ஓர் காலும் கருதேல்.
இஷ்டப் படிஎங் கெங்குமே நீ
எய்தும் இன்பமும் நைதரு துன்பமும்
எண்ணு தேகி அன்னோர் போர்த்த
மாயை என்னும் மாயிருள் நீக்குதி.
ஓதுக நீ 'ஓம் தத் ஸத் ஓம்' என.

13

புலப்பகை வெல் மனப் பலப் பெருந் துறவி!
கர்ம பந்தம் கழியும் மட்டும்
ஒவ்வொரு நாளும் இவ்விதம் முயன்று
சேதநன் தன்னைத் தீதுறு தளையின்
நின்றும் விடுக்குதி. என்றும் பிறப்பிலை.
'நானும்' 'நீயும்' நரரும் சுரருமில்;
'யான்' என்பதுவே யாவும்; யாவும்
யானே; அதுவே தான் ஆனந்தம்.
அதுதான் நீ என் றறியக் கடவை.
ஓதுக நீ 'ஓம் தத் ஸத் ஓம்' என.

ஓம் தத் ஸத்

அன்னை காளி

1

தாரகை கணங்கள் தகர்ந்திட, எழிலியும்
ஒன்றை யொன்று ஒளித்துப் படர்ந்திட
காரிருள் செறிந்து கடுங்குரல் எழுந்தது ;
காற்றும் சுழன்று முழக்கம் செய்தது ;
பல்லாயிரம் பித்தரின் ஆன்மாக்கள்
வெஞ்சிறை தவிர்ந்து விடுபடல் போன்று
வேரோடு மரங்களைப் பிடுங்கி வீசியது
சாலையில் உளவெலாம் சாடப் பட்டன
தொடுகடல் குழப்பத் தொடும்மிகச் சேர்ந்து
மலைபோல் உயரும் அலைகளை அடித்தே
விண்ணினை எட்ட விம்மி யெழுந்தது
அகோரமான ஒளிக் கற்றைகள்
எப்பக்கமும் சென்றே வெளிப் பட்டன
ஆயிரம் ஆயிரம் சாவின் நிழல்கள்
கறைபடுத் திடவே கருநிறத் தோடு
துன்பமும் பிணியும் சிதறிப் பரவிட
ஆனந்த வெறியில் களிப்புடன்
ஆடியே வருக! அன்னாய் வருக!

2

பயங்கரி என்பது நின்பெயர் அன்றோ
சாவே நினது மூச்சும் அன்றோ
அடிமலர் அதிர்வுகள் ஒவ்வொன் றுலும்
அண்டம் என்றும் அழிவெய் திடவே
அனைத்து மழிக்கும் கால காளியே
வருக அன்னாய் வருக! வருக!

3

இன்னுமை இன்பம் என நினைந் திடுவோன்
சாவினை விருப்பாய் தழுவமுந் திடுவோன்
ஊழிக் காலத் துளமகிழ்ந் தாடுவோன்
அவனையே நாடி அன்னையும் வருமே.

அன்னை விளையாட்டு அறிபவர் யாரே?

1

உயர்தவ முனிவ நீ, உளத்தகத் தன்னை
திருவிளை யாடல் தெளியினும் தெளியலாம்
எவரே அறிவார் எம்மனை செயலை?
அடங்கி யிருந்தும் ஆணை தவருப்
படைக்கல மன்னை பயில்வற மறைக்கும்
துறையின் ஆழம் தொடவும் அணுகவும்
துணியு மனத்தினர் தூயவர் எவரே?

2

சூழலியே யொருகால் நிழல்வரு காட்சி
திரையகம் காணவும் சிறிது வாய்க்கலாம்
அவா நிறை விழிகளால் அறிய முயன்று
நடுங்கு முருக்களை நன்குமுன் பாய்ந்து
தடையறு வலிமை தாங்கும் செயல்களைக்
காணவும் பெற்றதோ, காட்சி யிங்கிவைதாம்
யாங்கே எப்பொழு தெவ்வணம் எய்துறும்
என்னு முண்மையை எம்மனை யன்றியே
அறிய வல்லவர் அவனியில் யாவரே
ஒளிபெறு முனிவரன் உரைக்க வியலா
அளவில் ஒருகால் அறியினு மறியலாம்
எப்பொழு தன்னை எவ்வுயிர் தன்னை
அரியணை யாக்குமென் றறிபவர் யாரே?
எவள்பிறை யாட்டம் இணையிலா முறையோ
எவள் திருவுள்ளம் எதிர்ப்பிலா விதியோ
அவள்திருக் குறிப்பை அடக்குபு நடத்தும்
தகவு முளதோ? சான்ற சுதந்திரம்
அடக்க எழுதரும் ஆணைதான் யாதே?
தந்தை கனவாத் தனிப்பெருந் தகைமை
மைந்தன் மதலை வாய்க்கப் பெறலாம்
அன்னுள் படைத்த அரிவை யகத்துவே
ஆயிரம் திருவை அன்னை அமைப்பவே

கட்டவிழ்ந்தோன் களிப்பாடல்

தூக்குண்ட பைந்நாகம் தாவிப் படம்விரியும்
தீக்கொழுந்து தூண்டத் திகழ்ந்தொளிரும்—தாக்கிய வேல்
ஆவியிலே பாய அரிமாவின் நீள்முழக்கம்
கூவியெழும் பாலைச் சுரம்.

மின்னலெனும் வாள்வீச்சில் மீக்கிளர்ந்த கார்மேகம்
துன்னிப் படைதிரட்டும் தொல்லூழி—தன்னுள்ளே
ஆழும் துரியமெனும் ஆன்மப் பெருங்களியில்
சூழும் பெரிய சுகம்.

குண்பஞ் சடைக! கருத்து சலிப்பெய்த!
நண்புடனே காதல் நலம் அறுக!—எண்ணரிய
துன்பப் படைதொடுக்கத் தொல்லைவிதி; காரிருள்தான்
இன்ப வழியடைக்கில் என்?

பூதங்கள் ஐந்தும் பொறிகலங்கிச் சீறியுனை
மோதி அழிக்க முனைந்தாலென்?—ஈதறிக
ஆன்மாவே! நீ தெய்வம்; அங்குமிங்கும் பாராதே
மேன்மேலும் செல்கஅதோ வீடு.

வானகத்துத் தேவனலேன்; மானிடனல்லேன்; விலங்(கு)
ஆனவுடல் சிந்தையலேன்; ஆண்பெண்ணும்;—நானல்லேன்
என்னியல்பு கூறவந்த ஏடெல்லாம் ஊமைகளாய்க்
கண்மயங்கும்; நான்பிரமம் காண்.

செங்கதிரோன் திங்கள் திரைவையம் தோன்றுமுன்
பொங்குகோள் விண்மீன் புலராமுன்—எங்கிலுமே
கற்பாந்த காலமும் கண்படா முன்னின்றேன்
நிற்கின்றேன் நிற்பேன் நிலை.

ஏத்துபுகழ் ஞாலம் இலங்குபுகழ் இன்கதிரோன்
சீர்த்தியமை திங்கள் திகழ்மீன்வான்—இத்தனையும்
ஊழென்னும் சாட்டையிலே ஊசலிடும் கட்டினிலே
வாழும்பின் சாகுமிவை வந்து.

கருத்தென்ற போர்வை கனவென்ற பாசவலை
விரித்துப் பிணிக்க விரிந்த;—பிரித்தறியா
எண்ணமென்ற கைத்தறியில் இன்பதுன்பம் பாழ்நரகு
விண்ணுலகு வையமென வீழ்ந்து.

காலமிடம் காரண காரியங்கள் எல்லாமே
மேலெழுந்த தோற்றம் விளங்கிடுவாய்—ஞாலத்தே
எண்ணம் புலன்கள் இவற்றுக்கும் அப்பால் நான்
கண்ணுற்ற சான்ருேவேன் காண்.

இரண்டு பலவன்று இருப்பவெல்லாம் ஒன்றேகாண்
திரண்டனைத்தும் என்னுள்ளே தேங்கும்;—மருண்டிங்கே
என்பால் எனக்கே இகழ்வு பகையுண்டோ?
அன்பே விளங்கும் அறி.

கனவு கலைந்தெழுவாய் கட்டறுத்து வீடுபெறு
நினைவிலச்சம் நீங்கு நிலையாய்—எனதுநிழல்
மாயைதான் என்னை மருட்டாதே நண்குணர்வாய்
ஆயநீ ஈசன் அறி.

அறியாத தெய்வங்கள்

[1898-ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் எழுதியது.]

இன்பவுணர் வொருசிறிதும் எய்தா மையல்
இருந்துயரு ளிடும்பையுற்றே இனையும் வாழ்வான்
தன்பெரிய பொறை சுமந்து தாழ்வுள் வீழ்ந்து
தன்வழியை மருண்டிருண்டு தடவிச் செல்வான்
துன்பமின்பம் பிறப்பிறப்புத் தூய்மை தீமை
தோற்றமுறும் தாரையதும் தோன்ருக் காலை

பொன்பயிலும் ஒளிக்கதிரைப் பொருந்தக் கண்டு
புலனறியான் கடவுளென்றே போற்றினனே.

அன்றறியா மனவுறுதியகத்தே யெய்தி
அங்கமெலாம் பரவியதால் அவன்வாழ் வாழ்க்கை
என்றுமவன் கனவினுமே எய்யா வாற்றான்
ஏற்றமுறு வுணர்ந்தவற்றை யெல்லால் காட்ட
ஒன்றவலன் உலகத்தின் உப்பால் நோக்கும்
உயர்முனிவர் மூடபக்தியுடையா னென்றார்
அன்றுமவன் அதனாற்றல் அமைதி தேர்ந்தே
அறிவீரே மூடபக்தி அஃதென்றானே.

2

நிதியமதி கார மெனு மதுவை மாந்தி
நின்றவற்றை யனுபவிக்கு நிலையும் பெற்றே
மதிமயங்கி யுழலுமவன் மகிழ்ச்சி பூக்கும்
னமெனவே நிலத்தையெண்ணி மனிதச் சாதி
கதிதெளிவில் புழுப்போன்றே களிப்புக் காகும்
கைப்பொருளா மதிக்கின்றான் கணக்கே யில்லா
உதிதவொளி மயமாகும் உவப்பின் கூட்டம்
உளக்கண்முன் இரவுபகல் உறக்கண்டானே.

பலநிறங்கள் விளங்குமொளி மாறக் கண்டான்
பயின்றவிழி யொளிமறையப் பல்லா ரேரு
கலகலக்கும் பொறியைந்தும் கலங்கக் கண்டான்
கருதுறு தன்னல நினைவே கதியா நின்றான்
நிலவுமின்ப துன்பமெனும் நிலையை யெய்தி
நிறையுணர்வும் உயிர்வாழ்வும் நினைப்பின் முன்னாள்
இலகுநிலை யறிந்து கரமிரண்டி லேந்தும்
இழிபிணம்போ லிருப்பதனை எய்தினனே.

கையேந்து பிணம் வீழ்கக் கருதி னாலும்
கழியாமை பற்றிநின்ற கதியை நோக்கி
ஐயோயான் இறந்தேனும் அமைதி காண்பேன்
அழிபிணத்தை யெறிவே னென்றவாவி நின்றான்
கையேறு செல்வமதி கார மெல்லாம்
கழிந்திழிந்த மனிசரோடும் கலந்து வாழும்

மெய்யேயும் துயர்க்கண்ணீர் விழிப்பின் கண்ணே
மிக்க நண்பர் நகைத்தாலும் வியன்கண்டானே.

நன்றி வாய்ந்த நலங்கொள் மொழிகளாற்
சென்ற செல்வம் சிறிதும் நினைப்பிலான்
ஒன்றிநின்ற உறுதுயர்த் தெய்வமே
என்று நின்னுற வெய்துக வென்னுமே.

3

உளத்தமைந்த வலிசான்ற உணர்ச்சி யெல்லாம்
ஒடுக்குதிறம் அமையாதான் உறுதி யோடு
களத்தமருக் கெழவிரையும் கருத்தின் போக்கைக்
கடிந்தடக்கி நிறுத்திவைக்கும் கற்பு மில்லான்
வளத்தமையும் உடனலத்தின் வாய்ப்பு வாய்த்தான்
மனித்தரினம் நல்லோனு மதிக்க வாழ்வான்
அளத்தலிலா ஆழ்வலையுள் அவலங் கொண்டே
அவலிப்பார் இடைதனக்கோர் அமைதி கண்டே.

பிறர்துயர்கண் டுருகிமனம் பிழை யெய்தாப்
பெருநிலையில் அழுக்கினிலே பிறழ்ந்து வீழும்
திறமுடைய ஈக்களெனத் தெளிவானுனுன்
திருவருளாற் செல்வமுற்றுச் சீர்மை கண்டு
புறமுறவே வழுக்கியவன் புவியுள் வீழ்ந்தான்
பொருளுணரும் விழிதிறந்து பொருந்த நோக்கி
அறநெறியை மரங்கற்கள் அழியா வென்றும்
அழியாதே வாழுமென்றும் அறிந்தா னன்றே.

மரநிற்கும் கல்லிருக்கும் மனிதன் றனே
வரும்விதியை யெதிர்த்துநின்று மாற்ற வல்லான்
உரமமையும் அணைகடந்தே விதியி னேங்கி
உயர்வுறலாம் என்பதையும் உணர்விற் கண்டான்
பரவசமாய் அடங்கு பண்பும் பயிற்சி போகப்
பரபரப்பா லெழும் வாழ்வைப் பாரா நின்றான்
விரவுபெரு விசாலமுள வியப்பார் வாழ்வில்
வெளிநோக்கி யொளியெழுந்து விளங்கிற் றன்றே.

நித்தியமாம் சாந்திநின்ற நிலையம் கண்டான்
நிறைதுயரக் கடல்கடந்தே நேர்தல் தேர்ந்தான்
சத்தியிலா மரத்திலெடும் தாழ்கல் லோடும்
தனையினமா நிறுத்துமொன்றைத் தானேதேடி
சுத்திநிலை யிழந்தழிந்து தூய்மை தீர்ந்து
துயரிடையே வீழ்ந்த தன்னைத்துறந்த ஞாலம்
எத்திசையோ எனநோக்கி இனிதே பாவம்
எனமனத்து ளுணர்வே னென்றெண்ணினனே.

உறுதிசால் இதயத்தாய் சற்றே தாங்குக

[கேத்ரி மன்னருக்கு எழுதியது]

1

கதிரவன் அடங்கிக் கார்முகில் மாயினும்
வானகம் இருளால் மயங்கு மாயினும்
தீர மனத்துச் செல்வ இன்னும்
சற்றே தாங்கித் தருக்குற முயல்க
இறுதியில் வெற்றி யுறுதியாகுமே.

2

கோடைதிரின் பிறகே கோடை யெய்துறும்
அகல்முறை யெல்லாம் அலைமே லேறும்
ஒளியினு மிருளினும் ஒன்றையொன் றுந்தும்
உறுதியும் தீரமும் உடையோ னதியே

3

வாழ்வுக் கடன்கள் வாய்மையே யாகும்
வாழ்வகத் தின்பமோ வறிதே பறப்பதே
எல்லையும் கரப்புண் டெங்கோ இருப்பதே
உறுதிய மனத்தாய் இறுதி காறும்
நினது வன்மையும் நெஞ்சகத் துரமும்
இருளினை யெதிர்த்தெ எழுந்து செல்கவே.

4

எவ்வினை தானும் இழக்கப் பெறுதே
எவ்வகைப் பாடும் இழிந்து வீணாகாது

நாடிய நாட்டம் நயந்தில தாயினும்
ஆற்றல் அனைத்தும் அகன்றே போயினும்
இனிவரு மெல்லா வேற்றமும் எய்துவான்
மரபினர் நின்னகம் வருமா றுளதே
உறுதிய வுளத்தாய் ஒருசிறு பொழுது
பற்றி முயல்க பயின்ற நன்மை
ஒன்றும் வறிதே சென்றிடா தன்றே.

5

உலக வாழ்விடை உயர்குணச் சான்றோர்
அறிவிற் சிறந்தோர் அநேகர் அல்லரே.
எனினும் பற்றுதற் கியல்நெறி காட்டுதற்
குரிய கலனையுள்ள தவர்களே.
பொதுவர் அவர்தம் பூரண மதிப்பைக்
காலம்கடந்தே கருத்தாற் றெளிவார்
எவரையு நினையா தியல் நெறிபிடிக்கவே.

6

நெஞ்சினுல் உறுபொருள் நெடுந்தொலை காண்பார்
நின்னுறு துணையாய் நின்றதறிதியே
ஆற்றலி னிறைவன் அடங்குநின் னகத்தே.
பெரியோய் வரமும் பெறலரும் பேறும்
நின்னைநாடி நிரம்பப் பொழிவன
அனைத்தும் நலமே ஆகுமால் நினக்கே.

விழிப்புற்ற இந்தியா

[பிரபுத்த பாரதத்துக்கு எழுதியது.]

1

இன்னுமொரு முறைஎழுக! விழிக்க!
உறங்கினை நீயே இறந்தனை யல்லை
புத்துயிர் நின்னகம் பொருந்தப் புரிந்து.
துணிபுறு காட்சி சுடருறக்காணக்
கமல விழிகளுக்கமைதி யுதவி
உலகெதிர் நோக்கும் உண்மை யுருவமே
இல்லை மரணம் என்றும் நினக்கே.

2

முன்போல் நடந்து முன்னே செல்க
மெல்லச் செல்க தொல்லைச் சாலையுள்
அடங்கிய பூழியின் அமைதியும் கலையா
மெல்லடியிட்டு மேக்குறச் செல்க
ஆயினும் வன்மையி னமைந்த வுறுதியோடு
இன்பமே தீரமே இயையும் சுதந்திர
நடையினுனடக்க நன்கு விழித்தே
பிறரையும் விழிப்பினைப்பெறவே தூண்டிக்
கிளருநன் மொழிகளைக் கிளந்து நடத்தியே.

3

வாழ்மனை யகன்றனை வளருமெய்யன்பால்
இதய முருகவே யெடுத்துனை வளர்த்து
நினது வளர்ச்சி நிலையினைக் காண்டொறும்
மகிழ்ச்சி மீதூரும் மனத்தோடு பேணிய
இல்ல மகன்றனை இமய மெய்தினையே
விதியின் வலிமை மிக்கதே யாகும்
அறமு மிதுவே அணைத்து மீண்டு
பிறந்திட நாடிப் பெருவலி கிளர்வுற
வருவ துண்மை வளர்வது முண்மையே.

4

மறுவலும் புதுமை வளர்ச்சி வாய்ப்புற
மேக மூடிய வியன்பனிப் படலம்
வாழ்த்தி நினக்குறும் வன்மையு முதவுமா
பிறந்தகந் தன்னிலே பெருமை பூணுக
புதுமை மருட்சிகள் போதரப் புரிந்து
தேவ கங்கைநின் திருவாய் மொழியைத்
தன்னிசை யொன்றத் தகவே புரிக
தேவ தாருவின் தண்ணிழல் நினக்கு
அழிவே யறியா அமைதியைத் தரவே.

5

எவற்றினு மேலா யிமாலயன் மகளாம்
தூய்மை மென்மை சுடரும் இறைவி

அவற்றுளும் ஆற்றலாய் இயங்கும் அன்னை
உயிர்க்கு யிராகும் உமாதேவி நின்மாட்டு
எல்லாச் செயலு மியற்றுவித் தருள்வாள்
உலகமே யொன்று யிலகவும் புரிவாள்
உண்மையின் வாயில் உரிமையாற் றிறந்தருள்
கருணை யுருவினுள் காண்பன வெவற்றுளும்
ஒருமையை விளக்கும் ஒருபெருந் தெய்வதும்
அளவை கடந்த அன்பே யாகுக
அழியா ஆற்றலை அருளுக நினக்கே.

6

யாவரு நின்னை இனிது வாழ்த்துவர்
காலமு மிடமும் கணக்ககப் படுத்தி
தமக்குளமுத்துறும் தகுதியை யெய்தா
மாண்புறு ஞானியர் மக்களின் முந்தையர்
உண்மையினிதயம் ஒன்றென வுணர்ந்தோர்
புன்மொழி கொண்டோ நன்மொழி கொண்டோ
மாந்தருக் கப்பொருள் வழங்கி யருளினோர்
அன்னவர் ஊழியனுகி யவர்தம்
மறைப்பொருள் பெற்றனை மற்றஃதொன்றே.

7

அன்பே யினிநீ அதனை விளக்குக
உயரிய நினதுமெய் யொலியின் முன்னர்க்
கனவும் காட்சியும் கரப்பது காணுதி
படிப்படி யாகப் பரவும் கனவுகள்
மறையு நிலத்தே மறைவுற்றொதுங்கும்
உண்மை யுறுதிசால் உண்மையொன்றே
தன்பெரு மாண்புறத் தான்விளங்குமே.

8

உலகினுக் குரைத்தற்குரிய பொருளை
இயம்புக விழிக்க இனிக்கன வேண்டா
இந்நிலம் கனவுகள் இயங்குறு நிலமே.
நினைவுகளிடையே வினையெனு மதுதான்
நாரிலாமாலிகை யேருறத் தொடுக்கும்

நறுமண மலரும் நாறு மலர்களும்
கலக்குமத் தெரியல் காணுமெவ் வுயிர்க்கும்
வேறோதண்டோவேறு விலையே
இன்மையினின்றே எதுவும் பிறந்தது
உண்மை தென்றல் ஒருகால் உளரின்
மீண்டுமஃதழிந்து வீழுமின்மையுளே
உறுதியுணர்வோடுண்மையை நோக்குக
அதனே டொன்றே ஆகுக நன்றே
ஒழிக காட்சிகள் ஒழிக கனவுகள்
கனவுகாணுது கழிதலியலாதேல்
உண்மைக் கனவுகள் உளமுறக் காண்க
அவைதாம் அழியா அன்பும் உரிமையால்
உலகுக் குழைக்கும் உரிமையு மாகுமே.

ஜூலை மாதம் நாலாந் தேதிக்கு

[சுவாமி விவேகானந்தர் 1902-ம் ஆண்டு ஜூலை மாதம் நாலாந்தேதி இவ்வுடல் நீத்தர். 1898-ம் ஆண்டு ஜூலை மாதம் 4-ந் தேதி அமெரிக்க நண்பர் சிலருடன் காஷ்மீரத்தில் யாத்திரை சென்று கொண்டிருந்தார். அன்று காலை உணவு நேரத்தில் அமெரிக்க விடுதலை தினத்தைக் கொண்டாடு முகத்தான் உரக்கப் படித்தற்கு இதை எழுதினர்.]

1

இ__ரவிடை யடர்ந்து சூழ்ந்தே எங்கணும் வளைத்து
கொண்டு
புரவுபூண் நிலத்தைப் போர்த்த போர்வையாம்
கரியமேகம்
கரவுற வொழிதல் கண்டாய் கதிரெழுநின்னுல் ஞாலம்
உரவுறும் விழிப்பை யெய்தியுணர்வது காண்டிநன்றே

2

பறவைகள் குழுமிப் பாடும்; பன்மலர் விண்மீன் போல
நிறமமை முடியைத் தூக்கும் நிறைபனித் துளியை
யேந்தி
உறவுநல் வரவுகூறும் உறுபுனலேரி யெல்லாம்
புறனுறு மன்பே காட்டிப் பூத்தபல் கோடிகண்ணே.

3

விழிகளாம் கமலத்தானே விழைந்து நல்வரவு கூறும்
கழிமகிழ் முகத்தே காட்டிக் கதிரொளி யரசேநின்னை
வழிவழி வாழ்த்துக் கூறிவ்ரவ நல்வரவு கூறும்
பொழிகதிர்ஞாயி றேநீ பொழிதியால் உரிமை வழ்வே.

4

பன்னெடுங் காலமாகப் பலபெரு நிலங்க ளெல்லாம்
நின்னையே நினைந்து நோற்ற நிலையைநீ நினைத்துப் பாராய்
மன்னிய சிலர்தம் நண்பும் மனைவாழ்வு மிழந்தாரந்தோ
நின்னையே நாடித் தத்தம் நிலத்தையு துறந்தாநன்றே.

5

கடலெல்லாம் கடந்து பண்டைக் காடெலாம் கடந்து சென்றார்
அடியிடுபத மொல்லொன்றும் ஆருயிர்ச்சமர மாகும்
தொடர்பணி பழுக்குநாளில் தோன்றினை நீயே யன்பாற்
கடவுளை வேண்டல் அன்பு கடும்பெருந் தியாக மெல்லாம்

6

முழுமையை யெய்தி வேண்டும் முழுப்பயன் விளைப்பவாகி
எழுவது தெரிந்து நீயும் இயைபுறு முறைமை யானே
வழுவகல் மதித்த றென்றும் வருக்கத்தே யுரிமை வாழ்வாம்
கெழுமொளி விளக்கத்தக்க கிளர்ச்சியோ டெழுந்தா யன்றே.

7

தலைவநீ யினியு நின்றன் தடையிலா நெறியே செல்க
நலமருள் ஒளியை நல்கும் நண்பகல் உலகு சூழ்க
நிலமெலாம் நினது தோற்றம் நிரம்புறும் விளக்கம் காண்க
பலபல மனிதர் மாதர் பரிவினுல் நிமிர்வாராக.

8

தம்முடல் பிணியாநின்ற தளைகளின் தகர்வுகாணு
எம்முடை யரசே யென்ன இதயநன் குருகாநிற்கத்
தம்முயர் புதுமை யெய்தும் சால்பினை யுணர்வாராகி
விம்முறு முணர்ச்சி யானே மிகுமகிழ் வெய்துவாரே.

வரம் பெறு கனவே

[1900-ம் ஆண்டு ஆகஸ்டு 17-ந்தேதி பாரிஸ் நகரில் எழுதியது.]

1

நன்மை யாயினும் தீமை யாயினும்
  நன் மகிழ்ச்சிதான் தன் முகத்தையே
மென்மை தோன்றவே காட்டுமா யினும்
  விழும மாக்கடல் எழுவ தாயினும்
தன்மை யன்னதே தக்க வாற்றினால்
  தளர்வின் நோதலும் வளர்வின் ஆதலும்
வன்மை வேண்டுமே மழையும் வெய்யிலும்
  வருக வேடமே மருவ வேண்டுமே.

2

அருள்கொள் நன்கனவாகு மன்னையே
  அங்கு மிங்குநின் அளியி னாகிய
மருள்கொள் போர்வையை மறைவு வைத்தியே
  வலிய கூரிய வரிகள் மாற்றுக
இருள்கொள் துன்பமே யேய்ந்த தீமையாம்
  எதையு மாற்றியே யின்ப மாக்குக
சுருள்கொள் கடுமையே தோன்று மொன்றினைத்
  தூய்மை வெண்மையே தோன்ற வைத்தியே.

3

மாய மந்திரம் மற்று முள்ளதோ
  வாய்த்த யாவும் நின்வண்மை யாகுமே
ஆய நின்கரம் படுமுன் அங்ஙனே
  அழகில் பாலையும் சோலை யாகுமே

தீய பேரிடி தூய பாடலாம்
சிந்தை சோர்வுறச் செய்ய வல்லதாம்
பேய—சாவுமே பெரிய யாவினும்
பெரிய வீடெனுப் பேசலாகுமே.

காலையில் மலர்ந்த நீல மலருக்கு

[நியூயார்க்கு நகரத்தைச் சேர்ந்த மேற்கு நாட்டு சிஷ்யை ஒருத்திக்கு 1896-ம் ஆண்டு ஜனவரி மாதம் 6-ந் தேதி எழுதியது.]

1

நினதிருக்கை பனியுறைந்த நிலமாயி னென்னே
நினதுசட்டை குளிர்வாடை நிலையிருப்பி னென்னே
நினதுநெறிக் கின்பநண்பன் நேர்ந்திலதா லென்னே
நினதுமணம் வறிதேயிந் நிலம்பரந்தா லென்னே

2

மெய்யன்பே வறிதாகி வீழ்வுறினும் என்னே
வியப்புரிய நினது மணம் வீண்படினு மென்னே
வெய்யகடுந் தீமைநன்மை வென்றுலு மென்னே
வீழ்மறமே யறமமுத்தி மேம்படினு மென்னே.

3

நின்னியல்பு புரியாதே நிமிருதி மென்மலரே
நிறைதூய்மை, இனிமைகெழு நீல நறுமலரே
இன்றுமென்றும் நின்னகத்தாம் இனியநறுமணத்தை
இரவாமை கரவறவே எவர்க்கு மளித்தருளே

தவருக உணர்ந்த நிலை

1

கங்கைக் கரையிலே பண்டோர் புராணிகர்
கடவுளே சீதை இராமனென
இங்கண் வருவதும் சீதை துயர்வதும்
இன்புற வோதி விளக்கினரே.

2

பேசும் உபதேசம் நேசமாக் கேட்டுப்
பிரிந்தனர் மக்கள் மணைப்புறமே
ஈசன் அருளையும் சீதை இராமன்
எனவருமாண்பையும் எண்ணமிட்டே

3

கூட்டத்தினின்றே குரலொன் றெழுந்தது
கூறுதிர் ஐயே விடையெனவே
நீட்டி முழக்கிய சீதை யிராமரை
நீயிரே யாரென் றுரைத்திரென்றே.

4

என்னுயர் கொள்கை யிழித்தனை மாற்றினை
என்று நான் கூறுவன் இப்பொழுதே
மன்னுயி ரெல்லாம் கடவுளே யென்று
வழுத்திலேன் மற்றது வெற்றுரையே.

5

உணர்க தெளிக உரைப்பன் இதனையே
உண்மை கடவுளே மற்றவை பொய்
அணுவுறு ஞாலம் கனவே மெய்போல
அழகுறத் தோன்றிவிளங்கினுமே.

6

ஏகமாம் சத்தியம் என்றும் இருக்குமே
இறைவன் அவனே எனவறிதி
தேக முயிராய்த் தெரிவதி யானலேன்
தேறும் இறைவனே யானலவோ

பான பாத்திரம்

1

நினக்கென வமைந்த பான நிறைகல மிஃதா மென்பல்
எனக்கென நீயேகாய்ச்சி யிடுங்கடும் பானமிஃதே

மனக்குறு குறைகள் தாபம் வளர்ந்த பல்லாண்டா
யெய்தி
அணைத்து நின்றனையே யென்ப தறிந்தனென்
விளம்புவேனே

2

ஈதுநின் போக்கா மென்பன் இடரிருள் மிகுவதொன்றே
பிதுறுபரல் கல்லெல்லாம் விழுமமே விளக்கநின்ற
காதல் நண்பனையான் நன்மைக் காட்சிகள் காண
விட்டேன்
போதுவன் அவன் என்மார்பம் போதராய் குழலி
நீயே.

3

ஈதுநின் பணியாம் கண்டாய் இன்பமோடெழி
லிங்கில்லை
ஈதுமற்றெவர்க்கும் வாயா தெனதுலகத்தி னுள்ளே
ஈதுநல்லிடத்தைக் கொள்ளும் இயைவது கொள்க
நீயே
ஈதுநீயுணர்க கண்மூ யென்முக நோக்குவாயே.

அருள் வாழ்த்து

1

[1900-ம் ஆண்டு செம்டம்பர் மாதம் 22-ந் தேதி சகோதரி நிவேதிதைக்கு எழுதியது.]

அன்னையி னிதயமும் அதிரதன் உள்ளமும்
தென்றல் நறுங்கால் ஒன்றிய இனிமையும்
ஆரிய பீடத் தமைந்த மந்திரமும்
ஒளிசால் உரிமையின் உயர்வுறும் வண்மையும்
ஆகிய இவையெலாம் அமைக நினக்கே
மேலும் நலமெலாம் வெள்ளமா விளைக
பண்டைய ஞானியர் கண்டிராக் கனவுகள்
நினக்கே யாகுக நிறைபுகழ்ப் பாரத
நாட்டிடை யெதிரிலில் நண்ணு மகற்குத்
தேவியும் தோழியும் செவிலியும் சிலதியும்
நாள்மையு மோருமையா நற்றுணை யாயே

அமைதி வேட்டல்

[குட்வின் அவர்கள் நினைவாக 1898-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் எழுதியது.]

1

உடுக்கள்சூழ் அகல்வானத்தே உயிரே நீயிவர்ந்து செல்க
அடுக்குமானந்த வாழ்வை அகவிளையுரிமை காண்க
தொடுக்குறுமிடமே காலம் தோன்று மெய்க்காட்சி மாயா
இடுக்கணில் அமைதி யென்றுமின்ப வாழ்வுனக்கா மன்றே

2

நினது மெய்ப்பணியே பூர்ண நினைப்புறு தியாகமாகும்
நினது வாழ்மணையே யெல்லை நிரம்பு மன்பிதயமாகும்
மனதுறு நினைவினின்பம் வருகால தேச மாய்க்கும்
அனகன பீடத்திட்ட அலரேபோலிருத்தி யன்றே

3

பற்றெலாம் சிதைந்து மாய்ந்த பரம வானந்தம் கண்டாய்
முற்ற வாழ்விறப்பென்ருகி முகிழ்த்த லொன்றகத் தேடிக்காய்
உற்றவர் துணைவலென்றும் உலகிலே பிறர்க்கா வாழ்ந்தாய்
கற்றனை மேலே செல்க கலாமுலகன்பு செய்தே.

ஒளி

[1900–ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26-ந் தேதி பேலூர் மடத்தில் எழுதியது.]

இங்கு மங்கும் எங்கும் நோக்குவன்
எல்லாம் முறைக்கண் இருக்கவே காண்பன்
ஆழத் தமைந்த அவலத் திடையே
ஒளிமய ஆன்மா ஒளிரக் காண்பலே.

உயிர்க் கடவுள்

[அமெரிக்க நண்பர் ஒருவருக்காக 1897-ம் ஆண்டு ஜூலை மாதம் 9-ந் தேதி அல்மோராவில் எழுதியது.]

1

உள்ளும் புறமும் ஒளியாவான்
உழைப்பார் கரத்துள் உரமாவான்
மெள்ள நடப்பார் கால்களிலே
மேவி நடப்பான் அவனே, நீர்
கொள்ளும் யாக்கைத் திருக்கோயில்
கொலுவீற் றிருக்கும் கோமானும்
வள்ளல் அவனை வழிபடுவீர்
வனைந்த சிலைகள் உடைத்தெறிவீர்.

2

உயர்ந்தோன் இழிந்தோன் ஒருங்காவான்
ஊனப் பாவி தவஞானி!
வயங்கு தெய்வம் புழுவென்னும்
வடிவம் இரண்டும் தாமாவான்
நயந்து காண அறியவரும்
ஞானச் சித்தாய் முழுமுதலாய்
வியந்தே அவனை வழிபடுவீர்
வெற்றுச் சிலைகள் உடைத்தெறிவீர்!

3

இறந்த காலம் எதிர்காலம்
இருக்கும் காலம் இக்கணக்கைத்
துறந்து நிற்கும் தூயவெளித்
தொடர்பில் இறப்பும் பிறப்புமிலை
சிறந்த அவனுள் எஞ்ஞான்றும்
செழித்தோம் செழிப்போம் செழிக்கின்றோம்
மறந்த அவனைத் தொழுவீரே
மற்றைச் சிலைகள் உடைப்பீரே

4

வாழும் இறையை மறந்திட்டு
வளம்சால் உலவாப் பேரொளியால்
சூழும் உலகில் அவன்கூட்டும்
சுகத்தைக் காணு அறிவிலிகாள்!
பாழும் பேய்த்தேர்க்(கு) அலைந்தேநீர்
பாழ்த்த கலகம் விளைக்கின்றீர்;
வாழி ஒருவன் புகழ்பாடி
வணைந்த சிலைகள் உடைப்பீரே!

படைப்புப் பாடல்

[ருக்வேதம் (10 — 129)]

1

வாழ்வுமக் காலத் தில்லை; வாழ்வின்மை யதுவுமில்லை
தாழ்வது நிலமு மில்லை; தானுயர் வானுமில்லை
போழ்வறு மயலை மூடும் பொருளேது புகற்சி யாதே
பேழ்பிலவிருளினுழம் பிறங்கிய பொருளஃதியாதே?

2

அழிவுமந் நாளிலில்லை; அமுத வாழ் வ'துவு மில்லை
இழிவுறு மிரவு மில்லை; எல்லுறு பகலுமில்லை
மொழியசை வற்றதாகி மூலமஃதியக்கம் காணும்
கழிபெருந்தனிமை மாண்பு கலந்ததன் மேலொன்-
றின்றே

3

ஆதியின் இருளின் கண்ணே அமைவுற விருளே
நிற்கும்
வேதியா வண்ணம் நீண்ட வியன்புனல் வடிவம்
பூண்டே
ஓதிய அதன்கண் மாய்ந்தே உள்ளுறை பொருளா
மஃதே
தீதிலா அருந்த வத்தைச் செய்துமாண் பெய்திற்
றன்றே

4

மனமுதல் விதையா மாசை வந்தது முதன்மை யாக
முனிவரர் இதனைத் தம்முண் முயற்சியான் வாழ்வினோடு
கனியும் வாழ்வின்மை தன்னைக் கண்டு தேர்ந்துணரா நின்றார்
இனியிதன் கதிர்கள் உம்பர் இம்பரோ டிருபால் உண்டே

5

அன்னது நிகழ்ந்த பின்னர் அமைந்தது படைப்பின் மாண்பு
தன்னது நிலைமை தானே தாங்குறுந் தகுதி யானே
பன்னரும் படைப்பி னாற்றல் பறந்துமேல் நிரம்பா நிற்க
மன்னரு நெறியில் நன்கு வளர்வுற லாயிற் றன்றே.

6

வழியினை யறிவார் யாரே? மற்றதை யுரைத்தார் யாரே?
எழுவது மிதுதான் யாண்டை யாண்டு முன்னிற்றலாகும்
தழுவு முன்னேற்றம் கண்டு தாவினர் தேவ ரெல்லாம்
வழுவற வறியார் யாரே வந்ததீதி யாங் கணின்றே

7

யாங் கிருந் தெழுந்த தாகும் இன்ன முன்னேற்றந் தானே
ஈங்கிது தகைப்பா றுண்டோ இல்லையோ உரைத்தல் நன்றாம்
ஓங்கிய வான மாளும் ஒருவனே அரசாம் ஆகில்
ஆங்கிவை புகழாய் அன்னோன் அறிவனோ அறிகி லானோ

நிர்வாண ஷட்கம்

[நிர்வாணம் பற்றிய ஆறு பாடல்கள். ஸ்ரீ சங்கர பகவத் பாதர் இயற்றியதன் மொழிபெயர்ப்பு.]

1

மனமகன்றேன்; புத்தியில்லேன்; சித்தமில்லேன்
அகங்கார வகைமை யில்லேன்;

வினவிருந்த செவியில்லேன்; நாவில்லேன்;
நாசியிலேன்; விழியு மில்லேன்;
கனமுறைந்த வானில்லேன்; நிலமில்லேன்;
கனலில்லேன்; காலு மில்லேன்;
தின நிறைந்த சிதானந்த ஒருவனியான்
சிவோக மென்பன் சிவோக மன்றே!

2

பெருமை மிகு பிராணனிலேன்; ஐவகைய
வாயுவி லேன்; பிறந்த மெய்யின்
அருமையுறு தாதுவகை எழுமையிலேன்;
கோசமெனு மைந்து மில்லேன்;
உ.ரிமை பெறும் வாக்கினேடு பாணிபதம்
பாயு பத்தம் ஒன்று மில்லேன்
திருவருளும் சிதானந்த ஒருவனியான்
சிவோக மென்பன் சிவோக மன்றே.

3

வெறுப்புமிலேன்; விருப்புமிலேன்; அவாவினேடு
மயக்க மெனும் விழும மில்லேன்;
செறுப்புரிய மதமுமிலேன்; மாற்சரியம்
எனும் பெயர் பூண் சிறுமை யாகேன்;
பொறுப்புரிய அறமுமிலேன்; பொருளுமிலேன்
இன்பமிலேன்; புகழ் வீடிலேன்;
திறப்பரிய சிதானந்த ஒருவனியான்
சிவோக மென்பன் சிவோகமன்றே.

4

புண்ணியமே பாவமெனு மிருமையிலேன்;
இன்பதுன்பம் பொருந்த லில்லேன்;
எண்ணிய மந்திரம் தீர்த்தம் வேதமோடு
வேள்வி யெனும் இயைபு மில்லேன்;
உண்ணிய வெய்துணவு மில்லேன்; உண்பதிலேன்;
அதுதுய்க்க உரியே னல்லேன்;
திண்ணியதாம் சிதானந்த ஒருவனியான்
சிவோக மென்பன் சிவோக மன்றே

5

இறப்புமிலேன்; இறப்புறுமோ வெனுமையம்
இலேன்சாதி பேத மில்லேன்;
பிறப்புமிலேன்; தந்தையிலேன்; அன்னையிலேன்
உறவுபிற பெறுவே னல்லேன்.
சிறப்புமிகு நண்புமிலேன்; குருவுமிலேன்;
சீடனெனும் சிறுவனில்லேன்;
திறப்பரிய சிதானந்த ஒருவனியான்
சிவோக மென்பன் சிவோக மன்றே

6

யானேதும் விகற்பமிலேன்; ஆசார வுருவமிவை
இயைவே னல்லேன்;
வானேயும் கடந்துள்ளேன்; பொறிபுலன்கட்
கப்பாலாய் வயங்கா நின்றேன்;
கோனேயும் அசங்கதத்தேன் முத்தியிலேன்;
பந்தமிலேன்; குறிப்பிற் கெட்டாத
தேனேறும் சிதானந்த ஒருவனியான்
சிவோக மென்பன் சிவோக மன்றே.

என் நாடகம் முடிந்தது

[1895-ம் ஆண்டு வசந்த காலத்திலே நியார்க்கு நகரில் எழுதியது.]

1

காலமெனும் அலையிலென்றும் எழுந்தும் வீழ்ந்தும்
கையடித்துக் கால்வீசி யுருண்டு செல்வேன்
சாலமெனவெதிர் காட்சி பொருளில் காட்சி
தமைநோக்கி யுயிரோட்டம் தாழ்தல் பாய்தல்
கோலவரு முடிவில் பெருங்கூத்தும் கண்டு
குமுறுகிறேன் மனமகிழ்ச்சி கொளவே மாட்டேன்
ஏலலென்றும் ஓடுவதாய் எல்லைக் கோட்டை
என்றென்றும் எய்துகிலா இதனைக் கண்டே.

2

பிறந்துபிறந் துறுந்தோறும் வாயில் நிற்பேன்
பீழைமிகும் வாயிலது திறப்பக் காணேன்
சிறந்த வொளிக்கதிர் நெடுநாள் தேடித் தேடிச்
சிறுபயனுமெய்தாமை மழுங்கும் கண்கள்
அறந்தழுவும் வாழ்க்கையெனும் குறுகல் வார
அவதிநின்று கீழ்நிலத்தை அளவா நின்றேன்
பறந்தழுது நகைத்துவிழும் குழவைக் காண்பேன்
பரிவெதற்கென்றியா வருமேயறியா ரன்றே.

3

இருண்டு முன்னர் எதிர்நிற்கும் கதவம் உண்டே
இதற்கப்பால் போக்கில்லை எனவே கூறும்
திரண்டமுடி பிதுவேகாண் விதியை யாவும்
செயல்புரியேல் இயன்றளவு பொறுத்தல் நன்றே
உருண்டுசெல்க பிறரோடு வாழ்விரத முண்டே
உணர்விழந்து பித்துங் கொண்டுழல்வாயாக.
தெருண்டுணர முயலுமவன் துயரே காண்பன்
சிறிதுநின்றே யவரோ டுறைதல் நன்றே

4

இளைப்பகலும் பெரும்பேறு எளியேற் கில்லை
இருளாழி மிதக்குநில மென்னு மொக்குள்
விளைத்தவுள்ளீ டில்லாத வுருவம் நாமம்
வீதல்பிறப் பிவையொன்றும் பொருளாகாவே
தளைத்தவின்ன பொருக்ககன்று தாவிச் செல்வான்
தந்தபெயருருவ மெலாம் தாமே மாயக்
கிளைத்தலிரு பெருங்கதவம் திறக்க வேண்டும்
கிளருமெனக் கவைதிறந்தே யாதல் வேண்டும்
பெரிதிளைத்த நின்மதலை பெருவீடெய்தப்
பெருங்கதவம் திறந்தருள்வாய் கருணைத் தாயே
அரியலொளி வாயில்வழி அடியேன் செல்லல்
ஆரியக்கூத் தடங்குமினி அடைவன்வீடே

5

இருளிலெனை விளையாட வெளியே விட்டாய்
எனைமருட்டும் வெருட்சி முகபடமும் பூண்டாய்

அருளுளதா நினைப்பகல அச்ச மெய்த
அடிநாயேன் விளையாட்டோ வினையா யிற்றே
மருளுமலை பொங்குகடல் மீதே வீழ்ந்து
வலிந்திங்கு மங்குமெறி பட்ட வாற்றன்
சுருளுமுண்டு வாழ்துயரம் துன்பமுண்டு
தோன்று மினியின்பமெனு நினைப்பு முண்டே

6

யாங்குயிரின் வாழ்வதுவே இறப்பின் வண்ணம்
இறப்பதுவோ மீண்டணுகும் இன்ப துன்பம்
தாங்குயிர்வாழ் வுருளிலியை பிறிதோர் சுற்றும்
தக்கவொளி விளங்கு பொன்மைக் கனவுத்தோற்றம்
யாங்குகுதல் வாய்ச்சிறுவர் இனிது காண்பர்
இறுதியிலே யவை பொடியா மழிவும் காண்பர்
வீங்குமுணர்வுறுதி யெலாம் விளிந்து மாய
வீழ்க்கு மன்ன துருப்படலம் வாழ்க்கை யாமே.

7

முதுமை யெனுந்தளர் பருவக் கடை நாட்காலை
மூதறிவு பிறக்கும் உருள்முனைய மாட்டேம்
பொதுநெறியே நாளும் யாண்டும் யாண்டும்
போவதுருள் ! இளமைவலி பொருமே யாகில்
அதுசிறிய மாயை விளையாடற்கேற்ப
அமைகருவியெனவறிந்து பொய்ம்மைத் தேற்றம்
உதுவியக்கு பொறியாசை யச்சாம் ஆரம்
உறுமின்ப துன்பமென வுணரலாமே.

8

துறையறியேன் செல்கின்றேன் திசையுமோரேன்
துலையிலருட் பெருந்தாயே காத்தல் வேண்டும்
நிறைகனலிதன் கணின்று மீட்டல் வேண்டும்.
நினைவாசை மிதப்பினின்று நீக்கவேண்டும்
பொறையில் திகில்தரும் முகத்தைக் காட்டவேண்டா
பொறுக்கும் வலியிலேனன்னாய் அந்தப்பார்வை
குறைவிலருள் பொழிந்தருள்க அன்பு காட்டிக்
குற்றமிகுந் தாலுமருட் குறிப்பி னாலே

9

எப்பொழுதும் குழப்பமிலாக் கரைக்கே யென்னை
என்தாயே இருகரத்தால் அழைத்துச் செல்க
வெப்புமிகு துயர்க்கப்பால் விழிநீர்க் கப்பால்
வியனுலக ஆனந்த நிலைக்கு மப்பால்
ஒப்பறுசெங்கதிர் மதியம் உடுக்கள் மின்னே
உணர்வரிய உரைப்பரிய உயர்வு சான்ற
அப்பெரிய வொளிபெற்றே அவைகள் வாழும்
அவ்விடத்தே சேர்ப்பிக்க அருளினாலே

10

இனியென்றும் நின்முகத்தைக் கனவின் மாயை
எளியேற்கு விளங்காமை மறையா தாக.
தனியடியேன்கூத்து முடிவு கண்டாய்
தாயேயென் தளையறுத்து வீடு நல்கே.

சாந்தி

1

[1899-ம் ஆண்டு நியூயார்க்கு ரிட்ஜ்லிமனோரில் எழுதியது.]

வலிமையினன்னது வருவது காணாய்
ஆற்ற லின்மையாம் ஆற்றலா மதுவே
இருளிடை யிருக்கும் எல்லொளி யஃதே
பேரொளி யிடையுறு பெருநிழ லதுவே.

2

என்றும் உரைபெரு இன்ப மதுவே
உணர்வுரு தாழ்ந்த உறுதுய ரஃதே
வாழ்வுறு அழிவரு வாழ்வு மன்னதுவே
வருந்துரு நித்திய மரணமு மதுவே

3

இன்பமும் துன்பமும் இல்லை யஃதே
இரண்டினிடையே இருப்பதா மதுவே

இரவு மெல்லையும் இல்லை யதுவே
இரண்டையு மிணைக்கும் இணைப்பா மஃதே

4

இசையினு ளிருக்கும் இனிய நல்லமைதி
தெய்விகக் கலையுட் சிறந்த நிருத்தம்
பேச்சுக் கிடையே பிறக்கு மவுனம்
உணர்ச்சி யிரண்டின் ஊடே பிறக்கும்
இதய அமைதி யென்ப ததுவே.

5

காணப் பெருத கவின்மலி யழகு
தனிமை விளங்குறு புனித மெய்யன்பு
பாடப் பெருது வாழ்பாட லஃதே
அறியப் பெருத அறிவு மதுவே.

6

இரண்டு வாழ்விடையே இயைந்த சாவதுவே
இருபெரும் புயலிடை இலங்கு மமைதி
உயிர்ப்படைப் பெழுந்த ஒருபெருஞ் சூனியம்
மீண்டு மஃதொடுங்க விரையு மகமே

7

கண்ணீர்த் துளியும் கடுகும் ஆங்கே
நகைக்கு முருவினை நன்கு விளக்கவே
வாழ்வுக் கமைந்த வரையறை யதுவே
சாந்தி வாழும் தனிமனை யதுவே.

2

படைப்புப் பாடல்

1

உருவம் பெயர்நிறம் மருவிலாப் பெரும்பிழம்பு
இறப்பெதிர் வெனவரு மறப்பரு காலம்
இல்லது காலத் தெல்லை கடந்தது
இடமில தொலியில தெல்லையு மற்றது
எவ்வகைத் தொடர்பு மில்லது மறுத்துரை
அன்மை வாசகம் ஆங்கடங் குறுமே

2

அவ்வுழி நின்றே அடிநில நோக்கி
மூல மகாநதி முழங்கிப் பாயுமே
ஒளிகெழு மவாவெனு முருவினை யெய்தியே.
பாய்ந்த அதன்புனல் வாய்ந்த சினத்தால்
யானுளேன் யானுளேன் யானுளேன் என்று
முடுக்குற முழங்கி யடுக்குற வருமே

3

எல்லை யிலவா வெனு மிப்பே ராழியில்
எண்ணிறந் தெல்லை யிகந்த பேரலைகள்
ஒளியொடு தோன்றும் ஓ ஓ அவைதாம்
எத்துணை யாற்றல் இயைவன பலதிறத்து
எத்தனை கோடி இயலுரு வியைவன ?
எத்தகை யமைதி இயைபுறப் பொருந்தின ?
எத்துணை வகைய இயக்கம் இயன்றன?
இவற்றினை யளந்தறிந் தியம்புவார் யாரே ?

4

பன்னூ ருயிரம் பசுங்கதிர் வெண்மதி
பன்னூ ருயிரம் பகற்கதிர் ஞாயிறு
இப்பெரு மாகட லிடையிற் பிறந்தே
பொருவரு முழக்கொடு வெருவர விரைவ
வான மாநில மறையா நிற்கும்

ஒள்ளொளி மிகையால் உயர்வுசால் துறக்கம்
எங்கும் பரப்பி யினிதர சாளுமே.

5

வாழ்வினில் விரைவும் மயங்கும் சோர்வும்
உயிரில் தன்மையும் உடையபல் லுயிரினம்
அதனு ளெழுந்தே அவனியில் வாழ்வுறும்
இன்ப மெய்தும் துன்பமு மெய்தும்
பிறப்பும் பிணியும் இறப்பும் எய்துமே
உண்மையி லவனே ஒளிகெழு ஞாயிறு
அவன்பெறு கதிர்க்கணம் அவனருள் வழித்தே
கதிரொடு கதிர்கெழு கதிரவ னென்றும்
இருமை யெவாமவன் ஒருமை விளக்கே.

—(வங்கமொழிக் கவிதை)

நண்பர்க்கு

1

இருளை யொளியென மருளுவ தியாண்டே
துன்பமே யின்பமாத் தோன்றுவ தியாண்டே
படுபிணி நலமாம் பாவனை யாண்டே
புனிற்றிளங் குழவியின் பொருமலழுகை
அதனுயிர் வாழ்வினை அறிவிப்ப தியாண்டே
அறிவுசால் அன்ப அத்தகு நிலத்தே
ஈண்டுநீ இன்பமு மெய்த நினைத்தியோ?

2

முடிவிலாப் போரும், ஒழிவிலாப் போட்டியும்
யாங்கு நிகழுமோ, இனியதன் மதலையைத்
தந்தையே யெதிர்க்கச் சிந்தை செய்யுமோ
யான்யான் என்பதே யாங்கெப் பொழுதும்
பேச்சும் பாட்டும் பிணிப்புமாய், இருக்குமோ
அறிவுசால் அன்ப அத்தகு நிலத்தே
பரம சாந்தி பயில நாடுதியோ?

3

தேவ ருலகமே தீயபாழ் நரகமாம்
சேராச் சேர்க்கை தெளிந்தி யாவரே
மாசமு சார மாயைநீத் தேகுவார்!
கருமத் தளையாற் கழுத்திறு கியதே
அவலத் தழுந்தும் அடிமை யின்னவன்
யாங்கே யெய்தி இன்ப முறுவனே.

4

யோக மார்க்கமும் போக மார்க்கமும்
இல்லற வாழ்வும் இணையறு துறவும்
பக்தி வழிபாடும் பணம் திரட்டுவதும்
விரதமும் தியாகமும் மிகுகடுந் தவமும்
ஆகிய அனைத்தையும் ஆய்ந்துளே னெனினும்
யாதனை யறிந்துளேன் இயம்பறி கிலனே.

5

இன்பமோ இம்மியும் இல்லையென் றுணர்வேன்
வாழ்வென் பதுவோர் மயக்கம் தருகலம்
நின்னது இதயம் நிமிர மேற்சென்று
நிற்கு மளவும் நின்பெருந் துயரம்
மிகுதியே யாமென மெய்யுற வுணர்க.

6

பரந்த மனங்கொளும் பண்ப தன்னலம்
நினைகிலா அன்ப நிலைகெட் டழிந்த
நீளுல கிதனில் நினக்கிட மிலையே
இரும்பின் பெருஞ்சிலை யேற்கும் தாக்கைச்
சலவைக் கல்லில் சிலையும் பொறுக்குமோ ?

7

உணர்ச்சி யின்றி யுயர்வுகெட் டிழிந்தே
மதுமய வாக்கும் இதய! நஞ்சமுமாய்
உண்மை யொழிந்து தன்னை வணங்கி

இருக்கத் துணிதியேல் இச்சமு சாரத்
தமைந்த நிலைமை யடைதி யாதியே.

8

உள்ளுணர் வுயர்வான் உயிரையும் பிணைவைத்து
இந்நிலத் தமைந்த எனதுவாழ் நாளுட்
பாதி கழித்தேன் பரந்த பேரன்பாம்
பேற்றினைப் பெறவே பித்தன் போல
உயிரது நிழலையும் உறப்பற் றினனே.

9

மெய்ந்நெறி தெளிவான் வேறுவேறு நெறிகளில்
நுழைந்தாய்ந் துள்ளேன் முழைவாழ்ந் துள்ளேன்
சுடலையில் திரிந்துள்ளேன் சுரநதிக் கரையிலும்
பிறபிற புண்ணியப் பெருநதிக் கரைக்கணும்
ஐயமே யுணவா யலைந்தன பலவே

10

நண்பரி னகன்று நல்லுடை பெருதே
கந்தை யணிந்து கைப்பொரு ளின்றியே
இறைவ னருளினு லெய்துறு முணவை
மனைதொறு மிரந்து வயிற்றை நிரப்பித்
தவத்தின் கடுமை தாங்கா துடலம்
இளைப்புற வாழ்ந்த யானிவ் வாழ்விடை
எப்பொருள் தேடினேன் எனவினவுதியோ

11

செவிக்கொளா யன்ப சிந்தனை கூறுவல்
எனதுவாழ் விடையில்யான் இப்பே ருண்மையை
உணர்ந்து தெளிந்துளேன் உலகவாழ் வாகிய
புணரி யலைகளாற் புரட்டப் பெற்றும்
கடலுக் கப்பாற் கரையிற் சேர்க்கும்
ஓடமொன் றுண்மை உள்ள முணர்ந்ததே.

12

வழிபடு முறைகளும் வருமுயி ரடக்கமும்
சாத்திரம் தத்துவம் தரிசன பேதமே

பற்றறப் பற்றுதல் மற்று மினையன
மனத்து ளெழுந்து வளர்ந்த மயக்கமே.
மெய்ப்பொரு டெளியும் மெய்யன் பொன்றே
தேடத் தகுந்த சிறப்புள நிதியமே.

13

சீவனே பிரமம் தெய்வமே மனிதன்
பேயே பிசாசமே பிரேதமே பூதமே
பண்ணவன் விலங்கு பறவை பூச்சியே
புழுவே யெனவீங் கெழுவன அனைத்துளும்
இதயத் தலத்தில் இவ்வன் புள்ளதே.

14

தேவருட் சிறந்த தேவன் யாவன்
எல்லா வுலகையும் இயக்குவான் யாவன்
அன்னை தன் மகவுக் காக வுயிர்விடும்
கள்வனே துணிந்து களவாடு வானே.
இவ்விரு செயலும் இதயத் தெழுந்த
அன்பின் தூண்டுத லானே பிறப்பதை
அறிந்து தெளிக அனைத்துமாண் பாகுமே

15

மக்களின் வாக்கு மனங்கட் கப்பால்
நலத்தினுந் தீங்கினும் நிலைக்குமற் றதுவே
எல்லாம் வல்லதாய் எல்லாம் அழிப்பதாய்க்
காளியென் றெழுதரும் காட்சியு மதுவே
அன்பே யுருவாம் அன்னையு மதுவே.

16

பிணியே யிழவே பெருமிடித் துயரே
தருமமே அதற்குத் தனிப்பகை யாகிய
அதரும வகையே அறவினை மறவினைக்
கமைந்த பயனே ஆகியயிவை யெலாம்
பல்வேறு நெறியாற் பழையவப் பொருளின்
வழிபாடாமென மதிக்கத் தகுமால்
சீவன் தானே செய்வன யாவையே

17

மகிழ்ச்சி நாடுவான் மயங்கு மனத்தனே
பிழையே விழைவோன் பித்தனேயாவன்
சாவு விரும்புவான் தானொரு பொறியறை
வீயா வாழ்வோ வீணுடையாமே

18

ஒளிமிகு மனத்தேர் களிமிக வமர்ந்தே
நெடுந்தொலை நெடுந்தொலை நீசென் றுலுமே
சமுசார சாகரம் தான்சூழ்ந் திருக்கும்
இன்ப துன்பமாய் எழுமலை முழங்கவே.

19

சிறகினை யிழந்த பறவாய் கேளாய்
பிழைத்துப் போதற் கிழைத்தநெறி அஃதில
அடிக்கடி யடிபட் டந்தோ வீழுதி
இயலா வொன்றை யேன்முய லுதியே.

20

வறிதே நம்பிய அறிவினை விடுக
தோத்திரம் நிவேதனம் தொடும்வலி விடுக
தனைமறந் துயரும் தகுதிசா லன்பே
உரியமா கதியாம் எரியினுள் வீழ்ந்தே
பூச்சிகள் உண்மை புகல்வகா ணினக்கே.

21

அழகின் மயங்கிய அற்பப் பூச்சி
கண்ணிழந் துனது கருதுநின் றுன்மா
அன்பெனு மதுவால் வன்பிழந் துளதே
மெய்தெளி யன்ப வெய்ய நெருப்பிடை
இழிந்த தன்னல எண்ணந் தனையும்
ஆன்ம தோடம் அனைத்தையு மிடுகவே.

22

இரப்பவற் கின்பம் என்றேனு முளதோ
அறத்துக் குரியனு யமைவதில் நலமென் ?

என்றும் ஈக எவ்வகை மாறும்
கருதேல் நின்றன் கருத்துளே நிறைந்த
பெருநிதி யுளவே தருமம் புரிகவே.

23

அநந்த வத்துவுக் கமைந்தவோர் சந்ததி
நீயே யென்பதை நெஞ்சுற வுணருக
இதயத் தகமுற விருக்குமன் பாழ்கடல்.
ஈக லென்றும் எதனையும் ஈகவே
மாறெதிர் விழைவோன் வனமெனும் வாரிதி
சிறுதுளி யளவிலும் சிறுகி யொடுங்குமே.

24

பிரம மெனுமொரு பெரும்பொருள் முதலாப்
புல்லிய புழுவாப் போமுயி ரளவும்
அறவும் சிறிதா மணுவி னளவும்
அன்பின் மயமாம் அவனே உள்ளான்
அன்பநின் னுளத்தை ஆன்மா அதனையே
உடலை யவற்றின் அடியி னிடுகவே.

25

இவைநின் முனமவன் எடுத்தபல் தோற்றமே
இவற்றை மறுத்தலின் யாங்கவற் றேடுதி
ஏற்றத் தாழ்வற எல்லா வுயிரையும்
அன்பினுற் றழுவுறு மவனே கடவுளை
நன்கு வழிபடு நடையின னுவனே.

(வங்கப் பாடல்)

நான் உனக்கு இசைக்கும் கீதம்

1

பாடுகின்றே னொரு பாட்டுனக் காகவே
பாடுகின்றேன் மக்கள் பாராட்டுரை
நாடுகின்றே னிலேன் நன்மையே தீமையே
நந்தும் பழிப்பே புகழுரையே

2

அடிமை நுமக்கே யிருமை யுருக்கொளும்
அத்தனேதாய்நும் சரண்புகுந்தேன்
அடிமலர் பற்றிச் சிரத்திணை வைத்தனன்
ஆதரவெய்த வணங்குவனே.

3

என்றன் புறத்திலே என்றும் உறுதியாய்
எந்தைநீ நின்றனை நன்றுறவே
நின்று திரும்பு வேனுயின் யான் நின்முகம்
நேருறக் கண்டு மகிழுவனே

4

புன்னகை தோற்றிய நின்முகம் காண்பனே
போற்றியே யின்னொரு பாட்டிசைப்பேன்
என்னகமச்ச மொழிந்ததே காண்பிறப்
பிறப்பிவை யென்னடி வீழ்ந்தனவே.

5

பிறந்து பிறந்து வருந்தோறும் யான்நின்
பெருந்தொழும் பேற்கும் நியதியுளேன்
சிறந்த கருணைக்கடலே நின் போக்கோ
தெளிவில தன்னதா வென்விதியே

6

விதியை அறிந்திலேன் அறிய விழைந்திலேன்
வியத்தகு பக்தியே முக்தி சபம்
கதியை யருளும் தவமுத லாயின
காணு மனுபவம் பூசனையே

7

என்பவை யின்னவை போல்வன வேணைய
எந்தையே நின்னரு ளாணையினல்
முன்புற வோட்டினேன் என்னகத் தின்னும்
முகிழ்க்கும் அவாவொன் றெழுந்துளதே

8

நின்னெடு மொன்றி யிணங்கு நிலைமையே
நேயத் துருவமே நீதெளிதி
என்னையும் நின்னகம் ஈர்த்தருள் ஆசை
இடைவெளி நம்மைப் பிரியாமலே.

9

விழியோ புறவுல கன்புற நோக்குமே
விழைவொடு தன்னகம் நோக்கியதே
விழியிதன் கூத்தென்னை வேற்றகம் தன்னையே
மேவும் கருத்தே பிறவிலையே

10

நீயே யென்கண்கள் விழிகள் பிறவில
நீயே நீயேயென வோதுகின்றேன்
தாயேயென் தந்தையே நின்முகந் தன்னையே
தாங்கு முயிருள்ள கோயிலெலாம்

11

மழலைக் குழவி விளையாட்டுப் போலவே
மற்றென தெண்ணமெலா நினக்காம்
கிழவசில கால்யான் நின்னைச் சினப்பேன்
கிடைக்கப் பெருமலகன் றெழிவேன்

12

ஆயினும் நன்கிருள் அந்த காரத்திலே
அடிமைமுன் பேச்சறக் கண்ணீருடன்
நீயென்னை நோக்கியே நிற்பது காண்கின்றேன்
நின்முகம் என்முகம் நோக்குவதே

13

அன்பு பொழியு முகத்தினைக் கண்டதும்
அடியனேன் நின்னக மீளுகின்றேன்.
பொன்புனை நின்பதம் போதில் வணங்கியே
போற்றியுருகி யடங்குவனே

14

என்றுநீ நின்மகன் பாற்சினம் கொள்கிலை
  என்ப தறியு முறுதியினல்
நின்றன் கழல்விழுந்தேன் குறை போற்றென
  நேயம் விளக்கி யிரந்திலனே.

15

எத்தனை குற்றம் குறைகள் என்பாலுள
  ஏழை யறிவின் திறமறிவாய்
அத்தனே நின்னையொழிந் தெவர்தாமே
  அடிமை குறைகள் பொறுப்பவரே

16

யான்நீயே யென்பது கண்டுளேன் பன்முறை
  யாளநீயே நீயே நான் எம்பெருமான்
மான் நீயென் சொல்லுளாய் வாயுளாய் கல்விசால்
  வாணிவீணை பாணியாக வுளாய்

17

நின்னருளாற்றின் பெருக்கால் விரைவினல்
  நின்னிச்சைக் கேற்ப வுயிர்செலுமே
நின்னெலி யாகிய பேரிடி வாரிதி
  நேரு மலையொலி மேற்படுமே

18

சந்திர சூரியர் நின்குரல் காட்டுவர்
  தருமிளங்காற்று நின்மெல் லொலியே
மந்திர மில்லையே உண்மையே யீதெலாம்
  மற்றிவை யெல்லாம் புறச்செயலே

19

அறியவல் லாஞெரு ஞானிதன் னுள்ளத்தில்
  ஆய்ந்துணர் கின்றேன் அகச்சிறப்பை
அறியவே நீயருள் பேருரை தன்னை
  அறிவிக்கு மாற்றலிவை பெறுமோ.

20

ஞாயிறு திங்களே பாய்வரும் கோள்களே
நன்கொளி வீசுறு தாரகையே
மீயுறும் வானத் தமைந்தபல் கோடி
வியனுல கங்களே **வாலொளியே** (தூமகேது)

21

மின்னலே யெங்கும் பரந்தெழும் வானமே
வேறுள தோற்ற மிவற்றை யெலாம்
நன்னர் விழித்து மதித்தன நோக்கியே
நாளும் இருக்கும் விழிகள் உண்டே

22

காமமே கோபமே லோபமே மோகமே
காணுமத மொரு மாச்சரியம்
யாமென வந்த பிறப்பெனு நாடகம்
ஈங்கு நிகழ இடந்தருவ

23

யான்யா னெனு நினைப் பெவற்றி னிடையே
இடம்பெறும் அத்தகை அறிவினியல்
ஈனவறியாமை இன்பமே துன்பாம்
இருமை யுணரு முணர்ச்சிகளே

24

பிறப்பது வாழ்வது தேய்வ திறப்பது
பெற்ற மனத்துறு பீழைநிலை
புறத்த தகத்ததே யாகு மிருகரம்
போந்தன யாவு முறைமுறையே

25

ஆழ்கட லாழ்த்தும் வானத்தி லுச்சியில்
அழகிய சந்திரன் சூரியனே
வாழ்பல தாரகை எல்லையில் தேயமே
மற்றும் அறிந்துள சுற்றுவரை

26

மனமொடு புத்தியே சித்தம் அகங்காரம்
வானோர் இயக்கர் மனிதர்பிறர் ,
எனவிவர் யாரும் விலங்கே பறவையே
இழிபுழு பூச்சி யேணையவே

27

அணுவே அணுத்திரள் உயிரினம் உயிரிலா
அணைத்தும் அகம்புற மாவனவும்
நுணுகு மதனுளே வாழ்வு பெறுவன
நோக்கி னதுவே பொதுநிலமாம்

28

இவ்வண்ண மாகப் புறத்துள தோற்றம்
இசைப்பது நுட்பக் கருத்திலேயே
செல்வண்ண மான மனித்த ருடலிடை
சேரும் புருவ மயிர்போலவே

29

இரும்பெரு மேரு மலையின் முடியிலே
என்றும் பனியே படிந்திருக்கும்
கரும்பெரு மேகத்தி னெல்லை கடந்துவிண்
காயம் கடந்து பலகாதமே

30

முடிகளோ ராயிரம் வெண்பனிப் போர்வையின்
மூடி யெழுந்தன வானிடிக்கும்
ஒடிவில் ஒளியொடு மின்னலின் மிக்க
ஒளியும் விளக்கி விளங்குறுமே.

31

ஆயிரம் தூய கிரணங்க ளோடும்
அயன வடக்கண் வரும் கதிரோன்
மீயுயர் மேருவின் மீதுதன் ஒள்ளொளி
வீசுவன் கோடி இடி பொரவே

32

முடிமுடி தோறும் முழுவொளி ஞாயிறு
முட்டி முடுகி மயங்குவனே
முடியணி மேருவை வெப்பா லுருக்கவே
மோதித் தகர்வுற் றதுவிழுமே.

33

பொன்னு யிருந்தது நன்று யுருகிப்
புனலாய் விழுந்து பரந்ததுவே
என்னு மீதுவொர் கனவென யாவரும்
எண்ணவே மேரு மறைந்ததுவே.

34

எண்ணில வாகி மனத்தே யெழுந்த
இயக்க மணைத்து மருட்செயலால்
பண்ணிய வொன்று யடங்கி யமைந்ததும்
பல்கோடி ஞாயிற்றை வெல்லுமன்றே.

35

சித்தெனும் சூரியன் தோற்ற முறுவதே
சிறுமைய ஞாயிறு திங்கள் உடு
அத்தருணத்தே யொடுங்கி மழுங்கி
அடங்கி யுருகி மறைந்திடுமே.

36

வான வுலகமே பாதலமே மண்ணே
மற்றும் விரிந்துள பேருலகே
ஆனவிவை யெலாம் குளப்படி நீருள்
அடங்கும் சிறுமை பெறுவனவே

37

இன்ன நிலையிற் புறத்தே விளங்கும்
இருக்கைய ஞால வகைகடந்து
தன்ன தகத்தே தகவே விளங்கும்
தனிப்பே ருலகை யறிவதுண்டே

38

ஊனுடல் வேண்டிய போக வகைகள்
ஒடுங்கிய தற்புகழ் உள்ளத்தெழும்
ஈன வுணர்வின் குழப்பம் அடங்கிற்று
இதயத்தின் தந்தி அறுப்புண்டதே

39

சூதந்திரம் வந்தது கட்டிய கட்டெலாம்
துகள்படத் தேய்ந்தே யறுந்தனவே
பதந்தரும் ஆசையே மாயமே யெல்லாம்
பறந்தன போயின பற்றறவே.

40

அசைவே யிலாததோர் மாபெரு நல்லொலி
ஆங்கே யெழுந்தது நன்குறவே
வசைதவிர் நின்குரல் நின்னொலி யன்னதே
மற்றது கேட்டேன் அடிமையுமே

41

பணிவொடு நின்பணி யேற்கவும் நன்கு
பயின்று முறையா னிறைவேற்றவும்
துணிவொடு நின்றன னெந்தையே நின்னருள்
தோற்றும் குறிப்பை யுணர்வதற்கே.

42

உலக மொடுங்கும் பிரளய காலத்தே
உணர்வே உணர்வான் உணர்பொருளே
நிலவுத லில்லா நிலையிலே ஞாலம்
நிலையற்று ஞாயிறு திங்களொடே

43

விண்மீன் இனமும் விழுந்தொழி நாளிலே
வீவில் நிருவாண தானத்திலே
எண்ணும் செயலொடு செய்வதே செய்பவன்
யாவும் இலாத நிலையினிலே

44

கருவியாம் தன்மையே காரணத் தோடு
கரந்து கழிந்த பெருநிலையில்
இருளின் பெரும்பிழம் பெங்கும் பரந்தே
இருக்கையில் யானே இருப்பவனே

45

இரும்பெரு ஞாலமும் ஏனை யுலகமும்
இல்லா தொடுங்கும் பிரளயத்தே
அரும்பெரு ஞாதாவே ஞானமே ஞேயமே
ஆனமுன் றென்று யடங்கையிலே

46

உலகினை வேறுபிரித் துணராமையும்
உள்ளத் துணர்தலு மற்றநிலை
இலகொளி ஞாயிறே திங்களே தாரகை
இல்லா திருளே செறிவுறவே.

47

மூவகைப் பந்தமு மில்லா நிலையிலே
முக்குண வேற்றுமை யொன்றறவே
ஆவன ஞால மனைத்து மிருக்கையில்
அனைத்துமே யொன்று யடங்குகையில்

48

நுண்ணிய தூய அணுவாகி யெஞ்சிய
நேர்ன்மை விளக்கு நிலைமையிலே
எண்ணிய யாவைக்கு முட்பொரு ளாகவே
யானே யிருப்பன் அசைவறவே

49

மற்று மொருமுறை யென்னை மலர்த்துவன்
வாழு மெனுதொரு பேராற்றலால்
முற்று முணர முதற்க ணெழுந்து
முளைத்ததே யோமெனு மந்திரமே

50

ஆதியொலி யிஃது மோதுமே சூனியம்
ஆகிய அந்த வுலகத்திலே
ஓதிய வெல்லை யிலாப் பெருந்தேயமே
ஒல்லொலி மற்றிது கேட்பதுவே

51

முதன்மையே காரண மாகும் குழுக்கள்தாம்
முற்றும் உறக்கம் ஒழிவனவே
புதுமை யுயிரெழுந் தெண்ண லரியதாம்
பொறப்பார் அணுவை யியக்குமன்றே.

52

உலக வுயிர்வாழ்வு மென்மெலத் தோன்றி
உடலம் பெறவே இயக்கமுறும்
அலகில் திருக்கூத்து மாடியே தூரிதாம்
அனந்தத்தை யெய்த முயல்வதுண்டே

53

உயிருள்ள காற்றே முன்பூதங்கள் மாய்ந்த
உவரியின் மேலே அலையெழுப்பும்
பயில லெழுந்தும் படர்ந்தும் விழுந்துமே
பாயும் அலைபெருங் கோபமொடே.

54

உயரு மெதிர்ப்பினுல் அங்கங்கே தூவும்
உருக்கள் அலகிலா அவ்விடத்தே
அயரு நினைப்பி லுலகங்க ளாகவே
ஆகாய மீதி லியங்குறுமே

55

கோள்கள் உடுக்கள் விரைந்து நடக்கும்
குவலய மென்ற மனித நிலம்
நாள்கள் வினுடியே நாழிகை நோக்கி
நலமுற வானத் துருளுமன்றே

56

தொடக்கத்தில் எல்லாம் அறிந்தவன் நானுள்ளேன்
தோன்றும் இயக்கம் உளேன் இலனே
அடக்கத்தில் உள்ள உயிர்வகை யாவுமென்
அளவறு மாற்றல் மலர்ச்சியன்றே

57

என்னது தெய்விக சக்தியா மாயையொடு
யானே களித்து விளையாடுவன்
அன்ன லொருமையன் யானே பலவாய்
அவற்றுளே என்னுரு நோக்குவனே

58

யாவு மறியும்யான் ஆதியி லுள்ளேன்
இயக்க முளேனென இல்லே னென
மேவு முலகப் படைப்பி தென்னுற்றலின்
விண்டு விரிந்த வெளிப்படையே

59

என்னுடை யாணையினுலே பெரும்புயல்
இருநில நோக்கி யெழுவதுண்டே
மின்னு பிடியும் விளங்கவே மேகமும்
வெற்று வெள்ளியைக் கலக்கிடுமே.

60

மெல்லென மெல்லெனத் தென்ற லெழுந்து
மீதுரா நன்மை யுயிர்ப்பெனவே
நல்லதன் நன்மை விளங்க வுளருமே
நற்கதிர் திங்கள் விரிப்பதுண்டே

61

நிலமகள் மெய்யெலாம் நல்லுடை போன்று
நிரம்பும் பயிர்பச்சை தோன்றினவே
நல்முறு தாரு வகைவகை தோன்றின
நன்மலர் மெல்ல மலர்ந்ததுவே

62

மென்மலர் நன்கு மலர்ந்தது தன்முகம்
மேலே விழுந்தபனித் துளியோடு
அன்மை கெடுக்கும் கதிரவன் முன்னே
அழகுறத் தோன்றி விளங்கியதே

வங்க மொழி.

ஆடுக! சியாமா ஆடுக! அங்கு

1

மணத்தால் மனங்கவர் வளரெழில் மலர்கள்
முகையால் மயங்கி முரலும் சுரும்பினம்
உம்ப ருலகில் உறைவார் நிரம்ப
இம்பர் நிலத்துக் கெய்துக வெனப்பொழி
புன்னகை மழையே போலும் வெண்ணிலா
பண்டை நினைப்பின் பகுதிகள் தம்மை
மாயக் கரத்தால் மலர்த்தி யெழுப்பும்
மென்றிரு மலையத் தென்றல் வளியே
சலசலத் தோடும் தண்ணீ ராறுகள்
ஓடைகள் அலையெழு மறுபுன லேரிகள்
மெல்லின வண்டர் விரைவுறச் சூழ்ந்து
மொய்க்கு மெண்ணறு முண்டக மலர்கள்
நுரைகெழு வெள்ளம் விரைவுற வெழுவது
அதனின் றெழுதரும் அருவி யிசையே
மலைமுழை யதற்கு வழங்கு மெதிரொலி
இலைகளில் மறைவுற் றிதயத் துடிப்பாம்
காதற் கருத்தைக் கனிவுறப் பாடும்
இசைதெரி குருவிகள் இளஞ்சிறு பறவைகள்
காலை யிளங்கதிர் கடவு ளோவியன்
பொன்மயத் தூரிகை பொருத்தி யெழுதிய
நிலமெனும் பெயருறு நீள்திரைச் சீலை
விளக்கிக் காட்டும் துளக்கமில் காட்சி
நிறப்பெருஞ் செல்வம் உறப்பெறு மியற்கைச்
செல்வியின் மார்பிற் சிறக்கும் நலங்கள்
பலநிறக் காட்சிகள் படைத்த சாலை
உணர்ச்சிக் கடலை உயிர்ப்பிப் பதுவே.

2

இடியில் பெருமுழக் கெழுமுகில் மோதுகை,
வானமு நிலமும் விளக்குமைம் பூதச்
சமரம், இருளினைத் தாவறக் காலும்
இருட்பெரும் பிழம்பே, இரும் பிரளயக்காற்று
அதிர்சின மெழவே முதிர்வுற வீசுகை
விரைந்து தோன்றி மிகுமொளி மின்னலின்
அரத்தச் சிவப்பினோ டஞ்சுதரு மரணமும்
அளிக்க வல்லதாம் ஒளிப்பெரும் பிணக்கு
நுரையொடு முழங்கி நூழிலாட் டயரும்
வரைமுடி பாய விரைவுறு திரைகள்
முறுகிக் கலங்கி இறுகிய இறுக்கம்
வெளியிடப் புரளும் களிநிலை நிலமே
தன்னழி வுறவே தானடி யடங்குவது
நிலத்தைப் பிளந்து நெருப்பு வெளிப்படும்
மாபெரு மலைத்தொடர் மாய்ந்தணு வாமே

3

நீல நீர்நிலை நெருக்கமா நிலத்தே
அழகு கொழிக்குமோர் அலங்கார நிலையம்
அல்லி ஆம்பல் அழகுறப் பொலிவது
கொடிகெழு முந்திரிச் செழுங்கனிக் குலைகள்
தந்த மதுநுரை தழைப்புற விரும்பவே
செவிச்சொல் உரைத்துச் சிந்தையு ளெழுதரும்
காத லுணர்ச்சியை மோதல் புரியுமே
யாழொலி செவிக்கமு தெனவே யெழுதரும்
அதனிசை நூன்முறை அமைந்து நன்கெழுதலின்
மனித மனத்தகம் வளர்க்கு மாசையை
உணர்ச்சிக் கிளர்ச்சியை உரைப்பது மெங்ஙனே!
காதல்நெடு மூச்சுக் கணக்கிலு மடங்குமோ?
கண்ணிருந் திழியும் கனல்சுடு புனலே
பேரெழி லிளமகள் பிம்ப பலாதரம்
உணர்ச்சி யிருகடல் ஒப்புறத் தோன்றும்
இருகரு விழிகள் எதிர்படு மிருகரம்
காதற் பஞ்சரம்; கருத்தழி யிதயம்

சிறைப்பட் டதன்கண் சிறைப்படு பறவைபோல்
அடங்கி யொடுங்கி யகமகிழ்ந் திருக்குமே

4

போர்க்கெழ முழங்கும் போரிசை யெழுந்தது
அமர்க்கியல் பறையும் அதிர்வுற முழங்கும்
மறவர் நடையால் மண்ணக நடுங்கும்
குண்டுகள் உமிழும் குழாயுரு வுள்ள
பெரிய சிறிய கருவிக ளெல்லாம்
முழக்க மெழுப்பும் முகில்பொரப் புகையெழும்
அஞ்சுதரு சமரிடை அனலைக் கக்கும்
குண்டுறு கருவியின் மண்டுறு மொலியே
ஆயிரம் சிதர்கள் அதிர்ந்து சிதறுமே.
ஆங்காங் கெதிர்வார் அழிவுற மாய்க்குமே
யானையு மிவுளியும் மானமாத் தலைவரோடு
இமையவ ருலகிடை யேறும் குண்டினால்,
இவ்வகக் கூத்தால் இருநிலம் குலுங்குமே
பரிமீ தமர்ந்த பல்லா யிரவர்
மறவர் பகைவர்தம் வன்படை பற்றுவர்
புகையுறு கனலிற் பொழிகுண்டு மழையின்
ஊடே யுருவினர் உயிரினை மதியார்
சென்றே வெற்றி சேர்வர் கொடியும்
உயிர்வுறும் வீரத் துயர்வுறும் சிறப்பாற்
பெற்ற பெருமை பிறங்க விளக்கியே
வெம்புனீ ரருவி வெய்து பெருகவே
மறவுணர் வுளத்தெழ மறப்படை தொடரக்
கோடிகரம் பற்றினன் மடிவுறும் வீழுமே
ஆயினும் அக்கொடி அடர்த்துமேற் செலுமே
மற்றொரு மறவன் மகிழ்ந்ததை யெடுப்பனே
அவன்கழற் கீழே அளவிடற் கரிய
மறவர் சமர்நிலம் மடிந்து கிடப்பரே
ஆயினும் தளரா தவன்முன் னடக்குமே
வெற்றி வெற்றி வெற்றியென் றிசைத்தே
ஊனுடல் இன்ப வுறவுக் கவாவுறும்
புலனோ மயக்கும் நல்லிசை விழையும்
மனமோ நகைகெழு மகிழ்ச்சியை நோக்கும்

இதயமோ துயரிகந் தேறவே முயலும்
உள்ள முருக்கும் வெள்ளை மதியின்
நிலவினை நீங்கி நிறைகதிர் ஞாயிறு
காலும் வெம்மையிற் களிப்பவர் எவரே
கடுங்கதிர் பொரவே கடுமனம் படைத்த
பாவியும் குளிர்நிலாப் பரவவே விரும்பும்
உண்மையி லெவரு முவப்ப தின்பமே
துன்பினைத் துயரினை வன்புறப் பிணித்து
மனத்துள் நிறுத்தி மகிழும் பாவி
உயிர்ப்பது முளதோ உலகத் தினிலே
இன்பக் கலத்தே துன்பமே கண்டு
அமுத பானத் தழிவிடம் கண்டு
வாயிடை விடமே வைத்த பாவியும்
நன்றே தனக்கு நாடுவன் மிகவே.

6

எவரும் வெருவர எழுமுருக் கண்டு
வெருள்வர் மருள்வர் உருள்வர் புறள்வர்
சரிந்த கூந்தலள் சாவி னுருவினள்
ஆகிய காளியை அடைய வலாதெவர்
அவள்கரச் சுரிகை அளவிலாக் குருதி
பொழிவதே யச்சம் பொழிவது மிகவே
அதனை மெல்லவே அகற்றி அவள்கரத்து
இனிய விசைபொழி யாழினை யிசைப்பர்
அஞ்சுதரு காளி, அனைத்து மழிப்பாய்
ஒருத்தி நீயே உண்மை யாதி
உனது நிழல்தரும் உயர்திரு நிழலே
மகிழ்ச்சி விளைக்கும் வனமாலி யாவன்
அன்னையே அச்சம் அருளா அனைத்தின்
மூலமு மழிக்க கோல மாயையை
ஓட்டுக மகிழ்ச்சியா லொளிரும் கூத்தினை
உடம்பினுள் எழுந்த உவப்பு நினைப்பை
பற்றிக் கிழித்துப் பாழ்படுத் துகவே.

7

மெய்யே நினக்கவர் வெண்டலை மாலைகள்
அணிவர் ஆயினும் அணுக நடுங்கி

அருட்பெருந் தாயே அன்னையென்றே
அச்சத் தானே அலறிப் பரவுவர்
நின்பெரு நகையாம் வன்புறு மிடியால்
திகம்பரை யாயநின் திருவுடற் காட்சியால்
அன்னார் இதயம் அடங்கி யொடுங்கும்
ஆயினும் அவர்தம் தாய்நீ அவுணரை
அழிப்ப தாகவே அணியுற வுரைப்பர்
அன்னைநின் கோலம் அவாவுற நோக்க
விரும்புவ தாகவே வெளிப்பட நடிப்பர்
நின்னருட் காட்சி நீயே நல்கும்
நாளையி லந்தோ நடுங்கிப் பறப்பரே
உலகில் வாழ்வுறும் உயிரனைத் தினுக்கும்
முடிவு நல்கும் முடிபொருள் நீயே
விரைவினி லழிக்கு மிடுக்குள் பிணிவகை
எல்லாம் பரப்பிய இறைவி நீயே
நின்கரத் தானே நிரம்பிய. நஞ்சொடு
வழியும் கலங்களா மற்றவை வருமே.

8

மதிகெடு மேழாய் மற்றுநீ நின்னையே
ஏமாற்று பணியி லிறங்கி யுள்ளாய்
நினது சென்னியைநீ திருப்பு வதிலை
அங்ஙனம் திருமிய வளவில் அன்னையின்
உருகெழு முருவம் உன்விழிப் படுமே.
இன்பம் வேண்டினை துன்புபின் சென்றனை
தன்னல மனைத்தும் தாங்கிய மனத்தொடு
பக்தி பூசனை பரித்தனை சட்டையா
வெட்டுண் குட்டியின் வெம்புனீர் சொரியும்
சிரம்கா ணளவில் திகிலில் ஆழ்வையே.
அத்தகு காட்சியா அதிரும்நின் இதயமே
கோழை கோழைநீ கொள்ளுதி யிரக்கமோ
என்னுயிர் வாழிய! என்னை புதுமையே
எவர்க்கு நான் உண்மை இசைக்கத் துணிவேன்
யாரே மெய்ம்மை இதனை நோக்குவரே

9

பெரும்பற் றகன்று பெறுகமா வீடே
காமக் கள்ளைக் கடிக பெண்ணுற

வடைய விரும்பும் ஆசையை ஒழிக்க
யாழினைத் தகர்க்க இருங்கடல் முழக்கொடு
ஏறிமேற் செல்க இழிகண்ணி ளாயே
பருகுக உயிரையே பலியிடத் துணிக
உடலம் வீழ்க உனது வீண் கனவெலாம்
ஒதுக்குக வீரனே உள்ளான் கூற்றுவன்
நின்சிரப் பக்கம் நினக்கும் தகுமோ ?
அச்ச வுணர்ச்சி ? அவலச் சுமையே
ஆயினு முண்மையில் அமைவுற நன்றே
இதுவே என்னிறை என்பெருந் தெய்வம்
அவள்வாழ் கோயில் சவம்வீழ் சுடலையே.

10

அந்தமில் ச்மரமாம் அந்தமில் சிதைகளே
அவனுக் கெனவமை சிவபூ சனையாம்
பன்முறை தோற்பினும் பதற்றமே யடையேல்
பெருமையே புகழே வருமன நம்பகம்
சிற்றுயிர் இவையெலாம் பற்றற வொழிகவே
இவையெரிந் தொழிய வோரீமம் பண்ணுக
துடிக்கும் இதயமே சுடலை யாகுக
ஆங்கு வந்துநின் ருற்ற லுருவமாம்
காளி சியாமை களித்து நடிக்கவே.

திவ்ய மாதா திருப்பாடல்

1

அழகின் மிகுந்தவளே—கரங்களால்
அன்பினோ டின்பமுந் துன்பமும் ஏந்தினுய்
கெழுமிய நன்மை செய்வாய்—இறைவியே
கேட்பது யாரைநீ தேட்டுறும் யாரெனப்
பழகிய சத்தெனு நீர்—நின்செயல்
பாய வலைகளா லாய வெறிபடும்
அழக ழியுயி ரொருமை—மீளநன்
ருற்றவோ விடைவிடா வாற்றலோ டாக்குவாய்

2

அலகில் அவனி மாதா இடைவிடாது
ஆற்றி யுயிரினத் தேற்ற பலனருள்

இலகமுன் செய்வினையே—வரும்வினை
இரண்டும் பயன்தர அரண்தரும் ஆணையாய்
உலகில் அவள்மதலை—யெனச்சொலும்
உரமிலா நாயேற்கும் வரமருள் செய்தியே
விலகில் வினைக்கயிற்றைக்—கரத்தினால்
வீக்கி யழுத்தலை நோக்கினன் அன்னையே.

3

ஓட்டும் இயற்கை யென்கோ—படைப்பறும்
ஒன்றென வோதுகோ ஒன்றும் வினையென்கோ
எட்டும் பயன் என்கவோ—அன்னதே
இல்லையென்று லொன்றும் இல்லையென் றுகுமே
கட்டு மதன் விருப்பே—தடையறக்
காண்புறு நீதியை மாண்பு நியதியை
விட்டு விலகிலா—முதற்றுணை
வேண்டு மெனக்குமோர் மாண்ட வுறையுளே.

4

என்னை யவள்மகிமை—வகைகளே
எல்லையி லாற்றலின் தொல்லை யுருவமே
மன்னு முலகமெலாம்—வளர்ந்தெழும்
வன்மை பொலிசக்தி யென்ன விளங்குமே
பின்னு பிறப் பறப்பாம்—பெருங்கடல்
பேத வுருவங்கொள் சோதறு சக்திகள்
இன்னும் திரிபிலதை—மாற்றியே
ஈரு மவளின்றேல் யாருளர் மெய்த்துணை

5

தாமரை போல்விழிகள்—இறைவியே
தக்கமெய்ந் நண்பர்க்கும் மிக்க பகைவர்க்கும்
ஆமொரு தன்மையினால்—பரிசமோ
ஆகூழ் உடையர்க்கும் போகூழ் உடையர்க்கும்
காமித போகம் தரும்—மரணமும்
காழ்மை நித்திய வாழ்வுநின் னல்லருள்
கோமகளே யணையே—அருள்முகம்
குழவி யெனையகன் றொழியா தருள்கவே.

6

அன்னை யெனவுரைக்கோ—எவையுமாம்
ஆண்டவன் என்னவே வேண்டிப் புகழ்கவோ
என்னறி வெவ்வளவே—என்கையால்
யாவும் புரந்தருள் தேவியைப் பற்றவோ
பொன்னடி பற்றுகின்றேன்—திருவருள்
போதித்த வண்ணமே சாதித்தேன் அபயத்தை
மன்னிய மெய்ப் பணியே வழிபடும்
வாழ்வுள பாதத்தே தாழ்வன் நிலைப்பனே.

7

பிறப்புமுத லெலணயே—பிடித்தவள்
பீழை வழிகடந் தேழையைப் பூரணச்
சிறப்பு நிலையில்வைத்தாள்—அறிபவள்
திருவிளை யாடல் மருவும் நெறியிலே
உறப்பெரும் வாழ்வெனதைத்—திருத்தினள்
உற்ற நற்றாய் எனவெற்றி விளைத்தவள்
அறப்பணி யாள்புரிவ துறுபயன்
ஆயினும் ஆகாது போயினும் அன்னையே.

(சம்ஸ்கிருதக் கவி)

சிவ துதி

1

வணங்குவல்! வாழ்த்துவல்! வழுத்துவல் சிவனை
அளவை கடந்த அருஞ்சிறப் பினனவன்
தெளிவுறு நிலையில் வளியிலா வானம்
ஒப்பவன் அவனே; உலகப் படைப்பெலாம்
அவன்செய லென்றே அறையப் படுமால்
அளிப்பவன் அவனே அழிப்பவ னவனே
இவ்வென் பிறவி இயலுமெய் யன்பெலாம்
எப்பொரு ளுக்குமே இறைவனு யமைந்தும்
அவற்றைக் கடந்தே அலகிலா தொளிரும்
சிவபரம் பொருட்கே சேர்வ தாகுகவே.

2

இறைமை யெஞ்ஞான்று மெவன்க ணிலக்குமோ
மாயையின் மயக்கை மாய்ப்பவன் எவனோ

எல்லை யிகந்ததாம் எவனருள் விளக்கம்
எல்லாப் பெயரினும் ஏற்றம் பொருந்திய
மாதேவ நாமம் வழங்குவ தெவற்கோ
இன்ப அன்பினை இயம்புமெவன் தழூஉ
மனித்தர் மனத்தே மண்டல வாழ்வும்
சிறப்பும் பிறவும் சிறிய நாடகமென
விளக்கி யருளும் வியப்பினை யுடைத்தோ

3

அலைகளாற் கலங்குறும் ஆழிநீர் நிகர்ப்ப
ஆற்ற லனைத்தையும் ஆட்டி யலைத்தே
எதன்கண் முன்னை இயக்கப் பெரும்புயல்
பண்டைய வினைகளைப் பற்றிச் சுழற்றுமோ
யான்நீ யென்னும் இருமை நினைப்பே
எதன்கண் இயங்குமோ இயக்கம் அடங்க
அம்மனம் தன்னை அமையின் நிலமாம்
சிவத்துள் அடங்கிய சிறப்பை யுணர்ந்து
அத்தகு சிவத்தின் அகமுறப் புகழ்வனே.

4

பெற்றவர் பிறந்தவர் மற்றவர் என்ற
தோற்றமும் உள்ளத் தூய்மைக் கருத்தும்
அளவறு முருவ வமைப்பும் பிறவும்
உள்ளதோர் பொருட்கண் ஒடுக்கம் பெறலான்
வாழ்வெனு நினைப்பே மறைவதி யாண்டோ
மாற்ற மென்னும் காற்றடங் கியதால்
அகம்புற வுணர்ச்சி அடங்குவதி யாண்டோ
மனத்தி னியக்கம் மடக்கி நிறுத்தும்
ஆற்றலாம் அரனை அகமுற வணங்குவன்
வாழிய சிவமென வாழ்த்துவல் யானே

5

வெள்ளிய தாமரை விளங்குறு மெழில்போல்
இருளை மயக்கும் இகப்புற லொழிதலால்
வெள்ளி விளக்கமா விளங்குபே ரொளியிலை
அருள வல்ல அருட்பெருஞ் சோதியை

தன்பெரு நகைப்பால் நன்பெரு ஞானம்
நல்கும் இறையை நடுவகம் நிலைத்தே
சிதரு தடங்கும் இதய மலரிடை
விளங்கும் பொருளைத் துளங்குத லறியாப்
பேரறி வுருவமாம் பெருநீர் நிலையில்
இயங்கா நிற்கும் எழிலுரு வோதிமம்
என்னுளம் காக்க என்றுமங் கிருக்கும்
சிவத்தை வணங்குவன் சென்னி தாழ்த்தியே

6

தீமை யனைத்தும் சிதைக்கும் தலைவனை
கலியின் மாசு கடிந்தருள் பிரானை
தக்கன் மகள்கரந் தரப்பெறு மிறைவனை
வெள்ளிய அல்லிபோல் விளங்கும் ஒருவனை
பிறர்நலம் பெறவே இறவு துணியும்
அருளே உருவாமவனை அடியவர் பாலே
கருணை விழியைக் காட்டும் கடவுளை
விழுங்கிய நஞ்சால் விளங்கிய நீல
களத்தனை வணங்குவல் உளத்தில் இருத்தியே.

ஆனந்த சிவம்

1

தனக்குளெழு மானந்தம் தானே புக்குத்
தனதிருகை கபோலங்கள் தட்ட வாடும்
கவத்த தமருக முழங்கும் தலையின் மாலை
கனிவுபெற இணங்க முறக்கலைக் கூத்தாடும்
புனற்கங்கை சடைமுடிமேற் போரிட் டோடும்
பொருவில் திரிசூலமனற் பொழியைக் கக்கும்
மனக்கின்ப மளிக்குமதி கனன்று வெம்ப
மாதேவன் கூத்தாட்டு வழங்கு மன்றே.

சமாதி துதி

1

சூரியன் இல்லையே சந்திரன் இல்லையே
தோன்று மொளிகள் வெளி மறைந்த

பாரிய மண்டலம் சாயைப் போலப்
பரப்பில் மிதங்குமே பண்டெனவே

2

ஆட்டமில் நெஞ்சத்தே ஆடி மிதப்பதாய்
அழியு மகில மிருக்கு மன்றே
ஓட்ட முறுமெழும் உள்ளத்துள் உள்ள
ஒருமை அகத்தில் ஒடுங்குமன்றே.

3

மென்மெலச் சாயையே யாகு மூலகெலாம்
மீண்டன மூல வகட்டினுக்கே
தன்மய மாயின நானுளேன் நானுளேன்
தானெனும் தத்துவம் பாய்ந்ததுவே.

4

அன்னதும் நின்றே அவ்வெள்ளம் ஓய்ந்தது
அஃகிலமும் ஒன்ருய் அடங்கினவே
உள்ளலு மில்லேயே உரைப்பது மில்லேயே
உற்றி துணர்வான் உணர்பவனே

கண்ணனுக்கு......

ராகம் : சாமா

தாளம் : ஆதி

பல்லவி

அன்பனே, கண்ணு, அடியேனே விடுவாய்,
ஆற்றிற்கு நான்இன்று செல்லவே வேண்டும்
(அன்பனே)

அநுபல்லவி

என்றுமே உன்றன் அடிமை நான் அல்லவோ
என்னிடம் குறும்புகள் ஏனோ நீ செய்கிருய்
(அன்பனே)

சரணம்

யமுனே சென்றென் குடம் நிறைத்திட வேண்டும்
யாதும் தடைசெயேல் வேண்டினேன் உனேயே
பாரினில் யாவரும் பகர்ந்திட வொண்ணு
பழம்பெரும் புதுமைகள் வாய்த்திடும் கண்ணு
(அன்பனே)

சிவபெருமான் திருநடனம்

ராகம் : குந்தலவராளி **தாளம் : ஆதி**

பல்லவி

சிவ பரம்பொருளின் திருநடம் பாரீர்
செகமெலாம் படைத்தே துடைத்திடும் அந்தச்
(சிவபரம்)

அநுபல்லவி

தவத்தனி யோகத்தின் தலைவனும் பரமன்
தன்கரத்தே பிநாகம் தாங்கிடும் முதல்வன்- (சிவபரம்)

சரணம்

விரித்த செஞ்சடைதான் விசும்பெலாம் பறந்திட
மேலேழ் உலகங்கள் தாளங்கள் கூட்டிட
அடுத்ததோ ஊழியென் றவனியும் குலுங்கிட
ஆடுகின்றான் அவன் அற்புத நடனம் — (சிவபரம்)

ஸ்ரீ ராமகிருஷ்ண திவ்ய சங்கீர்த்தனம்

1

நின்னை வணங்குவமே—இறைவனே
நீண்ட வுலகெலாம் வேண்டும் பெருமானே
மன்னை முழங்குறலே—சமுசார
வன்மைய பந்தத்தை இன்மை புரிந்தவ
மின்னும் அகளங்களே—உத்தம
மேவிய பண்புகள் பாவிய கோலமே
மன்னு குணம் கடந்தாய்—நரவுடல்
வாய்த்தனை நின்னையே வாழ்த்தி வணங்குவோம்.

2

வாக்கு மன கதியே—அவைகளே
வாய்வுற லரிதாய சேய்மையி லுள்ளனை
நோக்கு மொளி யுருவே—ஒளியெலாம்
நுண்ணிது சென்றமர் புண்ணிய மாயினை
தேக்கு மிதய குகை—நீபுகும்
செய்தியால் ஒள்ளொளி யெய்தி விளங்குமே
யாக்கு மனித வுடல்—மனத்திடை
எய்து மிடரிருள் பொய்செயும் தெய்வமே.

3

வெவ்வேறு கீதங்களால்—இனிமையை
விளக்கவே மெய்யன்பர் கிளக்கும் இசைப்பணி
செவ்வி மிருதங்கமே—இசைவுறத்
தீம்தாம்தோ மென்னலே தாம் பெருவாழ்வுறும்
பவ்விய நெஞ்சினராய்—மாலையிற்
பாடி வணங்குவர் தேடியே போற்றுவ;
செவ்விய ஞான மெனும்—மருந்தினுற்
றேறிநின் நீள்விழி யாய நோக்கமே

4

மாயை யொழித்திடுமே—பாவத்தின்
வகையெலாம் போக்குறும் மிகையினுய் நல்லறிவு
ஆய பெருந்தூய்மையே—நினதுரு
ஆகுமே ஞாலத்தின் வாகு புரிதியே
மேய தனி யொளியாய்—தெளிவுறும்
மெய்யுணர் வாழியே திவ்விய காமமே
சாய்வறு தெய்வப்பித்தே—அன்பினுர்
சாருவர் சரண்சமு சாரம் கடப்பரே

5

உலக அதிபதியே—யோகத்தால்
ஒளிருதி அவதாரத் தெளிவுரு வாகவே
கலக மிகுவதுவாம்—சிறுமைசால்
கால மிதனிலே கோலும் மருந்தவ
விலகரு நின்னருளால்—அடியரேம்
மெல்லிய நெஞ்சமும் புல்லும் சமாதியே
அலகில் அருளுருவே—நின்செயல்
அத்தனே யாவுமே சுத்த வைராக்கியம்

6

துன்பக் கொடுமையையே—வேரொடும்
தூக்கி யெறிந்தனை நோக்கி லழித்தனை
அன்பிற் பிணித்திருக்கும்—காளியாம்
அன்னையின் பந்தமும் நின்னுல் அறுந்ததே

இன்பிற் சிறப்புறவே—நினதுயிர்
யார்க்கும் எளிதுறப் பார்க்கு ளருளினை
வன்பிற் சிறப்பமையும்—தியாகமே
மக்களின் மிக்கோயே புக்க பூ பாலக.

7

பெண்ணுணர் வற்றிருந்தாய்—பொருளேதும்
பெருந்திரு நின்மனம் பொருந்துற வில்லையே
எண்ணுறு மின்பமெலாம்—நின்றுளத்
தென்றும் வெறுப்பினைத் துன்றுவ வாயின
மண்ணினில் ஒப்பறியாத் தியாகியே
மற்றுநின் பாதத்திற் பற்றி பத்தியே
திண்ணி தெமக்கருள்வாய்—யாமது
செல்ல மெனப்பெறது நல்லுல கெய்துவேம்

8

அச்சமிலாய் இறையே—ஐயமாம்
ஆரிருள் சூழ்வுருப் பேரியல் புள்ளனை
உச்ச உயர்நிலையில்—மனநினது
ஒன்றி யுறுதியா நின்ற தெம்மையனே
வச்சமில் மெய்யன்பரே—காரண
மாநாடு நீந்தியே மேனுடு மாண்பினர்
வைச்ச கருவமிலார்—குல சாதி
மரபு பெயர் புகழ் மறந்துனை நாடுவர்;

9

என்னோடு செல்வமைய—நின்பதம்
என்று மிருமலர் மன்னு மதன் முன்னே
மன்று முலகமெலாம்—மெல்லவே
வந்த பசுவின்கால் தந்த குளப்படி
துன்னு சிறுகுழியே—அன்பையே
தோற்றிய மூர்த்தியே சாற்று சமநிலை
மன்னுயிர் கண்டருள்வாய்—இன்பதுன்பம்
மாயுமே தேவனே தூயநின் முன்னரே ?

(வங்கமொழிப் பாடல்)

ஸ்ரீ ராமகிருஷ்ண சரணம்

1

ஓம் ஹ்ரீம் அசைவிலா உண்மையினுருவமே
ஒன்றுகுண மும்மை வென்றனை யெனினும்
பண்பின் சிறப்பாற் பாராட்டெய்தினை
பரிவொடு நின்னையா னிரவொடு பகலும்
பணிகிலேன்வழுத்திலேன் பரவிலே னெனினும்
அறிவறு சிறுமை அனைத்தையு மொழிக்கும்
கருணை நிரம்புநின் கமல பாதமே
ஆதலி னெளி யோர்க்கன்ப நீயே
ஒருபெருஞ் சரணமா யுள்ளனை யெனக்கே

2

ஆன்மிய சக்தி மான்மிய பக்தி
இறைவழி பாடே யெனுமிவை பிறப்பிறப்
பென்னும் சக்கரம் இறுதியுறச் செயூஉ
உதவலான் ஒருபேருண்மையை யுணர்த்தச்
சாலுமெனவே சாற்றுமிம் மொழிகள்
வாக்கான் எழுந்தே வழங்குறு மாயினும்
உள்ளத் தகத்திலேவுற வில்லையே
ஆதலின் எளியோர்க்கன்ப நீயே
ஒருபெருஞ் சரணமா யுள்ளனை யெனக்கே

3

தெய்விக சத்திய தீவிய மார்க்கமாம்
இராம கிருஷ்ண எம் பெருந் தெய்வமே
பக்திநின் பதயுகம் பற்றுமே யாயின்
அவாவெலா நின்னுழை யடங்குவ வாதலின்
இராசத குணக்கடல் இவைகடந் தேறுவ
இஃதெங்ஙன மெனின் இறைவநின்னிணையடி
மனித்தரை மோதும் மரண வலைகளை
அவர்கடந் துயவருள் அமுதமாயினகாண்
ஆதலி னெளியோர்க்கன்ப நீயே
ஒருபெருஞ் சரணமா யுள்ளனை யெனக்கே

4

மாயையை யொழித்தருள் தூயதெய்வதமே
ஷ்ணவென முடியுநின் தனித்திரு நாமம்
தூய்மை நன்மை வாய்மை பொருந்தி
பாவ வியல்பைப் பவித்திர மாக்கும்
உயிரின மெல்லாம் உறுவதற் குரிய
பெரும்பே றுகிய பெரும அடியேன்
தேரேருறையுள் விரியுலகிலனே
ஆதலி னெளியோர்க்கன்ப நீயே
ஒருபெருஞ் சரணமா யுள்ளனை யெனக்கே

(சம்ஸ்கிருதப் பாடல்)

ஸ்ரீ ராமகிருஷ்ண ஸ்துதி

1

எவனிருந்தா னிராமனென எவனன்பின்
பெருநதிதான் இடையீடின்றித்
தவனிருந்த சண்டாளன் அருகிலும் பெருந்தேவன்
தானு மேலும்
எவனகன்ற வுலகினுக்கே உதவிநின்ருன் மூன்றுலகில்
எவனீடில்லான்
எவனறிவின் பெருங்கடல்தான் சீதையுரு
வியையுமன்பால் இணைந்த தாமோ

2

ஊழிமுடி வெழுமொலி போற் சமர் முழக்கை
அடக்கியருள் உரவோன் யாரே
ஆழிசங்கு கரத்தேந்தி யருச்சுனற்குக்
கீதையினை யருளிச் செய்தே
பாழியிருள் அகற்றியருள் பிரான் யாரே
பகவனவன் பரிவே பூண்டான்
ஆழிபுடை சூழுலகி லிராம கிருஷ்ண
அவதாரம் அடைந்தா னன்றே.

3

வாழ்வெனு நோய் மருந்தருளும் மருத்துவனைச்
சரண்புகுதும் வரம்யான் பெற்றேன்

தாழ்வறியா வாற்றகலனும் பெருங்கடலின்
எழுந்ததிரை தானே யாவான்
யாழ்குழலேந்திறை வனருள் விளையாட்டில்
எத்துணையோ இயற்றியுள்ளான்
பாழ்படுபேரைய மெனும்பே யோட்டும்
படையெனயாம் பணியலாமே

5

நரவுருவ மெடுத்தருளும் குரவனெனும் தெய்வதத்தை
நணுகா நின்று
சரணமென விசைக்கின்றேன் சமுசாரப் பிணிக்
கமைந்த தணிவு காட்டும்
பரமசுகமருத்துவனை சுத்துவித தத்துவத்தே
பயின்று பக்தி
வரமமையு முடைபோர்த்த தெய்வினைமாம்
செயலானை வழுத்து வாமே
வெல்க இராம கிருஷ்ண மெய்யறிவன் மெய்ப்புகழே
புல்க வுலக மெலாம் புக்கு.

(சம்ஸ்கிருதப் பாடல்)

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
74	2	செலுத்துகிருர்கள்	செலுத்துகிருர்கள்.
85	29	புல்ன்களுக்கு	புலன்களுக்கு
95	1	அடங்கியே	அடங்கிய
151	4	பகுப்பு	பகுப்பு ;
170	18	மனிதன்	மனிதர்
209	32	நானே	நானே.
237	15	அகடாமி	அகாடமி
243	17	என்பதே:	என்பதே
246	18	பாராட்டலாம்.	பாராட்டலாம்
293	2	கோழை	கோழை’’
312	7	தத்துவமாகும்.’’	தத்துவமாகும்
315	21	அஞ்ஞனத்தால்	அஞ்ஞானத்தால்
353	7	உண்மையும்	உண்மை
372	34	எவருக்காகவது	எவருக்காவது
375	3	நதரத்தில்	நகரத்தில்
376	10	அதுஞல்	அதஞல்
377	29	உயர்குலத்தோர்.	உயர்குலத்தோர்
382	26	ஏற்ப்பட்டதும்	ஏற்பட்டதும்
383	19	கூறுவான்	கூறுவான்.
386	11	சமஹிதி	சம்ஹிதி
438	8	அடைகிருன்	அடைகிருன்.
443	23	கரையோ	கறையோ
459	28	எதிர்த்தெ	எதிர்த்தே
464	10	துறந்தாநன்றே	துறந்தாரன்றே
474	20	நியார்க்கு	நியூயார்க்கு

Read as follows :

Page 59

न बुद्धिभेदं जनयेदज्ञानां कर्मसङ्गिनाम् ।
जोषयेत्सर्वकर्माणि विद्वान्युक्तः समाचरन् ॥

Page 224

मेरुसर्षपयोर्यद्वत् सूर्यखद्योतयोरिव ।
सरित्सागरयोर्यद्वत् तथा भिक्षुगृहस्थयोः ॥

Page 382

जात्यन्तरपरिणामः प्रकृत्यापूरात्

Page 421

क्षणमिह सज्जनसंगतिरेका

Page 434

एतद्देशप्रसूतस्य सकाशादग्रजन्मनः ।

Page 438

समं पश्यन्हि सर्वत्र समवस्थितमीश्वरम् ।
न हिनस्त्यात्मनात्मानं ततो याति परां गतिम् ॥

பொருட்குறிப்பு அகராதி

அ

அசோகச் சக்ரவர்த்தி — தமது சந்ததிகள் எந்த ராஜ்ஜியத்தின் மீதும் படையெடுக்கக் கூடாதென நிபந்தனை இட்டார்-396

அஞ்சத்தக்கவர்கள் — இந்தப் பிரபஞ்சம் பாவமும், சோகமும், சாவும் நிறைந்த இடம் என்று சொல்பவர்கள்-63

அஞ்ஞானம்--அஞ்ஞானமே மாயைக்குக் காரணம்-76

அஞ்ஞானம் — அஞ்ஞானம் என்ற காரணத்திலிருந்து பாவம் என்ற காரியம் தோன்றுகிறது-258

அத்வைதம் — ஒழுக்க நெறியின் அடிப்படை-51,307

அத்வைதமும் துவைதமும்—துவைதம் என்பது இயற்கையின் வெளித்தோற்றத்தில் காணப்படுவது அத்வைதமே பரிபூரண ஆன்மிக சாரம்-141

அத்வைதமும் துவைதமும்--அத்வைதம் ஜீவான்ம வாதத்தை ஏற்பதில்லை. துவைதமோ ஜீவான்ம வாதத்தை ஏற்கிறது-174

அத்வைதமும் துவைதமும்--இரண்டும் எதிரானவை அல்ல-384

அத்வைதவாதம்—மாயாவாதம் இல்லாமல் அத்வைதவாதம் கிடையாது-412

அப்பீல்—அவலங்கி — அமெரிக்கப் பத்திரிக்கை-232, 237, 241

அமரவாழ்வு—கடவுளை அடையும் போதுதான் அமரவாழ்வு பெறுகிறோம்-124

அர்த்தார்த்தி--பொருளொன்றையே விரும்பும் நிலை-218

அருச்சுனன்—பீஷ்மரையும் துரோணரையும் போரில் கொன்றது தன்னலமற்ற பணியே-38,40,292

அல்மோரா-470

அலமேடாநகர்—கலிபோர்னியாவில் உள்ளது-247

அவதாரங்கள் — கபால மோசனர்கள். அதாவது மனிதனது விதியையே மாற்றும் இயைபுடையவர்கள்-421

அவதார புருஷர்கள்—நிறையறிவு என்னும் பரிபூரண ஞானம் பெற்றவர்கள்-182

அளசிங்கப் பெருமாள் — சுவாமிஜியின் நண்பர்-440

அறிவின் பயன்--மனங்குவிதலே-177

அறிவு — சுதந்திரமும திறனும் சேர்ந்த கலவை. நம் இலட்சியம் அறிவு அன்று; விடுதலையே-94

அன்பு — ஒரு முக்கோணம். முதல் கோணம் அன்பு ஒரு போதும் கேட்பதில்லை. இரண்டாவது கோணம் அன்பு அச்சமற்றது. மூன்றாவது கோணம் அன்பினால் பெறும் பயன் அன்பே-102, 103, 104, 203, 285, 112

அன்பு—ஆண்டவன் அன்பின் ஐந்து படிகள்-128 202

அன்பு—எல்லையற்ற ஆன்மவொற்றுமையின் வெளித்தோற்றம்-357

அன்புப்பைத்தியம்—இதன் முன்பு ஆண்டவனைத்தவிர, மற்ற எல்லாம் மறைந்துவிடும்-112

அனுபூதி அறிவு—அனுபூதி அறிவே சமயம்-62

அனுபூதி மான்கள்—அனுபவ அடிப்படையில் சமயத்தைப் போதிப்போர்-116

அனுபூதிமானும் கிறிஸ்தவ மதபீடமும்—கிறிஸ்தவ மதபீடம் புறமிருந்து அகம் செல்கின்றது. அனுபூதிமான் அகத்திலிருந்து புறம் செல்கின்றான்-116

அனுஷ்டானங்கள்—இவை குறிக்கோளாகா; சாதனங்களேயாகும் 181

அஜித்சிங் பகதூர்—இராஜபுதனத்திலுள்ள கேத்ரி மன்னர்-426, 439
அஹ்ரிமான்—வேதங்களில் கூறப்பட்டுள்ள மனுதேவனையே பாரசீகத்தில் அஹ்ரிமான் என்று கூறுகிறார்கள்-208, 310

ஆ

ஆசனம்—பக்தன் அமரும் முறை. மனதைக் கட்டுப்படுத்தும் முயற்சிக்கு ஒரு குறிப்பிட்ட வகை ஆசனம் முக்கியம்-21, 100, 127, 178
ஆசியஜோதி—ஆர்னல்டின் 'ஆசிய ஜோதி' எனும் காவியம், புத்த மதத்தத்துவத்தைவிட வேதாந்தக் கருத்தையே அதிகம் எடுத்துக் கூறுகிறது-139
ஆசை—ஆசை தோன்றினல் அதற்குரிய சூழ்நிலை அமைந்தே தீரும் 42
ஆதாம்—தூய்மை தவறுதல்-233
ஆதி—தாளவகைகளில் ஒன்று-506, 507
ஆப்பராஹவுஸ் — டெட்ராயிட்டு நகரில் உள்ளது-347
ஆர்த்தம்—சங்கடம் நீக்க விரும்பும் நிலை-218
ஆன்ம ஞானம்-296
ஆன்மா—ஆன்மாவின் இயல்பு-1, 256, 310
ஆன்மா—காலம், இடம், காரண காரியம் ஆகியவற்றிற்குக் கட்டுப்பட்டது அன்று-133
ஆன்மா—பிராணனை கட்டுப்படுத்தி இயக்கும் சுத்த அறிவு-182
ஆன்மா—நன்மை தீமைகளுக்கு அப்பாற்பட்ட அமைதி நிலையே ஆன்மா-291
ஆன்மா — அழியாதது; சுதந்திரமுடையது-303, 304
ஆன்மா—வேறு எப்பொருளாலும் ஆக்கப்படாத ஒரு தனித்த மூலப் பொருள்-361, 363. 366, 367
ஆன்மிக வாழ்வு—இதன் அடிப்படை பரிபூரண ஒழுக்கமே-19

இ

இங்கர்ஸால்-233
இச்சா சுதந்திரம்—அவசியத்தினல் பெறப்பட்ட ஒன்று-167
இசை-221
இந்தியா—இந்தியாவின் ஜீவன் மதத்தில் தான் இருக்கின்றது-430
இந்திரன்-209
இந்துக்களும் கிரேக்கர்களும் — கிரேக்கர்கள் அரசியல் விடுதலை நாடினர்; இந்துக்களோ எப்போதும ஆன்மிக விடுதலையையே நாடினர்-123
இந்துக்களும் கிரேக்கர்களும் — கிரேக்கர்கள் இந்துக்களுக்குச் சோதிடத்தைத் தந்தனர். இந்துக்கள் அவர்களுக்கு வான சாஸ்திரத்தைத்தந்தனர்-260
இந்திய விதவைகள் — கொடுமை படுத்தப்படுகின்றனர் என்ற பிரசாரம் பொய்யானது-376
இந்துமதம்--மூன்று முக்கிய அம்சங்கள்-148, 156
இமயமலை-157
இமிடேஷன் ஆப் கிறைஸ்ட்—ஒரு நூல்-176
இயமம் — புறநிலை வகற்றல். இது யோகத்தின் முதற்கட்டம்-126, 178
இயற்கை—நமது உடலின் வெளியே நாம் உணர்கின்ற சக்தி-298, 300, 301, 302, 304, 310
இயேசுநாதர்—"நானும் என் தந்தையும் ஒருவரே" என்றார்-62
இயேசுநாதர்—மனித உருவெடுத்தது தம் கருமபலனல் அன்று; மக்களுக்கு நன்மை செய்யவே-89, 359
இயேசுநாதர்—"தீமையைத் தீமையால் எதிர்க்காதே" என்றார்-119, 192, 193
இயேசுநாதரின் அறிவுறை--முதலில் இறைவன் அருளை நாடுக; உலக போகங்களில் அவசியமானவை எல்லாம் உங்களைத் தேடிவரும்.

இரசாயனக்கலவை — காரணப் பொருள்கள் பல ஒன்று சேர்ந்து ஒரு காரியப் பொருளாக மாறுவது-50
இரசாயன சாஸ்திரம்—பொருள்களுக் கெல்லாம் மூலப்பொருள் என்ன என்பதைக் கண்டு பிடித்தவுடன் முடிவடையும்-150,193
இராமர் சீதை—கடமை லட்சியம் 173
இராமன்—இராமன் முன் சீதை போன்று ஒரு பக்தன் இருக்க வேண்டும்-170
இராமன்—146, 14`, 398, 511
இராமானுஜர் —பௌத்தர்களையும் இந்துக்களாக மாற்றியவர்: விக்கிரக ஆராதனைக்குப் பேராதரவு அளித்தவர்-151, 442
இராஜஸம்—செயலாற்றும் தன்மை 218
இரேசகம்—மூச்சை வெளியே விடுதல்-279
இல்வாழ்வான் — வருமானத்தைச் செலவிட வேண்டிய முறை-163
இலட்சிய சாதன நிலை—பற்றற்ற நிலை சாட்சியாய் இருப்பது-46
இலட்சுமணன்-146
இலண்டன்-281, 289
இறை—இறை ஒன்றே மனிதனுக்குத் திருப்தியளிக்க இயலும்-308
இன்டர் ஓஷன்—அமெரிக்கப் பத்திரிகை-322, 323
இன்பமும் துன்பமும்—ஒவ்வோர் அவுன்ஸ் இன்பமும் ஒரு ராத்தல் துன்பத்தைக் கொண்டு வருகிறது 144
இனேஷியஸ் லயோலா-205
இஸ்லாமிய மதம் — இந்தியாவிலுள்ள இஸ்லாமிய மதத்திலிருந்து வேறுபட்டது-401
இஷ்ட தெய்வம் — பிரார்த்தனை ஸ்தோத்திரம் செய்ய ஒருவனால் தேர்ந்தெடுக்கப்படும் மூர்த்தி 129

ஈ

ஈசுவரன் — கோடிக்கணக்கான ஜீவன்களின் சேர்க்கையே-67
ஈடா ஆன் செல்—சான்பிரான்சிஸ் கோவில் சுவாமிஜியின் சொற்பொழிவுகளைச் சுருக்கெழுத்தில் எடுத்தவர்-14, 15
ஈதர்—நாம் காண்கின்ற ஒவ்வொன்றும் ஈதராலேயே ஆக்கப்பட்டிருத்தல்,-274

உ

உடல்-நமது பகைவன்: துணைவனும் ஆவான்,-46
உடல்—ஆன்மா தன்னை வெளிப்படுத்திக் கொண்டிருக்கும் கருவி, 69, 256
உடல்—ஸ்தூல உருவத்தில் காட்சி தரும் மனம்,-199
உண்மைக் காதல்—எல்லாவற்றையும் தானே தரும்: ஏதொன்றையும் ஏற்காது,-285
உண்மைக் குருநாதர்—ஆன்ம சக்தியின் களஞ்சியமாக அவ்வக் காலங்களில் உலகில் பிறந்து, குரு சீட பரம்பரையின் மூலம் ஆன்ம ஞானத்தைப் பரப்பும் மகாபுருஷர் 51
உண்மைத்துறவு — உலகத்தில் வாழ்ந்து கொண்டே அதில் பற்றற்று நிற்பது,-70
உண்மையோகி—தன்னில் பிரபஞ்சத்தையும், பிரபஞ்சத்தில் தன்னையும் காண்பவன்,-119
உண்மையோகி — பந்தங்களுக்கு வசமாகாதவன்-393
உணவு—நல்ல உணவு என்பது உப்பு, புளி, காரம் முதலியன அதிகம் சேராத எளிய உணவே, 146
உபநிஷத்துக்கள் — கூறுவன,-124, 386
உயர் நனவு--மூவகை நனவில் ஒன்று 385
உயிர் வரலாறு-48
உருவ வணக்கம்-297
உலக வரலாறு — பெரிய மனிதர்களது வரலாறு அன்று; அதை ஆட்டிப்படைக்கின்ற தலைவர்

களது வரலாறே; அதாவது புத்தர், ஏசுகிறிஸ்து முதலானவர்களது வரலாறே,-291, 370
உலக வரலாறு — தன்னம்பிக்கை உடைய சிலரது வரலாறு,-294
உலகாயதன்—உலகாயதன், பக்தன் இருவர்க்கும் உள்ள வேற்றுமை, 110
உள்மாற்றம் --- ஓர் உயிரினம் இன்னோர் உயிரினமாகமாறுவது இயற்கையின் உள்மாற்றம் எனப்படும்,-78

ஊ

ஊழ்விதி — மனிதனது மனத்தின் செயல்களைக் கட்டுப்படுத்தி வரும் விதி,-299

எ

எக்ஸ்ரே—இவற்றின் காரணங்கள் இன்னும் விவாத நிலையில் இருக்கின்றன.-77
எகோவா--யூதர்களின் கடவுள்,-270
எதிர்மறை—மதத்தின் இரு அம்சங்களில் ஒன்று 195

ஏ

ஏசுகிறிஸ்து,-326, 404
ஏசுநாதர்,-291, 313

ஒ

ஒழுக்கம் — உண்மையான தன்மையினை உணர்த்துவதன் மூலம் எண்ணத்திற்கு வலிமை தரும் ஒவ்வொன்றும் ஒழுக்கமே,-289

ஓ

ஓக்லண்டு—அமெரிக்க நகரம்,-356, 362, 365, 368, 370
ஓக்லண்டு என்குயரர்—அமெரிக்கப் பத்திரிகை,-356, 368, 371
ஓக்லண்டு டிரிபியூன்—அமெரிக்கப் பத்திரிகை 362, 365
ஓம்—இதன் பொருள் கடவுள்,-279
ஓவியச்சாலை—இந்தப் பிரபஞ்சமே ஒரு ஓவியச்சாலை-47
ஓஜஸ்—ஓஜஸ் அதிகமுள்ளவன் மனிதருள் தலைவனாகின்றான்,-185

க

கடமை—இதுவே அறிநெறி. இதனைப் பயபக்தியுடன் செய்வதே உயரிய தெய்வ வழிபாடு,-28, 169
கடவுள்—முடிவான நிலை, வரம்பிலா அறிவு, வரம்பிலா ஞானம், வரம்பிலா ஒளி-10
கடவுள்--கடவுளை நமது தந்தையாக நண்பனாக, குழந்தையாக நேசிக்கலாம்-113
கடவுள்—கடவுளின் உன்னத அம்சம் சிவன்; அழகின் அம்சம் கிருஷ்ணன்,-166
கடவுள்—மனிதனுக்கு அளித்துள்ள மூன்று வெகுமதிகள்,-196
கடவுள்—சகுணமும், நிர்குணமும், 267, 268, 269
கடவுளின் தரிசனம் — மூன்று வகைப்படும்,-197, 198
கடவுளும் சமூகமும்—கடவுள் மாறுதல் அற்றவர். சமூகம் இயங்கிக் கொண்டே இருக்கிறது -157
கண்ணபிரான்—அருச்சுனனிடம் "நீ ஞானியில்லை; கோழை" என்று கூறுதல், 293
கண்ணன்,-40
கம்சன்,-40
கர்மபலன்—காரணகாரிய நியதியே 132
கருமம்—கருமம் செய்வதில் மனத்தைப் பழக்கும் முறை,-36
கருமயோகம்—தன் கருமங்களையும் கடமைகளையும் சரிவரச் செய்வதன் மூலமாகவே இறையுணர்வு பெறும் முறை,-98
கலை—அழகின் பிரதிநிதி,-53
கலைடோஸ்கோப்,-188

கவிகங்கணர்—வங்காளக் கவிஞருள் மிகச்சிறந்தவர்,-54
கன்பூசியஸ்,-296, 310

கா

காதம்பரி—காதம்பரியின் நடை இழிவான நடைக்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டாகும்,-54
காதல்—மிக உயர்ந்த காதலில் காண்பது ஆன்மாக்களின் ஐக்கியத்தையே,-283
காமம்—கண்ணில்லாதது; நரகத்தில் ஆழ்த்துவது,-166
கால்வீன்,-296
கான்டு — ஜெர்மானியத் தத்துவ ஞானி,-366

கி

கிருஷ்ணகர்ணாம்ருதம் — பில்வமங்களர் எழுதியது,-164
கிருஷ்ண பரமாத்துமா 339, 341
கிருஷ்ணன்—அன்புலட்சியம்,-173
கிருஷ்ணன் — லீலைகள்,-416, 417, 418.
கிருஷ்ணன்—152, 190, 398, 438
கிருஷ்ணன்—இராதை - இவர்கள் காதல் உணர்த்துவது-165, 165
கிருஷ்ணனும் புத்தரும்–வேற்றுமை பாராட்டாமல் ஞானவாசல் திறந்துவிட்டனர்,-433
கிறிஸ்தவ மதம்—வளர்ந்த விதம் 345
கிறிஸ்து—அவரது மதம் சந்நியாசிகளுக்கே ஏற்ற ஒன்று,-155, 156
கிறிஸ்து---164, 190, 296
கிறிஸ்து பெருமான்—இருபதாயிரம் தேவதைகளின் பெருங்கூட்டத்தை தமது உதவிக்கு அழைக்க மறுத்தமை,-109
கிறிஸ்து பெருமான்—சகுணக்கடவுள்; மனிதனாய் அவதரித்தார், 270
கிறிஸ்துவும் புத்தரும்—இருபெரும் ஜோதிகள்-257

கீ

கீதை—முழுவதும் கடவுளைப் பற்றியே கூறுகிறது,-172, 176, 292, 312.
கீதை—கீதை முழுவதும் வேத முறைகள் பாராட்டப்படவில்லை, 418
கீதையின் உபதேசம்—கருமயோக விளக்கம்; மனங்குவிந்த பணி,-39

கு

குட்வின்,469
குண்டலினி சக்தி 13, 186, 191, 410
குந்தலவராளி—ராகங்களில் ஒன்று, 507
கும்பகம்—நுயைீரல்களைக் காற்றால் நிரப்பி அதை வெளிவராதவாறு தடுத்துவைத்தல்,-279
குரு—மனிதனின் வைத்தியர்,-153
குரு—குருவில்லாமல் ஞானம் ஏற்படாது,-200, 407, 421
குழந்தையும் தாயும் — குழந்தை விளையாடிக் கொண்டிருக்கும் போது தாய் கூப்பிட்டாலும் வருவதில்லை. விளையாட்டு முடிந்தவுடன் தானாகவே தாயை நோக்கி விரைந்து வருகின்றது. நமது பிரபஞ்ச விளையாட்டு முடிந்துவிட்டது என்ற எண்ணம் தோன்றும்போது நாம் தாயை நோக்கி விரைகின்றோம்,-47

கே

கேசவசந்திரசென்—சமூகத்தை ஒரு நீள்வட்டத்திற்கு ஒப்பிட்டவர், 160

கை

கைவல்யம்—தான் சுதந்திரம் உடையது என்பதையும், தனது நிறைவுக்கு வேறு எதுவும் தேவை

யில்லை என்பதையும், பந்தப்பட்டது போன்ற இந்த நிலை தனக்கு அவசியமில்லை என்பதையும் ஆன்மா என்று அறிகிறதோ, அன்றே விடுதலை அல்லது 'கைவல்யம்' சித்தியாகின்றது-27, 320

கொ

கொலம்பஸ் ஹால்—சிக்காகோவில் உள்ளது–323

கோ

கோபிகாலீலை--இந்த லீலையில் தான் "என் பொருட்டுப் பந்தங்களை விட்டுவிடு" என்று ஸ்ரீகிருஷ்ணன் காண்பிக்கின்றான்-158

ச

சகிப்புத்தன்மை — இப்பொழுது இதற்குத் தவறான பொருள் கொள்ளப்படுகின்றது-195
சகுணக்கடவுள்—மாயை என்னும் பனித்திரையில் நாம் காணும் பரமாத்மா-62
சகுணக்கடவுள்—கற்பனைச் சங்கிலியின் எல்லாக் கரணைகளையும் தெறிக்கச் செய்யும் சக்திவாய்ந்த உயர்கற்பனை-63
சகுணப்பிரம்மம்—நிர்குணப் பிரம்மத்தை மாயையின் மூலம் காண்பது-384, 390
சங்கரர் — புத்தமதக் கிளையை வெட்டி எறிந்து விட்டார்-171, 442
சங்கராச்சாரியார்—இவர் உபதேசங்களில் புத்தமதத்தின் சாயலைக் காணலாம்-149
சங்கற்பம்—சங்கற்பந்தான் இந்தப் பிரபஞ்சத்தைப் படைத்தது என்றால் பொருந்தாது-81
சங்கற்பம்—சங்கற்பம் என்பது உள், வெளி ஆகிய இரண்டும் சோந்த ஒரு கலவை; ஆன்மாவின் பல வகை வெளித்தோற்றங்களில் ஒன்று-82
சத்வம்— தூய்மை, சாந்தம்-218
சந்தைக்கடை மதத்தினர்—கிறிஸ்தவர்கள் இவ்வாறு குறை கூறப்பட்டார்கள்-230
சம்யுக்தை-416
சமயம்—மனிதனது அகத்தே இருக்கும் இயற்கையான ஆற்றலின் வெளிப்பாடு-263
சமயம் — எவ்வாறு இருக்கிறோம், எவ்வாறு ஆகிக்கொண்டிருக்கிறோம், எவ்வாறு அனுபவ சக்தி பெறுகிறோம் என்பதே-296, 297
சமயாசாரியர் — சமயாசாரியர்களுக்கும், ஜீவன் முக்தர்களுக்கும் உள்ள வேறுபாடு-65, 66
சமாதி—சிந்தை முழுவதையும் பரம்பொருளிடத்தில் ஈடுபடுத்தி ஒன்றியிருக்கும் நிலை-128, 178, 292, 385, 389, 393
சமூகம்—எந்தச் சமூகத்திலே சட்டம் ஏராளமாக உள்ளதோ அந்தச் சமூகம் அழிவது உறுதி-92
சமூகம்—சத்தியத்தின் சோதனைக் களம்-204
சர் வில்லியம் ஹாமில்டன்—"தத்துவ சாஸ்திரம் முடியும் இடத்தில் மதம் ஆரம்பமாகிறது" என்று குறிப்பிட்டுள்ளார்-187
சரணாகதி-312

சா

சாங்கியர் — எல்லாச் சக்தியுமே பெண்மைதான் என்று கூறினர் 211
சாங்கியரும் பௌத்தரும்—ஜன்யேசுவர நம்பிக்கை உடையவர்-222
சாத்தான்—பல்வேறு வேஷங்களில் தோன்றுதல்-162
சாதிமுறை—இதன் பெருங்குறை போட்டி மனப்பான்மையை அழித்து விடுதல்-373
சாந்தமூறை—கடவுளே தந்தையார் என்று கருதுதல்-281
சாமா—ராகங்களில் ஒன்று-506
சாலமன்—சாலமனது அன்புக்கடவுளின் நிறம் நீலம்-152, 329

சாவு—தான் தோன்றக் காரணமாக இருந்த ஒன்றில் திரும்பவும் ஒடுங்குவது-50
சாவு—புலன்வழிச் செல்லும் வாழ்விலே இருக்கிறது-64
சாவும் வாழ்வும்—இரண்டும் ஒரே பொருளின் வெவ்வேறு தோற்றங்களே-50
சான்பிரான்சிஸ்கோ-1,298

சி

சிக்காகோ-228, 322, 323, 326, 332, 375
சிக்காகோ சண்டே ஹெரால்டு—அமெரிக்கப் பத்திரிகை-325, 326
சித்தம்--மூவகை நிலையுடையது-183
சித்தவிருத்தி நிரோதம்—யோகம் இவ்வாறு விவரிக்கப்படுகின்றது. சித்தத்தை அடக்கும் முறையைக் கற்பிக்கும் சாஸ்திரம் என்பது இதன் பொருள்-247
சிரவணம்—குருமூலம் கேட்டல் மட்டுமன்று; தமக்குள் மீண்டும் மீண்டும் சொல்வதுமாகும்-224
சிலுவை—சிலுவை சிவலிங்கமே; குறுக்காக வைக்கப்பட்ட இரண்டு சிவலிங்கங்கள்-155

சீ

சீக்கியர்-296
சீதை—அழகியதோர் உயரிய குணச்சித்திரம். பெண்மணி என்ற பெயருக்குரிய நற்பண்புகள் எவையோ அவையே சீதை-146, 147, 170, 511
சீர்திருத்தம்—தொடங்க வேண்டிய இடம் உடல்-40

சு

சுகதேவர்—அறிவு லட்சியம்-173
சுதந்திரம்—எல்லாவற்றிலும் மனிதனுக்குச் சுதந்திரம் வேண்டும் 441
சுயநலம்—மனிதர் ஒவ்வொருவரிடமுமுள்ள சாத்தான் அவதாரம் 170
சுவர்க்கம்—ஒரு பகற்கனவு-133
சுவாமி விவேகானந்தர்—ஈடா ஆன்செலின் கருத்து-14, 15

சூ

சூட்சும சரீரம்-391

செ

செல்வம் — மாயப் பசப்புக்காரி போன்றது. வேண்டுபவனைக் கண்ணுேக்காள்; கண்ணுேக்கான் காலடியில் கிடப்பாள்-43

சை

சைதன்யர்—துறவு மேற்கொண்ட போது, தம் நாவில் சர்க்கரையைக் கரையாமல் வைத்துக் காட்டினர் 176, 438, 442
சைமன் எச். எம். (டாக்டர்) மதபோதகர்-228

ஞா

ஞாபகசக்தி—மூளையின் அணுக்கள் ஒரு வரிசைக் கிரமத்தில் வந்து நிற்கின்றன. இவ்வித வரிசைக் கிரமம் மீண்டும் பழையபடியே இருக்குமாறு செய்வதுதான் ஞாபகசக்தி என்பது-189
ஞானம்—அறியாமையால் ஏற்படும் தவறுகளிலிருந்து விடுதலை தருவது-59, 395, 400
ஞானம்--உலகப்பற்றை விடவேண்டும் என்று கூறுகிறதே அன்றி உலகையே விட்டு விடவேண்டும் என்று கூறுவதில்லை-70
ஞானி---எதையும் அழிக்க முயல்வதில்லை. எல்லாருக்கும் உதவவே முயல்கின்றான்-70
ஞானயோகம் — அறிவால் இறையுணர்வு பெறும் முறை-98

ஞானவொளி—எவன் தன் பங்குக்கு வந்த கடமையைத் துன்பமாகப் பாராட்டாமல் செய்துகொண்டு போகின்றானோ, அவனுக்குத் திண்ணமாக ஞானவொளி தோன்றும்-31
ஞானவொளி — பரிபூரண சரணாகதியே ஞானவொளி பெறுவதற்குரிய ஒரே வழி-52
ஞானி—எல்லாவற்றுள்ளும் இறைவனையே காண்கின்றான்-96
ஞானி—ஒவ்வோர் உயிரிலும் தனது ஆன்மாவைக் காண்பவன்-174
ஞானி—சத்தியத்தை அறிந்தவன் நிலை-218

ட

டக்கர் மன்றம்—அலமேடா நகரில் உள்ளது-247

டி

டிக்கன்ஸ்—ஆங்கில நாவலாசிரியர் 375
டிக்கின்ஸன் (டாம். எம்.)—டெட்ராயிட்டு நகரில் சுவாமி விவேகானந்தரை அவையினர்க்கு அறிமுகம் செய்தவர்-245

டெ

டெட்ராயிட்டு நகர்—அமெரிக்காவில் உள்ளது-245, 332, 339. 347
டெட்ராயிட்டு பிரீபிரஸ்—அமெரிக்கப் பத்திரிக்கை-328, 332. 447
டெட்ராயிட்டு டிரைப்யூன்—அமெரிக்கப் பத்திரிக்கை-245

த

தத்துவஞானி — மூடக்கொள்கைகளுக்கு ஆளாகாதவாறு நம்மை உயர்த்துவதே அவரது கடமை 265
தர்மம்—இதன் விளக்கம்-145
தவம்—மூவகைப்படும்-414
தவறு—நம்மை அறியாமலே நமக்கு வழிகாட்டும் தெய்வம்-45
தன்னலமறுப்பு--உலகம் முழுவதையும் வேற்றுமையற்ற ஒன்றாகக் காண்பது-88

தா

தாசமுறை—கடவுளை நன்மையும் தண்டனையும் தருகின்ற தலைவனாகக் கருதுதல்-282
தாமசம்—மந்தம்; புத்திக்குறைவு. இது மூவகைக் குணங்களில் ஒன்று-218
தாய்—சுயநலம் அற்றவள்-212, 213
தாரணை—மனங்குவிதல். சில குறிப்பிட்ட மையங்களில் மனதை நிலை நிறுத்துவது-22, 128, 178

தி

திரீவினிங் டிரிப்யூன்—அமெரிக்கப் பத்திரிக்கை-375
தியாகம்—நீதி நெறியின் சாரம்-208
தியானம்—ஆன்மா தன்மீதே தான் நிலைபெற விரும்புவது-2
தியானம்—மூன்று நிலைகள்—2
தியானம்—செய்யும் முறை. அதன் பயன்—4, 11, 12, 128, 178, 191
தியானம்—எல்லாவற்றையும் முடிவான ஆன்மாவில் ஒன்றுபடுத்துவது-9
தியானம்—மனத்தின் பயிற்சியால் நிகழ்வது-10
தியானம்—தியானம் கைகூடும் அந்த ஒரு நொடிதான், உலக அலுவல்களிலிருந்து முற்றும் விலகிநிற்கும் நேரம்; ஆச்சரியமான ஆன்மானுபவ சுவையின் ஒரு துளியை அனுபவிக்கும் நேரம்-46
தியானம்—தியானிக்கும் மனிதனையும் தியானிக்கப்படும் இறைவனையும் இணைத்துவைக்கும் சாதனம் 130

தீ

தீமை—எது குறைந்த நன்மையோ அதை நாம் தீமை என்கிறோம் 210

து

துரோணர்-38, 40
துவைதம்-307
துறவியர்—எல்லா மதங்களினின் றும் சிற்சில கருத்துகளை ஏற்பர். அவர்களின் வாழ்க்கை அனுபூதி வாழ்க்கை-55
துறவு—சுயநலம் ஒழிப்பதே-57
துன்பம்—பலனுக்காக உழைக்கும் உழைப்பினால் ஏற்படுவது-30

தெ

தெய்வ நிந்தனை--யூதர்களிடமிருந்து வந்த கருத்து-285
தெரிசா (செயிண்ட்)—மதுரபாவத் தில் வழிபட்டவள்-282

ந

நசிகேதன்—யமனுடன் வாதாடுதல் 125
நட்புமுறை—கடவுளைத் தன் நண் பனைப் பாவிக்கும் முறை-282
நந்தி—தெய்விக உடல் பெற்றமை 161
நல்லவர்—''நீ, புண்ணிய ஆன்மா; இறைவர் உண்டு; துக்கமே இல்லை'' என்று சொல்பவர்-63
நன்மையும் தீமையும்—ஒவ்வொரு வேலையின் பலனிலும் நன்மை தீமைகள் கலந்தேயுள்ளன, எந்த வேலையினால் அதிக நன்மையும் குறைந்த தீமையும் நேருமோ அந்த வேலையிலே நாம் ஈடுபட வேண்டும்-39, 40

நா

நாகரிகம்—அகத்தே இருக்கும் கட வுளை உணர்த்துவது-295
நாகரிகம் — மனிதனிடமிருக்கும் திவ்யசக்தியைப் பிரகாசிக்கச் செய்வது-335, 397
நாடகம் — கலைகள் யாவற்றினும் மிகக் கடினமானது-221

நி

நின்டே (பிஷப்) — அமெரிக்கப் பாதிரி, சுவாமி விவேகானந்தரை டெட்ராயிட்டு நகரக் கூட்டத்தில் அறிமுகம் செய்தவர்-333
நியமம்— மனம் யாண்டும் திரியா வண்ணம் கட்டுப்படுத்துவது-178
நியூயார்க்கு—307, 440, 445, 448, 466, 474, 477
நிர்வாணம்—ஆன்மானுபூதி பெறு வதே-87, 306
நிலையாவுலகு--'புலன்வழி நோக்குங் கால் இவ்வுலகு நிலையற்றதாகத் தோன்றுகிறது. ஆனால் உண்மை யில் இது நிலையானதே' என்பது வேதாந்தக் கருத்து-81
நிவேதிதா—சுவாமிஜியின் சிஷ்யை 465

நே

நேர்நிலை—மதத்தின் இரு அம்சங் களில் ஒன்று-195

ப

பக்தி—வைதி பக்தி, ராகானுகா பக்தி என இருவகைப்படும்-160
பக்தி—ஆண்டவன் திருநாமத்தைப் பலகாலும் சிந்திப்பதே பக்திக்கு வழி-175
பக்தி—இரு பகுதிகள் கொண்டது 198.
பக்தி—கடவுள் மீது கொண்டுள்ள தீவிர பிரேமை; அன்பில் கடைந் தெடுத்த அமுதம்-214
பக்தி—கர்ம, ராஜ, ஞான யோகங் களை விட உயர்ந்தது, ஏனெனில் பக்தி எதிர்பார்க்கும் பலன் பக்தி யே-216

பக்தியோகம் — இஷ்ட தெய்வம் ஒன்றினிடம் பக்தியைச் செலுத்தி இறையுணர்வுபெறும் முறை-98, 128
பகவத்கீதை--மகாபாரதத்தின் ஒரு பகுதியே-37, 38
படித்தவன்—இம்மியளவு அன்பாகிலும் செலுத்துபவன்-106
படைப்பின் இரகசியம் — வேற்றுமையில் ஒற்றுமை-163
பதஞ்சலி — ஆன்மிக, பௌதிக பரிணாமதத்துவத்தின தந்தை-161
பதஞ்சலி--''ஓர் இனம் மற்றோர் இனமாக மாறுவது இயற்கையின் உள்நிறைவு" என்றார்-382
பதஞ்சலி முனிவர்--இயற்கையின் உள்நிறைவு மாற்றத்தைக் குடியானவர் வயலுக்கு நீர்ப்பாய்ச்சுதற்கு ஒப்பிடுகின்றார்-78, 79
பதஞ்சலியின் மகாபாஷ்யம்--வடமொழியின் சிறந்த வசன நூல்-54
பயங்கரி—அன்னை காளியின் பெயர்களில் ஒன்று-453
பயன் கருதாப்பணி — இதன் விளக்கம்-38
பரமானுபவம் — 'நாமும் இறைவனும் ஒன்றே' என்பது-101
பரிபூரண ஒழுக்கம்—இப்படி ஒன்று இருப்பதாக எண்ணினால், அது ஒரு மூடநம்பிக்கை-156
பரிபூரண ஐக்கிய நிலை — 'நானும் எனது பிதாவும் ஒன்றே' என்று அறிதல்-193
பரிணமம்—அகத்தில் தோன்றுவது; புறத்தில் நிகழ்வது அன்று-78
பரிணமம் — பரிணமம் என்னும் கண்ணாடி மூலமாக வேதங்களைப் படிக்கவேண்டும்-148
பரிணமம்—ஆன்மாவின் புறத்தோற்றமே இயற்கையின் பரிணமம், 131
பரிணமவாதி — அவன் கொள்கை 'உயிர் வரிசைகளின் பவனியில் கடைசி பரிணமம் அறிவு' என்பது 49

பா

பாபிலோனியர் — கடவுளும் சாத்தானும் உண்டு என்னும் இரட்டைக் கொள்கையர்-207
பாரசிகர் — அவர்களிடையே பரவியிருந்த துவைத அம்சமுள்ள மதங்களில் கடவுளும் சாத்தானும இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது 207
பாரிஸ் — பிரான்சின் தலைநகர்-465
பாவாஹாரி பாபா — 'காற்றையே உணவாகக் கொள்பவர்' என்பது இதன் பொருள்-287

பி

பித்தர்—பலவகையினர்-152
பிதாகொராஸ் — கிரேக்க தத்துவ ஞானி 296, 381
பிரகிருதிச்சட்டம்-95
பிரங்கி (ஹி எல்)—ஹிப்ரு இளைஞர் சங்கமண்டபத்தில் 'சமரச சன்மார்க்கம்' என்னும் பொருள் பற்றிச் சுவாமி விவேகானந்தர் பேச ஏற்பாடு செய்தவர்-241
பிரத்தியாகாரம்—புலன்களை அவை நாடும் புறப்பொருள்களிலிருந்து திருப்பி உள்ளத்தில் ஒன்றச் செய்தல்-127, 178
பிரபஞ்சம்—உலக அன்னையின் திருவிளையாடல்-47
பிரபஞ்சம் — உயிர்ப்புச் சங்கிலி போன்றது-154
பிரபஞ்சம் — ஒருமை இயல்பான ஒன்று-179
பிரபஞ்சம்--பொய்த்தோற்றம்-289, 403
பிரபுத்தபாரதம் — புதிய பாரதம் என்பது இதன் பொருள். சுவாமிஜியின் கட்டுரைகள் பலவற்றைத் தாங்கி வெளிவந்தது-460
பிரம்ம ஞானம்-296
பிரம்மஞான வாதிகள் 143, 444
பிரம்மம் — மாயையில் வருவதில்லை 399

பிராணன் — இப்பிரபஞ்சத்தில் நில வும் சக்தியின் பெயர்-182
பிராணுயாமம் — மூச்சைக் கட்டுப் படுததுதல் 21, 100, 127, 178, 187, 274, 278, 386, 388
பிருதிவிராய் 416
பில்வமங்களர்—கிருஷ்ண கர்ணும்ரு ததததை இயற்றியவர்-164

பீ

பீஷ்மர்-38, 40

பு

புகழ்—தன்னைப் பொருட்படுத்தாத வனிடமே குவியும்-43
புண்ணியம்—புண்ணியமும் பாவம் போன்றதே; பிரித்துவைக்கும் தன்மையில் பாவத்தினும் சக்தி குறைந்தது—84
புண்ணியமும் பாவமும் — புண்ணி யம் என்னும் முள்ளால் பாவம் என்னும் முள்ளை அகற்றவேண் டும்-159
புத்தமதம்—புதிதாக வந்த க்ஷத்திரி யர்கள் வைதிக குருமார்களை எதிர்த்துச் செய்த கிளர்ச்சி-149
புத்தமதம்—கடவுள் பற்றி அறிய முயலாமை-166, 171, 243
புத்தமதம் — கிறிஸ்தவ மதத்தின் அடிப்படை-246
புத்தமதம் — மூலப்பொருளை மறுக் கிறது; இல்லை என்று சொல்கிறது 249
புத்தர் — இந்துக்கள் அவரை ஓர் அவதாரம் என்று நம்புதல்-166
புத்தர்—வேதங்களை மறுக்கக் கார ணம்-171, 172
புத்தர்—இந்துமத சீர்திருத்தவாதி 167, 190
புத்தர்—"உலகில் துன்பமே காண்கி றீர்; அதைப் போக்க முயல்வீர்" என்றுர்-243
புத்தர்—மனிதகுலத்தின் சிகரம்-245, 246, 296, 313, 438
புத்தர் — 'விண்மீன்களைக் கொண்டு கணக்கிட்டும், இவை போன்ற வேறு தந்திரங்களைக் கையாண் டும் வயிறு வளர்ப்பவர்களை நாம் புறக்கணிக்க வேண்டும் என்று கூறுகிறுர்-261
புத்தர் — விலங்குகளின் நன்மைக் காகத் தம்மைத் தியாகம் செய்து கொண்டார்-287
புத்தபிரான்—அவர் கூறிய கருத்து கள் புராதனமானவை; ஆனுல் அவைகளுக்குத் தனி வேகம் கொடுத்தார்-398, 402
புராதன எகிப்தியர் — கடவுளும் சாத்தானும் உண்டு என்ற கொள் கையர்-207
புரொடொ பிளாசம்-உயிர்த்தொட ரானது புரொடொ பிளாசம் என்ற ஒரு உயிர்ப்பசையில் தோன்றுகிறது-49
புரோகிதத் தொழில்—இந்தியா வைப் பிடித்துள்ள ஒரு சனியன் 436
புரோகிதராதிக்கம் — நீங்க வேண் டும்-441, 442
புரோமீதியஸ்—திதான் பாதெளின் மைந்தன்; எபிமிதியஸின் உடன் பிறந்தவன்-263
புரௌனிங்—ஆங்கிலக் கவிஞர்-264

பூ

பூரகம்—மூச்சை உள்ளே இழுத்தல் 279

பெ

பெரிபாடிக் கிளப்பினர் — சுவாமி விவேகானந்தரை மின்னுப்போலி நகருக்கு அழைத்துவந்தனர்-228
பெரிய பிரஸ்பிடீரியன் — சுவாமி விவேகானந்தரைப்பற்றி, கோப மும் வசையும் நிறைந்த கட்டுரை ஒன்றை வெளியிட்ட அமெரிக்கப் பத்திரிக்கை-351

பே

பேலாலாந்து--மூதாதையர் இருக்கும் இடமாக ஆவியுலக நடுவினர் கூறுகின்றனர்-252

பை

பைபிள் -- "கழிவிரக்கம் கொள்; சுவர்க்கத்தின் அரசு அருகிலேயே இருக்கிறது" என்று கூறுகிறது 187

போ

போஸ்டன்--அமெரிக்கநகர்-401

பௌ

பௌகர் (டாக்டர்)--சுவாமி விவேகானந்தர் இவரிடம் அதிகக் கவனம் செலுத்தினர்-378

பௌதிக சாஸ்திரம் -- மூலசக்தியைக் கண்டுபிடித்து மற்ற சக்திகளெல்லாம் அதன் பல்வேறு வகைத் தோற்றங்களே என்பதை நிரூபித்து விட்டால், பிறகு பௌதிக சாஸ்திரம் வளராது-150

ம

மகம்மது--கிறிஸ்து விற்கு ஐந்நூறு ஆண்டுகளுக்குப்பின் அவதரித்த திர்க்கதரிசி-164, 190, 257, 296, 326, 330

மகம்மது நபி--ஏசுவை சிலுவையில் அறைய இயலாது என்று குரானிலே மீண்டும் மீண்டும் கூறுகிறார் 271, 313

மதங்கள்--எல்லா மதங்களின் முடிவும் இலட்சியமும் ஆண்டவனைக் காண்பதுவே

மதத்தின் குறிக்கோள் -- தூய்மையை மீண்டும் பெறுவது-233

மதம்--ஆன்மாக்கள் அறிந்து விளையாடக் கற்பிப்பது-67

மதம்--ஜீவனை ஜீவனாக உணர்வதே மதம்; ஜீவனை ஜடமாக உணர்வதன்று

மதம்--எல்லா மதங்களும் ஒன்றே என்ற ஐக்கியத்தைக் கண்டு பிடித்தவுடன் முடிவடையும்-150, 193

மதம்--மனித இயல்புக் குறையின் விளைவன்று-235

மதுகிரி--தேனீயைப் போல் ஒவ்வொரு வீட்டிலும் கொஞ்சம் கொஞ்சமாகச் சந்நியாசி பிச்சை ஏற்கும் நியமம்-57

மதுரமுறை--கணவனுக்கும் மனைவிக்கும் உள்ள காதல் போன்ற இனிய காதல் முறை-282

மந்திரங்கள் -- அவற்றின் சக்தி 175

மந்திரசைதன்யம்-222

மந்திரம்--சீடன் ஒருவன் மீண்டும் மீண்டும் சொல்வதற்காகவும் சிந்திப்பதற்காகவும் குருநாதரால் தேர்ந்தெடுக்கப்படும் சிறியசொல் 129

மறுபிறப்பு--இயற்கையின் பரிணமம்; உள்ளே இருக்கும் இறைவனது வெளித்தோற்றம்-83

மறைமுக புத்த மததினர்--பிற்காலச் சீர்திருத்தவாதிகள் சங்கராச்சாரியாரின் சீடர்களைப் பற்றி இவ்வாறு கூறினர்கள்-150

மனம்--உள்நனவு, நனவு, உயர்நனவு என்ற மூன்று நிலைகளில் இயங்குதல்-183

மனம்--மனமும் ஆன்மாவும்-256

மனம்--மனத்திலே மூன்று நிலைகள். சுறுசுறுப்பு நிலை, சுறுசுறுப்பு குறைந்த நிலை, அமைதி நிலை-292

மனமும் சடப்பொருளும்-300, 301, 302

மனவடக்கம்--இதற்குப் பெரிதும் வேண்டப்படுவது தூயவொழுக்கமே-180

மனவொருமைப்பாடு--ஏற்படும் வழிகள் 15, 16

மனிதன் -- என்றும் இருப்பதும், தனித்து விளங்குவதுமாகிய ஆன்மாவே மனிதன்-136

மனிதன்--மூன்று இயல்பு கொண்டவன்-159
மனிதன்--இரண்டு வழிகளில் கடவுளிடம் திரும்பிச் செல்லலாம்-196
மனிதன்--அஞ்ஞானம், வேற்றுமை பாராட்டல், ஆசை ஆகிய மூன்றுமே மனிதனின் துயரங்களுக்கு அடிப்படையான காரணங்கள் 437
மனு--"வேதங்களிலே அறிவோடு ஒத்திருக்கின்ற பகுதிகளே வேதங்கள்" என்று கூறுகிறார்-315

மா

மாயை--மாயை என்பது உண்மையானது; அதே சமயம் அது உண்மையற்றதும் ஆகும்-131. 132
மாயை--வெறுந்தோற்றம்-303, 399 400, 411
மாயை--காலம், இடம், காரணம் என்பனவற்றால் ஆனது. இந்த மாயையே மனித எண்ணம் தோன்றுவதற்குரிய அடிப்படையாகும்-365, 366
மாயை--மாயை என்னும் வாயிலைக் கடவாதவர்கள்-451

மி

மில்டன்--ஆங்கிலக்கவி-375
மின்னப்போலி--அமெரிக்க நகரம் 228, 239
மின்னப்போலி ஜர்னல்--அமெரிக்கப் பத்திரிக்கை-228

மீ

மீண்டும் பிறத்தல்--இக்கொள்கை சிலவிவரும் மதங்கள்-237
மீராபாய்--"எனக்குத் தெய்வமே கணவன்" என்று கூறியவள்-282

மு

முக்தி--எல்லையற்ற காரண காரிய சங்கிலித் தொடரிலிருந்து விடுபடுவது-169, 306, 319, 411

மெ

மெடனய்ட்--'கழிவிரக்கம் கொள்' என்பதற்குக் கிரேக்க மொழியில் பயன் படுத்தப் பட்டிருக்கும் சொல்-187
மெம்பிஸ்--அமெரிக்க நகரம்-232, 237, 241

மே

மே பிளவர் -- இந்தப் பெயர் கொண்ட கப்பலில் தான் அமெரிக்கர்களின் முன்னோர்கள் அமெரிக்காவிற்கு வந்தார்கள்-33

மை

மைக்கேல் மதுசூதன தத்தர்--வங்கக்கவிஞர். அம்மொழியில்வினைச் சொற்களே இல்லை என்ற குறையைப் போக்க முயன்றவர்-54

மோ

மோலக்--பாபிலோனியரின் கடவுள் 207
மோஸஸ்--எரிந்த புதரில் கடவுளைக் கண்டார்-141. 296

யா

யாககுண்டம் -- க்ஷேத்திர கணிதத்தின் பிறப்பிடம்-123

யு

யுகம் -- நெடுங்காலம்: இதற்குப் பிறகு ஓய்வுக்காலம் என்பதும் உண்டு-273

யூ

யூதர்-237
யூனிட்டேரியன் சர்ச்சு--ஓக்லண்டில் உள்ளது-356

யூனிட்டேரியன் மாதாகோயில் -- மின்னுப்போலி நகரில் உள்ளது 228

யோ

யோகப் பயிற்சி--நுண்ணிய கருத்துக்களைச் சிந்திக்கும சக்தியை வளர்க்கிறது. அதன் இரு அம்சங்கள்-151, 153
யோகம்--இணைப்பது. இறைவன் அல்லது நமது உண்மைத் தத்துவத்தோடு நம்மை இணைப்பது-98
யோகம்--புலனடக்குதல்; மனமடக்குதல்; சிந்தையடககுதல். சித்தத்தை நிறுத்தக் கற்பிக்கும் விஞ்ஞானம்-177, 250, 254
யோகி--இயற்கையிலிருந்து விடுதலை பெறுவதே யோகியின் இலட்சியம்-145
யோகி—எல்லாவற்றிலும் சமநிலையைக் கடைப்பிடிப்பவனே யோகியாதற்கு உரியவன்-184

ர

ரசாவாதனம் -- ஜபம் செய்யும் போது ஏற்படும ஆனந்தத்தை ருசிப்பது-422

ரா

ராகானுகா பக்தி -- ஐவகைப்படும் 160
ராஜப்பியாரி மோஹன் முகர்ஜி-- சுவாமி விவேகானந்தரின் அமெரிக்கத் தொண்டைப் பாராட்டக் கல்கத்தா நகர மண்டபத்திலே நடந்த பொதுக்கூட்டத்தின் தலைவர்-445
ராஜயோகம் -- மனத்தை அடக்குவதால் இறையுணர்வு பெறும் முறை-98, 248, 277

லா

லாங் (டாக்டர்) --இந்தியாவிற்குத் தொடக்கத்தில் வந்த பாதிரியார் 349
லாரென்ஸ்--அமெரிக்க நகரம்-375
லாஃபெயட் அகாடமி -- மெம்பிஸ் நகரில் உள்ளது-237, 240

லூ

லூதர் -- புரொட்டெஸ்டன்ட்டு மதத்தைப் பரப்பியவர். தீர்கக தரிசி-190, 257, 296

வ

வங்காளம் -- பக்தர்கள் நிறைந்த பகுதி--176
வசிஷ்டர்--சாந்தலட்சியம்-173
வருணன்-209
வழிபாடு--நம்முடைய அன்பு முழுவதையும் ஆண்டவன்மீது செலுத்துவதே உண்மை வழிபாடு-107
வளர்ச்சி--இருவகைப்படும். ஒன்று பகுப்பு; மற்றொன்று தொகுப்பு 151

வா

வாத்சல்யமுறை—கடவுளைத் தாயாக அல்லது குழந்தையாகப் பாவித்தல்-285
வாழ்க்கை—ஆன்மிக நிலையில் வாழ்வதே வாழ்க்கை-64
வாழ்க்கை — வாழ்க்கையின் முதல் நோக்கம் அறிவைத் தேடுதல்; இரண்டாவது நோக்கம் மகிழ்ச்சி: இரண்டும் விடுதலை நோக்கி நம்மை அழைத்துச் செல்கின்றன—119
வாழ்வும் சாவும — அயலார்க்கு நலம்புரிதலே வாழ்வு; நலம்புரியா திருத்தலே சாவு-440, 443, 446

வி

விக்கிரக ஆராதனை-341
விக்கிரகம்—மதத்தின் விளக்கம்-165
விசிஷ்டாத்வைதம்-175
விசுவாமித்திரர்—விசுவாமித்திரரின்

படைப்பு என்பது அவருடைய கற்பனையே-161
விஞ்ஞானம் — சக்தியை அறிதல்; ஆராய்தல்-237, 359, 360
வியாசர் — வேதாந்த சூத்திரத்தில் வலியுறுத்துவது-224
விவசாயி—மேனாட்டு விவசாயிக்கும், இந்திய விவசாயிக்கும் உள்ள வேற்றுமை-231, 232
விவலியவேதம்—"மகனைப் பார்த்தவர் தந்தையைப் பார்த்தவராவர்" எனக் கூறுகிறது-270, 271

வெ

வெதர்ப்பி(மிஸ்)—லாரென்ஸ் நகர் மாதர் சங்கத் தலைவி-375
வெறி—வெறிபிடித்தற்குக் காரணம் 33
வெறியர்—பலவகையினர்-31, 33

வே

வேதங்கள் — கடவுளையும் அவரது நிறைஞானத்தையும் பற்றி நாம் அறிந்தவற்றின் தொகுப்பு-315
வேதங்கள்--பல்வேறு காலங்களிலே பல்வேறு மக்களாலே கண்டுபிடிக்கப்பட்ட ஆன்மவிதிகளைச் சேமித்து திரட்டிவைத்திருக்கும் கருவூலங்கள்-357, 389, 401
வேதப்புரட்டர்-முகம்மதியர் கிறிஸ்தவர்களை இவ்வாறு அழைத்தனர் 243
வேதம்—அநாதி; என்றுமுளது-148, 149
வேதாந்தம்—'ஒவ்வொரு பிறவியும் அதன் முற்பிறவி வினைகளை அடிப்படையாகக் கொண்டது; எனவே முன் பிறவிகளை எல்லாம் காண இயலுமானால், நமக்கு விடுதலை கிடைத்துவிடும் என்று கூறுகிறது-83
வேதாந்தம் -- 'புண்ணியம் பாவம் இரண்டிற்கும் அப்பாற்பட்ட நிலை ஒன்று இருக்கிறது; அது தான் உனது தன்மை; தூய்மையும் நிறைவுமே உனது இயல்புகள்' என்று சொல்கிறது-84
வேதாந்தம்--ஒரு பெரியகடல்-90
வேதாந்தம்--தோன்றிய வரலாறு 357
வேதாந்தி -- தான் தேவர்களைவிட உயர்ந்தவன் என்று உரைக்கின்றான்-86

வை

வைதிபக்தி -- வேதக்கட்டளைக்குக் கீழ்படிதல்-160

ஸ்ரீ

ஸ்ரீகிருஷ்ண சைதன்யர் -- நாதியா நாட்டு ஆசாரியர்-66
ஸ்ரீகிருஷ்ணர்--'புத்தகங்களில் மூழ்கி நாம் பித்துப் பிடித்திருக்கிறோம்' என்றார்-118
ஸ்ரீகிருஷ்ணர் — ஒவ்வொருவருக்கும் உகந்த கடவுள்-158, 159
ஸ்ரீகிருஷ்ணர்--சூழ்ச்சிகாரர் அல்லர் 162
ஸ்ரீகிருஷ்ணர்--க்ஷத்திரியர்களும் மதகுருக்களும் ஒத்துப்போகும் வழியைக் காட்டல்-432, 433
ஸ்ரீசங்கர பகவத் பாதர்-472
ஸ்ரீசங்கரர் — புத்தமதக்கிளையை வெட்டி எறிதல்-434
ஸ்ரீராமகிருஷ்ணமடம் — இந்தியாவின் புனருத்தாரணததில் அதன் பங்கு-409
ஸ்ரீராமகிருஷ்ணர் — 'கலைப்பண்பு இல்லாதவர் யாருமே அனுபூதிச் செல்வராய் இருக்க இயலாது' என்று அடிக்கடி உரைப்பார்-53
ஸ்ரீராமகிருஷ்ணர் --- பெண்ணாசை, பொன்னாசை சிறிதுமில்லாத ஒருவரையே தம்மிடம் உரையாட அனுப்புமாறு உலக அன்னையை வேண்டுவார்-56
ஸ்ரீராமகிருஷ்ணர்--ஜீவன் முக்தராக

வும் இருந்தார்; ஆசாரியராகவும் இருந்தார். இன்றும் உலகில் இருந்து அவருடைய சீடர்கள் மூலம் பணிபுரியும் ஒரு சக்தியே அவர்-66
ஸ்ரீராமகிருஷ்ணர் -- மனித வர்க்கத்தைக் காப்பாற்றுவதற்காக அவதரித்தவர்-158 225
ஸ்ரீராமகிருஷ்ணர்-தேசத்தின் இலட்சிய புருஷர்-227
ஸ்ரீராமகிருஷ்ணர் -- மனித உடலில் கமலங்கள் எனப்படும் யோக நிலைகள் யோகசித்தியால் உற்பத்தியாகக் கூடியவை என்றார்-410
ஸ்ரீராமகிருஷ்ணர் — எளியோர்க்கு அன்பர்-510, 511, 512

ஸ

ஸ்பென்சர் -- '...
என்று கூறு...
என்று அழைப்...

ஹடயோகிகள்-- ... காப்பாற்றுவதுதான் மிகச் சிறந்தது என்று கூறுகிறார்கள்-23
ஹல்ஹவுஸ்-32

ஹெ

ஹெலன்--அழகே உருவான அரசிளங்குமரி-284

ஜ

ஜராசந்தன்-40
ஜடம்--ஈதரநிலை, ஒளிநிலை, வாயுநிலை, திரவநிலை, கட்டிநிலை என ஐந்து நிலைகளை உடையது-182
ஜனகர்--சந்நியாசிகளைக் காட்டிலும் ...

ஜாதி--ஒரு சமுதாயப் பழக்கம்-401

ஜி

... -- சத்தியத்தை நாடிச் ...ம் நிலை-218

ஜீ

ஜீவன்--வியஷ்டி அல்லது பிரித்தல்; தனிநிற்றல் இதுவே ஜீவன்-67
ஜீவன்முக்தன்-159 170
ஜீவன்முக்தர்--'இம்மாயா உலகம் கானல் நீர் போன்றது' என்கின்றனர்-149, 317
ஜீவாத்மா -- ஜீவாத்மா என்பது மாயையால் மூடப்பட்டிருக்கும் பரமாத்மாவே-407